NAVA LAW
Professional Corporation
Real Estate · Corporate · Commercial · Immigration · Family · Wills & Estate
10 Milner Business Ct. Suite 210
416 321 1100 www.navalaw.ca

# தாய்வீடு

THAIVEEDU DECEMBER 2015 டிசம்பர் HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
INCOME TAX
• Personal
• Small Business
• Corporate Returns
• Business Registration
• Corporation Registrations
• New house HST Rebate
• GST/HST Filling
Successful Real Estate Office With Over 300 Salespeople
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301 Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently Owned and Operated, REALTOR®





ஈழத்து முன்னோடி
இலக்கிய சஞ்சிகையான
'கலைச்செல்வி'யின் ஆசிரியர்

## சிற்பி



தமிழ் சாசனவியல்
ஆய்வுகளின் முன்னோடி
பேராசிரியர்

## வேலுப்பிள்ளை

ISSN 2369-3657

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service, Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
Heating & Air-conditioning contractors
www.ramanhomecomfort.com
Raman Home Comfort Inc
Rebates up to $650 available
KeepRite Heating & Cooling Products The Pros Know.
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 647-893-4414
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7



Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
Brokerage Lic# 10216





ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com



வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

Unfolding Surprises
Jey Rukmanykanthan B.Sc
(Sales Representative)
Home Life GTA Realty Inc.
Cell: 416 845 5629
email: jey@realtorjey.com





Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
Uthayan Sivarajah
Broker
Dir: 416-301-5555
Sugan Sivarajah
Sales Representative
Dir: 416-890-9999
Raj Sivarajah
Sales Representative
Dir: 416-843-3333
Sivakumar Sivarajah
Sales Representative
Dir: 416-453-7777
HomeLife/ Future Realty Inc., Brokerage



• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்


Merry Christmas
and Happy New Year
to all Our Clients and Friends
Call us now for an experienced and excellent service
MORTGAGE ALLIANCE
R & R Mortgage
2005 Sheppard Ave. E., Unit 200
Toronto, ON. M2J 5B4
Nisha Kiruba
Mortgage Specialist
416.708.7202
LIC. # M11001538
• 1st & 2nd Mortgage
• Refinancing
• Loan & Line of Credit
• Debt Consolidation
• Life & Health Insurance Products
• Education Saving Plan (RESP)
• Income Tax Services and more...
New Immigrant
or bad credit ?
NO PROBLEM...
TORONTO
$240,000
Lakeshore / Bathurst
1 bdrms, 1 wshrms.
TORONTO
$248,500
Lakeshore/ Bathurst
1 bdrms, 1 wshrms.
TORONTO
$324,900
Queens Quay W / Rees St
1+1 bdrms, 1 wshrms.
TORONTO
$324,900
Lakeshore / Bathurst
1 bdrms, 1 wshrms.
TORONVTO
$325,900
Queens Quay/Bathurst
1 bdrms, 1 wshrms.
MARKHAM
$775,000
Major Mackenzie Dr/ Mccowan
4 bdrms, 3 wshrms.
MARKHAM
$509,900
16th Avenue / Ninth Line
2 bdrms, 3 wshrms.
MARKHAM
$535,000
9th Lane / 16th Ave
3 bdrms, 3 wshrms, fin bsmt.
MARKHAM
$949,000
Bur Oak/Ridgecrest
4+1 bdrms, 3 wshrms, fin bsmt.
Vasanthy Niranjan
Real Estate Broker
416.845.8272
PRESIDENT AWARD WINNER 2014
TOP 5% IN CANADA 2009 TO 2015
Homelife Today Realty Ltd.
Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
31 Progress Ave
Unit 210, Toronto
ON. M1P 4S6
416.298.3200
*INDEPENDENTLY OWNED & OPERATED. NOT INTENDED TO SOLICIT PROPERTIES CURRENTLY LISTED FOR SALE OR INDIVIDUALS CURRENTLY UNDER CONTRACT WITH BROKERAGE

தாய்வீடு
THAIVEEDU HOME & LIVING

## பயங்கரவாதமும் அகதிகள் வருகையும்

கடந்த மாதம் பரிஸ் நகரிலும் லெபனானின் பெய்ரூட்டிலும் நடைபெற்ற தாக்குதல்களிலும் எகிப்தில் ரஷ்யப் பயணிகள் விமானக் குண்டு வெடிப்பிலும் 400க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர். 'இஸ்லாமிய அரசு' எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் கொடிய இயக்கத்தின் படுகொலைப் பட்டியலில் இவை அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவை.

கொல்லப்பட்ட அனைவருமே பொதுமக்கள். பொதுமக்களைக் கொல்வதற்கு எத்தகைய வீரமும் தேவைப்படுவதில்லை என்பதால் உலகின் எல்லா இராணுவங்களும் 'இஸ்லாமிய அரசு' போன்ற அடிப்படைவாத இயக்கங்களும் புதிய விடுதலைப் போராட்ட இயக்கங்களும் கூட இவ்வாறான பொதுமக்கள் படுகொலைகளில் ஈடுபடுவதை வரலாறு எமக்குத் தெளிவாகத் திருப்பித் திருப்பிச் சொல்கிறது.

இத்தகைய தாக்குதல்கள் 'பழிக்குப் பழி' என்னும் (அ)நியாயத்தின் படி இடம் பெறுகின்றன என ஒரு தரப்பினர் வாதிடுகின்றனர். எத்தகைய சூழலிலும் இத்தகைய படுகொலைகள் வன்மையாகக் கண்டிக்கப்படுவதோடு, குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டேயாகவேண்டும்.

எனினும் இத்தகைய அநியாயங்களுக்கு முற்றுமுழுதாக இஸ்லாமிய அரசு மீதும் இஸ்லாத்தின் மீதும் பழியைச் சுமத்திவிட்டு மற்றைய சமூகங்கள் குறிப்பாக மேற்குலகம் தப்பிவிடமுடியாது. நாகரிகமடைந்த, ஜனநாயக விழுமியங்களைப் பேணுகின்ற, எல்லோருடைய மத, இனத்துவ, பண்பாட்டு உரிமைகளையும் மதிக்கிற தாராண்மைவாத ஜனநாயக நாடுகள் என்று அழைக்கப்படும் இந்நாடுகள் தம்மைச் சுய பரிசோதனை செய்யவேண்டும். இந்த நாடுகளில் பரவலாக இருக்கிற இனவாதம், பொருளியல் சார்ந்த ஒடுக்குமுறை, பாரபட்சம் போன்றவை காரணமாகவும் அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர்.

புகலிடமும் பாதுகாப்பும் தேடி வருவோரை அகதிகளாக ஏற்கும் அரசுகள் சட்டங்கள் தரும் பாதுகாப்போடு அங்கு வாழும் குடிமக்களும் அகதிகளைப் பேணுவர் என்றே நம்புகின்றன.

கனடாவிலே குடியேறி வாழ்கின்ற பலரும் அகதிகளாக வந்தோரே. பரிவுடனும் மனிதாபிமானத்துடனும் அகதிகளை வரவேற்கும் மனோபாவம் எல்லோரிடமும் வேண்டும். 'பயங்கரவாதத்துக்குத் துணை போவர்' எனக் கருதி ஒட்டுமொத்த இனத்தையுமே வெறுக்க முனைவது மனிதாபிமானத்துக்கு முற்றிலும் முரணான செயற்பாடாகும். அண்மையில் அப்பாவி இஸ்லாமியர் மீது மேற்கொள்ளப்பட்ட சில தாக்குதல்கள் அவர்களிடையே ஒருவித அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. இது மேலும் தொடருமாயின் கனடா நாட்டின் மீதும் அவர்களை அரவணைத்து வாழ வேண்டிய பிறவினத்தோர் மீதும் நம்பிக்கை இழக்கச்செய்துவிடும். இது கனடாவின் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் இனங்களிடையேயான ஒற்றுமைக்கும் தீங்காக அமைந்துவிடும். ஏதுமறியா இஸ்லாமியப் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் 'இஸ்லாமிய அரசு' போன்ற அமைப்புகளின் செயற்பாடுகளை நியாயப்படுத்தவும் மேலும் வளர்த்து விடுவதற்குமே வழி அமைக்கும்.

தீவிரவாதப் போக்குகளிலிருந்து முற்றாக விலகி இயல்பு வாழ்வை நாடி இந்நாட்டுக்கு வருகின்ற அனைவரையும் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

அரசியல் சுயநல ஆதிக்கப் பின்னணியில் அப்பாவிப் பொதுமக்களைப் பலி கொடுக்க அனைவருமே தயாராக இருப்பதுதான் தொடரும் இன்றைய பயங்கரவாதத்தின் உச்சஅவலம் என்பதனைத் தாய்வீடு வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

III

முகப்பில்: 'கலைச்செல்வி' ஆசிரியர் சிற்பி, பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன்

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை) ட்ராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா) கருணா (கனடா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து) ரமணி (இலங்கை), செந்தில் (இந்தியா).

புகைப்படங்கள் : கருணா, K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : கௌரி, ஜீவா, சாம் டானியல்

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்).

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி.

மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு: 1-613-276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0


Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper

## சிறப்புப் பகுதி



கலைச்செல்வி ஆசிரியர்
**சிற்பி**



பேராசிரியர்
**ஆ. வேலுப்பிள்ளை**

நண்பர் 'சிற்பி' சிவசரவணபவன் 85
உதயணன்

நிலா முற்றம் 86
தெளிவத்தை ஜோசப்

மக்கள் தொண்டு 97
சிற்பி

'சிற்பி' சிவசரவணபவன் சில நினைவுகள் 88
பொ. சண்முகநாதன்

'புறநானூறு மீதான விமர்சனமே திருக்குறள் என்பார் பேரா. வேலுப்பிள்ளை' 91
நா. சுப்பிரமணியன்
நேர்காணல்: அருண்மொழிவர்மன்

ஆ.வேலுப்பிள்ளை: தமிழியல் ஆய்வுக்கு ஒரு வழிகாட்டி 93
ரவிக்குமார்



4 தாராண்மை தளருமா?
- அ. கணபதிப்பிள்ளை
கனடா சிரிய அகதிகளை உள்வாங்கும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது.



5 பரிஸ் தாக்குதலின் பின்னணி!
- ரதன்
மத்திய கிழக்கு போரில் சற்றே தள்ளியிருந்த ஐரோப்பாவை போருக்குள் தள்ளுவதை காலத்தின் கட்டாயமாக அமெரிக்கா கருதுகின்றது.

நாம் தொலைந்து போகாதிருக்க... 63
பொன்னையா விவேகானந்தன்

சீனா தவறவிட்ட வாய்ப்பு 64
பால. சிவகடாட்சம்

இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை 72
நா.சுப்பிரமணியன்

சிற்றில் - சிறிய மணல் வீடு 77
வைதேகி ஹெர்பெர்ட்

வன்னி: வரலாறு தரும் வலிமை 78
சேரன்

மௌரோ க்றூணி... மௌரோ க்றூணி... 83
ஆனந்தப்ரசாத்

மறைந்த யப்பானியத் தமிழ்ப் பேரறிஞர் நோபோரு கரஷிமா 94
முருகேசு பாக்கியநாதன்

கடன் 97
ரவிச்சந்திரிகா

ஆற்றங்கரைப் படிக்கட்டு 103
ரவீந்திரநாத் தாகூர்
தமிழாக்கம்: என்.கே.மகாலிங்கம்

பல்கலைவித்தகர் K. சந்திரசேகரன் 111
ப. ஸ்ரீஸ்கந்தன்

பேசரிய மூதறிஞர் சின்னையா ஆசிரியர் 112
வி. கந்தவனம்

மேலும் ஆக்க விபரங்கள் 4ம் பக்கம்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# தாராண்மை தளருமா?

- அ. கணபதிப்பிள்ளை

கனடா சிரிய அகதிகளை உள்வாங்கும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. லிபரல் கட்சியின் தேர்தற் பரப்புரையில் சிரிய அகதிகளுக்கான முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கான முக்கிய காரணம் அக்காலத்தில் அவ்வகதிகள் பட்ட துயரங்களை ஊடகங்கள் வெளிக்கொண்டு வந்திருந்தமை என்றே சொல்லவேண்டும்.

கொன்சவேட்டிவ்களின் குடிவரவாளர்களைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சியானது பல்லின சமூகத்தினது எதிர்ப்பையும் பெற்றுக் கொள்ளவைத்ததுடன் முடிவில் லிபரலுக்கான ஆட்சிப்பலத்தினைக் கொடுக்கவும் காரணமாகியது.

சிரிய அகதிகள் 25,000 பேரை இவ்வருட முடிவுக்குள் உள்வாங்குவோமென லிபரல் மக்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுமா அல்லது காலநீரேட்டத்துடன் பயணிக்குமா என்பதிலிருந்தே கனடாவின் தாராளத்தன்மையினை அளவீடு செய்ய முடியும்.

கனடாவின் நிலப்பரப்புக்கு(3.85 மில்லியன் சதுரமைல்) ஏற்ப இங்குள்ள 35.8 மில்லியன் மக்கள் கனடவின் வளர்ச்சிக்குப் போதுமானவர்களாக இல்லை என்றே கூறலாம். இன்று அகதிகளுக்காகச் செலவிடும் முதலீடானது இன்னும் சில ஆண்டுகளில் கனடாவின் உள்நாட்டு உற்பத்தியில் கணிசமான மாற்றத்தைக் கொண்டுவரும் என்பது உண்மைதான். ஆயினும் ஏன் சிரிய அகதிகள் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன என்பது கவனிக்கற்பாலது.

### கனடிய மக்கள் என்ன நினைக்கிறார்கள்:

அண்மையில் 'போறம் றிசேர்ச்' நடத்திய ஆய்வுக் கணிப்பீடு ஒன்றின்படி 51 சதவீதமான மக்கள் தற்பொழுது சிரிய அகதிகளை உள்வாங்குவதில் விருப்பமில்லாதவர்களாக இருந்திருக்கின்றனர். 33 சதவீதத்தினர் அகதிகளை உள்வாங்கும் செயற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதை ஒத்துக் கொண்டிருக்கையில் 15 சதவீதம் பேர் ஒன்றும் தெரியப்படுத்த முடியாதவர்களாக இருந்தனர்.

கடந்த அரசாங்கம் பின்பற்றிய கொள்கையில் இஸ்லாமிய அரசுப் போராளிகளை அழிப்பதும் அதற்கு விமான உதவி செய்வதும் பயனுடையது என்பதனை 41 சதவீதத்தினர் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். 2014ல் நடந்த கருத்துக்கணிப்பில் மூன்றில் இரண்டு கனடியர்கள் விமானத்தாக்குதல் வேண்டுமெனத்தெரிவித்திருந்தனர்.

அகதிகள் உள்வாங்கப்படுவதனால் கனடாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகப்பலவாறு சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும் அதுவும் இங்கு பிரதிபலிக்கத்தான் செய்தது. 58 சதவீதத்தினர் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

909 பேரை மட்டும் எழுமாற்று மாதிரி (Random Sample) ஆகக்கொண்டு முடிவுசெய்யப்பட்ட இந்தக்கருத்துக்கணிப்பு கனடாவின் மக்கள் கருத்தாக இருக்க முடியுமா என்ற



கேள்வி இருக்கதான் செய்கிறது. இத்தகைய செய்திகள் மக்களைத் திசைதிருப்பும் என்பதும் உண்மைதான்.

### ஐரோப்பாவின் எதிரொலி பாதிப்பு:

கனடாவில் இருப்பவரில் 76 சதவீதத்தினர் ஐரோப்பாவிலிருந்து குடியேறியோரும் அவர்களின் வாரிசுகளுமாகும். ஐரோப்பாவில் பயங்கரவாத அச்ச அலையானது கனடாவில் பரவியிருப்பதில் வியப்பேதுமில்லை. குறிப்பாக நவம்பர் 13ம் திகதி வெள்ளிக்கிழமை பிரான்சில் வெடிக்கப்பட்ட குண்டு 129 பேரின் சாவுக்குக் காரணமானது. பல நூற்றுக்கணக்கானவர்களைக் காயத்துக்குள்ளாக்கியது. அதற்குச் சூத்திரதாரிகளையும் அதற்கு உதவியவர்களையும் தேடும் பணி பெல்ஜியத்தின் தலைநகர் பிரசல்ஸிலிருந்து பிரான்ஸ் வரை தொடர்கிறது. பிரான்சுக்கும் குபெக் மாநிலத்துக்கும் இடையிலான தொடர்பு இறுக்கமானது. பல்கலைக்கழகக் கல்விக்கான கட்டணம் தொடர்பாக குபெக் மாணவர்கள் பெறும் அதே சலுகைகளைப் பிரான்சிய மாணவர்கள் பெற்றிருந்தார்கள். இப்பொழுது கனடாவின் ஏனைய மாநிலங்களில் உள்ள மாணவர்களுக்கு இணையாகக் கணிப்பிடப்படுகறார்கள். பிரான்சில் மழை பெய்தால் குபெக்கில் தும்மல்வரும் நிலையைத் தவிர்க்க முடியாது என்பதால் பிரான்சுச் தாக்குதலின் பாதிப்பானது கனடாவில் பிரதிபலித்திருப்பதில் வியப்பேதுமில்லை.

தீவிரவாதிகளின் உணர்ச்சிப் பேச்சுக்களினால் உந்தப்பட்டவர்களின் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகப் பார்க்கப்படும் இந்தத்தாக்குதல் போன்று இன்னும் பல தாக்குதல்களுக்கு இந்தத் தீவிரவாதப் பிரிவானது உரிமை கோரியிருக்கிறது.

பிரான்சு வட ஆபிரிக்காவிலிருந்தும் மத்திய கிழக்கிலிருந்தும் குடிபெயர்ந்த பல முஸ்லிம்களின் தாய்நாடாக இன்று இருந்து வருகிறது. முஸ்லிம் சமூகம் தமக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் கலாச்சாரத்துக்கு எதிரான சட்டதிட்டங்களுக்குத் தமது எதிர்ப்பினைத் தெரிவித்துக் கொண்டு வருகிறார்களாயினும் தமது குடிபெயர்வு நாட்டுக்கு எதிராகவும் அந்த மக்களுக்கு எதிராகவும் பயங்கரவாதிகளாகச் செயற்பட அவர்கள் தயாராக இருந்ததில்லை. இதே நிலை முஸ்லிம்கள் குடிபெயர்ந்த மேலை நாடுகளிலும் இடம் பெறுகிறது.

ஆபிரிக்க, மத்திய கிழக்குப் பிரான்சியக் குடியேற்ற நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் பிரான்சிய அரசு கிறிஸ்தவர்களை அழிக்க முயலும் போகோகறாம், அல்கைடாவின் பல பிரிவுகள் ஆகியவற்றுக்கு எதிராக உள்நாட்டு அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகளில் தனது உதவியினைச் செய்து வருகிறது. இத்தகைய உதவிகள் தம்மை அழிப்பதற்குச் செய்யப்படுவதால் முழுக்கிறிஸ்துவ உலகுக்கும் எதிரான புனிதப்போர் என்ற மாயையினை இத்தகைய இயக்கங்கள் தோற்றுவித்துள்ளன.

### முஸ்லிம் சமூகம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா:

மனிதாபிமான அடிப்படையில் இந்த உள்நாட்டுக்குழப்பங்களினால் பாதிக்கப்படுபவர்கள் கிறிஸ்துவர், முஸ்லிம் என்ற பாகுபாட்டுக்குட்படுத்தபட முடியாதுள்ளது. அரச ஆதரவும் பயங்கரவாதிகளினது ஆதரவும் மாறி மாறி ஒரு பிரதேசத்தில் இடம் பெறுகையில் இரு பகுதியினரும் அகதிகளாக மாறி விடுகின்றனர். இந்த நிலையே முடிவில் யார் சந்தேகிக்கப்படக்கூடியவர்கள் என்ற நிலையைத் தோற்றுவித்துவிடுகிறது.

பல நூற்றுக்கணக்கான தீவிரவாத இயக்கங்கள் தம்மையும் தமது போராட்டங்களையும் நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் வெற்றியினை இலகுவிற் பெற்றுவிடமுடிவதில்லை. தவிரவும் மத உணர்வு ஊட்டப்பட்ட மக்கள் தங்களைப் பெருமையாக நினைத்துக் கொள்ளுவது வெறுப்புக் குற்றங்களையே முடிவில் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம்களுக்கு எதிராக மேற்குலகில் எதிர்ப்பலைகள் தோற்றம் பெறுகையில் இன வெறுப்புக்குற்றங்கள் கனடாவில் இடம் பெற்றுவருகின்றன. முஸ்லிம் பள்ளிவாசல்கள் எரிக்கப்படுதல், பர்தா அணிந்த பெண்கள் தாக்கப்படுதல் ஆகிய குற்றங்களைச் செய்ய ஒரு பிரிவினர் ஆயத்தமாகிவிடுகின்றனர். இது தவறு எனச் சுட்டிக்காட்டப்பட்டாலும் கூட ஒருசில நிகழ்வுகள் தனிமனித, சிறு குழுவினர் சார்ந்த நடவடிக்கையாக இருக்கிறது.

அடையாளங்காண முடியாத வஞ்சம் தீர்க்கும் உணர்வானது அறிந்ததிலிருந்து விடுபடமுடியாத உணர்வுகளினால் உருவாக்கப்பட்டு மற்றவர் சுதந்திரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. போர் மேகஞ்சூழ்ந்த நாடுகளில் இம்முறை சர்வ சாதாரணமாக நடந்தாலும் சனநாயகத்தினையும் சுதந்திரத்தையும் மதிக்கும் கனடா போன்ற நாடுகளில் இவற்றை அனுமதிக்க முடியாது.

முஸ்லிம்கள், மற்றும் போர்ப்பிரதேசங்களிலிருந்து வருபவர்களால் கனடாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பது கருத்தாழம்

தொடர்தல் 11ம் பக்கம்

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


| | |
|---|---|
| தத்தளிக்கும் தமிழகம் - பெருமழை பேரிடரானதேன்? — மேனா. உலகநாதன் | 8 |
| நோய் பயம் — புஷ்பா கனகரட்ணம் | 13 |
| எலும்புகளும் நோய்களும் — எஸ். பத்மநாதன் | 14 |
| வாய்ப் புற்றுநோய் — ரவிச்சந்திரிகா | 17 |
| உதறலெடுக்கும் steering — அதீசன் சர்வானந்தன் | 18 |
| கங்காரு — செல்லையா சந்திரசேகரி | 23 |
| மருந்தில்லா மருத்துவங்கள் சில... — ஷியாமளா நவம் | 25 |
| பிள்ளைகளின் உடற்பருமனில் பெற்றோரின் பங்கு — ஜீவா திசைராஜா | 26 |
| வெப்பத்தை மீட்கும் காற்றோட்ட ஜன்னல் பராமரிப்பு — இலகுப்பிள்ளை சிறிநாதன் | 30 |
| வதிவிடத்தில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால்... — மகேன் சிங்கராஜா | 32 |
| விடுமுறைகால விளக்குகள் மின் செலவைக் கூட்டுமா? — வேலா சுப்ரமணியம் | 36 |
| நிரிழிவு - பயமும் பாதுகாப்பும்! — சிவலிங்கம் ஜெயறஜீன் | 38 |
| நீர்க்குழாய்களில் உறைபனி — செந்தூரன் புனிதவேல் | 43 |
| மகர முதல வளர்ப்பெல்லாம் — மஞ்சுளா ராஜலிங்கம் | 44 |
| கைக்கெட்டியது வாய்க்கு... — கதிர் துரைசிங்கம் | 48 |
| Hangoverஇலிருந்து விடுபட... — விவேகநாதன் | 51 |
| கனடாவில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு — த. சிவபாலு | 53 |
| இயற்கையின் எழில் வண்ணங்கள் — பொன். குலேந்திரன் | 57 |
| விண்ணைத் தாண்டி வந்தவர்கள் — குரு அரவிந்தன் | 58 |
| சொல்லத்தான் நினைக்கிறேன் — அருண்மொழிவர்மன் | 67 |
| வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி - 1896 — முருகேசு பாக்கியநாதன் | 69 |
| மதங்கள் தரும் மாற்றங்கள் — உதயணன் | 107 |
| மாறுதல்கள் — தெளிவத்தை ஜோசப் | 114 |
| வாழ்வை வளமாக்குவது எப்படி? — சிறீதரன் துரைராஜா | 118 |


படம்: Reuters

# பரிஸ் தாக்குதலின் பின்னணி!

- ரதன் -

மப்பும் மந்தாரமுமாக இருந்த அந்த மாலைப் பொழுதில் பிரான்சின் தேசிய உதைபந்தாட்ட அணியும், ஜேர்மனியின் தேசிய உதைபந்தாட்ட அணியும் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடிக்கொண்டிருந்தன. போட்டி நடைபெற்ற ஸ்ரேட் டி பிரான்ஸ் அரங்கு நிரம்பிக்காணப்பட்டது. சுமார் எண்பத்தோராயிரம் பேர் போட்டியை ரசித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் மத்தியில் பிரான்சின் அதிபர் ஒலான்ட்டும் அமர்ந்திருந்தார். அரங்கிலிருந்த கணினித் திரையில் கடிகாரம் நேரம் மாலை 9.20ஐக் காட்டியது. பிரான்ஸ் அணி பந்தை லாவகமாக மாற்றி ஜேர்மனியின் எல்லைக்குள் கொண்டு சென்று கொண்டிருந்த பொழுது அந்தச் சத்தம் கேட்டது. முதலில் மக்கள் ஆரவாரிப்பின் மத்தியில் அது பெரிதாகக் கேட்கவில்லை. தொடர்ந்து மூன்று சத்தங்கள் வானைப் பிழந்தன. எது என்னவென்று அறிய முன்னரே அரங்குக்கு வெளியேயிருந்த மக்கள் சிதறி ஓடத் தொடங்கிவிட்டனர். போட்டி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

இது எதையும் அறியாமல் 18 அலிபேர்ட் வீதியில் உள்ள லி ஹலியன் பாரில் உணவு, மது பரிமாறல் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது. 9.25 மணிக்கு ஒரு கறுப்பு நிறக் கார் உணவகத்தின் முன் வேகமாக வந்து நிறுத்தப்படுகின்றது. காரிலிருந்து இறங்கிய ஒருவன் சரமாரியாக உணவகத்தினுள் இருந்தவர்களை நோக்கிச் சுடுகின்றான். வீதியைக் கடந்த துப்பாக்கிக்காரன் லிற்றில் கம்போடியா உணவகத்தினுள்ளும் சென்று சுடுகின்றான். மொத்தமாக 15பேர் இரண்டு உணவகங்களிலும் உயிரிழக்கின்றனர். 15 பேர் காயமடைகின்றனர். சுமார் நூறு தடவைகள் துப்பாக்கிச் சூடு நடந்தது. 9.30க்கு மீண்டும் விளையாட்டரங்கில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இது ஒரு தற்கொலைத் தாக்குதல். 9.32க்கு தெற்காக அமைந்துள்ள மற்றொரு வீதியில் உள்ள உணவகத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது. ஐவர் இறக்கின்றனர். மீண்டும் சற்றுத் தள்ளி உள்ள மற்றொரு உணவகத்தில் துப்பாக்கிச் சூடு. இம்முறை 19 பேர் கொல்லப்படுகின்றனர்.

9.40க்கு மற்றொரு உணவகத்தில் தற்கொலைத் தாக்குதல் நடக்கிறது. எவரும் உயிரிழக்கவில்லை.

9.40க்கு வெளியில் நடைபெறுவது எதனையும் அறியாமல் கலிபோர்னியாவிலிருந்து வருகைதந்துள்ள ரொக் இசைக் குழுவின் இசையை பற்றஹலன் அரங்கில் ஏராளமானோர் இரசித்துக் கொண்டிருக்கின்றனர். 1500 பேர் அமரக்கூடிய அந்த அரங்கு நிரம்பிக் காணப்படுகின்றது. ஒரு சில மாதங்களுக்கு முன்புதான் இவ்வரங்கம் புதிய நிர்வாகத்தின் கீழ் வந்தது. அதற்கு முன்பு இந்த அரங்கம் யூதர் ஒருவரின் நிர்வாகத்திலிருந்தது. இவர் இஸ்ரேலுக்கு ஆதரவாக தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்துவதாகக் கூறி அரங்கு மீது வன்முறைப் பிரயோகங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த அரங்கில் அப்போது இசை நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்த 'த ஈகில்ஸ் ஒப் டெத் மெற்றல்' என்ற இசைக்குழுவினர் இவ் வருட ஆடி மாதம் இஸ்ரேலில் நிகழ்ச்சிகள் நடத்தியிருந்தனர்.

பற்றஹலன் அரங்கினுள் நுழைந்த துப்பாக்கிதாரிகள் நிதானமாக சுடத்தொடங்குகின்றனர். சுட்டு முடிந்ததும் எந்த வித பதட்டமுமின்றி புதிய சன்னங்களைப் போட்டு புதிதாகச்சுடுகின்றனர். இந்த அரங்கின் மேடைக்குப் பின்பக்கம் மதுவகம் இருக்கிறது. பார்வையாளர்கள் மதுவகப்பக்கத்தாலும், இரண்டாம் தளப் பார்வையகப் பக்கத்தாலும் ஓடத் தொடங்குகின்றனர். இரண்டாம் மாடியிலிருந்து பலர் வெளியே குதித்தனர். வேறு பலர் யாராவது காப்பாற்றுவர்கள் என்ற நம்பிக்கையுடன் மாடியில் தொங்கிக் கொண்டிருந்தனர். நீண்ட நேரம் நீடித்த அரங்க தாக்குதலில் சுமார் 89 பேர் படுகொலை செய்யப்பட்டனர். மேடையை நோக்கி கிரைனைட்டுகளும் துப்பாக்கிதாரிகளால் எறியப்பட்டன. பார்வையாளர்கள் வெளியேறாதவாறு மறித்து வைத்து ஏ.கே 47 துப்பாக்கிதாரிகள் படுகொலை புரிந்தனர். இறுதியாக இரவு 12 மணிக்கு பொலிசார் அரங்கினுள் நுழைந்தனர். இரண்டு தற்கொலைதாரிகள் தங்களை அழித்துக் கொன்றனர். மூன்றாமவர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் வெடித்துச் சிதறினார். 9.55 அளவில் ஸ்ரேட் டி பிரான்ஸ் விளையாட்டரங்கில் தற்கொலைத் தாக்குதல். எவரும் இறக்கவில்லை.

தாக்குதல் நடைபெற்றபோது மதுவகத்தில் உணவருந்திக் கொண்டிருந்த மத்தியூ என்பவர் நியுயோர்க்கர் சஞ்சிகைக்கு அளித்த தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றன. இவரது கைவிரலில் மட்டுமே சூடுபட்டுள்ளது. தான் பெண்களின் உடல்களையே அதிகம் கண்டதாக இவர் குறிப்பிட்டுள்ளார். தனக்கு அருகிலிருந்து உணவருந்திக் கொண்டிருந்தவர், தனது காதலியின் உயிரற்ற உடலை சிறிது நேரம் அணைத்தவாறு இருந்து விட்டு பின்னரே ஓடினார் என்றார். பலருக்கு அதிர்ச்சியில் என்ன செய்வது என்று தெரியாமல் திக்கு முக்காடினார்கள் என்றார். இந்த தாக்குதல்களின் போது அதிகளவு பெண்கள் சுடப்பட்டர்களா?

இந்த தாக்குதல்களுக்கு தீவிரவாதிகள் கறுப்பு நிற வோக்ஸ்வேகன் வாகனத்தையும் கறுப்பு நிற ரொனோலட் சிலியோ வாகனத்தையும் பயன்படுத்தியுள்ளனர். தாக்குதல்கள் நடைபெற்ற இடத்திலில் ஒரு சிரிய நாட்டுக் கடவுச்சீட்டு கண்டெடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உலகெங்கும் சிரிய அகதிகளை மேற்கு நாடுகள் ஏற்கக் கூடாது. இவர்கள் அந்த நாட்டில் தாக்குதல்கள் நடத்துவார்கள் என்று மக்கள் சொல்வதாக மேற்குலக ஊடகங்கள் முதலைக் கண்ணீர் விட்டன. அவர்கள் கண்ணீர் காயமுன்னர் பிரான்சின் நீதியமைச்சர் இது ஒரு போலிக் கடவுச்சீட்டு. இதில் உள்ளவர் தாக்குதலில் ஈடுபடவில்லை என உறுதிப்படுத்தினார்.

9.56க்கு உலகெங்கும் உள்ள வானொலிகள், தொலைக் காட்சிகள் இந்த தாக்குதல் பற்றி முழங்கின. பி.பி.சி, சி.பி.சி, சி.என்.என் என்பவை தொடர்ந்து பரிஸ் காட்சிகளை, பரிஸின் ஒவ்வொரு மூலையிலுமிருந்து காட்டத் தொடங்கின. காயப்பட்டோர், காணாமல் போனோர், உயிரிழந்தோர் போன்ற பல விபரங்களும் ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொன்றாக ஒலி, ஒளிபரப்பாகின. இந்த பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் ஓரிருவரை விட அனைவரும் ஒன்றில் தற்கொலைதாரிகளாக உயிரிழந்துள்ளனர் இல்லையேல் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். தொடர்ந்து தேடப்படுபவர்களில் முக்கியமானவர் சலா அப்சலாம். இவர் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கின்றார்.

லு புவா (Le Point) பத்திரிகைச் செய்தியை சுட்டி இங்கிலாந்திலிருந்து வெளிவரும் டெய்லி மெயில் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தாக்குதல்தாரிகள் அல்போற்வில் ஹோட்டலில் அறைகள் 311, 312 ல் தாக்குதலுக்கு ஒரு கிழமைக்கு முன்பிருந்தே தங்கியிருந்தாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இந்த பெரிய அறைகளை தங்கள் சொந்தப் பெயரிலேயே பதிவு செய்ததாகவும், ஹோட்டல் டொட் கொம் என்ற இணையத்தளத்தின் மூலம் அறைகளை முற்பதிவு செய்ததாக மேலும் செய்தி வெளிவந்துள்ளது. இவர்கள் தங்களது சொந்த வங்கி அட்டை மூலமே பணமும் கட்டியுள்ளார்கள். இதனை விட வேறு ஒரு அப்பாட்மென்ரையும் வாடகைக்கு எடுத்து தங்கியிருந்ததாகவும் தெரியவந்துள்ளது. இதன் உரிமையாளர் இவர்கள் கருணை மிக்கவர்கள், முகத்தில் தாடி இல்லாதவர்கள், நன்றாக நடந்து கொண்டார்கள், நாகரிக உடை அணிவார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட 'ஏ.கே.47' துப்பாக்கிகள் பெல்ஜியத்திலிருந்து கார் மூலம் பிரான்சினுள் கொண்டுவரப்பட்டுள்ளன.

தாக்குதல் நடந்த மறு நாள் காலை, தாக்குதலின் சூத்திரதாரி சலா அப்சலாமும் அவரது இரு சகாக்களும் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த போது பெல்ஜியம் எல்லைக்கு அருகாமையில் வைத்து பிரான்ஸ் பொலிசாரால் நிறுத்தப்பட்டார்கள். இவர்கள் தங்கள் அடையாள அட்டைகளை காட்டியவுடன் இவர்கள் செல்ல அனும

தொடர்தல் 7ம் பக்கம்




# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

201-1265 Morningside Ave
Scarborough, ON M1 B 3V9

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

# பரிஸ் தாக்குதலின்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

திக்கப்பட்டனர். பெல்ஜியத்துக்குள் சென்ற பின் சலா அப்சலாம் காணாமல் போய்விட் டார். இக் கட்டுரை எழுதப்பட்டுக் கொண் டிருக்கும் வரை இவர் தேடப்பட்டுக்கொண் டிருக்கின்றார். சலா அப்சலாமும் இவரது சகோதரர் பிராகிம் அப்சலாமும் பெல்ஜியம் புருசலஸில் ஒரு பார் ஒன்றை நடத்திவந் தார்கள். பரிஸ் தாக்குதலுக்கு இரு கிழ மைகளுக்கு முன்பு இந்த மதுவகம் பொலி ஸாரால் மூடப்பட்டது. நீண்ட காலமாக இந்த மதுவகத்தில் போதைப் பொருட்கள் பாவிக்கப்படுவதாகவும், பெரும் இரைச்சலு டன் இயங்குவதாகவும் தொடர்ச்சியாக மக் கள் கொடுத்த புகாரைத் தொடர்ந்தே இந்த மதுவகம் மூடப்பட்டது. இத் தாக்குதல்களில் ஈடுபட்ட மற்றைய பயங்கரவாதி பிரா ன்ஸ் பிரசை. அங்கேயே பிறந்து வளர்ந்தவர். இவரைப் பற்றி கடந்த வருட இறுதியிலும் இவ்வருட ஆரம்பத்திலும் பிரான்ஸ் பொலி சாருக்கு தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஈராக்கிய உளவு நிபுணர்கள் மேற்கு நாடு களுக்கு 'விரைவில் தற்கொலைதாரிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் கள்' எனக் கூறியுள்ளனர்.

மொத்தமாக 129 பேர்வரையில் வெள்ளி 13ம் திகதி கார்த்திகை மாதம் தீவிரவா திகளால் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக் குதல்கள் அனைத்தும் மாலை நேரத்திலேயே நடைபெற்றுள்ளது.

லண்டன் ரியூப் ரயிலிலும் ஸ்பெயின் புகை யிரத்திலும் தாக்குதல் நடத்தப்பட்ட போது இறந்தோரில் பெரும்பாலானோர் தொழிலா ளர்கள் ஆவார்கள். இவ்விரண்டு சம்பவங் களும் காலையில் நடைபெற்றன. இதே கார்த்திகை மாதம் 26ந் திகதி 2008ம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற தாக்குத லுக்கும் இத் தாக்குதல்களுக்கும் சில ஒற் றுமைகள் உண்டு. இவ்விரண்டு தாக்குதல் களும் நான்கு கிலோ மீற்றருக்குட்பட்ட சுற்று வட்டத்திலேயே நடைபெற்றன. மும்பை மூன்று கிலோ மீற்றர். பரிஸில் 3.6 கி.மீற் றர். இரண்டிலும் பல்வேறு இடங்களில் தாக் குதல்கள் நடத்தப்பட்டன. மாலை நேரத்தி லேயே தாக்குதல்கள் இடம்பெற்றன. பரி ஸில் பொதுமக்கள் அதிகளவிலுள்ள விளை யாட்டரங்கம். மும்பையில் பொது மக்கள் அதிகளவிலுள்ள புகையிரத நிலையம். பரிஸில் தாக்கியவர்கள் எல்லை கடந்து பெல்ஜியத்திலிருந்து வருகை தந்திருந்தனர். மும்பையில் தாக்கியவர்கள் எல்லை கடந்து பாகிஸ்தானிலிருந்து வருகை தந்திருந்தனர். இது தற்செயலானதாக இருக்கலாம். ஆனா லும் இவ்விரண்டிலும் முஸ்லீம் தீவிரவாதி கள் ஈடுபட்டுள்ளமையினால் தொடர்புமி ருக்கலாம்.

பரிஸ் தாக்குதலின் பின்னர் பரிஸின் புற நகர்ப்பகுதியான செந்தெனி (Saint-Denis) பகுதியில் அப்பாட்மெண்ட் ஒன்று சுற்றிவ- ளைக்கப்பட்டு தாக்கப்பட்டது. இங்கு தீவிர வாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் நடந்த சண்டையில் சுமார் 5000 தடவை கள் துப்பாக்கிச்சூடு நடந்ததாகக் கூறப்படு கின்றது. சண்டையின் இறுதியில் ஒரு பெண் தன்னைத்தானே வெடிக்க வைத்ததாக முத லில் வந்த அறிக்கைகள் கூறின. இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 'வெடிக்க வைத்து இறந்த பெண்ணின் பெற்றோர் பிரிந்து வாழ்கின்றனர். இவர் ஒரு விருந்து விரும்பி. முஸ்லீம் மதத்தை பின்பற்றினாலும் குர்ஆன் வாசித்ததே இல்லை. போதை மருந்துகளை உட்கொள்பவர்' என ஊட கங்கள் தெரிவிக்கின்றன. ஒட்டாவாவில் பாராளுமன்றத்தின் மீது அக்ரோபர் 22, 2014ல் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தின் போதும் சுட்டுக்கொல்லப்பட்டவர் போதை மருந்து உட்கொள்பவர் எனக் கூறப்பட்டது. பரிஸில் ஹோட்டல் அறைகளில்கூட போதை மருந்துகளை தற்கொலைதாரிகள் பாவித் ததற்கான அடையாளங்களை பொலிசார் கண்டெடுத்துள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப் பினர் பலவீனமானவர்களையும் சமூகத்தால் ஒதுக்கப்படுபவர்களையும் தற்கொலைதா ரிகளாகத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குரிய பணத்தையும் போதைமருந்துகளையும் கொடுத்து அவர்களை தங்கள் வசமாக்கு கின்றார்கள் எனத் தெரியவந்துள்ளது. பெல்ஜியத்தின் தலைநகரமான புறுசெ லெல்ஸ் நகரம் மூன்று நாட்கள் முழுமை யாக இயங்காமல் பயங்கரவாதிகளைத் தேடியது. இது போன்ற நிகழ்வுகள் அபூர் வமாகவே நடைபெறும். மேற்குலகம் மீதான ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் தாக்கத்தை இது எடுத்துக் காட்டுகின்றது.

## இஸ்லாமிய அரசு அல்லது ஐ.எஸ்.ஐ.எஸ்:

இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்களின் ஆரம்பம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பலஸ்தீனிய போராட்ட அமைப்புகளுடன் ஆரம்பிக்கப்பட்டது எனக் கொள்ளலாம். ஆனால் இந்த பகைமையின் ஆரம்பம் சிலுவை யுத்தத்தின் போது ஆரம்பித்ததாக இன்னொரு சாரார் கருதுவர். இன்று மேற் குலகுக்கு எதிரான இந்த இஸ்லாமிய அமைப்புகள் ஐம்பதுகளின் இறுதியிலும் அறுபதுகளிலும் உருவாக ஆரம்பிக்கின்றன. இவை பல்வேறு அமைப்புக்களாக உருமா றுகின்றன. இந்த உருவாக்கம் பி.எல்.ஓ, அல் பற்றா, முஸ்லீம் பிறதர் கூட், அல் கைதா, ஜிகாத், ஐ.எஸ்.ஐ.எஸ் எனத் தொடர்கின்றது. இறுதியான ஐ.எஸ்.ஐ. எஸ்ன் வளர்ச்சியை நான்கு காலகட்டங்க ளில் காணலாம். 2004-2006 - அல் கைதா அமெரிக்காவிற்கு எதிராகவும், சியா முஸ் லீம்களுக்கு எதிராகவும் எழுச்சியடைகின்ற னர். 2006-2011 - ஐ.எஸ்.ஐ உருவாகின்றது. ஈராக்கில் இஸ்லாமிய அரசு எனப்பொருள் படும். ஈராக்கில் அமெரிக்க படைகளின் இருப்பு இவ் அமைப்பின் வளர்ச்சியை பாதிக்கின்றது. 2012 - 2014 அமெரிக்க படைகளின் வெளியேற்றம் இவர்களை மீண்டும் வலுவாக்கின்றது. சிரியாவில் இயங்கி வந்த இவர்களது நேச அமைப்பான அல் நஸ்ரியாவுடன் கருத்து வேறுபாடு ஏற்படு கின்றது. அல் கைதாவுடனும் பிரிவு ஏற்படு கின்றது. ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற பெயர் மாற் றம் பெறுகின்றது. அதாவது ஐ.எஸ்.ஐ.எஸ் என்பது சிரியா, ஈராக்கை உள்ளடக்கிய இஸ்லாமிய அரசு எனப் பொருள்படும். 2014க்கு பின்னர் இதன் தற்போதைய நிலைக்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ்ஸிற்கு இன்று பாகிஸ்தான், நைஜீரியா, லிபியா, அல்ஜீரியா, பாலஸ்தீ னம், ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் கிளைகள் உள்ளன. சுமார் முப் பதாயிரம் பேர் இவர்களது படைகளில் உள்ளனர். இவர்கள் உலகின் பல நாடுக ளைச் சேர்ந்தவர்கள். நாடுகளின் எண் ணிக்கை சுமார் நூறு எனக் கருதப்படுகின் றது.

இவர்களது கட்டுப்பாட்டில் உள்ள, இவர் கள் ஆட்சி செய்யும் பிரதேசத்தின் அளவு ஐக்கிய இராச்சியத்தின் பரப்பளவிற்கு சம னானது. எட்டு மில்லியன் மக்கள் இப் பிர தேசங்களில் வாழ்கின்றார்கள்.

இதன் தலைவர் அபுபக்கர் அல் பக்ஹாடி. இவர் குர்ஆனில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். தெற்கு ஈராக்கில் உள்ள புக்கா முகாம் சிறையில் 2005லிருந்து 2009வரை இருந் துள்ளார். அங்கே சதாம் ஹுசெயினின் தள பதிகள், படை வீரர்களும் சிறைவைக்கப் பட்டிருந்தனர். இவர்களில் பலர் தீவிர மத வாதிகள். மொத்தமாக 25ஆயிரம் பேர்வரை சிறையிலிருந்தனர். பக்ஹாடியும் இப் போர் வீரர்களும் நெருக்கமாகின்றார்கள். இன்று இஸ்லாமிய அரசுப் படைகளின் முக்கிய பொறுப்புக்களில் இவர்கள் உள்ளார்கள். 'கடவுள் எங்களை தன்னை துதிக்கவும் மதத்தைப் பரப்புவதற்காகவும் உருவாக்கி யுள்ளார். கடவுள் தனது எதிரிகளுடன் போரிட்டு தன்னையும் மதத்தையும் காக்க வும் எனக் கட்டளையிட்டுள்ளார்' இவ்வாறு கூறியே பக்ஹாடி பிரச்சாரங்களை மேற் கொள்கின்றார். பக்ஹாடியின் கீழ் இரு உப தலைவர்கள் உள்ளனர். ஒருவர் சிரி யாவிற்கும் மற்றவர் ஈராக்கிற்கும் பொறுப் பாக உள்ளனர். இவர்களின் கீழ் 12 கவர் னர்கள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் பின்வரும் ஒவ்வொரு துறைக்கும் பொறுப் பாக உள்ளனர். நிதி, இராணுவம், சட்டம் மற்றும் நீதி, தலைமைத்துவம், போராளி கள் நலன் காத்தல், பாதுகாப்பு. உளவு, ஊடகம் ஆகிய துறைகளே அவை. இவர்களுக்கான நிதியை சுனி முஸ்லீம்களை அதிகமாக கொண்ட நாடுகள் வழங்குகின் றன. (குறிப்பாக சவுதி அரேபியா.) எண் ணெய் கிணறுகள் பல இவர்கள் வசம் உள்ளன. இவர்கள் எண்ணெய் விற்பனை மூலம் நாளொன்றிற்கு சுமார் மூன்று மில் லியன் டொலர் வருமானம் பெறப்படுவதா கத் தெரிகின்றது. இவர்கள் ஆட்சி செய்யும் பிரதேசங்களில் மக்களிடமிருந்து பெரும ளவு வரியும் வசூலிக்கப்படுகிறது.



ஈராக்கை விட்டு அமெரிக்க இராணுவம் வெளியேறியவுடன் ஈராக் இராணுவம் பல மிழந்து விட்டது. இஸ்லாமிய தீவிரவாதி- களை ஈராக்கிய இராணுவம் எதிர்கொள்ள முடியாமல் தடுமாறியது. ஈராக்கிய இரா ணுவத்தின் பல தளங்களை தீவிரவாதிகள் கைப்பற்றினர். விளைவு அமெரிக்கா வழங்கிய பல ஆயுதங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் வசமாகி யது. எப் 16 ஏவுகணைகள், எம்.1 டாங்கி கள் போன்ற புதிய அதிதொழில்நுட்ப ஆயு தங்களை சுலபமாக இஸ்லாமிய அரசு பெற்றுக் கொண்டது. இதில் எம்.1 டாங்கி உலகின் மிகச் சிறந்த டாங்கியாகும். இதன் உயர் தொழில்நுட்பம் இதன் பலமாகும். அத்துடன் உறுதியான கவசமைப்பைக் கொண்டது. இப்பொழுது அமெரிக்காவின் நீண்ட கால எதிரியான ஹிஸ்புல்லா அமைப்பிடமும் ஒரு எம்.1 டாங்கியிருப்பது தெரியவந்துள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பு நேரடியாக அமெரிக்காவிலிருந்து இதைப் பெற வாய்ப்பில்லை. ஒன்றில் இஸ்லாமிய அரசிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் ஈராக் படைகளிடமிருந்து பெறப்பட்டிருக்கவேண்டும். முன்னாள் அமெ ரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் 'அமெரிக்கா ஜனநாயகத்தின் ஆயுதக் களஞ்சியம்' என் றார். மத்திய கிழக்கில் தனக்கு சாதகமான அமைப்புக்களுக்கு அமெரிக்கா ஆயுதங் களை வழங்கிவருகின்றது. இவற்றை இஸ் லாமிய அரசு வெற்றி கொள்ளும் போது அவை இஸ்லாமிய அரசுவசமாகின்றன.

ஐ.எஸ்.ஐ.எஸிற்கு அதிக எதிரிகள் உள் ளார்கள். லெபனான்-சிரிய எல்லையை காவல் காக்கும் ஹிஸ்புல்லா அமைப்பு, குர்தீஸ் விடுதலைப் படைகள், சிரிய இரா ணுவம், ஈராக் இராணுவம், ரஷ்ய அரசு, தற்போது பிரான்ஸ் இவற்றுடன் மேற்கத் திய நாடுகள். இவற்றை விட இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்கள் என எதிரிகள் பட்டியல் நீள்கின்றது. வீறுடன் போரிடும் இந்த பயங்கரவாத அமைப்பை எதிரிகள் பல இருந்தும் வீழ்த்த முடியாமல் இருப் பது ஏன்? எதிரிகள் தங்கள் சொந்த நல னைக் காக்கவே போரிடுகின்றார்கள்.

| நாடு | சுனி | சியா |
|---|---|---|
| ஈரான் | 10% | 90% |
| பஹெறின் | 30% | 70% |
| ஈராக் | 40% | 60% |
| துருக்கி | 70% | 30% |
| பாகிஸ்தான் | 70% | 30% |
| சவூதி அரேபியா | 75% | 25% |
| லெபனான் | 65% | 35% |
| இந்தியா | 34% | 66% |

சவூதி அரேபியாவும் மறைமுகமாக ஐ.எஸ். ஐ.எஸ்க்கு பண உதவி வழங்குகின்றது. அத்துடன் இராணுவ ஆலோசனையும் வழங் குகின்றது. சிரியாவில் ஆசாத்திற்கு ஆதர வாக ஈரான், ரஷ்யா மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பு உள்ளன. ஆசாத்திற்கு எதிராக அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள் உள்ளன. சிரியாவில் குண்டுகள் போட்ட அமெரிக்கா ஐ.எஸ்சின் எதிரியான அல் நஸ்ரியா மீது குண்டுகளை வீசியுள்ளது. அமெரிக்கா ஆசாத்தின் வெளியேற்றத்தை விரும்புகின்றது. ரஷ்யா ஆசாத்தை ஆத ரிக்கின்றது, ஆசாத்தின் வீழ்ச்சி என்பது இஸ்லாமிய அரசிற்கு அதாவது ஐ.எஸ்.ஐ. எஸிற்கு சாதகமாகும். குர்தீஸ்தான் தனி நாடு அமைவதை துருக்கி விரும்பவில்லை. எனவே துருக்கி இஸ்லாமிய அரசுக்கு மறைமுக ஆதரவு வழங்குகின்றது. இக் கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது துருக்கி ரஷ்ய விமானத்தை சுட்டு வீழ்த்தியுள்ளது. தனது நாட்டின் எல்லைக் குள் பறந்ததாக துருக்கி குற்றஞ்சாட்டியுள் ளது. விழுந்த விமானம் சிரிய எல்லையி லிருந்து நான்கு கிலோ மீற்றர் தள்ளியே விழுந்துள்ளது. ஒன்று ஐ.எஸ்.ஐ.எஸ் பல வீனமடைவதை துருக்கி விரும்பவில்லை. இரண்டாவது நேட்டோ நாடுகள் ரஷ்யாவின் எழுச்சியை விரும்பவில்லை. இவ்வாறு கூட் டாளிகளின் ஒற்றுமையின்மையும் நோக்க மின்மையும் ஐ.எஸ்.ஐ.எஸ் இஸ்லாமிய அரசின் பலத்தை அசைக்க முடியாமல் போகப்போகிறது. இப்பிரதேசத்தில் யார் யாருக்கு எதிரி, யார் யாருக்கு நண்பன் என்பதனை கண்டறிவது சுலபமானதல்ல.

பரிஸில் தாக்குதல்களுக்கு முன்பாகவே பல நாடுகளில் அழிவுகளை ஐ.எஸ்.ஐ.எஸ் ஏற் படுத்தியுள்ளது. பெய்ரூட், பாக்தாத் போன்ற முஸ்லீம்கள் அதிகளவு வாழும் நாடுகளி லும் ஐ.எஸ்.ஐ.எஸ் தற்கொலைதாரிகள் தங்களது கைவரிசையைக் காட்டியுள்ளார்கள். அங்கு இறந்தவர்கள் பெரும்பாலானவர்கள் முஸ்லீம்கள். மேற்கு நாடுகளில் தாக்கு தல்கள் நடந்தவுடனேயே உலக ஊடகங் கள் பெரிதாக காட்டிக் கொள்கின்றன. இதற் குக் காரணம் இன்று உலகின் பலம் வாய்ந்த ஊடகங்கள் மேற்கு நாடுகளின் செல்வாக்குடனேயே செயல்படுகின்றன.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் முகநூலை யும், ரூவிற்றரையும் அதிகளவு பயன்படுத் தியே மேற்கு நாடுகளில் இருந்து ஆட் சேர்ப்பு செய்கின்றார்கள். ஐ.எஸ்.ஐ.எஸ்

தொடர்தல் 9ம் பக்கம்

## தத்தளிக்கும் தமிழகம்

# பெருமழை பேரிடரானதேன்?

- மேனா. உலகநாதன் -

இயற்கையை நாம் அழித்தால், அது நம்மையே அழித்துவிடும்'

இதைச் சொன்னது சுற்றுச்சூழல் ஆர்வலரோ, இயற்கை ஆர்வலரோ அல்ல. சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர்.

சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் கடந்த நவம்பர் 23ம் தேதி பிற்பகலில் பிடித்த பெருமழை, சுமார் 8 மணிநேரம் கொட்டித் தீர்த்தது. மாநகரம் தீவைப் போலத் தண்ணீரில் மிதந்தது. சாலைகள், குடியிருப்புகள் என எங்குபார்த்தாலும் தண்ணீர்... தண்ணீர்... தண்ணீர்...

சென்னை பிராட்வேயில் இருந்து மாலை 5 மணிக்கு காரில் புறப்பட்ட நண்பர் ஒருவர் தாம்பரத்துக்கு அதிகாலை 3 மணிக்குத்தான் போய்ச் சேர்ந்துள்ளார். 15 கிலோமீட்டர் தொலைவை அடைய 10 மணிநேரம் பயணித்திருக்கிறார். இல்லை நகர்ந்திருக்கிறார். அந்த அளவுக்கு போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது. நகரின் முக்கியச் சாலைகள் அனைத்தும் அன்று இதே நிலைதான்.

வெறுத்துப் போன வழக்கறிஞர் பாலு என்பவர் (ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்) மழை நேரத்தில் போக்குவரத்தைச் சீர் செய்ய அரசு தவறியது ஏன் எனக் கேள்வி எழுப்பி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்த நீதிபதிதான், கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அந்த எச்சரிக்கையை வெளியிட்டிருந்தார்.

அந்த சீர்குலைவில் இருந்து சென்னை மாநகரம் மீள்வதற்கு 3 நாட்கள் ஆயிற்று. அது மட்டுமல்ல, அதற்கு முன்பே ஒருவாரமாக பெய்துகொண்டிருந்த மழையில் கடலூர் மாவட்டம் கடுமையான சேதத்தைச் சந்தித்திருந்தது. சென்னையின் புறநகர் பகுதியான தாம்பரத்தைச் சுற்றியுள்ள முடிச்சூர் உள்ளிட்ட பகுதிகளில் இந்தக் கட்டுரையை எழுதும் தருணம்வரை வீடுகளைச் சூழ்ந்த தண்ணீர் வடியவில்லை. டெல்டா என்று அழைக்கப்படும் தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பயிர்கள் முற்றிலும் நீரில் மூழ்கின.

சென்னைக்கும், தமிழகத்திற்கும் அப்படி என்னதான் ஆயிற்று?

3 மாதங்களில் பெய்ய வேண்டிய மழை, 3 மணிநேரத்தில் பெய்து தீர்த்ததே இத்தகைய பேரிடருக்குக் காரணம் என்கிறது அரசுதரப்பு. ஆனால், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இத்தகைய பேரழிவைத் தடுத்திருக்கலாம் என்பது மற்றவர்களின் வாதம்.

ஆனால், இந்த பூவுலகில் வசிக்கும் உயிர்களிலேயே மிக மோசமான குரூரமும், கொடிய தன்மையும், கயமையும், கீழ்மையும், சிறுமையும், சுயநலமும், சுரண்டலும் கொண்ட ஒரே உயிரினம் மனித இனம் தான் என்ற மாபெரும் உண்மையை இந்த மாமழை உணர்த்திச் சென்றிருப்பதாகக் கூறுகிறார்கள் இயற்கை ஆர்வலர்கள்.

வங்கியில் வரவாகும் சம்பளம், ஈஎம்ஐ, கிரெடிட் கார்டு, புதிய கார்கள், விதவிதமான செல்போன்கள் என தங்களது நுகர்வு சுகத்தைத் தவிர வேறு எந்தச் சிந்தையும் இல்லாமல் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குள் அடைந்து கிடந்த இன்றைய தலைமுறைக்கு, இந்தப் பெருமழையும் அதனால் ஏற்பட்ட தாகக் கருதப்படும் நெருக்கடிகளும் பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கின்றன. படிப்பினையைத் தந்திருக்கிறதா என்பது இனிமேல் தான் தெரியும்.

“உங்க வீடு எத்தனாவது மாடி தம்பி” என்று கேட்டால், “அது போர்த் ப்ளோர்ல இருக்கு அங்கிள்” என்று சொல்லி விட்டு, கேட்டவர் யார் என்று கூட நின்று பார்க்க நேரமும், மனமும் இல்லாமல், நவீன வசதிகளுடன் கூடிய மின்தூக்கியில் ஏறிப் பறந்து சென்று அவர்களது கூட்டுக்குள் அடைந்து விடுவார்கள். அந்த அடுக்குமாடிக் கட்டிடம் 'மண்' என்ற தளத்தின் மீதுதான் கட்டி எழுப்பப் பட்டுள்ளது என்ற யதார்த்தம் குறித்த தன்னுணர்வு கூட அவர்களுக்கு இருப்பதில்லை.

பேயாது பெய்த பெருமழையால் நாற்புறமும் வெள்ளம் சூழ்ந்து, அது அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்குள்ளும் புகுந்த போதுதான் தாங்கள் வசிக்கும் ஃப்ளாட் என்பது தரையில் இருந்து எழும்பிய கட்டடத்தில்தான் உள்ளது என்பதும், அது ஒரு காலத்தில் ஏரியாகவும், வயல்வெளியாகவும் வளம் கொழித்துக் கொண்டிருந்தது என்பதும் புத்தியில் உரைக்கிறது.

மண் குறித்த தன்னுணர்வும், விழிப்பும் இருந்திருந்தால் போற்ற வேண்டிய மாமழையை பிரளயமாகக் கருதி கதற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. மழையைத் தெய்வமாகக் கருதி வழிபட்ட மரபுவழி வந்த பிள்ளைகள் இன்று அதைப்பேரிடராகவும், பெரும் அழிவாகவும் பார்த்து அலற வேண்டிய அவலம் எப்படி ஏற்பட்டது?

குறிப்பிட்ட ஆட்சியாளர்கள்தான் இதற்கெல்லாம் காரணம் என்று சொல்லி அந்தப் பொறுப்பில் இருந்து ஒவ்வொருவரும் தப்பித்துக் கொள்வது மிக எளிது. ஆனால், அது தப்பித்தலாகுமே தவிர தவறில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள எந்த வகையிலும் உதவாது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பேரிடரை எதிர்கொள்ளும் தொழில்நுட்ப சாத்தியங்களைப் பெருக்குதல் போன்ற அறிவுரைகள் நியாயமானவையாக இருந்தாலும், அவை மட்டுமே முழுமையான தீர்வைத் தந்துவிட முடியாது.

சரி இதற்கு யார்தான் பொறுப்பு?

இவ்வளவு நாளாக பொதுவெளியில் இந்த அளவுக்கு உரத்து எழாத இந்தக் கேள்வி தற்போது தமிழகத்தில் எழுந்திருப்பதே இந்த அவலத்திலும் ஓர் ஆறுதல்தான்.

தமிழகத்தின் கிராமப்புறங்களில் 70கள் வரைக்கும் ஒரு காட்சியை பரவலாகப் பார்க்க முடியும்.

கோடையின் உச்சமான சித்திரை, வைகாசி மாதங்களில் கிராமத்தில் உள்ள ஏரி, குளங்களுக்கு நீர் வருவதற்கான வழிகளான கால்வாய்களைத் தூர்வாரும் வேலைகளை குடிமைப் பணியாக கூடிச் செய்வார்கள். வீட்டுக்கு ஓர் ஆள் கட்டாயம் இந்தப் பணியில் பங்கேற்க வேண்டும். முதியவர்களாகவோ, ஆள் அனுப்ப இயலாத நிலையிலோ ஒரு குடும்பம் இருந்தால், கிராமத்திற்குப் பயன்படும் வகையில் குறைந்த பட்ச நிதியாவது கொடுக்கவேண்டும். கிளை ஆறுகளில் இருந்தும், காட்டுப் பகுதிகளில் இருந்தும் நீர் நிலைகளுக்கு தண்ணீர்வரக் கூடிய நீர்வழித்தடமான கால்வாய்களை தூர்வாரி, புதர்களை அகற்றி, தண்ணீர் எளிதில் வர வழிவகுப்பதே இந்தப் பணியின் முக்கிய நோக்கம். இதேபோன்று, கிராமங்களின் நீர் நிலைகளையும் தூர்வாரிச் சீரமைப்பார்கள். இவை அனைத்தும் கோடை காலத்திற்குள்ளேயே முடிந்துவிடும். கோடைகாலத்தில் மேற்கொள்ளப்படும் இந்தப் பணிகளை சில பகுதிகளில் கிராம ஊழியம் என்பார்கள். கிராமப்புற நீராதாரங்களுக்கான வழிகள் கோடைக்காலங்களில் இப்படிச் சீரமைக்கப்படும் போது, மழைக்காலங்களில் ஆற்றில் பெருக்கெடுக்கும் வெள்ளமாகட்டும், காடுகளில், மலைப்பாங்கான பகுதிகளில் பெருக்கெடுக்கும் மழைநீராகட்டும், மிக எளிதாக நீர்நிலைகளை வந்தடையும். இத்தகைய மரபுவழியான குடிமைச் சமூகப் பண்பாடு கடந்த நாற்பது ஆண்டுகளாக 'பொய்யாய்ப் பழங்கதையாய்' மெல்லப் போய்விட்டது.

தமிழகத்தின் கிராமப்புறங்களுக்கு சிமெண்ட் சாலைகள் வந்துவிட்டன. பேருந்துகள், சிற்றுந்துகள் என போக்குவரத்து வசதியும் கூடக் கிடைத்து வருகிறது. விறகு அடுப்புக்குப் பதிலாக சமையல் எரிவாயு கிடைக்கிறது. நகரங்களைப் போலவே தெருவில் போவோர் வருவோர் அமர்வதற்கான திண்ணைகள் அற்ற பெரிய வீடுகளைக் கட்டும் 'நவீன'மும் கிராமங்களுக்குள் வந்தாகி விட்டது. ஆனால், கிராமங்களுக்கென்று இருந்த குடிமைச் சமூகப் பண்புகள் காணாமல் போய்விட்டன. விளைவு, அங்கிருந்த மனிதர்களும் காணாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

பெரும் நிலக்கிழார்களைத் தவிர, எளிய மக்கள் வேளாண்மையை ஒரு வாழ்வாதாரமாகக் கருதி வாழ முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இயற்கையாகக் கிடைக்கும் நீராதாரங்கள் பாழ்பட்டு வருகின்றன. ஏரிகள் தூர்வாரப்படுவதற்குப் பதிலாக தூர்க்கப்படுகின்றன, நீர்வரத்துக்கான கால்வாய்கள் புதர் மண்டி இருந்த இடம் தெரியாமல் போய்க்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஒருகாலத்தில் 'நல்ல மழை' என்று மகிழ்ச்சியுடன் அழைக்கப்படும் யதார்த்த அளவு மழை பெய்தாலே அது பெரு வெள்ளமாகவும் பேரிடராகவும் பார்க்கப்படுகிறது.

வான் பொழியும் அமுதாக வர்ணிக்கப்பட்ட மாமழை, தற்போது வாழ்வைப் பறிக்கும் பேரிடராக மாறி உள்ளது.

தமிழக கிராமப்புறங்களின் இத்தகைய நசிவு ஏழை, எளிய மக்களை கிராமங்களை விட்டுத் துரத்தியது. அருகிலோ, தொலைவிலோ உள்ள பெருநகரங்களை அவர்கள் தஞ்சமடைவது தவிர்க்க இயலாத நெருக்கடியாகிவிட்டது.

இத்தகைய புலம்பெயர்தல் நகரங்களில் மக்கள் நெருக்கடியை அதிகரித்தது. கூட்டம் கூடும் இடத்தில் எதையும் விற்கலாம் என்ற இழிவான மனோபாவத்தைத் தான் நவீன சந்தைப் பொருளாதாரம் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறதே!

நகரங்களைச் சுற்றியுள்ள விளை நிலங்கள் வீட்டு மனைகளாகின. இப்போதெல்லாம் வீட்டுமனையில்லை, எல்லாமே 'வில்லா'க்கள்தான். சென்னை அருகே ஒரு சிறு நகரம் என்ற விளம்பரத்தோடு நீச்சல் குளம், கோவில், பூங்காக்கள், விளையாட்டு மைதானம், 'சர்வதேசக் கல்வித் தரம்' மிக்க பள்ளிகள் (இவற்றில் படித்தால் குறைந்த பட்ச மனித இயல்புகளையும், அடையாளங்களையும் இழந்து விடலாம் என்பது அறிவிக்கப்படாத உத்திரவாதம்) இத்தியாதிகளோடு அந்த வில்லாக்களை அமைக்கிறார்கள். ஒரு தெருவாக, ஊராகக் கூடி வாழ்ந்த மக்கள், இப்போது வில்லாக்களில் அமைந்துள்ள கூடுகளுக்குள் வாழ்கிறார்கள். இத்தகைய வில்லாக்களில் குறைந்த பட்சம் 100 ஃப்ளாட்டுகள் (வீடுகள்) கட்டப்படுகின்றன. ராட்சத 'போர்'கள் போடப்பட்டு நிலத்தடி நீர் உறிஞ்சப்படுகிறது. மின்சாரம் உள்ளிட்ட தேவைகள் தனி. ஆக, பல்லாயிரம் ஏக்கர் விளைநிலங்களையும், அதற்குப் பாசன ஆதாரமாக இருந்து வந்த ஏரி, குளங்களையும் யாரோ ஒருசில பெரு முதலாளிகளுக்கு தாரைவார்த்து விட்டு,

தொடர்தல் 9ம் பக்கம்



# பெருமழை...

8ம் பக்கத் தொடர்ச்சி...

அவற்றுக்குள் கூண்டுக் கிளிகளைப் போல அடைபட நம்மைத் தயார்ப்படுத்திவிட்டார்கள்.

பெருமழை, பேரிடராக மாறியதற்கு வெறும் நிர்வாகச் சீர்கேடுகள் மட்டுமே அல்ல. அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியாக செய்த இப்படியான அனைத்துத் தவறுகளும் தான். உலகமய, தாராளமய புத்தியின் மீது கட்டமைக்கப்பட்ட நவீன உளவியல், இந்தப் பூவுலகை சிறிது, சிறிதாகக் கொல்லும் கொலைகாரர்களாக மனிதர்களை மாற்றிவிட்டது. அதன் விளைவுதான் பூமியைச் செழிக்க வைக்கப்பெய்யும் மழையை, போர்க்களத்தில் பெருக்கெடுக்கும் ரத்தத்தைப் பார்த்து அஞ்சுவதைப் போல பார்த்து அஞ்சி நடுங்க வைத்திருக்கிறது.

இவையெல்லாம் நமது அடிப்படையான கவலைகள் என்றால், வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டு ஒருமாதம் ஆன நிலையிலும், மாநில அரசு அதற்கான உதவியை மத்திய அரசிடம் கோரவில்லை எனும் தகவல், அந்தக் கவலையை அதிர்ச்சியாக மாற்றியது. இந்தத் தகவலை, மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனே சொல்லி இருக்கிறார். ஆளும் அரசின் மழைவெள்ளம் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மட்டுமின்றி, பின்னெச்சரிக்கைகளும் எந்த லட்சணத்தில் இருக்கிறது என்பதற்கு இது தான் சாட்சி.

ஜுன் மாதம் வாக்கில் சாதாரணமாக அதிகாரிகளைக் கூட்டி, ஆலோசனை நடத்தி கழிவு நீர்க் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகளைச் செய்திருந்தால், நகர்ப்புறங்களில் ஏற்பட்ட பாதிப்புகளைத் தவிர்த்திருக்கலாம். நீர்நிலைகளைத் தூர்வாரியிருந்தால் கிராமப்புறங்களில் ஏற்பட்ட பாதிப்புகளைக் குறைத்திருக்கலாம். நீராதாரக் கட்டமைப்புகளை வலுப்படுத்தியிருந்தால் கடலூர் மாவட்டத்தில் இத்தகைய பேரழிவு ஏற்படுவதை ஓரளவேனும் தடுத்திருக்கலாம். இவையெல்லாம் மக்களைப் பற்றிய அக்கறை உள்ள அரசு இயல்பாக மேற்கொள்ள வேண்டிய பணிகள். இதற்கு யாருடைய ஆலோசனையும் தேவையில்லை.

ஒடிசா மாநிலத்தில் புயலால் ஏற்பட்ட மிகப் பெரிய பேரிடரின் பாதிப்புகளை பாடமாக எடுத்துக் கொண்ட அம்மாநிலத்தின் முதலமைச்சர் நவீன்பட்நாயக், அதன் பின்னர் வரும் சராசரியான மழையைக் கூட மிகுந்த முன்னெச்சரிக்கையோடு எதிர்கொள்ளத் தயாராகிவிட்டார்.

ஆனால், தமிழகமோ சுனாமி, புயல் எனப் பல பேரழிவுகளைச் சந்தித்தும், அவற்றில் இருந்து குறைந்த பட்சப் பாடங்களைக் கூடக் கற்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் எனக் கூறி, சில உணவுப் பொட்டலங்களையும், சிறு தொகையையும் கொடுத்து வருகிறார்கள். அது முழுமையான நிவாரணமாகிவிடுமா?

ஆக இயற்கை மனிதர்களுக்கு அளித்த கொடைகளை, தன்னுணர்வோ, குற்ற உணர்ச்சியோ இன்றி வேட்டையாடத் தொடங்கிய மனித இனம் அதற்கான விலையைக் கொடுக்கத் தொடங்கி இருப்பதையே இது போன்ற பேரிடர்கள் நமக்கு உணர்த்துகின்றன. இது தமிழகத்துக்கோ, இந்தியாவுக்கோ மட்டுமல்ல, உலகின் எந்த நாடாக இருந்தாலும் அதன் இறுதிநிலை இதுதான். இயற்கைக்கு வல்லரசு, புல்லரசு என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. வெள்ளத்துக்கு ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. எவர் வீடாக இருந்தாலும் பாய்ந்தால், பாய்ந்ததுதான். அதை சென்னை மற்றும் தமிழகம் தற்போது சந்தித்த பேரிடர் உணர்த்திவிட்டது. இயற்கை தன் எச்சரிக்கை ஒலியை எழுப்பிவிட்டது. மனிதன் விழித்துக் கொள்வானா?



menaulaganathan@thaiveedu.com

# பரிஸ் தாக்குதலின்...

7ம் பக்கத் தொடர்ச்சி...

ஸின் ஒவ்வொரு ரூவிற்றர் கணக்கிற்கும் சராசரியாக 46,000 பேர் ஆதரவாக உள்ளார்கள். சுமார் 90,000 சமூகவலைத் தளப் பதிவுகள் ஒவ்வொரு நாளும் ஐ.எஸ்.ஐ.எஸ்ஆல் பதிவாகின்றன. இவ்விரண்டு சமூக வலைத்தளங்களும் மேற்கு நாடுகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றன. ஏன் இவற்றை முடக்க முடியாமல் உள்ளது?

2000ம் ஆண்டின் பின்னர் பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இத்தாக்குதல்கள் இராணுவத்திற்கு எதிராக அல்லாமல் பொது மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களிலேயே இடம் பெற்றுள்ளன.

இது அமெரிக்க அரசின் தகவலட்டை

| ஆண்டு | பயங்கரவாத தாக்குதல் | இறந்தோர் தொகை |
|---|---|---|
| 2001 | 355 | 3,295 |
| 2002 | 199 | 725 |
| 2003 | 208 | 625 |
| 2004 | 650 | 1,907 |
| 2005 | 11,000 | 14,200 |
| 2006 | 14,000 | 20,000 |
| 2007 | 14,415 | 22,720 |
| 2008 | 11,663 | 15,709 |
| 2009 | 10,968 | 15,311 |
| 2010 | 11,641 | 13,193 |
| 2011 | 10,283 | 12,533 |
| 2012 | 6,771 | 11,000 |
| 2013 | 10,000 | 18,000 |
| 2014 | 13,500 | 32,727 |

ஐ.எஸ்.ஐ.எஸ், நைஜீரியாவில் இயங்கும் பொக்கோ ஹராம், அல் சாம் போன்ற அமைப்புக்களே அதிகளவு தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளன. கடந்த ஆண்டு பொக்கோ ஹராம் 6644 கொலைகளையும், ஐ.எஸ்.-ஐ.எஸ். 6073 கொலைகளையும் செய்துள்ளது.

2014ம் ஆண்டு மேற்கு நாடுகளில் 37 பேர் பயங்கரவாதத்தால் இறந்துள்ளனர். 2014ம் ஆண்டு ஓரளவிற்கு அமைதியான ஆண்டு. 2000 - 2014 காலப் பகுதியில் 3,659 பேர் மேற்கு நாடுகளில் பயங்கரவாதத்தால் கொல்லப்பட்டுள்ளனர். இது மொத்த உயிரிழப்பில் 2.6 வீதமாகும். 9-11, மற்றீட் ரெயில் தகர்ப்பு, லண்டன் ரியூப் ரெயில் தாக்குதல், பரிஸ் தாக்குதல்கள் போன்றனவற்றிலேயே அதிகளவு மக்கள் உயிரிழந்துள்ளனர். மேற்கு நாடுகளில் நடைபெற்ற கொலைகளில் அதிகளவு இஸ்லாமிய பயங்கரவாதத்தால் நடைபெறுவதல்ல. *(மேற்கூறப்பட்ட தகவல்களை ஜோன் ஹசிடி நியுயோர்க்கர் இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளார்.)*

கொல்லப்பட்டவர்களில் 82 வீதமானோர் ஆப்கானிஸ்தான், ஈராக், பாகிஸ்தான், நைஜீரியா, சிரியா ஆகிய ஐந்து நாட்டைச் சேர்ந்தோர் என குளோபல் ரெரறிஸ்ட் இன்டெக்ஸ் தெரிவிக்கின்றது. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈராக் முதலிடத்திலும் இந்தியா ஆறாவது இடத்திலும் ஐக்கிய அமெரிக்கா 30வது இடத்திலும் கனடா 84வது இடத்திலும் உள்ளது.

## சிரிய அகதிகள்:

பரிஸ் தாக்குதல் நடைபெற்று முடிந்து இரத்தம் உறைய முன்னரேயே சிரிய அகதிகளை மேற்கு நாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்ற கருத்து ஊடகங்கள், சமூக ஊடகங்களில் பலமாக அடிபட்டன. புதிய கனடிய அரசு 25ஆயிரம் அகதிகளை இவ் வருடம் முடிவதற்குள் ஏற்றுக் கொள்ளும் என அறிவித்திருந்தது. இதனை எதிர்த்து சஸ்கட்சுவான் முதல்வர், கியுபெக் மேயர் போன்றோர் அகதிகளின் வருகைகளை தாமதப்படுத்துமாறு கேட்டிருந்தார்கள். எங்கள் தமிழ் சமூக வளைத்தளங்களும் முகநூல்களும் தங்கள் பங்குக்கு முழங்கினார்கள். 'எங்கள் பரிஸ் அடிபட்டுள்ளது' என்று தொடங்கி 'பயங்கரவாதிகள் உள்ளே நுழைந்துவிடுவார்கள்' என பல்வேறு கருத்துக்கள் அடிபட்டன. 80களில் மொன்றியல் மிராபல் விமான நிலையத்தில் வந்திறங்கிய தமிழர்கள் 'நோ பாஸ்போட், றிவூஜி' என்று சொன்னவுடன் புன்னகையுடன் வரவேற்ற கனடிய அரசை நாங்கள் மறந்து விட்டோம். 1987ல் நியூபவுண்ட்லான்ட் கரையில் ஜேர்மனியிலிருந்து வந்திறங்கிய தமிழரை 'எங்கள் மூதாதையரும் கப்பலில் வந்திறங்கியவர்கள்' எனக் கூறி முன்னால் பிரதமர் மல்ரோனி வரவேற்றதையும் நாங்கள் மறந்து விட்டோம். கடந்த அரசின் காலத்தில் வந்திறங்கிய ஈழத்தமிழ் அகதிகளை கொன்சர்வேட்டிவ் அரசு 'பயங்கரவாதிகள்' எனக் கூறி நடவடிக்கை எடுத்தது. இதையும் நாங்கள் மறந்து விட்டோம்.

அமெரிக்க தேர்தல் அடுத்த வருடம் நடைபெறுகின்றது. ரிப்பப்ளிக்கன் கட்சி வேட்பாளருக்கு போட்டி போடுபவர்கள் சிரிய அகதிகள் விடயத்தை பெரிதுபடுத்திவிட்டார்கள். ரெக்சாஸ் கவர்னர் உட்பட்ட பல கவனர்கள் தங்களது மாநிலம் சிரிய அகதிகளை ஏற்றுக்கொள்ளாது எனத் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்கள்.

அமெரிக்காவிற்கு இதுவரை சுமார் 750 ஆயிரம் அகதிகள் வந்திறங்கியுள்ளார்கள். எவருமே அமெரிக்காவிற்கு எதிராக செயல்பட்டததாக கைது செய்யப்படவில்லை. சாதாரண குற்றங்களுக்காகக் கூட கைதாகவில்லை. விதிவிலக்காக இரு நைஜீரிய அகதிகள் குடும்பச் சண்டைகளுக்காக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்கள். இதற்கு கனடாவும் விதிவிலக்கல்ல. புலம் பெயர்ந்த தமிழர்கள் உலகெங்கும் வாழ்கின்றார்கள். எந்த நாட்டிலும் அந்த நாட்டிற்கு எதிராக அவர்கள் செயல்படவில்லை. எனவே சிரிய அகதிகள் என்பது ஒரு அரசியல் அலை. அவர்களை மனந்திறந்து வரவேற்போம். அவர்களுக்கான உதவிகளை முன்னெடுப்போம். மற்றைய சமூகங்களுக்கும் முன்னோடியாக செயல்படுவோம்.

## ஏன் பிரான்ஸ் - பரிஸ்:

இந்த வருட முற்பகுதியில் பரிஸில் பத்திரிகை அலுவலகம் ஒன்று தாக்கப்பட்டு பத்திரிகை ஆசிரியர் உட்பட பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மீண்டும் வருடம் முடிய முன்னர் பரிஸில் தற்கொலைத் தாக்குதல். இதற்கான பின்னனியில் நிராகரிக்க முடியாத காரணங்கள் இவை.

ஒன்று பிரான்சில் நீண்ட காலங்களின் பின்னர் சோசலிசக் கட்சி ஆட்சி அமைத்துள்ளது. முன்னர் சிலி போன்ற நாடுகளில் சோசலிசக் கட்சி ஆட்சி அமைக்கப்பட்ட போது அமெரிக்கா தனது உளவாளிகள் மூலம் அவர்களை அழித்து தங்களுக்குச் சார்பான இராணுவ ஆட்சியை அமல்படுத்தியுள்ளது. பொதுவாக சோசலிசக் கட்சிகள் ரஷ்யா மீது ஒரு மென்போக்கைக் காட்டும். இன்று ஐரோப்பாவில் ரஷ்யாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ள நிலையில் பிரான்சின் ஆட்சி மாற்றத்தை அமெரிக்கா விரும்பவில்லை. இரண்டாவது ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார பலத்தை அமெரிக்கா விரும்பவில்லை. மத்திய கிழக்கு போரில் சற்றே தள்ளியிருந்த ஐரோப்பாவை போரிற்குள் தள்ளுவதை காலத்தின் கட்டாயமாக அமெரிக்கா கருதுகின்றது. அத்துடன் நேட்டோ - ரஷ்யா பனிப்போர் ஒன்று உருவாகும் பொழுது நேட்டோவில் உள்ள ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்பு அதிகமாகும். இன்றும் கூட ஜேர்மனி உட்பட்ட பல ஐரோப்பிய நாடுகளுக்கு இயற்கை வாயுவை ரஷ்யா வழங்குகின்றது. இதற்கான குழாய்களை நிலத்தின் கீழ் ஐரோப்பா எங்கும் காணலாம். மூன்றாவதாக மனிதனை மனிதனாக மதிக்கும் சட்டங்கள் பிரான்சில் அதிகமாக உள்ளன. கனடாவைப் போல் சி-24, சி-51 சட்டங்கள் அங்கு இல்லை. இது தீவிரவாதிகளுக்கு சாதகமாயுள்ளது.

கடந்த பல மாதங்களாக நேட்டோ நாடுகள் தொடர்ச்சியாக ஐ.எஸ்.ஐ.எஸ் இஸ்லாமிய அரசுப் பிரதேசங்கள் மீது குண்டு மழை பொழிகின்றது. 8000 தடவைகள் ஐ.எஸ். ஐ.எஸ் நிலைகள் குறிவைத்துத் தாக்கப்பட்டுள்ளன. ஐ.எஸ்.ஐ.எஸ்ஐ அசைப்பது கடினமாகவுள்ளது. பிரான்சின் தாக்குதல்கள் பெரியளவில் மாற்றத்தைக் கொண்டு வராது. அவர்கள் பெரிய பிரதேசத்திலிருந்து சிறிய பிரதேசத்துக்கு மாறுவார்கள். அவ்வளவுதான்.

ஈராக் போருக்கு அமெரிக்க ஆதரவு நாடுகள் சென்ற போது கூறப்பட்ட காரணங்கள் தவறானவை என இப்பொழுது வெளிச்சமாகியுள்ளது. அப்போதைய கனடிய பிரதமர் கிறிச்சியான் அமெரிக்காவுடன் கை கோர்க்க மறுத்து விட்டார். இன்று வரை கனடாவில் தாக்குதல்கள் எதுவும் நடைபெறவில்லை. ஒட்டாவா, கியூபெக் ஆகிய இடங்களில் சிறு சலசலப்பே ஏற்பட்டது. அதுவும் உடன் முறியடிக்கப்பட்டுவிட்டது. தவறான போரின் விளைவுகளை மற்றைய நாடுகளில் காணலாம். பிரபல அரசியல் அறிஞர் தாரிக் அலி குறிப்பிட்டுள்ள இரு காரணங்கள் நிறைவுக்கு வந்தால் மத்திய கிழக்கு அமைதிக்கு திரும்பலாம். ஒன்று சவூதி அரசுக்கும், அரசருக்கும் வழங்கும் ஆதரைவை அமெரிக்கா திரும்பப் பெற வேண்டும். இரண்டாவது மத்திய கிழக்கின் அரசியலில் இருந்து மேற்குநாடுகள் வெளியேற வேண்டும். இதைவிட மூன்றாவதாக ஒன்றையும் குறிப்பிட்டுள்ளார். அது இஸ்ரேல் பாலஸ்தீனத்தை சமஅந்தஸ்துடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நாடாக மாற்ற வேண்டும் என்பது. முதல் இரண்டும் சாத்தியப்பட்டாலும் மூன்றாவது சாத்தியமாவது மிகமிகக் கடினம்.

ஒன்று மட்டும் நிச்சயம். தவறான ஆட்சி முடிவுகளுக்கு பழியாவோர் அப்பாவி மக்கள். இது மாறும் வரை எங்கள் உயிர்கள் அந்தரத்தில்தான் தொங்குகின்றன. 'சவப் பெட்டிகளுக்கு பிணத்தைப் பற்றி அக்கறையில்லை'.



rathan@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*

*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***

***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***



**$989,000**
**1779 Spartan Crt**

4 Br 2 Storey 3 W/Room..
Contemporary Cust. Built
Over 3500 sft Luxury
Living Space...

**Fairport & Dunbarton**



**$425,000**
3 Br 3 Wr Condot..
Great Location..
Close to all amenities.
**McCowan & 401**



**$439,900**
1+1 BrCondo
Great Location
Close to all amenities.
**Yonge & Carlton**



**$519,900**
3+2 Br Bungalow Det..
Great Location..
Close to all amenities.
**Brimlry & Lawrenc**



**$699,900**
4 Br 2 Storey Det..
Prime Scarboroug Loc..
50' x 100' Lot...
**Bellamy & Lawrenc**



**$659,000**
3+2 Br Bungalow Det..
Great Location..
Close to all amenities.
**McCowan & Elles.**



**$449,000**
3 Br 3 Wr Town home
Great Location..
Close to all amenities.
**Kennedy & Menicol**

Gnani & Judy
**REAL ESTATE**
416.937.8090

HOMELIFE
HIGHER STANDARDS



**Gnanendran Narasingham**
**Mobile: 416.937.8090**

**Judy Gnanendran**
**Mobile: 416.629.9797**

OFFICE: 416.321.6969
HOMELIFE GTA REALTY INC., 5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
* INDEPENDENTLY OWNED & OPERATED, REALTOR

Exclusive



**$2.8 MIL**
7 Mil Ltr / Year
$1,000,000 Store/Yr
Propane &Color diesel
Chip Truck Rental
Call for More Info..

Exclusive
Esso
**$1.5 MIL**
2 Mil Ltr / Year
$1000/ Day Store
Rental Income 15K
1n Hr from Toronto
Call for More Info..

Exclusive
PETRO-CANADA
**$2.6 MIL**
6 Mil Ltr / Year
$1Million Store/Yr
Rental Income,
Lottery & Many more
Call for More Info..

# தாராண்மை தளருமா...

4ம் பக்கத் தொடர்ச்சி...

மிக்க மனித உணர்வுதான். அது காலப் போக்கில் கரைந்துவிடக்கூடுமாயினும் குடிவரவாளர்களின் சமூக பொருளாதார வளர்ச்சியானது மிக விரைவுபட்டிருப்பதனால் சமூகங்களுக்கிடையிலான போட்டி வெறுப்பாகவும் தோற்றம் பெறுகிறது.

கனடாவின் பொருளாதார வளர்ச்சியில் குடிபெயர்வாளர்களின் தொழில் முயற்சியானது மிகப் பெரிய பங்களிப்பினைச் செய்து வருகிறது. கியுபெக்கில் பிறந்தவர்களைவிட உள்வரவாளர்களின் தொழில்முனைவுத் திறனானது இரு மடங்கு இருப்பதனைப் புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டின. இது கனடாவின் வளர்ச்சியில் குடிவரவாளர்களின் அத்தியாவசியத்தினைக் காட்டிநிற்கிறது.

இப்பொழுது உள்வாங்கப்படும் சிரிய அகதிகளில் சிறப்புத்தகுதிகள் பெற்றவர்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 6.5 மில்லியன் பேர் இடம்பெயர்ந்திருப்பினும் ஐ. நா. வில் பதியப்பட்ட 4.2 மில்லியன் அகதிகளில் துருக்கியிலுள்ள 2.2 மில்லியனிலிருந்தும் லெபனானில்1.2 மில்லியனிலிருந்தும் ஜோர்தானில் 1.4 மில்லியனிலிருந்தும் கனடா உள்வாங்கும் அகதிகள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஒரு சதவீதத்துக்கும் குறைவான தெரிந்தெடுக்கப்பட்ட பல தகுதிகளைக் கொண்ட பிரிவினர் தான் கனடாவால் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள்.மிகுதியானவர்களின் நிலை என்ன என்ற கேள்விக்கு விடைகிடைத்தாலே இப்பெரிய அனர்த்தத்துக்கு தீர்வு கிட்டும்.

போர்க்குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ உதவி தேவைப்படுபவர்கள் என்ற இரு பெரும் பிரிவில் துணையற்ற சிறார்கள், குழந்தைகளுடனான பெண்கள், முதியவர்கள், போரினால் நோயுற்றவர் என்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் அதனைவிட கல்வி மதம் சுயமுயற்சி என்பனவும் குறிப்பிட்ட பங்கினைச் செலுத்தியிருக்கிறது.

ஐ.நா அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் ஆதரவுடன் பல நிறுவனங்களின் பாதுகாப்புச் சான்றுகளையும் பெற்றுக்கொண்ட பின்னரே அகதிக் குடிவரவாளர்கள் இங்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் பாதுகாப்பு அச்சுறுத்தல் எங்கிருந்து வரமுடியும் என்ற கேள்விதான் முன்வைக்கப்படுகிறது.அதைவிட போராளிகள் வருடக்கணக்கில் கூடாரங்களில் தங்கியிருக்க மாட்டார்கள் என்பதும் சொல்லப்பட்டது. பாரிஸ் தாக்குதலுக்குக் காரணமான போராளி சிரிய அகதி-யென்ற போலி ஆவணத்துடன் கிரேக்கத்துள் நுழைந்தவர் என்பதும் அறியப்பட்டுள்ளது.

அகதிகளாகக் குடியேறியவர்கள் தமது உறவுகளுக்கு பண உதவி செய்வதும் அவர்களைக் கனடாவுக்குள் அழைக்க முயலுவதும் எல்லா சமூகமும் பின்பற்றும் நடைமுறையாக இருக்கும் இதனைத் தவறாகப் பார்க்கும் சட்டங்களின் கண்களுக்குத் தெரியும் சந்தேகம் மிக ஆபத்தானது. இங்கிருந்து அனுப்படும் பணத்தில் ஒருபகுதி அந்நாட்டு மக்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்களுக்குச் சென்று விடுவது தவிர்க்க முடியாதது அது ஒன்றில் அரசாக அல்லது போராட்ட அமைப்புக்களாக அல்லது சிறு குழுக்களாகவும் இருக்கவாய்ப்புள்ளது.

இத்தகைய போக்கினை பணம் அனுப்புபவர்களும் பெறுபவர்களும் கட்டுப்படுத்தமுடியாத நிலைமையே போர்ச்சூழலின் பின்னணியில் இடம் பெற்றுவருகிறது. இஸ்லாமிய அரசுப்போராளிகளுக்கு 40 நாடுகளிலிருந்து பணம் அனுப்பப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டிருக்கிறது. அகதிகளாக வருபவர்கள் எல்லோருமே போர்க்காலச் சூழலிலிருந்து புனர்வாழ்வு பெறும் நிலையிலேயே கனடாவுக்குள் வருகிறார்கள். அவர்களது செயற்பாடுகள் உணர்வுகள் யாவும் குடியேறும் சூழலுக்கு இனமாக விரைவில் மாற்றப்படுவது தவிர்க்க முடியாதது.

பல தரப்பினர், பல வழிகளில் பாதிக்கபட்டவர் அவர்களின் மன நிலையானது மாறுவதற்குக் காலங்களின் நீடிப்பு அவசியமாகலாம். அதற்காக அகதிகளாக வருபவர்களையும் அவர்களது நடத்தைகளையும் எடைபோட்டுப் பரிகசிப்பது பொருத்த மானதாக இருக்கமுடியாது. பொது நீரோட்டத்தில் இணைவதற்கான காலம் சில ஆண்டுகள் முதல் சில தலைமுறைகள் வரை கூட நீடித்துச் செல்லாம். அதற்காக அவர்கள் மீது வெறுப்புக்குற்றத்தினை மேற்கொள்ளுவது எப்படி நியாயமாக முடியும்.

கனடாவில் குடியேறியவர்கள் எல்லோரும் குடியேற்றவாசிகள்தான். பழங்குடியினர் ஆசியாவிலிருந்தும் தென் பகுதிகளிலிருந்தும் வரலாற்றுக் காலநிலை சாதகமான காலங்களில் குடியேறியிருக்க ஏனையோர். புதுயுகக் குடியேற்றவாசிகள்தான் என்ற கருத்து இன்று எல்லோராலும் முன்வைக்கப்படுகிறது.

**இன்று அகதிகளுக்காகச் செலவிடும் முதலீடானது இன்னும் சில ஆண்டுகளில் கனடாவின் உள்நாட்டு உற்பத்தியில் கணிசமான மாற்றத்தைக் கொண்டுவரும் என்பது உண்மைதான். ஆயினும் ஏன் சிரிய அகதிகள் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன என்பது கவனிக்கற்பாலது.**

பொருளாதார சமூக அரசியற்காரணிகளினால் காலத்துக்காலம் உள்வருபவர்கள் இந்த சமூகத்தினைக் கட்டி எழுப்பப் பாடுபடுபவர்கள். அவர்களது பங்களிப்பு கனடாவின் எதிர்கால வளர்ச்சியில் முக்கிய இடத்தினைப் பெறப்போகிறது என்ற ஒரே நம்பிக்கைதான் அகதிகளை உள்வாங்குவதன் அடிப்படைத்தத்துவமாக இருக்கவேண்டும்.

### சர்வதேச நிலைப்பாடு என்ன:

கனடா அமெரிக்காவினதும் ஏனைய நட்பு நாடுகளினதும் செயற்பாடுகளுடன் ஒன்றிப்போகுமாகவிருந்தால் அகதிகளை உள்வாங்குவதில் காலதாமதம் தவிர்க்கமுடியாததாகிவிடும். கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஸ்பெயின் பிரித்தானியா டென்மார்க் போன்றன நேரடியாகவும் கொள்கை சார்ந்தும் சிரிய அகதிகளை ஏற்பதில்லையென முடிவுசெய்திருக்கின்றன. அமெரிக்காவின் 31 மாநில ஆளுனர்கள் சிரிய அகதிகளை ஏற்கமுடியாதெனக் கூறியிருக்கின்றனர். குடியரசுக் கட்சியினரின் இத்தகைய எதிர்ப்பானது எதிர்வரும் தேர்தலிற் பிரதிபலிக்கும் என்பதால் அமெரிக்கா இஸ்லாமிய அரசுப் போராளிகள்மீது போரினை நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

பிரான்சு, பிரித்தானியா அமெரிக்கா ஆகிய வல்லரசுகள் போருக்குத் தயாராகிவிட்டன. கனடாவும் ஜேர்மனியும் முற்றுமுழுதாக இணைக்கப்படும் வாய்ப்பே காணப்படுகிறது. இஸ்லாமிய அரசை ஒழிக்கலாம் ஆனால் சிரிய முடியாட்சியை எவ்வாறு ஒழிப்பது என்பதில் காலமே பதில் சொல்ல வேண்டும்.

### இஸ்லாமிய அரசுப் போராளிகள் தனிநாடு கோருபவர்களா:

இஸ்லாமிய அரசுப்போராளிகளை அழித்துவிடுவதால் அகதிகள் பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிடமுடியுமென ஒருபகுதியினர் எண்ணுகிறார்கள். பெரியவல்லரசுகள் இணைந்து நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தொடங்கியிருக்கின்றன. இரஸ்யாவின் எண்ணம் சிரியஅரசின் நலஞ்சார்ந்ததாக இருக்க நேட்டோ அமைப்புநாடுகள் வேறுநிகழ்ச்சித் திட்டத்துடன் செயற்படுகின்றன.

2000 ஆண்டுகளில் அல்கைடா ஈராக் (AQE) பிரிவாக உருவாகிய இந்த அமைப்பானது ஆப்கானிஸ்தானின் போர்ச்சூழல் உருவாக்கிய பல கருத்தியல் வாதிகளை ஒன்றிணைத்தது. அபூபக்கர் அல் படாடி ஐத்தலைவராகக் கொண்ட இந்த அமைப்பு 2006ம் ஆண்டில் ஈராக்கில் இஸ்லாமிய அரசு என்ற (ISI) அமைப்பாகத் தன்னை மாற்றியிருந்தது.

சதாம் குசைனின் வீழ்ச்சிக்குப்பின் தனித்து சியா என்ற முஸ்லிம் பெரும்பான்மையிலிருந்து விடுபட்டு மீண்டும் தமது ஆதிக்கத்தினை ஈராக்கில் வைத்துக்கொள்ள எடுத்த முயற்சியாகவும் இதனை நோக்க முடிகிறது.

மொசூல் (Mosul) நகரத்தை முக்கியதளமாகக் கொண்ட இந்த அரசு மக்களுக்கான ஊழல் அற்ற சுதந்திர அரசினை உருவாக்க முனைந்திருந்தது சுகாதாரம் வீட்டுவசதி மக்களது வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட இந்த இலட்சிய அரசுக் கொள்கைத்திட்டத்தால் உலகெங்கும் இருந்து கவரப்பட்டவர்கள் இதில் இணைந்து கொள்ளுகின்றனர்.

2014 முதல் ஒரு பலம்மிக்க அரசாக இது இருப்பதனால் இதனை அழித்துவிடுவது மிகக் கடினமானது என்பதனை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2013ல் இந்த அரசியற் பிரிவானது சிரியாவின் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டதால் மத்திய கிழக்கு என்ற பெரிய பிரதேசத்துக்குத் தமது கருத்தியல் அரசுக்கான எல்லையை வியாபித்துக்கொண்டது இதனால் இது (ISIL) லெவன்ற் (Levent) என்ற பதத்தையும் இணைத்திருந்தது.

இந்தச் செயற்பாடு மத்திய கிழக்கின் பல முடியாட்சி நாடுகளுக்குப் பிடிக்காததொன்றாக இருப்பதால் இந்தப் போரானது மத்திய கிழக்கு முழுவதும் தொடரும் பாங்கு தவிர்க்கமுடியாததாக மாறிவிட்டது.

### இஸ்லாமிய அரசின் கொலைப்பட்டியல் நீளுகிறது:

இந்த ஆண்டில் 700க்கு மேற்பட்ட உயிர்களைக் கொன்றொழித்த இந்த இயக்கமானது தன் கொலைக்குண்டு வெடிப்பினூடாகப் பயங்கரவாத நடவடிக்கையினைச் செய்வதாகச் சொல்லப்படுகிறது. இவ்வியக்கம் தமது ஆள்புல எல்லைக்கப்பாற் செய்யும் நடவடிக்கைகளைச் சர்வதேசபயங்கரவாத நடவடிக்கையாக பாதிக்கப்பட்ட நாடுகள் பார்க்கின்றன.

கடந்த மார்ச் மாதத்தில் துனூசியாவில் கொல்லப்பட்ட 22பேர் சாதாரண பொது மக்கள் அதே மாதம் 20ந்திகதி ஏமெனில் இடம்பெற்ற தொடர்குண்டு வெடிப்பில் 137 பேர் இறக்க 345 பேர் காயமடைந்தனர்.

மே22ல் சவுதி அரேபியாவில் 21 பேர் கொல்லப்பட்டிருந்தனர் மே29ல் சவுதியின் துறைமுக நகரம் டம்மாயில் 4 பேர் கொல்லப்பட்டனர் யூன் 26ல் துப்பாக்கிதாரியால் 38 பேரும் துனூசியாவில் 27பேரும் வெள்ளித் தொழுகையின் பின்பாகக் கொல்லப்பட்டனர். ஆகஸ்ட் 6ந் திகதி சவுதியில் 15 பேர் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

ஒக்டோபர் 6ந்திகதி ஏமன்நகரில் 15பேர் கார்க்குண்டு வெடிப்புக்குப் பலியாகினர். ஒக்டோபர் 31ல் இரஸ்யாவின் 224 பேர் கொண்ட விமானம் சினாய்க்குடா நாட்டில் வெடித்துச் சிதறியது. நவம்பர் 12ல் தற்கொலைக்குண்டு வெடிப்பு பெய்றூடில் (லெபனான்) 43 பேரைக் கொன்று 200க்கு மேற்பட்டவரைக் காயத்துக்குள்ளாக்கியது நவம்பர் 13ல் பிரான்சில் நடந்த குண்டு வெப்பு 129 பேரைக் கொன்று 350 பேரைக் காயப்படுத்தியது.

இது உண்மையில் இஸ்லாமிய மதப் பிரிவுகளுக்கிடையிலான ஜிகாத் என்ற புனிதப்போராக இருப்பினும் பலதடவைகளில் பழிவாங்கும் நடவடிக்கையாகவும் சர்வதேசப் பரிணாமமும் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### கனடா தனது சுயத்தைப் பேணவேண்டும்:

இந்த ஆண்டு இறுதிக்குள் 25000 சிரிய அகதிகளைக் கனடா வரவேற்கக் காத்திருந்தது. ஆனால் இப்பொழுது 15000 சிரிய அகதி-களை மக்கள் வரிப்பணத்தில் அரசாங்க உதவியுடன் ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருக்கிறது. மிகுதி பத்தாயிரம் அகதிகள் கனடிய மக்களால் பொறுப்பேற்கப்பட்டு (ஸ்பொன்ஸர் செய்யப்பட்டு) 2016 பெப்ரவரிக்குள் உள்வாங்கப்படுவார்கள் எனவும் சொல்லப்படுகிறது.

இந்நிலையில் இருந்தும் கனடா வழுவாதிருக்க வேண்டியது அவசியம். கனடா நட்பு நாடுகளின் வற்புறுத்தலால் ஈராக்- சிரியப் போரில் ஈடுபடுவதானது இஸ்லாமிய அரசுப் போராளிகள் மீதான தீவிரவாதப் பயத்தினை உருவாக்கியிருக்கிறது.

கனடாவுக்கு அகதிகளை உள்வாங்குவதில் ஒரு பாரம்பாரியம் இருக்கிறது. அது குறிப்பாக அமெரிக்க நலன் சார்ந்ததாகவும் பிரான்சின் நலன் சார்ந்ததாகவும் இருந்து வந்திருப்பது தவிர்க்கமுடியாது. வியட்னாம் போரின் பின்பாக 1979ல் உள்வாங்கப்பட்ட 72,000 வியட்னாம் அகதிகள் சீன வல்லரசுக்கு எதிரான அமெரிக்க பிரான்சிய போராட்டத்தின் விளைவு என்று குறிப்பிடமுடிகிறது.

1970 களில் கனடா இப்பொழுதுள்ளது போல் அதிகவசதிகளைப் பெற்றிருக்கவில்லை எனினும் அன்று தனது தாராண்மையினைத் தளர்த்திவிடவில்லை. இவ்வருடம் செப்ரெம்பர் மாதத்தில் கூட்டுப்படைகள் 7000 விமானத்தாக்குதல் மூலம் முஸ்லிம் அரசுப்போராளிகளின் 10000 இலக்குகளைத்தாக்க 10 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவுசெய்திருந்தன. இதில்கனடாவின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க அளவு இருக்-கிறது.

கனடாவின் லிபரல் அரசு சிரிய அகதிகள் தொடர்பான வாக்குறுதியிலிருந்து முற்றாக விடுபடவில்லை என்பதும் உறுதியாகி விட்டது. உண்மையில் லிபரலுக்கு இது ஒரு சவாலாகவே இருக்கிறது. நாளொன்றுக்கு ஆயிரம் பேரை மீளக்குடியமர்த்துவது இலகுவானதொரு விடயமல்ல. தவிரவும் பொது சன அபிப்பிராயம் எப்பொழுதும் எந்தப்பக்கமும் மாறமுடியும். அதனால் காலதாமதம் தவிர்க்கமுடியததுங்கூட. ஆனாலும் தேர்தற் காலத்திற் சொல்லப்படுபவைகள் வாக்குறுதிகளே. அவற்றை மக்கள் இன்னமும் நம்பிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■



**People don't plan to fail, but they do fail to plan**

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்

- Super Visa Insurance
- Disability Income Insurance
- Critical illness Insurance
- Mortgage Insurance
- No medical exam Life Insurance
- Permanent Life Insurances
- Term Life Insurance
- Travel & Visitor Insurance
- RRSP Loan / Investment
- RESP



*As an Independent Insurance Broker, I will shop around for you and get you the best rate...*

**Guna Thuraisingham** M.A.Sc (Eng.), P.Eng.
*Independent Insurance Advisor*
**Dir: 416 528 1407**
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca

Super Visa Insurance 100% Refund

Industrial Alliance · RBC Royal Bank · Assumption Life · Desjardins · Manulife · Canada Protection Plan · Foresters

நலம் நாடுவதும் அதுவே
உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு
என்னை அழையுங்கள்



வீடு
வியாபார நிலையங்கள்
வாங்க விற்க

HOMELIFE HIGHER STANDARDS

No credit
Bad credit
No Problem

**Kathir**

Buy or Sell call 24-7

Subramaniam Kathirgamanathan P.Eng. HomeLife GTA Realty Inc. Brokerage.

**Cell: 416 856 6900**
kathirhomes@gmail.com

Bus:416 321 6969
Fax:416 321 6963

# நோய் பயம் / Health Anxiety

- புஷ்பா கனகரட்ணம் -

ஆரோக்கியம் பற்றிய கவலை சாதாரணமாக எல்லோர் மனதிலும் வந்து போவது தான். உடலில் ஒரு கட்டி வந்துவிட்டது, அசாதாரணமான வீக்கம், அல்லது சோதனைகூடத்தில் (lab) மருத்துவ பரிசோதனையின் பின் முடிவுகளுக்காக காத்திருக்கிறீர்கள் என்றால், மனம் அலைபாய்வது இயற்கை தான். இந்த நேரங்களில் ஏதாவது தீவிரமான நோய் வந்துவிட்டதா என்ற பயம், மற்றும் உடல் ஆரோக்கியம் பற்றிய மனக் கவலை நம்மில் பலரையும் தாக்குவதுண்டு. இதுவே, பாரிய அளவில் மன உளைச்சலை கொண்டுவருவது எப்போது? ஆரோக்கியத்தை பேண நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் தான். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமல்லவா?

Western Australia, Centre for Clinical Interventions (Anderson, Saulsman மற்றும் Nathan 2011) நோய் பயம் பற்றி இப்படி கூறுகிறார்கள்:

### நலம் பற்றிய உங்கள் கவனம் ஒரு பிரச்சினையாக மாறுவது:

- கவலைகள் அதீதமாகும் போது
- தீவிர நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கும் பட்சத்திலும் பூதாகரமான பயத்தை வளர்த்துக் கொள்ளும் போது
- வைத்தியர் அபிப்பிராயமும் பரிசோதனைகளும் நம்பிக்கை அளித்தும் தொடர்ச்சியான மன உளைச்சலை உணரும் போது
- அடிக்கடி உடல் அறிகுறிகளை கவனிப்பது, மற்றும் வைத்தியரிடமோ குடும்பத்தினரிடமோ மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தலை நாடும் போது
- மற்றும் மருத்துவ தகவல்களை, வைத்தியரிடம் செல்வதை, தவிர்க்க ஆரம்பிக்கும் போது.

எந்தவித நோய் இல்லாதவர்களுக்கும், நோய் அறிகுறிகளை உணர்பவர்களுக்கும், ஏற்கனவே நோயால் வாடுபவர்களுக்கும் என யாருக்கும் ஆரோக்கியம் பற்றிய கவலையோ பயமோ வரலாம். ஆரோக்கியம் பற்றிய உளைச்சல் என்பது இந்த காரணங்களை எல்லாம் தாண்டி, எப்படி நீங்கள் இந்த விஷயத்துக்கு முகம் கொடுக்கிறீர்கள் என்பதிலேயே தங்கியிருக்கிறது.

ஆரோக்கியம் பற்றிய மன உளைச்சல் உங்கள் வாழ்க்கையை பல விதமாக பாதிக்கலாம். குடும்பத்தோடு, நண்பர்களோடு உங்கள் உறவு, படிப்பு, வேலை, மற்றும் வீண் வைத்திய, பயண செலவு, உளநல பாதிப்புகள் என இயல்பு வாழ்க்கையை கடினமக்கலாம். அத்தோடு, உங்கள் வைத்தியர்களுக்கும் உங்களுக்கும் கருத்து முரண்பாடுகள், பிணக்குகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

கடந்த கால அனுபவங்கள், உதாரணமாக, நெருங்கிய நண்பர்கள் அல்லது உறவினர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் அல்லது இறந்திருந்தால், அல்லது குடும்ப அங்கத்தவர்கள் யாராவது ஆரோக்கியம் பற்றிய கவலை உள்ளவர்களாக இருந்தால், உங்களுக்கே ஒரு உடல்நல குறைபாடு ஏற்பட்டிருந்தால், இணையத்தளத்தில் தேடலில் ஈடுபடும்போது கிடைக்கும் எதிர்மறையான சுகாதார தகவல்கள் - இப்படி பல காரணங்களால், ஆரோக்கியம் பற்றிய எங்கள் நம்பிக்கைகள், அனுமானங்கள், நெகிழ்வற்று இறுக்கமாகிவிடும். ஆரோக்கியம் சார்ந்த மன உளைச்சல் உடலில் இயல்பாக ஏற்படும் உபாதைகள், மாற்றங்களை எல்லாம் அதீதமாக அவதானிக்க தூண்டும். இப்படியான அதிக கவனம், இருக்கின்ற சிறு சிறு சாதாரண உணர்வுகளை பூதாகரமாக மாற்றிவிடும்.

உங்கள் ஆரோக்கியம் சார்ந்த விதிமுறைகள் நெகிழ்வான, யதார்த்த பூர்வமான விதிமுறைகள் ஆயின், அவை உங்கள் மன உளைச்சலுக்கு காரணமாகாது. உதாரணமாக, மூட்டு வலியை உணர்கிறீர்கள் என்றால், "சரி, இரண்டு வாரம் பொறுத்து பார்ப்போம். நோ அதிகமானால் அல்லது அப்படியே இருந்தால் வைத்தியரிடம் போவோம்" என சிந்திப்பீர்கள் ஆனால் அது நெகிழ்வான ஒரு விதிமுறை. அதே சமயம், யதார்த்தமானதும் கூட. ஏனெனில், சாதாரண உடல் வலிகளையிட்டு உடனே பதற்றம் கொள்ளாமல் அதை ஏற்றுக்கொள்ளும் தன்மையை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். அதே சமயம், பிரச்சினையான வலியாக இருப்பின் மருத்துவ ஆலோசனை பெறவேண்டும் என்ற விழிப்புணர்வு உங்களுக்கு இருப்பதால், யதார்த்த பூர்வமாகவும் நீங்கள் இருக்கிறீர்கள்.

உபயோகமான விதிமுறைகள் சற்றே நெகிழ்வானவை, அதே சமயம் யதார்த்தமானவை. "ஆரோக்கியமான உணவு உண்பது நல்லது" என்பது உபயோகமான, அதே சமயம் நெகிழ்வான விதிமுறை. இடையிடையே, ஆரோக்கியமற்ற உணவு உண்பது பாரிய பிரச்சினை அல்ல என்று நீங்கள் விளங்கி இருக்கிறீர்கள் என்று பொருள். "என்னுடைய வைத்தியர் என் உடலில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்தையும் அறிகுறியையும் விளக்கக்கூடியவராக இருக்கவேண்டும்" என்பது நியாயமானதல்ல என்கின்றனர் இந்த நிபுணர்கள். இது ஒரு நெகிழ்வற்ற, பயனற்ற விதிமுறை. உங்களை தேவையற்ற யோசனைக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாக்கும் ஒரு விதிமுறை. உங்களுக்கு இதனால் வைத்தியரிலும் திருப்தி அற்று போய்விடும். எல்லா நேரங்களிலும் உங்கள் உடலில் ஏற்படும் உபாதைகளை அச்சொட்டாக வைத்தியர் விளக்கவேண்டும் என்பது சாத்தியமற்ற, நியாயமற்ற ஒரு எதிர்பார்ப்பாகும்.

எப்பொழுது உடல் அறிகுறிகளை கவனிக்க வேண்டும், உதவி பெற வேண்டும்? எப்பொழுது பிற்போடலாம்? University of Manitoba இந்த விடயத்தில் ஒரு வழிகாட்டியை தயாரித்திருக்கிறது.

- தடிமன் காய்ச்சல், தலைவலி, முதுகுவலி போன்றவற்றுக்கு சாதரணமாக உங்களுக்கு பரிச்சயமான பராமரிப்பை வீட்டிலேயே செய்துகொள்வது. இது ஓய்வெடுப்பதாக இருக்கலாம். ஒத்தடம் கொடுப்பதாக இருக்கலாம். வைத்திய பரிந்துரை இன்றி எடுக்கும் மருந்துகளாக இருக்கலாம்.
- பல அறிகுறிகளுக்கு, இரண்டு வாரங்கள் பொறுப்பது ஒரு நல்ல வழிமுறை. வைத்திய ஆலோசனை இல்லாமலேயே அதிக அறிகுறிகள் தானாகவே இரண்டு வாரத்தில் மறைந்துவிடும். உங்கள் தேவையற்ற யோசனைகளை, பயங்களை இரண்டு வாரத்திற்கு தள்ளி வைக்கலாம். நிச்சயமாக, யோசனைகளை தள்ளிப்போடுவதற்கு பயிற்சி தேவை. நோய் பயம் சார்ந்த எண்ணங்களை தள்ளிப் போட, தியானம் மற்றும் உளநல ஆலோசனைகள் உதவுகின்றன.
- அறிகுறிகள் மோசமாகுமேயானால் உடன் மருத்துவ உதவியை நாட வேண்டும்.
- ஏற்கனவே சில நோய்நிலைகள் இருப்பின், நோய்நிலைக்கு தக்க வேறு வழிமுறைகளை கையாளவேண்டி இருக்கும். இந்த பிரத்தியேக வழிமுறைகளை, அதாவது எப்போது அறிகுறிகளை பற்றி பதற்றம் கொள்வது, எப்பொழுது யோசனைகளை தள்ளி போடலாம் என்பதை, உங்கள் வைத்தியரின் ஆலோசனையோடு நீங்கள் தீர்மானித்துக் கொள்ளலாம்.

நோய் பயம் உள்ளவர்கள் தமக்கு ஒரு கொடிய நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதீதமாக இருப்பதாக மதிப்பிடுவார்கள். விடயங்களின் தீவிரத்தையும் அதீதமாக மதிப்பிடுவார்கள். அறிகுறிகளுக்கான வேறு யதார்த்தபூர்வமான விளக்கங்களை, அது வைத்தியரிடம் இருந்து வந்தால் கூட, தட்டிக்கழித்து விடுவார்கள். ஒரு நோய்க்கான சிகிச்சை வாய்ப்புகள் மற்றும் நோய்க்கு ஈடுகொடுக்கக்கூடிய அவர்கள் திறமை பற்றி எல்லாம் குறைத்து மதிப்பிடுவார்கள்.

பார்க்கப்போனால், உங்கள் உணர்வுகளுக்கு நீங்கள் இருக்கும் சூழல் அல்ல. அது சார்ந்த உங்கள் எண்ணங்கள், அதற்கு நீங்கள் கொடுக்கும் விளக்கங்கள் தான் காரணம். உதாரணமாக, நீங்கள் இரவு நேரம் கட்டிலில் படுத்திருக்கிறீர்கள் என்று வைத்துகொள்வோம். பலத்த சப்தம் ஒன்று கேட்கிறது. கள்வர்கள் வீட்டை உடைத்துக்கொண்டு வருகிறார்கள் என்று கற்பனை செய்தால், உடனே உங்கள் இதயம் படபடக்கலாம். வியர்க்கலாம். அதுவே, அயலவர் வெளியில் garbage எடுத்து வைக்கிறார்கள் என்று நினைத்தீர்கள் ஆனால், ஒரு பயமும் ஏற்படப்போவதில்லை. நிம்மதியாக நித்திரைக்கு சென்றுவிடுவீர்கள். உண்மையிலேயே, வீட்டிற்குள் கள்வர்கள் வருகிறார்கள் என்றால், இதயம் அடித்துக் கொள்வதும் வியர்ப்பதும், அபாயத்தை எதிர்க்க உங்கள் உடலையும் மனதையும் தயார் செய்யும். ஆனால் நோய் பயம் உள்ளவர்கள் உண்மையில் இருக்கும் அபாயத்தை விடவும் அதீத அபாயம் இருப்பதாக கற்பனை செய்துகொள்வார்கள். பழைய வாகனம் என்றால், சத்தமோ சிக்கலோ இருக்கத்தான் செய்யும். அதனால் வாகனம் ஓடாது என்பதல்ல. அப்படித்தான் எம் உடலும்.

உதாரணமாக, நோய் பயம் உள்ளவர்கள் சிந்திப்பது இப்படி இருக்கும்:

- இதயம் அதிவேகமாக படபடக்கிறது. மாரடைப்பாக இருக்குமோ?
- இன்று நான்கு தடவை கழிப்பறைக்கு சென்றுவிட்டேன். எனக்கு நிச்சயமாக சலரோகம் தான்.
- அசாதாரணமான சிந்தனைகள் எல்லாம் வந்துபோகிறது. எனக்கு தீவிரமான மன நோய் வந்துவிட்டதோ?
- இந்த சத்திரசிகிச்சை என்னை கொன்றுவிடும்.
- எனக்கு ஒரே தலைவலியாக இருக்கிறது. மூளையில் கட்டி இருக்குமோ?

நோய் பயம், கூடுதல் பதற்றத்தை ஏற்படுத்தும் போது, உடல் உபாதைகள் கூட அதி தீவிரமாக உணரப்படும். இதுவே இன்னும் பதற்றத்தை கொண்டுவரும். இப்படியே பிரச்சினை இடியப்ப சிக்கலாக போய்விடும். மீளமுடியாது. விளைவாக, தேவைக்கு தக்க மருத்துவ உதவியை கூட பயம் காரணமாக பிற்போட எத்தனிப்பீர்கள். அல்லது, தேவையற்ற மருத்துவ பரிசோதனைகளுக்கு உங்களை உள்ளாக்குவீர்கள்.

வெளிவரவிருக்கும் Journal of the American Medical Association, 2015ல் மருத்துவத்தின் அதீத பாவனை (medical overuse) பற்றி கேள்வி எழுப்புகிறது. அதாவது, medical overuse என்பது நன்மையை விடவும் தீமைக்குரிய சாத்தியக்கூறுகள் அதிகமாக எழக்கூடிய தேவையற்ற மருத்துவ சிகிச்சையாகும். (இந்த கேள்விக்குரிய மருத்துவ அணுகுமுறைகளில் சில:- Head CT, pelvic (இடுப்பு/வயிறு) examinations, some screening practices and ultrasonography for asymptomatic carotid artery stenosis and thyroid cancer). இன்னும், இடுப்பு வலிக்காக acetaminophen (tylenol) பாவனை, சத்திரசிகிச்சையின் பின் நீண்ட கால opioid பாவிப்பு, aspirin பாவிப்பு, மற்றும் HDL-C (அதாவது நல்ல cholesterol) மட்டத்தை அதிகரிக்கும் மருந்துகள், Renal Artery Stenosis (RAS)க்கான stenting, என்பன நன்மையை விட அதிக தீமையையே கொடுப்பதாக அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

ஆரோக்கியம் என்பது நோய் அற்ற நிலை அல்ல. ஒருவரின் உடல், உள மற்றும் சமூக நடப்பு சார்ந்தது. ஆகவே, உங்கள் உடலை, உளத்தை, சமூக தொடர்பை எப்படி ஆரோக்கியமாக வைத்திருப்பது என்பதில் கவனம் வைத்தீர்கள் ஆனால், மன உளைச்சலுக்கு அதிக காரணம் இருக்காதல்லவா? முழுமையான வாழ்வுக்கு முழுமனதோடு முயற்சி செய்யுங்கள். உபயோகம் அற்ற பயத்தை தள்ளிவைக்க முயற்சி செய்யுங்கள்.



*pushpa.k@thaiveedu.com*

**ஆரோக்கியம் என்பது நோய் அற்ற நிலை அல்ல.**
**அது ஒருவரின் உடல், உள, சமூக நடப்பு சார்ந்தது.**
**ஆகவே, உங்கள் உடலை, உளத்தை,**
**சமூகத் தொடர்பை எப்படி ஆரோக்கியமாக**
**வைத்திருப்பது என்பதில் கவனம் செலுத்துங்கள்.**




# எலும்புகளும் நோய்களும்

- எஸ். பத்மநாதன் -

## மனித எலும்புகளும் அவற்றில் ஏற்படும் சில நோய்களும்:

அரும்பொருட் காட்சியகங்களிலும் ஆய்வு நிலையங்களிலும் தொங்க விடப்பட்டிருக்கும் மனித எலும்புக்கூடுகளைப் பார்த்ததும் பல ருக்கும் பயப்பிராந்தியே பிடித்துவிடும். ஆனால் எமது உடலை இவ்வளவு அழகாக நிமிர்த்தி நிற்க வைப்பது எலும்புகள்தான். அதில் முதுகெலும்பின் பணி முக்கியமானது. பரிணாம வளர்ச்சியின் படிநிலை முதுகெ லும்புள்ள உயிரினங்களாகும். மனிதர் மட் டுமல்ல ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் என் பவற்றின் உடல் அமைப்புக்கு ஆதாரமானவை எலும்புகள்.

எலும்புகள் உடல் உறுப்புகளுக்குப் பாது காப்பாக உள்ளன. இவை உள்ளதால்தான் நாம் நிற்கிறோம், நடக்கிறோம், வளைகி- றோம், நெளிகிறோம். உடலில் உள்ள தோலை அகற்றி விட்டால் உச்சிமுதல் உள்ளங்கால் வரை எலும்புகள் உள்ளன. இதில் ஒன்று உடைந்துவிட்டாலோ அல்லது நொருங்கி விட்டாலோதான் எலும்புகளின் அருமை எமக்குத் தெரியவரும்.

உடலில் உள்ள எலும்புகளின் அமைப்பையும் அதன் தன்மையையும் நோக்கின் எலும்பை உருவாக்கும் திசுக்களில் பல கனிமங்கள் நிறைந்துள்ளன. இவை தேன்கூடு போன் றவை. முப்பரிமாண உள்ளமைப்பை கொண்டு எலும்புகளுக்கு உறுதியை வழங்குகின்றன.

எலும்புகளுடன் தசைகள் இணைந்திருப்ப தால் தான் உடலியக்கம் சாத்தியமாகின்றது. தசைகள் எலும்புகளுக்கு பாதுகாப்பானவை. எலும்புகள் 60 - 70 வீதம் கனிமப் பொருட் களும், 10 - 20 வீதம் நீரும் கொண்டவை. எலும்புகளை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் பகுதிகள் மூட்டுகள் (Joints) ஆகும். இவை அசையும் மூட்டுகள் அசையா மூட்டுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மண்டை- யோட்டு எலும்புகள் அசையாமல் பொருத் தப்பட்டுள்ளன. அசையும் மூட்டுகள் பல வகைப்படும். பந்துக்கிண்ண மூட்டு (Ball and Socket Joint) வழுக்கு மூட்டு (Gliding Joint) ஆகியவை இவ்வகைப்படும். எலும் புகள் அசையும் போது தேய்மானம் ஏற்ப டாதிருப்பதற்காக synovial fluid என்னும் வழுவழுப்பான திரவம் சுரக்கின்றது. மூட் டுகள் அசையும்போது எலும்புகள் விலகாமல் இருப்பதற்கு தசை நாண்கள் (Tendons) உதவுகின்றன.


எலும்புகளை மேலோட்டமாக பார்த்தால் வெள்ளை நிறமாகத் தெரியும். உண்மையில் அவை வெளிர் பழுப்புநிறம் கொண்டவை.

ஒரு குழந்தை பிறக்கும்போது 270 எலும்பு களைக் கொண்டிருக்கும். இவற்றில் சில ஒன்றுடன் ஒன்று இணைவதால் வயது வந் தவர்களின் உடலில் 206 எலும்புகளே காணப்படும். இவ் எலும்புகள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. 80 Axial Bones என் றும், 126 Appendicular Bones என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.

பொதுவாக எலும்புகளின் கடினமான நடுப் பகுதி Cortical Bone எனப்படுகிறது. மிரு- துவான வெளிப் பகுதி Cancellous Bone எனப்படும். எலும்புகள் அவற்றின் அமைப் பைப் பொறுத்தும் வேறுபடுகின்றன. தொடை, கை, கால் எலும்புகள் நீளமானவை. விரல் எலும்புகள் குறுகியவை. தோட்பட்டை எலும்பு கள், நெஞ்சின் நடு எலும்புகள் தட்டை யானவை. முதுகெலும்பு, முகத்தாடை எலும் புகள் சீரற்ற அமைப்பைக் கொண்டவை. தசை அல்லது தசைநாணுக்குள் புதைந்தி ருக்கும் எலும்பு Sesamoid Bone எனப்படும்.

## மனித எலும்புகளை எப்படித் தொகுத்துள்ளனர்?

மண்டையோட்டு எலும்புகள் (Cranial Bo nes) 8, முக எலும்புகள் (Facial Bones) 14, காது எலும்புகள் 6, தொண்டை எலும்பு 1, தோள்பட்டை எலும்புகள் 4, முள்ளந்தண்டு எலும்புகள் 24, விலா எலும்புகள் 25, மேல் கை எலும்புகள் 2, முன்கை எலும்புகள் 4, கை எலும்புகள் 54, (மணிக்கட்டு, உள் ளங்கை எலும்புகள், விரல் எலும்புகள் உள் ளடங்கும்) இடுப்பு எலும்புகள் 4, கால் எலும்புகள் 6, பாத எலும்புகள் 52 (கணுக் கால், விரல்கள் உள்ளடங்கும்). எல்லாமாக 206 எலும்புகள் உள்ளன.



கைகளில் 54 எலும்புகளும் பாத எலும்புகள் 52 எலும்புகளும் உள்ளன. எனவே, மொத்த எலும்புகளில் அரைப்பங்கு கையிலும் பாதத் திலும் இருக்கின்றன.

கல்சியம், பொஸ்பரஸ், உயிர்ச்சத்து A, D, தைரொக்சின் குறைபாடுகள் எலும்பைப் பலவீனப்படுத்துகின்றன. குறிப்பாக மாதவி டாய் நிற்கும்போது பெண்களுக்கு எலும்பு சம்பந்தமான நோய்கள் ஆரம்பிக்கின்றன.

## எலும்புகளில் ஏற்படும் நோய்கள் சில:

- Osteroporosis: எலும்புத் தேய்மானம் அடைவது.
- Osteogenesis: பிறப்பிலேயே உறுதியான எலும்புகள் உருவாகாத நிலை சிலருக்கு ஏற்படுகிறது. இந்நோய் உள்ளவர்களின் எலும்புகள் இலகுவில் முறிகின்றன.
- Paget's Disease: இந்நோய் உள்ளவர் களின் எலும்புகள் சீரற்ற அமைப்பைக் கொண்டிருக்கும், இலகுவில் முறியும் தன்மை கொண்டிருக்கும்.
- Bone Spur: எலும்பின் நுனிகளில் வளர்ச்சி
- Multiple Myeloma: எலும்பு மச்சையில் ஏற்படும் புற்றுநோய்
- Osteosarcoma: எலும்புப் புற்றுநோய்
- Osteoarthritis: எலும்பு தேய்மானம் அடைந்து மூட்டுகளில் வலி ஏற்படுவது
- Chondrosarcoma: எலும்பைச் சுற்றி இருக் கும் Cartilage என்னும் திசுக்களில் ஏற் படும் புற்றுநோய்
- Planter Fascitis: குதிக்கால்களில் ஏற்ப டும் வலி
- Calcaneal Spur: குதி எலும்பில் ஏற்படும் சிறு வளர்ச்சி

உடலில் யூரிக் அமிலம் அதிகரிக்கும் போது அது மூட்டுக்களைப் பாதித்து வலி ஏற்ப டுத்துகிறது.

குதிக்கால் வலிக்குக் குளிர் நீரும், சூடான நீரும் நிவாரணம் தரவல்லவை. Hydro- cortisone, Lignocaine என்னும் இரு மருந் துகள் ஒன்றாக ஊசி மூலம் செலுத்தப் படுவதும் வலியைக் குறைக்கும்.

எலும்பு நோய்களைக் கண்டறிய Bone Density Assessment, X Ray, CT Scan, MRI, Uric Acid Analysis ஆகிய பரிசோ- சாதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பரிசோதனை முடிவுகளை வைத்தே சிகிச்சை முறைகளும், மருந்துகளும் தீர்மானிக்கப்ப டுகின்றன.

1958ல் அமெரிக்காவில் பிறந்த Jeanne Pee per என்ற பெண்ணுக்கு ஒரு அபூர்வமான நோய் ஏற்பட்டது. அதன் காரணமாக அவ ருடைய எலும்புகள் அசாதாரணமாக வளரத் தொடங்கின. அது உடலில் இன்னொரு எலும்புக் கூடாகத் தோற்றம் அளித்தது. அவர் எலும்பாக மாறிய பெண் (The girl who turned to Bone) என்று அறியப்பட்டார். அவருடைய நோய் fibrodysplasia ossifi- cans progressiva (FOP).ஆகும்.

இதனால் சக்கர நாற்காலியில் 30 பாகை டிகிரியில் சரிந்து மட்டுமே அவரால் அமரக் கூடியதாக இருந்தது. முகம் எந்த அசை வும் இன்றி விறைத்தது போல் இருக்கும். ஆயினும் இத்துன்பங்களின் நடுவிலும் புளோரிடா பல்கலைக்கழகத்தில் சமூக சேவை கல்வியில் பட்டம் பெற்றார். உல கில் தன்னைப்போன்ற நோய் உள்ளவர்களை ஒன்று சேர்த்து IFOPA என்ற அமைப்பை உருவாக்கினார். அவரது அயராத முயற்சி யால் பெரிய அளவு நிதி சேகரிக்கப்பட்டது. அவர் இன்று வரை இச்சேவையைத் தொடர்ந்து செய்து வருகிறார்.



pathmanathan.s@thaiveedu.com

அச்சுநகர் புனித சூசையப்பர் பங்கு மக்கள் ஒன்றியம் - கனடா

10வது வருடாந்த நத்தார் ஒன்றுகூடல் - 2015

மார்கழி 05

சனிக்கிழமை

மாலை 6:00 மணி முதல்

JC'S Banquet Hall

1686, Ellesmere Road (east of McCowan Rd), Scarborough, ON M1H 2P6

தொடர்புகள்:

ஏட்றியன்: 648 885 1778,     ஆன் வயலட்: 416 567 5444

## Green executive townhomes with sky terrace starting at $479,900

**the perfect combination of modern city living in a natural green setting in the heart of Pickering directly accross from Altona forest**

THE FORESTVIEW TOWNS

+ Green Smart Home Technology high efficiency standard
+ 9 foot ceilings on all floors (except garage level)
+ High-end luxury finishes
+ Incredible 10% deposit structure in 120 days*



**FORESTVIEW TOWNS**

3 or 4 Bedroom Available
from 1,938 to 2,016 sq/ft
starting at $479,900


$10,000 End unit premium
Maintenance: $144.94/month

**CITYSCAPE EXCLUSIVE INCENTIVES**

Stainless Steel Appliances
Free gas line
Free assignments (a $5,000 value)

Occupancy is spring 2017

Please E-mail:
neel@cityscapeone.com
for floor plans + info package



NEEL SURENDRAN, CCIM
Broker of Record

Direct: 416-560-4728
Tel: 905-241-2222
Fax: 905-241-3333
www.cityscapeone.com

25 Watline Ave, Suite 402
Mississauga, Ontario
Canada, L4Z 2Z1
neel@cityscapeone.com

CITYSCAPE
The Art of Realty

# MORTGAGE SOLUTIONS FOR EVERYONE!



**2.49% FOR 5 YEAR FIXED***
**1.95% FOR 5 YEAR VARIABLE***
*OAC

- Purchase
- Refinance
- Renewals / Switches
- 1st, 2nd, 3rd Mortgage
- Equity Lines of Credit
- Bad Credit / No Credit
- Bankruptcy/ Consumer Proposals
- Power of Sale
- Tax & Mortgage Arrears






MORTGAGE ALLIANCE

## Ram Krish

**Mortgage Agent** - Mortgage Alliance
Lic # M08002015

**Call Now : 416-427-5555**

10 Milner Business Court,
Suite 401 Scarborough,
ON M1B 3C6

Visit us at www.lenderhub.ca


Ravi Kana
COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
FOR SALE $620,000
Ajax
FOR SALE $624,900
Toronto
FOR SALE $644,900
Toronto
FOR SALE $649,900
Ajax
FOR SALE $699,900
Ajax
FOR SALE $839,000
Markham
FOR SALE $848,000
Markham
FOR SALE $943,000
Toronto
Century 21
Percy fulton Ltd. Borkerage
Ravi Kana
Broker
Cell 416.725.7284
ravikana@trebnet.com
www.ravikana.com
2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200


PROTECT MORE
SAVE MORE
Insure your
AND SAVE
Allstate
You're in good hands.
வாகன, வீட்டுக் காப்புறுதி முகவராக ALL STATE நிறுவனத்துடன் இணைந்து சிறப்பாகச் சேவையாற்றி வரும் சுரேன் நவரட்ணராஜா தற்போது தனது காப்புறுதிச் சேவைகளை வாடிக்கையாளர் மனம் நிறைவடையும் வகையில் எளிதாக்கியுள்ளார்.
காப்புறுதித்துறையில் சிறந்த சேவை வழங்கியமைக்காக பல விருதுகளைப் பெற்ற சுரேன் நவரட்ணராஜாவின் நட்பானதும் நிறைவானதுமான காப்புறுதிப் பணி பலரதும் பாராட்டைப் பெற்றதாகும்.
காப்புறுதியின் முக்கியத்துவத்தையும் மக்களின் தேவையையும் நன்குணர்ந்தவரான சுரேன் காப்புறுதிகளின் நுணுக்கங் களையும் பயன்களையும் வாடிக்கையாளருக்குத் தெளிவாகக் கூறுவதில் வல்லவராவர்.
இளமையும் துடிப்பும் கொண்ட சுரேன் எல்லா வயதினரோடும் இனிமையாகப் பேசி கனிவான சேவையை வழங்கி வருகின்றார். நீங்கள் அழைக்கும் பொழுதுகளில் எல்லாம் உங்களோடு உரையாடக் காத்திருக்கின்றார் சுரேன்.
CALL ALLSTATE FIRST
Suren Navaratnarajah
Scarborough East Agency
Mobile: 416-520-6916
snavaratnarajah@allstate.ca
* Inclusive of all other discounts applied to Allstate's base rates.
Terms and conditions apply and may vary by region. Rates and discounts subject to change.
® Trademark used under licence by Allstate Insurance Company

# வாய்ப் புற்றுநோய் / Oral Cancer

- ரவிச்சந்திரிகா -

Oral Cancer என்பது வாய்க்குள் ஏற்படும் புற்றுநோய்களைக் குறிக்கும். மிகச் சரியாகச் சொல்வதானால் வாய், தொண்டை இரண்டிலும் ஏற்படும் புற்றுநோய்களை ஒன்றாகச் சேர்த்து OroPharyngeal Cancer (Oro: வாய், Pharynx தொண்டை) என்று குறிப்பிடப்படுகிறது. பொதுவாக Head and Neck Cancers என்று கூறுகிறோம். உதடு, நாக்கு, தொண்டை ஆகிய பகுதிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன.




2003ம் ஆண்டு எடுத்த கணக்கெடுப்பின்படி கனடாவில் 3,100 பேருக்கு வாய்ப் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப் புற்றுநோய் காரணமாக 1,090 மரணம் அடைந்தனர். இப்புற்றுநோய் 45 வயதுக்கு மேற்பட்டவர்களை அதிகம் பாதிக்கிறது.

### வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணிகள்:

- மது, புகையிலை இரண்டையும் ஒரே நேரத்தில் அதிக அளவில் உபயோகிப்பது.
- புகையிலையில் உள்ள carcinogens. புகையிலை என்பதில் சிகரட், சுருட்டு, பைப், வெற்றிலையுடன் சேர்த்துப் போடப்படும் புகையிலை, மூக்குப்பொடி அனைத்தும் அடங்கும்.
- ஏற்கெனவே இருந்த புற்றுநோய்.
- வாய், பற்களைச் சுத்தமாக வைத்திருக்காதது, மது புகையிலைப் பாவனையாளர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.
- முதுமை.
- அடிக்கடி சூரிய ஒளிக்கு ஆளாகுதல், கட்டடங்களுக்கு வெளியே செய்ய வேண்டிய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள். சூரிய ஒளியில் உள்ள UV (Ultra Violet) கதிர்வீச்சு புற்றுநோய்க்குக் காரணமாகிறது.
- காய்கறி, பழ வகைகளை மிகக் குறைவாக உண்ணுதல்
- பாலினம்: ஆண்கள் பெண்களை விட இருமடங்கு அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.
- HPV16 (HumanPapillomaVirus) எனப்படும் வைரஸ்: புகையிலை உயோகிக்காதவர்களுக்கும், இளம் வயதினருக்கும் வாய்ப் புற்றுநோய் ஏற்பட இவ்வைரஸ் காரணமாக இருக்கலாம். இவ்வைரஸ் தொற்று ஏற்படும் அனைவருக்கும் வாயில் புற்றுநோய் ஏற்படுவதில்லை. இவ்வைரஸ் பாதிப்பினால் ஏற்படும் புற்றுநோய் அனேகமாக நாக்கின் பின்புறம், தொண்டைப் பகுதியில் காணப்படுகிறது. இவ் வைரஸ் தொற்று உள்ளவர்களுடன் வாய் வழிப் பாலுறவு வைத்துக்கொள்வது புற்றுநோய் ஏற்படுவதற்குரிய சாத்தியக் கூறுகளை அதிகரிக்கிறது.

வாய்ப்புற்றுநோய் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டால் குணப்படுத்தக்கூடிய நோய் ஆகும்.

ஆரம்ப நிலைகளில் வலி, நோய்க்குரிய அறிகுறிகள் இருக்காததாலும், நோயுள்ளவர் வாயில் ஏற்படும் மாற்றங்களை கவனிக்காதாலும் ஆரம்ப நிலையில் இது கண்டுபிடிக்கப்படுவதில்லை. நோய் கடுமையாகி புற்றுநோய் உடலின் வேறு அங்கங்களுக்குப் பரவிய பின்பே அனேகமாக இது கண்டுபிடிக்கப்படுகிறது. அந்நிலையில் சிகிச்சைகள் பலனளிக்காமல் மரணம் ஏற்படச் சாத்தியங்கள் அதிகமாகும்.

பல் மருத்துவரும் அவருடைய மருத்துவ நிலையத்துக் குழுவினரும் இதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் மட்டுமே வாயை மிக விரிவாகப் பரிசோதனை செய்கிறார்கள். எனவே வாய், பற்களின் நலம் பேணுவதற்காக மட்டுமன்றி, வாயில் ஏற்படக்கூடிய பிற நோய்களை ஆரம்பத்தில் கண்டுபிடிப்பதற்காகவும் சரியான நேரத்தில் உரிய சிகிச்சை பெறுவதற்காகவும் பல் மருத்துவரிடம் ஒழுங்காகச் செல்லவேண்டும்.

### வாயில் ஏற்படும் புற்றுநோயின் பொதுவான அறிகுறிகள்:

- வாயில் நிற மாற்றங்கள்: நாக்கு, உதடு, கன்னத்தின் உட்புறங்களில் காணப்படும் வெள்ளை அல்லது சிவப்பு Lesions (Leukoplakia, Erythroplakia), வாயின் சில பகுதிகள் கருமை கொண்டிருப்பது.
- வாய்க்குள் காணப்படும் வீக்கங்கள், கட்டிகள், இயல்புக்கு மாறான வளர்ச்சிகள்.
- ஆறாத காயங்கள், குருதிப் பெருக்கு.
- உதடுகளும் வாயும் விறைத்திருப்பது போன்ற உணர்வு.
- சுவைத்தலில் மாற்றங்கள்.
- உணவை விழுங்குவதில் மாற்றங்கள், வலி, உணவு தொண்டைக்குள் ஒட்டிக் கொள்வது.
- தொடர்ந்த இருமல்.
- குரல் தடித்தல்.
- கழுத்தின் வெளிப் பகுதியில் திடீரென ஏற்படும் வீக்கங்கள்.
- ஒரு பக்கக் காதில் ஏற்படும் வலி.

வாயில் ஏற்படும் காயங்கள், மாற்றங்களுக்கு சிகிச்சையளிக்கப்பட் பின்னரும் இரண்டு வாரங்களுக்கு மேலாக அக்காயம் ஆறாதிருப்பின் அது புற்றுநோய் எனக் கருதி, அதைக் கண்டுபிடிப்பதற்குரிய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு வாயில் புற்றுநோய் இருக்கும் என்ற சந்தேகம் ஏற்பட்டால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- Biopsy: பாதிக்கப்பட்ட இடத்தில் இருந்து ஒரு சிறு துண்டு வெட்டி எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்படும்
- எக்ஸ் கதிர்ப் பரிசோதனை, Ultrasound, CT ஸ்கான், MRI பரிசோதனைகள் செய்யப்படும்.

புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டால், அக் கட்டி சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்படலாம். எக்ஸ் கதிர்கள் செலுத்தப்பட்டு அக் கட்டி அழிக்கப்படலாம். புற்றுநோய்களுக்குரிய மருந்துகள் பரிந்துரைக்கப்படும்.

### வாயில் புற்றுநோய் வராமல் தடுப்பதற்குச் செய்ய வேண்டியவை:

- பல் மருத்துவரிடம் ஒழுங்காகச் செல்ல வேண்டும். வாயில் அசாதாரண மாற்றங்களைக் கவனித்தால் உடனடியாக பல் மருத்துவர் அல்லது மருத்துவரின் ஆலோசனையை நாட வேண்டும். Pre cancerous lesionsக்கு உடனடியாக சிகிச்சை பெறுதல்.
- புகையிலைப் பாவனையை நிறுத்த வேண்டும். இதை ஒருவர் தனியாகச் செய்ய முடியாத பட்சத்தில் மருத்துவரின் உதவியை நாடலாம். அவர் அதற்குரிய வழிகளைச் சொல்லித்தருவார்
- மது பாவனையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்.
- உடலில் சூரிய ஒளி படும் இடங்களைப் பாதுகாக்க வேண்டும். உதடுகளுக்கு UV பாதுகாப்பு கொண்ட lip balm என்னும் க்ரீம் பயன்படுத்த வேண்டும். UV பாதுகாப்பின் அளவு SPF என்ற எழுத்துக்களுடன் ஒரு எண் சேர்த்துக் குறிப்பிடப்பட்டிருக்கும்.
- உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றுதல். உணவில் அதிக அளவு பழங்களும் காய்கறிகளும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.




வாய்ப்புற்று நோய்க்குரிய சிகிச்சை பின்வரும் காரணங்களைப் பொறுத்து வேறுபடுகிறது.

- Location: புற்றுநோய் காணப்படும் இடம்.
- Severity: நோயின் கடுமை.
- Age: பாதிக்கப்பட்டவரின் வயது.
- Health: பாதிக்கப்பட்டவரின் உடல் நலம்.

வாசகர்களுக்கு அன்பான நத்தார் புது வருட வாழ்த்துகள்.

*தொடரும்.*

**உசாத்துணை:**


- What is Oral cavity Cancer (2015) Retrieved from http://www.cancer.ca/en/cancer-information/cancer-type/oral/oral-cancer/?region=on
- Oral Cancer Facts (2015)Retrieved from http://www.oralcancerfoundation.org/facts/
- Oral Cancer (2015) Retrieved from http://www.cda-adc.ca/en/oral_health/complications/diseases/oral_cancer.asp
- HPV/Oral Cncer Facts (2015) Retrieved from http://www.oralcancerfoundation.org/hpv/hpv-oral-cancer-facts.php
- Lip and Oral cavity Cancer (2015) Retrieved from http://www.cancer.gov/types/head-and-neck/patient/lip-mouth-treatment-pdq
- Image of lip blistex lip balm (2015) Retrieved from http://www.healthsnap.ca/blistex-lip-balm-4-25-g-mint-spf-15-product?gclid=CNnu2Puvg8kCFZWHaQod5kwDpA
- Image of Nivea lip balm (2014) Retrieved from http://www.allure.com/beauty-products/skin/2010/nivea-sun-protection-lipcare
- Image of Tobacco (2014) Retrieved from http://ocf.org.in/Professional/Oralcancer.aspx?str=Professional




*ravichandrika@thaiveedu.com*



COMPUTEK COLLEGE
EST. 1991
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005



UNEMPLOYED?
UNDEREMPLOYED?
SECOND CAREER
&
OTHER FUNDING . OPTIONS AVAILABLE
CALL FOR DETAILS
NEW SKILLS, NEW CONFIDENCE, NEW CAREER...

20,000 சதுர அடி பரப்பளவில்
மிகப் பிரமாண்டமான அதி நவீன
வசதிகளுடன் கூடியதாக அமைந்துள்ளது



NOW ACCEPTING INTERNATIONAL STUDENTS!
Computek College is approved as a Designated Learning Institution (DLI) by Citizenship and Immigration Canada(CIC)

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Personal Support Worker | 32 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Medical Office Admin | 28 wks |
| Network Engineering | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES ( WEEKEND /EVENING)
Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

WWW.COMPUTEK.EDU
Financial assistance may be available for those who qualify

New Location
Toronto Campus
400-2425 Eglinton Ave E.
(Kennedy/Sheppard)
416-321-9911

Markham Campus
202 - 7 Eastvale Dr.
(Markham / Steeles)
905-471-3344

# உதறலெடுக்கும் steering


- அதீசன் சர்வானந்தன் -

## வேகமாக போகும் போது steering wheel உதறுவதுபோல் (shimmy) உணர்கின்றீர்களா?

பொதுவாக wheelல் balance சரியாக இல்லை என்றால் அல்லது சில்லில் வளைவு இருந்தால் shimmy எற்படும். வாகனத்தின் முன்பகுதியை தரையிலிருந்து தூக்குங்கள். பின்னர் கையால் ஒவ்வொரு சில்லையும் சுழலவையுங்கள். பக்கவாட்டிலோ அல்லது உள்ளே மற்றும் வெளியே சில்லில் அசைவது போல தெரிந்தால் அது வளைவு ஆகிவிட்டது உடனே மாற்றப்படவேண்டும் என்பதே அர்த்தம்.

## எச்சரிக்கை:

சிலர் வளைந்த சில்லுகளை நேராக ஆக்க முயற்சி செய்வர். இந்த வேலை, அதிலும் குறிப்பாக aluminum alloy wheelகளை பொறுத்தவரையில் மிக ஆபத்தானது. செலவு அதிகமானாலும் புதியதை வாங்கி பொருத்துவதுதான் மிக பாதுகாப்பானது. வீலில் பக்கவாட்டு அசைவு எதுவும் இல்லையென்றாலும் அது வளையாமல் நேராக தான் இருக்கிறது என்ற அர்த்தம் இல்லை. ஒரு shimmyஐ ஏற்படுத்தும் அளவில் பக்கவாட்டு தேய்வு இருக்கலாம். ஆனால் அது பார்வைக்கு தென்படாது. இதை கண்டு பிடிப்பதற்கு உங்களுக்கு ஒரு dial indicator அவசியம். சுமார் .050 inch பக்கவாட்டு தேய்வு இருந்தாலே பிரச்சினை ஏற்பட்டுவிடும்.



சில்லுகள் நேராக இருப்பதுபோல தோன்றினால் இரண்டு சில்லுகளும் சமநிலையுடன் உள்ளனவா என்பதை சோதித்துப் பாருங்கள். அவை சரியாக இருந்தும் உதறல் எற்பட்டால் பழுதடைந்த belt alignment அல்லது மோசமான tire கட்டமைப்பு போன்ற வேறு ஏதாவது காரணம் இருக்கும். wheel bearingகள் தவறாக பொருத்தப்பட்டிருத்தல், போதுமான அளவு caster alignment இல்லாதிருத்தல் அல்லது steering damper தேய்ந்து போய் இருந்தாலும் shimmy ஏற்படும்.

## steering தளர்வாக இருப்பது போல தோன்றுகின்றதா?

Tie rod முனைகள் தேய்ந்து போய் இருத்தல், idler arm அல்லது center link தேய்ந்து போய் இருந்தல், steering gear தேய்ந்து போய் இருத்தல் அல்லது steering rack தேய்ந்து போய் இருந்தல் ஆகிய காரணங்களால் இது ஏற்படும். சாதாரணமாக உங்கள் steering wheel கால் அங்குலத்தை விடக் கூடுதல் ஆட்டத்தைக் கொண்டிருக்கக் கூடாது. அதை விடக் கூடுதலாக இருந்தால் வேறு ஏதாவது தேய்ந்து போய் இருக்கும்.

## எச்சரிக்கை:

உங்கள் steeringஇல் ஏதாவது பழுது ஏற்பட்டால் உடனே கவனித்து விடுங்கள். ஏனென்றால் முக்கியமான தருணத்தில் steering கட்டுப்பாடு இல்லாமலப் போய்விடும். உட்புறம் மற்றும் வெளிப்புறம் உள்ள tie rod முனைகள் உணரக் கூடிய அளவில் எந்த loosenessஐயும் கொண்டிருக்க கூடாது. Tie rod முனைகள் தேய்ந்து போய் அல்லது தளர்வாக இருப்பது மிகவும் ஆபத்தான விடயம். ஏனென்றால், ஒன்று இழுக்கப்பட்டு பிரிந்துவிட்டால் உங்களுக்கு steering control இல்லாமல் ஆகிவிடும். மேலும் tireகளும் வேகமாக தேய்ந்து விடும்.

மரபு முறை சார்ந்த steering அமைப்புடன் ஒரு rear wheel drive வாகனம் உங்களிடம் இருந்தால், உங்கள் car குறிப்பு புத்தகத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை விட கூடுதல் Playஐ idler arm கொண்டிருக்க கூடாது. இதை சோதித்துப் பார்ப்பதற்கு ஒரு குறிப்பிட்ட விசையுடன் armஐ இழுத்து பார்க்கும் போது அது எவ்வளவு தூரம் வளைகிறது என்பதை அளவீடு செய்யவேண்டும்.

உங்கள் வாகனம் நிறைய ‘மைல்’கள் ஓடியிருந்தால் steering gear அல்லது rack தேய்ந்து போக நேரிடலாம். மரபு முறையான steering boxகளில் ஒரு adjustment screw பொருத்தப்பட்டிருக்கும். அதை பயன்படுத்தி steering gearல் ஏற்பட்டிருக்கும் slackஐ சரி செய்யலாம். Rack மற்றும் pinion steering அமைப்பில் adjustment மூலம் சிறிதளவு பயனே கிடைக்கும். ஏனெனில் rackன் நடுப்பகுதி தேய்ந்து போகும். அதற்கு தக்கவாறு pinion சரி செய்யப்பட்டாலும் இரண்டு பக்கங்களிலும் திருப்பப்படும் போது rack இணைந்துவிடும். இதற்கு புதிதாக ஒரு rackஐ முடியுமானால் புதிய rack assemblyஐப் பொருத்த வேண்டும்.

## மற்றைய காரணங்கள்:

Steering தூணில் உள்ள U joint coupling தேய்ந்து போய் இருந்தாலும் steering loose ஆனது போல தோன்றும் wheel bearingகள் loose ஆகவோ அல்லது தேய்ந்துபோய் இருந்தாலும் steering loose ஆகிவிடும்.

## start செய்யும் போது இறுக்கமாக இருக்கும் power steering:

start செய்யும் போது power steering இறுக்கமாக இருப்பது போல தோன்றி, சிறிது தூரம் சென்ற பின் அது சரியாகி விடுகிறது. இதற்கு ‘Morning sickness’ என்று பெயர். ஆனால் வாகனத்திற்கு அது எந்தப் பாதிப்பையும் செய்யாது. சில power steering rackகளில் அதிலும் குறிப்பாக front wheel drive carகளில் உள்ள spool valve housing தோய்ந்து போனால் இந்த நிலை ஏற்படும். car முதலில் start பண்ணப்படும் போது spool valve வழியே மிக அதிகமாக கழிவுப்புகை வெளியேறும். Aluminium spool valve housing மீது hydraulic pressure மிக அதிகம் இருக்கும் என்பதால், குறைவான அழுத்தம் ஏற்பட்டு steeringஐ effort எடுத்து தான் திருப்பமுடியும். Power துணை இல்லாமல் இருப்பதால் steering சற்று இறுக்கமாக ஆகிவிடும். car சிறிது தூரம் ஓடியபின் rack சற்று சூடாகி விடும். இதனால் spool valve housingல் உள்ள கழிவுகள் வெளியேறி விடும். அதிக அழுத்தம் கிடைப்பதால், steeringஐ சுலபமாக திருப்ப முடியும். இதற்கு ஒரு புதிய rackஐ வாங்கி பொருத்துவது தான் சிறந்த தீர்வு ஒரு cast iron spool valve housing அல்லது ஒரு stainless steel sleeve பதிக்கப்பட்ட aluminium housing மிகுந்த பலனளிக்கும்.

atheesan.s@thaiveedu.com



# REFINANCE TO LOWER RATES & SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500 @2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | 4,014.20 | 1,524.55 |

MONTHLY SAVING

$2,489.65

VERICO MORTGAGE BROKERS NETWORK

APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
Lic# 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent
Lic# M12002440

416.298.2777
info@kiruba.ca



# உங்கள் மின்சாரம், Gas கட்டணங்கள் உயர்ந்து விட்டதா?






## Up great To High Efficiency Gas Furnace
## SAVE $ 40% on your Gas Bill




Rent to Own From $ 30.99
Affordable Payment options
Financing & Rentals With $ 0 Down

FREE in home Estimate please call us
kumar @416 993 8001


Buying Or Selling
Residential, Commercial, Land
& Investment Properties
Neilson And Mclevin Ave $179,999
For Sale Bedrooms 1, Washrooms 1
Mccowan / Finch $264,900
For Sale Bedrooms 2, Washrooms 2
Middlefield/Finch $269,000
For Sale Bedrooms 2, Washrooms 2
Ellesmere/Neilson $318,800
For Sale Bedrooms 4+1, Washrooms 4
Finch/Birchmount $319,900
For Sale Bedrooms 2+1, Washrooms 2
Warden/Lawrence $609,000
For Sale Bedrooms 3+2, Washrooms 2
Mclevin/Neilson $649,900
For Sale Bedrooms 4+2, Washrooms 4
Scar Golf Club/Kingston $688,800
For Sale Bedrooms 3+2, Washrooms 2
Hwy 7 And Bur Oak $698,800
For Sale Bedrooms 3, Washrooms 3
Sheppard/Meadowvale $724,900
For Sale Bedrooms 4+1, Washrooms 4
Major Mackenzie & Markham Road $729,000
For Sale Bedrooms 4, Washrooms 3
North Of Hwy 7/9th Line $748,800
For Sale Bedrooms 4, Washrooms 3
Markham/16th Ave $788,800
For Sale Bedrooms 4+1, Washrooms 4
9th Line/14th Ave $799,900
For Sale Bedrooms 4, Washrooms 4
HOMELIFE
HIGHER STANDARDS
Sathy Sivasubramaniam Sales Representative
2004/2005 Silver Award
2006/2009 Platinum Club Award
2010/ 2011/ 2012/ 2013/ 2014 Chairman Club Award
Top 5% Sales Rep in Canada
2011 / 2012 Sales person of the Year
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044 E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com



BUNDLE SPECIAL
PHONE LINE
•All calling Features are free of charge (Call Display, Call Waiting, Voicemail Three-way Call, Call Forwarding, etc.)
UNLIMITED HI-SPEED INTERNET
•Up to 15 Mbps speed
UNLIMITED USAGE
ONLY $49.95 PER MONTH*
*$49.95 per month for first 6 months there after $64.95
*VoIP phone emergency 911 features differ from traditional 911 services.
*Some conditions apply
•Single page monthly bill
•All calling Features are free of charge
•Designated customer care specialist
•Low International calling rates
AIRCOMPLUS
breaking IT barriers...™
416•CONNECT
416•266•6328
www.aircomplus.com



# மார்க்கம் செய்திகள்

## கவுன்சிலர் லோகன் கணபதி

**A Strong Voice for a Diverse Community**

Tel: 905.479.7748 Email: lkanapathi@markham.ca www.logankanapathi.com

## மார்க்கம் நகரசபை சார்பில் அனைவருக்கும் நத்தார் புதுவருட புத்தாண்டு வாழ்த்துகள்!

# தைப்பொங்கல் விழா:

தைமாதமானது ஒன்ராறியோ முழுவதும் தமிழர் பாரம்பரிய மாதக் கொண்டாட்டங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. தை 13, 14, 15ம் திகதிகளை தமிழர் பாரம்பரிய நாட்களாக / தமிழ்ப் புத்தாண்டாக / தைப்பொங்கலாக 2012இல் பிரகடனப்படுத்தி இந்த கொண்டாட்டத்தை கனடாவில் அதிகாரபூர்வமாக அங்கீகரித்த முதல் மாநகராட்சி மார்க்கமே.

அன்றுமுதல் மார்க்கம் தைப்பொங்கல் விழாவானது தமிழ்ச் சமூகம் மற்றும் தெற்காசிய ஊடகங்கள் மட்டுமன்றி ரொறன்ரோ பெரும்பாகம் முழுவதும் பரந்துள்ள பல இனத்தோரும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிகழ்ச்சியாக உள்ளது.

5வது வருடாந்த மார்க்கம் தைப்பொங்கல் விழா தை 16, 2016 சனிக்கிழமை காலை 11:00 மணிக்கு மார்க்கம் சிவிக் சென்டரிலும் தை 17, 2016 மாலை 2:00 மணிக்கு மார்க்கம் கலையரங்கிலும் இடம்பெறவுள்ளது. இந்த விழாவிற்கான அதிகரித்துவரும் சமூகத்தின் பேராதரவு மார்க்கம் நகரத்தில் இந்த நிகழ்ச்சியை இரண்டு நாள் நிகழ்ச்சியாகக் கொண்டாட ஊக்கமளித்துள்ளது.

முதலாவது நாள், தை 16, மார்க்கம் சிவிக் சென்டரில் இந்தியாவைச் சேர்ந்த பிரபல ஓவியர் ‘மருது’ - ரொற்ஸ்கி மருதுவின் ஓவியக் கண்காட்சி திறப்புவிழா, கனடிய தமிழ் மாணவர்களின் அரங்கு, பாரம்பரியக் கண்காட்சி, சிறார்களுக்கான போட்டி, மற்றும் பிரபல்யமான தமிழ் அறிஞர்கள், நாவலாசிரியர்களின் புத்தகக் கண்காட்சி போன்றவற்றைக் கொண்டிருக்கும். இரண்டாவது நாள், தை 17, மார்க்கம் கலைரங்கில் ‘பொங்கலோ பொங்கல்’ என்ற பண்பாட்டு நிகழ்ச்சி மார்க்கம் சிவிக் சென்டரில் மேற்கூறிய வியத்தகு கண்காட்சிகளுடன் இடம்பெறும்.

தமிழர் பாரம்பரிய கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நாங்கள் பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப் போட்டியொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். இந்த ஓவியப் போட்டிக்கான கருப்பொருள் தமிழர் பாரம்பரியம் அல்லது தைப்பொங்கல் ஆகும். மாணவர்கள் நேரடி ஓவியப் போட்டியிலும் ஓவியப் படைப்பு சமர்ப்பிப்பிலும் பங்குபற்ற ஊக்குவிக்கப்படுகின்றனர்.

ரொறன்ரோ பெரும்பாகத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றலாம். தெரிவுசெய்யப்பட்ட இளம் ஓவியர்களுக்கு புகழ்பெற்ற ஓவியர் மருது அவர்களால் நடத்தப்படும் பிரத்தியேக ஓவியப் பட்டறையில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கும். வெற்றிபெற்றோருக்கு தைப்பொங்கல் இரண்டாம் நாள் கொண்டாட்டங்களின் போது மார்க்கம் மாநகர மேயர் பிராங்க் ஸ்கார்பிரி மற்றும் கவுன்சிலர் லோகன் கணபதி ஆகியோரால் 100 டொலர் பெறுமதியான பணப்பரிசினை வழங்கி பாராட்டப்படுவர்.

ஓவியப் படைப்பைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் தை 16, 2016 பிற்பகல் 3:00 மணி ஆகும். இப்போட்டியில் மாணவர் ஆர்வத்துடன் பங்கேற்க உதவுமாறு வேண்டுகிறோம்.

மார்க்கம் தைப்பொங்கல் குழு சார்பாக, உங்கள் பங்களிப்புக்கும் ஆதரவுக்கும் முன்கூட்டியே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

### விண்ணப்பப் படிவம்

மார்க்கம் தைப்பொங்கல் விழாக்குழு நடத்தும்

## மார்க்கம் தைப்பொங்கல் ஓவியப்போட்டி - 2016



மாணவர் பெயர்

வகுப்பு பாடசாலை/கல்வி நிலையத்தின் பெயர்

தொலைபேசி எண் மின்னஞ்சல்

ஒப்பம் நாள்

**உறுதிப்படுத்துதல்:**

நான் மார்க்கம் பொங்கல் விழாக் குழு நடத்தும் ஓவியப்போட்டி தொடர்பான அனைத்து விதிமுறைகளையும் நன்கு வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன். அவ்விதிகளுக்கு இணங்க இப்போட்டியில் நான் பங்குபற்றுவேன் என உறுதியளிக்கின்றேன். நான் வரையும் இந்த ஓவியம் இதற்கு முன் எங்கும் வெளியிடப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றறேன்.

**ஆக்கத்தை வெளியிட அனுமதித்தல்:**

நான் வரையும் இந்த ஓவியம் வெற்றிக்குரியதாகத் தெரிவு செய்யப்பட்டால் அதனை மார்க்கம் தைப்பொங்கல் இணையத்தளத்திலோ சஞ்சிகையிலோ வெளியிட நான் அனுமதி வழங்குகின்றேன்.

பெயர்

ஒப்பம் நாள்

**அத்தாட்சிப்படுத்துதல்:**

இந்த ஓவியம் ______________________ என்ற மாணவராலேயே வரையப்பட்டது என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் தொலைபேசி எண்

ஒப்பம் நாள்

**விண்ணப்ப முடிவு நாள்:**

ஓவியத்தைக் கையளிப்பதற்கான நிறைவு நாள் சனவரி 16 2015 அன்று பிற்பகல் 3 மணியாகும். கீழ்க்காணும் முகவரிக்கு ஓவியங்களை அனுப்பி வைக்கலாம் அல்லது நேரிடையாகவும் கையளிக்கலாம்:

Kaushalya Rajah, City of Markham, 101 Town Centre Blvd Markham, ON L3R 9W3

## அதிசயப் பிராணிகள்

# கங்காரு / Kangaroo

### கங்காரு (Kangaroo, Macropus giganteus) பற்றிய அறிமுகம்:

கங்காரு, பாலூட்டி இனத்தைச் சேர்ந்த முள்ளந்தண்டுள்ள ஒரு பிராணியாகும். இது, வகுப்பு மம்மாலியாவைச் சேர்ந்த Macropodidae எனும் குடும்பத்திலுள்ள தற்போது வாழுகின்ற பெரிய மாசுப்பியல் (Marsupial) ஆகும். கங்காரு என்ற இனங்களில் நான்கு வகையான பிரிவுகளாக the red kangaroos, the eastern grey kangaroos, the western grey kangaroos, & the antelope kangaroos காணப்படுகின்றன. இவை தாவரங்களை உணவாக உண்டு வாழும் பிராணிகளாகும். பிரதானமாக, புல் வகைகள் இவற்றின் உணவாக அமைகின்றன. கூடுதலான நேரங்கள் நீரின்றியும் வாழக்கூடியவை. அவுஸ்திரேலியா மற்றும் அதன் அருகிலுள்ள தீவுகளிலும் இவை காணப்படுகின்றன. கூட்டம்கூட்டமாகவே பெரும்பாலும் திரிந்து வாழ்வதைக் காணலாம். இவற்றுள் வயதில் முதிர்ந்த ஆண் கங்காருக்கள் வெளிப்படையாக தனது கூட்டத்தினை ஆட்சி செலுத்தி வருகின்றன. ஆண்கள் 'jacks' எனவும் பெண்கள் 'jills' எனவும் அழைக்கப்படும்.

### கங்காருவில் காணப்படும் அதிசயமான சிறப்பியல்புகள்:

பெண் கங்காருவில் விசேட இயல்பாக தோல் மடிப்பினால் ஏற்பட்ட பையொன்று காணப்படுகின்றது. மாசுப்பியல் என்ற பதம் லற்றின் மொழியில் 'மாசுப்பியம்' என்பதாகும். இது, இதனது அடிவயிற்றிலுள்ள 'பையினை'க் குறிக்கின்றது. உயிருள்ள நிலையில் பூரண வளர்ச்சியடைந்த கருவானது 'யொயி' 'joey' என அழைக்கப்பட்டு தாயின் பையினுள் இருந்து வளர்ச்சி அடைந்தே வெளிவருகின்றது. இந்நிலையில் இதன் கண் பார்வை தெரியாது, தவழ்ந்த நிலையிலேயே வெளி வருகின்றது. இதனது திடமான கால் நகங்களும் முன்னங்காலும் சேர்ந்து பையினுள் தவளுவதற்கு வழிவகுக்கின்றது. பையானது தோல் மடிப்பினால் ஏற்பட்டிருக்கின்றது. பையானது அநேகமாக மயிர்களின்றி, தனித்துவாரமாக வெளியாகி மடிப்புகளில் பாலூட்டும் பல முலைகளையும் கொண்டு காணப்படும். குட்டியானது முழுமையான வளர்ச்சியினை அடையும் வரை பையினுள்ளே வாழ்கின்றது. பால்முலைகள் குட்டிகளுக்கு வேண்டிய போசணையைக் கொடுக்கின்றது. வெவ்வேறான போசணைகள் பால்சுரப்பு மூலம் குட்டிகளுக்கு வழங்குவதும் ஒருசிறப்பான இயல்பாக இருக்கின்றது. குட்டிகள் பல கிளமைகள் வரை பாலூட்டிய படியே முலைகளில் பற்றியிருப்பதை காணலாம். பையானது உடவின் முன்புறமாக கிடையான கோணத்தில் திறந்திருக்கின்றது. வழமையாக, தாயானது ஒரு குட்டியையே ஈன்டெடுக்கின்றது. குட்டி ஏறக்குறைய எட்டுமாதங்கள் வரை தாயின் பையினுள் வாழ்கின்றது. இது, சுயமாக வாழும் வகையில், பையினுள்ளிருந்து வெளிவந்த பின்னர் திரும்பவும் பையினை நாடுவதில்லை.

### கங்காருவின் வாழ்க்கைமுறை:

கங்காரு, தத்திக்குதித்து இடம்பெயரும் முறையை உபயோகிக்கின்ற, உலகில் வாழுகின்ற பெரிய பிராணியாக இருக்கின்றது. சாதாரணமான தத்திக்குதித்தலின் வேகம் மணித்தியாலம் 20 - 25 கிலோமீற்றராக இருக்கும். வேகமாகவும் தைரியமாகவும் இடப்பெயர்வை நடத்துவது இதனது தேவையைப் பொறுத்து இருக்கின்றது. இதற்கேற்ற முறையில் இயற்கையின் கூர்ப்புவழியும் அனுகூலமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகின்றது.



பகைவர்களிடமிருந்து தப்புவதிலும் பார்க்க தனக்குத் தேவையான உணவு, தண்ணீர் போன்றவற்றை பெறுவதற்காகவே இத்தகைய இயற்கை ஏற்பாட்டினை பெற்றிருக்கின்றது என்று கூறலாம். சிறிய தலை, பெரிய வலிமையான பின்னங்கால்கள், பெரிய பாதங்கள் போன்றவை தொங்கிக் குதிப்பதற்கும், தசைப்பற்றுள்ள வால் சமநிலையினைப் பேணுவதற்கும் ஏற்றமுறையில் அமைந்திருக்கின்றன.

இதனது நீளமான பாதங்கள் சாதாரணமான நடைக்கு விலக்காக அமைகின்றன. பிராணியானது தனது வாலினை உபயோகிப்பதால் இதனது இரண்டு முன்அவயவங்களும் சேர்ந்து ஒரு மூன்றுகால் தாங்கிபோல காட்சியளிக்கின்றது. பின்னவயவங்களானது சிறிது முன்தூக்கிய வண்ணம் உயர்த்தப்பட்டு இருப்பதால் இதனது இடப்பெயர்வு தவழ்கின்ற நடையினையே தருவதாக இருக்கின்றது. கால்நடைகளான ஆடு, மாடு ஆகியவற்றைப் போன்று இப்பிராணியிலும் அறைகளையுடைய இரைப்பை காணப்படுவது இன்னொரு சிறப்பியல்பாகின்றது. இத்தோடு உட்கொண்ட தாவர உணவுகளை மீளவும் திருப்பி இரை மீட்கும் முறை கங்காருகளுக்கும் இருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகின்றது. திருப்பி வாய்க்குக் கொண்டுவரப்படும் உணவு 'ஆகாரக்கவளம்' எனப்படும். நன்குமென்று முடிந்ததும் உணவு மீண்டும் இரைப்பைக்கு முழுமையான சமிபாட்டிற்கு விழுங்கப்படுகின்றது. தரையிலுள்ள புற்களை நன்கு நறுக்காக வெட்டி எடுப்பதற்காக விசேட பற்கள் அமைந்திருக்கின்றன. இதனது வெட்டும் பற்கள் இதற்கு உதவுகின்றன.

- செல்லையா சந்திரசேகரி -

கணவன் மனைவியாக சேர்ந்திருக்கும் சகவாசிகளிடையே கலவியல் சேர்க்கை ஆரம்பமாகின்றது. ஆயத்தமான நிலையில் பெண்ணானது சமிக்கையை வெளியிட ஆணானது தனது நாட்டத்தினை ஆரம்பிக்கின்றது. பெண்ணானது அவ்விடத்தை விட்டு ஓடாத நிலையில் இருப்பின், ஆணானது காதல் லீலைகளை வெளிப்படுத்தி கலவியலில் ஈடுபடுகின்றது.

கங்காரு, அவுஸ்திரேலியாவின் உத்தியோகபூர்வமற்ற சின்னமாக கருதப்படுகின்றது. இதோடு, போர் வீரர்களின் மேற்சட்டையின் ஒரு சின்னமாகவும் காட்டப்பட்டிருக்கின்றது.


அண்மையில், வெளியான ஓர் ஆராய்ச்சியின் தொகுப்பொன்று 'The Washington Post' செய்தியில் கிடைத்ததை, இவ்விடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். காலநிலை மாற்றம் என்பது எல்லோரது கவனத்தையும் ஈர்க்கின்றவேளை, நிலப்பரப்பில் வெளியாகும் கழிவுகள், அழுக்கு வாயுக்கள், மாசுகலந்த யாவும் அசுத்தமாகக் கருதப்படுகின்றன. இவற்றை எப்படி அகற்றலாம் என்ற சிந்தனை உலகம் பூராகவும் இருப்பது கவனத்துக்குரிய தொன்றாகின்றது. கங்காருக்கள் தமது இரைப்பையிலுள்ள வாயு உபத்திரத்தைப்பற்றி கவலைப்படுவதில்லை. வழமையாக சிறிய அளவிலேயே மீத்தேன் வாயு வெளியே அகற்றப்படுகின்றது. இதனால் சிறிய அளவில் வெளியே வாயு அகற்றப்படுவதால் கங்காருக்கள் பூகோளத்தின் காலநிலையினை ஓரளவில் கட்டுப்படுத்துவதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். விஞ்ஞானிகளின் கருத்தின்படி குடலிலுள்ள சில நுண்கிருமிகள் இக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துகின்றன என்பது தெரியவருகின்றது. இப்பிராணிகளோடு வேறு கால்நடைகளான ஆடு, மாடு போன்றவற்றையும் வெவ்வேறாக வைத்து ஆராய்வு மேற்கொண்டபோது கங்காருக்களின் வாயு வெளியீட்டின் தாக்கம் குறைவாக இருப்பதென்பதை வெளியிட்டிருக்கின்றனர்.

***உசாத்துணை:***


- *Study Author, Adam Munn of the University of Wollongong*
- *'Kangaroos, Biology of the largest marsupials'- Dawson,Terence*
- *'Everything Always Wanted to Know about Kangaroos'- National Wildlife Federation*




*sekari.s@thaiveedu.com*

# யோகசாலை

*ஒரு வளமான சமுதாயத்தை நோக்கி*

உடல், மனம் மற்றும் ஆத்ம நலம் பேண
ஆசனப்பயிற்சி
மூச்சுப்பயிற்சி
தியானம்

- **சிறுவர்கள் ஆர்வமாக கற்றுக் கொள்ளும் முறையில் அமைந்த யோகா வகுப்புக்கள்**
- **இளையோருக்கான சிறப்பு குறுகிய கால அறிமுகப்பயிற்சி வகுப்புக்கள்**
- **ஆரம்ப மற்றும் ஆழ்நிலை வகுப்புக்கள்**
- **முதியோர் நலம் பேணும் சலுகைக்கட்டண வகுப்புக்கள்**

பதினைந்து வருட பயிற்சி அனுபவம் பெற்று
உலகப் பிரசித்தி பெற்ற சிவானந்தா அமைப்பில்
பயிற்றுவிற்கும் ஆசிரியர்கள்

யோகசாலையை ஒரு யோகசமூக சாலையாக
உருவாக்க நீங்களும் இணையவும்

**தொடர்புகளுக்கு**

Tel: 647 760 8156
Email: yogasalai108@gmail.com
Address: 210 Silver Star Blvd, Unit 850, Scarborough, ON
(Midland Ave/ Finch Ave E)

# மருந்தில்லா மருத்துவங்கள் சில....

- ஷியாமளா நவம் -

நமது சேமநலம் என்பது வெறும் உடல் ரீதியான நோயற்ற நிலை மட்டுமல்ல. உடல், மனம், சமூக ஊடாட்டச் செயற்பாடு என்பவற்றில், ஆயுள் முழுவதும் சமநிலை எய்தி வாழ்வதே முழுமையான சேமநலமாகும். நோய்களும் மருந்துகளும் அற்றதொரு நிலையில் நாம் வாழ விரும்பி, அவற்றிற்கான பல வழிமுறைகளையும் கண்டறிந்து, அவற்றைப் பின்பற்றி நலமோடு வாழ்வதற்கான ஒரு அறிமுகமாகவும், இயற்கை எம்மைப் படைக்கையில் அள்ளித்தந்துள்ள பல மூலவளங்கள், பழக்க வழக்கங்களின் வழிகாட்டிப் பலகையாகவும் இக்கட்டுரை அமையவிழைகின்றது. இவற்றின்வழி பயணப்பட்டுப் பயனடைவது எங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. கடல் போன்று பரந்து விரிந்து கிடக்கும் இவ்விடயங்களின் அடி ஆழத்திற்குச் சென்று, நலம் என்ற முத்தைப் பெற நாம் ஒவ்வொருவரும் ஆர்வப்பட வேண்டும். இயற்கை அன்னைக்கும், இயற்கை தந்த நமது உடலுறுப்புக்களுக்கும் நாம் நன்றியுடன் இருக்க வேண்டும்.

அளவுக்கதிகமாகவும் சரிவிகிதாசாரமின்றியும் உணவை உண்ணல் நோய்க்கான காரணிகளில் முக்கியமான ஒன்றாகும். இதனால் நாம் உடல்பருமன், நீரிழிவு, கொலஸ்ரோல், உயர் இரத்த அழுத்தம் போன்ற பல கொடிய நோய்களுக்கு ஆளாக நேரிடுகின்றது. உதாரணமாக, பின்வரும் சில மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம், ஒரே அளவான சிற்றுண்டிகளில் சுமார் ஆயிரம் கலோரிகளை எப்படிக் குறைக்கலாம் எனப்பார்ப்போம்.

ஒருவருக்கு நாளொன்றுக்குத் தேவைப்படும் கலோரிகளின் அளவு சுமார் 2000 கலோரிகள் ஆகும். இது வயது, உடல் நிலை, செய்யும் வேலைகளின் தன்மை என்பவற்றிற்கேற்ப மாறுபடும். 1 அவுன்ஸ் செட்டார் (Cheddar) பாற்கட்டியும், 3 கிறக்ர்ஸ்க்கும் (Crackers) பதிலாக, மூலிகைகள் சேர்த்த ஆட்டுப்பால் சீஸ்சுடன் கிறிஸ்னி பாண் துண்டுகள் 3, ½ கப் (125 மிலீ) சிறிய கரட், 1 தே.க. றாஞ்ச் (Ranch dip) களிக்குப் பதில் ½ கப் தட்டை பீன்ஸ்ம், 1 மே.க. (15 மிலி) சிவப்புக் குடைமிளகாய் ஹம்மஸ்ஸும் (கடலை, எள்ளு போன்றவை அரைத்த பசை) பொரித்த கோழி ப்றெஸ்றுக்குப் (breast) பதில் பாண்தூளும் பாபிகியு சோஸ்சும் சேர்த்து அவனில் வைத்த 3 தட்டையான கோழித் துண்டுகள் (strips); ½ கப் க்ளாஸிக் கோல்ஸ்லோ (classic coleslaw) எனப்படும் கோவாவிற்குப் பதிலாக, ½ கப் சிவப்பு மற்றும் பச்சைநிற கோவா, கரட் என்பவற்றை சிறிது எண்ணெய், வினாகிரி சேர்த்தும் 1 கப் (250 மிலீ) லெமனேற்றுக்குப் (lemonade) பதிலாக ஸ்பார்க்லிங் தண்ணீருடனான மாதுளைச்சாறு ½ கப் க்ளாசிக் மக்கறோனி, சலாட்டுக்குப் பதிலாக அதேயளவு பென்னி பாஸ்ரா (penne pasta) சலாட்டை ஒலிவ், பசில் கீரை, சிறு செரி தக்காளி, ஃபெற்றா சீஸ் (feta cheese), எண்ணெய் குறைந்த (light) ஒரு ட்றெஸ்ஸிங் சேர்த்தும் 1 அவுண்ஸ் உருளைக்கிழங்கு சீவல் பொரியலுக்குப் (chips) பதிலாக அதேயளவு (30 கி) கொழுப்பற்ற தட்டை றொட்டிப்பாண் துண்டுகள் 1 ப்றௌனி, 1 துண்டு வோட்டர் மெலனுக்குப் பதிலாக, 1 கப் மாம்பழம், ஸ்றொபெர்றி மற்றும் அன்னாசித் துண்டுகளை தடியில் குற்றியதாகவும் நாம் எடுக்கலாம். கலோரிகளை (மாச்சத்து, எண்ணெய், சீனி) குறைத்து, சத்துக்களைக் கூட்டும் ஒரு சிறந்த ஆலோசனையாகும். 8 ½ மணி நேரத்திற்குப் பதிலாக, 5½ மணி நேரம் உறங்குபவர்கள் சிற்றுண்டிகளின் கலோரியை 25 சதவீதத்தால் அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வாகனத்தின் திறமையான தொழிற்பாட்டுக்குப் பழுதற்ற பல பாகங்களும் அவற்றிற்கான திரவங்கள், எண்ணெய்கள், காற்று போன்றனவும் அவற்றின் வகையும் அளவும் பராமரிப்பும் அவசியம் என்பது நாமறிந்ததே. எமது உடலும் மனமும் சீராக இயங்க பல உயிர்ச்சத்துக்களும் கனிமங்களும் தினசரி ஒரு குறிப்பிட்டளவில் (RDA / RDI - Recommended Dietary Allowance / Intake) வழங்கப்படவேண்டும். இவை ஒவ்வொன்றுக்கும் உரிய தொழிற்பாடுகள், தினசரி உட்கொள்ளல் அளவுகள், அவை பெறப்படக்கூடிய உணவுப் பொருட்கள், அவற்றின் குறைபாட்டால் ஏற்படக்கூடிய நோய்கள் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. உதாரணத்திற்கு, கல்சியம் என்னும் கனிமம் பற்களுக்கும் எலும்புகளுக்கும் உதவும் என்பது பலருக்கும் தெரியும். ஆனாலும் கல்சியம் உடலின் சகல தொழிற்பாடுகளிலும் கைகொடுக்கின்றது என்பதும், 1000 முதல் 1500 மில்லி கிராமளவு தினசரி தேவை என்பதும், அதனை எந்தெந்த உணவுகளின் எந்த அளவுகளில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதும் எல்லோருக்கும் தெரியாதிருக்கலாம். அவைபற்றி நாம் அறிந்து கைகொண்டால் பிற்காலப் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். முதல் 5 வயதிற்குள் அதனைச் சரியாக வழங்கி வைப்பதும் அதனைப் பேணுவதும்தான் 50 வயதில் எம்மை எலும்பு துளையாதல் (Osteoporosis) போன்ற பிரச்சினைகளிலிருந்து பாதுகாக்கின்றது.



எமது சமையல் அறையில் நாம் வைத்திருக்கும் எத்தனையோ இயற்கையின் பரிசுகள் நமக்குப் பேருதவி செய்யக் காத்திருக்கின்றன. வெந்தயத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். வெறுமனே சமையல் சுவையூட்டியாக மட்டுமே அது இருப்பதில்லை. ஒற்றைத் தலைவலி, குடலின் சீரான இயக்கம், மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு, வயிறு, குடலிலுள்ள ஆழற்சிப் புண்கள் (அல்சர்), நெற்றி முகக் குழிகளிலுள்ள சளி (சைனஸ்) போன்றவற்றிற்குக் கூட வெந்தயம் உதவ வல்லது. அதனை நாம் அதற்கான அளவுகளில், முறைகளில் பயன்படுத்தவேண்டும். இதைப் போன்ற எத்தனையோ மருத்துவப் பயன்களுமுள்ள பொருட்கள் எமது சமையல் அறையில் காத்திருக்கின்றன.

தீய எண்ணங்களும், சீரற்ற சுவாசமும், மன அழுத்தமும் (stress) பல நோய்களுக்குக் காரணமாகிவிடுகின்றன. எனவே அவற்றை நாம் அவதானித்து எமக்கு நாமே காவலாக இருந்து ஆழ்ந்த சுவாசம், தியானம், உடல், ஆத்மா பற்றிய புரிந்துணர்வு, எமது ஐம்புலன்கள், எம்மை உருவாக்கியுள்ள ஐம்பூதங்களின் சமநிலை பற்றிய தெளிவு என்பனவற்றைப் பெற வேண்டும். இவற்றிற்கு உதவவெனவே யோகப்பியாசங்களும், பிரணாயாம சுவாசப் பயிற்சிகளும், ஆறுசக்கரங்கள், அவற்றிற்குரிய வானவில் நிறங்கள், இராஜயோக தியானங்களும், கைவிரல் முத்திரைகளும் எம்மிடையே அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவற்றில் நாட்டம் கொண்டு, அடிப்படைகளையாவது தெரிந்து கொண்டு, நாம் அவற்றை நாளாந்தம் பயிற்சி செய்து, பல நோய்களைத் தூர வைத்துக் கொள்ளலாம் சுகப்படுத்தியும் கொள்ளலாம்.

உணவுப் பொருட்களின் அமிலத்தன்மை, காரத்தன்மை (acidity, alkalinity) என்பவற்றின் விகிதாசாரத்தை முறையே 20:80 என்னுமளவில் வைத்துக் கொள்வதன் மூலம் நாம் பல நோய்களுக்கு ஆதாரமாயிருக்கும் அமிலத்தன்மையான ஊடகத்தை மாற்றிவிடலாம். உணவில் குளூட்டன் என்னும் புரதம் பல நோய்நிலைகளுக்கான காரணியாக அறியப்பட்டுள்ளது. அதனைத் தவிர்த்துக் குறைப்பதன் மூலம் பல நோய்களுக்கு விடைகொடுத்தனுப்பி விடலாம். இதற்கான பட்டியல்கள் இணையத் தளங்களிலும், நூலகங்களிலும் கிடைக்கும். நீங்கள் இப்போது பின்பற்றும் உணவுகளைப் பட்டியலிட்டுக் கொண்டு பிறகு, அவற்றை மேற்கூறிய காரணிகளுக்கேற்ப மாற்றிவிடுங்கள். ஒரேயொரு முறைதான் நீங்கள் இதைச் செய்ய வேண்டும். பிறகு தவறாது பின்பற்றவும் வேண்டும். அத்துடன் மலச்சிக்கலைத் தீர்த்து விடவும் வேண்டும். அடி வயிற்றில்தான் பல நோய்களும் வேர் கொண்டு, தொந்தி எனும் அறிகுறியாக வெளித்தெரிகிறது. ஒவ்வொருவேளை உணவிலும் ஆறு சுவைகளும் இருப்பதை உறுதி செய்து, இனிப்பினை முதலில் உண்டு, ஆற அமர கால் மடித்து உட்கார்ந்திருந்து, 32 தடவைகளாவது ஒவ்வொரு கவளத்தையும் நன்கு மென்று பற்களால் அரைத்து உண்ணும் பழக்கத்தையும் பழகிக்கொள்வது சமிபாட்டுக்கும் அகத்துறிஞ்சலுக்கும் கழிவகற்றலுக்கும் பெரிதும் உதவும்.

வீடுகள், கட்டடங்கள் எல்லாவற்றிலும் மின் சாரத்தின் விநியோகப் பிரச்சினைகளைத் தெரிவிக்க ஒரு ஸ்விட்ச்/ஃபியுஸ் பலகை உண்டல்லவா? அதேபோல் உள்ளுறுப்புகளுடன் தொடர்புபட்ட புள்ளிகள் எமது உள்ளங்கை, பாதங்கள், காது மடல்கள், மற்றும் உடலின் பல பாகங்களிலும் உள்ளன. அவற்றை ஊசிகள் மூலம் தூண்டும் வைத்திய முறையே அக்யூபங்சர் ஆகும். ஆனாலும் நாமே நமக்கு வைத்தியம் செய்து கொள்ள மிகவும் பாதுகாப்பான சிகிச்சை முறையாக விரல் நுனிகளால் இவ்வாறான புள்ளிகளில் அக்கியூ பிரெஷர் அழுத்தமளித்துக் கொள்வது நல்லது. தலைவலி, தைரொயிட், மலச்சிக்கல், குறட்டை, சிறுநீரகம், சுவாசப்பைகள் போன்ற உள்ளுறுப்புகளைச் சீராக்கல் அவற்றின் நோய் நிலைகளைக் கண்டறிதல் என்பன இதன் பலாபலன்கள் எனப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். கை விரல் நுணிகளைப் பலவாறு பிடிப்பதான முத்திரைகள் கூட, உடலுடன் சம்பந்தப்படும் பஞ்சபூதங்களின் சமநிலை மற்றும் சீரான தொழிற்பாட்டினை உருவாக்கி, எம்மை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கும் பல நோய்களுக்கு விடுதலை தரக் காத்திருக்கின்றன.

உதாரணத்திற்கு எமது பெருவிரல் நுனியுடன் ஆட்காட்டிவிரல் நுனியைச் சேர்த்து, ஏனைய மூன்று விரல்களையும் நீட்டும் ஞான அல்லது சின்முத்திரை எனப்படுவது, எமது ஞாபக சக்தியை, புத்திக் கூர்மையை அதிகப்படுத்துகின்றதென்றும், கவனத்தைக் கூட்டி, நித்திரை இன்மையைக் குறைக்கின்றதென்றும், மனநிலைப் பாதிப்புகளையும், கோபம், மனச்சோர்வு, பெரும் மனவெழுச்சிகளையும் கட்டுக்குள் கொண்டு வரும் என்றும் தெரிந்து கொண்டால், நாம் இந்த முத்திரையை அடிக்கடி செய்து கொள்வதில் தயக்கம் காட்டுவோமா?

கர்நாடக சங்கீத ராகங்கள் பல எமது நலத்திற்காகவும் உதவக் காத்திருக்கின்றன. உதாரணத்திற்கு பதற்றம், கவலைக்கு கல்யாணி ராகமும், மூட்டுவலிக்கு சங்கராபரணமும், தலைவலிக்குத் தோடியும், தொண்டைப் பிரச்சினைகளுக்குக் காம்போதியும், இருதய நோய்க்குச் சாருகேசியும், உயர் இரத்தஅழுத்தத்திற்கு ஆனந்த பைரவி மற்றும் கானமூர்த்தி ராகங்களும் உதவுமானால் நாம் அவ்விராகங்களைத் தேடிக் கேட்பதில் தான் என்ன தவறு இருக்க முடியும்?

வடதுருவமும் தென்துருவமும் நாம் வாழும் பூகோளத்தில் உள்ளன. அவற்றின் காந்த ரேகைகளுக்கு மத்தியில்தாம் நாம் வாழ்கின்றோம். அவற்றையே காந்தப் பட்டிகள், குமிழ்கள், கண்ணாடிகள், மற்றும் குற்றிகளாக்கி அவற்றை நாம் உடலியற் பிரச்சினைகளுக்குரிய இடங்களில் கட்டி வைத்துப் பயன்படுத்துவதன் மூலம், இரத்த ஓட்டத்தைச் சீர்செய்து, நாடி-நாள அடைப்புகளை நீக்கி, பல நோய் நிலைமைகளிலிருந்து நிவாரணம் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் காந்தமூட்டப்பட்ட நீரை அருந்துவதன் மூலமும் நன்மைகள் பல பெற்றுக்கொள்ள முடியும். Water Therapy எனும் முறைமையும் பல நன்மைகளைத் தரவல்லது.

உணவகங்களில்கூட நல்ல முறையில் நாம் உணவுத் தெரிவுகளை மேற்கொள்வதற்குதவியாக அங்கு பரிமாறப்படும் உணவுகளிலுள்ள கலோரி, இனிப்பு, உப்பு, நார்ச்சத்து, கொழுப்பு போன்ற விபரங்களை அறிவுறுத்தும் பட்டியல்கள் கிடைக்கின்றன. அவற்றைப் பயபடுத்தி நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்து, அல்லாதனவற்றைத் தவிர்க்கப் பழகவேண்டும்.

எமது உடலினால் உருவாக்கப்படும் சிறுநீர் ஒரு கழிவுப்பொருளாகவும் அசிங்கமான பதார்த்தமாகவும் பார்க்கப்படுகின்றது. ஆனாலும் அதனைப் பரிசோதனை செய்துதான் பல நோய்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒருவருடைய உடலிலுள்ள நோய்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அந்த உபாதைகளுக்கான உயிர் இரசாயன தீர்வுகள், உடலெனும் ஆய்வுகூடத்தில் தயாரிக்கப்பட்டு, காலையில் வெளியேற்றப்படும் சிறுநீரில் வெளியேற்றப்படுகின்றன. இவைபற்றி நம்நாட்டுச் சித்தர்கள் மட்டுமன்றி, பிரான்ஸ், ஜப்பான், தாய்லாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற பல நாடுகளில் சமகாலப் பாவனைகளும், ஆய்வுகளும் இடம்பெற்று வருகின்றன. இது பற்றிய அறிவும் நமக்குப் பயன் தரவல்லது.

எமது வீட்டுச் சூழலில் இலை கொண்ட தாவரங்கள், ஹிமாலய உப்புப் பளிங்கு விளக்கு, நீராவி, தண்ணீர் (Vaporizer, Humidifyer) போன்றவற்றை வைத்துக்கொள்வதன் மூலம் காற்றிலுள்ள ஒட்சிஜன், நீர்த்தன்மை போன்றவற்றை அதிகரிக்கச் செய்து, தூசுகள், நச்சுகள், காபனீரொட்சைட்டையும் குறைத்து, சுவாசக் கோளாறுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இவ்வாறு நாம் பலவழிகளிலும் நோய்களைக் குறைத்து சேமத்தைப் பெருக்கி, நமக்கும் நம்மைச் சார்ந்தோருக்கும் பயன்பட்டு, நலமோடு வாழ வாழ்த்துக்கள்.


***உசாத்துணை:***

*• readersdigest.ca 08/10; 'உங்களுக்கு நீங்களே டாக்டர்,'*
*• டாக்டர் எம்.என். ஷங்கர் மூத்திரத்தின் மகிமை,*
*• இரா. ஆண்டியப்பன் கிச்சன் மருந்து,*
*• சுவாமி சித்தானந்தர் Himalayan Salt Crystal Lamps, www.t-zonehealth.com*


Know the causes and connections of your diseases; Prevention is always better than cure; Fighting to just hide the symptoms wouldn't make you healthy - Unknown



shyamala.navam@thaiveedu.com

# பிள்ளைகளின் உடற்பருமனில் பெற்றோரின் பங்கு

- ஜீவா திசைராஜா -

கனடா புள்ளி விபரங்களின்படி நான்கு பிள்ளைகளில் ஒரு பிள்ளை அளவுக்கதிகமான உடற்பருமனால் பாதிக்கப்படுகின்றது. பிள்ளைகளின் அதிக உடற்பருமனுக்கு பெற்றோரின் வாழ்க்கை முறையை காரணமாகக் கூறும் ஹவார்ட் பல்கலைக்கழகத்துடன் தொடர்புற்ற பொஸ்டன் வைத்தியசாலையின் அதிக உடற்பருமன் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர் டேவிட் லுட்விக், பிள்ளைகளின் வயிற்றின் அளவை சத்திரசிகிச்சை மூலம் சிறிதாக்குவதை விட தற்காலிக வளர்ப்பு வீடுகளில் பிள்ளைகளை அனுமதித்தல் நீதியானது என வாதிடுகின்றார்.

பிள்ளைகள் போஷாக்கு குறைவால் பாதிக்கப்பட்டால் (Malnutrition) அல்லது அளவுக்கதிகமான பருமனாக (Obese) இருக்குமிடத்து, இது குறித்து பெற்றோர் கவனமின்றி இருக்கின்றனர் என வைத்தியரோ அல்லது பொதுமக்களோ முறையிட்டால், சிறுவர் உதவி சமூகம் (Children's Aid Society) தலையிட்டு பெற்றோரின் பொறுப்பிலிருந்து பிள்ளைகளை பிரித்தெடுத்து வளர்ப்பு வீடுகளில் (Foster homes) பிள்ளைகளை ஒப்படைக்கும் நிலை காணப்படுகின்றது. பிள்ளை உணவுண்பதில் பின்னின்றாலோ அல்லது அளவுக்கதிகமாக உண்ணுகிறது என்பதை பெற்றோர் உணர்ந்தாலோ அது குறித்து பிள்ளைகளுக்கான வைத்தியருடன் (Pediatrician) கலந்தாலோசிப்பது அவசியமாகும். உரிய நேரத்தில் கவனமெடுக்கப்படாவிடின் அது பாதகமான பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

## உடல்நிறை பிரச்சினையும் அளவுக்கதிக பருமனும்:

பிள்ளைகள் வெவ்வேறு நேரங்களில் வளரும் விதம் வேறுபடும். எனவே பிள்ளைகள் மேலதிக நிறையைக் கொண்டுள்ளனரா என்பதை கண்டுகொள்வது எப்போதும் இலகுவானதல்ல. பிள்ளையின் உடல் உயரத்தினதும் நிறை அளவினதும் உடல் நிறை குறியீட்டு எண்ணானது (Body Mass index - BMI) ஒரு பிள்ளைக்கு எந்தளவிற்கு உடற் கொழுப்பு உள்ளது என்பதை அளவிடும், இதனைக் கொண்டு நிறை மற்றும் அளவுக்கதிகமான பருமன் (Obesity), பிரச்சனைகளை 2 வயதில் இருந்து கண்காணிக்கலாம் BMI ஒரு சிறந்த குறிகாட்டியாக இருந்த போதிலும், உடற்கொழுப்பினை அளவிடும் ஒரு சிறந்த அளவீடாக இது இருக்காது. சில சந்தர்ப்பங்களில் இது தவறாக வழிநடத்துவதாகவும் இருக்கும். உதாரணமாக பிள்ளைகள் பருவமடையும் காலத்தில் வேகமான வளர்ச்சியைக் கொண்டிருப்பதனால் BMI ஐக் கொண்டு பிள்ளை மேலதிக நிறையைக் கொண்டுள்ளது எனக் கூறமுடியாது.

உங்கள் பிள்ளை வயதுக்கேற்ற BMI ஐ கொண்டிருந்தால் பிள்ளையின் மருத்துவர் மேலதிக மதிப்பீடுகளை மேற்கொண்டு மேலதிகமான கொழுப்பு ஒரு பிரச்சனையா என்பதை நிர்ணயிக்க வேண்டும். இந்த மதிப்பீடுகள், தோல் மடிப்புகளின் (Skinfold) அளவீட்டுடன் உணவு, உடலியல் செயல்பாடு, குடும்ப வரலாறு மற்றும் ஏனைய பொருத்தமான ஆரோக்கிய அளவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனைவிட பிள்ளையின் மேலதிக உடற்பருமனுடன் (Obesity) தொடர்புடைய மருத்துவ நிலமைகளையும் கண்டறிந்து தீர்மானிக்க வேண்டியவராக வைத்தியர் இருப்பார்.

பிள்ளைகளின் உடற்பருமன் பிரச்சனைக்கான காரணத்தை விளங்கிக் கொள்ளுதல் இந்த



பிரச்சனையைத் தீர்ப்பதில் ஓர் முக்கிய காரணியாகும். அநேகமான பிள்ளைப்பருவ மேலதிக நிறைக்கு அதிக அளவில் உண்ணுவதும் உடற்பயிற்சி குறைவாக இருப்பதுவும் காரணமாகும். பிள்ளைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் விருத்திக்கும் போதுமான உணவு தேவையாகும். ஆனால் நாள் முழுவதும் அவர்கள் எரிக்கக்கூடிய கலோரிக்கு மேலதிகமாக உணவு உட்கொள்ளும் போது, இதன் விளைவாக உடல் நிறை அதிகரிக்கும். இவ்வாறு கலோரி உள்ளெடுப்பிற்கும் கலோரி வெளியேறுவதற்கும் இடையில் சமநிலை இல்லாமல் இருப்பதற்கு அநேக காரணிகள் காரணமாகும்.

- சமைப்பதற்கு ஓய்வு நேரம் கிடைக்காத குடும்பங்கள் வீட்டில் சமைப்பது குறைவாகவும் வெளியில் சென்று சாப்பிடுவது அதிகமாகவும் இருத்தல்.
- மலிவான, அதிக கலோரி கொண்ட உடனடி உணவுகள், போஷாக்கற்ற உணவுகள் (Fast food, Junk food) கிடைக்கக் கூடியதாக இருத்தல்
- பிள்ளைகள் உட்கொள்ளும் இனிப்பூட்டப்பட்ட பானங்கள், மற்றும் உணவுப் பொருட்களில் அதிகளவிலான சீனி சேர்த்திருத்தல்
- பிள்ளைகள் வெளியே விளையாடுவதில் குறைந்த நேரம் செலவிடுவதும் அதிக நேரத்தை தொலைக்காட்சி பார்த்தல், வீடியோ விளையாட்டுக்கள் விளையாடுவதிலும் கணனிக்கு முன்னர் அமர்ந்திருத்தலிலும் செலவிடுதல்.
- அநேக பாடசாலைகளில் உடலியல் கல்வித் திட்டங்கள் குறைக்கப்படுதல்.

பிள்ளைகளின் மேலதிக பருமனுக்காக உணவுக் கட்டுப்பாடு போடமுன்பாக வைத்தியருடன் ஆலோசிக்க வேண்டும்.

பிள்ளையின் அதிக பருமனை வெறுமனே குழந்தைக் கொழுப்பு என கூறி இப் பிள்ளைகள் அந்த நிறையை சீக்கிரம் இழந்துவிடுவர் எனக் கூறி காலதாமதம் செய்வது கூடாது. பிள்ளைப்பருவ அதிக நிறை வளர்ந்தோராகும் போதும் அதிக உடல்நிறைக்கு இட்டுச் செல்லும் எனக் கூறமுடியாது. ஆனால் அபாயங்களை இது படிப்படியாக அதிகரித்துச் செல்கிறது. முன்பள்ளிப்பருவம் அல்லது ஆரம்பப் பாடசாலையில் அதிக நிறையைக் கொண்டிருக்கும் அதிகளவிலான பிள்ளைகள் வளரிளம் பருவத்தை அடையும்போதும் அதிக பருமனுடன் இருப்பர் அதிகமான பிள்ளைகள் இந்தப் பிரச்சனையில் இருந்து விடுபடுவதில்லை.

பிள்ளைகளின் நிறைப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமாயின் முழுக்குடும்பமும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஈடுபட வேண்டும். ஆரோக்கிய பழக்கங்கள் வீட்டிலேயே ஆரம்பிக்கின்றது. பிள்ளைப்பருவ அதிக நிறை பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு முழுக் குடும்பமும் ஆரோக்கிய பாதையில் செல்ல வேண்டியது அவசியமாகும். சிறந்த உணவுத் தெரிவுகள் மற்றும் மிகவும் சுறுசுறுப்பாக இருத்தல் போன்றவற்றில் முழுக் குடும்பமும் ஈடுபடுவதன் மூலம் நிறைகூடிய பிள்ளை நீடித்த, நிலைத்து நிற்கும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும்.

## உதாரணமாக இருத்தல்:

பிள்ளையில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய மிகவும் சிறப்பான வழி உங்கள் ஆரோக்கிய உதாரணத்தின் மூலம் நீங்கள் ஓர் வழிகாட்டியாக இருத்தலாகும். நீங்கள் மரக்கறிகளை உட்கொள்தல், சுறுசுறுப்பாக இயங்குதல். உங்கள் தொலைக்காட்சி நேரத்தைக் கட்டுப்படுத்துதல், என்பன அவர்கள் உங்களை முன்மாதிரியாகக் கொண்டு இயங்குவதற்கான சிறந்த சந்தர்ப்பங்களாக அமையும். இந்த வழக்கங்கள் நீங்கள் ஓர் ஆரோக்கியமான நிறையைப் பேணுவதற்கும் உங்களுக்கு உதவும். நீங்கள் எத்தகைய ஆரோக்கியமான உணவினை உண்ணுகிறீர்கள் என்பதை பிள்ளைகளுக்கு தெரி

தொடர்தல் 28ம் பக்கம்




BUYING - SELLING - LEASE
RE/MAX®
Community Realty Inc.
Brokerage*
Proven Results
For SALE
Highway 7 & 9th Lane
For SALE
Markham & Steeles
For SALE
Scarborough
For SALE
Scarborough
SOLD OVER ASKINGOLD
Morningside & Sheppard
SOLD
Martingrove - Finch
For SALE
Westney & Delaney
When you list with us
receive these GUARANTEES
FREE Market Evaluation
FREE Virtual Tour & Photo by Professional Photographers
FREE Newspapers and Social Media Marketing
FREE Home staging Programmers
FREE Advertisement Until Sold
#1
RE/MAX
Kannan Panchalingam
Sales Representative
Direct 647 928 8889
1265 Morningside Ave
Suite 302 Toronto ON M1B 3V9
Business 416 287 2222 Fax 416 282 4488
www.kannanhomes.com


COMING SOON...
Markham, ON
Bur Oak / McCowan
5 Bedrooms
ALL of your
Mortgage & Real Estate Needs
Free Market Evaluation.
Mortgage Arrangements.
Custom Made Homes.
Happy
Holidays!
HOMELIFE
MORTGAGE ALLIANCE
LOKAN SUNDARAM AMP
Mortgage / Real Estate Broker
416-450-3984
www.lokanmortgage.com

# பிள்ளைகளின்...

26ம் பக்கத் தொடர்ச்சி...

யப்படுத்துங்கள். உணவு சமைக்கும் போதும் எத்தகைய ஆரோக்கியமான உணவைத் தயாரிக்கிறீர்கள் என்பதை பிள்ளை அறியச் செய்யுங்கள். சமையலறையில் பிள்ளையின் வயதிற்கேற்ற வேலையைக் கொடுங்கள்.

நீங்கள் ஒவ்வொருநாளும் உடற்பயிற்சி செய்வதை பிள்ளை அவதானிக்கும்படி செய்வதுடன் பிள்ளையையும் உங்களுடன் இணைந்து கொள்ளும்படி அழையுங்கள்.

உங்கள் ஓய்வுநேரத்தை தொலைக்காட்சிப் பெட்டி அல்லது கணனியின் முன் அமர்ந்து செலவிடுவதைத் தவிருங்கள்.

நீங்கள் பொதுப்போக்குவரத்தில் பிரயாணம் செய்யும்போது, உரிய பஸ் நிறுத்தத்திற்கு முன்னரான நிறுத்தத்தில் இறங்கி நடந்து செல்லுங்கள். உங்கள் பிள்ளைகள் அதனை அவதானிக்கும்படி செய்யுங்கள்.

பிள்ளைகளின் உணவு நேரங்களை ஒழுங்கமையுங்கள். காலை உணவை உண்ணும் பிள்ளைகளின் நிறை அளவிற்கு மீறி அதிகரிப்பதில்லை. ஆரோக்கியமான உணவுகளான சீனி குறைவான முழுத்தானியங்கள் (Cereal), ஓட்ஸ், கொழுப்பு குறைந்த பால், நார்ச்சத்துள்ள பழங்களை காலை உணவாக பிள்ளைகளுக்கு கொடுங்கள். சீனி அதிகமான தானியங்கள், எண்ணெயில் பொரித்த உணவுகள் (Fries), காபோவைதரேற்று அதிகமான கனலடுப்பில் பதப்படுத்தப்பட்ட (Baked) உணவுகளைத் தவிர்க்கவும்.

பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு கொழுப்பு அவசியமாகும். ஆனால் இந்த கொழுப்பானது, மீன், விதைகள், தாவர எண்ணெயிலிருந்து கிடைக்கும் நிறைவுறா பலபடிக கொழுப்பு அமிலங்கள் (Polyunsaturated fatty acids), ஒற்றை அபூரிதக் கொழுப்பு அமிலங்கள் (mono unsaturated fatty acid) போன்றவற்றிலிருந்து பெறப்பட வேண்டும்.

உணவில் பல்வேறு நிற மரக்கறிகளையும் பழங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். சிவப்பு (பீற்றூட், தக்காளி), செம்மஞ்சள் (கரட், பூசணி), மஞ்சள் (உருளைக்கிழங்கு, வாழைப்பழம்), பச்சை (இலைவகைகள், புரொக்கொலி, முருங்கை, வாழைக்காய்) போன்ற பலநிற உணவுகளை உண்ணக் கொடுங்கள்.

இரவுநேர உணவாக அதிகமாக மரக்கறிகளைக் கொடுங்கள். இரவு உணவின் பின்னர் ஐஸ்கிறீம் அல்லது இனிப்பு வகையைக் கொடுக்காது பழத்துண்டுகளை உண்ணக் கொடுங்கள்.

இரவு உணவிற்குப் பின்னர் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் அமராது வெளியே உலாவுதல் ஒரு சிறந்த உடற்பயிற்சியாக அமையும்.

### சிற்றுண்டிகள் மற்றும் இனிப்புப் பண்டங்களைக் குறித்து விழிப்பாயிருங்கள்:

- உங்கள் பிள்ளை தனது பிரதான உணவு, மற்றும் சிற்றுண்டிகளை உண்ணும் இடம் உங்கள் வீடாகும். எனவே உங்கள் குசினியில் ஆரோக்கியமான உணவுகள் போதுமானதாக இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- இனிப்புப் பொருட்களை முற்றிலுமாக தடை செய்யாதிருங்கள். அளவுக்கதிகமான கட்டுப்பாடு விதிக்கும்போது சந்தர்ப்பம் கிடைக்கும்போது அளவுக்கு மீறி பிள்ளைகள் அவற்றை உட்கொள்ள முயற்சிப்பார்கள்.
- பழரசம் மற்றும் மென்பானங்கள் அளவுக்கதிகமான சீனியைக் கொண்டிருப்பதால் வெற்றுக் கலோரிகள் உங்கள் பிள்ளையின் உடலுக்கு எந்த நன்மையையும் செய்யப் போவதில்லை. பழரசங்களுக்குப் பதிலாக பழங்களை உட்கொள்ள ஊக்குவியுங்கள். சோடா போன்ற பானங்களுக்குப் பதிலாக தண்ணீரில் எலுமிச்சை பழரசம் போன்றவற்றை கலந்து கொடுத்தல் ஆரோக்கியமாகும்.
- சிரப் (Syrup), சோஸ் (Sauce), ஜெலி (Jelly) போன்றவற்றை வாங்கும்போது சீனி குறைவானதாக பார்த்து வாங்குங்கள்.
- சிற்றுண்டி பிள்ளைக்கு கொடுப்பதாயின் அதன் அளவு சிறிதாக இருக்கும்படியாக பார்த்துக் கொள்ளுங்கள்.

### உணவு உண்ணும் அளவைக் கண்காணியுங்கள்:

- உணவு உண்ணும் அளவை கைமுஷ்டியின் அளவிற்குக் குறையுங்கள்.
- உணவுப் பொருட்களின் கலோரியின் அளவு பொதியில் எந்த அளவாக குறிக்கப்பட்டிருக்கின்றது என்பதை கவனியுங்கள்.
- சிறிய பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள் சிறிய பாத்திரங்களை அல்லது உணவுத் தட்டுக்களை பயன்படுத்தும்போது அதில் இடப்பட்ட உணவின் அளவு அதிகமாக தோன்றுவதால் குறைவாக உண்ணுவீர்கள்.
- உணவு மேசையில் உணவுகளை பரப்பி வைக்காமல், சமையலறையிலிருந்து அளவாக எடுத்து வந்து மேசையில் அமர்ந்து உண்ணுங்கள். இவ்வாறு உண்ணும்போது அளவுக்கதிகமாக உண்ணுவதைத் தவிர்க்கலாம்.
- பெரிய பொதிகளில் இருக்கும் உணவுகளை சிறிய கொள்கலன்களில் போடுங்கள். உணவுப் பொதிகள் பெரிதாக இருப்பதற்கேற்ப, அவற்றிலிருப்பவற்றை கைக்கெட்டும்வரை முடிந்தவரை வயிற்றினுள் அனுப்புவதிலேயே கவனம் இருக்கும்.

### உடற்பயிற்சி:

- உடற்பயிற்சிக்காக பிள்ளைகள் உடற்பயிற்சிக்கூடத்திற்குத்தான் செல்ல வேண்டுமென்பதில்லை.
- வீட்டிற்கு வெளியே ஓடி விளையாட முடியாவிடின், வீட்டினுள் முடிந்தவரை இடையூறின்றி ஓடி விளையாட பிள்ளைகளை அனுமதியுங்கள்.
- உங்கள் பிள்ளையுடன் வீட்டிற்கு வெளியே உலாவச் செல்லுதல், வீட்டிற்கு அண்மையிலுள்ள பூங்கா, மற்றும் விளையாட்டு மைதானத்திற்கு செல்லுதல் போன்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
- வீட்டில் சிறிய வேலைகளை செய்வதற்கு பிள்ளைகளை பழக்குங்கள். வீட்டின் தரையைக் கூட்டுதல், ஈரத்துணி கொண்டு துடைத்தல், குப்பைகளை வெளியில் கொண்டு சென்று அகற்றுதல், vacuum செய்தல் போன்ற வேலைகள் அதிக கலோரிகளை இழப்பதற்கு வழி செய்யும்.
- பாடசாலை முடிந்த பின்னர் ஈடுபடக்கூடிய விளையாட்டு நடவடிக்கைகளில் பிள்ளைகளைச் சேர்த்து விடுங்கள்.

### உடல் மெலிந்த பிள்ளைகள்:

அதிகபருமன் பற்றிய கருத்துக்கள் இணையத்தளங்களிலும் செய்திகளிலும் அதிகமாக இருக்கும் அதேவேளை உடல் மெலிவான பிள்ளைகளைப் பற்றிய கவனமும் கருத்துக்களும் குறைவாகவே இருக்கின்றன.

பிள்ளைகள் உடல் மெலிவாக இருப்பதற்கு பல காரணிகள் இருக்கின்றன. அவையாக:

- உங்கள் குடும்பத்தில் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையின் குடும்பத்தில் பரம்பரையாக உடல் மெலிந்தவர்கள் இருக்கும்போது பிள்ளையின் உடல் மெலிவிற்கு மரபணு காரணமாக இருக்கலாம்.
- பிள்ளை நாள்முழுவதும் சுறுசுறுப்பாக இருந்தால் உட்கொள்ளும் கலோரிகளை விட அதிக கலோரிகளை எரிக்கின்றது எனக் கொள்ளலாம்.
- பிள்ளை மனஅழுத்தத்திற்கு உட்பட்டிருக்கும்போது அல்லது அதிக கவலையுடன் இருக்கும்போது உணவில் விருப்பு குறையலாம். இது பற்றி பிள்ளையின் வைத்தியருடன் கலந்தாலோசித்து சாத்தியமான காரணிகளைக் கண்டறியலாம்.
- பிள்ளை தனக்கு விருப்பமான உணவுகளை மட்டுமே தெரிவு செய்து உண்ணும் பிள்ளையாக இருக்கலாம். பிள்ளைக்கு விருப்பமான உணவுகளை தயாரித்துக் கொடுப்பது நல்லது. ஆனால் சில சமயம் இது ஒரு நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம்.
- சாதாரண வயிற்றோட்டம், குடல் எரிச்சல் நோய் (Irritable bowel Syndrome), சிறுகுடல் அழற்சி நோய் (Crohn's disease) ஆகவும் இருக்கலாம். இவற்றை அலட்சியப்படுத்தாது மருத்துவ உதவியை நாடுமிடத்து ஏற்றகாலத்தில் பிள்ளை உபாதையிலிருந்து நிவாரணம் பெற முடியும்.
- பிள்ளைக்கு உணவு ஒவ்வாமை அல்லது குறிப்பிட்ட உணவுகளை உட்கொள்ளும்போது வயிற்றில் வலி ஏற்படுமாயின் பிள்ளை அவ்வுணவுகளை தவிர்க்க முற்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் பிள்ளையை கட்டாயப்படுத்தியோ, பயமுறுத்தியோ சாப்பிட வைக்காமல் வைத்தியரிடம் அழைத்துச் செல்லுங்கள்.
- அளவுக்கதிகமான நார்ச்சத்துள்ள உணவுகள், சமைக்கப்படாத சலாதுகள் போன்றன பிள்ளையின் வயிற்றுப் பொருமலுக்கு காரணமாயிருந்தால் பிள்ளை அவற்றை சாப்பிட மறுக்கும்.
- சில சமயம் தெரிந்தோ தெரியாமலோ பிள்ளைக்கு போஷாக்கான ஆகாரம் கிடைப்பதற்கு நீங்கள் தடையாக இருக்கலாம். உதாரணமாக, பிள்ளையின் தாயார் தனது உடல் நிறையைக் குறைப்பதற்காக கொழுப்புப் பொருட்களைத் தவிர்க்கலாம். ஆடை நீக்கிய பாலை உட்கொண்டு காபோவைதரேற்றுக்களைத் தவிர்க்கலாம். ஆனால் வளரும் பிள்ளைக்கு ஆரோக்கியமான கொழுப்பு உணவுகள் கிடைப்பது அவசியமாகும். பிள்ளையின் உணவில் கொழுப்பு இல்லாவிட்டால், வைட்டமின் ஏ மற்றும் டி ஆகியன உடலினுள் உள்ளெடுக்கப்படமாட்டா.

பெற்றோர் தமது பிள்ளைகளின் உடல் நலனைக் குறித்துக் கரிசனை கொள்ளாத விடத்து அது சிறுவர் துஷ்பிரயோகமாகவே கருதப்படும். எனவே பிள்ளை ஆரோக்கியமான நிறையை கொண்டிருப்பதற்கு பெற்றோர் தம்மாலான கவனத்தினை செலுத்துதல் அவசியமாகும்.


**உசாத்துணை:**

- http://www.webmd.com/parenting/news/20130909/for-obese-kids-weight-loss-can-sometimes-lead-to-eating-disorders
- http://www.parenting.com/health-guide/childhood-obesity/causes
- http://www.helpguide.org/articles/diet-weight-loss/weight-problems-and-obesity-in-children.htm
- http://blog.zisboombah.com/2012/04/03/skinny-kids-12-possible-causes/
- http://www.theglobeandmail.com/life/health-and-fitness/when-a-childs-obesity-is-life-threatening-we-should-intervene/article625938/
- http://www.weightymatters.ca/2011/07/can-childhood-obesity-warrant-child.html
- http://www.thestar.com/life/health_wellness/2011/07/14/should_parents_lose_custody_of_severely_obese_children.html




jeevathisairajah@thaiveedu.com


**Tutoring**

Grade 3, 6, 9 EQAO பரீட்சைகளுக்கும், Grade 10 & 11 Math & Grade 10 Literacy test இற்கும் மாணவர்களைத் தயார்படுத்த

அஞ்ஜலீன் திசைராஜா

B.A (Hons), M.Sc, Ph.D

Kennedy & Progress

647 291 1357





# Final Expense Insurance

# இறுதிச் செலவுகளுக்கான காப்புறுதி

## No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

• 18 முதல் 74 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்கள், சுப்பர் விசாவில் உள்ளவர்களும் பெறலாம்.
• காப்புறுதி ஆரம்பித்த முதல் இரு வருடங்களுக்குள் இறந்தால், கட்டிய பணம் முழுவதும் கிடைக்கும்.
• இரண்டு வருடங்களின் பின் இறந்தால், காப்புறுதி செய்த தொகை கிடைக்கும்.
• விபத்துக்களில் இறந்தால், இரண்டு மடங்கு காப்புறுதித் தொகை கிடைக்கும்.

உங்கள் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் உடல் நிலைக்கும் ஏற்ப சரியான காப்புறுதியைப் பெறுவதற்கும், உங்கள் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான சேமிப்பு, வரிக் கழிவு பெற்ற சேமிப்பு, ஓய்வூதியச் சேமிப்பு போன்ற முதலீடுகளுக்குமான ஆலோசனைகளை என்னிடம் பெறுங்கள்!



**Thana Manickavasagar** Broker

Cell:416.728.5772 Office:416.519.3896

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
• Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4






# Dedicated Real Estate Agent with 20 years of experience!

*Buying, Selling, Investing, Leasing Homes*




## 112 TRUDELLE ST


- McCowan & Eglinton
- 2 Storey Condo Townhouse
- 3+1 Bedrooms & 2 Washrooms
- $469,000
- TTC, Library, Shopping - Minutes Away




9th Line & 14th Ave
*2 Storey Detached*
*3 Bedroom & 3 Washrooms*




10th Line & Main
*2 Storey Detached*
*4 Bedrooms & 4 Washrooms*




Warden & Steeles
*2-Storey Link*
*3+1 Bedroom & 4 Washrooms*

HOMELIFE HIGHER STANDARDS

HOMELIFE LANDMARK Brokerage.
7240 Woodbine Ave, Suite 103
Markham, ON L3R 1A4
Bus: 905 305 1600
nanadarajah@trebnet.com

NADA G. NADARAJAH B.V.Sc
*Real Estate Sales Representative*
*Call me 416 - 616- 8751*

# வெப்பத்தை மீட்கும் காற்றோட்ட ஜன்னல் பராமரிப்பு

# Maintaining your heat recovery ventilator (HRV)

### Heat Recovery Ventilator

வெப்பத்தை மீட்கும் காற்றோட்ட ஜன்னல் உங்கள் வீட்டிற்கு சுத்தமான ஆரோக்கியமான, வாழ்வதற்கேற்ற சுற்றுச் சூழலை ஏற்படுத்துகிறது. இதனால் எரிபொருள் செலவும் மிச்சமாகிறது. ஆனால் உங்களுடைய உதவி இல்லாமல் Heat Recovery Ventilator இவை அனைத்தையும் செய்ய முடியாது. உங்கள் HRVஐ மகிழ்விப்பதற்கு சுலபமான சில பணிகளை நீங்கள் மேற்கொண்டாலே போதும்.

### ஒரு மகிழ்ச்சியான HRVக்கு மேற்கொள்ள வேண்டிய சில பணிகள்.

முதலில் HRVஐ நிறுத்திவிடுங்கள் பின்னர் பிளக்கை (plug) எடுத்துவிடுங்கள்.

### காற்றுவடிகட்டிகளை சுத்தப்படுத்துங்கள் அல்லது புதிதாக ஒன்றை மாற்றுங்கள்: (clean or replace air filters)

அழுக்கு அல்லது குப்பைகளால் அடைக்கப்பட்டிருக்கும் வடிகட்டிகள் காற்றோட்ட வசதியில் குறைபாட்டை ஏற்படுத்தும். குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை யாவது உங்கள் வடிகட்டிகளை (filter) சுத்தம் செய்யுங்கள். அனேகமான புதிய HRVகளில் உள்ள வடிகட்டிகளை எளிதாக அகற்ற முடியும். பின்னர் அவைகளை ஒரு vacuum cleanerஆல் நன்றாக சுத்தம் செய்து, சோப் கலந்த நீரால் கழுவி, திரும்பவும் போடவேண்டும். பழைய காற்றோட்ட ஜன்னல்களில் மீண்டும் வேறு வடிகட்டிகளை பொருத்த முடியும். இது வெறும் 5 நிமிட வேலைதான்.

### வெளிப்புறத்திலுள்ள காற்றை உள்வாங்கும் மற்றும் வெளியேற்றும் முகடுகளை சோதனை செய்யுங்கள். (check outdoor intake and exhaust hoods)


உங்கள் HRVயின் வெளிப்புற துவாரங்களை அடைத்துக் கொண்டிருக்கும் இலைகள், காகிதங்கள் மற்றும் வேறு குப்பைகள் ஆகியவற்றை அகற்றிவிடுங்கள். இல்லையென்றால் அதிக அளவு காற்றோட்டம் இருக்காது. அதனால் உங்கள் Heat Recovery Ventilator சரியாக இயங்காது. குளிர்காலத்தின் போது, வெளிப்புறத்திலுள்ள துவாரங்களில் ஏதாவது பனி அல்லது உறை பனிகுவியல் அடைத்துக் கொண்டிருந்தால் அதை அகற்றிவிடுங்கள்.


### குளிரால் உற்பத்தியாகும் சாக்கடையை கண்காணியுங்கள். (inspect and condensate drain)

உங்கள் HRVயின் அடிப்பகுதியிலிருந்து குளிரால் உற்பத்தியாகும் சாக்கடையை கொண்டு வரும் ஏதாவது குழாய் இருக்கிறதா என்பதை சோதனை செய்யுங்கள். ஏதாவது அடைத்துக் கொண்டிருந்தால் குழாயை சுத்தப்படுத்துங்கள்.

### வெப்ப மாற்று மையத்தை சுத்தப்படுத்துங்கள். (clean the exchange core)

வெப்பமாற்று மையத்தை சுத்தப்படுத்துவது சம்பந்தமான Heat Recovery Ventilator தயாரிப்பாளர்களின் புத்தகத்தின் விதிமுறைகளை படியுங்கள். மையத்தை நன்கு துப்புரவு செய்து, சோப் கலந்த நீரினால் நன்றாக கழுவினால் மையத்தின் உள்ளே அடைத்துக் கொண்டிருக்கும் அழுக்குகளை அகற்ற முடியும்.




### கம்பித்தடுப்புகளை சுத்தம் செய்யுங்கள் மற்றும் கால்வாய்களை கண்காணியுங்கள். (clean grilles and inspect the ductwork)

உங்கள் HRVக்கு வரும் மற்றும் HRVயிலிருந்து புறப்படும் குழாய்களை வருடத்திற்கு ஒருமுறை சோதனைசெய்யுங்கள். குழாயின் மூலைகளில் மூடிக்கொண்டிருக்கும் கம்பித் தடுப்புகளை அகற்றுங்கள். நன்கு சோதனையிடுங்கள் பின்னர் குழாய்களுக்குள் துப்பரவு செய்யுங்கள். குழாய் முழுவதிலும் சுத்தம் செய்யவேண்டும் என்றால், ஒரு தொழில் வல்லுனரை கலந்தாலோசியுங்கள்.

### விசிறிகளை பழுதுபாருங்கள். (service the fans)

விசிறியின் தகடுகளில் சேர்ந்துள்ள அழுக்குகளை ஒரு பிரஸ் கொண்டு மென்மையாக அகற்றுங்கள். அநேகமான புதிய HRVகள் எண்ணெய் இடாமலே தொடர்ச்சியாக ஓடும். ஆனால் பழையவைகள் என்றால் எண்ணெய் இடவேண்டி வரும் அதற்கென ஒரு உட்குழி அதில் இருக்கும்.

### வருடாந்திர பழுது பார்த்தலுக்கு ஏற்பாடு செய்யுங்கள். ( arrange for annual servicing)

வருடந்தோறும் உங்கள் HRVஐ பழுதுபார்த்தல் அவசியம். நீங்களே பழுதுபார்க்க முடியவில்லை என்றால் ஒரு தொழில் நுட்பவல்-லுனரின் உதவியை நாடுங்கள். கனடாவின் Heating Refrigerating and Air Conditioning கல்வி நிலையத்தின் சான்றிதழ் பெற்ற மற்றும் உங்கள் Heat Recovery Ventilator தயாரிப்-பாளரிடம் பயிற்சி பெற்ற ஒரு தொழில் நுட்பவல்லுனரை கொண்டு பழுதுபாருங்கள்.

### சமநிலையை சோதனை செய்யுங்கள் - கழிவுப்பொருள்பை சோதனை. (Check your HRV balance - the garbage bag test)

- இலகுப்பிள்ளை சிறிநாதன் -

Heat Recovery Ventilator சமநிலையில் இருப்பது அவசியம். உள்ளேபுகும் சுத்தகாற்றும், வெளியேறும் அசுத்த காற்றும் சமமாக இருக்க வேண்டும். HRVஐ நிறுவும் போது அது சம நிலையில் இருக்கிறதா என்பது உங்களுக்கு தெரியாமல் இருந்தால், கீழ்வரும் செய்முறையை பயன்படுத்தி அதை நீங்கள் தெரிந்து கொள்ளமுடியும்.

இந்த கரடுமுரடான சோதனைக்கு சுமார் 10 நிமிடங்கள் தேவைப்படும் இலைகளைச் சேகரிப்பதற்கு. இலைகளை சேகரிப்பதற்கு சுமார் 1.2 மீ (48 அங்குலம்) நீளமுள்ள ஒரு பெரிய பிளாஸ்டிக் பையை எடுத்துக் கொள் ளுங்கள். உங்கள் கோட் ஹேங்கரின் (Coat Hanger) கம்பியை வளைத்து நிமிர்த்திவையுங்கள். பை திறந்திருக்கும்படி கம்பியை பையின் வாய்பாகத்தில் நுழைத்து வையுங்கள். இப்பொழுது உங்களிடம் கழிவுப் பொருள் பை சோதனை கருவி தயாராகிவிட்டது. உங்கள் HRVயின் வெளியேற்றும் குழாய்கள் அஸ்திவாரத்திலிருந்து எங்கே நீட்டிக் கொண்டிருக்கின்றன என்பதை வெளிப்புறத்திற்கு சென்று கண்காணியுங்கள்.

**படி 1:** பையை அழுக்கி தட்டையாக ஆக்கவும். வெளியேறும் முகட்டில் அதன் வாய் பாகத்தை இறுக்கமாக கட்டி வைக்கவும். முகட்டின் வழியாக வெளியேறும் காற்று பையை ஊதவைக்கும். ஊதுவதற்கான நேரத்தை கணக்கிடுங்கள் பை எட்டுவினாடி கள் அல்லது அதற்கு மேலான நேரத்தில் ஊதிவிட்டது என்றால் படி 2க்கு போங்கள். பை எட்டு வினாடிகளுக்கும் குறைவான நேரத்தில் ஊதிவிட்டது என்றால், HRVயின் வேகத்தை குறையுங்கள். சோதனையை மீண்டும் செய்யுங்கள் பின்னர் படி 2க்கு செல்லுங்கள்.

**படி 1:** HRVயின் காற்றை வெளியேற்றும் முகட்டை சுற்றி இருக்கும் சுவரின் எதிராக இருக்கும் வழியில் பையை பிடித்துக் கொண்டு காற்றை நிரப்புவதற்கு, பையை அங்கும் இங்கும் ஆட்டுங்கள். HRVயின் உள்ளே போகும் காற்று பையை இப்பொழுது சுருங்க வைக்கும். சுருங்குவதற்கான நேரத்தை கணக்கிடுங்கள். உங்கள் Heat Recovery Ventilator சமநிலையில் இருந்தால், HRVயின் உள்ளே போகும் காற்று, HRVஐ விட்டு வெளிவரும் காற்றை சமநிலைப்படுத்தும்.

பை ஊதுவதற்கும் மற்றும் சுருங்குவதற்கும் ஆகும் நேரங்கள் கிட்டத்தட்ட சரியாக இருக்க வேண்டும். உதாரணமாக உங்கள் பை சுருங்குவதைவிட இருமடங்கு வேகமாக ஊதுவது என்றால் உங்கள் Heat Recovery Ventilator சமநிலையில் இல்லை என்று அர்த்தம். இந்த மாதிரியான சமநிலையற்ற தன்மை வடிகட்டிகளினால் ஏற்படவில்லை என்றால், நீங்கள் ஒரு பழுதுநீக்கும் பணியாளரை அழைத்து உங்கள் HRVஐ சரி செய்யவேண்டும். உங்கள் HRVஐ கவனிக்காமல் புறக்கணிக்காதீர்கள் அது நன்றாக இயங்குவதற்கு நீங்கள் செலவிட வேண்டியது சிறிதளவு நேரமே.

உங்கள் Heat Recovery Ventilator பற்றிய மேலும் கூடுதல் விபரங்களுக்கு Natural Resources Canada வெளியிட்டுள்ள Operating and Maintaing your Heat Recovery Ventilator (Heat Recovery Ventilator) என்ற சிறு புத்தகத்தை படியுங்கள்.



srinathan.e@thaiveedu.com

**HELP WANTED**

Danforth & Pharmacy சந்திப்பிற்கு அருகாமையிலுள்ள

Pizza தயாரிக்கும் நிறுவனத்தில் வேலைக்கு ஆட்கள் தேவை.

**416 875 6869**




3 Bedrooms, 3 W Room
Upgraded Oak Staircase
With Iron Picket Rails




3 Bedrooms, 3 W Room
Garage Entry. Master Has 5
Pc En-Suite With W/I Closet




3 Bedrooms, 3 W Room
Gas Fireplace, Oakwood Stairs, Central
Air, R/I Washroom Basement




4 Bedrooms, 2 W Room
Main Floor Laundry Rm
With Direct Access To Garage




4 Bedrooms, 3 W Room
In/Out Side Pot Lights, Modern
Kitchen With Granite Counter Top




3 Bedrooms, 3 W Room
California Lighting,
Ceramic Back-Splash




4 Bedrooms, 3 W Room
Eat-In-Kitchen W/Extended
Oak Cabinets,Backsplash




4 Bedrooms, 4 W Room
Walk In Closet With Soaker
Tub + Shower. New Fenced Lot.




5 Bedrooms, 4 W Room
Walk Out Basement .Located Near
Unifrom School,Ttc, And Parks.




4 Bedrooms, 4 W Room
All Rooms Are Very
Spacious And Bright.





4+1 Bedrooms, 5 W Room
Fully Finished Basement With
Bedroom Living Room.




4+1 Bedrooms, 4 W Room
Main Floor Study And
Refinished Grand Oak Staircase.




4 Bedrooms, 4 W Room
California Shutters On Main
Level, Oak Staircase,




4+3 Bedrooms, 5 W Room
Smooth Ceilings On Main Level,
Pot Lights, Coffered Ceilings,




5 Bedrooms, 4 W Room
Grand Entrance, With Huge
Principal Rooms

KZG 647-200-5833



Sell your home
faster
and more
money

RE/MAX Platinum Club Award

ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

## பனிக்காலத்தில் நீண்டகால மின்சாரத் தடை ஏற்பட்டு

# உங்கள் வதிவிடத்தில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால்...

- மகேன் சிங்கராஜா -

**பனிக்காலத்தில் நீண்டகால மின்சாரத் தடை ஏற்பட்டு உங்கள் வதிவிடத்தில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் என்னவிதமான இடையூறுகளுக்கு முகம் கொடுக்க வேன்டி வரும்.**

கனடாவில் மீண்டும் ஒரு black out வந்தால் நாம் எல்லோரும் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்த போது, அதன் விளைவால் நான் ஆராய்ந்தவற்றை எனது அன்பான 'தாய்வீடு' வாசகர்களுக்கு தெரியப்படுத்து முகமாக இனிய புத்தாண்டு வாழ்த்துகளோடு இதனை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

உறையும் மழை(sleet), பனிப்புயல், உயர் வேக காற்று ஆகிய காரணங்களால் உங்கள் வீட்டுக்கான மின்சக்தி விநியோகம் ஒரு சில மணித்தியாலங்களுக்கு அல்லது ஒரு சில நாட்களுக்கு தடைப்படலாம். மின்சார Baseboards (Electric base boards) அல்லது உலையடுப்பு (Furnace) அல்லது வாயு உலையடுப்பு அல்லது எண்ணை உலையடுப்பு (Oil Furnace) ஆகிய ஏதாவது ஒரு வகையினால் உங்கள் வீடு வெப்பமூட்டப்படுவதற்கும் இந்த சக்தி விநியோகமே காரணம். ஓர் குறிப்பிட்ட நீண்ட காலத்திற்கு மின்விநியோகம் தடைப்பட்டால் வீடு வெப்ப மேற்றப்படுதல் தடைப்படும். இதன் காரணமாக வீட்டில் ஏற்படும் குளிரான நிலைமை காரணமாக வாழ்க்கைத்தரம் பெருமளவு பாதிக்கப்பட்டு சுவர்கள், தரைப்பகுதிகள் அத்துடன் Plumbing என்பனவும் பாதிக்கப் படலாம்.

### ஆயத்தமாக இருங்கள்:

குளிர்க்காலத்தில் மின்சார தடை ஏற்படும் போது, உங்கள் வீட்டை பாதுகாப்பதற்கு சில ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்க தயாராக இருக்க வேண்டும்.

மின்சார விநியோகம் தடைப்படும் நிலை ஏற்பட்டால் அதற்கு தயாராக இருப்பதற்-காக நீங்கள் ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். அந்த திட்டம் உங்கள் வீட்டில் மின்சார Brakers (Electrical Breakrs), வாயு விநியோக வால்வுகள் (Gas valves), நீர் விநியோக வால்வுகள் (Water valves) என்பவை அமைந்துள்ள இடங்களை பற்றிய விபரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்த விபரங்கள் அடங்கிய பத்திரம் எங்கே வைக்கப்பட்டுள்ளது என்பது உங்கள் வீட்டிலுள்ள அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

இவ்வாறான மின்விநியோகம் தடைப்படுவதற்கு முன்பாக நீங்கள் பின்வரும் முற் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது நன்று.

- ஒரு Flash lightம் அதற்கு தேவையான மேலதிகமான Batteryகளையும் கையில் கொண்டு செல்லக்கூடிய AM/FM வானொலி ஒன்றையும் வைத்திருங்கள்.
- உங்கள் வீட்டில் Fusesகளை பயன் படுத்தும் மின்சாரப் பெட்டி அமைக்கப்பட்டிருந்தால், மேலதிக Fusesகளை கை வசம் வைத்திருங்கள்.

உங்களது வீடு வெள்ளத்தினால் பாதிக்கப்படக்கூடிய தன்மையுடையதானால் பின்வரும் ஏதாவது ஒன்றை பொருத்துவது நன்று.

DC Sump pump அதற்கு தேவையான backup battery அல்லது சரியான அளவுடைய Inverter அத்துடன் pumpக்கு தேவையான battery.

மூன்று நாட்களுக்கு போதுமான அவசர தேவைக்கான ஓர் பொதியை (Emergency kit) தயார் செய்ய வேண்டும். அது பின்வரும் பொருட்களை கொண்டதாக இருக்க வேண்டும்.



- ஒருவருக்கு ஒரு நாளுக்கு 4 லீட்டர் குடி நீர் தேவை என்ற அளவிலான நீர்,
- தகரத்தில் அடைத்த உணவு,
- தகரத்தில் அடைக்கப்பட்ட கொள்கலன்களை திறக்கும் கருவி,
- உணவு பரிமாறும் பாத்திரங்கள்.
- ஒவ்வொருவருக்கும் ஒரு Sleeping bag அல்லது போர்வை.
- மருந்து வகைகள், Flashlight, பற்றரியில் இயங்கும் வானொலி, மேலதிக பற்றரிகள், மாற்று உடைகள், முதலுதவி பெட்டி (First Aid kit) வீட்டுக் காப்புறுதி உபகரணங்கள் முதலியன.

இவை அனைத்தையும் ஓர் பெரிய பிரயாணப் பையினுள் அடுக்கி வைக்கவும். அத்துடன் அவசரகால நிலைமைக்கு எவ்வாறு தயார் செய்ய வேண்டும் என்ற தகவல்களைக் கொண்ட இணையத்தள முகவரிகளை பார்வையிடவும்.

உங்கள் வீட்டில் உள்ள நீர் விநியோக வால்வு சரியாக செயற்படுகிறதா என்று உறுதிப்படுத்துவதற்காக இடைக்கிடை அதனை பார்வையிடவும்.

### வீட்டை விட்டு வெளியேறுதல்:

மின்சார விநியோகம் தடைப்பட்டதன் காரணமாக 24 மணித்தியாலங்களுக்கு அதிகமாக நீங்கள் உங்களது வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டால் உங்களது வீடு பாதிப்படையாமல் இருப்பதற்கு நீங்கள் எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

### மின்சார சக்தி (Electricity and Power):

- வீட்டுக்குரிய மின்சார விநியோகத்தை தடைசெய்யவும்.
- நீரை சூடாக்கும் கருவி, உலையடுப்பு (Furnace water pump), Sump pump ஆகியவற்றிற்குரிய மின்சார விநியோகத்தை நிறுத்தவும்.
- உபகரணங்கள் (Appliances) எலக்ரோணிக் கருவிகள், tools என்பவற்றின் இயக்கத்தை நிறுத்தி மின்சார விநியோகம் வழங்கும் சொருகியில் இருந்து வெளியே இழுக்கவும்.
- இயற்கை வாயு அல்லது புறப்பேய்ன் வாயு மூலம் உங்கள் வீடு சூடாக்கப்படுமானால் வாயு வழங்குதலுக்கான வால்வுகளை மூடவும்.
- வீட்டில் உள்ள பெரிய உபகரணங்களின் மின்சார வயர்களை செருகியில் இருந்து கழற்றி விடவும்.
- வெப்பம் கட்டுப்படுத்தும் கருவியின் (Thermostat) அளவீட்டை குறைக்கவும்.
- மெழுகுவர்த்திகள், எண்ணை விளக்குகள் என்பவற்றை பயன்படுத்துவதற்கு பதிலாக ரோர்ச்லைற்றுக்களை உபயோகிக்கவும்.

### நீர்விநியோகம் (Water Supply):

- நீர் விநியோக சேவை ஆரம்பிக்கும் இடத்தில் விநியோக வால்வை மூடவும்.
- வீட்டின் மேல் பகுதியில் ஆரம்பித்து சகல வழிகளையும் திறந்து நீரை வடிய விடவும்.
- கழிவகற்றியை (Toilet) Flush செய்து தாங்கியில் உள்ள நீரை வடியச் செய்யவும்.
- ஆடைகள் கழுவும் இயந்திரத்தின் (Washing Machine) இணைப்பு குழாய்களை (Hoses) கழற்றி நீரை வடியவிடவும்.
- நீங்கள் நீண்டகாலத்திற்கு வீட்டை விட்டு வெளியேற வேண்டி இருந்தால் அதே சமயம் அக்காலப்பகுதியில் உறைதல் ஏற்படுதல் நிச்சயமானால் நீர் தேங்கி நிற்கும் பகுதிகள் (Traps பகுதிகளில்) அதாவது Toilets, Sinks, ஆடைகளை கழுவும் இயந்திரம் Showers என்பவற்றினுள் நச்சுத் தன்மையற்ற உறைநிலை எதிர்ப்பு திரவத்தை (non toxic Antifreeze liquid) ஊற்றவும்.

**குறிப்பு:** அமோனியாவைக் கொண்ட திரவத்தை இவ்வாறான தடுப்பு பகுதிகளுக்குள் ஊற்ற வேண்டாம். ஏனெனில், அது ஆபத்தான விளைவை ஏற்படுத்தும்.

- உங்கள் வீட்டினுள் உள்ள வெப்பநிலை நீண்ட காலத்திற்கு உறை வெப்பநிலைக்கு குறைவாக இருந்தால் வீட்டிற்கான சக்தி வழங்குதலை நிறுத்தி சுடுநீர் தாங்கியில் உள்ள வடிதல் ஏற்படுத்தும் வால்வுடன் (Tank Drain Valve) ஒரு hoses இணைத்து அதனை தரைக்கீழ் வடிகாலுடன் இணைப்பதன் மூலம் தாங்கியினுள் உள்ள சூடான நீரை வெளியேற்றவும்.
- மின்சாரத்தால் இயங்கும் சூடான நீர் தாங்கி இருந்தால் முறிவு (Breaker) பகுதியில் மின் விநியோகத்தை தடை செய்ய வேண்டும்.
- வாயு மூலம் சூடாக்கப்படும் சூடாக்கப் படும் நீர்தாங்கி அமைக்கப்பட்டிருந்தால் வாயு விநியோக வால்வை Off என்ற இடத்திற்கு திருப்ப வேண்டும்.
- வெப்பம் மிகவும் குளிராக இல்லாவிடில் அல்லது நீங்கள் உங்கள் வீட்டில் அடிக்கடி பரிசோதனை நடத்துபவராயின், நீர் வடிதல் ஏற்படுத்தாமலே கொதிநீர் தாங்கி. பாதிப்பு அடையாமல் இருக்கக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் breaker அல்லது Fuse boxல் கொதி நீர் தாங்கிக்கான மின்விநியோகத்தை நிறுத்தவும். அல்லது வாயு வால்வை 'Pilot' என்ற இடத்திற்கு திருப்ப வேண்டும்.
- தரைமட்ட நீரில் இருந்து பாதுகாப்பதற்கு உங்கள் வீட்டில் Sump pump இருந்தால் அது மின்வலு இல்லாமல் செயற்பட மாட்டாது. எனவே இதற்கு மாற்றீடாக சக்தி வழங்கும் மூலத்தை அமைப்பது பற்றி ஆலோசிக்கவும்.

*தொடர்தல் 34ம் பக்கம்*




WE PROVIDE
MORTGAGE SOLUTIONS
FOR EVERYONE!
▸ Purchase
▸ Refinance
▸ Pre Approvals
▸ Self Employed
▸ Debt Consolidation
▸ New Immigrant
▸ Equity Lines of Credit
▸ 1st, 2nd, 3rd Mortgages.
MORTGAGE ALLIANCE
Call Now : 416-505 7333
Visit us at www.lenderhub.ca
LOW RATES STARTS AT
2.79 FOR 5 YEAR FIXED &
2.35 FOR 5 YEAR VARIABLE
Piraba Ratnam
Mortgage Agent / Mortgage Alliance
LIC # M13001215
10 Milner Business Court, Suite 401
Toronto, Ontario, M1B 3C6
We have solutions for everyone!
10 Milner Business Court, Suite 401
Scarborough, ON M1B 3C6


$339,888
Scarborough
Bedrooms: 2+1 Washroom:2
$269,000
Scarborough
Bedrooms: 2+1 Washroom:2
New Condos With VIP Price
www.NewCondoInGta.com
SOLD BY KRISH
Scarborough
3 Bedrooms: Washroom:3
$599,000
Sold
Over Asking
Price
Markham
3 Bedrooms: Washroom:3
$599,000
Sold
Over Asking
Price
Markham
3+2 Bedrooms: Washroom: 4
Krish
Sivapatham
Sales Representative
Direct : 416-895-4457
krishome.ca
Indepently Owned and Operated, REALTOR
I SOLD 74 HOUSES
FROM MAY 2013 TO November 2015
Top 5% Sales Rep in Canada
2010, 2011, 2012 ,2013 & 2014
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Full Time Realtor

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

**Delta Academy Inc.**

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Grade 10 | |
|---|---|
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAT3U |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCB4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| Grade 9 | |
|---|---|
| Vocal | |
| Violin | |
| Veena | AMU10 |
| Piano Keyboard | |
| Dance | ATI101 |
| Miruthangam | AMP10 |
| **Grade 10** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

Classes begins on
February, July, September
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration )

**Contact**

**416.751.2011**

**deltaacademyinc@hotmail.com**

**1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8**

# உங்கள் வதிவிட...

32ம் பக்கத் தொடர்ச்சி...

- உங்களது வீடு Septic system என்ற தொகுதியின் அடிப்படையில் அமைக்கப் பட்டிருந்தால் மேலதிகமான தண்ணீரை பயன்படுத்த வேண்டாம். ஏனெனில் காற்றோட்ட Pump அல்லது உயர்த்தும் Pump செயல்பட மாட்டாது.
- திறந்துள்ள தண்ணீர் குழாய்களில் இருந்து வெப்பம் வெளியேறாத வகையில் சுற்றிக் கட்ட வேண்டும்.
- உங்கள் வீடு வெள்ளத்தினால் பாதிக்கப் படாமல் இருப்பதற்காக தரைக் கீழ் பகுதியில் உள்ள பெறுமதிமிக்க பொருட் களை அங்கிருந்து அகற்றவும்.

## மேலதிகமான ஆலோசனைகள் (More Tips):

மிகவும் நீண்டகாலத்திற்கு நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டுமானால், அடித் தளத்திற்கு அருகே உள்ள மண் உறைவு படுதலை தவிர்ப்பதற்காக நிலக்கீழ் சுவரை சுற்று வைக்கோல் அல்லது வேறும் ஏதாவது வெப்பம் வெளியேறுவதை தடுப்பு பொருட்களை குவித்து வைக்கவும். வெப்பத்தை சேமித்து வைப்பதற்காக நிலத்தின் கீழான பகுதிக்கான கதவை மூடி வைக்கவும்.

உங்கள் வீட்டில் உள்ள Refrigerators, Freezers ஆகிய உபகரணங்களில் உள்ள பொருட்கள் அனைத்தையும் வெளியேற்றவும். முடியுமானால் மேலதிக தேவையற்ற பொருட்கள் எதனையும் சேமித்து வைக்க வேண்டாம். பூஞ்சணம் (Mould) வளர்ச்சி அடைவதைத் தவிர்ப்பதற்காக Freeze கதவுக்கும், Refrigerator கதவுக்கும் இடையில் ஓர் இடைவெளியை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு இடைவெளியை ஏற்படுத்து வதற்கு பயன்படுத்தும் கருவி, ஒரு சிறு குழந்தை அல்லது செல்லப் பிராணி, அகப்படுவதற்கு வழி வகுக்கக் கூடாது என்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

நீங்கள் வீட்டை விட்டு வெளியேறுவது பற்றி முனிசிப்பல் (Municipal) அதிகாரி களுக்கு, பொலிஸ், தீயணைப்பு, மின்சாரத் துறைக்கு அறிவிக்க வேண்டும். உயிர் அல்லது சொத்துகளுக்கு ஆபத்து ஏற்பட் டால் அன்றி 9-1-1 என்ற இலக்கத்தை அழைக்க வேண்டாம்.

உங்கள் வீட்டில் ஓர் செல்ல பிராணி (Pet) இருந்தால் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டால் அதனை எங்கு கொண்டு செல்ல வேண்டும் என்று உங்கள் மிருக வைத்தியரிடம் கேளுங்கள்.

உங்களுடன் அடையாள பத்திரத்தை வைத்திருக்கள்.

நீங்கள் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பு, உங்கள் வீடு பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். (கதவுகள், யன்னல்கள் அனைத்தும் மூடப்பட்டு பூட்டப் பட்டு பூட்டியிருக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும்)

நீங்கள் உங்கள் வீட்டில் வாகனத் தரிப் பிடத்தினுள் செல்வதற்கு, தானியக்க முறை யில் இயங்கி கதவைத் திறக்கும் கருவியை (Garage Door opener) பயன்படுத்துபவராயின், அந்த கருவியை பயன்படுத்தாமல், வாகனத் தரிப்பிடப் பகுதியின் கதவை எவ்வாறு திறக்க வேண்டும் என அறிந்து வைத்திருக்க வேண்டும்.

## வீட்டுக்கு திரும்பிய பின் செய்ய வேண்டியவை

### வலுவும், சக்தியும் (Power + Energy):

ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று சந்தேகப்பட்டால் அல்லது வாயு மணம் ஏற்படுவதை உணர்ந்தால், தீக்குச்சியை கொழுத்தவோ அல்லது மின்சார Switchஐ பயன்படுத்த வேண்டாம். அதற்கு பதிலாக ஓர் Flash Lightஐ உபயோகிக்கவும்.

வீட்டினுள் வழமையான வெப்பநிலை ஏற்படும் வரை வீட்டில் உள்ள பெரிய உபகரணங்கள் எதனையும் இயக்க வேண்டாம். Stoves, Oven, ஆடைகள் கழுவும் உபகரணங்கள், எலக்ரோனிக் கருவிகள், கையில் எடுத்து செல்லக்கூடிய சூடேற்றிகள் என்பவை Switch off செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

சகல உபகரணங்களும் சொருகியில் இருந்து இழுக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டபடி உங்கள் வீட்டுக்கான மின் சக்தியை மீண்டும் இயக்கவும்.

வீட்டினுள் ஓரளவான வெப்பம் ஏற்பட்ட பின்பு Refrigerators, Freezers உட்பட பெரிய உப கரணங்களுக்கான மின்சக்தியை வழங்கவும்.

உங்கள் வீட்டுக்கான எரிவாயுவின் விநியோகத்தை நீங்கள் நிறுத்தியிருந்தால், ஓர் தொழில்சார் வல்லுனரின் மூலம் மட்டுமே மீண்டும் அதனை வழங்குவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும்.

வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருந்தால், தகுதி வாய்ந்த தொழில்நுட்பவியலாளரினால் பரிசோதிக்கப்படும் வரை வீட்டில் உள்ள உபகரணங்கள், Electrical Outlets, Switches, Fuse breaker panel என்பவற்றை பயன்படுத்த வேண்டாம்.

### நீர் (Water):

வீட்டினுள் உள்ள காற்று (Indoor Air) வழமையான வெப்பநிலைக்கு ($20^{C}$) திரும்பும் வரை உங்கள் வீட்டிற்கான நீர் விநியோகக் குழாயை திறக்க வேண்டாம்.

திறந்து வைக்கப்பட்ட Taps அனைத்தையும் மூடவும், சூடான நீர் தாங்கியின் வடிகாலை மூடவும், உடைகளைக் கழுவும் இயந்திரத்தின் Hoses வடிகால் என்பவற்றை மீண்டும் இணைக்கவும்.

நீர் விநியோகம் தொடங்கும் இடத்தில் நீர் விநியோகத்தை தொடக்கவும்.

சூடேற்றப்பட்ட நீர் தாங்கியினுள் நீர் நிறைந்திருக்க வேண்டும் என உறுதிப்படுத்திய பின்பு சுடுநீர் வடி குழாய்களினூடாக நீர் ஓடுதலை நிச்சயப்படுத்துங்கள். மின்சாரத்தினால் சூடேற்றப்படும் சுடுநீர் தாங்கிகளை breaker உள்ள பகுதிகளில் இயக்கி வைக்க முடியும். உங்கள் வீட்டில் வாயு மூலம் சூடேற்றப்படும் நீர் தாங்கி இருந்தால் மீண்டும் வாயுவை வழங்குவதற்கு சேவை வழங்கும் நிபுணர் ஒருவரை அழைக்க வேண்டும்.

வீட்டில் உள்ள நீர் விநியோக குழாய் தொகுதியில் இருந்து காற்றை வெளியேற்றுவதற்காக, வீட்டில் மிகவும் உயரத்தில் உள்ள வடிகுழாயை திறந்து விட வேண்டும்.

வடிகுழாய்கள் பனிக்கட்டிகளால் அடைக்கப் படவில்லை என்பதையும் உறைதல் காரண மாக குழாய்களில் வெடிப்பு எதுவும் இல்லை என்றும் உறுதிப்படுத்தவும். தண்ணீர் வடியும் வரை சகல வடிகுழாய்களையும் திறந்து வைக்கவும். வடி குழாய்களில் கசிவு உள்ளதா என்று பரிசோதிக்கவும்.

Sump Pumpஐ மீண்டும் செயற்பட வைப்பதற்கு முன்பு Sump. Sump pipes என்பவற்றை சோதனையிடவும்.

உங்களது வீட்டின் நிலக்கீழ் பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருந்தால், தேங்கியுள்ள நீரை படிப்படியாக வடியச் செய்யுங்கள். (ஒருநாளைக்கு மூன்றில் ஒரு பகுதி என்ற அளவில்)

## மேலதிக ஆலோசனைகள்:

ஏற்கனவே உறைந்துள்ள குழாய்களை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு திறந்த சுவாலையை (open flame) உபயோகிக்க வேண்டும்.

வீட்டில் பாதுகாப்பான நிலை ஏற்படும் வரை உங்கள் செல்லப் பிராணிகளை பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கவும்.



mahensingaraja@thaiveedu.com

# சக்தி என்றால் காப்புறுதி



காப்புறுதி துறையில்
‘32’ வருட முழுநேர
உன்னதமான, நெறியான சேவை
‘சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி’

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 250 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 50 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப் பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$600,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.**

# சக்திவேல்

**416.706.3530, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



# விடுமுறைகால விளக்குகள் மின் செலவைக் கூட்டுமா?

**வீடும் விடியலும் - 115**

- வேலா சுப்ரமணியம் -

கிறிஸ்மஸ் காலம் அண்மிக்கின்றது. இரவானதும் தெருவெங்கும் அலங்கார விளக்குகள் கண்களைப் பறிக்கின்றன. கடைகளில் வண்ண மின்சார விளக்குகளையும் அலங்கார விளக்குகளையும் வாங்குவதில் மக்கள் அதிக கவனம் செலுத்துவதையும் பார்க்க கூடியதாக உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் பல வண்ண நிறங்களில் தமது வெளிப்புற வீட்டை அலங்கார விளக்குகளால் அலங்கரித்து விட்டார். நாமும் கொஞ்சமாவது செய்யவேண்டுமே என்ற ஆதங்கம் ஒருபுறம், இதற்கான மின்சாரச் செலவு அதிகமாக இருக்கப்போகிறதே என்ற ஏக்கம் மறுபுறம் பலருக்கும். எனவே அது பற்றி சிறிது நோக்குவது பொருத்தமானது.

தற்போது வீட்டுக்கு உட்புறத்திலும் வெளிப் புறத்திலும் பாவிக்கக் கூடிய LED Lightகள் பல விதமான வடிவங்களில் பாவனைக்கு வந்துள்ளன. அவற்றைக் கொள்வனவு செய்யும்போது விலை சற்று அதிகமாக இருந்தாலும் காலப் போக்கில் அடையப் போகும் பலன் கணிசமான அளவாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. சாதாரண விளக்குகளோடு ஒப்பிடுகையில் LED விளக்குகள் 95% குறைந்தளவு மின்சாரத்தை நுகரக் கூடியவை மட்டுமன்று, பல மடங்குகாலம் நின்று நீடிக்கக் கூடியவை என்பதையும் மனதிற்கொள்ளவேண்டும். எனவே இவற்றை வாங்குகின்றபோது பெட்டிகளில் LED என்ற அடையாளம் இருக்கின்றதா? என்று பார்த்து கொள்வனவு செய்தல் மிக அவசியமானது. வீட்டில் இருக்கும் பழைய கிறிஸ்மஸ் விளக்குகள், வெளிப்புற விளக்குகள் என்பவற்றை பாவிப்பதை நிறுத்தி புதிய LED விளக்குகள் வாங்குவதில் கூடதப்பு இல்லை. காலப்போக்கில் அது இலாபகர மாகவே இருக்கும்.

பொதுவாக கிறிஸ்மஸ் புதுவருட காலங்களில் மின்சாரப் பாவனை அதிகமாக இருப்பது பொதுவானது - தவிர்க்க முடியாதது. ஆனால் அவற்றுக்கான செலவைக் கட்டுப்படுத்த மேலும் பல வழிகள் உள்ளன. இவற்றுள் Timers முக்கிய இடத்தை வகிக்கின்றன.

வெளிப்புற விளக்குகளைப் போடுவதும் நிறுத்துவதும் என்பது சிலருக்குப் பலத்த சுமையாக இருக்கின்றது. பலர் இவற்றை நிறுத்த மறந்து விடுவதால் விடிய விடிய வீட்டைச்சுற்றி வண்ண விளக்குகள் எரிந்து கொண்டே இருக்கும். காலையில் வேலைக்குப் போகும் போதே அவற்றைக் கண்டு நிறுத்துவதும் உண்டு. இந்த இடர்ப்பாடுகளில் இருந்து விடுபட வெளிப்புறத்திற்குரிய Timersஐ பாவிப்பது மிகச் சிறந்த வழி. அவை தானாகவே குறிப்பிடப் பட்ட நேரத்திற்கு On ஆகிப் பின்னர் குறிப்பிட்ட நேரத்திற்கு Off ஆகி விடுவது எமது சுமையை நீக்க உதவுகின்றன அல்லவா? இரவு 6 மணியில் இருந்து அடுத்த நாள் காலை நாம் கண்டு நிறுத்தும் வரை விளக்குகள் எரிவதை விட மாலை 6 மணி தொடக்கம் இரவு 10-11 மணிவரை எரிவது எவ்வளவு இலாபகரமானது என்பதை நான் மேலும் விளக்கமாகச் சொல்லவேண்டியதில்லை.

வெளிப்புறத்திற்கு மட்டுமன்றி வீட்டின் உட்புறப் பாவனைக்கும் பல வித வடிவங்களில் Timers கள் விற்பனை செய்யப்படுகின்றன.

பொதுவாக Timers 24 மணித்தியாலச் சுழற்சி முறையைக் கொண்டவை தினமும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு On ஆகி குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு Off ஆகும் விதத்தில் இவை தொழிற்படுவதால் வீட்டின் உட்பகுதியில் உள்ள அலங்கார விளக்குகள் மட்டுமன்றி மேசை விளக்குகள், இதர மின்சார உபகரணங்களுக்கும் இவற்றைப் பாவிக்க முடியும்.

### மின்குமிழ்கள்


வீட்டு உரிமையாளர் தமது வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் மின்விளக்குகளை சற்று கூர்ந்து கவனித்து எடுக்கும் சில நடவடிக்கைகள் மூலம் அதிகளவு மின்சாரத்தைச் சேமிக்க வாய்ப்பு இருக்கிறது. ஒரு சராசரி வீட்டில் ஏறத்தாழ 40 மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும். அவற்றுள் பலவற்றை சாதாரண மின் குமிழ்களுக்குப் பதிலாக, COMPACT FLUORESCENT LAMP (CFL)க்கு மாற்றுவதன் மூலம் 85% மின்சாரத்தைச் சேமிக்க முடியும். அதாவது 15 watt சக்தியுள்ள CFL குமிழ்கள் 100 watts சக்தியுள்ள வெளிச்சத்தைத் தர வல்லன. வீட்டில் அதிகளவு பாவனையிலுள்ள மின் குமிழ்கள் யாவற்றையும் CFL குமிழ்களுக்கு மாற்றுவது மிக இலாப கரமானது. CFL குமிழ்கள் பல்வேறு வடிவங்களிலும், பல்வேறு அளவுகளிலும், மலிவான விலையிலும் பாவனைக்கு வந்துள்ளன. சிறிதளவு முதலீடு செய்தாலும் காலப் போக்கில் அதிகளவு பணத்தைச் சேமிக்க வாய்ப்பு உள்ளது.

சில மாதிரி CFL படங்கள் தகவ லுக்காக இங்கு தரப்படுகின்றன.

**பின்வரும் வகையான CFL மின் குமிழ்கள் சந்தைப்படுத்தப் படுகின்றன.**














- Pot lights.
- Three way lights.
- Ceiling lights and lamps.
- Dimmable lights.
- Out door lights and flood lights.

வீடு நிறைய Pot Loghtகளைப் போட்டுவிட்டு அதற்கு CFL குமிழ்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கும் புதிய வீட்டு உரிமையாளருக்கும் விமோசனம் வந்து விட்டது. அவற்றுக்குரிய CFL குமிழ்களும் விற்பனைக்குப் பல்வேறு தரத்தில் வந்தவிட்டன. விலை சற்று அதிகமானாலும் காலப்போக்கில் இலாபகரமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

**குறிப்பு:** ஏற்கனவே Dimmer போடப்பட்டிருந்தால் அத்தகைய பொருத்துக்களுக்கு CFL குமிழ்கள்களை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றினாலும் Dimmerன் தொழில் நுட்பத்தைப் பாவிக்காது அவற்றை முழு அளவுக்கும் (Full) விடுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் அத்தகைய Dimmer Switchகள் அல்லது CFL குமிழ்கள் அல்லது பொருத்துக்கள் எரிந்துவிடும் சந்தர்ப்பம் இருக்கின்றது என்பதைக் கவனித்திற் கொள்ளவும்.



velasubramaniam@thaiveedu.com

வீட்டுப் பரிசோதகர் ஒரு வீடு விற்பனை முகவரானால்
வீடு வாங்க:
வீடு விற்க:





வாங்கப்போகின்றீர்களா?
- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய்க் கிடைக்கும்
- வாங்கிய பின் ஏமாற்றங்கள் இருக்காது
- வளம்சேர்க்கும் வாழ்நாள் முதலீட்டின் முதற்படி

விற்கப்போகின்றீர்களா?
- விற்கமுன் வீட்டின் பிழைகள் களைய இலவச ஆலோசனை
- விற்றபின் வரும் தடங்கல்களை விற்கமுன் தவிர்க்கலாம்
- விற்றபின் வரும் பெறுமதி இழப்புக்களைத் தடுக்கலாம்
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதியை ஈட்டலாம்

நம்பிக்கை, நாணயம்
10 வருட வீட்டுப் பரிசோதனை அனுபவத்தடன் கூடிய ஒரு வீடு விற்பனை முகவர்

Highest Standard Agents... Highest Results!
Vela Subramaniam B.A. (Hons)
Experienced Home Inspector
Sales Representative
Direct: 416 786-0760
vela4homes@gmail.com
www.dreamgtahomes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416 264-0101 Fax: 905 201-9229
205 - 7 Eastvale Dr, Markham, ON. L3S 4N8




RE/MAX
COMMUNITY
Realty Inc, Brokerage
RAJEEF KONESWARAN
LOGANATHAN VELUMAILUM
Get Your ROADMAP
TO SUCCESS
Training, Coaching, Mentoring.
MORE INCOME
MORE SALES
MORE LEADS
Agents will learn how to:
Generate more leads
Close more sales
Take control of their finances
Get organized
Become excellent negotiators
And more!
Tel: 416 287 2222 | Fax: 416 282 4488 | 1265 Morningside Ave., # 203 Toronto, On M1B 3V9

# நீரிழிவு - பயமும் பாதுகாப்பும்!

- சிவலிங்கம் ஜெயறஜீன் -

நீரிழிவு (Diabetes) நோய் வருமென்ற பயமா? இந்த யோகாவை முயற்சி பண்ணுங்கள்..!


இன்றைய காலகட்டத்தில் நீரிழிவு குறைபாட்டு தாக்கம் பலரையும் பாதித்திருக்கிறது. பலர் இன்னும் இதற்கு ஆட்படும் அபாயத்தில் இருந்து வருகின்றனர்.

இளைய சமுதாயத்தில் 4 சதவீதம் பேர் நீரிழிவு குறைபாட்டு தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாக புள்ளி விபரங்கள் சொல்கின்றன. வாழ்க்கை முறை மாற்றம் தான் இதற்கு ஒரு காரணமாக சொல்லப்பட்டாலும் இன்று வரை தீர்மானமாக எந்த முடிவுக்கும் மருத்துவ உலகம் வர இயலவில்லை. நீரிழிவு நோயா அல்லது உடலின் ஒரு குறைபாடா என்றால் அது நோயல்ல, குறைபாடு என்பதே உண்மை.

பிறவி ஊனம் மட்டுமே குணப்படுத்த முடியாதது என்பர். ஆனால் நீரிழிவு என்பதை பொறுத்த மட்டில் பெரும்பாலோருக்கு இடையில் வரும் ஒரு ஊனம். ஆக, இந்த ஊனம் ஏற்படாமல் தடுக்க முயல வேண்டும். அதற்கு மிகப்பெரிய அளவில் கை கொடுப்பது யோகாசனங்கள் தான். அதிலும் குறிப்பாக யோகாசனங்களில் பஸ்சிமோத்தாசனம் நீரிழிவை தடுக்கிறது. மேலும் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தருகிறது. இந்த ஆசனத்தை செய்வதும் எளிது. உட்கார்ந்த நிலையிலான ஆசனங்களில் நீரிழிவுக்கு மிகவும் பயன் தரக்கூடிய ஒரு ஆசனம் இது என்று கூறலாம்.


பசிமொத்தாசனம்

### செய்யும் விதம்:



### முதல் நிலை:

விரிப்பில் மல்லாந்து படுக்கவும். இரண்டு கால்களையும் சேர்த்தாற் போல் நீட்டி வைத்துக் கொள்ளவும். இரண்டு கைகளை காதுகளை ஒட்டினாற் போல் தலைக்கு மேல் நீட்டி வைத்துக் கொள்ளவும். கை விரல்கள் சேர்ந்திருக்க வேண்டும்.

இப்போது மூச்சை நன்றாக இழுத்துக் கொள்ளவும். இப்போது கைகள் காதுகளை விட்டு விலகாதபடி மூச்சைப் பிடித்து எழுந்து உட்காரவும். இது தான் முதல்படி நிலை.

இதற்கடுத்து கைகள் இரண்டையும் முதல் நிலையில் சொன்னது போல் காதுகளை ஒட்டியிருக்கும் படியான நிலையில் வைத்து நிமிர்ந்து உட்காரவும். பின்னர் உடலை சிறிது சிறிதாக பின்னோக்கி சாய்ந்து படுக்கை நிலைக்கு வரலாம். இப்போது மூச்சை இறுக்கிப் பிடிக்காமல் சாதாரண நிலையில் விட்டுவரவும்.

இவ்வாறு செய்து முடிப்பது ஒரு பஸ்சி மோத்தாசனம் ஆகும். இது போல் மூன்று முதல் நான்கு முறை செய்யலாம்.

### இரண்டாவது நிலை:

இப்போது மூச்சை விட்டபடியே முன்னுக்கு குனிந்து கால்களின் கட்டை விரல்களை, கைகளின் ஆள்காட்டி விரல், நடுவிரல் இவை இரண்டையும் கொக்கி போல் மடக்கி பிடித்துக் கொள்ளவும். இது இரண்டாவது நிலை.

### மூன்றாவது நிலை:

இந்த நிலையில் மூச்சை ஒரு தரம் இழுத்து விட்டவாறே இன்னமும் கீழே குனிந்து முழங்கைகள் முட்டிக்கால்களை ஒட்டி தரையை தொட்டவாறு இருக்கும் படியான நிலைக்கு வரவும். அதாவது முகத்தை முழங்கால்களின் சந்து வரை எட்டிக் குனியவும். மடக்கின் முழங்கைகள் தரையில் படவேண்டும். இந்த நிலையில் ஐந்து முதல் பத்து எண்ணும் வரை இருக்கலாம். பின்னர் கைகள் மட்டும் கால்கள் இரண்டின் பெருவிரல்களை மட்டும் பிடித்திருக்கும் படியான நிலைக்கு நிமிர்ந்து வரவும்.

### ஏற்படும் சிரமங்கள்:

சிலருக்கு ஆரம்பநிலையில் படுத்து எழுந்திருப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கும். கைகளை தரையில் ஊன்றினால் தான் எழுந்திருக்கவே முடியும் என்ற அளவில் இருப்பார்கள். ஆசனங்களை செய்ய முயற்சிக்கும் தொடக்க காலங்களில் இது போல் அசவுகரியங்கள் எழுந்தால் மனம் தளரக் கூடாது. தரையில் கைகளை ஊன்றித் தான் எழ வேண்டி இருந்தால் சில நாட்கள் அப்படியே செய்யலாம். நாளடைவில் முறையான பயிற்சி வந்து விடும். சிலருக்கோ, கைகளை மேலே காதுகளை ஒட்டினாற் போல் வைத்துக்கொண்டு எழுந்திருக்க முடியாது. கைகளை முன்னுக்கு வீசி பேலன்ஸ் செய்து எழுந்திருந்தால் தான் எழுந்திருக்க முடியும். இதுவும் நாளடைவில் சரியாகி விடும்.

சிலருக்கு கால் விரல்களை கைகளால் தொட முடியாது. பொதுவாகவே முதுகெலும்பு கட்டை பாய்ந்து விட்டிருப்பதால் தான் இப்படி முன்னோக்கி குனிய முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் பழக பழக கால் விரல்களை கைகளால் பிடித்து விடலாம். சிலருக்கு கால் விரல்களை பிடிக்க முயலும் போது முழங்கால் தூக்கிக் கொள்ளும். ஆனால் முழங்கால் மடிக்காமலேயே கூடுமான வரை குனிந்து தொட முயற்சிக்க வேண்டும். இப்படி பழகி வரும் போது தொடையில் உள்ள தசைகளும், நரம்புகளிலும் வலி ஏற்படுவதுண்டு. ஆனால் சில நாட்களில் சரியாகி விடும். சிலருக்கு முழங்காலில் முகத்தை கொண்டு வைக்க முடியாது. இதுவும் விடா முயற்சியுடன் பழகும் போது சரியாகி விடும். முடியாது என்பது எதுவுமே இல்லை.

### ஆசனத்தின் பலன்கள்:

பஸ்சிமோத்தனம் செய்யும் போது, குடல்கள், பித்தப்பை, இரைப்பை முதலியன நன்றாக அமுக்கப்படுகின்றன. உடலின் உயிராற்றலை வலுப்படுத்தும் முதுகெலும்பு, முதுகு நரம்பு வளைத்து இழுக்கப்படுகிறது. இதனால் நீரிழிவு குறைபாடு உண்டாவது தடுக்கப்படுகிறது. மேலும் ஆண்மை அதிகரிக்கிறது. மலட்டுத் தனம் நீங்குகிறது. வயிற்று வலி, தலைவலி, மூலக்கடுப்பு, இடுப்பு வலி, முதுகுவலி, பலவீனம் முதலியவை நீங்குகிறது. பெண்களிடத்தில் நீண்ட நாட்களாக இருக்கும் மாதவிடாய் கோளாறுகள் பூரணமாக குணமாகி விடும். இடுப்பு வலுவடையும். இளம்பெண்கள் திருமணத்திற்கு முன் இந்த ஆசனத்தை செய்து வருவதால் இடுப்பு சார்ந்த இனப்பெருக்க உறுப்புகள் வலுவடைந்து திருமணத்திற்கு பின் எளிதான சுகப்பிரசவம் உண்டாக வழிவகை ஏற்படும்.

### எச்சரிக்கை:

இந்த ஆசனத்தை வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் செய்ய கூடாது. அறுவை சிகிச்சை நடந்து குறிப்பிட்ட காலங்கள் ஆகி இருந்தால் சிறந்த ஆசன நிபுணர்களுடன் ஆலோசனை பெற்று ஆசனத்தை செய்யலாம். வழக்கமாக ஆசனத்தை செய்து வரும் கர்ப்பிணிகள் ஆசனத்தை முழுமையாக செய்யாமல் உட்கார்ந்த நிலையில் காதுகளை ஒட்டி கைகளை நிமிர்த்திய நிலையில் ஆசனத்தை முடித்துக் கொள்ள வேண்டும். முன்பக்கம் குனிந்து முழங்காலை தொடும் நிலைக்கு போகக்கூடாது.

ஆசனங்களை பழக்கமில்லாத புதிய கர்ப்பிணிகள் இந்த ஆசனத்தை எக்காரணம் கொண்டு செய்யக் கூடாது. படிப்படியாக நிரிழிவு நோய் மறைய பசி மொத்தாசனம் பண்ணுங்கள். மனதை ஒருமுகப்படுத்த இந்த ஆசனம் மிகவும் உதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**Diabetes in Canada**

| KEY STATISTICS[1] | 2015 | 2025 |
|---|---|---|
| Estimated diabetes prevalence (n/%) | 3.4 million/9.3% | 5 million/12.1% |
| Estimated prediabetes prevalence in Canada (n/%)(age 20+) | 5.7 million/22.1% | 6.4 million/23.2% |
| Estimated cost of diabetes in Canada ($) | $14 billion | $17.4 billion |
| Estimated diabetes prevalence increase (%) | 44% from 2015-2025 | |
| Estimated diabetes cost increase (%) | 25% from 2015-2025 | |

Source: Canadian Diabetes Association

*(தொடரும்)*




*jeya.rajeen@thaiveedu.com*



நிலையான சொத்துக்களை வாங்க, விற்க அழைக்க வேண்டிய
உங்கள் வீடு விற்பனை முகவர் சுகுமாரன் சின்னையா (சுகு)
ROYAL DE MONTRÉAL 2010 INC
4372, Papineau, Montréal, Qc, H2H1T5
Sugumaran Sinniah
Chartered Real Estate Broker
திருப்தியான இல்லம்
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை !
Direct : 514.299.3186
email: seranvib@hotmail.com Office : 514.529.0454 Fax : 514.525.4557

# iNFORCE LIFe Financial Services Inc.



## வண்ணம் தீட்டும் போட்டி
## COLOURING CONTEST

Ends December 18, 2015

### November 2015 Winners

**First Prize Winner**
Nithuja Kalaiselvam




**Second Prize Winner**
Nithusha Ketheeswaran



**Third Prize Winner**
Thanissa Vasanthakumar





*Full Name: ______________________

*Age: __________ *Tel: ______________

*Address: ______________________

*Email: ______________________

*Parent/Guardian Name: ______________________

*Parent/Guardian Signature: ______________________

*Please fill all the details in order to enter the contest. Incomplete entries may not be judged.

Cut this page and mail it on or before December 18, 2015 to enter the competition.

iNFORCE LIFe Financial Services Inc.

10 Milner Business Court, Suite 707
Scarborough ON M1B 3C6

For More Details:
**Bus: 416 321 6000**
**Direct: 416 909 0400**
www.inforcelife.com

For kids up to 14 years old only.
Submit the entry by mail or in person.










**Terms and conditions:** By entering the Contest, all entrants agree to be bound by the rules of the contest and release iNFORCE LIFe Finacial Inc. and all parties associated with this Contest from any liability with respect to the contest and the redemption of any Prize. Contest Organizers reserve the right to withhold the Prize or disqualify any Contestant's entry in the event that any Contestant fail or refuse to comply with these contest rules. By entering this contest, Contestants and their legal parent(s) or guardian(s) consent to the Contest Organizers publishing or announcing any Prize winners' name and photograph(s), in future publicity, without permission. All entries become the property of the Contest Organizers and none will be returned. decision made by the Judges are final. iNFORCE LIFe Financial Inc. and their affiliates family cannot participate in the competition. iNFORCE LIFe Finacial Inc. and their affiliates family members cannot participate in the competition.

printfast.ca


www.MarkhamNSDental.com
Open
7DAYS
Mon-Sat : 9-8
Sun : 10-5
When you
ALLOW SMILE
into your life you are contributing
to the health of those around you
Our Services
Dental Emergency
Wisdom Teeth Extraction
Root Canal
Invisalign
Bridge
Digital Xrays
Sports Guard
Dental Implant
Crown
Veneers
Orthodontic
Periodontic
Denture
Night Guard
State-of-the-Art Dental Technology
Family Dentistry | Cosmetic Dentistry | Braces | Implant | Sleep Dentistry
905.472.4111
Dr. Nalini Sutharsan, BDS/DDS
Dental Surgeon
MARKHAM
NS DENTAL
Care, Comfort, Convenience, Confidence...
9293 Markham Road | Suite 4 Markham ON | L6E 1A3


2015 has been an Incredible Year
Thank You All For Your Trust, Support & Business
I Wish You All Merry Christmas & Happy and Safe Holidays
Ratheesh Subramaniam, B.Sc (Hons)
Sales Representative
416-303 4005
ratheesh_maniam@hotmail.com
Winner of HomeLife Award
2010 • 2011 • 2012 • 2013 • 2014 • 2015
HomeLife/GTA Realty Inc.
BROKERAGE., Independently Owned and Operated
BUS 416.321.6969 FAX 416.321.6963
Ratheesh is receiving an Award
YONGE & EGLINTON HAS BEEN VOTED THE #1 NEIGHBOURHOOD TO LIVE BY TORONTO LIFE MAGAZINE
INTRODUCING GREAT CONDO PROJECTS FROM YONGE & EGLINTON
Starting from $260,900
WHITEHAUS
LIFE HAPPENS
BETWEEN THE LINES
Up to $10,000 Discount
Free Kitchen Island
$0 Assignment
$0 Development Charges
20% Down over 540 Days
CALL RATHEESH
Redpath
1-Year Free Maintenances
1-Year Free Property Tax
Up to $5,000 in Discounts
Starting at $221,990
CALL RATHEESH
CALL RATHEESH
A SHINING NEW LANDMARK IN THE CITY
INTRODUCING THE
SOUTH TOWER
AT CITYLIGHTS
15% Down-Payment
$0 Development Charges
Free Assignment
$2,000 Locker
Other Hot Selling Projects.....
• Sonic by Lindvest at Don Mills and Eglinton
• Midtown Lofts by Decade Homes in Kitchener-Waterloo
• University Studios by Podium Developments in Oshawa
Deal with Experienced PLATINUM/VIP Agent - I Represent You!



TIME
FOR
SOLUTIONS

# Make your house work for you!

Consolidate your high interest rate debts into your mortgage prior to renewal time for a better cash flow.

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @ 5.4% | 1,934.67 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line of Credit | 16,000 @ 6.5% | 566.67 | 0.00 |
| Line of Credit 2 | 12,500 @ 7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @ 12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @ 19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @ 24% | 150.00 | 0.00 |
| New Mortgage payment | 386,500 @ 2.8% | | 1,584.80 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,450.85** | **1,584.80** |

Based on this scenario,
YOU CAN SAVE
**$2,866.05**
Monthly

-digi Media Creations-

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216

TD Canada Trust · Scotiabank · Street Capital Financial Corporation · First National Financial LP · MCAP · National Bank of Canada · Merix

Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479

Dir. 416-436-1111

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8



# நீர்க்குழாய்களில் உறைபனி

- செந்தூரன் புனிதவேல் -

குளிர்காலம் தொடங்கிவிட்டது. வீட்டு உரிமை யாளர்கள் குளிர்கால பராமரிப்பு விடயங்க ளில் கவனம் செலுத்தவேண்டிய நேரம் இது.

சற்று கற்பனை செய்து பாருங்கள்.

இரண்டு நாட்கள் ஓய்வாக வெளியே பயணம் சென்று வீடு திரும்பிய வேளை, வீட்டு நீர் குழாய்கள் உறைந்து சில இடங்களில் வெடித்து வெள்ளம் போட்டிருப்பதை கண்டு நீங்கள் மலைத்து நிற்பதைப் எண்ணிப் பாருங்கள்.

இப்படியொன்று நடக்குமானால், இதுபோன்ற நிலையில் ஒரே ஒரு ஆறுதல் வீட்டுக் காப்பு றுதி உங்களுக்கு கைகொடுக்கும் என்பதே. ஆனால், இங்கும் முன் எச்சரிக்கையாகச் சில விடயங்களைக் கவணிக்கக் கடமைப்பட்டுள் ளீர்கள்.

நீங்கள் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் வீட்டிற்க்கு வெளியே பயணித்து, வீட்டில் நீங்கள் இல்லாதவேளை தினமும் பரிசோதிக்க ஒருவரை ஏற்பாடு செய்யாதவிடத்து காப்புறுதி அமைப்பு நட்டஈடு வழங்க மறுக்கலாம். குளிர்காலத்தில் தினமும் ஒருவர் உங்கள் வீட்டிற்குள் சென்றுவர ஏற்பாடு செய்யக் கடமைப்பாடுடையவர்களாவீர்கள்.

### குழாய்கள் உறைந்தால் என்ன செய்வது?

முதலாவதாக குழாய்களை மெல்லியதாக திறந்து வையுங்கள். உறைபனி உருகும் வேளை நீர் கசிந்து வெளியே வரவழி வகுக்கும். வீட்டிற்கு வெளியே முழுத்தினமும் செல்வதானால் குழாய்களைத் திறந்து வைப்பது உசிதமல்ல. ஆனால் நீர் வீட்டிற்கு கொண்டுவரும் முக்கிய குளாயை (Main line) மூடிவைப்பது நலம்.

உறை பனி, குளாயை உடைக்கும் பலம் உடையது. எனவே, நீங்கள் விரைவாக செயல்படுவதவசியம். உங்களுக்கு எந்தக் குழாய் உறைந்துள்ளது என்று தெரியுமானால் அதனை பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்கு தலைமுடி உலர்த்தும் கருவியில் (Hair Drier) பனியை உருகச் செய்யலாம். எக்காரணம் கொண்டும் நெருப்பை பாவிக்கவேண்டாம். வீடு தீ பிடிக்க இது காரணமாய்விடும்.

***நான்கு தினங்கள் வீட்டில் தொடர்ச்சியாக***

***நீங்கள் இல்லாதவேளை,***

***தினமும் பரிசோதிக்க ஒருவரை ஏற்பாடு***

***செய்யாதவிடத்து, அனர்த்தங்கள் ஏற்பட்டால்***

***காப்புறுதி அமைப்பு***

***நட்டஈடு வழங்க மறுக்கலாம்.***

ஒரு குழாய் நீர் உறைந்தது என்பதால் அது வெடிக்கும் என்று சொல்லமுடியாது. ஆனால், அந்த விபத்திற்கு நிச்சயம் நீங்கள் முகம் கொடுக்க விரும்பமாட்டீர்கள் என்று நம்புகிறேன். குழாய் இயல்பாக நீர் உருகாவிட்டால் குழாய் திருத்தும் ஒருவரை அழைப்பது தான் சிறந்ததாகும்.

### குழாய்களில் நீர் உறைவதை எப்படி தவிர்க்கலாம்?

பொதுவாக குழாய்களில் நீர் உறைவதற்கு இரு காரணிகள் உண்டு. முதலாவதாக தொடர்ச்சியாக சில தினங்களுக்கு பெரும் குளிர் நாட்களாய் இருப்பதுடன் சில குழாய்கள் புறச்சுவர்களுக்கு நெருக்கமாக இடையில் Insulation ஏதும் இல்லாதிருப்பது.

சீதோஷன நிலை என்பது உங்கள் கையில் உள்ள ஒன்று அல்ல. ஆனால் குளாய்க்கும் சுவருக்கும் இடையில் Insulation போதிய அளவு வைக்கலாம், இதனால் குளிர்காற்று குளாயை உறையச்செய்வதைத் தவிர்க்கலாம். இப்படி insulation உள்பக்கத்தால் மட்டுமல்ல புறப்பக்கத்தாலும் வைக்கவேண்டி வரலாம். உதாரணத்திற்கு: உங்கள் சுவரில் சிறுவெடிப்பு இருந்தாலும் அதனூடாக குளிர்காற்று உள்ளே வரச் சந்தர்ப்பமுண்டு. தொடர்ந்து குளிர்காற்று வீசுகையில் குழாய் முற்றாக விறைத்துவிடும்.

தொடர்ச்சியாக பெரும் குளிர் நிற்கும் வேளைகளில் குழாய்களில் நீர் கசிவதற்கு அளவாக திறந்து வைப்பதும் குழாய் உறைவதைத் தவிர்க்கும். ஆனால், இது ஒரு சிறந்த அறிவுரை அல்ல.

### குழாய்கள் உறைந்து அதனால் குழாய் வெடித்து வீட்டில் வெள்ளம் போட்டால் செய்யவேண்டியது:

ஒரு வீட்டுக் காப்புறுதி செய்துள்ளவர் செய்ய வேண்டிய சில செயற்பாடுகள் உண்டு. முதலாவது கடமை, குழாய் வெடித்ததினால் ஏற்பட்ட இழப்புகளை இயன்றவரை குறைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். உதாரணத்திற்கு வீட்டிற்குள் நீர் வரும் முக்கிய குளாயை நிறுத்திவிடுவதவசியம். அத்துடன், வெள்ளம் நிறையுமிடத்திலிருந்து பொருட்களை அப்புறப்படுத்தி பத்திரமான இடத்தில் வைக்க வேண்டும். அடுத்து உங்கள் காப்புறுதி முகாமையாளருடன் தொடர்பு கொண்டால் அவர் நீங்கள் மேற்கொண்டு செய்யவேண்டியவற்றை அறிவுறுத்துவார்.

பொருட்கள் நனைந்தபின் அவற்றை மீள் பெறுவது கடினமும் பெரும் பொருட் செலவுடையதுமாக இருக்கலாம். அனர்த்தத்தின் நட்டத்தைக் குறைப்பது இருவருக்குமே அதாவது நுகர்வோராகிய உங்களுக்கும், காப்புறுதி அமைப்பிற்கும் நன்மை பயப்பதாகும். காரணம் இழப்பை குறைப்பதனால் கட்டணத்தைக் குறைக்கலாம்.

*தமிழாக்கம்: குமார் புனிதவேல்*

senthuran.p@thaiveedu.com



வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

Home Life
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

Baskaran Sinnadurai
Commercial & Residential Sales Representative
416-880-8585



BRAND NEW PLAZA



brand new plaza in 10acre land . heart of scarborough medical , restaurant, retail ,banquet hall,church

aaa atil aqeel architect
IDEAL SQUARE
2710 MORNINGSIDE AVENUE
TORONTO, ON
BIRDSEYE VIEW 1
DATE: MAY 29, 2015

# மகர முதல வளர்ப்பெல்லாம்

- மஞ்சுளா ராஜலிங்கம் -

### வீட்டில் மீன் வளர்ப்பு கருத்தில் கொள்ள கடுகுக் குறிப்புகள்:

வீட்டில் மீன் வளர்த்தல் என்பது மனதுக்கு இதமானது, மீன் தொட்டிக்கு முன்னால் நின்று அவர்கள் ஓடிப்பிடிப்பதையும், ஒளிந்தும் துள்ளியும் விளையாடுவதை பார்த்துக் கொண்டு நின்றால் எவ்வளவு துயரங்கள் எம்முள் அடைந்துகிடந்தாலும், துயர் மறந்து ஓர் புத்துணர்வு ஏற்படுவதை உணரமுடியும். மீன் தொட்டியில் ஓடும் நீரின் அந்தச் சல சலப்பு, சத்தமின்றி கேட்க சாந்தப்படுத்தும் எம் மனதை. இவற்றை எல்லாம் எமக்குத் தரும் மீன் இனத்தை எப்படி நாம் தெரிவு செய்வது எனப் பார்ப்போம்.

1) மீனின் உடல் ஆரோக்கியத்தைப் பற்றி நிதானமாக ஆராய்ந்தறிய முற்படுங்கள். நீங்கள் ஒரு வல்லுனராக இந்த விஷயத்தில் இருந்தால், சடுதியிலேயே உள், வெளி உடல் நிலையைப் பற்றிய ஒரு மீனின் தன்மையை எடை போட்டு விடுவீர்கள். கண்ணால் பார்த்தும் மீனின் உடல் ஆரோக்கியத்தை ஓரளவு கணிக்கலாம். முதலில் ஒரு மீனின் வெளிப்பற உடல் நிலையை நன்றாக ஆராயுங்கள். செதில்களையும் செட்டைகளையும் கூர்ந்து அவதானியுங்கள். செதில்கள் மிகவும் பளபளப்பாக இருக்க வேண்டும். செட்டைகளில் வெட்டுக்களோ காயப் பிரிவுகளோ இருக்கக் கூடாது. மீனின் உடலில் எப்பகுதி யிலாவது வளர்ச்சி வித்தியாசமான செறிவுகளுடன் காணப்படின், அவற்றை வாங்க முனையாதீர்கள். கண்களைச்சுற்றி ஏதாவது வித்தியாசமான வளர்ச்சிகள் உள்ளதா என அவதானிக்கவும். ஆனால் உள்ளுடலில் உள்ள நோய்கள் கண் பகுதியிற் தெரிவ தரிது. கொஞ்ச நேர அவதானிப்பிலேயே மீன் எப்பொழுதும் தொட்டியின் அடிப்பாகத்திலேயே அடைந்து கிடக்கிறதா அல்லது மிகவும் உற்சாகமாக விளையாடித் திரிகிறதா என்று கணித்தல் எளிது.

2) அடுத்ததாய் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம், அந்த மீன் வாழும் நீரின் தன்மையும் அந்த மீன் வகையுடன் ஒத்துப் போகக் கூடிய மற்றைய மீன் வகைகளையும் பற்றியதாகும். மற்ற மீன்களுடன் சண்டை போடும் குணமுள்ள மீன்களை வாங்கி ஒன்றாக வளர்க்க ஆசைப்படாதீர்கள். இதனால் பல தீமைகள் அமைய வாய்ப்புண்டு. மீன்கள் தங்களைத் தாங்களே அல்லது ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ள மிகுந்த வாய்ப்புண்டு. இம்மாதிரி சந்தர்ப்பங்களை தவிர்ப்பது உங்கள் கையில் தான் உள்ளது. இம்மாதிரி மீன்களை பரா மரிப்பது மிகவும் கஷ்டமான ஒரு விடயம் மட்டுமின்றி மற்ற மாதிரி மீன்களையும் இவைகளுடன் ஒன்றாகச் சேர்த்து வளர்ப் பது மிகவும் கடினமாக இருக்கும். அத்துடன் ஒரு மீன் இனத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொழுது அவை தங்கள் சொந்த இனத்துக்குள்ளேயும் எளிதாக ஒத்துப்போகக் கூடியவையா என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள். சில மீன்கள் தன்னினத்துக்குள்ளேயே எதிரியாய் மற்ற மீன்களைப் பார்க்கும். அத்துடன் பால் இன வித்தியாசங்களை வைத்தும், ஒரே வகை மீன்கள் தத்தமக்குள்ளே ஒத்துப்போகா. இதைக் கருத்தில் இருத்திக்கொள்ளுங்கள்.



3) விற்பனையாளர்களிடம் மீனின் வளர்ச்சி எவ்வளவுதூரம் போகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இந்த இடத்தில்தான் நீங்கள் மீன் தொட்டிக்குரிய அளவையும் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியத்துக்கு தள்ளப் படுவீர்கள். ஒரு அங்குல நீளம் வளரப் போகும் மீனுக்கு அண்ணளவாக நான்கு லீட்டர் தண்ணீரைக் கொள்ளக் கூடிய நீர்த்தொட்டி அவசியமானது என்ற கணக்கில் உங்கள் தேவையை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆனால் வாங்கும் போது மீனின் அளவு என்ன என்பதை மட்டும் கருத்தில் கொள்ளாது அது தன் வளர்ச்சியை எட்டும் அளவையும் நீங்கள் நிச்சயம் கணக்கிட்டு வைத்திருக்க வேண்டும்.

4) மீன்களின் வாழ்க்கையானதும் உடல் ஆரோக்கியமும் அவை வாழும் நீரின் தட்ப வெப்ப நிலையில் மிகையாகத் தங்கியுள் ளன. மீன்கள் வாழும் நீரின் தன்மை பல வகைப்படும். எந்த மீன் எவ்வகை நீரில் ஆரோக்கியமாக வாழும் என்பதை நிச்சயமாய் விற்பனையாளர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். இது மிகவும் முக்கியம். அல்லது மீன்கள் இறந்து போக வாய்ப் புண்டு. எப்படி மீன்கள் வாழும் நீரின் வெப்ப நிலையை சமப்படுத்துவது என்பதை அவர்களிடம் கற்றுக் கொள்ளுங்கள். அவர்களிடம் உங்களுக்கான பதில் நிச்சயம் இருக்கும். அவர்கள் எப்படி வெப்பநிலையைச் சமப்படுத்துவது என்று பொறுமையாக சொல்லித் தருவார்கள்.

5) கடைசியாக சாப்பிடும் சாப்பாட்டின் தன்மை என்ன என்பதைப் பொறுத்து மீன்களை வாங்குங்கள். பலவித மீன்களின் உணவுப் பழக்க வழக்கமானது ஒன்றுக் கொன்று மாறுபடும். எனவே இதில் கூடிய கவனம் செலுத்துங்கள். சில மீன்கள் சாப்பிடுவதற்கு ரொம்பத்தான் பிகு பண்ணிக் கொள்ளும். மீன்களுக்காக நீங்கள் வாங்கும் உணவானது, இலகுவில் எங்கும் வாங்கக் கூடியதா எனபதையும் அறிந்து கொள்ளுங்கள். அவை விலைப் பட்டியலை அல்லது உங்கள் செலவை மிஞ்சாத வகையில் உள்ளதா என்பதையும் கேட்டறிந்து கொள்ளுங்கள். விலையுயர்ந்த உணவைத் தான் மீன்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உணவை தேவையான அளவில் சேமித்து வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த ஐந்து கவனிப்புக்களையும், நீங்கள் மீன்களை வாங்கி வளர்க்க தீர்மானிக்கும் போது நினைவில் வைத்துக் கொண்டாலே போதுமானது. இதை மனதில் வைத்துக் கொண்டு மீன்களை நீங்கள் வாங்க முற் பட்டால் சரியான மீனைத் தெரிவுசெய்வதில் எந்தப் பிரச்சினையும் எழ வாய்ப்பில்லை.



manjula.r@thaiveedu.com




**Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995**

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports of the following: Legal Land Survey, Topographical Survey, Arborist Report, Tree protection Plan, Geotechnical Report, Soil Test for Soil Bearing Capacity, Soil Percolation Test for Stormwater Management, Site Plan, Site Grading & Erosion Control Plan, Stormwater Management Report, Functional Servicing Report, Site Servicing Plan, Architectural Drawings, Floor Plans, Elevations, Cross Sections, Structural Drawings, Plumbing Drawings, Heat Loss/Heat Gain Calculations, HVAC Drawings, Duct Design, Ventilation Design/Calculations, and Landscape Architect Plan



**சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள் !**

**M.பாஸ்கரசிங்கம்**, P.Eng.

**Periyathamby Kuruparan** M Sc (Eng) **Meghal Raval** M Sc (Eng)

(416) 332 1743 www.buildingexpertscanada.com


Hot Buyers!!
With A Flexible Commission!
SELL YOUR HOME FASTER
FOR SALE Ajax
Bedrooms:4 / Washrooms:3
FOR SALE Mississauga
Bedrooms:3 / Washrooms:4
FOR SALE Brampton
Bedrooms:4 / Washrooms:4
FOR SALE Toronto
Bedrooms:3+3 / Washrooms:3
FOR SALE Whitby
Bedrooms:4+2 / Washrooms:4
FOR SALE Newmarket
Bedrooms:3 / Washrooms:3
FOR SALE Markham
Bedrooms:4 / Washrooms:3
FOR SALE Oshawa
Bedrooms:5+1 / Washrooms:5
FOR SALE Stouffville
Bedrooms:2 / Washrooms:1
FOR LEASE Toronto
Bedrooms:1+1 / Washrooms:1
FOR SALE Scarborough
CONVENIENCE
FOR SALE Markham
Daisy Mart
Experienced Full Time Agent
TOP PRODUCER 2013
TOP PRODUCER 2014
Raj Nadarajah
Sales Representative
416-333-6115
nanohomes@gmail.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned and Operated,
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229







TRUE HAIR REPLACEMENT
& COSMETICS CENTRE INC.

## Thinning hair?

We specialize in laser hair rejuvenation for women and men with beginning stages of thinning hair.

**Get your confidence back.**

Schedule a private and confidential consultation and let us give you a FREE scalp + hair analysis.

## அறுவைச் சிகிச்சையற்ற சிகை மாற்றீடு

சேவைகள்:

- அறுவைச் சிகிச்சையற்ற சிகை மாற்றீடு அறுவைச்சிகிச்சைவழி சிகை நடுகை
- பெண்களுக்கான சிகையுதிர்வு தொடர்பான தீர்வுகள்
- சிகை நடுகைத் திருத்தங்கள்
- சிகை வேர்த்தொகுதி அகழ்வு
- தோல் பராமரிப்பு

**TRUE HAIR REPLACEMENT**

Specializing in hair transplant + non-surgical.

Visit our website
www.truehair.ca

TRUE HAIR REPLACEMENT
& COSMETICS CENTRE INC.
Tel: 416-492-7873
Fax: 416-492-8664
www.truehair.ca



# காபனோரொட்சைட் நச்சுவாயு

வட அமெரிக்காவில், நாம் நமது தொன்னூறு சத வீதமான நேரத்தை வீட்டுக்குள்ளேயே கழிக்கின்றோம். அப்படி இருக்கின்ற போது, நாம் சுவாசிக்கின்ற, நமது வீட்டுக்குள் இருக்கின்ற காற்றின் தரத்தைப்பற்றி அறிந்திருக்கின்றோமா? அது சுத்தமான காற்றாகத்தான் இருக்கின்றதா?

வெளியில் உள்ள காற்றின் தரத்தைவிட வீட்டுக்குள் உள்ள காற்றுத்தான் தரம் மிகக் குறைந்தது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வீட்டுக்குள் உள்ள அசுத்தக் காற்றில் CO என்று குறிப்பிடப்படும் காபனோர் ஒட்சைட்டும் (carbon monoxide) இருக்கின்றது. வருடாந்தம் பல நூறுபேர் இந்த காபனோர் ஒட்சைட்டினை சுவாசித்து இறந்து போகின்றார்கள். ஆயிரக்கணக்கானவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மருத்துவ உதவியை நாட-வேண்டி ஏற்படுகின்றது.

காபனோர் ஒட்சைட்டு ஒரு நச்சு வாயு. இதற்கு நிறம், மணம் கிடையாது. எனவே இந்த நச்சு வாயுவின் அளவு நமது இருப்பிடங்களில் அதிகரிக்குமாயின் அதை உணர்ந்து கொள்ள முடியாது. (இதை அறிவதற்காகவே வீடுகளில் காபனோர் ஒட்சைட் monitors வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது).


சிறிய அளவு காபனோர் ஒட்சைட்டை ஒருவர் சுவாசித்தால் சுவாசிப்பதில் தடை ஏற்றடும். இலேசாக வயிற்றைப் புரட்டும், அத்தோடு தலையிடியும் ஏற்படும். இந்த அறிகுறிகள் காய்ச்சல், மற்றும் சில வருத்தங்களின் அறிகுறிகளாயும் இருப்பதால் காபனோர் ஒட்சைட்டை நாம் சுவாதித்துள்ளோம் என்று நினைப்பதில்லை. அதிக அளவு காபனோர் ஒட்சைட்டை சுவாசிப்பது மரணத்திற்கு இட்டுச்செல்லும்.

நாம் சுவாசிக்கும் போது எம்மை அறியாமலே உட்செல்கின்ற காபனோர் ஒட்சைட் குருதியைச் சென்றடைகின்றது. குருதியில் உள்ள ஒட்சிசனை அடித்துத் துரத்திவிட்டு, ஒட்சிசன் இருக்க வேண்டிய இடத்தில் தான் சண்டித்தனமாக உட்கார்ந்து விடுகின்றது. ஒரு நிமிட நேரத்தில் பெருந்தொகையான காபனோர் ஒட்சைட் நமது சுவாசப்பை வழியாக குருதியை அடைந்துவிடும். இதனால் மூளை உட்பட ஒட்சிசன் தேவைப்படுகின்ற அனைத்துக் கலங்களுக்குமான ஒட்சிசன் விநியோகம் உடனடியாக துண்டிக்கப்படுகின்றது.

குழந்தைகள், முதியவர்கள், சுவாசப்பை மற்றும் இதய நோய் உள்ளவர்கள் மிக விரைவாக காபனோர் ஒட்சைட்டினால் பாதிக்கப்படுவார்கள். இவர்களை எல்லாம் விட தாயின் வயிற்றில் உள்ள சிசு மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காபனோர் ஒட்சைட்டினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவசரசிகிட்சைகளின் பின்னால் அதிஸ்டவசமாக ஒருவர் மீண்டு வந்தாலும், அவருக்கு சில உறுப்புகள் நிரந்தரமாக பாதிப்பு அடைந்துவிடலாம். இந்த முக்கியமான உறுப்புகள் ஒட்சிசன் அதிக அளவில் தேவைப்படுகின்ற இதயமும், மூளையுமே ஆகும். இதன் பின் வாழ்க்கை துயரம் நிறைந்ததாயே அமைந்து விடும் என்று சொல்லவும் வேண்டுமா?

**குருதியைச் சென்றடைகின்ற காபனோரொட்சைட், குருதியில் உள்ள ஒட்சிசனை அடித்துத் துரத்திவிட்டு, ஒட்சிசன் இருக்க வேண்டிய இடத்தில் தான் சண்டித்தனமாக உட்கார்ந்து விடுகின்றது.**



## எவ்வாறு இந்த நச்சு வாயு வீட்டுக்குள் வந்து சேர்க்கின்றது?

எரிக்கின்ற எல்லா இடங்களிலும் பக்க விளைபொருளாக காபனோர் ஒட்சைட் உருவாகின்றது. நீங்கள் குப்பையை எரித்தாலும் சரி விறகை எரித்தாலும் அல்லது சிகரட், ஒயில், GAS, மண்ணெண்னெய் என்று எதை எரித்தாலும் இந்த காபனோர் ஒட்சைட் உருவாகின்றது.

எரிகின்ற போது ஒரு காபன் இரண்டு ஒட்சிசனுடன் இணைந்து CO2 உருவாகின்றது. ஒரு சில காபன்களுக்கு ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படும். இதனால் ஒரு காபன் ஒரு ஒட்சிசனுடன் இணைந்து CO என்ற இந்த காபனோர் ஒட்சைட் உருவாகின்றது.

வட அமெரிக்காவில் நமது வீட்டுக்குள்ளேயே இவ்வாறு 'எரித்தல்' வேலையை செய்கின்ற பல உபகரணங்களை நமது தேவைக்காக வைத்துள்ளோம். Furnaces, ranges, oven, water heaters, dryers, fireplaces என்று இவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம். இவை எரிகின்ற போது இவற்றிற்குத் தேவையான ஒட்சிசன் போதுமான அளவு செல்லாமல், ஏதாவது ஒரு காரணத்தால் தடைப்பட்டால் அங்கு பிரமாண்டமான அளவு காபனோர் ஒட்சைட் உருவாகிவிடுகின்றது. இந்நிலைமை பல மரணங்களுக்கும், பாதிப்புகளுக்கும் காரணமாகின்றது.

ஒரு மில்லியனுக்கு, 50ppm என்ற அளவில் காபனோர் ஒட்சைட் காற்றில் இருந்தால் அது பாதுகாப்பான நிலையாகும். 200 ppm இருந்தால் அந்தக் காற்றை 2-3 மணி நேரம் சுவாசிப்பவருக்கு தலையிடி ஆரம்பமாகும். 400 ppm இருக்கின்றபோது இந்த தலையிடி 1-2 மணிநேரத்திலேயே ஆரம்பமாகிவிடும். 800ppm இருக்கின்றபோது 45 நிமிடத்தில் வாந்தி ஏற்படும். இரண்டு மணிநேரத்தில் மரணம் நிகழலாம்.

## காபனோர் ஒட்சைட்டினால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் என்ன செய்யலாம்?

உடனடியாக அவரை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தி வெளிக்காற்று படும் இடத்திற்கு கொண்டு செல்லவேண்டும். அதே சமயம் எந்தவித தாமதும் இன்றி அவசர இலக்கமான 911 இலக்கத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும்.

வீட்டில் காபனோர் ஒட்சைட்டைடால் அபாயம் ஏற்படாமல் இருக்கு சில முன் கூட்டிய நடவடிக்கைகளை எடுப்பதுதான் சரியான வழியாக இருக்கும்.




காபனோர் ஒட்சைட்டை உருவாக்கக் கூடிய உபகரணங்களான Furnaces, water heaters என்பனவற்றை நல்ல நிலைமையில் இருக்கக் கூடியதாக பழுதுபார்த்துக் கொள்ள வேண்டும். தகுதி உடைய ஒருவரைக் கொண்டு (Qualified technician) வருடாந்தம் இவற்றை inspect செய்து கொள்வது மிக நல்லது. காபனோர் ஒட்சைட் monitor வீட்டின் எல்லாத் தளத்திலும் பொருத்த வேண்டும். இதனால் காபனோர் ஒட்சைட்டின் அளவு வீட்டினுள் அதிகரிக்கத் தொடங்கியதுமே மணி (alarms) அடித்து நம்மை எச்சரிக்கை செய்துவிடும்.

பூட்டிய காராஜ் இனுள் காரை இயங்கு நிலையில் வைத்திருக்கக் கூடாது. காரில் இருந்து பெருமளவு காபனோர் ஒட்சைட் உருவாகும். அண்மையில் ஒரு தாயும், மகனும் தமது வீட்டில் இறந்து போய் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மகன் தனது காரின் இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தாது, integral garageல் நிறுத்தியிருந்தார். இந்தக் காரில் இருந்து வந்த காபனோர் ஒட்சைட்டினாலேயே இவர்கள் இருவரும் இறந்து போயிருந்தனர்.

■ ■ ■

Forestbrook Pet Hospital
Dr Raj DVM
905-831-1118
fax: 905-831-4119
3-1105 Finch Avenue
Pickering, Ontario L1V 1J7
www.forestbrookpethospital.com
info@forestbrookpethospital.com

வீடு, வியாபாரம் காணி வாங்கவும் விற்கவும் மற்றும் ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் அழையுங்கள்
Call Us For All of Your Real Estate Needs...
www.sivamhomes.com

Siva Velupillai
Real Estate Sales Rep.
Call : (416) 706-2323
pvsivam@gmail.com

Arthi Velupillai
Real Estate Sales Rep.
Cell: (416) 807-6213
arthi.velupillai@gmail.com

HomeLife/Future Realty Inc.
Brokerage Independently Owned and Operated
205-7 Eastvale Driv, Markham, Ontario L3S 4N8
Bus: (905) 201-9977 | Fax: (905) 201-9229

# கைக்கெட்டியது வாய்க்கு...

- கதிர் துரைசிங்கம் -

**செல்லர்:** பட்டிமன்றம், பாட்டுப்போட்டி, நடனப் போட்டி, பேச்சுப்போட்டி என்று பல நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் இடம் பெறுகின்றன. நிகழ்ச்சி உச்சத்தைத் தொட்டாலும் சரி, பங்குபற்றியவர் உச்சத்தைத் தொட்டு வெற்றி பெற்றாலும் சரி, தொலைக் காட்சியின் முன் இருந்து பார்ப்பவர்கள் அருகில் இருப்பவருடன் இணைந்து இரசிப் பார்களே தவிர எவரும் கைதட்டிப் பாராட்டுவதில்லை. ஏன்?

**சோமர்:** இண்டைக்குத்தான் அறிவு பூர்வமான ஒரு கேள்வி கேட்டு இருக்கிறாய். நிஜமான ஒரு நிகழ்வை நாம் பார்த்து அதில் கவரப்பட்டு மகிழ்ந்து உச்சத்தைத் தொடும் போது, இதயத்தில் எழுகின்ற உணர்வலைகள் கலைஞர்களையும் நிகழ்வையும் உங்களுடன் இணைத்துக் கைகளைத் தட்டவைக்கின்றன. நிஜம் எது நிழல் எது என்பதை நினைவுபடுத்தும் தொழிலை மூளை இடைஇடையே செய்யும். கைதட்டும் ஆணை மூளையில் இருந்து பிறப்பதில்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எவ்வளவு தூரம் எம்மைக் கவர்ந்தாலும் எங்கள் கரவொலி அந்தக் கலைஞர்களை சென்றடையாது என்ற உள்ளுணர்வு எம்மைக் கைதட்டத் தூண்டாது.

**செல்லர்:** நிகழ்ச்சிகளை நேரடியாகப் பார்த்தால்தான் கைதட்ட வரும் எண்டு நீ சொல்லிறாய்.

**சோமர்:** கைதட்டிப் பாராட்டுவதால் கிடைக்கும் நன்மைகள் சில சொல்லிறன் கேளும்.

கைதட்டிப் பாராட்டுறவைக்கு மன அமைதி கிடைக்கும், நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும், ஆற்றல் திறன் அதிகரிக்கும், இருதயம் பலமாகும். நிஜமாய் நடக்கும் நிகழ்வுகளைக் கை தட்டத் தயங்கவேண்டாம். ஏன் என்றால் எல்லாமே உங்கள் கைகளில் இருக்கு.

•

**செல்லர்:** நாங்கள் சீலோன்லை விளையாடின விளையாட்டு வேறை இஞ்சை நடக்கிற விளையாட்டு வேறை.

**சோமர்:** என்ன சொல்லிறீர். Basket Ball, Cricket, Net Ball, Soccer, Volley Ball எண்டு விளையாட்டுகள் எல்லா இடமும் ஒரே மாதிரித்தான் நடக்குது.

**செல்லர்:** நான் மற்ற விளையாட்டுகள் பற்றிச் சொன்னனான்.

**சோமர்:** 11 பேர் ஊரிலை Soccerஐ காலாலை விளையாடின படியால் Foot Ball எண்டு சொல்லப்பட்டது. அமெரிக்கன் எங்கட Foot Ball விளையாட்டுக்கு இன்னும் 4 பேரைச் சேர்த்து கையாலும் காலாலும் விளையாடி அதையும் Foot Ball எண்டு சொல்லிறான். அமெரிக்கன்ரை இதே விளையாட்டை இங்கிலாந்திலை Rugby எண்டு விளையாடுறாங்கள். இலங்கையிலும் இங்கிலாந்திலும் 9 பேரோடை தடியாலை நிலத்திலை பந்தைத் தட்டி விளையாடின Hocky விளையாட்டை அமெரிக்கன் 4 பேரைக் குறைச்சு ஐஞ்சு பேரோடை Ice இல விளையாடி Ice Hocky எண்டு சொல்லிறான். ஊரிலை நாலு பேரோடை நாங்கள் மூங்கில் தடியாலை பந்தை அடிச்ச Rounders விளையாட்டை அமெரிக்கன் இன்னும் 5 பேரைச் சேர்த்து ஒன்பது பேரை வைச்சு Base Ball எண்டு விளையாடுறான்.

•

**செல்லர்:** பழங்காலத்துத் திரைப்படங்களுக்கும் இப்பத்தை திரைப்படங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**சோமர்:** பெயரிலை இருந்து வித்தியாசம் கண்டு பிடிக்கலாம்.

மூன்றாகப் பிரிக்கிறன் பார்.

| 1950க்கு முன் | 1950க்கு பின் | 2000க்கு பின் |
|---|---|---|
| திருநீலகண்டர் | திருவிளையாடல் | நானும் ரௌடிதான் |
| மீரா | சரஸ்வதி சபதம் | பிசாசு |
| சிவகவி | திருவருட்செல்வர் | பரதேசி |
| மங்கையற் கரசி | மங்கையர் திலகம் | கிருமி |
| கீசகவதம் | ஆதிபராசக்தி | புலி |
| அருணகிரிநாதர் | உயர்ந்தமனிதன் | கொம்பன் |
| நந்தனார் | உத்தமபுத்திரன் | சிங்கம் |
| ஸ்ரீவள்ளி | குணசுந்தரி | வாலு |
| சிந்தாமணி | பெண் | எலி |
| கண்ணகி | பெண்ணின் பெருமை | வேதாளம் |
| ஹரிதாஸ் | கர்ணன் | புறம்போக்கு |
| அரிச்சந்திரா | மகாகவி காளிதாஸ் | சிறுத்தை |

**செல்லர்:** தெய்வீக படங்களில் இருந்து தூய குணங்களைப் பிரதிபலிக்கும் படங்களுக்கு மாறி, இப்ப தீய குணங்களைப் பிரதிபலிக்கிற படங்களாகவும் மிருக படங்களாகவும் மாறி வருகின்றன.

•

**செல்லர்:** இப்ப விழாக்களுக்குப் போனால் நிகழ்ச்சி களைப்பார்க்க முடியாமல் கமராக் காரர் மறைக்கினம்.

**சோமர்:** தூரத்திலை இருந்து எவரையும் மறைக்காமல் எடுக்கக் கூடிய நவீன கமராக்களை நிழற்பட நிபுணர்கள் பாவிக்கிறார்கள். அதே போல ஒளிப்பட நிபுணர்களும் எவரையும் மறைக்காமல் 'கிறேன்' (துலா) பாவித்து படம் பிடிக்கிறார்கள்.

**செல்லர்:** நீர் சொன்ன ஆட்கள் இப்ப நல்ல திருத்தம். இந்த இணையத்தளக் காரர், டொட்கொம் காரர், Selfie காரர் இருந்த இடத்தில இருந்து கமராவையும் I Pad ஐயும் Cell Phone ஐயும் நீட்டிக்கொண்டு படம் எடுத்து பக்கத்திலை இருக்கிற ஆட்களையும் பின்னாலை இருக்கிற ஆட்களையும் இடைஞ்சல்படுத்தினம்.

**சோமர்:** இடைஞ்சலிலும் ஒரு இலாபமும் இன்பமும் இருக்கு. நிபுணர்களின்ரை படங்கள் வர பல மாதங்கள் எடுக்கும் வந்தாலும் நாங்கள் பார்க்க முடியாது. ஆனால் டொட்கொம், செல்பி படங்கள் இரவோடு இரவாய் இணைத்தள மூலமும் முகப்புத்தக மூலமும் உலகெங்குப் போய் சேர்ந்திடும். எல்லாரும் பார்க்கலாம்.

**செல்லர்:** அங்கைதான் பிரச்சினை. நாங்கள் எப்ப, எங்கை போனது, என்ன செய்தது ஆரோடை இருந்தது எண்ட எல்லா விபரமும் எல்லாரும் அறிஞ்சிடுவினம். உதாலை உறவுகளுக்குள்ள பிரச்சினை அதிகரிக்க வாய்ப்பிருக்கு.

•

**செல்லர்:** வாகனம் ஓட்டும்போது ஓட்டுனர் தனது இரு கைகளையும் ஓட்டும் பணிக்கு மட்டும் அற்பணிக்கவேண்டும் என்பதை அமல்படுத்த செல்போன் பாவனையையும் கஞ்சி, கோப்பி, பாண் என்று உணவு உட்கொள்வதையும் ஒப்பனை செய்வதையும் சாரதிகள் வாகனம் ஓட்டும் வேளை தவிர்க்க வேண்டும் என்று அரசு சட்டம் போட்டது. ஆனால் விபத்துகளின் எண்ணிக்கை இன்னமும் குறைந்தபாடில்லை.

**சோமர்:** சாரதி கைகளையும் கால்களையும் அற்பணித்தால் மட்டும் போதாது, மனதையும் ஒருமுகப்படுத்தி வாகனம் ஓட்டும் பணிக்கு அற்பணிக்க வேண்டும்.

**செல்லர்:** இதற்குச் சட்டம் என்ன மாதிரிப் போடலாம்.

**சோமர்:** சாரதிக்கு அருகில் இருப்பவர் ஏசுதல், பேசுதல், சைகை காட்டுதல் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும். வானொலி, ஒலி நாடா, Blue Tooth, GPS, தொலைக்காட்சி போன்ற உபகரணங்கள் வாகனம் நகர, செயலற்றுப் போக வேண்டும்.

**செல்லர்:** வரவர கைக்கு எட்டியதுகள் எல்லாம் வாய்க்கு எட்டாமல் போகும்போல.



kathir.thuraisingam@thaiveedu.com




BASEMENT APARTMENT FOR RENT

Danforth & Eglington

Two bedroom basement apartment for rent ( or a small family for share by two individuals).

Very bright and spacious with above ground windows.

Liing room, dining room, big kitchen and new washroom.

Front of Danforth bus, two minutes from Eglington bus and Brimley bus.

All amenities, No frills, pharmacies, Shoppers Drug Mart, Rexall, Dollar Store, Banks, and Brimley and Eglington Plazas.

Highway 401, hospital, Thomson Park is 5 minutes away.

Laundry is free.

Available immediately for rent.

If interested please call:

416 312 6513


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING & LOGISTICS
SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
PERSONAL EFFECTS
SHIPMENTS BY SEA & AIR
TO SRI LANKA
SRI LANKA'S
Best Clearing Facilities in
COLOMBO, KANDY & BATTICALOA
REGULAR
AIR SHIPMENTS NOW
AVAILABLE
We are expanding Now in Dubai
For further information contact
Kumar
905-673-9873
Vancouver: Randy - 604-273-4911 Edmonton, Calgary: Desmond - 780-918-2501 Montreal: Gana - 514-573-0093
Ottawa: Ignatius (Iggy) - 613-799-3519 Dubai: Gihan Jayasankha - 971564036107
Dubai
Ceycan Transhipping Inc.
C/O: RSL Freight CO LLC
Office : Flat No 306/4
Zabeel Business Centre,
Karama, Dubai U.A.E
United Kingdom
Transcontinental Shipping
Ashley House, 235 High Road
Suite 412, Woodgreen, London
Tel: 0208 889 8496
Colombo
Ceylon Shipping Lines Ltd
760, Dr. Danister De Silva Mawatha
Colombo - 09
Tel: (011) 2680301 - 308
Kandy
Ceylon Shipping Lines
175 Parangantota Road,
Mawilmada, Kandy
Tel: (812) 234356/57/59
Batticaloa
Ceylon Shipping Lines Ltd.
134 Main Street
Addalaichenai - 09
Tel: (067) 2277302
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9 Email: Ceycantrans@gmail.com web: ceycantranship.com


Grocery Store
For Sale
in Markham
Century 21
Affiliate Realty Inc. Brokerage
Office : 416-290-1200
10
Pakeer Sahadevan
Sales Rep.
416.908.6003 / 905.470.0063
LIST WITH PAKEER AND SAVE TIME AND MONEY

# தாய்வீடு 12th ITaFF -2016

## மே 2016 இல் நடைபெறவுள்ள சர்வதேச தமிழ்த்திரைப்பட விழா படைப்புகளுக்கான கோரல்

தாய் வீடு பத்திரிகையும் சுயாதீன கலை திரைப்பட மையமும் கனடாவின் ரொறன்ரோ நகரில் நடத்தும் சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புகள் ஆங்கில துணைத் தலைப்புகளைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

- படைப்புகள் மார்ச் 31, 2016க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புகள் 20 நிமிடங்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புகளின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புகளுடன் அதில் பங்குபற்றிய தொழினுட்பக் கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புகளின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

மேலதிக தொடர்புகளுக்கு

படைப்புகள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

M.Ragunathan
4 Castlemore Avenue
Markham, ON
L6C 2B3
Canada

1-416-857-6406
1-416-450-6833;
1-416-832-0929;

rathan@rogers.com, iafs@rogers.com

www.iafstamil.com

OPENING SPECIALS

With This Ad
3 Months Free
Valid Until Feb 28, 2015

NOBLE REIGN SOLUTIONS
Trusted in your Neighbourhood. Trusted for your Family.

$23.95 per Month
with 36 Months Contract
One-Time Activation & Programming Fee of $0.00

$24.95 per Month
with No Contract
One-Time Activation & Programming Fee of $100.00

TAKE OVER SYSTEM $11.95 NO CONTRACT
One-Time Activation & Programming Fee of $100.00

WWW.NOBLEREIGN.COM
3341 Markham Road Unit B101 Scarborough, ON M1X 0A5
1 416 710 5050
1 877 294 9669
1 416 800 0493
1 866 518 5674

# Hangoverஇலிருந்து விடுபட...

**மது அருந்துதல் உடல் நலத்துக்கு தீங்கானது என பொதுவாகவே எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. ஆனால் பலருக்கு, தொழிலகங்களில் நடைபெறும் வருட இறுதி விருந்தொன்றிலோ அல்லது நெருங்கிய நண்பனின் திருமண விழாவிலோ அல்லது உறவினர்களின் சந்திப்பொன்றிலோ மது அருந்துவது, தவிர்க்க முடியாதது ஆகிவிடுகிறது. சிலருக்கு 'கௌரவத்தின் அடையாளம்', 'உறுதியான நட்பை வெளிப்படுத்தும் முறை', 'காதலி திட்டிவிட்டதால்(அல்லது வெட்டிவிட்டதால்) சோகம்' என ஏதாவது ஒரு காரணத்தால் 'அருந்தியே' ஆகவேண்டியிருக்கிறது. இந்த 'அருந்துதல்' மறுநாட்காலையில் பெரும் 'வருந்துதலையும்' ஏற்படுத்திவிடுகிறது. இந்த 9 பிரச்சினையைத் தவிர்க்க சில வழி முறைகளையே இங்கு பார்க்கவிருக்கிறோம்.**

- விவேகநாதன் -

இரவு படுக்கைக்கு வருகிறீர்கள். எப்படி வீட்டுக்கு வந்தோம் என்பது சரியாக ஞாபகமில்லை. புவியீர்ப்பு சக்தி குறைந்தது போலத் தெரிகிறது. நியூட்டன் தவறிழைத்து விட்டாரோ என எண்ணத் தோன்றுகிறது. படுக்கையிலிருந்து பறந்துபோய் கூரையில் மோதி தரையில் விழுந்துவிடுவீர்கள் போலவும் இருக்கிறது. கண்ணை மூடினால் எல்லாம் சுழல்வது போலவும், நீங்களும் சுழன்று வந்து கட்டிலால் விழுந்து விடுவீர்கள் போலவும் தெரிகிறது. அதற்காகக் கண்ணைத் திறந்து வைத்திருப்பதும் மிகச்சிரமமாக இருக்கிறது. வாந்தி வரப்போவது போல் ஏதோ செய்கிறது. இதயம் பலமாக அடித்துக் கொள்கிறது. நீண்ட போராட்டத்துக்குப் பிறகு எப்படியோ நித்திரையாகி விடுகிறீர்கள்.

காலையில் கண்விழித்ததும் தலையில் பத்து கிலோ பாரத்தை ஏற்றி வைத்தது போலத் தெரிகிறது. தலையைத் தூக்க முடியவில்லை. தொண்டை சுத்தமாக வரண்டு போய்விட்டது. யாருடையதோ 'அடைத்துக்கொண்ட' இரவல் குரலில் பேசுகிறீர்கள். படுக்கை அறையிலிருந்து குளியலறை ஒருமைல் தூரத்திலிருப்பதாக உணர்கிறீர்கள். இரவு 'பார்ட்டி'யில் மது அருந்தியது ஞாபகம் வருகிறது. மனைவியும், பிள்ளைகளும் திட்டுவது தலைவலியை அதிகரிக்கிறது. மதுவின் மீதும், தொடர்ந்து குடிக்கும் படி வற்புறுத்திய நண்பன் மீதும் கோபம் கோபமாக வருகிறது. உங்களுக்கு வந்திருப்பது இரவு அருந்தியதால் ஏற்பட்ட Hangover என்பது சொல்லாமலேயே தெரிந்திருக்கும்.

### Hangover இன் பின்னணியிலுள்ள சில காரணிகளைப் பார்ப்போம்:

- **Dehydration** - மது அருந்தும்போது உடலிலுள்ள நீர் இழக்கப்பட்டுவிடுகிறது. இதனாலேயே மறுநாள் நாக்கு வரண்டு, உடல் வியர்த்து பேயறைந்தவர்போல் ஆகிவிடுகிறீர்கள். (பேய் யாருக்காவது அறைந்திருக்கிறதா என்று கேட்டுவிடாதீர்கள்)
- **Hypoglycemia** - Alcohol உங்கள் ஈரலில் சேமிக்கப்பட்டிருக்கும் சக்தியை விரைவாக உடைத்து இழக்கச் செய்துவிடுகிறது. இதனாலேயே காலையில் இரண்டு நாள் உணவருந்தாமல் இருந்தவர்போல் உணர்கிறீர்கள்.
- **Congeners** - இவை மது பானங்களில் இருக்கும் சில வகை இரசாயனங்கள். இவை இருண்ட (dark colour alchhol) நிறத்தில் இருக்கும் மது பானங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன. இவையும் Hangoverக்கு ஒரு காரணம்.
- **Acetaldehyde** - மது பானத்திலிருக்கும் எதனோலை, உடல் மேற்சொன்ன வஸ்துவாக மாற்றிவிடுகிறது. இதுவே வியர்த்தல், தலைவலி, வாந்தி போன்றவற்றை ஏற்படுத்துகிறது.
- மதுபானம் உங்கள் உடலிலுள்ள நித்திரைக் கடிகாரத்தை முற்றிலிலுமாக குழப்பி விடுகிறது. இதனாலேயே அதிகாலையிலேயே எழுந்து அதன்பிறகு நித்திரை வராது தவித்துக்கொண்டிருந்துவிட்டு, பகல் முழுவதும் தூங்கி வழிகிறீர்கள்.

சரி.. Hangoverஐத் தவிர்ப்பதுதான் எப்படி? மிகச்சிறந்த வழி குடிக்காதிருப்பது. (மது அருந்துவது உடல் நலத்துக்கு தீங்கானது).

**நீங்கள் அருந்தும் ஒவ்வொரு பானத்திற்கு இடையிலும் ஒரு கிளாஸ் நீர் அருந்துங்கள். முடிந்தால் இரண்டு கிளாஸ் அருந்துங்கள். இது உங்கள் நீரிழப்பைக் குறைக்கும்.**



ஆனால் மது அருந்தியே ஆகவேண்டும் என்றால் என்ன செய்வது.

### விருந்துக்கு போவதற்கு முன்...

வெறுமையான வயிற்றுடன் போகாதீர்கள். அரைப்பங்கு இரவு உணவை அருந்திவிட்டுச் செல்லுங்கள். வயிற்றிலிருக்கும் உணவு, அல்கஹோல் விரைவாக உறிஞ்சப்படுவதைத் தவிர்க்கும். அத்துடன் Hypoglycemiaவையும் தவிர்க்கும். நிறைய.... நிறையவே நீர் அருந்தி விட்டுச் செல்லுங்கள். தாகமான நிலையில் மது அருந்தத் தொடங்காதீர்கள். அது உங்களை விரைவாக Dehydrate ஆக்கிவிடும். சில ஆய்வுகள் 50mg Vitamin B6 குளிகை ஒன்றை எடுக்கும் படி சொல்கின்றன. 50mg குளிகை ஒன்றை விருந்துக்கு முன்பும், மற்றொரு 50mg குளிகையை மது அருந்தும் போதும், மற்றொரு 50mg குளிகையை இரவு படுக்கைக்கு செல்லும் போதும் எடுக்கும்படி அந்த ஆய்வுகள் கூறுகின்றன. (www.annals.org/cgi/content/full/132/11/897)500mgக்கு அதிகமாக இந்தக்குளிகையை உட்கொள்வது ஆபத்தானது.

### விருந்தின்போது...

நீங்கள் அருந்தும் ஒவ்வொரு பானத்திற்கு இடையிலும் ஒரு கிளாஸ் நீர் அருந்துங்கள். முடிந்தால் இரண்டு கிளாஸ் அருந்துங்கள். இது உங்கள் நீரிழப்பைக் குறைக்கும். சிறுநீர் இருண்ட வர்ணத்தில் வெளியெறினால் உடல் அதிகளவு நீரை இழந்துவிட்டதாகக் கொள்ளுங்கள்.

ஒருவிதமான பானத்தையே அருந்துங்கள். இதிலிருந்து அதற்கும், அதிலிருந்து இதற்குமென மாற்றி மாற்றி அருந்தாதீர்கள்.

இருண்ட வர்ணத்திலுள்ள பானங்களைத் தவிர்ப்பது நல்லது. Congeners குறைவாக உள்ள மது வகைகள் குறைந்தளவு Hangoverஐ ஏற்படுத்துவதாக The medical journal BMJ என்ற மருத்துவ சஞ்சிகை கூறுகின்றது.(http://student.bmj.com/issues/02/06/education/184.php). அது குறைந்தளவிலிருந்து அதிக அளவு Congeners உள்ள மதுவகைகளை இவ்வாறு பட்டியலிட்டுள்ளது.

1. Pure ethanol
2. Vodka
3. Gin
4. White wine
5. Whisky
6. Rum
7. Red wine
8. Brandy

மதுவுடன் கலக்கும் 'கோலா' அல்லது சோடா போன்ற அல்கஹோல் அற்ற பானங்களை அதிக அளவிலும் மதுவை குறைந்த அளவிலும் கலந்து குடிக்கலாம். இது நீங்கள் குறிப்பிட்டளவு மதுவை குடிக்க எடுக்கும் நேரத்தை அதிகரிக்கும்.

ஒரு மிடறு அருந்தியதும் நிறைய, கொறிப்பதற்கு வழங்கப்படும் உணவுகளை உண்ணுங்கள். அது அவித்த மரக்கறிகளாய் இருந்தால் நல்லது. இரண்டாவது தடவை கிளாஸில் தனியே கோலாவையோ சோடாவையோ நிரப்பி நீங்கள் தொடர்ந்து மது அருந்திக் கொண்டிருப்பதாக உங்கள் நண்பர்களுக்கு காட்டலாம். போதையிலிருப்பவர்கள் பெரும் பாலும் உங்களை சந்தேகப்படமாட்டார்கள்.

### படுக்கைக்கு போவதற்கு முன்னர்:

நிறையத் தண்ணீரும், ஒரு கிளாஸ் தோடம் பழச்சாறும் அருந்துங்கள். மருத்துவர்கள் தோடையிலுள்ள VitaminCயானது, ஈரல், மதுவை விரைவில் சமிபாடடைய வைக்கும் என்கிறார்கள். (www.bbc.co.uk/ health/conditions/hangover1.shtml). முடிந்தஅளவு நிறையத் தண்ணீரை அருந்துங்கள்.

முடிந்தால் படுக்கைக்கு முன் சிறிதளவு உணவருந்துவது நல்லது. இது குருதியிலுள்ள சர்க்கரையின் அளவு குறைந்துபோகாமல் பார்த்துக்கொள்ளும். Tylenol போன்ற தலைவலி மாத்திரைகளை உட்கொள்ளாதீர்கள். மது அருந்தியபின் இவ்வாறான மாத்திரைகளை உட்கொள்வது ஈரலுக்குத் தீங்காகலாம் (Postgraduate Medicine).

### மறுநாள் காலையில்...


காலையில் எழுந்தவுடன் முதல் பந்தியில் சொன்ன குணங்குறிகள் தெரிகின்றனவா? திரும்பவும் படுக்கைக்கு சென்றுவிடுங்கள். இப்போது உங்களுக்கு தூக்கம் தேவைப்படுகிறது. அன்று வேலைக்கு செல்லவேண்டியிருந்தால் "சுகவீனமாயிருப்பதால் வேலைக்கு வரமுடியவில்லை" என மேலதிகாரிக்கு கூறுவது புத்திசாலித்தனமானது. நிறைய தண்ணீர் குடியுங்கள். இழந்த தண்ணீரை சமன்செய்ய நிறையவே தண்ணீர் தேவைப்படும். முதல் கிளாஸ் தண்ணீருடன் ஒரு தேக்கரண்டி உப்பும், ஒரு தேக்கரண்டி சீனியும் கலந்து அருந்துவது நல்லது. கோப்பி போன்ற Caffeine உள்ள பதார்த்தங்கள் எதையும் குடிக்காதீர்கள். அதிக தாகமாயிருந்தால் மென்பானங்களையோ, பழச்சாறுகளையோ குடிக்கலாம். மாப்பொருளும், புரதமும் உள்ள உணவை உட்கொள்வது நல்லது. மது இன்னமும் உங்கள் உடலில் கலந்திருப்பதால் தலைவலி மாத்திகைளைத் தவிர்ப்பது நல்லது.

Fresh Air இப்போது உங்களுக்கு நிறையவே தேவைப்படுவதால், மீண்டும் தூங்கப் போவதற்கு முன்னர் ஒரு நடை வெளியே சென்று வாருங்கள். முடியாவிட்டால் யன்னலை சிறிது நேரம் திறந்து வையுங்கள். தலைவலி அதிகமாயிருந்தால் ஐஸ் பையொன்றை தலையில் சில செக்கன்களுக்கு வைத்திருங்கள்.

முட்டை சாப்பிடும்படி ஆங்கிலேயர்கள் கூறுகிறார்கள். சில கலாச்சாரங்களில் நாயினுடைய உரோமத்தை முகர்ந்து பார்ப்பது hangoverஐ வரைவில் குணமாக்கும் என்று நம்புகிறார்கள். குளிப்பது அல்லது முழுகுவது நல்லது. சுடுநீரிலும், குளிர்நீரிலும் மாறி மாறி குளிப்பது நல்லது. இவற்றுக்கெல்லாம் அடுத்தபடியாக ஒரு நிவாரணி உண்டு. அது காலம். ஆம் மறுநாள் எல்லாம் குணமாகி விடும். இப்போது ஓய்வும், படுக்கையுமே உங்களுக்குத் தேவை. ஏன் இந்தத் தொல்லையெல்லாம் குடிக்காமலேயே இருந்து விடுங்களேன். மீண்டும்... மது உடல் நலத்துக்கு தீங்கானது.

■ ■ ■


கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
**Raphael Maharaja**
Barrister & Solicitor

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

MOTOR VEHICLE ACCIDENT

Fractures | Spinal Cord Injury | Brain or Head Injury | Internal Injuries | Scarring or Disfigurement | Catastraphic Injuries

FOR CASH SETTLEMENT KNOW YOUR RIGHTS AGAINST THE INSURANCE COMPANY.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

Over 30 Years Combined Experience

Even if you are at fault:
Unemployed . Employed
Passenger . Pedestrian
Cyclist . Travelling in
public transit . Student
Housewife.




DON'T BE MISLEAD INTO TAKING A POOR OR SMALL
CASH SETTLEMENT
IF YOU ARE INJURED PHYSICALLY AND/ OR PSYCHOLOGICALLY
CALL US NOW!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**தீபன்**

**(416) 505-9804**

**(416) 831-4444**

24 Direct Line

2190 Warden Ave., Suite 202,
Toronto, ON M1T 1V6



JRS College

"Committed to providing quality training"

**International Students**

Now we accept international students

# PSW

## Part-time Program starts in November.

**STUDENT TESTIMONIALS**

"I have chosen Early Childcare Assistant diploma program which is 36 weeks in length at JRS College of Business and Health Care Inc. To do this diploma program at JRS College, I received over $34, 000 from government." **Mathu**

"I have chosen 40 weeks of Health Office Administrator diploma program at JRS College of Business and Health Care Inc. Due to long duration program I received $44, 000 through Second Career to cover my studies, day care, living allowance and transportation." **Thiny**

"With the help of JRS College of Business and Health Care Inc., I am able to take Accounting and Payroll Administration diploma program with the government funding of $36, 000. The main reason for me to get high amount is since the program duration is 45 weeks." **Suba**

# Food Handler Training

December 06, 2015 @ 10.00 am (Sunday)

## 11 Diploma Programs

| | |
|---|---|
| -Community Service Worker | (52 Weeks) |
| -Accounting & Payroll Admin-PT | (50 Weeks) |
| -Pharmacy Assistant | (46 Weeks) |
| -Accounting & Payroll Admin | (45 Weeks) |
| -Computer Network & Security | (40 Weeks) |
| -Health Office Administrator | (40 Weeks) |
| -Early Childcare Assistant | (36 Weeks) |
| -Personal Support Worker-PT | (35 Weeks) |
| -Personal Support Worker | (32 Weeks) |
| -Computerized Accounting | (30 Weeks) |
| -Office Assistant | (16 Weeks) |

**Contact info**

**(Midland & Finch)**
**330-4168 Finch Ave East**
**Scarborough, ON M1S 5H6**
**416-292-2455**

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

# கனடாவில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

- த. சிவபாலு -

## கனடாவில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் இயங்குநிலை:

மொழி கற்றல் - கற்பித்தற் செயற்பாடு மிகவும் நுட்பமான முறைமைகளைக் கொண்டதாக வளர்ந்து வந்துள்ளது. மொழியியல் என்பது மொழியின் பிறப்பு, அதன் வளர்ச்சி மாற்றங்கள், கற்றல்-கற்பித்தற் செயல்களை உள்ளடக்கிய ஒரு முழுமையான மொழியாற்றலைத் தருவதாக அமைகின்றது. மொழிகற்றல் என்பது கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்னும் திறன்களை அடிப்படையாகக் கொண்ட மொழியறிவினை விருத்தி செய்துகொள்ளும் படிமுறைச் செயற்பாடாகும். கனடாவில் வாழும் அனைத்து இனத்தினரும் தமது மொழி, பண்பாடு, பாரம்பரியங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு கனடா அரசாங்கம் அதற்கான வாய்ப்பினை வளங்கியுள்ளது.

கனடாவில் மொழி தொடர்பான விடயங்கள் பல வகையினவாகப் பகுக்கப்பட்டுள்ளன. முதலாவதாக மத்திய அரசாங்கம் ஆங்கிலம், பிரஞ்சு ஆகியவற்றை உத்தியோகபூர்வ மொழிகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அடுத்து, கனடாவின் முதற் தேசிய இனம் என அழைக்கப்படும் பழங்குடியினர் பேசும் மொழிகளான இனுயிற் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் வழங்குகின்றது.

தொடர்ந்து, குடிவரவாளர் பேசும் மொழிகள் பலவும் அரசின் பல்கலாச்சார கொள்கைக் கமைய ஊக்குவிக்கப்பட்டு பேணப்படுகின்றன. இவை வழமையாகப் 'பாரம்பரிய மொழிகள்' என அரசாங்க அலுவலக ஆவணங்களில் குறிப்படப்படுபவையாகும். இந்த மொழிகள் கனடா மொழியியல் பாரம்பரியத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றன.

## கனடாவின் அனைத்துலக மொழிக்கொள்கை:

ஒவ்வொரு மாணவரும் வேறுபாடுகள் நிறைந்த சூழ்நிலையில் கற்றுக்கொள்ள நம்பிக்கை, விழுமியங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய முழுமையான செயற்பாட்டு முறைமைகளை பயன்படுத்துவதில் மிகவும் இறுக்கமான நடைமுறைகளைப் பெரும்பாலான பாடசாலைகள் கொண்டுள்ளன. தமிழ் மொழி கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிலும் இவை முன்வைக்கப்படுகின்றன. கனடா போன்ற புலம்பெயர் நாடுகளில் அனைத்துலக மொழிகள் கற்கைநெறி கல்வியியலாளர்களின் அறிவுறுத்தலுக்கமைய பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இலகுவாக மொழியை இரண்டாம் மொழியாகக் கற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

குடிவரவாளர்களின் பிள்ளைகள் தமது பாரம்பரிய மொழிகளைக் கற்பதன் மூலம் தமது வேர்களை அறிந்துகொள்ளவும் தங்கள் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும் என்பது கனடிய அரசாங்கதின் அடிப்படைக் கொள்கையாக உள்ளது. 1916ம் ஆண்டு பாரம்பரிய மொழிகளைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை பிள்ளைகளுக்குப் பெற்றுத்தர வேண்டும் என்னும் கோரிக்கை விடப்பட்டது. இதன் பயனாக மனிரோபா மாகாணத்தில் முதன் முதலில் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆங்கிலம், பிரஞ்சு மொழிகள் தவிர்ந்த ஏனைய மொழிகளைக் கற்பதற்கான காரணிகளாக பின்வருவன முன்வைக்கப்பட்டுள்ளன.

- தாய்மொழி பற்றிய அறிவையும் தெளிவையும் விருத்தி செய்தல்
- சொந்தக் கலாச்சாரம், பாரம்பரியங்களை அறிந்து கொள்ளுதல்
- நுண்மதியறிவை வளப்படுத்துதலும் வளர்த்தலும்
- ஏனைய கலாச்சாரம் பற்றி அறிந்துகொள்ளுதலும் அதனை ஏற்றுக்கொள்ளுதலும்
- வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்தல்
- உலக நாடுகளுக்குச் செல்வதற்கு வாய்ப்பை உருவாக்குதலும் இலகுவாக்குதலும்
- வேற்று மொழி பேசுபவர்களோடு ஊடாடவும் மகிழ்ச்சிகாகப் பழகவும் வாய்ப்பை ஏற்படுத்தல்
- மனிதகுல வேறுபாடுகளை மதித்தலும் ஏற்றுக்கொள்ளுதலும் விருத்தி செய்தலும்
- வேற்று மொழிக்கலாச்சாரம் பற்றிய பரந்த அறிவைப் பெற்றுக்கொள்ளுதல்
- தேசிய இனங்களோடும் சமூகங்களோடும் தொடர்பு கொள்ளுதல்

போன்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டு, தமிழையும் எழுத்துத் தமிழையும் கற்றுக் கொள்ளுவதில் பிள்ளைகளுக்கு அதிக இடர்பாடுகள் இல்லை எனலாம். ஆனால் இன்று தமிழ் தாய்மொழி அல்லது வீட்டு மொழி என்ற நிலை மாறி இரண்டாவது மொழியாகக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. மாணவர்களின் கற்றற் செயற்பாட்டில் கல்வி மொழி அல்லது முதலாவது மொழியின் செல்வாக்கு தமிழ் கற்றலில் ஆதிக்கத்தினைச் செலுத்தி வருகின்றது. பாரம்பரியக் கற்பித்தல் முறைமை முற்றாகக் களையப்பட்டு மாணவர்களின் பின்னணிக்கேற்ப கற்றல் - கற்பித்தல் செயற்பாடு வகுப்பறைகளில் இடம்பெறுதல் வேண்டும். ஆனால் இதனைத் திட்டமிட்டு தமிழ் ஆசிரியர்கள் செயற்படுத்துகின்றார்களா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

றான் அவனால் ஒன்றும் எழுத முடியவில்லையே என ஆதங்கப்பட்டதோடு மட்டுமன்றி ஆசிரியர்களையும் குறை கூறினார். அவருடைய சகோதரரின் பிள்ளையும் அதே வகுப்பில் கற்று வந்தது. அந்தப்பிள்ளை நன்றாக தமிழ் எழுதவும் வாசிக்கவும் தெரிந்திருந்தது. அந்தப்பிள்ளைக்கும் அதே ஆசிரியர்கள் தானே கற்பித்திருந்தார்கள் என்றேன். அவர் வாயடைத்துப் போனார். காரணம் வீட்டில் பிள்ளைகளோடு பெற்றோர் செலவிடும் நேரமும் அவர்கள் தமிழ் பேசுவதிலும் எழுதுவதிலும் தாக்கத்தினைக் கொண்டுள்ளது என்பதனைப் பலரும் உணர்ந்து கொள்வதில்லை.



அவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்கத்தோடு பாரம்பரிய மொழிகளின் கற்கைக்கான வாய்ப்பினைக் கனடிய அரசு நடைமுறைப் படுத்தி வருகின்றது.

கனடா அரசு கல்விச்சபைகள் ஊடாக ஐம்பதிற்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பினை வழங்கியுள்ளது. ஒவ்வொரு மொழியையும் இலகுவாகக் கற்றுக் கொள்ளும் வகையில் பாடப் பொருட்களை 'The Generic Curriculaum for Heritage Language Programs' என்னும் பெயரில் பாடத்திட்டத்தை வகுத்தும் தந்துள்ளது. அதன் அடிப்படையில் திட்டமிட்டு செயற்படுத்தும் வழிவகைகள் இலகுபடுத்துப்பட்டுள்ளது. இவை மாணவர் மையக் கல்வியை முதன்மைப்படுத்துவதாக உள்ளது. இது காறும் மேற்கொள்ளப்பட்டு வந்து ஆசிரிய மையக் கல்வி குப்பைத்தொட்டியில் போடப்பட்டு, மாணவர்கள் செயற்பட்டுக் கற்றுக் கொள்ளும் மாணவர் மையக் கற்றல் முறைமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

## பேச்சும் உரையாடலும்:

மொழி கற்றல் மாணவர்களின் அன்றாடச் செயற்பாடுகளில் ஒன்றாகும். மொழி பேச்சு, எழுத்து என்னும் இரட்டைத் தன்மைகளைக் கொண்டது. பிள்ளைகள் மற்றவர்கள் பேசுவதையும் எழுதுவதையும் கேட்டும் பார்த்தும் பேசியும் எழுதியும் வருகின்றார்கள். ஆரம்ப வகுப்புக்களில் பேச்சுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்பது கல்வியியலாளர், மொழியியலாளர் மற்றும் உளவியலாளர்களின் கருத்தாகும். ஈழத்தமிழர்களின் பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. பேச்சுத்

## மொழியைத் திருத்தமாகப் பேசக் கற்றுக்கொள்ளுதல்:

பிள்ளைகளோடு உரையாடும்போது எழுத்துத் தமிழோடு இயைந்ததாக இருத்தல் வேண்டும். பேச்சுத் தமிழ்ப் பயிற்சியினை வகுப்பறைகளில் முன்னுரிமைப்படுத்துதல் வேண்டும். புத்தகத்தைக் கொடுத்துவிட்டு பார்த்து எழுத வைப்பதாகவே கற்றல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மாணவர்களிடையே வெறுப்பையும் சலிப்புத்தன்மையையும் ஏற்படுத்துவதோடு தமிழ் மொழியினைக் கற்பதற்கு மாணவர்கள் மறுப்பதற்கும் காரணிகளாக அமைகின்றன. பாரம்பரிய ஆசிரியர் மையக் கற்பித்தல் முறைகள் இன்றும் பல தமிழ் ஆசிரியர்களினால் பின்பற்றப்படுகின்றன. மாணவர்களை உரையாட வாய்ப்பினை நல்கி அவர்கள் உரையாடும்போது விடும் உச்சரிப்புக் பிழைகளையும் ஆங்கிலச் சொற்களையும் படிப்படியாக நீக்கிவிட அவர்களுக்கு நாளாந்தம் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். பாட்டுக்களைத் திரும்பத் திரும்பப்பாடுதல், படம் பார்த்துக்கதை சொல்லுதல் போன்றவற்றால் பேச்சுப்பயிற்சி அளிக்கப்படல் வேண்டும். தமிழில் உச்சரிப்பு மிகவும் முக்கியமானது. ல,ழ,ள - ந,ன,ண மற்றும் ர, ற போன்ற எழுத்துகளின் உச்சரிப்பு வேறுபாடுகளை மாணவர் நன்கு உணரும் வகையில் கற்பிக்கப்பட வேண்டும்.

பெரும்பாலான பெற்றோர் பிள்ளை எவ்வளவு எழுதியிருக்கின்றது என்ற எதிர்பார்ப்பில் அவர்களின் எழுத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். கடந்த ஆண்டு ஆறாம் வகுப்பில் கற்கும் ஒரு மாணவரின் தந்தை என்னுடன் உரையாடும்போது கடந்த ஆறு ஆண்டுகளாக எனது மகன் தமிழ் கற்கின்

பெற்றோர், மற்றைய பாடங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தமிழுக்குக் கொடுப்பதில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கிழமையில் இரண்டரை மணித்தியாலங்கள் தமிழைக் கற்றுவிட்டு அதனை வீட்டில் பயிற்சி செய்யாவிட்டால் பிள்ளைகள் தமிழைக் கற்றுக் கொள்ள முடியாது என்பதனைப் பெற்றோர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஓராண்டில் அனைத்துலக மொழிக்கற்கை நெறியில் 30 கிழமைகள் இரண்டரை மணித்தியாலங்கள் மட்டுமே கற்றல் - கற்பித்தச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. தமது சகோதரங்கள், நண்பர்கள், பெற்றோர்களோடு ஆங்கிலத்தில் உரையாடும் பிள்ளைகள் தமிழ் மொழியைத் திருத்தமாகவும் சரளமாகவும் பேசுவதற்கு இயலாதவர்களாக இருப்பதற்கு முக்கிய காரணிகள் பெற்றோரே என்பதனை ஏற்றுக்கொண்டு அவர்கள் பிள்ளைகளோடு தமிழில் பேசுவதோடு அவர்களுக்குப் போதும் இடங்களில் உள்ள எழுத்துகளை வாசிக்கச் சொல்லிக் கொடுத்தாலே தமிழை அவர்கள் இலகுவாகக் கற்றுக்கொள்ளுவார்கள்.

## எழுத்து:

எழுதக் கற்றுக்கொள்ளுதல் மிக முக்கியமான கூறு. எழுத்தின் வரிவடிவத்தினை எழுதப்ழகுவது இளம் மழலையர் தொடக்கம் மிகவும் கடினமானது. எழுதக் கற்றுக்கொள்ளும் முறைகளுக்கு உரிய நவீன முறைகளை இன்றும் பெரும்பாலான ஆசிரியர்கள் பின்பற்றுவதில்லை. 'அ' வில் தொடங்கி உயிர் எழுத்துக்களை முதலில் எழுதப் பயிற்சி

தொடர்தல் 54ம் பக்கம்

# கனடாவில் தமிழ்...

53ம் பக்கத் தொடர்ச்சி...

அளிக்கின்றார்கள். மொழியியலாளர்கள் இவ்விதம் உயிர் எழுத்துக்களை முதலில் பிள்ளைகளுக்கு எழுதக் கற்றுத்தருவது தவறு என்ற பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றைத் திருத்தமான, இலகுவான முறைகளில் பயின்று கொள்ள வழிகளை எடுத் தாண்டுள்ளனர்.

உயிர் மெய் எழுத்துக்களில் உள்ள 'ட', 'ப', 'ம' போன்ற எழுத்துகளைத் தொடக்கத்தில் எழுதப் பழகப் பயிற்சி பெற்றுக் கொள்ளுவது பிள்ளைகளுக்கு இலகுவாக அமையும்.

ஆரம்ப வகுப்புகளில் பத்து விழுக்காடான நேரம் எழுத்துப் பயிற்சிக்கும் 80 தொடக்கம் 90 வரையான விழுக்காடு பேச்சுப் பயிற்சிக்கும் ஒதுக்கப்படவேண்டும் என்பது பாடத் திட்ட வகுப்பாளர்களின் எதிர்பார்ப்பு என்பதனை பல ஆசிரியர்கள் கருத்திற் கொள்ளுவதில்லை. பெரும்பாலான ஆசிரியர்களால் மாணவர்களுக்கு எழுத்துப் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அது மொழியை முழுமையாகக் கற்றுக்கொள்ள வைக்குமா என்பதில் கவனம் செலுத்தாமையே அதற்குக் காரணமாகும். இடைநிலை மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவர்கள் செய்யுட்களைப் பதம் பிரித்து வாசிக்கக் கற்றக்கொள்ளும் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். சொற்களைப் பிரித்து எழுதுவதும் சேர்த்து எழுதுவதும் அவர்களின மொழியாற்றலை வளர்ப்பதாக அமையும்.

## வாசிப்பு:

'கண்டதும் கற்கப் பண்டிதன் ஆவான்' என்பது பழமொழி. ஆம் எங்கெங்கெல்லாம் தமிழ் காணப்படுகின்றதோ அவற்றை வாசிப்பதன்மூலம் அறிவு விருத்தியடைகின்றது. ஒரு நாள் தொடருந்து வண்டியில் எனக்கு எதிர்ப்பக்கத்தில் இரண்டு பிள்ளைகளோடு பயணித் அவர்களின் அன்னை அவர்களிடம் கண்ணில் பட்டவற்றை எல்லாம் வாசிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டு வந்தார். சரியான உச்சரிப்பைச் சொன்ன பிள்ளைக்கு பாராட்டையும் தெரிவிக்கத் தவறவில்லை.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிள்ளைகளைக் கற்க வைக்கும் முயற்சி முக்கியமானது. அது ஆசிரியர்களிடம் மட்டுமல்ல பெற்றோரிடமும் உள்ளது.

பொதுவாகக் கீழ் வகுப்புக்களில் ஆசிரியர்கள் படங்களுக்குக் கீழ் உள்ள சொற்களைக் வாசித்தல், இடைவெளி நிரப்புதல், வினாக்களுக்கு விடை எழுதுதல், சொற்களைக் கண்டுபிடித்தல் போன்றவற்றின் மூலம் பிள்ளையை வாசிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள். தமிழ் மொழியின் எழுத்து வடிவங்கள் குறில், நெடில் என்னும் பாகுபாட்டைக் கொண்டுள்ளன. ஆங்கில எழுத்துக்களைப் போலன்றி குறுகிய ஒலிக்கும் நீண்ட ஒலிக்கும் எழுத்தில் வேறுபாட்டைக் கொண்டுள்ளமை தமிழின் சிறப்பு எனலாம். குறில் எழுத்துக்களுக்கு ஒரு மாத்திரை ஒலி அளவும், நெடில் எழுத்துக்களுக்கு இரண்டு மாத்திரை ஒலி அளவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த ஒலி அளவு மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கப் பயன்படுத்தப்படவேண்டும். இதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். தமிழை சரியாக வாசிக்கக் கற்றுக்கொள்ள மாணவர்களுக்கு நிறுத்தக் குறிகள் பற்றி தெளிவும் அறிவுறுத்தப்படுதல் வேண்டும்.

## கற்றல் வளப் பயன்பாடு:

தமிழ் கற்பதில் இன்று இணையத்தளம் முக்கிய பங்காற்றி வருகின்றது. பல்வேறுபட்ட கற்றல் துணைவளங்கள் அங்கு உள்ளன. இவற்றை வகுப்பறையில் பயன்படுத்த முடியுமானால் மாணவர்கள் இலகுவாகத் தமிழைக் கற்றுக்கொள்வார்கள். மாணவர்களைக் கற்கவைப்பதில் தனிவேலை, இணைவேலை, குழுவேலை போன்ற முறைகளை அறிமுகப் படுத்தி அவற்றைச் செயல்முறைப்படுத்தலாம். இன்று ரொறன்ரோ பாடசாலைகளில் கரும் பலகைக்குப் பதிலாக Smart Board அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பெரும் திரைகளில் படம் காட்டுவதுபோன்று செயற்படத் தக்க கற்பித்தல் சாதனமாக இது உள்ளது. கணினியின் துணை கொண்டு கதைகள், எழுத்துகள், ஒலிவடிவங்களைக் கற்றுக் கொள்ளத்தக்க ஒன்றாக உள்ளது. இவற்றை தமிழ் மொழி கற்பதிலும் பயன்படுத்தினால் மாணவர்களின் மொழித்திறன் இலகுவாகப் பயன்படுத்தப்படும்.

பல பாடசாலைகளில் கரும்பலகையை மட்டுந்தான் தமிழ் மொழி ஆசிரியர்கள் பயன்படுத்தும் நிலைமை இருந்துவருகின்றது. இதனை மாற்றி நவீன தொழில்நுட்பச்சாதனைங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புக்களும் அதற்கான பயிற்சிகளும் தமிழ் மொழி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுதல் பயன் தரும்.

மாணவர்களுக்கு ஏற்ப மொழி பெயர்க்கப்பட்ட அல்லது தமிழில் உள்ள கதைப் புத்தகங்கள் இரவல் கொடுத்து வாங்கும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொடுத்தல் அவர்களை மொழிமீது ஆர்வம் கொள்ளவைக்கும்.

## முடிவுரை:

மொழி கற்பதில் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற நான்கு மொழித் திறன்களில் பயிற்சி பெற்றுக்கொள்ளுவது முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது. மாணவர்களின் தனித்தன்மைக்கேற்ப பல்வகை புத்திக்கூர்மைத் திறன்களை வளர்க்கும் பணியில் மொழிக் கல்வியும் அமைந்துள்ளமை கருத்திற் கொள்ளற்பாலது. இவற்றுள் மொழியியல், கணித தர்க்கவியல், இசை, உடலியல், பகுத்தறிதல், உளப்பாங்கு ஆகிய துறைகள் சார்ந்த புத்திக்கூர்மைத் திறன்களைப் பாட அலகுகளில் அல்லது பாடத் திட்டத்தில் இணைத்துக் கற்பித்தல். மாணவர்களின் தனித்திறன் கருத்திள் கொள்ளப்படுதல் இன்றியமையாதது. கற்றலில் புதிய திறன்களை கற்றுக்கொள்ள மாணவர்களிடையே வேறுபாடான கற்றல் முறைகள் அல்லது வடிவங்கள் பின்பற்றப்படுகின்றன. சில மாணவர்கள் பின்வரும் வழிமுறைகளில் கற்றுக்கொள்ளுகின்றார்கள்.

காட்சிகளைப் பார்த்துத் (Visual Learners) தகவல்களைக் கற்றுக்கொள்ளும் தன்மை உடையவர்கள். இவர்கள் வடிவங்கள், வரைபுகள், படங்கள் போன்றவற்றைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும் திறன் உள்ளவர்கள். அட்டவணைகள், அச்சுப்பிரதிகள் போன்றவற்றில் இருந்து தமது தகவல்களை மிக இலகுவாக அடையாளம் கண்டுகொள்வர்.

கேட்டுக் கற்றுக்கொள்வோர் (Auditory Learners) காதால் கேட்பதனாலும் கதைப்பதனாலும் கற்றுக்கொள்பவர்கள். விரிவுரைகளைக் கேட்பதிலும் அவற்றைப் பதிவு செய்வதிலும் ஒலிகளைக் கேட்பதிலும் நாட்டமுள்ளவர்கள். அவற்றைக் கேட்டுக் கற்றுக் கொள்ளுவார்கள்.

உடல் அசைவுகள் அழகியல் ரசனைகள் மூலம் கற்றுக்கொள்பவர்கள் (kinesthetic) இசையைக் கேட்பதன் மூலம் கற்றுக்கொள்ளும் பிள்ளைளும் உள்ளனர். இதில் அவர்களுக்கு அதிக ஆர்வம் காணப்படுகின்றது.

பிள்ளைகளின் திறன்களைக்கருத்திற்கொண்டு அவர்களை குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு விருப்பமான முறைகளைத் தேர்ந்து கற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பது கற்றலை ஊக்குவிப்பதாக அமையும். ஆனால் மாணவர்கள் தொகை அதிகமாக இருக்கும் போது இவை சாத்தியமா எனப் பல ஆசிரியர்களும் தொழிற் சங்கங்களும் போர்க்கொடி உயர்த்தி வருவதனையும் நாம் காண்கின்றோம்.

புதிய கற்றல் கொள்கைகள், வழிமுறைகள் கல்வியியலாளர்களால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றை மொழி கற்றலிலும் பயன்படுத்துவது முக்கியமானது என வலியுறுத்தப்படுகின்றது.

எனினும், பல ஆசிரியர்கள் இவற்றைப் பயன்படுத்த முனைவதில்லை. மொழி கற்பித்தல் ஊதியத்துக்கானது மட்டுமன்றி சேவை நோக்கமும் நிறைந்தது என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எம் பிள்ளைகள் தமிழைக் கற்றுக்கொள்ள எம்மாலானவற்றைச் செய்யவேண்டும் என்னும் உயரிய நோக்கத்தோடு அர்ப்பண சிந்தையோடு தமிழ் மொழியைக் கற்பிக்க வேண்டும் என்பதனை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்துகொண்டால் மாணவர் தமிழறிவு பெரிதும் மேம்படும்.

## இடைநிலை வகுப்புக்களில் தமிழ்:

ஆரம்ப நிலைகளில் தமிழ் மொழியைக் கற்றல் - கற்பித்தல் நிலைமைகளைப் பார்த்தோம். இடைநிலைத் தரங்களில் தமிழ் மொழி 9ம் வகுப்புத் தொடக்கம் 12ம் வகுப்பு வரையும் திறமைச் சித்தியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை நல்குகின்றது.

'ரொறன்ரோ கல்விச் சபையின் அதிகாரப் பரப்பில் உள்ள பாடசாலைகளிலேயே அனைத்துலக மொழிகளை மிக அதிகளவில் மாணவர்கள் கற்கின்றார்கள். இரண்டாம் நிலைத் தரங்களில் (9-12) 63 பாடசாலைகளில் அனைத்துலக மொழிகளை மாணவர்கள் மாலை நேரத்திலோ அன்றி வார இறுதியிலோ கற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.

இங்கு கற்கும் மாணவர்கள் தங்களது தொடர்பாடல் திறன், ஆக்கச்செயற் சிந்தனைத்திறன், ஏனைய கலாச்சாரங்களை அறிந்துகொள்ளுதல், மதித்தல் ஆகிய திறன்களோடு மாணவர்கள் தங்களை வளப்படுத்திக் கொள்ளுதல், தங்களைத் தயாரப்படுத்திக் கொள்ளுதல், அனைத்துலக சமூகத்தைப் பற்றி அறிந்து கொள்ளுதல் போன்ற திறன்களையும் அறிவையும் மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றார்கள்.

இந்த இடைநிலை வகுப்புகளினூடாகக் கல்வி அமைச்சின் புள்ளிகளைப் பெற்று திறமைச் சித்தியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ரொறன்ரோ, பீல், யோக், டுறம் போன்ற கல்விச் சபைகளும் கத்தோலிக்க கல்விச் சபையும் வழங்குகின்றன.


'இரண்டாம் நிலைப் பாடசாலை முறையில், மாணவர்கள் அங்கு கற்பிக்கப்படும் பதின் நான்கு மொழிகளுள் ஒன்றில் திறமைப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

ரொறன்ரோவில் மிக அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கற்கும் மொழி சீன மொழியாகும். இரண்டாவது மொழியாகத் தமிழ் காணப்படுகின்றது.

***உசாத்துணை:***
- *Canadian Heritage Languages Act*
- *The Generic curriculum for Heritage Language Program, The Metropolitan Toro nto School Board, 1993*
- *Ontario Curriculum Grade 11and 12. Ministry of Education. Ontario p 3. 2000*
- *Ontario Curriculum Grade 11and 12. Ministry of Education. Ontario p 3. 2000*

sivapalu@thaiveedu.com





# சகலவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும்...

## என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

# 416.873.5780

## உங்கள் தேவை இவற்றில் ஒன்றா?

- வீட்டு விலை உயர்வை சாதகமாக்கி உங்களின் கடன்களில் இருந்து விடுபடவேண்டுமா?
- வீட்டின் Equity யைப் பயன்படுத்தி உயர் வட்டியில் உள்ள கடனில் இருந்து விடுபட வேண்டுமா?
- வீட்டுத்திருத்த வேலைக்கு தேவையான பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- சொந்த தேவைக்காக (Proposal Payment, பிள்ளைகளின் படிப்பு, அரங்கேற்றம், சுற்றுலா) பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- பிறிதொரு வீட்டை வாங்க தேவையான முற்பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- உயர் வட்டியில் உள்ள மோட்கேஜ்ஜை குறைந்தவட்டியிலுள்ள மோட்கேஜ்ஜாக மாற்ற வேண்டுமா?
- சொந்த தொழில் செய்பவர்கள் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- புதிதாக கனடாவுக்கு வந்தவர்கள் மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடாவில் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டை மாற்றி மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- கிறடிற் பிரச்சினை (Consumer Proposal, Late payments, previous bankruptcy) ஆனால் வீடு வாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- அவசர தேவைக்கு 2nd Mortgage எடுக்க வேண்டுமா?

* some conditions apply



KAPITAL CARE MORTGAGE INC. Lic-12623


**Kethes Sivasubramaniyam AMP**

*Mortgage Agent - (Lic # M08006105)*

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


காலம்
"பேசுவோம்"
உள்ளதையும்
இல்லாததையும்
சேனனின்
'லண்டன்காரர்'
கற்சுறாவின்
'அல்லது யேசுவில்
அறையப்பட்ட சிலுவை'
5 டிசம்பர் 2015
மாலை 6.00மணி
GTA Square
5215 Finch Ave E, Scarborough,
(Middlefield & Finch)
காலம் 48வது இதழையும்
மற்றும் புதிய புத்தகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்
தொடர்புகளுக்கு - செல்வம்: 416 731 1752


CORPORATE & COMMERCIAL
FINANCING
வீடு கட்டுவதற்கான கடன்
Bridge Financing
நிலம் கொள்முதல் கடன்
Mezzanine Capital Loan
வணிக உபகரண கடன்
Truck & Trailer Loan
வியாபாரக் கடன்
Equity Take Out
சுயவர்த்தக அடமான கடன்
Hotel, Motel, Building
அழையுங்கள்:
PRABA NAMASI (A.I.C.B)
416 645 3027
O/A 6401473 Canada Inc,
Broker NO: 11108, Agent No: M15000851


Agent of the Month
November 2015
Inforce Life proudly recognises our
Agent of the month
for his hard work and dedication.
Congratulations!
Insurance Solutions for
LIFE | HEALTH | GROUP
Investments
QUALITY ADVICE YOU CAN TRUST!
Pranesh Kunhikrishnan
iNFORCE LIFe
Financial Services Inc.
Bus: 416 321 6000
www.inforcelife.com
career@inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6
Join Our Dynamic Team
printfast.ca

# இயற்கையின் எழில் வண்ணங்கள்

- பொன். குலேந்திரன் -

ஒரு ஆடை விற்பனை நிலையத்துக்குப் போனால் கண்ணைக்கவரும் பலவிதமான வண்ணச் சேலைகள் கண்ணுக்கு விருந்தாகிறன. ஒரு பூந்தோட்டத்துக்குள் நுழைந்தால் எம்மை மறந்து பலநிறப் பூக்களை இரசித்தபடியே நிற்கிறோம். சித்திரக் கண்காட்சிக்குப் போனால் எம்மைக் கவர்வது வண்ணங்களின் கலவையில் உருவான சித்திரங்கள். பழங்கள் விற்கும் கடைக்குச் சென்றால் பல நிறங்களில் பழங்கள், வரிசையாக அடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு எந்த பழத்தை வாங்குவது என்ற தெரியாது திகைத்து நிற்கிறோம். பூக்கடையில் பல வண்ணப் பூக்களை விதம் விதமாக கலவையில் முடிச்சுப் போட்டு வைத்திருப்பர். இவ்வாறு பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தி வாடிக்கையாளரைக் கவர்வது விளம்பர யுக்தியில் ஒன்றாகும்.

எந்த இந்து வைபவங்களிலும் நிறங்களுக்கு முக்கிய பங்குண்டு. புது வருடப்பிறப்பன்று எந்த நிற ஆடையை அணிய வேண்டும் என்பது பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். வட இந்தியாவில் ஹோலி பண்டிகையை நிறப்பண்டிகையென்றே கருதலாம். இந்து மதத்தில் கடவுளருக்கும் நிறங்களோடு நெருக்கமான தொடர்பு உண்டு. உதாரணத்துக்கு நீல நிறம் விஷ்ணுவுக்கும், சரஸ்வதிக்கு வெள்ளை நிறமும், பச்சை நிறம் முருகனுக்கும், சிவனுக்கு வெள்ளை நிறமும், கனபதிக்கு சிவப்பு நிறமும், சனி பகவானுக்கு கறுப்பு நிறமும் என புராணங்களில் குறிப்பிட்டுள்ளனர். வர்ணங்கள் தெய்வீக வழிபாட்டிலும், அன்றாட மானிட வாழ்க்கையுடனும் இணைந்துள்ளன.

வர்ணங்கள் மனிதர்களிடையே ஆழ்ந்த உணர்வுகளை ஏற்படுத்துகிறன. பலரின் உணர்ச்சிகள் நிறங்களினால் மாற்றமடைகிறன. மனித உடலில், ஆன்மீக வாழ்வில், மனோநிலையில் நிறங்கள் பாதிப்பை ஏற்படுத்துகிறன. வைத்தியசாலைக்குத் தேக நலமில்லாத ஒருவரைப் பார்க்கப்போகும் போது அவர் மனதில் சந்தோஷத்தையும் அமைதியையும் கொடுப்பதற்காகப் பலவர்ணப் பூச்செண்டை எடுத்துச் செல்வது வழக்கம். அதேபோன்று ஒரு இழவு வீட்டுக்குப் போகும் போது கறுப்புநிற ஆடை அணிந்து இறந்தவருக்கு மரியாதை செலுத்தும் முகமாக பூவளையத்தை எடுத்துச் செல்வது வழக்கம். இது இறந்தவர் குடும்பத்திற்கு மன அமைதியைக் கொடுப்பதற்கும் இறந்தவரின் ஆத்மாவுக்கு சாந்தியைக் கொடுப்பதற்கேயாம்.

மனித உடலில் உள்ள ஏழு சக்கராக்கள் ஒவ்வொன்றும் ஒரு நிறத்தினால் குறிக்கப்பட்டுள்ளது. முதுகெலும்பின் அடித்தண்டில் உள்ள முதலாம் சக்கரா சிகப்பு நிறத்தையும், அடுத்ததாக இடுப்படியில் உள்ள இரண்டாம் சக்கரா செம்மஞ்சள் நிறத்தையும், மூன்றாவது சக்கரா மஞ்சள் நிறத்தையும், இதயத்துக்கு அருகே உள்ள நான்காவது சக்கரா பச்சை நிறத்தையும், தொண்டைக்கு அருகே உள்ள ஐந்தாம் சக்கரா நீலநிறத்தையும், நெற்றியில் உள்ள ஆறாவது சக்கரா கருநீல நிறத்தையும் கடைசியாகத் தலையுச்சியில் உள்ள சக்கரா ஊதா நிறத்தையும் குறிக்கும். தொண்டையில் உள்ள நீலநிறச் சக்கராவுக்கும் விஷத்தைத் தொண்டையில் சிறைபிடித்த நீலகண்டருக்கும் என்ன தொடர்போ தெரியாது. சக்கராக்களின் நிறம் தேக நலத்தின் நிலையை எடுத்துக்காட்டுவனவாகும்.

சூரியக்கதிரில் எல்லா வண்ணங்களும் அடங்கியுள்ளது. ஒவ்வொரு நிறத்திற்கும் ஒரு அலை நீளமும் அதோடு தொடர்புள்ள அதிர்வெண்ணும் உண்டு. சிகப்பு நிறத்தின் அலை நீளம் ஊதா நிறத்திலும் பார்க்க அளவில் குறைந்தது. ஆனால் ஊதா நிறத்தின் சக்தி அதிகம். அதனால்தானோ என்னவோ மனிதனின் குண்டலினியானது ஏழாம் சக்கராவின் நிலையை அடைந்து அவன் மாபெரும் சக்தியைப் பெறுகிறான். இந்த நிறமாலை (Spectrum) மானிட உடலில் அமைந்துள்ளது. வெள்ளை நிறம் பல நிறங்களை உள்ளடக்கி உள்ளது. வெவ்வேறான அதிர்வெண் வலுவுள்ள ஒளிக் கதிர்கள் கண்களில் படும்போது விழிகளானது அவ்வொளி அலைகளை சமிக்ஞைகளாக மனித மூளைக்கு அனுப்புகிறது. இச்சமிக்ஞைகள் அதிர்வெண்ணிற்கு ஏற்ப மாறுபடும். மனித மூளையானது அச்சமிக்கைகளின் வித்தியாசங்களைக் கொண்டு நிறங்களை பகுக்கிறது. பிரதான நிறங்களாக சிகப்பு, நீலம், பச்சை ஆகிய மூன்று நிறங்களும் கருதப்படுகிறன. இவை மூன்றையும் கலந்தால் வெள்ளை நிறம் உண்டாகும். சிவப்பையும் நீலத்தையும் கலந்தால் குங்கும நிறம் உருவாகும். சிவப்பையும் பச்சையையும் சமனளவில் கலந்தால் மஞ்சள் நிறம் உருவாகும். இவ்வாறே, கலவையினால் பல நிறங்கள் தோன்றக் கூடியதாயிருக்கிறன. நிறங்கள் தோன்றுவதற்குச் சூரியஒளி மிக அவசியம். வானவில்லில் நிறமாலையின் அழகைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதுவும் சூரியனின் ஒளியில், மழை பெய்தால் மழைத்துளிகளில் ஒளி தெறிப்பதினால் அந்த அழகு நிறமாலை தோன்றுகிறது. சூரிய அஸ்தமனத்தின் போதும் அடிவானத்தில் மேகங்கள் பல வண்ணச் சேலைகளை மாற்றுவதைக் காணக் கூடியதாகயிருக்கிறது. சூரியன் மறைந்தவுடன் கருமையான இருள் வந்து கவ்விக் கொள்கிறது. கருமை நிறம் சோகத்தைக் குறிக்கும்.

வெள்ளை நிறச் சேலையை இந்து விதவைப் பெண்கள் அணிவது வழக்கம். ஆனால் கேரளாவில் வெள்ளை நிறம் ஒரு மகிழ்ச்சியைத் தரும் புனித நிறமாக ஏற்கப்படுகிறது. கேரளாவில் மோகினி ஆட்டத்தின் போது தங்கக்கரை வைத்த வெள்ளை நிறச் சேலை அணிந்து தலையில் மல்லிகைப் பூவைத்து நடனமாடுவார்கள்.

இந்துக்கள் சிவப்பையும் மஞ்சளையும் மத கிரிகைகளுக்கு பாவிப்பது வழக்கம். அதோடு பச்சை நிறத்தையும் சேர்ப்பார்கள். அதனால் தான் மஞ்சள், குங்குமம், பச்சை மாவிலைத் தோரணமும் கிரிகைகளை அலங்கரிக்கும். திருமணத்தின் போது பெண்ணுக்குக் கூறைச் சேலையை சிவப்பு அல்லது குங்கும நிறத்தில் தேர்ந்தெடுப்பார்கள். மணமகனுக்கு இளமஞ்சள் நிறப் பட்டுவேட்டி சால்வை அணிவார்கள்.

## நிறங்களும் பண்புகளும்:

பச்சையை விரும்புபவர்கள் பலர். அந்நிறம் பசுமை நிறைந்த உணர்வுகளைத் தரும். சிவப்பு நிறம் இரத்தத்துடன் தொடர்பு உள்ளது. ஆகவே அபாயத்தைக் குறிக்கும். செவ்வாய் உரோமர்களின் (Romans) போர்க் கடவுள். கோபத்தை அந்நிறம் குறிக்கிறது. செவ்வாய் கிரகத்தின் நிறமும் சிவப்பு. அதை பலர் விரும்புவது கிடையாது. ஆனால் அந்த நிறம் பிரகாசமானது. பெரும்பாலும் இளைஞர்கள் சிவப்பு நிற வாகனத்தையே விரும்புவார்கள். சிவப்பு ஆபத்தைக் குறிப்பதினால் வாகனப் போக்குவரத்தில் நிறுத்துவதற்கு சிவப்பு நிறத்தைப் பாவிப்பார்கள். ஆனால் சீனாவில் சிவப்பு நிறம் சந்தோஷத்திற்கு எடுத்துக்காட்டு. நீல நிறம் சோகத்தைப் பிரதிபலிக்கும். மேற்கத்திய மக்கள் அந்நிறத்தை மகிழ்ச்சிக்குரிய நிறமாகக் கருதுவார்கள். பச்சை பொறாமைக்கு எடுத்துக்காட்டு. இயற்கையில் எங்கு திரும்பினாலும் நாம் காண்பது பச்சை நிறமே. எனினும் நச்சுத் தன்மையையும் அந்நிறம் பிரதிபலிக்கின்றது. ஆனால் பச்சை நிறம் உயிரினங்கள் வாழ உதவும் தாவரங்களின் நிறமாகும். மஞ்சள் கோழைத்தனத்தைப் பிரதிபலிக்கும். ஆனால் சிலர் அது பிரகாசத்தையும் உணர்ச்சிப் பெருக்கத்தையும் தரும் என்பர்.



உள்ளங்கை இளம் சிவப்பு நிறத்தில் இருப்பது தேகநலத்தை குறிக்கும். ஊதா நிறம் மர்மம் நிறைந்த நிறமாகும். சிலவேளைகளில் மனதில் சோர்வையும் கொடுக்கக் கூடியது. வெள்ளை நிறம் தூய்மைக்கும், கன்னித்தன்மைக்கும் எடுத்துக்காட்டு. சாம்பல் நிறம் முதுமைக்கு எடுத்துக்காட்டு. கறுப்பு மரணத்தையும் அதிர்ஷ்டமின்மையையும் குறிக்கும். இழவு வீடுகளில் கையில் கறுப்புப்பட்டி அணிவது வழக்கம்.

## மலர்களின் வித்தியாசமான நிறங்கள்:

மலர்கள் ஏன் பல வண்ணங்களைக் கொண்டவை? சூரிய ஒளிக் கதிர்கள் தெறிப்பதினால் அந்நிறங்கள் உண்டாகின்றனவா?. மனிதர்களைக் கவர மலர்களில் நிறங்களை இறைவன் உருவாக்கினானா? இவ்வாறான பல கேள்விகள் எழுவதுண்டு.

உண்மை என்னவெனில், வண்டுகளையும், தேனீக்களையும், பறவைகளையும் தமது வண்ணங்களாலும் நறுமணத்தாலும் கவர்ந்து பூந்தாதுச் சேர்க்கையால் (Pollination) தம் இன விருத்தியை பெருக்கவதற்காகவே பூக்கள் பேரழகாகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

பெண்கள் தமக்கு பிடித்த வர்ணச் சேலைகளை தெரிந்தெடுப்பது போல் தேனீக்களும் வண்டுகளும் பறவைகளும் பூக்களை நிறத்திற்கு ஏற்ப தரம் பிரித்து நாடுவதில்லை. நிறத்தை விட அம்மலரில் உள்ள தேனின் தரமும் சுவையுந்தான் அவற்றிற்கு முக்கியம். அருமையாக பூக்கும் பூக்களை விட தாராளமாகக் காணப்படும் பூக்களையே தேனீக்கள் நாடிச்செல்லும். எனெனில் அது இலகுவாக எங்கும் கிடைக்கும். அருமையாகக் கிடைக்கும் பூக்களின் வண்ணத்திலும், அவற்றினது தேனின் சுவையிலும் ஒரு தரமுண்டு. அதுவே அவ்வினம் அழிந்து போகாமல் காக்க உதவுகிறது.

வண்ணத்துப் பூச்சிகளும் இயற்கையின் சிருஷ்டிப்பின் அதிசயமே. எப்படி மானிடர்கள் தம் இல்லங்களை பூக்களாலும் வண்ணச் சேலைகளாலும் அழகுபடுத்துகிறார்களோ அதேபோன்று இயற்கையன்னையும் உயிர்கள் வதியும் சூழலை அழகுபடுத்தவே இயற்கையில் வர்ணஜாலங்களை தோற்றுவித்து மகிழ்ச்சியடைகிறாள் போலும். அதைப் பார்த்து மானிடர்களுக்கு பல கற்பனைகள் உருவாகின்றன. நிறங்களுக்கு இயற்கையில் தோன்றும் நிறங்களின் பெயரால் குறிப்பிடுகிறார்கள். நீலவான நிறம், கடல் நீல நிறம், எலுமிச்சைப்பழ நிறம் என்று குறிப்பிடுகிறார்கள். அதுவுமல்லாமல் இயற்கையில் தோன்றும் வண்ணக் கலவைகளை அப்படியே பிரதி எடுக்கிறார்கள்.

கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பருவமாற்றத்தின் போது இயற்கையன்னை பல வண்ணங்களாக மரங்களின் இலைகளை மாற்றுவது கண்கொள்ளாக் காட்சி.

## அரோரா பொராலிஸ் (வட விளக்குகள்) - Aurora Boralis - Northern lights:

வானவில்லிற்கு போட்டியாக இந்த வர்ண ஜாலத்தினை பூமியின் வடபகுதியில் உள்ள வானத்தில் சில மாதங்களில் காணலாம். இதற்கு வானவில்லைப் போன்று பகல் நேரத்தில் சூரிய வெளிச்சம் தேவையில்லை. அநேகமாக அலாஸ்கா, கனடாவின் வடபகுதி, ஐஸ்லண்ட், ஐரோப்பாவின் வடபகுதியில் உள்ள சில தேசங்களில் காணலாம். பூமியின் வட பகுதியில் தோன்றும் இந்த வர்ணஜாலத்தை ஆங்கிலத்தில் Aurora Boralis என்றும் தென் பகுதியில் தோன்றும் போது Aurora Australisis எனவும் அழைப்பர். பலவித வண்ணங்களில் வானில் தோன்றும் இவ்வொளியானது சூரியனில் இருந்து வெளிவரும் மின் துகள்கள் பூமியின் காந்தப் புலத்தினால் துருவங்களுக்கு அருகே உள்ள வானில் உள்ள பிராணவாயுவினதும் நைதரசன் வாயுவினதும் மூலக் கூறுகளுடன் மோதும் போது மோதும் சக்தியின் ஒரு பகுதி (Photons) எனப்படும் ஒளியன்களாக பல நிறங்களில் தோன்றுகிறது. ஒளியனின் சக்தியானது வண்ண ஒளியின் அலை நீளத்துடன் தொடர்புள்ளது.

## இயற்கையில் உயிரினங்களின் வர்ணங்கள்:

வண்ணத்தை தனக்கு சாதகமாக பாவித்து உயிர்வாழும் உயிரினங்கள் பல. கடலில் வாழும் கணவாய் கூட தனது நிறத்தை வெகுவிரைவில் மாற்றி இரையைத் தேட வல்லது. நத்தைகள், ஊர்வன, பாலூட்டிகள், மிருகங்கள், பறவைகள் போன்றவற்றின் நிறங்களைப் பூக்களைப் போன்று மனிதர்கள் முக்கியத்துவம் கொடுத்துப் பாராட்டுவதில்லை.

பட்டுப் பூச்சிகள் அனேகமாக இலையின் பச்சை நிறத்தையும், மரத்தண்டின் மாநிறத்தையும் கொண்டவை. இன்னும் சில பட்டுப்பூச்சிகள் அழகான நிறத்தில் வரிகளையும், கோடுகளையும் கொண்டவை. எதிரிகளை ஏமாற்றித் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள அந்நிறம் உதவுகிறது. பறவைகள்,

தொடர்தல் 58ம் பக்கம்

# விண்ணைத் தாண்டி வந்தவர்கள்


- குரு அரவிந்தன் -

சில சமயங்களில் யாராவது எங்களைக் கண்காணிப்பது போன்ற உணர்வு எங்களுக்கு ஏற்படுவதுண்டு. தப்பான செய்கைகள் ஏதாவது செய்தாலும் என்ற பயத்தில் பெற்றோர்கள் தத்தமது சமயத்தின் பெயரைச் சொல்லி, 'அங்கே ஒருவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்' என்று எங்களுக்கு உளரீதியாகப் பயம் காட்டிய காலமும் உண்டு. இதை எல்லாம் கடந்து நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக இப்போது வானத்தில் இருந்தே பூமி உருண்டையைக் கண்காணிக்கக் கூடிய செயற்கை வசதிகளைப் பலவழிகளிலும் ஏற்படுத்தி இருக்கின்றார்கள். காரணம் முக்கியமான சில நாடுகள் ஒன்று சேர்ந்து சர்வதேச விண்வெளி நிலையம் ஒன்றை விண்வெளியில் அமைத்திருக்கின்றார்கள். இந்த சர்வதேச விண்வெளி நிலையத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல முன்பு, விண்ணைத் தாண்டி வந்த சிலரைப் பற்றிக் குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன்.

எமக்குத் தெரிந்த வகையில் முதன் முதலாகப் பூமியில் இருந்து விண்ணைத் தாண்டிய துணைக்கோளாக ரஷ்யாவின் ஸ்புட்னிக்கும், (Sputnik) விண்வெளிக்குச் சென்ற முதல் நாயாக லைக்கா (Laika) என்ற நாயும் விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்து வைத்தன. மனிதர்கள் என்று பார்த்தால், யூரி காகரின் (Yuri Gagarin) என்ற ரஷ்யரே விண்ணுக்குச் சென்று திரும்பி வந்து சாதனை படைத்தார். முதல் பெண்மணியான வலன்ரினாவும் (Valentina) ரஷ்யாராகவே இருந்தார். சுமார் 50 வருடங்களுக்கு முன் விண்வெளியில் முதன் முதலாக மிதந்த பெருமையும் ரஷ்யரான அலெக்ஸி லியனோவ் (Alexei Leonov - March 1965) என்பவருக்கே உரியது. இதை எல்லாம் கடந்து இதுவரை அதிக நேரம் விண்ணில் தங்கிய பெருமையை ரஷ்யரான படல்கா ( Padalka) என்பவர் பெற்றிருக்கின்றார். இதே போல சந்திரனில் முதன்முதலாகக் காலடி எடுத்து வைப்பதில் அமெரிக்கர்கள் முந்திக் கொண்டார்கள். முதன் முதலாகக் காலடி வைத்த மனிதராக ஆம்ஸ்ரோங் என்ற அமெரிக்கர் இருக்கின்றார். சிலர் விண்ணைத் தாண்டும் முயற்சியில் திரும்பி வராமலே போனதும் விண்வெளி வரலாற்றில் ஒரு சோக சம்பவமாகும். ஆனாலும் விண்வெளிப் பயணத்தில் இவை எல்லாம் முக்கிய பாடமாக அமைந்திருக்கின்றன.

சர்வதேச விண்வெளி நிலையம் 1998ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி நீண்ட நாள் திட்டத்தின் அடிப்படையில் விண்வெளியில் நிறுவப்பட்டது. படிப்படியாக நிர்மாணிக்கப்பட்டு இன்று மனிதனால் விண்வெளியில் நிர்மாணிக்கப்பட்ட மிகப் பெரிய நிலையமாக இது இயங்குகின்றது. இதில் ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா, கனடா, யப்பான் ஆகிய நாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. 1998ல் இந்த நிலையம் நிர்மாணிக்கப்பட்டாலும் முதன் முதலாக நவம்பர் 2, 2000 ஆண்டுதான் தான் பில் ஷெப்பர்ட், யூரி மற்றும் செர்ஜி ஆகிய மூன்று விண்வெளி வீரர்களும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் காலடி வைத்தார்கள். இந்த நிலையம் பூமியில் இருந்து சுமார் 330 கிலோ மீட்டர் தூரத்தில் மணித்தியாலத்திற்கு 27,600 கிலோ மீட்டர் வேகத்தில் பூமியைச் சுற்றி வருகின்றது.

ஐ.எஸ்.எஸ் (International Space Station) என்று இந்த நிலையத்தைச் சுருக்கமாக அழைப்பர். இந்த நிலையம் 92 நிமிடங்களுக்கு ஒரு முறை பூமியைச் சுற்றி வருகின்றது. இதனால் இந்த விண்வெளி நிலையத்தில் இருப்பவர்களால் ஒரு நாளில் 16 தரம் சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் பார்க்கமுடிகின்றது. இந்நிலையத்தை இயக்கத்தேவையான எல்லாப் பொருட்களையும், குறிப்பாக அங்கு தங்கி இருப்பவர்களுக்குத் தேவையான பொருட்களை எல்லாம் பூமியில் இருந்து விண்ணூர்தி மூலம் எடுத்துச் செல்லப்பட்டது. இந்த நிலையத்தில் இருந்து அவசரமாக வெளியேற வேண்டுமானால், அதற்கான விண்ணூர்திகளும் நிலையத்தில் தயாராக இருக்கின்றன. சர்வதேச விண்வெளி நிலையமானது ஒரு ஆய்வகமாகவும், விண்ணியல் பற்றி அறிந்துகொள்ளும் முயற்சிக்காகவும், பரீட்சாத்தமான தொழிலகமாகவும் இப்போது செயல்படுகின்றது. சுமார் 52 கணினிகள் நிலையத்தின் செயற்பாட்டுப் பாவனைக்காகப் பொருத்தப்பட்டு இருக்கின்றன. சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்லும் வீரர்கள் அங்கு தங்கி உயிரியல், இயற்பியல், வானவியல், வானிலை மற்றும் பிற துறைகளில் தேவையான முக்கியமான சோதனைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதைவிட வேறு கிரகங்களுக்கு அனுப்பப்படும் விண்கலங்களுக்கு உதவியாகவும் இந்த நிலையம் இருக்கின்றது. குறிப்பாகச் சந்திரனுக்கும், செவ்வாய்க் கிரகத்திற்கும் செல்லும்போது இது ஒரு தங்கிச் செல்லும் இடமாகவும் அமைய இருக்கின்றது. இந்த விண்வெளி நிலையம் கிட்டத்தட்ட ஒரு கால்பந்து மைதானத்தின் அளவிற்கு சமமானதாக உள்ளது. படுக்கை அறையுடன் கூடிய சுமார் 6 வீடுகள் அளவிற்கு உள்ளே போதிய அளவு இடம் இருக்கின்றது.



அமெரிக்காவைச் சேர்ந்த 1964ம் ஆண்டு பிறந்த ஸ்கொட் கெலி என்பவரும் மைக்கேல் கொர்னிங்கோ (NASA Astronaut Scott Kelly and Russian Cosmonaut Mikhail Kornienko.) என்ற ரஷ்யரும் விண்வெளி நிலையத்தில் தற்போது தங்கி இருக்கின்றார்கள். ஒரு வருடமாவது அங்கே தொடர்ந்து தங்க வேண்டும் என்ற திட்டத்தின்படியே இவர்கள் இருவரும் அங்கே தங்கியிருந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இவர்களுடன் படல்கா (Gennady Padalka) என்பவரும் சென்ற மாதம் தங்கியிருந்தார். 1958ம் ஆண்டு பிறந்த ரஷ்யரான படல்கா 879 நாட்கள் விண்வெளி நிலையத்தில் தங்கியதால் இதுவரை அதிக நாட்கள் விண்வெளியில் தங்கி இருந்த மனிதர் என்ற சாதனையை நிலை நாட்டி இருக்கின்றார். விண்வெளியில் தங்கி இருக்கும்போது, மனித உடலில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து கொள்ளவே இந்த திட்டம் தயாரிக்கப்பட்டது. செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்வதற்கு இப்போது நாசாவினால் விண்ணப்பங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. விண்வெளியில் அதிக நாட்கள் தங்கியிருந்த அமெரிக்கர் என்ற சாதனையை நாசாவைச் சேர்ந்த ஸ்கொட் கெலி தற்போது நிறுவியிருக்கின்றார். ஆனாலும் ரஷ்யரான படல்காவின் சாதனையை இவரால் முறியடிக்க முடியவில்லை. இதைவிட சென்ற நவம்பர் மாதம் எட்டுமணிநேரம் விண்கலத்திற்கு வெளியே தங்கியிருந்து நிலையத்தின் பராமரிப்பு வேலைகளைக் கெலி செய்திருக்கின்றார். மார்ச் மாதம் 2016ம் ஆண்டுதான் கெலி பூமிக்குத் திரும்பி வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரை 17 நாடுகளை சேர்ந்த 220 விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையம் சென்று சிறிது காலம் வசித்துள்ளார்கள். சர்வதேச விண்வெளி நிலையம் இதுவரை பூமியை 87,600 முறைக்கு மேல் சுற்றி வந்துள்ளது. இதுவரை ஒன்பது நாடுகளை சேர்ந்த 122 விண்வெளி வீரர்கள் விண்வெளி நிலையத்திற்கு வெளியே வந்து spacewalks என்று கூறப்படும், வானத்தில் மிதந்தபடி செய்யும் கட்டுமான மற்றும் பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். நீண்ட நாள் விண்வெளியில் இருப்பதால் ஏற்படும் உடல் மற்றும் உளவியல் காரணமாக ஏற்படும் விளைவுகளை அறிந்து கொள்வதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்காட் கெல்லி விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்து பயிற்சி எடுக்கின்றார். இந்த விண்வெளி நிலையத்தின் எடை சுமார் 925,000 இறாத்தலாகும். சென்ற 15ம் திகதி நடந்த பயணம் - 46ல் புதிதாக மூவர் இணைந்து கொண்டனர். அடுத்த பயணம் - 47 மார்ச் மாதம் 18ம் திகதி 2016ல் நடக்க இருக்கின்றது.

விண்வெளிப் பயணம் இனிவரும் காலங்களில் முக்கியமானதாக இருக்கப் போவதால் இதைப்பற்றிக் கவனத்தில் கொள்வது முக்கியமாகும். காரணம் சந்திரனிலும், செவ்வாயிலும் விரைவில் குடியேற்றங்கள் நடக்க இருக்கின்றன. ஒரு விமானப்பயணம் போல ஒரு காலத்தில் இதுவும் அமையலாம். நாடு பிடிப்பதில் அந்த நாட்களில் கப்பலில் மாலுமிகள் அலைந்தது போல, புதிய கிரகங்களைப் பிடிப்பதற்கு நீங்களோ, அல்லது உங்கள் தலைமுறையினரோ கூடச் செல்லலாம். எங்கு சென்றாலும் அவற்றை ஆவணமாக்குவது நல்லது என்று அடுத்த தலைமுறைக்குச் சொல்லி வையுங்கள். இல்லாவிட்டால் மீண்டும் அகதிகளாகத்தான் அலைய வேண்டிவரும். காலம்தான் இதற்கெல்லாம் பதில் சொல்லும்.



kuruaravindan@thaiveedu.com

# இயற்கையின்...

57ம் பக்கத் தொடர்ச்சி...

சிலந்திகள், ஓணான்கள், தவளைகள் இப்பட்டுப் பூச்சிகளை விரும்பி சாப்பிடுகின்றன. அதனால் அவை இலையோடும், மரத்தண்டோடும் கலந்து அசையாது பகல் நேரங்களில் இருக்கும். இரவில் உணவு தேடிச் செல்லும். கோடும் வரிகளும் கொண்ட பட்டுப்பூச்சிகள் பிரகாசமாயிருப்பினும் பறவைகள், ஓணான்கள், அதை விரும்பி சாப்பிடுவது கிடையாது. காரணம் சுவையில்லாமையே. அதனால் அவை சுதந்திரமாக பகல் நேரங்களில் உணவு தேடி அலையும். முட்களையும், மயிர்களையும் உடம்பில் கொண்ட பட்டுப்பூச்சிகளும் இவ்வாறே சுவையற்றவை என நிராகரிக்கப்படுகின்றன.

## பறவைகளும் நிறங்களும்:

பறவைகளில் வண்ணக் கோலமுடைய தோகையுடன், பெருமையுடன் உலாவுவது மயிலே. அந்த நிறத்தை மயில் நீலம் (Peacock Blue) என அழைப்பார்கள். பல வித வண்ணங்களைச் சீரான அமைப்புடன் தோகையில் காட்டி நடனமாடி மகிழ்வது மயில்.

கிளிகள் பஞ்சவர்ணக் கிளிகள் எனப் பெயர் பெறுவதற்கு காரணம் பல வண்ணங்களின் கலவையுடன் அதன் இறகுகள் தோற்றமளிப்பதே. கிளிகளில் Eclectus என்ற கிளியினத்தில் ஆண்கிளி கடும் பச்சை நிறமும் பெண்கிளி சிகப்பு நிறமும் உடையவையாகும். இது போன்ற ஆண் பெண் பறவைகளுக்கிடையே நிரந்தரமான நிற வித்தியாசம் மிகக்குறைவு. இனச்சேர்க்கையின் போது மட்டுமே பல பறவைகள் நிறம்மாறி அல்லது நடனமாடி தன் ஜோடியைக் கவரும். மாம்பழக் குருவி என்றழைக்கப்படும் பறவை, மாம்பழம் போன்ற நிறமுடையது. பறவைகளின் வண்ண இறகுகளை அழகுக்காக தொப்பிகளில் பழங்குடி மக்கள் பாவித்தனர். வட அமெரிக்கரிடையே இது மரபு வழி வந்த அலங்கார முறையாகும். பறவைகளுக்கு நல்ல நிறப் பார்வையுண்டு. அவை பழங்களில் ஆரஞ்சு நிறப் பழங்களை அதிகம் விரும்பி உண்ணும். அதற்கு அடுத்ததாக கறுப்பு நிற பழங்களை விரும்பும். இந்நிறங்கள் முற்றாகப் பழுக்காத நிலையிலும் முற்றும் பழுத்த நிலையிலும் தோன்றும் வண்ணங்களாகும். பழங்களின நிறத்தைப் மட்டும் பார்த்து பறவைகள் பழங்களை உண்பதில்லை. பழங்களின் மணமும், சுவையும் பழங்களைத் தேர்ந்தெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறன.

## இயற்கையின் வர்ணங்களும் அழியாத சித்திரங்களும்:

எகிப்தில் பண்டையகாலத்தில் வரையப்பட்ட சித்திரங்களுக்கு நிறந்தீட்ட செப்பு உலோக மணலைப் பாவித்தனர் ஆனால் அஜந்தா, எலோரா சித்திரங்களின் பச்சை நிறத்திற்கு இயற்கையான குன்றில் இருந்த பச்சை நிறங்களை பாவித்தனர். இம்மண்ணில் இரும்பு, மன்கனீஸ், சிலிக்கன் போன்ற உலோகங்கள் கலந்திருந்தால் நிரந்தரமான வண்ணக்கலவையை தரக்கூடியவை. அதனால் அந்நிறங்கள் இன்றும் மங்காதிருக்கின்றன. கிரேக்கத்தில் உள்ள பண்டைய பொம்பாய் (Pompeii) நகரத்திலும் இயற்கையில் பச்சை நிற மண்ணில் தோன்றிய வர்ணத்தையே சித்திரங்களுக்குப் பாவித்தனர். ஹென்னா என்பது கைகளுக்கு நிறம் தீட்டும் முறையாகும். இதனைத் தமிழ் நாட்டில் மருதாணி என்பர். மருதோன்றி மர இலைகளில் இருந்து மருதாணி உருவாக்கப்படுகிறது. அவ்வாறே சிவப்புநிற செம்பரத்தைப் பூவிலிருந்து சாந்துப் பொட்டு தயாரிப்பர்.

இயற்கை மனிதனுக்கு கொடுத்த அன்பளிப்பு அழகிய வண்ணங்கள். சூரியஒளி அதன் உருவாக்கத்தின் கரு. இயற்கையின் ஒவ்வொரு சிருஷ்டியிலும் ஒளிச்சக்தியின் விளைவை வண்ணங்களில் காணலாம். ஒளிச்சக்தியானது வண்ணங்களினூடாக உயிர்களின் இனப்பெருக்கத்துக்கு பேருதவி செய்கின்றது.



pon.kulendiran@thaiveedu.com

**RES Home Direct**
*We make your financial dreams come true…*

## Equitable solutions to all your financial problems!

**Purchase & refinance for Restaurants, Gas stations, Plazas, Churches & Motels** (Downpayment from 25% )

மனம் கேட்கும் இல்லம் கிடைத்தால் வாழ்கை என்பது சொர்க்கம்தான்

## Now is the time to buy your Dream home

- Residential 1st Mortgage with low interest rates
- Home Equity line of Credit and Refinance (80% LTV,Interest From 3.75)…
- New Immigrant, Low income, Self Employed & Bankruptcy
- Commercial Mortgage up to 20 million (with Interest rate From 4.75*)
- Commercial refinance / Construction loan & more
- Store with apartment, Duplex, Triplex Rental Properties.
- Private Funds for Bad credit & Collection Agency settlement.
- We deal with all major banks, trust companies and private lenders.

**Get your debt relief now**


- ✓ Mortgage Payment in Arrears
- ✓ Credit Card Payments In Arrears
- ✓ Property Taxes in Arrears
- ✓ Rejected by the Bank
- ✓ Debt Consolidation
- ✓ Collection Agency settlement

**Bank Say No? We Say Approved!**

**Commercial / Residential, Private 2nd mortgage available with Low interest**

You will get the best rate regardless of good or bad credit!

**T. Antony Ponrajah**
Mortgage Agent Lic # M08004007
Commercial & Construction Financing Specialist
**Tel: 416-431-5115** | Dir : 416-457-0651
reshomedirect@gmail.com | Fax : 416-628-3120




**New Town Sq Builder's**
Authorized Commercial Mortgage Agent
**45 Karachi Dr Unit 45**
**Markham,ON,L3S 0B5**



## 1 ACRE LAND with HOUSE
## MARKHAM & 14 Th Ave

**exclusive**

**River & Golf Course behind the Backyard**





**Lot Size : 100′ front x 300′ depth**

[BUILD] your dream home



HOMELIFE Higher Standards
HomeLife Galaxy Real Estate Ltd.
111 Grangeway Ave,Toronto, ON M1H 3E9.

கண்ணன்
**Call: 647-829-7979**

**Kannan Maheshwaran**
Sales Representative
valvaikannan@gmail.com


Bring home a
HONDA
2015 CIVIC
CIVIC 17 Canada's best-selling car 17 years in a row.
0.99% APR
LEASE FOR UP TO 60 MONTHS OR FINANCE UP TO 84 MONTHS ON SELECT REMAINING 2015 CIVIC MODELS
PLUS GET A
$1,000^
HOLIDAY BONUS
ON ALL REMAINING 2015 CIVIC MODELS
THE FUTURE IS NOW!
THE ALL NEW
FULLY REDESIGNED
2016 CIVIC
HAS ARRIVED
AND IS AVAILABLE
TO TEST DRIVE &
IMMEDIATE DELIVERY
$17,725*
*Price based on 2016 Civic Sedan DX MT HST Extra
2016 Civic EX – T Shown
HONDA
Formula Honda
Where You're Treated like Family.
2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555
formulahonda.com
FINCH AVE. E.
MARKHAM RD.
SHEPPARD AVE. E.
Shan Sarvananthan
Sales & Leasing Consultant
Cell 416-720-1184
Rajah Tharmalingam
Sales & Leasing Consultant
Cell 647-833-4998


WISHING YOU A MERRY
CHRISTMAS
AND HAPPY
New Year
Call Now! Free & No Obligation Evaluation
RE/MAX Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
2009-2014
2007-2008
Off:416.491.4002
Dir:416-992-4474
www.HouzzValue.ca
Yathavann
SELVARAJAH
Sales Representative


HomeLife Galaxy
REAL ESTATE LTD., BROKERAGE, INDEPENDENTLY OWNED & OPERATED
CALL US TODAY TO JOIN OUR WINNING & ENERGETIC TEAM.....
DIAMOND CLUB AWARD
RANJAN FRANCIS
MAYURAN (KANNAN) MAHESHWARAN
RAGU PARAMSOTHY
PLATINUM CLUB AWARD
BALU SHANMUGA
KANNAN KANKESU & Sharvananthan kankesu
GOLD CLUB AWARD
MULAFFER SHANAWAZ
SELVA SELVADURAI
KILLIVALAVAN CHELLIAH
HOME-MATTERS RESIDENTIAL TEAM
SILVER CLUB AWARD
Ravintharan Tharmalingam
Dolores O'brien
Ramesh Jegatheeswaran
Samuel Abraham
Ganeslan Ganeshamoorthy
Thileepan Kathirgamanathan
Kuna Kunathasan
Kethes Kandiah
Thushanth Kantharajah
Nisanthan Nirthanandan
Nelanthe Jeganathan
BRONZE CLUB AWARD
Josely Mayuran
Farrukh Izhar
Rafi Yaningian
Sam Shah
Rebecca David
Wigna Sivapathasundaram
Suman Selvaratnam
Wess Mohamed
Shiva Pennish
Terrance Rajenthiran
Malini Muhunthan
Urmila Kalia
Joy Mylvaganam
Nancy Viegno
Ganesh Sanmugasuntharam
Vasanth Vinayagamoorthy
Hussnain Hameed
Ajanthan Kanapathipillai
Suman Seth
Mashood Jaffri
Uthaya Thiyagarajah
Sekar Thuraisingam
TOP TEAM AWARD
Karu Kandiah
Vithi Thillainayagam
ROOKIE AWARD
Thushanth Kantharajah
HIGHEST SINGLE COMMISSION AWARD
Mayuran (Kannan) Maheshwaran
111 Grangeway Ave, #301, Toronto, Ontario, Canada, M1H 3E9
416.284.5555
Not intended to solicit salespersons working on contract with other brokerages or other HomeLife offices.

# நாம் தொலைந்து போகாதிருக்க...

- பொன்னையா விவேகானந்தன் -

தமிழ், தமிழர், தமிழியல் பற்றிச் சற்றே ஆழமாகவும் இறுக்கமாக வும் கருத்துகளை முன்வைக்க முற்படுகின்ற வேளை 'இவர் ஒரு தமிழ் வெறியர்' என எளிதாகச் சிலர் கூறி விடு-கின்றனர்.

கனடா போன்ற பல்லினப் பண்பாட்டுச் சூழ லில் வாழ முற்படுகின்ற தனித்துவமான இனங் கள் ஒவ்வொன்றும் தத்தமது அடையாளங் களைப் பேணுவதற்காகப் பெரும் போராட் டங்களை நடத்துகின்றன. தாம் சார்ந்த இனத் துக்குள்ளிருந்தும் புறச்சூழல்களிலிருந்தும் கடும் சவால்களை எதிர்கொள்கின்றன. இதற் குக் கனடா தமிழ்ச் சமூகமும் விதிவிலக்கல்ல.

## அடையாளங்களைப் பேண ஏன் போராட வேண்டும்?

தாயகத்தில் வாழும்போது ஓர் இனத்துக்குள் அடையாளங்களைப் பேணுவதற்காகப் போராட வேண்டியதில்லை. அங்கே எங்கு காணினும் தமிழர், எத்திசை நோக்கினும் தமிழ்ச் சூழல். அடையாளங்களே வாழ்வாகி வாழ்வே அடையாளங்களாகக் கொண்ட தாய்ப்பெருநிலம் அது. நமக்கு அங்கே வேறு பணிகள் இருந்திருக்கும்.

கனடா முற்றிலும் மாறுபட்டதொரு புதியதளம். வண்ணமயமான வாழ்வியல் கவர்ச்சிகள் மிக்க அழகுப்புலம். போற்றிப் பொத்திப் பாதுகாக்கத் தவறின் சுய அடையாளங்கள் யாவும் தானாக நழுவி விழுந்துவிடும் அபா யம் நிறைந்த நிலம்.

கனடாவுக்கே உரித்தான ஒரு பொதுமைப் பண்பாட்டுச் சூழல் எங்கும் வலுவாகச் சூழ்ந் திருக்கின்றது. அது கொண்டிருக்கும் கவர்ச் சிகள் கணக்கற்றவை. சிறியோர், இளை-யோர், பெரியோர் என அனைத்துத் தரப் பையும் ஈர்த்து இழுத்து விழுங்கிவிட வல் லவை. காலங்காலமாக ஒவ்வோர் இனத் திலும் குறிப்பிட்ட தொகையினர் இந்தச் சூழலுக்குள் அகப்பட்டுத் தொலைந்து வரு கின்றனர்.

கனடாவின் பொதுமைப் பண்பாட்டுச் சூழல் வேண்டத்தகாத ஒன்றல்ல. ஒவ்வோர் இன மும் பின்பற்ற வேண்டிய சிறந்த பண்புகளை அது கொண்டுள்ளது. அவற்றை எம்மால் முற்றிலுமாகப் புறக்கணிக்க முடியாது. புறக்கணிக்கவும் கூடாது. பல்லினத்தோடும் நாம் கூடி ஊடாடும் பொதுமை வட்டம் இதுவே. கனடாவில் வாழும் அத்தனை இனத் தாரும் இவ்வட்டத்துக்குள் இணைந்தவாறே கனடாவின் தேசியப் பண்பினை வெளிப்ப டுத்துவர்.

ஒவ்வோர் இனமும் இனமாக வாழ்ந்தவாறே கனடாவின் தேசிய நீரோட்டத்தில் வலுவாக இணைந்திருக்க வேண்டும். இதையே கன டாவின் பல்லினப் பண்பாட்டுக்கொள்கை வெளிப்படுத்துகின்றது.

ஆயினும் கனடியராகிவிட்ட சிலர் 'நாம் இனிக் கனடியர், எமக்கு மொழி உட்பட தனித்துவ அடையாளங்கள் எதுவும் தேவையில்லை. ஆங்கிலமும் கனடிய மயப்பட்ட வாழ்வும் போதும்' எனக் கூறியவாறு வலிந்து அடை யாளங்களைத் துறந்து தொலைந்து போகின் றனர். பொதுமைப் பண்பாட்டுக்குள் காணப் படுகின்ற, எம் பண்பாடுகளுக்கு ஒத்துவராத கவர்ச்சிகளுக்குள் கட்டுண்டு போகின்றனர். அவர்களைத் தொடர்கின்ற தலைமுறைக ளும் இனவடையாளங்கள் ஏதுமின்றி கரைந்து காணாமற் போகின்றனர்.

இவ்வாறானோரை இனங்கண்டு பேச முற் படுகையில் 'இந்த நாட்டில் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என சிந்திக்கவும் முடிவெ டுக்கவும் எமக்கு உரிமை இருக்கிறது. தாய் நாட்டோடு எனக்கு எந்த உறவும் இல்லை. நாம் முழுமையான கனடியர். எம்மைத் தொந்தரவு செய்யாதீர்கள்' என்கின்றனர்.

இவ்வாறானோரை எண்ணி வருந்துவதை விட நாம் என்ன செய்ய முடியும்?

பல இனங்கள் கலந்து வாழும் இச்சூழலில் ஒவ்வோர் இனமும் தனித்துவ அடையாளங் களைப் பேணி வலுவேடு ஒன்றிணைந்து வாழ்ந்தால் மட்டுமே எம் இனஞ்சார் தேவை யும்.

இனஞ்சார்ந்த எம் வலிமையான செயற்பா டுகளே, அரச நிர்வாக அலகுகளுக்குச் சில பிரதிநிதிகளைத் தெரிவு செய்தமைக்கும், தாயகம் சார்ந்த சாதகமாக முடிவுகள் சில வற்றை அரசு மேற்கொண்டமைக்கும், தமி ழர் மரபுத்திங்கள் போன்ற தீர்மானங்களை அரச நிர்வாக அலகுகள் அங்கீகரித்தமைக்கும் காரணங்களாகும்.

இவற்றை விட மிக முதன்மையான பணி தாயகம் நோக்கிய செயற்பாடுகளே. பரம் பரை பரம்பரையாக எம்மையும் எம்மினத் தையும் தாங்கி வளர்ந்த அந்தப் பெருநிலத் தைப் போற்றிப் பேண வேண்டியது எம் வரலாற்றுக் கடன். வறியோரையும் பாமர ரையும் கணிசமாகக் கொண்டுள்ள எமது தாயகம் அரசை விடப் புலம்பெயர்ந்தோரான எம்மையே பெரிதும் நம்பியிருக்கின்றது. இனஞ்சார்ந்த ஒருங்கிணைப்பு இன்றி இவற்றை எம்மால் நிறைவேற்ற முடியுமா?

தாயகத்தில் சுனாமி பேரழிவை ஏற்படுத் தியபோது ஓரிரு நாட்களுக்குள் சில மில் லியன் டொலர்களைச் சேகரித்தனுப்பிய எமக்கு சமூக இறுக்கம் சாதனையாக நோக் கப்பட்டது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின் அந்த மக்களை ஓரளவேனும் வழ மையான வாழ்வுக்கு மீட்டெடுத்தோரும் புலம்பெயர்ந்தோரே.

மற்றுமோர் பேரழிவு தாயகத்தில் எக்காலத் திலும் எவ்வடிவத்திலும் ஏற்படலாம். அவ் வேளை எம்மையன்றி அவர்களைக் காக்க யாரிருக்கின்றனர்?

புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு நாட்டிலும் நாம் கொண்டிருக்கும் இனஞ்சார்ந்த வலி மையான கட்டமைப்பே எம்மையும் எம் தாயகத்தையும் எக்காலத்திலும் காக்க-வல்லது.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இவ் வாறு இறுக்கமான கட்டமைப்பு மிக்க சமூ கமாக வாழ்வதாலேயே சீக்கிய இனத்தோ ரில் அறுவர் நாடாளுமன்ற உறுப்பினர்களா கவும் மூவர் அமைச்சர்களாகவும் உருவெ டுத்திருக்கின்றனர். சீனர்களும் இவ்வாறே.

வலிமையான பிணைப்பைக் கொண்ட இனஞ் சார் வாழ்வு எத்துணைப் பயன்மிக்கது என் பதை ஓரளவு உணர்ந்திருப்பீர்கள்.

எமது இயந்திரத்தனமான வாழ்வோட்டத் தினிடையே சமூக ஒருங்கிணைவு பற்றிச் சிந்திக்க பலருக்கும் நேரம் இருப்பதில்லை. அனைத்துத் தரப்பினரும் பரபரப்பாகவே இயங்குகின்றனர். ஆற அமர சமைத்துண்ண நேரம் இல்லாமல் உணவகங்களிலும் பதப் படுத்தப்பட்ட உணவுப் பைகளிலும் தங்கியி ருக்கின்றனர். இந்நிலையில் இவர்களுக்கு சமூகஞ்சார் செயற்பாடுகளைச் சிந்தித்துச் செயற்பட நேரம் உண்டா?

இத்தகையோருக்கு இனஞ்சார்ந்த செயற் பாடுகளை விளக்குவதும் இனவடையாளம் பற்றி விழிப்புணர்வு ஊட்டுவதுவுமே எமது பணி. வெறி கொண்டு வேகமாய் நாம் இயங்கும்போதே இச்செய்திகள் சிலரையே னும் சென்றடைகின்றன.

இதற்காகவே நாம் போராடுகின்றோம். இளைய தலைமுறையை நோக்கி வலி மையான செயற்பாடுகளை முன்னெடுக்கின் றோம். எம்மால் ஓய முடியாது. ஓய்ந்துவிடக் கூடாது. இப்பணியில் தொய்வோ இடை-வெளியோ ஏற்படுமாயின் நாம் சிலரையே னும் முற்றிலுமாக இழந்துவிடுவோம்.

இப்பணி அரசியலுக்கு அப்பாற்பட்டது. உள் நோக்கங்கள் அற்றது. பதவிகளையோ விரு துகளையோ இலக்கு வைக்காது. இவற் றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கள மிறங்கிப் பணியாற்றுவோராலேயே நோக் கங்களைச் சென்றடைய முடியும்.

இதுவரையும் இனஞ்சார்ந்த சமூகச் செயற் பாட்டின் முக்கியத்துவம் கூறப்பட்டது.

இவற்றோடு தமிழர் என நாம் நம்மை வெளிப் படுத்தி வாழ்வதில் உள்ள பெருமைகளை யும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஐநூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இனங்கள் கூடத் தம் அடையாளங்களைப் பேணுவதிலும் வெளிப்படுத்துவதிலும் வெறி யோடு செயற்படுகின்றனர். இவ்வுலகில் எப் போது தோன்றியது என்ற காலக்கணிப்பு இல்லாத இனத்தோர் நாம். விபரம் தெரிந் தவரையில் வாழ்கின்ற எல்லா இனங்களுக் கும் தோன்றிய காலம் தெரிந்திருக்கின்றது, எம்மைத் தவிர.

இவ்வுலகில் தமிழர் முதற்குடிகளா என்பது எமக்குத் தெரியாது. ஆனால் நாம் இப்பூமி யின் பழங்குடிகள் என்பது பேருண்மை.


'நான் இந்த நாட்டின் குடிமகன் அல்லது குடிமகள்' என எழுதி கழுத்தில் தொங்கவிடும் பெயரட்டை நாடு விட்டு நாடு பெயரும் போது மாறவல்லது. 'நான் இந்த மதம்' என எழுதித் தொங்கவிடும் பெயரட்டையும் மதம் மாறும்போது மாறவல்லது.

உயிரணுக்களோடும் உணர்வோடும் தோலோடும் இரண்டறக் கலந்திருக்கும் இனவடையாளத்தை யாரால் எவ்வாறு மாற் றவியலும்?

இவ்வலகில் எம்மைத் தனிமனிதராகவும் இன மாகவும் பெருமைப்படுத்தவல்ல பேரடையா ளம் நாம் தமிழரென்பதே. இதைத் துறந்தோ மறந்தோ செல்ல முற்படுகின்ற ஒவ்வொரு வரும் தம்மைத்தாமே அழித்துக்கொள்பவ ராவர்.

இத்தகைய விழிப்புணர்வுகளை ஏற்படுத்து வதற்கே அமைப்பு சார்ந்த செயற்பாடுகளாக தமிழர் மரபுத் திங்கள் நிகழ்வுகள் அமை கின்றன. இந்த நிகழ்வுகள் முழுமையான பெருவடிவம் கொள்ள நிதிவளமும் ஆட்ப லமும் தேவை. இச்செயற்பாட்டின் முக்கியத் துவத்தை உணர்ந்து மாற்றுப்பயன் கரு-தாமல் பலரும் இணைவோமேயாயின் தோன்றவிருக்கும் ஒவ்வொரு தலைமுறை யினையும் நாம் போற்றிப் பாதுகாக்க முடியும்.





vivekanandan.p@thaiveedu.com

# சீனா தவறவிட்ட வாய்ப்பு

- பால. சிவகடாட்சம் -

கிறிஸ்தோப்பர் கொலம்பசுக்கும் வாஸ்கொட காமாவுக்கும் எண்பது வருடங்களுக்கு முன்னரேயே தென்சீனக் கடலிலும் இந்துசமுத்திரத்திலும் அரேபியக்கடலிலும் மாபெருங் கப்பல்களுடன் எதிர்ப்பார் எவரும் இன்றிப் பல்வேறு நாடுகளின் அரசர்களிடம் இருந்து திறைபெற்றும் வர்த்தக உடன்படிக்கைகள் செய்துகொண்டும் வெற்றிகரமாகப் பயணித்த சீனக் கடற்படை திடீர் என்று அனைத்துக் கடற்பயணங்களையும் நிறுத்திக்கொண்டு இருக்குமிடம் தெரியாமல் ஒடுங்கிப்போனது ஏன் என்ற கேள்வியை எழுப்பாத வரலாற்றாசிரியர்கள் இருக்க முடியாது.

வலுவானதொரு கடற்படையை உருவாக்கியதன் மூலம் சீனாவை 15ம் நூற்றாண்டின் உலக வல்லரசாக ஆக்கமுயன்ற பேரரசர் யொங்லெவினது முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து 500 வருட காலமாகக் கடற்படைத்தளபதி செங்ஹாவினது கடற்பயணங்கள் பற்றிய செய்திகளைச் சீனர்கள் முற்றாக மறந்துவிட்டிருந்தார்கள். வரலாற்றுணர்வு மிக்கவர்களும் தமது பாரம்பரியம் பற்றிப் பெருமிதம் கொள்பவர்களுமான சீனர்கள் இந்த மாபெரும் தளபதியையும் அவரது தலைமையில் சென்ற கடற்படை ஈட்டிய சாதனைகளையும் மறந்துவிட்டது ஏன் என்ற கேள்விக்கு ஆய்வாளர்கள் பல்வேறு காரணிகளை முன்வைத்துள்ளனர்.

பொதுவாகவே சீனர்கள் தமக்கு முன்பின் அறிமுகமில்லாத விடயங்களில் தலையிடுவதற்குத் தயங்குபவர்கள். பலநூற்றாண்டுகளாகக் கொன்பூசியசின் பழமைவாதக் கொள்கைகளில் ஊறி எதிலும் ஓர் கட்டுப்பாட்டை விரும்பிய சீனர்கள் பெரும்செலவுகளை ஏற்படுத்திய செங்ஹாவின் தூரதேசக் கடற்பயணங்களை மனப்பூர்வமாக ஆதரிக்கவில்லை.

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்ற தத்துவத்தை வெறுப்பவர்கள் கொன்பூசியஸ் கொள்கைவழிவந்தோர். இவர்கள் உழவுத் தொழிலுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை வர்த்தக விரிவாக்கத்துக்குக் கொடுக்க முன்வரவில்லை. காட்டுமிராண்டிகள் என இவர்களால் கருதப்பட்ட தூரதேசவாசிகளின் தொடர்பு சீனர்களுக்குத் தேவையற்ற ஒன்று எனவும் இவர்கள் கருதினர். 15ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சீனாவின் கடல் ஆதிக்க முயற்சிகள் கைவிடப்பட்டமைக்குச் சீன அரசர்களின் ஆலோசகர்களாக இருந்த இந்தப்பழமைவாதிகளே காரணமாயிருந்தனர்.

யொங்லெவின் ஆட்சிக்காலத்தில் செங்ஹா பல்வேறு நாட்டுத் தூதுவர்களை அவர்தம் காணிக்கைகளுடன் சீனாவுக்கு அழைத்து வந்தார் என்பது உண்மையே. எனினும் செங்ஹா போன்ற நபும்சக (eunuch) அதிகாரிகளின் ஆடம்பரமான கடற்பயணங்களால் பொதுமக்களின் வரிச்சுமை மிகவும் கூடிவிட்டதாகப் பழமைவாதிகள் வாதிட்டனர். தரைமார்க்கமாக வடக்கு எல்லையில் மொங்கொலியர்களினதும் மேற்கு எல்லையில் நாடோடி மக்களினதும் போர் அச்சுறுத்தல் தொடர்ந்துகொண்டிருந்தது. இந்தத் தரைமார்க்கமான அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுப்பதே கடற்பயணங்களிலும் முக்கியமான விடயம் எனப் பழமைவாதிகள் தொடர்ந்து வலியுறுத்திவந்தனர்.

துணிச்சல் தேவைப்படும் முயற்சிகளில் தயக்கமின்றி இறங்கிய செங்ஹா போன்ற நபும்சக அதிகாரிகளுக்கும் கொன்பூசியஸ் பழமைவாதிகளுக்குமிடையிலான அதிகாரப் போட்டியில் பேரரசர் யொங்லெவின் ஆதரவு நபும்சகர்களுக்கே கிடைத்து வந்தது. ஆனால் 1424 யொங்லெ இறந்தபின் நபும்சக அதிகாரிகளின் செல்வாக்கு சரியத் தொடங்கிற்று. இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த சீனப்பேரரசர்கள் பழமைவாதிகளை முன்னிலைப்படுத்தினர்.


நான்ஜிங் நகரின் பாச்சுவான் (Baochuan) கப்பல் வளாகத்தில் காணப்படும் செங்ஹா பயணித்த திரவியக்கப்பல் ஒன்றின் மாதிரி

நன்றி: www.kbismarck.org

யொங்லெவை அடுத்து ஆட்சிபீடமேறிய அவரது மகன் அனைத்துத் திரவியக் கப்பல்களினதும் கட்டுமானம் மற்றும் செப்பனிடும் வேலைகளை உடனடியாக நிறுத்துமாறும் செங்ஹாவை நாடு திரும்புமாறும் உத்தரவிட்டார். எனினும் இந்த அரசன் 9 மாதங்களே ஆட்சிபுரிந்தான். 1426ல் இவர் இறந்ததும் பேரரசனாக முடிசூடிய இவரது 26 வயதுடைய மகன் ஷுஆண்டே (Xuande)கடற்பயணங்களை மீண்டும் ஆரம்பிக்கும்படி செங்ஹாவைக் கேட்டுக்கொண்டார். உடல்நலம் குன்றி இருந்தபோதிலும் 59 வயதுடைய செங்ஹா தனது ஏழாவதும் இறுதியானதுமான பயணத்தைத் தொடங்கினார். இந்தப் பயணத்தின் போது தான் செங்ஹா மரணமடைந்தார். செங்ஹாவின் ஏழாவது கடற் பயணத்துக்கு அனுமதி வழங்கிய சீனப்பேரரசர் ஷுஆண்டே 1435ம் ஆண்டு மரணித்தார். அடுத்து இம்மன்னனின் 7 வயது மகன் அரசனாக அறிவிக்கப்படுகின்றான்.

இளம்வயதுடைய சீனப்பேரரசனுக்கு வங்ஜென் (Wang zhen) என்னும் நபும்சக அதிகாரி பாதுகாவலனாக இருந்து அரசை நிர்வகித்துவந்தான். இந்த வங்ஜென் 1449ல் மொங்கோலியர்களுக்கு எதிரான படையெடுப்பு ஒன்றை நிகழ்த்தினான். இப்போரில் இளம்வயது சீனப்பேரரசன் மொங்கோலியர்களால் சிறை பிடிக்கப்பட்டான். இவன் பின்னர் சிறைமீட்கப்பட்டு 1450ல் ஜுசிஜென் (Zhu Qizhen) என்னும் பெயருடன் சீனாவின் பேரரசனாக ஆட்சிசெலுத்தத் தொடங்கினான். சீனர்களின் கடற்பயணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தவன் இவனே எனலாம்.

முந்தைய கடற்பயணங்கள் பற்றிய எண்ணமே சீனர்களுக்கு இனிமேல் வரக்கூடாதென அப்போது அரசநிர்வாகத்தில் செல்வாக்குடன் இருந்த கொன்பூசியஸ் அதிகாரிகள் தீர்மானித்தனர். செங்ஹாவின் கடற்பயணங்களில் பயன்பட்ட கப்பல்கள் உள்நாட்டு ஆற்றுவழிப் போக்குவரத்துகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. மிகப்பெரிய கப்பல்கள் உடைத்தெறியப்பட்டன.

நி.ச.1477ல் கடற்பயணங்களை மீளவும் ஆரம்பிக்கும் நோக்கில் வங்ஜி (Wang Zhi) என்னும் நபும்சக அதிகாரி ஒருவர் செங்ஹாவின் கடற்பயணங்கள் பற்றிய பதிவுகளைப் பெற்றுக்கொள்ள முற்பட்டபோது அப்பதிவுகள் யாவும் தொலைந்துபோய்விட்டதாக அப்போது பதிவுகள் காப்பாளராக இருந்த ஒருவர் கூறியதாகத் தெரிகின்றது. உண்மையில் இராணுவ அமைச்சின் பிரதித்தலைவராகக் கடமையாற்றிய ஒருவரே அப்பதிவுகளை எரித்துவிடுமாறு உத்தரவிட்டதாகத் தெரியவந்துள்ளது.

செங்ஹாவின் கடற்பயணங்கள் தென்கிழக்காசியாவில் நிரந்தரமான பல மாற்றங்களை ஏற்படுத்தின என்பதை மறைப்பதற்கில்லை. பிற்காலத்து ஐரோப்பியக் காலனித்துவவாதிகளைப்போல் தாம் சென்ற இடங்களில் எல்லாம் பொதுமக்களைக் கொன்றோ அரசகுலங்களை வேரறுத்தோ கோவில்களை இடித்தோ அழிவுவேலைகளில் செங்ஹா ஈடுபட்டதில்லை.

செங்ஹா தாம் சென்றடைந்த துறைமுகநகரங்களில் இஸ்லாம் மதத்தைப் போதிக்கவும் மசூதிகளைக் கட்டவும் ஏற்பாடு செய்தார். இக்காலப்பகுதியில்தான் மலேசியாவில் முதன்முதலாக ஒரு இஸ்லாமிய அரசு உருவாக்கப்பெற்றது. இந்தோனேசியாவிலும் மலேயாத் தீபகற்பத்திலும் பிலிப்பைன்ஸ் நாட்டிலும் சீன முஸ்லீம் குடியேற்றங்களை உருவாக்குவதில் செங்ஹா பெரும்பங்கு வகித்தார். 'இந்தோனேசியாவிலும் மலேசியாவிலும் இஸ்லாம் மதம் விருத்தியடைவதற்கும் சீனக் கடற்படைத்தளபதி செங்ஹாவுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார் ஹம்கா (Hamka 1908-1981) என்னும் இஸ்லாமிய அறிஞர்.

1411க்கும் 1449க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் கோட்டை இராச்சியத்தின் மன்னர் தொடர்ந்து சீனப் பேரரசருக்குக் கப்பம் கட்டி வந்ததைச் சீனப்பதிவேடுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இரண்டு தடவைகள் மன்னனே சீனா சென்று நேரில் காணிக்கைகளைச் செலுத்தியதாகவும் அறியமுடிகின்றது. கோட்டை இராச்சியத்தின் மன்னன் 40 வருடங்களாகச் சீனாவுக்குத் திறை செலுத்திவந்த விபரங்களை இலங்கை வரலாற்று நூல்கள் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை.

1859ல் இலங்கை பற்றிய விரிவானதொரு நூலை எழுதிய சேர் எமெர்சன் ரெனென்ற் (Sir Emerson Tennent) என்பார் தமக்குக் கிடைக்கப்பெற்ற சீன வரலாற்றுப் பதிவுகளின் வாயிலாக 15ம் நூற்றாண்டின் முற்பாதியில் கோட்டை மன்னன் சீனாவுக்குக் கப்பம் கட்டிவந்த செய்தியினை முதன்முதலில் அறியத்தந்தார். இவரது நூல் வெளிவந்து சரியாக 51 வருடங்களின் பின்னர் 1911ம் ஆண்டில் காலித் துறைமுகப்பகுதியில் செங்ஹா விட்டுச்சென்ற மும்மொழிச் சாசனம் காலியில் உள்ள கிரிப்ஸ் ரோட்டில் பிரதேசப் பொறியியலாளர் திருவாளர் H.F. தொம்சன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டது. இலங்கைவரலாற்றில் மறைக்கப்பட்டு விட்ட ஓர் அத்தியாயம் அன்று முதல் வெளிவரத் தொடங்கியது.

சீனா நினைத்திருந்தால் தென்சீனக் கடற்பிராந்தியத்தில் உள்ள நாடுகளிலும் தீவுகளிலும் தனது ஆதிக்கத்தை 15ம் நூற்றாண்டில் நிலைநாட்டியிருத்தல்கூடும். அன்று இழந்துவிட்ட அரிய சந்தர்ப்பத்தை இனிமேல் சீனா பெற்றுக்கொள்ள முடியுமா என்பதற்குக் காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.



Sivakadadcham@thaiveedu.com



K & S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI-VANS - ON THE SPOT FINANCING
BUY - SELL - TRADE
We are Specialized in
Bank Repossessed Cars
Safety / Emission Test Certificate
One Year Full Warranty
Tel: (416) 412-3838
Fax: (416) 412-1174

SP Electronics
TV, VCR, DVD, Players, Telephone-Computers
அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும்,
திருத்த வேலைகளுக்கும்
416 264 6400
2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)

# Our goal is to help our clients to save more, and get more result.

GLORIOUS

GRAPHICS PRINT VIDEO PHOTO WEB

gloriousprinters.com 905.471.2500

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

gloriousweb.ca

printglorious@gmail.com | info@gloriousprinters.com

9889 Markham rd (hwy 48) Unit 9, Markham ON, L6E 0B7

## Logo Designs

MARATHON BISTRO

WAVE TECH Professional Electronics Analysts

MASTERCOLORPHOTOGRAPHY

## STARTER

$350 PER YEAR




- 5 Static HTML Pages
- *FREE* Email Account
- *FREE* Domain Registration
- *FREE* Web Hosting Space
- Online Inquiry
- Social Network Integration

## Custom Card Design

Premium quality cards for: Wedding, Puberty, Birthday Anniversary, and other special occations.



## Gift Items



## Custom Framing

Photo Enlargement
Canvas / Matte Print
Album Design
Old Photo Scanned
Photo Repair
CD Photo Compilation
Large Format Printing

திருமண - பூப்புனிதநீராட்டு விழா-அழைப்பிதழ்கள்

நினைவுமலர்கள்
விளம்பர பிரசுரங்கள்
தன்னறிமுக அட்டைகள்
விளம்பர பலகைகளும்
மற்றும் அனைத்துவிதமான
அச்சுவேலைகளுக்கும்
அழகான முறையில்
குறித்த நேரத்தில்
அச்சிட்டு தரப்படும்

Graphic Design Services

Custom Logo Design
Print Art Design

OTHER SERVICES:

WESTERN UNION

FedEx Federal Express

glorious.printers




# Toronto Business College இன் பட்டமளிப்பு விழா

Toronto Business College ன் பட்டமளிப்பு விழா நவம்பர் மாதம் 11ம் திகதி புதன்கிழமை மாலை கென்னடி /401 ல் சந்திப்பில் அமைந்துள்ள Delta Hotel மண்டபத்தில் நடைபெற்றது.

எழுபதுக்கும் அதிகமான மாணவ மாணவிகள் டிப்பிளோமா பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

MPP திரு. பாஸ் பல்கிசூன் பிரதம் விருந்தினராகவும், அறிஞர் திரு. சாமி அப்பாத்துரை, திரு. தேசா தெய்வேந்திரம், MS. Kitt Hunter Wolff ஆகியோர் முக்கிய விருந்தினர்களாகவும் பங்குபற்றி உரையாற்றினார்கள்.



# சொல்லத்தான் நினைக்கிறேன்

அருண்மொழிவர்மன்


09

## திரைப்படங்களாகும் நாவல்கள்:

நாவல்களையும், சிறுகதைகளையும் திரைப்படங்களாக்குவது பற்றி பல்வேறு இடங்களில் பேசப்பட்டிருக்கின்றது. தமிழ்த் திரைப்படங்களில் கதையம்சம் மிகவும் பலவீனமாக இருப்பது பற்றிப் பேசும்போதெல்லாம், நாவல்களும், இலக்கியங்களும் திரைப்படங்களாக்கப்பட வேண்டும் என்பதுவும் பரவலாக முன்வைக்கப்படும் ஆலோசனை. ஆரம்ப காலங்களில் தனது நாவல்களான காயத்ரி, கரையெல்லாம் செண்பகப்பூ, பிரியா போன்றன திரைப்படங்களாக எடுக்கப்பட்டபோது அவை நாவல்களாக இருந்தபோது கொண்டிருந்த ஜீவனை இழந்து, மிகவும் அந்நியமாக வெளிவந்ததாக சுஜாதா பல்வேறு பத்திகளில் எழுதி இருக்கின்றார். பதின்மங்களில் பலருக்கும் பிடித்திருந்த அவரது பிரிவோம் சந்திப்போம் பின்னர் ஆனந்த தாண்டவம் என்ற பெயரில் திரைப்படமான போதும் பாத்திர உருவாக்கங்கள் வெறுமையானவையாக, மிகவும் நாடகத்தன்மையானவையாக இருந்தன. அதே நேரம் நாவல்கள் / தொடர்கதைகள் திரைப்படங்களாக எடுக்கப்பட்டால் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை இருந்த காலம் ஒன்றும் கூட இருந்திருக்கின்றது. பாலசந்தர் இயக்கத்தில் வெளியான நினைத்தாலே இனிக்கும் திரைப்படத்திற்குக் கதை எழுதிய சுஜாதா, அதனை வெளியில் சொன்னபோது 'இதை ஏதாவது பத்திரிகையில் தொடராக எழுதுங்கள். தொடர்கதைகள் திரைப்படங்களாக உருவாக்கப்பட்டால் வெற்றிபெறும் காலம் இது' என்று அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது என்பதை அவர் தனக்கே உரிய நகைச்சுவையுடன் பதிவுச் செய்திருந்தார்.

நாவல், தொடர்கதை போன்ற இலக்கிய வடிவங்களை திரைப்படங்களாக எடுப்பது என்பது உண்மையிலேயே சவாலானது. அடிப்படையில் இரண்டுமே வேறுபட்ட கலை வடிவங்கள். ஒரு கதையினை எடுத்துக் கொண்டு அதை மூலமாக வைத்து, சில மாற்றங்களுடனோ, அல்லது நேரடியாகவோ திரைப்படம் ஆக்கலாம் (ஆனால் அவ்விதம் மூலக் கதையில் இருந்து மாற்றங்களைச் செய்கின்றபோது ஏற்படுகின்ற கருத்தியல் சார்புகளுக்கு அதன் திரைப்படத்துக்காக கதையினை உருவாக்குபவரே பொறுப்பேற்க வேண்டும்). உதாரணமாக இயக்குனர் மகேந்திரன் இயக்கத்தில் வெளியான முள்ளும் மலரும் திரைப்படம் உருவான கதை பற்றித் தனது 'நானும் சினிமாவும்' நூலில் இயக்குனர் மகேந்திரன் பின்வருமாறு கூறுகின்றார்: 'முள்ளும் மலரும் நாவலை நான் படித்த போது கதாபுருஷன் 'காளி' வேலை செய்யும் விண்ச் ஒப்பரேற்றர் உத்தியோகமும் அவனுடைய வித்தியாசமான சுயகௌரவமும் என்னைக் கவர்ந்தன. நாவலில் காளியை புலியொன்று தாக்கி அவனது ஒரு கை போய் விடும். அந்த அத்தியாயத்தோடு நாவலை மூடி வைத்து விட்டேன். பிறகு காளி அவனது தங்கை வள்ளி இருவரின் குழந்தைப் பருவம் என்று ஒவ்வொன்றாகப் புதிது புதிகாகச் சேர்த்துக் கொண்டே போய் திரைக்கதையின் கடைசிக் காட்சி வரை என் விருப்பத்திற்கு ஏற்ற மாதிரி திரைக்கதை எழுதி முடித்து விட்டேன்'. இவ்வாண்டு மே மாதம் அளவில் ரொரன்றோவில் ஆவணப்பட இயக்குனர் அம்ஷன் குமார் ஒருங்கிணைத்த குறும்படப் பயிற்சிப்பட்டறையில் அசோகமித்திரனின் 'ரிக்ஷா' என்கிற சிறுகதையை ஒவ்வொரு குழுவினரும் வெவ்வேறு விதமான திரைக்கதை வடிவங்களுடன் படமாக்கியது நல்லதோர் அனுபவமாக இருந்தது.

ஒப்பீட்டளவில் நாவல்கள் திரைப்படமாக்கப்பட்டபோது என்னை அதிகம் கவர்ந்ததுவும் செம்மீன் என்றே சொல்லவேண்டும். 'கடலினக்கர போனோரே' என்கிற ஜேசுதாசின் பாடல் ஊடாக எனக்கு அறிமுகமான செம்மீன் திரைப்படம், பின்னர் நீண்டநாட்களின் பின்னர் திரைப்படமாகவும், நாவலாகவும் மீளவும் அறிமுகமானது. நாவலில் பரீக்குட்டி இரவுகளில் கடற்கரையோரமாக ஒரு பாடலைத் தொடர்ந்து பாடுவதாக வரும். 'மானசமன வரூ...' என்று திரைப்படத்தில் வருகின்ற அந்தப் பாடலும், பரீக்குட்டியும் இன்றும் எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள். கறுத்தம்மா, பரீக்குட்டி, செம்பண் குஞ்சு, கறுத்தம்மாவின் தாய் (சக்கி) என்கிற பாத்திரங்களும், உறவுகளும் இயன்றவரை நாவலில் உள்ளவிதமே திரைப்படத்திலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். ஆனாலும், அண்மையில் இத்திரைப்படத்தினை மீளப் பார்த்தபோது நாவலில் வார்க்கப்பட்டிருந்த பழனியின் பாத்திரம் திரைப்படத்தில் ஒற்றைப்படையாகக் காட்டப்பட்டிருந்தது போலத் தோன்றியது. திரைப்படம் என்கிற வடிவத்தினை உருவாக்குவதற்கு இருக்கின்ற தேவைகள் (பரீக்குட்டி, கறுத்தம்மா காதலை மேம்படுத்திக் காட்ட) கூட இத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தி இருக்கலாம்.




மிக முக்கியமாக நாவல் ஒன்று திரைப்படமாகின்றபோது அதில் நடிக்கின்ற நடிகர்கள் குறைந்தபட்சம் முக்கிய பாத்திரங்களேனும் அந்த நாவலை வாசிப்பதும் கதாபாத்திரங்களைப் புரிந்துகொள்வதும் அவர்கள் கதாபாத்திரங்களை உயிரோட்டத்துடன் வெளிப்படுத்த உதவும். அண்மையில் சத்யஜித் ரேயின் திரைப்படங்களின் சிறப்பு வெளியீடுகளை தொடர்ச்சியாகப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. The Criterion Collection என்கிற இந்த வெளியீடுகளில் முக்கியமான திரைப்படங்களுடன், அவற்றில் பங்களித்த கலைஞர்களின் நேர்காணல்கள், திரைப்படம் தொடர்பான திரைப்பட ஆய்வாளர்களின் கருத்துகள், உரைகள் என்பனவும் இடம்பெறும். சத்யஜித் ரே, ரபீந்திரநாத் தாகூரின் 'நஸ்தானிர்' (The Broken Nest) என்கிற நாவலைச் சாருலதா என்கிற திரைப்படமாக எடுத்தபோது முக்கிய பாத்திரங்களில் நடித்திருந்த மாதவி முகர்ஜி, சௌமித்ரா சட்டர்ஜி இருவரிடமும் கதையைச் கூறியதுடன் அவர்களையும் முழு நாவலையும் வாசிக்கும்படி வேண்டி, நாவலை அனுப்பி வைத்ததாகவும் அவர்கள் இருவருமே கூறுகின்றனர். திரைப்படத்தில் 'அமல்' ஆகவும், 'சாருலதா' ஆகவும் நடித்த சௌமித்ரா சட்டர்ஜி, மாதவி முகர்ஜி இருவரும் முழுமையாக உள்வாங்கி நடித்திருந்தனர் என்றே சொல்லவேண்டும். தமிழ்த் திரைப்படச் சூழலில் இதற்கெல்லாம் இருக்கக்கூடிய சாத்தியம் மிகக் குறைவென்றே நினைக்கின்றேன்.

இந்த இடத்தில் ஜெயமோகனின் அனல் காற்று இன்னொரு விதத்தில் முக்கியமானது. பாலுமகேந்திரா திரைக்கதை அமைத்து திரைப்படமாக்குவதற்கு என்றே ஜெயமோகன் எழுதிய குறுநாவல் அனல்காற்று. படத்தை எடுக்க இருந்த தயாரிப்பாளர் பங்குச் சந்தை வீழ்ச்சியில் காணாமல் போனதால் படம் கைவிடப்பட்டது என்று ஜெயமோகன் நூலிலேயே குறிப்பிட்டிருகின்றார். பாலுமகேந்திராவின் திரைப்படங்களில் முன்னரே நாம் பார்திருக்கக்க்கூடிய குணஇயல்புகளுடன் கூடிய ஆணுக்கும், இரண்டு பெண்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற காமத்தையும், காதலையும், உறவுச் சிக்கல்களையும் கூறுவதுடன் அவற்றை உளவியல் கண்ணோட்டத்துடனும் அணுகுகின்ற நாவல் இது. திரைப்படத்துக்காக என்றே எழுதப்பட்டதால், திரைப்படங்களுக்கே உரிய அம்சங்கள் துருத்தித் தெரிகின்றது, குறிப்பாக இறுதியில் அருண் தன் கையை வெட்டிக்கொள்ளுதல், பின்னர் சுசியுடன் இணைதல், சந்திரா அருணை விட்டு விலகி அவனை சுசியுடன் இணையும்படி கூறுவது போன்றவை வழமையான திரைப்படங்களுக்கேயான முறையில் நிகழுகின்றன. மேற்குநாடொன்றில் சிறுவயது முதலே இருந்து சொந்த ஊர் (தமிழ்நாடு) திரும்பி வரும் பெண் அந்த வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் பார்த்து உள்ளூரில் வாழ விரும்புவதாகவே பெரும்பாலும் தமிழ்த் திரைப்படங்களில் கதை அமைக்கப்படும். கிட்டத்தட்ட அதையே அனல்காற்றும் செய்திருக்கின்றது. அதேநேரம் அருணை வழமையான நாயகத்தன்மை கொண்டவனாக உருவாக்காமல், தன்னைச் சூழ இருப்பவர்களுடன் தொடர்ச்சியான உறவுச்சிக்கல்கள் கொண்டவனாக நிறைவாகவே உருவாக்கி உள்ளார். தனது தாய்க்கும், சந்திராவுக்கும், சுசிக்கும், சிறிய தாய்க்கும், சகோதரிகளுக்கும் என அவன் கொண்டிருக்கின்ற உறவு வெவ்வேறு தன்மையானது. அதுபோலவே தந்தையை தொடர்ந்து வார்த்தைகளால் காயப்படுத்திக்கொண்டும், சந்திராவின் மகனுடன் தொடர்ச்சியாக குற்ற உணர்ச்சியுடன் பழகுபவனாகவும் அவனே இருக்கின்றான். நிச்சயமாக இதை ஜெயமோகனின் முக்கியமான நாவல் என்று சொல்லமுடியாது என்றாலும், இதை ஒரு திரைப்படமாக பாலுமகேந்திரா உருவாக்கி இருந்தால் முக்கியமான திரைப்படங்களுள் ஒன்றாக அமைந்திருக்கும்.


## மன அழுத்தம் பற்றி...

சில ஆண்டுகளுக்கு முன்னர் 'சொல்லாததும் உண்மை' என்ற பெயரில் நடிகர் பிரகாஷ் ராஜின் தொடர் ஒன்று ஆனந்த விகடனில் தொடராக வெளியானது நினைவிருக்கலாம். அதில் ஏதோ தனிப்பட்ட பிரச்சினைகளில் இருந்த அவரது நண்பன் ஒருவன் அவருடன் பேச வீடு தேடி வந்ததாகவும், அந்த நேரம் தான் தனது காதலியுடன் இருந்ததால் நண்பனுடன் பேசுவதைத் தவிர்த்து தான் அனுப்பியதாகவும், அந்த நண்பன் நேரே போய் தற்கொலை செய்துகொண்டான் என்றும் கூறி, அன்று அவனுக்கு மனம் விட்டுப் பேச யாரோ ஒருவர் தேவையாக இருந்தது. தான் மட்டும் சில நிமிடங்கள் அவனுடன் பேசி இருந்தால் அவன் தற்கொலை செய்யாமல் தப்பி இருப்பான் என்று வருத்தம் தெரிவித்திருப்பார். உண்மையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உளவியல் சிக்கல்களுக்கும், மன அழுத்தங்களுக்கும் உள்ளாகி இருப்பவர்களுக்கு மனம்விட்டுப் பேச ஒருவர் இருப்பது என்பதே மிகப்பெரும் ஆறுதலாக அமையும்.

கனடாவில் மன அழுத்தம் (மன அழுத்தம் என்று குறிப்பிட்டாலும் Depression, Stress, Anxiety ஆகிய மூன்றையும் இணைத்தே இங்கே குறிப்பிடுகின்றேன்) மற்றும் அதனுடன் தொடர்பான உளவியல் சிக்கல்களால் பாதிக்கப்படுபவர்கள் அதிகரித்து இருப்பதாகவும், அதே நேரம் இவை தொடர்பான மருத்துவ ஆலோசனைகளைப் பெறுபவர்கள் மிகவும் குறைவாக இருப்பதாகவும் தொடர்ச்சியாக பல்வேறு வெளியீடுகளில் குறிப்பிட்டு வருகின்றார்கள். குறிப்பாக இங்கு வாழும் தமிழர்கள் மத்தியிலும் இது தொடர்பான போதிய விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மன அழுத்தத்துக்கு ஆளானவர் அதனை வெளிப்படையாகத் தனக்கு நெருக்கமானவர்களுடன் கூட பேசுவதற்கு உகந்த சூழலும் மனநிலையும் இன்னமும் வாய்க்கப்பெறவில்லை. குடும்ப வைத்தியர்களை அணுகும்போது அவர்களும் கூட 'எதையும் சிம்பிளா எடுக்க வேணும், இது பலவீனமான ஆட்களுக்கு வாற பிரச்சினை' என்பது போன்ற பொதுப்புத்தியில் இருக்கக்கூடிய கருத்துக்களையே சொல்வதுவும், அங்கே பணியாற்றுபவர்களும் வித்தியாசமான தொனியில் பேசுவதுவும் மிக சாதாரணமாக நடக்கின்றது. இப்படியான ஒரு சூழலில் ஒக்ரோபர் 2015 காலச்சுவடு இதழில் அனிருத்தன் வாசுதேவன் எழுதியிருக்கின்ற 'மன அழுத்தம்: மாறிவரும் மதிப்பீடுகள்' என்கிற கட்டுரை முக்கியமானது. குறிப்பாக Depression A Public Feeling என்கிற ஆன் ஸ்வெட்கோவிச்சின் நூலினை முன்வைத்து 'மனஅழுத்தத்தைத் தனிமனிதக் குறைபாடாகவோ தனிப்பட்ட மனநலப்பிரச்சினையாகவோ மட்டும் பார்க்காமல், அதைச் சமூக வாழ்வின் வெளிப்படைகளின் மறுபுறமுள்ள இருட்டறையாகவும், அநீதிகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் களைய நெடுங்காலமாகக் கையாளப்பட்டுவரும் திட்டங்களும் போராட்டங்களும் வீரியமிழந்து வருவதைக் காண்பதால் உண்டாகும் அயர்வாகவும் நாம் பார்க்க முற்பட்டால், அது நம் அரசியல் செயல்பாடுகளைப் பற்றி நம்மை வேறு விதங்களில் சிந்திக்கவைக்கலாம் என்பது அவரது வாதங்களில் முக்கியமானது' என்று குறிப்பிடுகின்ற அனிருத்தன் வாசுதேவனின் கருத்துடன் பெருமளவு உடன்படவும் முடிகின்றது.

மூன்று பாகங்கள் கொண்ட தொடராக வெளிவரும் என்று குறிப்பிடப்பட்ட தொடரின் முதலாவது பாகம் மாத்திரமே இதுவரை வெளிவந்திருக்கின்றது. அடுத்த இதழ்களில் அது தொடர்ந்து வெளிவரவேண்டும் என்று ஆவல் எழுகின்றது.



arunmozhivarman@thaiveedu.com

www.noolaham.org

noolahamfoundation@gmail.com

நூலகம்

# அதிபருக்கு அஞ்சலிக் கூட்டம்



அமரர் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களது முதலாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்

## டிசம்பர் 24

வியாழக்கிழமை பி.ப. 3 மணிதொடக்கம்

**Golden Cultural Event Centre**

**3001 Markham Rd, Unit 10, Scarborough, ON., M1X 1L6**

உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனுதாபிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

***கூட்டம் தொடங்கும் நேரத்தைத் தயவுசெய்து கவனிக்க.***



### தமிழ் சைவர்களின் கல்விச் சேவைகள்

# வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி - 1896

- முருகேசு பாக்கியநாதன் -

**முகவுரை:**
வல்வெட்டித்துறை என்ற சிறு நகரம் கடற்கரையோரக் கிராம வாழ்க்கையும் சிறு நகர வாழ்கையும் கலந்த, நெய்தல் நிலப் பிரதேசமாகும். இது தமிழர்களின் பண் பாட்டுப் பரிமாணங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட பிரதேசம். அதற்குப் பல உதாரணங்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

தமிழர் வாழ்க்கையோடு ஒன்றிணைந்த கப் பல் கட்டும் தொழிலை ஈழத்தில் அறி- முகப் படுத்தியும் நடைமுறைப்படுத்தியும் வந்தோ ரில் இப்பிரதேசத்தைச் சார்ந்தோர் முதன் மையானோர் ஆவர்.

- 1930ல் வல்வையில் கட்டப்பட்ட 'அன்ன பூரணி' என்னும் பாய்மரக் கப்பல் சுயெஸ் கால்வாயூடாகப் பயணித்து அமெரிக்கா வைச் சென்றடைந்தது. இக்கப்பல் பற்றிய செய்தியை 'த பொஸ்ரன் டெய்லி குளோப்' என்ற அமெரிக்கப் பத்திரிகை கப்பலின் படத்துடன் வெளியிட்டது.
- 1954ம் ஆண்டு பாக்குநீரிணையை நீந்தி கடந்த முதல் வீரன் திரு.மு. நவரத்தின சாமி. வல்வெட்டித் துறையிலிருந்து புறப் பட்டு 26 மணி 30 நிமிடம் தொடர்ச்சியாக நீந்தி 32 மைல் நீளத்தைக் கடந்து தமி ழகத்தின் கோடிக்கரையைச் சென்றடைந் தார்.
- 1975ல் பாக்கு நீரிணையைக் கடந்து மீண் டும் 51 மணிநேரத்தில் திரும்பி வந்து சாதனை படைத்த ஆழிக்குமரன் ஆனந் தன் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். தொடர்ந்தும் பல சாதனைகளை இந்தி யாவிலும் இலங்கையிலும் புரிந்து 'கின் னஸ்' சாதனைப்புத்தகத்தில் இடம்பெற்றார். இவர் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது சீரற்ற கால நிலை அவரது உடலைப் பாதித்தது. அதுவே அவரது இறப்புக்கும் காரணமா னது. வீரகேசரிப் பத்திரிகையே 'ஆழிக் குமரன்' என்ற பட்டத்தினை வழங்கியது. இலங்கை அரசு அவர் உருவம் பொறித்த ஒரு முத்திரை வெளியிட்டுக் கௌரவித் தது.
- தமிழீழ விடுதலைப் புலிகளின் தானைத் தலைவனையும் பல்வேறு தளபதிகளை யும் தந்த பெருமை வல்வெட்டித்துறைக்கே உரியது.
- 1942ம் ஆண்டு இடதுசாரித் தலைவர்களான டாக்டர் என்.எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா, திரு பிலிப் குணவர்தனா ஆகிய மூவரும் பிரித்தா னிய அரசுக்கெதிராகக் கிளர்ச்சி செய்த போது கைதாகி சிறையில் அடைபட்டனர். சிறையில் இருந்து தப்பிய அவர்கள் வல்வெட்டித்துறையில் தஞ்சம் அடைந் தனர். அவர்களை பாதுகாப்பாக வள் ளத்தில் ஏற்றி தமிழகக் கரையில் சேர்த்து வல்வை மக்கள் இலங்கை வரலாற்றில் இடம்பெற்றார்கள்.
- பல கட்சிகளாக உடைந்து போய் நாலா திசையிலும் பயணித்துக் கொண்டிருந்த தமிழ்த் தலைவர்களை ஒன்று சேர்த்து 'தமிழர் விடுதலைக் கூட்டணி' என்ற அமைப்பு வல்வெட்டித்துறையிலேயே உருவாக்கப்பட்டது.
- வல்வை 33 சைவ ஆலயங்களைக் கொண்ட பெருமையுடைய திருவூராகும்.

**கல்லூரியின் வரலாறு**

**நிறுவனர்**
**திரு. கு. சிதம்பரப்பிள்ளை:**
இப்பாடசாலை 1896ம் ஆண்டு வள்ளல் திரு கு. சிதம்பரப்பிள்ளை அவர்களால் நிறுவப்பட்டது. சிதம்பரப்பிள்ளை அவர்கள்



1861ம் ஆண்டு பிறந்து பருத்தித்துறையி லுள்ள வெஸ்லியன் மதப் பாடசாலையான ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கிலம் கற்று அரசாங்க சேவையில் இணைந்து பணி யாற்றினார். வல்வெட்டித்துறையில் ஆங்கிலக் கல்வி கற்கப் பாடசாலைகள் எதுவும் இருக்க வில்லை. அதனால் 5 மைல்கள் நடையா கச் சென்றே ஹாட்லியில் படிக்க வேண்டி யிருந்தது. இதன் காரணத்தினால் வல்வையில் வாழும் கல்வி கற்றவர்களையும் பணம் படைத்தவர்களையும் அழைத்து ஒரு கூட் டம் நடத்தி வல்வையில் ஒரு ஆங்கிலப் பாடசாலையின் தேவையினை எடுத்துக் கூறினார். அக்கருத்தினைப் பலரும் ஏற்ற தற்கிணங்க பாடசாலையை அமைக்கும் முடிவிற்கு வந்தனர்.

இதன் காரணமாக கார்த்திகை மாதம் 11ம் திகதி 1896ம் ஆண்டு வல்வை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள ஆலடி என்னும் இடத்தில் 'சிதம்பர வித்தி யாலயம்' என்னும் பெயருடன் ஒரு சிறு பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. முதல் பாடசாலைத் தலைமை ஆசிரியராக நிறு வனராகிய திரு. கு. சிதம்பரப்பிள்ளையே கடமையாற்றினார். ஆரம்பப் பணிகளையும் தேவைகளையும் செவ்வனே செய்து தன் சமூகக் கடமைகளை நிறைவேற்றிய சிதம் பரப்பிள்ளை 1903ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவரின் பின்னர் முறையே திரு ஈ.கே. சுப்பிரமணியம், திரு எஸ்.இரங்கநாதன் திரு ஏ.எஸ்.சுந்தரராஜன் ஆகியோர் 1922வரை தலைமையாசிரியராகக் கடமையாற்றினார் கள். சிதம்பரப்பிள்ளைக்குப் பின்னர் பணி யாற்றிய தலைமையாசிரியர்கள் மூவரும் தமிழ்நாட்டிலிருந்து அழைக்கப்பட்டோராவர். இப்பாடசாலையில் இந்தியா தமிழ்நாட்டி- லிருந்தும் கேரளத்திலிருந்தும் பல ஆசிரி யர்கள் வந்து கல்வி கற்பித்தமை குறிப்பி டத்தக்கதாகும்.

**பாடசாலை முகாமை:**
இப்பாடசாலை நிறுவப்பட்டபோது பாடசா லையின் முதல் முகாமையாளராகப் பருத் தித்துறையைச் சேர்ந்த திரு வினாயகம் முதலியார் கடமையாற்றினார். பின்னர் திரு ஏ. நாகமுத்து, திரு.வீ. அருணாசலம் ஆகியோர் முகாமையாளராகப் பணியாற்றி னர். 1901 தொடக்கம் 1960வரை தொடர்ந்து 60 வருடங்கள் முகாமையாளராகவிருந்து அரும்பெரும் சேவையாற்றிய பெருந்தகை திரு ஞா. தையல்பாகர் ஆவர்.



**1904ம் ஆண்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அரச அனுமதி:**
இப்பாடசாலை முதன்நிலைப் பாடசாலையாகி வளர்ச்சி கண்டமையால் அரச உதவி, நன்கொடை போன்றவற்றைப் பெறக்கூடிய அந்தஸ்தினைப் பெற்று 1904ம் ஆண்டு அர சாங்க உதவி நன்கொடை பெறும் பாடசா லையாகப் பதிவு செய்யப்பட்டது. இதனால் ஆசிரியர்கள் அரசாங்கச் சம்பளத்தினைப் பெற்றார்கள். இதன் காரணமாக ஊரவரின் உதவி பாடசாலை விருத்திக்கு மேலும் உதவியது. பாடசாலை வளர்ச்சியுற்ற போது மாணவர் தொகையும் கூடியது. இடப் பற் றாக்குறை ஏற்படவே 1912ம் ஆண்டு தற் போது பாடசாலை இயங்கும் ஊரிக்காடு என்னும் இடத்துக்கு நிரந்தரமாக மாற்றப் பட்டது.

ஆரம்பத்தில் 5ம் வகுப்பு வரையுமே இயங்கிய பாடசாலை 1923ம் ஆண்டு இரண்டாம் தரக் கனிஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப் பட்டது.

1928ம் ஆண்டு கேம்பிறிஜ் சீனியர் பரீட் சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கு அனு மதி வழங்கப்பட்டது.

1935ல் லண்டண் மெற்றிக்குலேஷன் பரீட் சைக்கு தோற்ற ஏதுவாக வகுப்புகள் ஆரம் பிக்கப்பட்டன. இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்ட காலங்களில் ஹாட்லிக் கல்லூரிக்கு அடுத்தபடியாக சிதம்பரக் கல்லூரி தரம் 'டி' பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

1942ம் ஆண்டு லண்டன் மெற்றிக்குலேஷன் பரீட்சை வகுப்புக்களைத் தொடர்ந்து சிரேஸ்ட பாடசாலைத் தராதர (S.S.C) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1935ம் ஆண்டே பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகள் தொடங்குவதற்குரிய வசதிகள் இருந்தும் பல தடைகளால் அதனை 1958ம் ஆண்டே ஆரம்பிக்கக் கூடியதாகவிருந்தது.

1929ம் ஆண்டு பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடம் முதலியார் எஸ்.கார்த்திகேசு அவர்களாலும் திரு வ. இராமசாமிப்பிள்ளை அவர்களாலும் கட்டப்பட்டது. இதேபோன்று பல கட்டிடங்களும் வகுப்பறைகளும் வல் வெட்டித்துறை வாழ் பெருந்தகைகளால் கட்டிக் கொடுக்கப்பட்டன. ஏனைய பாடசா லைகளோடு ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் நிதியுதவியோடு கட்டிடங்களை அவ்வூர் சார்ந்த பெருமக்களே கட்டிக் கொடுத்தி ருப்பது குறிப்பிடத்தக்கது.

**சிதம்பரக் கல்லூரி:**
பாடசாலையின் படிமுறை வளர்ச்சிகளை அவதானித்த கல்வித் திணைக்களம் பாடசா லையை தரம் இரண்டிற்கு தரமுயர்த்தியது. இதுவரை சிதம்பர வித்தியாலயம் என்றிருந்த பாடசாலை 1958 முதல் சிதம்பரக் கல்லூரி என்று அழைக்கப்படலாயிற்று.

**அதிபர்கள்:**
முதல் நான்கு தலைமை ஆசிரியர்கள் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அதன்பின்பு வந்த அதிபர்களை நோக்குவோம். 1929ல் பொறுப்பேற்று 1960வரை 31 வருடங்கள் அதிபராகவிருந்து பாடசாலையின் தரத்தினை உயர்த்த அரும்பாடுபட்ட அதிபர் திரு. எஸ். வண்ணமாமலை ஐயங்கார் ஆவர். இவ ரும் தமிழகத்திலிருந்து வந்தவராவர். 1960ம் ஆண்டில் அரசு கல்லூரியைப் பொறுப்பெ டுக்கும் வரை தனிப்பட்ட முகாமைத்துவத் தின் கீழ் இவர் பணியாற்றினார்.

கல்லூரியில் அதிபராகப் பணியாற்றியோரது விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர்தல் 70ம் பக்கம்




# வல்வெட்டித்துறை...

69ம் பக்கத் தொடர்ச்சி...

1923 - 1928: திரு.வீ. சின்னத்தம்பி
1929 - 1960: திரு.எஸ். வண்ணமாமலை ஐயங்கார்
1960 - 1968: திரு.தை. அருள்சுந்தரம்
1968 - 1968: திரு.வீ. நடராஜா
1968 - 1970: திரு.எஸ். சத்தியமூர்த்தி
1970 - 1970: திரு.ஆர். சச்சிதானந்தம்
1971 - 1971: திரு.எஸ். சத்தியமூர்த்தி
1971 - 1973: திரு.எஸ். சிவகுருநாதன்
1973 - 1973: திரு.எஸ். சண்முகராஜா
1973 - 1974: திரு.எஸ். சிவநேசன்
1975 - 1975: திரு.கே. பாலச்சந்திரன்
1975 - 1994: திரு.கோ. செல்வவிநாயகம்.
1994 - 1996: திரு.செ. யோகச்சந்திரன்
1996 - 1996: திரு.சி. தங்கராசா
1998 - 2002: திரு.செ. யோகச்சந்திரன்
2002 - 2005: திரு.ந. அரியரட்ணம்
2005 - 2007: திரு.அ. விஜயநாதன்
2007 - 2009: திரு.சி. மகேந்திரன்
2010 - 2010: திரு.க. கிருஷ்ணகுமார்
2010 - 2011: திரு.சி. நற்குணலிங்கம்
: திரு.கி. இராஜதுரை
: திரு.எஸ். குருகுலலிங்கம்

### பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றல்:

திரு. ஞ. தையல்பாகர் முகாமையாளராகவும் திரு.எஸ். வண்ணமாமலை ஐயங்கார் பி.ஏ அதிபராகவும் பணியாற்றிய வேளையில் பாடசாலையில் பல்வேறு அபிவிருத்திச் சேவைகள் இடம்பெற்றன. தேசிய ரீதியி லும், மாவட்ட ரீதியிலும் மாணவர்கள் பல் வேறு சாதனைகளை நிகழ்த்தியிருந்தார்கள். பாடசாலையின் அபிவிருத்தி நிதியினைப் பெருக்குவதற்காக 1959ல் ஒரு மாபெரும் களியாட்ட விழா ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்புற நடைபெற்றது. அதன்போது மாண வர்களும் பல்வேறு சாதனைகளைச் செய்து காட்டினர். இதில் பெறப்பட்ட நிதியின் மூலம் கல்லூரிக்குத் தென்புறத்தே அமைந்திருந்த ஐந்தரைப் பரப்புக் காணியைக் கொள்வ னவு செய்தனர். இதனைத் தொடர்ந்து 1960ம் ஆண்டு சகல தனியார் முகாமைத் துவப் பாடசாலைகளையும் பொறுப்பெடுப் பதாக அரசு அறிவித்து பொறுப்பெடுத்தவுடன் திரு. ஞ. தையல்பாகர், முகாமையாளர் திரு. எஸ். வண்ணமாமலை ஐயங்கார் அதிபர் ஆகியோரது கடமைகளும் முடிவுக்கு வந்தன.

### பாடசாலையின் கல்வி முன்னேற்றம்:

பாடசாலையின் கல்வி முன்னேற்றமடைந்து கொண்டு வந்தது. அத்தோடு பாடசாலையின் கல்விசாரா ஏனைய நடவடிக்கைகளும் சிறந்தோங்கின. இரண்டிலும் ஒரே விதமாகக் கவனம் செலுத்தி இரண்டையும் ஒன்றுக் கொன்று சமாந்தரமாகக் கொண்டு சென்றனர். சில உயர்தர வகுப்பு மாணவர்கள் ஹாட் லிக் கல்லூரிக்கும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும் சென்று பல்கலைக் கழகம் புகுந்தனர், ஆனாலும் இவர்களுக்கு அத்திவாரம் இட்டது சிதம்பரக் கல்லூரியே.

இதேவேளை சிதம்பரக் கல்லூரியின் பயின்ற மாணவரும் பல்கலைக் கழகத்திற்குச் சென் றனர். சிதம்பராக் கல்லூரி வெளியிட்ட கல் லூரி நூற்றாண்டு மலரில் *'நாம் எமது நூற் றாண்டு விழாவை எடுக்கும் காலம்வரை எம் கல்லூரி பல்கலைக்கழகப் பேராசிரி யர்கள், வைத்திய கலாநிதிகள், விஷேட வைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள், கணக்காளர் கள், அரச நிர்வாகசேவை உத்தியோகத் தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், வீரதீரர் கள், கலைஞர்கள், உயர்நிலை நிர்வாகிகள் போன்ற பல்துறையில் ஈடுபட்டவர்களை உருவாக்கியுள்ளது.'* எனக் குறிப்பிடப்பட் டுள்ளது.

### முறைசாரா தொழிற் கல்வி:

1975 - 1994 திரு கோ. செல்வவிநாயகம் அவர்கள் அதிபராகவிருந்த போது 'பாட சாலை அபிவிருத்திச் சங்கமும்' பழைய மாணவர் சங்கமும்' சேர்ந்து ஒத்துழைப்பு டன் பள்ளிப்படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்களுக்காக வானொலி, தொலைக் காட்சி பழுதுபார்த்தல் போன்ற தொழில் நுட்ப வகுப்புகளை ஆரம்பித்தன. இதன் காரணமாக மேற்படிப்பைத் தொடர முடி யாத மாணவர்கள் தங்களுக்கென ஒரு தொழிலைத் தெரிந்தெடுத்து தம்மை வளர்த் துக் கொள்ள வழியேற்பட்டது. திரு சி. தங்கராசா அவர்களது காலத்தில் பழைய மாணவர்களது பங்களிப்புடன் கணினிப் பயிற்சி வகுப்புக்கள், மரவேலைப் பாடம், கடற்றொழில் பாடம், மனையியல் பாடம் போன்றன ஆரம்பிக்கப்பட்டதனால் புதிய வேலைகளைத் தேட மாணவர்களுக்கு வழி பிறந்தது. தொடர்ந்து அரசாங்க உத விகள் தென்பகுதிப் பாடசாலைகளுக்கு கிடைப்பது போல் தமிழ்ப் பகுதிகளுக்குக் கிடைப்பது அரிதானதே. இந்தப் பாடசாலை முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டவர் கள் வல்வை நகர மக்களும் பெற்றோர் களும் பழைய மாணவர் சங்கமுமாகும். கட்டடமாயினும், விளையாட்டு மைதான- மாயினும் சரி அரசை எதிர்பார்ப்பதனை விட மேற்கூறியவர்களாலேயே பெருமள வில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### மாணவர் தலைவர்கள்:

மாணவர் தலைவர்களை நியமிக்கும் திட் டம் 1955ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதிபர், ஆசிரியர்கள் கொண்ட ஒரு குழுவே மாணவர் தலைவர்களைத் தெரிவு செய் கின்றார்கள். கல்வியில் சிறந்து விளங்கு வோர், விளையாட்டில் முன்னணி வகுப்போர், சாரணியத் தலைவர், ஒழுக்கம் மிக்கோர் போன்ற தகுதிகளின் அடிப்படையில் இவர் கள் தெரிவுசெய்யப்படுவர்.

பின்வரும் மன்றங்கள் பாடசாலையில் இயங் கின. இந்துமா மன்றம், தமிழ் இலக்கிய மன்றம், விஞ்ஞான மன்றம், போன்ற மன் றங்கள் மாணவர்களின் வளர்ச்சிக்காக இயங்கின.

### சாரணீயம், உதைபந்தாட்டம். நாடகம், சங்கீதம்:

போன்ற கல்விசாரா நடவடிக்கைகளில் முக் கிய கவனம் செலுத்தி அகில இலங்கை ரீதி யில் தமது திறமையை நிலை நாட்டியுள்ளனர்.

### சாரணீயம்:

1942ம் ஆண்டு 13 இளம் மாணவர்களுடன் சாரணிய அமைப்புத் தொடங்கப்பட்டது. கல்லூரியில் இது பழைய மாணவரும் ஆசிரியருமான திரு. எஸ்.ஆர். அரியரத்தி னம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இவ ரது செயற்பாடு 1967 வரை தொடர்ந்தது. இவரது அர்ப்பணிப்பான செயற்பாட்டினால் சாரணர்கள் பல வெற்றிகளையீட்டினார்கள். அவர் வவுனியா மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு சாரண ஆணையாளராக நியமிக்கப்பட்டார். அவரால் வளர்க்கப்பட்ட சாரணர் இயக்கம் குடாநாட்டிலும், இலங் கையிலும் முன்னணி இயக்கமாக வளர்ந்தது.

பிற்காலத்தில் சாரணிய அமைப்புக்குப் பொறுப்பாக இருந்த அதிபர் கோ.செல்வவி நாயகம் அகில இலங்கை சாரணர் பயிற் சிக் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவரா கவும் 1980ல் யாழ் மாவட்ட சாரணர் உதவி ஆணையாளராகவும் யாழ்மாவட்டம் 4 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட பின்னர் பருத்தித்துறை மாவட்ட ஆணையாளராக வும் நியமிக்கப்பட்டார்.

1960, 1961, 1962, 1965 பழைய பூங்காவில் நடைபெற்ற போட்டிப் பாசறையில் பங்கு பற்றி சிறந்த சாரணர் குழுவாக தொடர்ந்து 4 வருடங்களும் 'றோட்டரிக் கேடயத்தைப்' பெற்றுக் கொண்டது.

1963ல் அகில இலங்கைரீதியாக நடைபெ றும் போட்டிகளில் பங்குபற்றும் தரத்தைப் பெற்றார்கள். 1963ல் அகில இலங்கைரீதி யாக நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்டு 'லோறன்ஸ் பெனாண்டோ' கொடி யினை யாழ் இந்துக் கல்லூரி பெற்றுக் கொள்ள விஷேட பாராட்டினை சிதம்பரா பெற்றுக் கொண்டது.

### விளையாட்டுத்துறை:

சிதம்பரா விளையாட்டுத் துறையிலும் தனது சாதனைகளைப் பதித்தது. கரப்பந்தாட்டத் தில் ஆரம்பம் முதலே சிறந்து விளங்கியது.

1948ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் 1951ம் ஆண்டு ஹங்வெல்ல சென் ஜோன்ஸ் பொஸ்கோ கல்லூரியை வென்று முதலாம் இடத்தை யும் பெற்றது.

1955ல் வடமராட்சி ஆசிரியர் சங்கம் நடத் திய கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட் டினார்கள். 1959லும் 5 போட்டிகளிலும் வெற்றி பெற்று சுற்றுக் கேடயத்தைச் சுவீ- கரித்துக் கொண்டார்கள். 1961 - 1966 வரை நடைபெற்ற போட்டிகளிலும் வெற்றி யீட்டினர்

உதைபந்தாட்டம்: 1956ல் முதற் பிரிவினர் வடமராட்சி ஆசிரியர் சங்கப் போட்டியில் வெற்றி பெற்றனர். 1957ல் மூன்றாம் பிரிவி னர் வெற்றி கொண்டனர்.

1959ல் யாழ் மாவட்ட சங்கம் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவினர் வெற்றியீட்டினர். 1961லும் அதே சங்கப் போட்டியில் சம்பியன் ஆனார்கள். 1967ல் யாழ் மாவட்டத்தின் சம்பியன் பட் டத்தையும் சிதம்பரா வென்றது.

மெய்வல்லுனர் போட்டிகளிலும் கலந்து பல பரிசுகளைப் பெற்று பாடசாலைக்கு நற்பெயர் பெற்றுக் கொடுத்தார்கள். 1949ல் 100 யார், 200 யார் ஓட்டப் போட்டிகளில் ஏ. துரைசிங்கம் என்பவர் யாழ் மாவட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

### யுத்தகாலப் பாதிப்புகள்:

யுத்தகாலச் சூழ்நிலைகளில் மிகவும் பாதிக் கப்பட்ட பாடசாலைகளில் சிதம்பராக் கல் லூரியும் ஒன்று. 1985ம் ஆண்டிலேயே அதன் பாதிப்புத் தொடங்கிற்று. அந்த வருடத்தி- லேயே வேறொரு பாடசாலையில் வகுப் புக்கள் நடத்தப்பட்டன. 1987ல் நடைபெற்ற வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன் யுத்த சூழ்நிலையில் முழு வல்வெட்டித்துறையே இடம் பெயர்ந்திருந்த நிலையில் கல்லூரியும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டது

1987ல் இடம் பெயர்ந்து தனியார் கல்வி நிலையத்தில் பாடசாலையை நடத்தினர். மீண்டும் பாடசாலைக்குத் திரும்பக் கொண்டு வர அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், ஊரார் போன்றோர் எடுத்த நடவடிக்கைகள் சொல்லிலடங்கா. 09.07.1995ம் திகதி நடை பெற்ற விமானக் குண்டு வீச்சினால் பாட சாலை பெருமளவில் பாதிக்கப்பட்டது. இவ் வழிவுகளால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து அரச சார்பற்ற நிறுவனமும் வெளிநாடு- களில் வாழும் பழைய மாணவர் சங்கங் களுமே கல்லூரியை மீளமைத்துக் கொடுத் தனர்.

### சிதம்பராவின் வழிவந்த நீதித் துறையினர்:

கௌரவ பொன். சிறிஸ்கந்தராஜா- சுப்பிரீம் கோட் நீதவான், திரு. பி. பாலவடிவேல் உயர் நீதிமன்ற நீதிபதி, திரு. ந. யோக- சிகாமணி உயர் நீதிமன்ற நீதிபதி, திரு. கு. மோதிலால்நேரு சிரேஸ்ட ஜனாதிபதி சட்டத்தரணி. ஏனைய சட்டத்தரணிகள் திரு. கனக மனோகரன், திரு. ஆ.ந. வேலாயுதம், திருமதி. பாமினி செல்லத் துரை, திரு. கு. பாலசுப்பிரமணியம், திரு. செ. சண்முகசுந்தரம், திரு. செ. பொன்னுத் துரை, திரு. க. துரைரத்தினம், திரு. எஸ். சிவானந்தசுந்தரம், செல்வி. காஞ்சனா நட- ராசா, திருமதி. கிருஷ்ணா குலேந்திரன், திரு. எஸ்.ஐ. துரைசிங்கம், திரு. மு. இரத்தினசிங்கம், திரு. க. குழந்தைவேலு, திரு. அ. குமரகுரு, திரு சங்கர் வேலுப்- பிள்ளை, திரு. வே. இந்திரசிகாமணி, திரு. மு. நடேசன், திரு. டி. பாலேந்திரன், திருமதி தாரிணி புவன்.


பல்வேறு துறையினர்: வித்துவான் மு.கன கசுந்தரம் ஆசிரியர், முத்துக்குமாரசாமி செ.வைத்திலிங்கம்பிள்ளை. பண்டிதர் சங்கர வைத்திலிங்கம்

வல்வை கமலா பெரியதம்பி - இசை ஆசி ரியை, இலங்கை வானொலிக் கலைஞர், நாடகங்கள் பல எழுதி 12 நாடகங்களில் தானும் சேர்ந்து நடித்துள்ளார். வல்வை ந. அனந்தராஜ் - இலக்கிய ஆர்வலர், சிறு கதை கட்டுரை எழுத்தாளர், உடுப்பிட்டி அ.மி கல்லூரி அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர், பல நூல்களை எழுதி வெளி யிட்டவர். ந. நகுலசிகாமணி - வல்வை வரலாற்று ஆவண காப்பகத்தின் காப்பாளர், நூல் வெளியீட்டாளர்.

மற்றும் பல வைத்திய கலாநிதிகள், பொறி யியலாளர்கள், உயர் நிர்வாகசேவை அதி காரிகள், கணக்களார்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கலைஞர்கள், எழுத்- தாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரி- யர்கள் எனப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். முழுவதுமான பெயர்களை பதிவு செய்யக் கட்டுரை இடம் தராது. மன்னிக்- கவும்.

**உசாத்துணை:**
• http://www.chithambaracollege.org/index.pup/history
• சிதம்பரக் கல்லூரி நூற்றாண்டு மலர் 1896 - 1996
• வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் - வல்வை ந. நகுலசிகாமணி
• https://www.cwnetwork.co.uk/index-2-c8.aspx

*packiyanathan.m@thaiveedu.com*



# வீடு வாங்க விற்க




South of Patterson
4 + 7 Bedrooms 7 Washroom
W/O Basement Finished

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
நத்தார் வாழ்த்துக்கள்






Markham/McNicoll
Commercial Condo



**Kuga Raveendrarajah**
Real Estate Broker
Dir: **416-843-8585**



**Mathan Selvendarakumaran**
Sales Representative
**Dir: 416-625-2870**



**Shajetha (Suzy) Sabanathan B.Sc.**
Sales Representative
Cell: **416-298-3200**

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு
**Bus: 416-298-3200**
*Independently Owned and Operated, Realtor





ஒரே நேரத்தில் இரண்டு கலைவிழாக்கள் ஒழுங்கு செய்யப்படுவதைத் தவிர்க்க உங்கள் கலை விழாக்களை முன்கூட்டியே ‘இணையம்’ இணையத் தளத்தில் பதிவு செய்து விடுங்கள். உங்கள் விழாவின் திகதியைத் தீர்மானிப்பதற்கு முன்பு இணையத்தைப் பார்த்து அந்தத் திகதியில் வேறு நிகழ்ச்சிகள் ஏதும் உள்ளதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் செல்லவிருக்கும் விழா, நிகழ்வுகள் சம்பந்தமான தகவல்களை இணையத்தைப் பார்த்து அறிவதுடன், நிகழ்வு நடைபெறும் இடத்தின் வரைபடத்தையும் இணையத்தில் பார்க்கமுடியும். இது முற்றிலும் இலவசமான சேவை.

# www.inayam.net

T. 416 400 6 406 • F. 416 849 0594
www.inayam.net, info@inayam.net
PO Box: 63581, Woodside Square, 1571 Sandhurst Circle, Toronto, ON, M1V 1V0

# இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை

பகுதி: 29

- நா. சுப்பிரமணியன் -

சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய தமிழின் முதற் பேரிலக்கியங்களின் அழகியல் பற்றிய பார்வையிலே, அவை காப்பியங்களாகக் கருதப் படநேர்ந்த வரலாற்றுச் சூழல் பற்றியும் அவ்வாறு கருத முற்பட்டவர்கள் அவற்றைப் பெருங்காப்பியங்களாக அடையாளப்படுத்த மேற்கொண்ட முயற்சியானது தண்டியலங்காரம் குறிப்படும் பெருங்காப்பிய இலக்கண நிலையுடன் பொருந்துவதாக அமையாமை பற்றியுமான விபரங்களை முன்னைய கட்டுரையிலே நோக்கினோம். அதனைத் தொடர்ந்து மேற்படி இரு பேரிலக்கியங்களின் 'பண்பாட்டு நிலைப் பங்களிப்பு' பற்றிய முக்கியசெய்திகள் இங்கு முன்வைக்கப்படவுள்ளன. இத்தொடர்பில் இலக்கிய வாசிப்பு தொடர்பான திறனாய்வுநிலைசார்ந்த சில தொடக்கநிலைக் குறிப்புகளை இங்கு முன்வைப்பது அவசியமாகிறது.

## இலக்கிய வாசிப்பின் வகைமை - சுருக்கக் குறிப்பு:

இலக்கிய வாசிப்பைப் பொதுவாக மூவகைப்படுத்தலாம். முதல்வகை வாசிப்பானது 'சுவைதேர் வாசிப்பு' ஆகும் இலக்கியத்தினூடாக எய்தக் கூடியதான புதுவகை அநுபவத்தை அல்லது மனக்கிளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்ட வாசிப்புநிலையே, இது.

இரண்டாவது வகை வாசிப்பானது சூழல் பற்றியும் இலக்கியத்தின் தகுதி பற்றியுமான அக்கறைகளுடன் நிகழ்த்தப்படும் நுண் வாசிப்பு ஆகும். படைப்பின் 'இலக்கியத் தரம்' பற்றிய 'கரிசனை'யுடனான வாசிப்பு இது. மேற்சுட்டிய சுவைதேர் வாசிப்பிலே இந்த 'இலக்கியத் தரம்' என்ற அம்சம் கவனத்தைப் பெறுவதில்லை என்பது இங்கு மனங்கொள்ளவேண்டிய செய்தியாகும்

மூன்றாவது வகை வாசிப்பானது 'ஆழ்ந்தகன்ற வாசிப்பு' ஆகும். இது மேற்சுட்டிய 'நுண்வாசிப்'பைவிட ஒருபடி மேலானதாகும். இதிலே, 'சுவைதேர் அநுபவ'மும் உண்டு. 'சூழல்பற்றியதும் இலக்கியம் பற்றியதுமான அக்கறைகளுடனான நுட்பமான அணுகுமுறை'களும் உண்டு. இவையெல்லாவற்றையும் உள்ளடக்கி, இவற்றுக்கு அப்பாலான ஒரு அகன்ற தளத்தை - அதாவது குறித்த படைப்பாக்கத்துக்குப் பின்புலமான பண்பாட்டுத் தளத்தை இனங்கண்டறிவதான பண்பாட்டு நோக்குநிலைசார்ந்த வாசிப்பு முறைமையே, இது.

மேற்படி மூன்றாவது நிலை வாசிப்பிலே குறித்த ஒரு இலக்கியப்படைப்பானது வாசகர் மற்றும் திறனாய்வாளரைத் திருப்திப்படுத்தும் ஒரு 'எழுத்துப்பிரதி'யாக மட்டும் கணிக்கப்படுவதில்லை. அதற்கு மேலாக அது, 'குறித்த சமூக - வாழ்வியற் சூழ'லின் இயங்குநிலையை அடையாளங்காட்டிநிற்கும் 'பண்பாட்டுச் சான்றாதாரம்' ஆகவும் - அதாவது பண்பாட்டுப் பிரதி என்பதான கணிப்பையும் கூட எய்துகிறது.

இங்கு மேற்படி சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய இரு பேரிலக்கியங்களின் 'பண்பாட்டு நிலைப் பங்களிப்பு' பற்றி அமையவுள்ளதான இப்பார்வையானது அவற்றைப் மேற்சுட்டியவாறு பண்பாட்டுப் பிரதியாகக்கொள்ளும் மூன்றாவதுநிலை வாசிப்பு முறைமை சார்ந்ததாகும்.

## சிலப்பதிகாரமும் மணிமேகலையும் 'பண்பாட்டுப் பிரதி'களாக:

சிலப்பதிகாரம் தொடர்பாக இங்கு சுட்டப் படவேண்டிய முக்கிய செய்தி, அதனாசிரியரான இளங்கோவடிகள் ஒரு கலைஞனாக அதாவது கவிஞனாக மட்டுமன்றி சமூக பண்பாட்டு அம்சங்களைத் திரட்டிப் பதிவு- செய்வதில் ஒரு 'கள ஆய்வாள'ருக்குரிய பொறுப்புணர்வுடன் செயற்பட்டவர் என்பதாகும்.

நமது காலத்தில் புனைகதைகள் குறிப்பாக நாவல்கள் படைப்போருள் ஒருசாரார் கதை நிகழ் களங்களுக்கு நேரடியாகவே பயணங்கள் மேற்கொண்டு அச் சூழல்களின் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் சமூக வாழ்வைப் பாதிக்கும் பிரச்சினைகள் என்பவற்றை ஒரு பண்பாட்டாய்வாளருக்குரிய கண்ணோட்டத்துடன் திரட்டித் தொகுத்துக்கொள்வது பொதுவழக்காகும். இவ்வாறான முயற்சியைக் 'கள ஆய்வு' என நாம் வழங்கி வருகிறோம். குறிப்பாக, மண்வாசனைசார் நாவல்கள் எழுதுவோரும் அவ்வகைத் திரைப்படங்கள் எடுப்போரும் இவ்வாறான தகவல் திரட்டுச் செயற்பாட்டில் 'களஆய்வாள'ருக்குரிய நுட்ப நோக்குடன் ஆரம்ப வேலைத்திட்டங்களை மேற்கொள்வர். அவ்வாறு திரட்டப்பட்ட ஆய்வுத்தகவல்களை மையப்படுத்திப் புனைவுநிலையில் கதையம்சங்களை உருவாக்குவர். சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவும் இவ்வாறான கள ஆய்வுத்திறனுடன் செயற்பட்டுநின்ற ஒரு படைப்பாளி என்பதே இங்கு நாம் முதலிற் கவனத்துட் கொள்ளப்பட வேண்டிய முக்கிய செய்தியாகும்.

இதனை, சிலப்பதிகாரத்தின் பல்வேறு காதைகள் உறுதிசெய்கின்றன. அதன் கதை நிகழ் களங்களான காவிரிப் பூம்பட்டினம், மதுரை, வஞ்சி முதலிய மூவேந்தர் தலைநகரங்களையும் அவற்றை இணைத்து நிற்கும் வழித்தடங்களையும் பற்றிய அவருடைய எடுத்துரைப்புகளிலும், இயற்கைச் சூழல்கள் மற்றும் சமூக-பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றைப் பற்றிய அவரது விபரிப்புகளிலும் இதனை நாம் நன்குணரமுடிகின்றது. குறிப்பாக, காவிரிப்பூம்பட்டினம் மற்றும் மதுரை என்பவற்றின் வாழ்வியல் மற்றும் கலையியல் அம்சங்கள் தொடர்பான அவரது பதிவுகள் இவ்வகையில் சிறப்பாக எடுத்துக் காட்டத்தக்கன. 'இந்திரவிழாவெடுத்த காதை'(5) மற்றும் 'ஊர்காண் காதை'(14) என்பன முறையே இவ்விரு நகரங்களின் வாழ்வியல் அம்சங்களை நமது கண்முன் இட்டுவருவன வாகும்.(தமிழரின் பண்டைய சமூகநிலைகள் மற்றும் நகரமைப்பு முறைமைகள் முதலியனதொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள விழைவோர் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய இலக்கிய மூலாதாரங்களாக மேற்படி காதைகள் திகழ்கின்றன.)

கலையியல் மரபுகளை அவற்றின் இயங்குதள அடிப்படையில நாட்டார் வழக்காற்றியல் கலைமரபுகள், நகரக் கலைமரபுகள் மற்றும் இரண்டுக்கும் இடைப்பட்டநிலை சார் புறநகர்க் கலைமரபுகள் என மூவகைப்படுத்தலாம். இம்மரபுகள் ஆங்கிலத்தில் முறையே Folk, Urban, Suburban என்பனவாகச் சுட்டப்படுவன. இளங்கோவடிகள் தமது காலப்பகுதித் தமிழகச் சூழலில் வழக்கிலிருந்த மேற்படி இம்மூவகைக் கலைமரபுகளையும் அவ்வச் சூழல்களின் பின்புலங்களுடன் அவ்வவற்றுக்குரிய தனித் தன்மைகளுடன் சிலப்பதிகாரத்திலே பதிவு-செய்துள்ளார். நாட்டார் வழக்காற்றியல் மரபுகள்சாரந்த பதிவுகளாக 'வேட்டுவவரி' (12), 'குன்றக்குரவை'(24) ஆகியகாதைகளைக் குறிப்பிடலாம். பண்டைத் தமிழரின் கிராமியச்சார்பான அதாவது நாட்டார் வழக்காற்றியல் அம்சங்கள் சார்ந்தவையான ஆடல்பாடல்கள் தொடர்பான கதையம்சங்களைக்கொண்ட காதைகள் இவை.

மாதவியின் அரங்கேற்றத்தைப் பேசவந்த 'அரங்கேற்றுகாதை'(3)யானது முற்றிலும் நகரமயப் பட்டவையும் செவ்வியல் கட்டத்தை எய்திவிட்டவையுமான பண்டைய ஆடல் பாடல் மரபுகளை நமது தரிசனத்துக்கு இட்டுவருவது. குறிப்பாக பண்டைத் தமிழரின் ஆடற்கலையானது அரச அதிகாரச் சூழலிலே கலைவல்லார் பலரும் கூடியிருக்கும் அவையிலே அரங்கேற்றம் எய்துவதான ஒரு வளர்ச்சிக்கட்டம் இதிலே நமது காட்சிக்கு வருகிறது. ஆடலிலும் இசையிலும் துறை தோய்ந்த புலமையாளர்கள் உருவாகிவிட்ட வரலாற்றுக் கட்டத்தை அரங்கேற்று காதையிலே நாம் தரிசிக்கிறோம். மேலும் குறிப்பாக இசைத் துறையானது 'குரலிசை', 'தண்ணுமை' (மிருதங்கம்), 'குழல்' மற்றும் 'யாழ்' என்பனவாகத் தனித்தனிநிலைகளில் கிளைவிட்டு வளர்ச்சியெய்தி விட்டதான வரலாற்று நிலையும் இதில் நமது கவனத்துக்கு வருகிறது.

> **பண்டைத் தமிழரின் ஆடற்கலையானது அரச அதிகாரச் சூழலிலே, கலைவல்லார் பலரும் கூடியிருக்கும் அவையிலே அரங்கேற்றம் எய்துவதான ஒரு வளர்ச்சிக்கட்டத்தை, ஆடலிலும் இசையிலும் துறைதோர்ந்த புலமையாளர்கள் உருவாகிவிட்ட வரலாற்றுக் கட்டத்தை அரங்கேற்று காதையிலே தரிசிக்கிறோம்.**

'கானல்வரி'(7) என்ற காதையில் கோவலனும் மாதவியும் யாழ் மீட்டிப்பாடும் செயற்பாங்கிலும் மேற்படி இலக்கணமயப்பட்டதான செவ்வியல் அம்சங்களை எம்மால் இனங்காணமுடிகின்றது. 'ஆய்ச்சியர் குரவை' (17) என்ற பகுதியில் நிகழும் பாடலும் ஆடலும் புறநகர்சார்ந்த கலைச் சூழலை உணர்த்திநிற்பன. இவை பற்றியெல்லாம் இசையியலாளர்கள் விரிவாகவே நோக்கியுள்ளனர்.

நகர்மயப்பட்ட காட்சி என்ற வகையிலே அக்காலப்பகுதியில் பேணப்பட்டு நின்றதான 'Make up' எனப்படும் ஒப்பனைக்கலை பற்றிய ஒரு குறிப்பையும் இங்கு சுட்டுவது பொருத்தமாக இருக்கும். இந்திரவிழாவில் ஆடல்நிகழ்த்தி மீண்ட மாதவி தன்மீது கோவலன் கொண்டிருந்த ஊடலைத் தீர்க்கும் நோக்கில் தன்னை அலங்கரித்துக் கொள்வதான காட்சியொன்றை 'கடலாடு காதை'(6)யிலே இளங்கோ வடிகள் நமது கவனத்துக்கு இட்டுவருகிறார். மாதவி பல்வகையான வாசனைத் திரவியங்கள் கலந்த நீரிலே நீராடித் தன்னை அலங்கரித்துக் கொள்வதானசெய்தி அக்காதையிலே பல அடிகளிலே விரிகிறது.

பத்துத் துவரினும் எட்டு விரையினும்
முப்பத் திருவகை ஓமா லிகையினும்
ஊறின நன்னீ ருரைத்தநெய் வாசம்
நாறிருங்கூந்தல் நலம்பெற ஆட்டி

எனத் தொடங்கி 33 அடிகளில் (76-108) தொடருகிறது. தாம் படைக்கவுள்ள இலக்கியமானது 'சமூக மெய்ம்மை'யுடையதாக அமைதல் வேண்மென்பதான பொறுப்புணர்வுடன் இளங்கோ செயற்பட்டுள்ளார் என்பதை மேற்சுட்டிய சான்றுகள் பலவுந்தெளிவுறுத்துவன.

சிலப்பதிகாரத்தைப் பண்பாட்டுப் பிரதியாகப் பார்ப்பது தொடர்பில் இங்கு குறிப்பிட வேண்டிய மற்றொரு செய்தி, அதன் முக்கிய கதாபாத்திரமான கண்ணகி, தெய்வமாக வழிபடப்படும் நிலை சார்ந்ததாகும். தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளத்திலும் அயலிலுள்ளதான ஈழநாட்டிலும் கண்ணகியைத் தெய்வமாகப் போற்றி வழிபடும் மரபு நீண்டகாலமாக நிலவிவருகின்றது.

குறிப்பாக, கேரள மண்ணின் பழங்குடிகளிடையே கண்ணகியைத் தெய்வமாகக் காணும் முறைமை நிலவிவந்துள்ளமையை அங்கு பேணப்பட்டுள்ள நாட்டார் பாடல்களின் வழி அறிந்து கொள்ளமுடிகின்றது. சேரமன்னனான செங்குட்டுவன் அம் மண்ணிலேயே கண்ணகிக்குச் சிலை நிறுவி வழிபட்டவன் என்றவகையில் அம்மண்ணில் அந்த வழிபாட்டுமரபு அம்மன்னனுக்குப் பின்னரும் காலங்காலமாகத் தொடர்கின்றமையை மேற்படி நாட்டார் பாடல்களின்வழி தெரிந்து கொள்ள முடிகிறது. இத்தொடர்பில் பல ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அம்மண்ணில் நிலவும் பகவதி அம்மன் வழிபாட்டில் கண்ணகியைத் தொடர்புறுத்தி நோக்கும் வகையிலான ஆய்வுகளும் நிகழ்ந்துள்ளன.


ஈழத்தின் கண்ணகி வழிபாடுபற்றிச் சிந்திக்கும்போது முதலில் கவனத்துக்கு வரவேண்டிய செய்தி, சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலையெடுத்து வழிபட்டதான விழாநிகழ்விலே ஈழமன்னனான கயவாகு என்பான் கலந்துகொண்டான் என்ற தகவல் ஆகும். சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்திலே(வரந்தருகாதை:160) இத்தகவல் இடம்பெற்றுள்ளது. 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' என அவன் குறிப்பிடப்பட்டுள்ளான். எனவே சிலப்பதிகாரக் கதைசார் நிகழ்வுகள் நடைபெற்றிருக்கக் கூடிய காலம் முதலே இந்த வழிபாட்டுமரபு ஈழத்துக்கு வந்துவிட்டதாகக் கொள்ளமுடிகிறது. இவ்வாறான இவ் வழிபாட்டு மரபின் வரலாறு பற்றிப் பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன என்பதால் அதுபற்றிய விரிவான தகவல்களை இங்கு தவிர்க்கிறேன். இத்தொடர்பிலே இலக்கியம் மற்றும் கூத்து மரபுகள் சார்ந்த இரு தகவல்களை மட்டும் இங்கு பதிவுசெய்வது அவசியம் எனக் கருதுகிறேன்.

இலக்கியம் சார்ந்த தகவலில் முக்கியமானது கண்ணகி வழக்குரை என்ற பெயரிலமைந்த பேரிலக்கியம் ஆகும். (ஈழத்தின் கிழக்குமாகாணத்திலே கண்ணகி வழக்குரை என்ற பெயரில் வழங்கப்பட்டுவரும் இவ்விலக்கியமானது யாழ்பாணக் குடாநாட்டிலே கோவலனார் கதை என்ற பெயரிலும், வன்னிமண்ணிலே சிலம்பு கூறல் என்ற பெயரிலும் வழங்கப்பட்டுவருவதாகும்.)இதன் கதையம்சமானது சிலப்பதிகார நிகழ்வுகளையும் அதன் கதாபாத்திரங்களையும் மையப்படுத்தியதாயினும் அதன் மூலக்கதையினின்று குறிப்பிடத்தக்க அளவில் வேறுபாடுகளைக் கொண்டதாகும். சிலப்பதிகாரக் கதையானது 'மானிடப் பெண்ணொருத்தி தனது கற்பின் திறனால் தெய்வநிலை எய்துவதைப் பேசுவதாகும்.

தொடர்தல் 74ம் பக்கம்

# N.K.S

Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**கேதா நடராஜா**

**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

# இந்திய மருத்துவம்

உடலும் - மனமும்

- மருத்துவ ஆலோசனைகள்
- மூலிகைகள்
- மருத்துவம் கற்றுக் கொள்ள
- மருத்துவ தொழில் ஆலோசனை பெற

நேரில் சந்திக்கவும்:

**இராஜசேகர் ஆத்தியப்பன்**
**416-995-0416**
**ayurvetha@gmail.com**
**www.ayurexpress.net**

# TBC Toronto Business College

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



## DIPLOMA PROGRAMS

**ACCOUNTING & PAYROLL ADMIN.**
35 Weeks

**BUSINESS ADMINISTRATION**
26 Weeks

**COMPUTERIZED ACCOUNTING**
26 Weeks

**FOOD SERVICE WORKER (FSW)**
12 Weeks (Co-op available)

**MEDICAL OFFICE ADMIN.(MOA)**
32 Weeks

**PERSONAL SUPPORT WORKER(PSW)**
26 Weeks (NACC Diploma )

## SECOND CAREER

யார் தகுதி உடையவர்கள் ?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ உரைசம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்

Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000
visit www.secondcareerontario.com

## PART TIME COURSES

*Windows,Word,Excel,Power Point, Access,QuickBooks,Sage50 Accounting & Accpac 2012*
*Music lessons in all instruments by TCBT*

## Workshops

Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Professional & Experienced Staff
- TTC Accessible
- Career Planning & Counselling

**416-291-5155 / 416-451-6680**

**4465 Sheppard Ave. East #208**
**( Sheppard & Brimley ) Scarborough**
**www.tbcollege.com info@tbcollege.com**

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# இலக்கியத் திறனாய்...

72ம் பக்கத் தொடர்ச்சி...

கண்ணகிவழக்குரையின் கதையம்சமானது, 'தெய்வமே அருள்நோக்கில் மானுடமாக அவதரிக்கும்' என்பதான புராண நிலைப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையிலானதாகும். இவ்வகையில், 'சைவத்தின் தாய்த் தெய்வமான உமையம்மையே கண்ணகியாக அவதரித்தாள்' என்ற அடிப்படையில் இதன் கதையம்சம் அமைந்துளது.

இவ்வகைப் புராண நிலைப்பட்ட கதையம்சம் சார்ந்தமைந்த கூத்து மரபுகளும் ஈழத்தில் நிலவிவருகின்றன. இவ்வகையில் ஈழத்தின் வன்னிமண்ணில் குறிப்பாக முல்லை மாவட்டத்தில் பேணப்பட்டுவரும் கோவலன் கூத்து மரபு குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையது. இதுபோன்ற வெவ்வேறு வகைக்கூத்து மரபுகளும் ஈழத்தில் நிலவுகின்றன. ஈழத்தவர் புலம்பெயர்ந்துறையும் சூழல்களிலும் இவை பேணப்பட்டுவருகின்றன. (இப் பேணுகைக்கான அண்மைக் கால உதாரணம்: 04-10-2015 அன்று கனடா ரொறன்ரோவில் நிகழ்ந்த தாய்வீடு அரங்கியல் விழாவில் திரு செல்வம் அருளானந்தம் அவர்களின் இயக்கத்தில் மேடையேறிய கொற்றவை என்ற தென்மோடிக் கூத்து).

மேற்குறித்தவாறாக, கண்ணகி தெய்வமாக வழிபடப்படும்நிலை, 'கண்ணகி - கோவலன்' கதையம்சமானது வெவ்வேறு பரிமாணங்களில் இலக்கியம் மற்றும் கூத்துக் கலை ஆகியவற்றில் பேணப்பட்டுவரும் நிலை என்பன அப்பேரிலக்கியத்தை ஒரு பண்பாட்டுப் பிரதியாக வரலாறு கணித்துள்ளது என்பதை உறுதிசெய்வதாகும்.

இத்தொடர்பிலே, சிலப்பதிகாரக் கதையம்சமானது பின்னாளில் வெவ்வேறு பரிமாணங்களில் இலக்கிய ஆக்கங்களாக வெளிப்பட்டமை பற்றியும் இங்கு விரிவாகவே பேச முடியும். குறிப்பாக நவீன இலக்கியச் சூழலில், தமிழின் புனைகதை, கவிதை மற்றும் நாடக-திரைப்பட எழுத்துப்பிரதி ஆகியவற்றில் அக்கதையம்சம் எய்திய பன்முகப் உணர்த்தும் பரிமாணங்கள் பற்றி தனித் தனிநூல்களே எழுதமுடியும். அவ்வளவு விரிந்த விடயப்பரப்பு, அது. எனவே அம் முயற்றியைத் தவிர்த்து, அண்மைக்கால உதாரணமொன்றை மட்டும் இங்கு சுட்ட விழைகிறேன். திரு. ஜெயமோகன் அவர்கள் எழுதியுள்ள கொற்றவை (2005) என்ற நாவலே அது.

சிலப்பதிகார கதாபாத்திரங்களை மையப்படுத்தி அமைந்த இவ்வாக்கம் அக்கதையின் இடைவெளிகளின் ஊடாகப் பயணிக்கும் ஒரு புதிய படைப்பாகும். பண்டைத் தமிழ் மண்ணின் அறிவியல் அம்சங்களையும் இந்தியத்தத்துவ மரபுகளையும் மையப்படுத்தி அமைந்த இப்புத்தாக்கமானது இன்னொரு சிலப்பதிகாரம் எனக் கருதக்கூடிய சிறப்புடையதாகும். காலந்தோறும் பத்தி இலக்கியங்கள் உருவாவதற்கான எண்ணக் கருக்களை வழங்கும் வளம் நிறைந்த மூலப் பிரதியாக சிலப்பதிகாரம் திகழ்ந்து வருவதனை உறுதிசெய்யும் சமகாலச் சான்றாக ஜெயமோகனது இவ்வாக்கம் திகழ்கின்றமை வெளிப்படை.

சிலப்பதிகாரத்தை ஒரு பண்பாட்டுப் பிரதியாகக் காட்டும் நோக்கில் பல்வேறு செய்திகளை மேலே நோக்கினோம். இத் தொடர்பில் இங்கு நிறைவாகக் குறிப்பிடவேண்டிய செய்தி, அதற்கு அமைந்த உரைகளாகும். அதற்கு அரும்பதவுரையொன்றும் அடியார்க்கு நல்லார் என்பாரால் எழுதப்பட்ட விருத்தியுரையொன்றும் கிடைத்துள்ளன. அரும்பதவுரையானது அப்பேரிலக்கியத்தின் அரிய சொல்லாட்சிகளுக்கான பொருள் விளக்கமாக அமைந்து, அதன் உள்ளடக்க அம்சங்களையும் கதையம்சத் தொடர்ச்சியையும் புரிந்துகொள்ள உதவுகின்றது. அடியார்க்குநல்லாருரையானது மேற்படி 'உள்ளடக்கப் புரிதல்' மற்றும் கதையம்சத் தொடர்ச்சி ஆகியன தொடர்பான புரிதல்களுக்குத் துணை நிற்பதோடு அமையாமல், அப்பேரிலக்கியம் புலப்படுத்திநிற்கும் கலை மற்றும் பல்வேறு பண்பாடு சார் அம்சங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டித் தொகுத்துரைக்கும் பணியையும் ஆற்றியுள்ளது. அவ்வகையில் அது, 'அப்பேரிலக்கியத்தை அழகூட்டிநிற்கும் ஒரு ஆபரணம்' எனத்தக்க சிறப்புக் கணிப்புக்குரியதாகத் திகழ்வதாகும்.

**ஒருவருக்கு உணவாகக் கிடைப்பது அனைத்துச் சமூகத்தின் பசியையும் அகற்றக்கூடியதாக அமைந்தால் எப்படியிருக்கும்? என்பதான அறவுணர்வுசார் குறியீடுகளில் ஒன்றாகவே மணிமேகலைப் பேரிலக்கியம் காட்சிப்படுத்தும் அமுதசுரபியை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.**

இத்தகு சிறப்புடைய அடியார்க்குநல்லாருரையானது சிலப்பதிகாரத்தின் முதலாவது காதையிலிருந்து ஏழாவதான 'கானல்வரி' நீங்கலாக, பத்தொன்பதாவதான ஊர்சூழ் வரி வரையிலான பதினெட்டுக் காதைகளுக்கு மட்டுமே எமக்குக் கிடைத்துள்ளது. ஏனைய காதைகளுக்குக் கிடைக்காமை தமிழர் பண்பாட்டிற்கு ஒரு பேரிழப்பேயாகும்.

அடுத்து மணிமேகலையை நோக்குவோம்.

மணிமேகலை காட்சிப்படுத்தியுள்ள பண்பாட்டு அம்சங்கள் என்றவகையில் முக்கியமான இரு செய்திகள் இங்கு முதலிற் குறிப்பிடப்படவேண்டிய முக்கியத்துவமுடையவையாகும். அவற்றுள் முதலாவதான செய்தி, அதன் 'சமயக்கணக்கர் தந்திறம் கேட்டகாதை'(27) காட்டிநிற்கும் 'சமய-தத்துவச் சூழல்' ஆகும். இப்பேரிலக்கியம் பௌத்த மதச் சார்புடையது என்பதும் இதன் தலைமைப் பாத்திரமாக அமைந்த மணிமேகலையானவள் பௌத்த துறவு-நெறியில் ஒழுகிநிற்பவளாகவே படைக்கப்பட்டவள் என்பதும் நாம் அறிந்த பொதுச் செய்திகள். இவ்வாறு குறித்த சமயச்சார்பு கொண்ட மணிமேகலை யானவள் சமகாலத்தின் பிற சமய தத்துவங்களுடன் கலந்துரையாடுவதான ஒரு காட்சியை மேற்சுட்டிய 'சமயக் கணக்கர் தந்திறம் கேட்ட காதை' நமது தரிசனத்துக்கு இட்டுவருகிறது.

இக்காதையிலே அளவை வாதம், சைவ-வாதம், பிரம்மவாதம், வைணவ வாதம், வேதவாதம், ஆசீவகம், நிகண்டவாதம், சாங்கியம், வைசேடிகம் மற்றும் பூதவாதம் ஆகிய பத்துத் தத்துவப் பிரிவுகள் தத்தம் உண்மைகள்பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன. அவற்றையெல்லாம் பொறுமையுடன் மணிமேகலை செவிமடுக்கிறாள் எனச் சுட்டி இக்காதை நிறைவுறுகிறது. இவ்வகையிலே பண்டைத் தமிழகத்தின் அதாவது குறிப்பாக, ஏறத்தாழ கி.பி.3ம் 6ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதான தமிழகச் சூழலின் 'சமய-தத்துவ அறிவு நிலை' பற்றிய தகவல்தரும் முக்கிய இலக்கியப் பதிவாக மணிமேகலை திகழ்கின்றமை வெளிப்படை.

மணிமேகலை காட்சிப்படுத்தியுள்ள பண்பாட்டம்சங்களில் இரண்டாவதாகக் குறிப்பிடவேண்டியது சிறைக்கைதிகள் மீதான மனிதநேயம் தொடர்பானதாகும். 'சிறைவாசம் அநுபவிப்பவர்களுக்கு அற-ஒழுக்க போதனையளித்தல்' மற்றும் 'அவர்களின் பிற்கால நல்வாழ்வுக்கான தொழிற்பயிற்சிகள் வழங்கல்'முதலானவை இன்றைய சூழலில் அனைத்துலக மட்டத்தில் வழக்கிலுள்ள மனிதநேய நடைமுறைகளாகும். இவை தவிர, குறித்த சில நினைவுதினங்களையொட்டிச் சிறையிலுள்ளோரை மனிதநேய நோக்கில் விடுவித்தல் என்பதான நடைமுறையும் அனைத்துலகமட்டத்தில நிலவிவருகின்றது. இவ்வாறான மனிதநேய நடைமுறைகளை மணிமேகலை எழுந்த காலத்திலும் வழக்கிலிருந்தன என ஊகிக்கத்தக்க சான்றுகள் அப்பேரிலக்கியத்தின் 19ம் 20ம் காதைகளில் நமது தரிசனத்துக்கு வருகிறது.

19வதான 'சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை'யின் இறுதிப்பகுதியிலே, மணிமேகலையானவள் காயசண்டிகை என்ற வேறொரு பெண்ணின் வடிவத்தில அமுதசுரபி என்ற பாத்திமேந்தி காவிரிப்பூம்பட்டினத்தின் சிறைக் கோட்டத்துக்கும் சென்று அமுதளித்து அங்குள்ளோரின் பசியைத் தீர்க்கும் செய்தி இடம்பெறுகிறது. அவ்வாறான அவளது அறச் செயற்பாட்டைக்கேள்வியுற்ற சோழ வேந்தன் அவளை நேரில் அழைத்து அவளது அமுதசுரபியின் ஆற்றல்பற்றிக் கேட்டறிவதோடு,

'இத்தொடர்பில் அரசனாகிய யான் செய்ய வேண்டுவது யாது?'

என்ற வினாவையும் முன்வைக்கிறான். அதற்கு அவள்,

'சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுங்கள்'

என்பதான கோரிக்கையை முனவைக்கிறாள். அதன்படியே அரசன் சிறைச்சாலையிலுள்ளோரை விடுதலை செய்து அவ்விடத்தை அறவோர் தங்கும் இடமாக மாற்றியமைத்தான். இவ்வாறு சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாறிய செய்தியானது 20வது காதையின் தொடக்க அடிகளிலும் தொடர்கிறது. தமிழகத்திலே குறிப்பாக இந்தியப் பெருநிலத்திலே கி.பி. 5ம் நூற்றாண்டுக்கு முன்னைய வரலாற்றிலே அரசியற் சூழல் மற்றும் நீதிநிர்வாகம் என்பன சார்ந்து நிலவிவந்துள்ள மனிதநேய மாண்புகள் தொடர்பான பதிவுகளாக இச் செய்திகள் திகழ்கின்றமை உய்த்துணரக் கூடியதாகும்.

இத்தொடர்பிலே அடுத்து, மேலே நாம் நோக்கிய அமுதசுரபி என்ற பாத்திரம் தொடர்பான கதையம்சங்களும் கவனத்துக்குரியவாகின்றன. இவ்வகையில் முதலிலே, அமுதசுரபி என்ற சொல்லின் பொருண்மையையும் அம்பாத்திரத்தின் இயல்பையும் நாம் நோக்கவேண்டும்.

அமுதம் என்பது இங்கு உணவு என்ற பொருளைத் தருவது. சுரபி என்பதற்கு சுரந்து அளிப்பது என்பது பொருளாகும். அவ்வகையில் மணிமேகலை காட்சிப்படுத்தும் அமுதசுரபி என்பது உணவளிக்கும் பாத்திரம் என்பதான பொருளைத்தருவது. இங்கே கதைத்தலைவியான மணிமேகலையின் கையிலிருக்கும் இந்த உணவளிக்கும் பாத்திரமானது பசித்த அனைவருக்கும் உணவளிக்கும் ஆற்றலுடையதாகக் கூறப்பட்டுளது. முதலில் சமூகம் மதிக்கும் நல்லார் ஒருவர் அதில் உணவை இட வேண்டும். அதன்பின் அது அனைவருக்கும் உணவளிக்கும் ஆற்றலைப் பெற்றுவிடும். இங்கே மணிமேகலை கையிலிருந்த அமுதசுரபியிலே, முதல் உணவைக் கற்பிற் சிறந்தவளாக அச்சமூகத்தால் மதிக்கப்பட்ட ஆதிரை என்ற நல்லாள் இட்டாள் எனவும், அதைத் தொடர்ந்து அதில் உணவு பெருகியது எனவும் இப்பேரிலக்கியம் எடுத்துரைக்கின்றது. (பார்க்க:15,16,17ம் காதைகள்)

இவ்வாறு இப்பேரிலக்கியம் காட்சிப்படுத்தும் அமுதசுரபியானது இந்நூலின் தத்துவத் தளமான பௌத்தத்தின் ஆழ்ந்தகன்ற மனிதநேயத்தின் குறியீடாகக் கொள்ளப்பட வேண்டியதாகும். இத்தொடர்பிலே ஒரு விளக்கம் வருமாறு:.

பௌத்த துறவு வாழ்விலே பிச்சைப்பாத்திரம் என்பது ஒரு முக்கிய அம்சமாகும். பௌத்த துறவிகள் தமது அன்றாட உணவைப் பிச்சைப் பாத்திரங்களின் ஊடாகவே சமூகத்திடம் இரந்து பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தமக்கென எவ்வித உடைமையையும் சேர்த்துவைத்துக் கொள்ளாதவர்கள் என்பதையும் சமூகத்தின் ஆதரவிலேயே அவர்கள் தங்கிநிற்பவர்கள் என்பதையும் அவர்களது பிச்சைப்பாத்திரம் உணர்த்திநிற்கிறது. மேற்கண்டவாறு பாத்திரமேந்திப் பிச்சைபெறும் ஒரு பிக்கு தாம் மட்டும் அதனை உண்ணாமல் பசித்த பிறருக்கும் அதனைப் பகிர்ந்தளிக்கும் மனிதநேயராகவும் திகழ்கிறார் என்பதான உணர்வுநிலை சார்ந்து உருவான ஒரு கற்பிதமாகவே மணிமேகலை சுட்டும் அமுதசுரபியை நாம் கருத இடமுளது.

அதாவது, ஒருவருக்கு உணவாகக் கிடைப்பது அனைத்துச் சமூகத்தின் பசியையும் அகற்றக்கூடியதாக அமைந்தால் எப்படியிருக்கும்? என்பதான 'மானுட நேய'உணர்வின் தளத்தில் உருவான கற்பிதமாகவே - அதாவது அறவுணர்வுசார் குறியீடுகளில் ஒன்றாகவே மணிமேகலை காட்சிப்படுத்தும் அமுதசுரபியை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தொடரும்...



subramanian.n@thaiveedu.com

பீல் தமிழ் முதியோர் சங்கம்

16th Annual Diwali and Christmas Celebrations

December 12

Saturday, 6.00 pm to 9.00 pm

Square One Older Adult Centre (Between BMO & BAY)

Senior Tamils Society of Peel: 905-290-3000


அழகு மாணிக்கங்களாய் அல்ல... அத்திபாரக் கற்களாய்
UNLIMITED INTERNET SERVICE +
UNLIMITED CANADA WIDE CALLING
$49.95
sun sonic
Sun Sonic Inc.
416-907-7777
info@sunsonic.ca
www.sunsonic.ca
Terms & Condition: Offer Valid till Nov 30. *Offer valid for first year only.
Free International Calls Applicable for only one person per Maaveerar's family. ** Some Conditions Apply.

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# சிற்றில் - சிறிய மணல் வீடு

- வைதேகி ஹெர்பெர்ட் -

எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்ற பதினெட்டு சங்க இலக்கிய நூல்களும் மிக இனிமையானவை. சொற்பமான சொற்கள் மூலம் 2381 பாடல்களில் நிறைய விவரங்களை சங்க புலவர்கள் நமக்கு அளித்துள்ளனர். அவற்றின் மூலம் பண்டைய தமிழகத்தின் வாழ்க்கை முறையை நாம் நன்றாக அறியலாம். சங்க இலக்கியத்தில் உள்ள பல நிகழ்வுகளை பிற்கால இலக்கியங்கள் கையாண்டுள்ளன. அதில் சிறுமிகள் சிறு வீடு கட்டுவது என்பது ஒரு சிறப்பான நிகழ்ச்சி. ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூல்களில் சிற்றில் பற்றிய வரிகள் உள்ளன.

சங்ககாலத்தில் சிறு வயது பெண்கள் பநதை வைத்து விளையாடினார்கள். வண்டல் பாவையை செய்தார்கள் (மண் பொம்மை). கழற்சிக்காயை வைத்து விளையாடினார்கள். ஓரை என்ற விளையாட்டை விளையாடினார்கள். குரவை நடனம் ஆடினார்கள். மணலால் சிற்றில் கட்டி, சிறு சோறு சமைத்து விளையாடினார்கள். சிற்றில் கட்டி விளையாடுவதை 'பொய்தல்', 'வண்டல்' , 'சிறு மனை' என்ற சொற்களாலும் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ் நாட்டில் இன்றும் கடற்கரை மணலில் குழந்தைகள் சிற்றில் கட்டி விளையாடுகின்றனர்.

சிறுமிகள் சிற்றில் கட்டுவது சங்க இலக்கியத்தில் துவங்கி, பின் பதினெண் கீழ்க்கணக்கு, பாண்டிக்கோவை, மாணிக்கவாசகரின் திருக்கோவையார், வைணவ திவ்யப் பிரபந்தம் உட்பட, பல பிற்கால இலக்கியங்களுக்கு சென்றுள்ளது.

கடற்கரையில் சிறுமியர் சிற்றில் கட்டி விளையாடுவதை அம்மூவனார் எழுதிய இந்த குறுந்தொகைப் பாடலில் காணலாம். இங்கு தலைவி கூறுகின்றாள்,

*துணைத்த கோதைப் பணைப் பெரும்*
*- தோளினர்*
*கடலாடு மகளிர் கானல் இழைத்த*
*சிறு மனைப் புணர்ந்த நட்பே தோழி*
*ஒரு நாள் துறைவன் துறப்பின்*
*பன்னாள் வரூஉம் இன்னா மைத்தே*

- குறுந்தொகை 326

தொடுத்த பூமாலையையும் மூங்கிலைப் போன்ற (பணை ஸ்ரீ மூங்கில்) பருத்த தோளையும் உடைய சிறுமிகள் கடலில் விளையாடியும் கடலோரச் சோலையில் (கானல் ஸ்ரீ கடற்கரைச் சோலை) கட்டியும் விளையாடிய இடத்தில் தலைவனைக் கண்டு கூடிய நட்பு, அந்தத் துறைவன் ஒரு நாள் பிரிந்தாலும் பல நாட்களுக்கு எனக்கு துன்பத்தைத் தரும்.

- இந்தப் பாடலில் போந்தைப் பசலையார் என்ற புலவர் தலைவனும் தலைவியும் இள வயதில் கடற்கரையில் சந்தித்ததை அழகாக விவரிக்கின்றார். தலைவன் கூறுகின்றான்,

*தட மென் பணைத்தோள் மட நல்லீரோ*
*எல்லும் எல்லின்று அசைவு மிக உடையேன்*
*மெல் இலைப் பரப்பின் விருந்து உண்டு*
*-யானும் இக்*
*கல்லென் சிறுகுடித் தங்கின் மற்று எவனோ*
*என மொழிந்தனனே ஒருவன் அவன் கண்டு*
*இறைஞ்சிய முகத்தேம் புறம் சேர்பு பொருந்தி*
*இவை நுமக்கு உரிய அல்ல இழிந்த*
*கொழு மீன் வல்சி என்றனம்*

- அகநானூறு 110, 10-17

'அகன்ற மென்மையான மூங்கிலைப் போன்ற தோள்களையுடைய மடப்பம் வாய்ந்த நல்லவர்களே! பகலும் ஒளியை இழந்து விட்டது. மிகவும் அசைதியுடன் இருக்கின்றேன். மெல்லிய இலையின் மேல் நீங்கள் இடும் உணவை உண்டு நானும் இந்த ஆரவாரமுடைய சிறு வீட்டில் தங்கினால் என்ன குறை', என்று ஒருவன் கூறினான். அவனைக் கண்டு, முகத்தை தாழ்த்தி, ஒருவர் பின் ஒருவராக ஒளிந்து, 'இது உனக்கு உரியது இல்லை. இது கடலிலிருந்து வழிந்து வந்த (இழிந்த ஸ்ரீ கீழே வடிந்த) தடித்த மீனால் செய்த குழம்பு' என்றோம்.

தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றப் பின் அவளுடைய தாய் அவளை நினைத்து வருந்தி அருகில் இருப்பவர்களிடம் கூறுகின்றாள்,

*என் மகள்*
*செம்புடைச் சிறு விரல் வரித்த*
*வண்டலும் காண்டிரோ கண் உடையீரே?*

- அகநானூறு 275, 17-19

கண் உடையவர்களே! என்னுடைய மகள் தன் சிவந்த சிறு விரல்களால் இழைத்த சிறு வீட்டை நீங்கள் கண்டீர்களா?

இந்த கலித்தொகை பாடலில் தலைவி தன் தோழியிடம் தலைவனைப் பற்றிக் கூறுகின்றாள். அவனுடைய சிறு வயது குறும்பை இங்கு நாம் காணலாம்,

*சுடர் தொடீஇ! கேளாய்! தெருவில் நாம்*
*- ஆடும்*
*மணல் சிற்றில் காலின் சிதையா அடைச்சிய*
*கோதை பரிந்து வரிப் பந்து கொண்டு ஓடி*
*நோதக்க செய்யும் சிறு பட்டி, மேல் ஓர் நாள்,*
*அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே*
*உண்ணு நீர் வேட்டேன் என வந்தாற்கு*

- 1-6

ஒளியுடைய வளையல்களை அணிந்த தோழியே! இதை நீ கேட்பாயாக! நாம் தெருவில் விளையாடிய பொழுது, நம்முடைய சிறிய மணல் வீட்டை காலால் சிதைத்து, நாம் அணிந்த மலர் மாலையை பிடுங்கி, நம்முடைய வரிப் பந்தை எடுத்துக் கொண்டு ஓடிய அந்த குறும்புப்பையன், ஒரு நாள் அம்மாவும் நானும் வீட்டில் இருந்த பொழுது, அங்கு வந்து 'இல்லத்தில் உள்ளவர்களே! குடிக்க தண்ணீர் கொடுங்கள்' என்று வந்த பொழுது...

ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் கண்ணன் சிற்றிலை உடைக்கும் பாடல் ஒன்று உள்ளது.

*வெள்ளை நுண் மணல் கொண்டு சிற்றில்*
*விசித்திரப் பட வீதி வாய்த்*
*தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்*
*அழித்தியாகிலும் உன் தன் மேல்*
*உள்ளம் ஓடி உருகலல்லால்*
*உரோடம் ஒன்றும் இலோம் கண்டாய்*
*கள்ள மாதவா கேசவா உன்*
*முகத்தன கண்கள் அல்லவே*

- திவ்ய பிரபந்தம் 518

வெள்ளை நுண் மணலைக் கொண்டு அனைவரும் வியக்கும்படி இழைத்த அழகிய சிறு வீட்டை நீ அழித்தாலும், அதற்காக எங்கள் நெஞ்சானது உருகும். உன் மேல் வெறுப்பு கொள்ள மாட்டோம். உன் முகத்தில் இருப்பவை அருள் கண்கள் அல்லவோ.

பெரியாழ்வாரின் திருமொழியில் கண்ணன் சிற்றிலை உடைக்கும் பாட்டு ஒன்று உள்ளது. கண்ணனின் தாய் யசோதை கூறுகின்றாள்,

*பற்று மஞ்சள் பூசிப் பாவை மாரொடு பாடியில்*
*சிற்றில் சிதைத்து எங்கும் தீமை செய்து*
*- திரியாமே*
*கற்றுத் தூளியுடை வேடர் கானிடைக் கன்றின்*
*- பின்*
*எற்றுக்கு என் பிள்ளையைப் போக்கினேன்*
*- எல்லே பாவமே.*

- திவ்ய பிரபந்தம் 235

மஞ்சளை மேனியில் பூசி, பெண்கள் இழைக்கும் மண் வீடுகளை சிதைத்து, குறும்புகளைச் செய்தவனை நான் கல் தூள்களையுடைய வேடர் இருப்பிடமான காட்டிற்கு அனுப்பினேன் என் மகனை. என்னோ என் வினை.

சிற்றில் பற்றிய குறிப்புகளையுடைய பாடல்கள் யாவற்றையும், www.learnsangam-tamil.com என்ற தளத்திற்குச் சென்றால் கற்க முடியும்.



vaidehi.h@thaiveedu.com

# வன்னியின் வரலாறு பேசும் இருநூல்கள்

மேற்படி வெளியீடு கடந்த நவம்பர் 21 அன்று கனடா ஐயப்பன் இந்து ஆலயத்தில் இடம்பெற்றது.

வன்னியின் வரலாறு பற்றிய சுமார் 45கட்டுரைகளையும் ஒரு கவிதையையும் உள்ளடக்கியதாக 'வன்னி - வரலாறும் பண்பாடும்' என்னும் 42 கட்டுரையாளர்களின் கட்டுரைகளைத் தொகுத்து நோர்வே கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் பதிப்பித்திருந்த நூலையும், முன்னைநாள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிபர் கதிர். பாலசுந்தரத்தின் 'போர்க்கால நாவல் - வன்னி' என்னும் நவீனமும் தங்கராசா சிவபாலு அவர்களின் ஏற்பாட்டில் வெளியீட்டு விழா இடம்பெற்றிருந்தது.




இந்த விழாவில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் உள்ள வன்னி மண்ணின் ஆர்வலர்கள் உட்பட பெருந்தொகையானவர்கள் கலந்துகொண்டு நூல்களைப் பெற்றனர்.

இவ்விழாவிற்கு முன்னைநாள் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தலைமை தாங்கினார்.

நாவலுக்கான வெளியீட்டுரையினை கவிநாயர் கந்தவனம் அவர்கள் நிகழ்த்தியதைத் தொடர்ந்து திருமதி இராச்மீரா இராசையா தமிழ் நூல்பற்றியும் திரு. புனிதவேல் ஆங்கில நூல்பற்றியும் அவ்வுரை நிகழ்த்தினர். மண்ணின் வரலாற்றைப் பதிவாக்கியது பெரும் சாதனை என்னும் பொருளில் அமைந்தது அவ்விருவரதும் உரைகள்.

தொடர்ந்து வன்னியின் வரலாறும் பண்பாடும் என்னும் கட்டுரைத் தொகுதியினைப் பற்றி வெளியீட்டுரை நிகழ்த்தினார் முனைவர் பால. சிவகடாட்சம். தமிழரின் வரலாற்றைப் பேணப்படாதமை பற்றி குறிப்பிட்டு வன்னிப் பிரதேசத்தில் எழுதப்பட்ட பண்டைய குறிப்புக்களையும் விதந்துரைத்து உரையாற்றினர். அவரைத் தொடர்ந்து முன்னைநாள் அரசறிவியல் விரிவுரையாளர் முனைவர் கனகையா ரகுநாதன் மற்றும் முனைவர் பார்வதி கந்தசாமி ஆகிய இருவரும் ஆய்வுரை நிகழ்த்தினர்.









# வன்னி: வரலாறு தரும் வலிமை

- சேரன் -

கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் தொகுத்துப் பதிப்பித்து வெளியிட்டுள்ள 'வன்னி: வரலாறும் பண்பாடும்' என்னும் பெருநூல் தமிழ்ச் சமூகத்துக்குக் கிடைத்துள்ள அருங்கொடை. நமது பல்கலைக்கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் தமிழ்த்தேசியத்துக்காக நட்சத்திரங்களையும் சூரியனையும் கூட இழுத்துவரத் தயாராக இருக்கும் எவருமே கூட செய்யாத நுண்ணிய வரலாற்றுணர்வு மிக இந்த அற்புதமான முயற்சிக்குத் தன்னுடைய சேமிப்பை எல்லாம் செலவிட்டவர் சுந்தரலிங்கம். அறிவு மலர்ச்சியும் வரலாற்று ஒளியும் பண்பாட்டுச் செழுமையுமே ஒரு தேசிய இனத்தின் வாழ்வையும் வளத்தையும் மேன்மைப்படுத்தும் என்ற புரிந்துணர்வு அவருக்கு இருந்தமை தமிழ்ச் சமூகம் பெற்ற நன்மை. வன்னியை விட்டு விட்டு ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பற்றிப் பேசுவது என்கிற மேட்டிமை மரபு இந்த நூலோடு இல்லாமலே போய் விடும் என்பது எனது நம்பிக்கை.

சுந்தரலிங்கம் என் பள்ளி நண்பன். யாழ்ப்பாணத்தில் பிறந்து, யாழ்ப்பாணத்திலேயே வளர்ந்து யாழ்ப்பாணத்திலேயே பல்கலைக்கழகக் கல்விவரை பெற்ற எனக்கு வன்னியின் வளத்தையும் வன்மையையும் வனத்தையும் சிறுவயதிலேயே அறிமுகப்படுத்தியவன். ஆனாலும் நூல் பற்றிய உயர்வு நவிற்சி சார்ந்த எனது கருத்துக்களுக்கு எமது நெருங்கிய நட்பு காரணம் அல்ல. இந்த நூலைப் பற்றிப் பேசுகிறபோது இதனைக் குறிப்பிடவே வேண்டும்.


அறுநூற்று அறுபத்தைந்து பக்கங்களில் ஆவணச் சான்றுகளோடும் படங்களோடும் பொருத்தமான வரைபடங்களோடும் வெளியிடப்பட்டுள்ளது நூல். வன்னியின் தொல்லியலும் வரலாறும், சமூகமும் வாழ்வியலும், சமய நெறிகளும் பண்பாடும் ஆகிய பிரிவுகளில் ஆய்வுக் கட்டுரைகளுடன் களப்பணி/கள ஆய்வில் எழுதப்பட்ட கட்டுரைகளும் தகவல்களைத் திரட்டித்தரும் விவரணக் கட்டுரைகளும் என நாற்பத்தேழு கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

இலங்கையில் மட்டுமன்றித் தென்னாசிய ஆய்வுக் களத்திலும் உலக அரங்கிலும் சிறப்பு மிக்க ஆய்வுப் பங்களிப்புகளையும் புலமைப் பெருமையையும் பெற்றிருக்கும் பேராசிரியர்கள் இந்திரபாலா, சி. பத்மநாதன் பொ.இரகுபதி, சி.க. சிற்றம்பலம் ஆகியோரும் வன்னியிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் தொல்லியல் ஆய்வுகளிலும் தமிழ் மக்களின் வரலாறு தொடர்பாகவும் பல புதிய ஆதாரங்களையும் வரலாற்று மூலங்களையும் இனங்கண்டவர்களான பேராசிரியர் புஷ்பரட்ணம், பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா, சமூகவியலாளர்களான க.சண்முகலிங்கம், பேராசிரியர் நா. சண்முகலிங்கன், புவியியலாளர்கள், பேராசிரியர்கள் குகபாலன், இரா.சிவச்சந்திரன் போன்ற முக்கியமான பல்கலைக்கழகம் சார்ந்த புலமையாளர்கள் இந்த நூலுக்குச் சிறப்புக் கட்டுரை எழுதியுள்ளனர்.

இந்த நூலின் முன்னுரையில் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடும் ஒரு விடயத்தை நாங்கள் கவனிக்க வேண்டும்.

"இலங்கை வரலாற்றில் இலங்கைத் தமிழர் ஒரு வஞ்சிக்கப்பட்ட சமூகம் என்பதை எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். அவர்களைப் பொறுத்தவரை இரு வகையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் புராதன காலம் முதலாக நாகரிக முன்னேற்றத்திலும் தொழில் நுட்பத்தைப் பெருக்குவதிலும் பெரும் பங்கு கொண்டிருந்தனர். ஆயினும் இலங்கைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட இலங்கை வரலாறு அவர்களை ஓரம் கட்டிவிட்டது. கல்வித் திணைக்களம் வெளியிடும் பாடநூல்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை...இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வாளர்களின் முன்னோடிகளில் ஒருவரான சாமித்தம்பி ஞானப்பிரகாசரும் பல தவறான கருத்துக்களைப் பரப்பி விட்டார். அவர் பயிற்சி பெற்ற வரலாற்று ஆய்வாளர் அல்லர்...'

ஈழத்தமிழர்களுடைய வரலாற்றுக்கும் வரலாற்றுணர்வுக்கும் வரலாற்று எழுதுவதற்கும் ஏற்பட்ட பெரும் இடர்களை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் பத்மநாதன் சொல்லிவிட்டார். ஐதீகங்களிலிருந்தும் சமகால அரசியலிலிருந்தும் வரலாற்றைக் கட்டியெழுப்புவதும் மீள எழுதுவதும் நல்ல சமூகங்களை உருவாக்காது. ஆய்வுகள், ஆதாரங்கள், பல்வேறு துறை சார்ந்த அறிவு




என்பவற்றின் அடியாக இயலுமானவரை புறவயமாக எழுதப்படுகிற வரலாறே எல்லோருக்கும் பயன்தரக்கூடியது. இத்தகைய வரலாற்றெழுதும் முறைக்கு நல்ல எடுத்துக்காட்டாக இந்த நூலின் பல கட்டுரைகள் அமைகின்றன.

இதுவரை காலமும் ஈழத்தமிழ்ச் சமூகங்களின் வரலாறு, தொல்லியல், பண்பாடு பற்றி வெளியான சிறப்பான ஆய்வு நூல்கள் எல்லாம் ஆய்வாளர்களும் புலமையாளரும் தமது சொந்தச் செலவில் வெளியிட்டவையே. எத்தகைய நிறுவன உதவிகளும் அவர்களுக்குக் கிட்டவில்லை. பொ. இரகுபதியின் யாழ்ப்பாணத்தில் ஆதி குடியேற்றங்கள் பற்றிய நூலாயினும் சரி, பேராசிரியர் சிற்றம்பலத்தின் பெருங்கற்கால ஆய்வுகள் பற்றிய நூல்களாயினும் சரி எவற்றுக்குமே நிறுவன உதவிகள் கிட்டவில்லை. இன்று வரையும் நமது வரலாறு, மரபு, பண்பாடுகள் பற்றிய ஆய்வுகளுக்கும் தேடல்களுக்கும் வெளியீடுகளுக்கும் எமது சமூகமும் நிறுவனங்களும் உதவுவதில்லை. தமிழ் மரபுத் திங்கள் கொண்டாடவும் அரசியல் கொடி பிடிக்கவும் அவற்றுக்காகப் பணம் செலவழிக்கவும் தயாராக இருக்கும் எமக்கு, எதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது தெரிவதில்லை. சாராம்சத்தை விட்டுவிட்டுத் தோற்றப்பாட்டின் ஆடம்பரத்திலும் மாயையிலும் கிறங்கிப்போகிற மடமைத்தனம் கொண்ட சமூகமாக மாறிவிட்டோம். இந்த நூலின் வெளியீடாவது எமக்குப் புத்துணர்ச்சியை ஊட்ட வேண்டும்.

இந்த நூலின் அறிவுப் பங்களிப்புக்கு அப்பால் நூல் எனக்குள் கிளர்த்திய சில சிந்தனைகளை அவற்றின் அரசியல் முக்கியத்துவம் கருதிப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.


வன்னி என்பதை நாங்கள் எப்படி வரையறை செய்கிறோம்? அது ஒரு கலாசார, பண்பாட்டு அலகா? புவியியல் அலகா? அல்லது நிர்வாக அமைப்பா? அல்லது அரசியல் சார்ந்து கட்டமைக்கப்பட்ட அலகா? இந்தக் கேள்விக்கான பதில் முக்கியமானது. இந்த நூலைப் பொறுத்தவரை வன்னி என அவர்கள் இனங்கண்டிருப்பவை கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள். இந்த வகைப்பாடு இலங்கை அரசின் நிர்வாக அலகுகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

கலாசாரம், பண்பாடு, இயற்கை என்று பார்த்தோமானால் மன்னார் யாழ் மாவட்டத்துக்கு நெருங்கியதாகவே இருக்கும். வரலாற்று ரீதியாகப் பார்த்தாலும் மன்னார் யாழ்ப்பாண அரசர்களுக்குக் கீழேயே இருந்தது எனலாம். எனவே கடந்த பல நூற்றாண்டு காலமாக வன்னி என்பது அமைப்பிலும் பரப்பிலும் பண்பிலும் எவ்வாறு மாறி வந்திருக்கிறது என்பதை நாங்கள் தெரிந்து கொள்வது அவசியம். இப்பொழுது வன்னியை நாங்கள் எப்படி வரையறை செய்கிறோம் என்பதைப் பொறுத்தே ஈழத் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலப் பாதுகாப்பும் நல்வாழ்வும் உறுதி செய்யப்படும் என்பதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக சிங்களக் குடியேற்றங்களை இலங்கை அரசு செய்து வருகிறது. போர் முடிந்தபின் இலங்கை அரசு நடைமுறைப்படுத்துகிற திட்டங்கள் அனைத்தும் வன்னியின் அமைப்பையும் சனத்தொகையையும் மாற்றுவதாகவே இருக்கிறது. சென்றவாரம் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் வவுனியாவைப் பெரு நகராக மாற்றுகிற திட்டத்தைப் பார்த்தால் இது இன்னும் தெளிவாகப் புரியும். மக்கள் பலமும், பொருளியல் பலமும், அரசியல் பலமும் இல்லாத எமது சமூகத்தை வன்னியில் முதுகொடியச் செய்வதே இலங்கை அரசின் நீண்ட காலத் திட்டம். இதற்கு ஒத்தாசையாகத்தான் இந்திய அரசு இப்போது நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கும் Trans Asia Highway திட்டம் அமைகிறது. ஆசியாவிலுள்ள முக்கியமான நகரங்களை உயர்தெருக்கள் மூலமும் பாலங்களூடாகவும் இணைக்கின்ற இத்திட்டம் ராமேஸ்வரத்தையும் திருக்கோணமலையையும் மதவாச்சியூடாக இணைக்கிறது. வவுனியாவுக்கூடாக அல்ல. ராமேஸ்வரம்-தலைமன்னார்-வவுனியா-திருகோணமலை என்பதே குறுகிய, வாய்ப்பான வழி என்றாலும் இந்திய, இலங்கை அரசுகள் மதவாச்சியூடாக இந்தப் பாதையை மிக விரைவில் அமைக்க முயற்சி செய்வதன் காரணம் ஈழத்தமிழர்களின் அரசியல், பொருளியல். புவியியல் நிலையைச் சிதைப்பதற்காகத்தான். இந்தப் பாதை வழியே எத்தகைய சிரமமும் இல்லாமல் இந்தியா நேரடியாக திருகோணமலையை தன்னிடம் எடுத்துக் கொள்ளும். கடல்வழியே தேவையில்லை. எனவே வன்னி எவ்வளவு முக்கியம் வாய்ந்த நிலமாக எமக்கு இருக்கிறது என்பது தெளிவு.

இந்தப் பின்னணியிலேயே இந்த நூல் தரும் தரவுகளையும் ஆதாரங்களையும் ஆய்வுகளையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஈழத் தமிழ்ச் சமூகங்களின் நலனில் வன்னியின் புவியியல்-அரசியல் முக்கியத்துவம் பற்றிய நேரடியான கட்டுரைகள் இத்தொகுதியில் இல்லை என்றாலும் அதனைப் புரிந்து கொள்ள வழி செய்யும் பல கட்டுரைகள் இந்த நூலில் உள்ளன.

இந்த நூலில் அடிப்படையான குறைபாடு ஒன்று உண்டு: சைவம், கிறித்தவம், பௌத்தம் அனைத்தும் வரலாற்று ரீதியாக வன்னியில் தழைத்திருந்ததாக விரிவாகக் குறிப்பிடும் இந்நூல் முஸ்லிம் மக்கள் பற்றியும் இஸ்லாம் பற்றியும் ஒரு சொல்லாவது எழுதாமை ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது. மன்னார் மாவட்டம் வன்னியின் ஒரு தவிர்க்க முடியாத பகுதி என்றால் முஸ்லிம் மக்களையும் இஸ்லாமையும் விட்டு விட்டு எப்படி நாங்கள் வன்னியின் சமூக வரலாற்றையும் பண்பாட்டையும் எழுதமுடியும்? தமிழ் அடையாளம் என்பதே மொழி சார்ந்தும் பல்வேறு திணைகள் சார்ந்தும் உருவானது. எல்லா மதங்களும் தமிழ் அடையாளத்தோடு இரண்டறக் கலந்தவை. வேறு எந்த மொழிக்கும் இனக்குழுமத்துக்கும் கிடைக்காத பெருமை அது. வன்னியின் முஸ்லிம் மக்கள் பற்றிய எந்தப் பதிவும் இல்லாத ஒரு நூல், 'நீறில்லா நெற்றி பாழ் நெய்யில்லா உண்டி பாழ்' என்பது போலத்தான் அட்டைப் படத்தில் இருக்கும் வன்னி யானைக்கு திருநீற்றுக்குறியும் குங்குமப் பொட்டும் வைத்து வன்னியைச் சைவத்துக்கு உரிமை கொண்டாட முடியாது!



cheran@thaiveedu.com


வீடு வாங்க விற்க...
10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
Markham
130k over asking in 5 days
Ajax
99.36% asking in 9 days
Ajax
102% over asking in 7days
Ajax
100% asking in 1 day
Toronto
98% asking in 4 days
Scarborough
120% over asking in 9 days
Markham
110% Over Asking
Markham
106% Over Asking
Toronto
98% asking in 4 days
Scarborough
99% Asking Price
Vaughan
99% Asking
Scarborough
102% over asking in 2 days
SOLD
New Luxury Homes from Builders
First Floor
* Pickering
* Model Homes
* 3500/3700 sf.
* 2515/2948 sf.
* Starting from $775k
நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
vela4homes@gmail.com
www.dreamgtahomes.com
Face book: vela4homes
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8
HOMELIFE
HIGHER STANDARDS


Foundation of Your Financial Freedom!
If you worry about your family's security...
WE CAN HELP YOU
Talk to us about Life Insurance
that fits in your lifestyle...
Disability Insurance
Critical Illness Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Life Insurance
Mortgage Insurance
RESP - Education Saving Plan
Dental & Drug Insurance
RRSP's & Investments
Final Expense Products
(Through Funeral Homes)
Mega Financial Group
416 666 1120 • 416 293 5559
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON
Canada Life
La Capitale
Empire Life
RBC Insurance
Sun Life Financial
Desjardins

# NOW OPEN



# DOCTORS ON FINCH

## @MIDDLEFIELD

உங்கள் குடும்பத்திற்கு ஒரு குடும்ப வைத்தியர்

- Lab Services
- Arogya Pharmacy

## AGILLANT HEALTH WALK - IN - CLINIC

OPEN 7 DAYS

5200 Finch Ave.East, unit 103, Scarborough, ON M1S 4Z4

(Samosa King Plaza)

Off: 647 494 8660 | Fax: 647 494 8658

**www.agillanthealth.com**


FOR SALE - Sports Bar
Hoops
Sports Bar & Grill
Asking Price
$299,000
Mississauga Location
(Hurontario & Derry)
Well Established & Well Known Bar
Steady & Loyal Clientelle
Priced to Sell
Please Contact Us for Financial & Lease Details
Thurairajah RAMESH
Sales Representative
416-879-2000
ROSKY Navaratnam
Sales Representative
416-321-6969
HOMELIFE GTA REALTY INC. BROKERAGE


மனம்போல் மாங்கல்யம்
தென்மோடி நாட்டுக்கூத்து
As You Like It
Shakespeare's play in tamil
சாயி நிருத்திய கலாமன்ற ஆசிரியர் சுஜி அவர்களின் மாணவர்கள்,
கனடா தமிழ் நாட்டார்கலைக்கழகம்,
நடனகலாமணி ஆசிரியர் மாலினி பரராசசிங்கம் அனைவரும்
இணைந்து வழங்கும் நாட்டுக்கூத்து.
இன்னும் பல மதுர மனோகர நடனங்களும் இடம்பெறும்
இனிய கலைப்படைப்பு
Campaign for Sunnybrook
give · invest · support
December 19th, 2015
Saturday 6pm
JC's Banquet Hall
1686 Ellesmere Rd,
Scarborough,
ON, M1H 2P6

# மௌரோ க்றூணி... மௌரோ க்றூணி...

- ஆனந்தப்ரசாத் -



நடுக்கடலில் கப்பலின் மேற்தளத்தில் நின்று நிலவு பூத்த மேகங்களில் லாத வானத்தையும் தெளிந்த கடலின் நீர்ப்பரப்பையும் முன்னூற்றி அறுபது பாகையிலும் சுற்றிப் பார்க்கும் போதில், ஒருசமயம் முழுவதுமே கடற்கோளமாக இருப்பது போலவும் இன்னொரு சமயம் அனைத்துமே வானத்தின் கோளமாக இருப்பது போலவும் இரண்டு பூதங்களுமே சித்து விளையாட்டுக்கள் காட்டிக்கொண்டிருக்கும்.

இரண்டு மாதமாகிவிட்டது கப்பலில் கால் பதித்து. பம்பாயிலிருந்து கிளம்பிய விமானம் எகிப்தின் கெய்ரோ விமான நிலையத்தில் இளைப்பாறிவிட்டு நேரே கிரேக்கத்தின் தலைநகர் ஏதென்ஸ் விமானகூடத்தில் தரை இறங்கியது. ஒரு பேருந்தில் எல்லோருமாக நகரில் இருக்கும் பெரமா கப்பல்கள் திருத்தும் டொக்கில் திருத்த வேலைகளுக்காக தரித்துநின்ற எம்.வி. ஔரோறாவில் நள்ளிரவு ஒரு மணியளவில் வந்து இறங்கினோம். காங்க்வே ஏணிப் படிகளால் மேற்தளத்தில் கப்பலின் வயிற்றுப் பாகத்தால் உள்நுழைந்த எம்மை போர்ட் காப்டன் நிக்கோஸ் அர்கையிஸ், போர்ட் என்ஜினியர் கொறிந்தஸ் பனயோதிஸ் இருவரும் "யாஸோ.ஃவீலே...திக்கானிஸ்ரே... கலாய்னே? (நண்பனே... எப்டியிருக்கிறாய்... நலமா? என்பதாக பின்னால் களுரஞ்ஜித் சொல்லித் தெரிந்தது.) என்றவாறு வரவேற்றார்கள். இவர்கள் தான் பெரயெளஸ் நகரில் கோலோகொத்ரோணி தெருவிலிருக்கும் நேவிட்ரான்ஸ் மெரிட்டைம் இன்கார்ப்பரேட்டட் கப்பல் கம்பனியின் உரிமையாளர்கள் என்பது மெதுவாகத்தான் தெரிந்தது. அவரவர்களுக்குரிய காபின்களை காட்டிவிட்டு,

## அத்தியாயம் - 2

கப்பல் ஷிப் யார்டில் நிற்பதனால் அரைமணி நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்படஇருப்பதாகவும் மறுநாள் காலை எட்டுமணிக்கு வேலை ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் அறிவுறுத்திவிட்டு இரவு வணக்கத்தை 'கலிநீத்தா' என்று கிரேக்கத்தில் வாழ்த்திவிட்டு இருளில் மறைந்துவிட்டார்கள்.

மறுநாள் காலை ஆறுமணிக்கு காபின் கதவுகளைத் தட்டி ஸ்காஞ்ஜா சொல்லி எல்லோரையும் எழுப்பிவிட்டுப் போனான் சீஷெல்ஸ் தீவைச்சேர்ந்த போட்ஸ்வெய்ன்.

புது இடத்தில் முதலில் தூக்கம் வராமல் புரண்டு கிடந்தாலும் அசதியில் எப்போதோ அசந்து கண்ணயர்ந்திருக்கிறேன். எழுந்து போர்ட்ஹோல் வழியாகப் பார்த்த போது கிழக்கு வெளுத்துப்போய் விட்டிருந்தது. எட்டடிக்கெட்டடி சதுர அறையில் சுவரோடு பிணைத்திருந்த படுக்கை. கண்ணாடிக் கதவுடனான க்ளாஸெற், இழுப்பறையுடனான மேஜை... எதையுமே நகர்த்த முடியாத ஒரு நாற்காலியையும் என்னையும் தவிர. எப்படியோ பாத்ரூமைத் தேடிக் கண்டடைந்து பல் துலக்கி முகம் கழுவிக் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு கப்பலின் பின்புறத்தே இருந்த க்றூ காபின் தொகுதியால் வெளிவந்தால் கலத்தின் திறந்த மேற்தளம்.

கடலின் மெல்லிய குளிர்காற்று உடலைத் தாக்கியது. மு...ரு...கா!!! என்னிடம் இரண்டு செற் ஷேர்ட் பாண்ட்களைத் தவிர வேறெந்த இழவுமில்லை. குளிர்கால ஜக்கெற் இல்லை... சப்பாத்தில்லை.

ஒரு ஜோடி பாட்டா சான்டில்ஸ்களோடு எயர்லங்காவில் ஏறித் தப்பி மீனம்பாக்கம் வந்து சென்றல் ரயில்வே ஸ்டேஷனில் பம்பாய் எக்ஸ்பிரஸ் பிடித்து விக்டோறியா டெர்மினலில் இறங்கி கப்பல் காத்துக்கொண்டிருக்கிறது... என்று வாக்களித்த ஏஜென்ட் ரோஹான் கந்தப்பாவிடம் முப்பதினாயிரம் ரூபாய்கள் அம்மாவின் தாலிக்கொடியுட்பட அனைத்து நகைகளையும் மக்கள் வங்கியில் அடமானம் வைத்து திரட்டிச் சுளையாய் பொற்கிழி போலக் கொடுத்துவிட்டு வந்த என்னால் ஒரு காகிதக் கப்பலைக் கூடக் காணமுடியவில்லை.

முதன் முதலாக வேலையை ஆரம்பிக்கும் நாளில் இந்த நினைப்பு ஏன் என்று என்னையே சினந்துகொண்டு காலையுணவுக்காக கப்பலின் நடுப் பகுதியிலிருக்கும் மெஸ்ஸை நோக்கி விரைகிறேன்.

எனது இருபத்தியாறு வயது வாழ்வில் என் நா சுவைத்தறியாத காலைப் பலகாரங்கள். லுக்காணிக்கா என்கிற சாஸெஜ், மாஷ் பொட்டேட்டோ, ஹாஷ் பிரௌன், ப்ரெட், பட்டர், பேக்கன், சீஸ், முட்டை பொரித்தும் அவித்தும், தக்காளி, ஆலிவ் ஆயில், பால் ஸாமிக் வினிகர், இவையிரண்டும் இணைந்த ஃவொக்காச்யா... கிறிஸ்தோப்பர் என் மனத்திரையில் சிலவினாடிகள் தோன்றி மறைந்தான்.

எட்டு மணிக்கு டெக்கில் இறங்கினோம். போட்ஸ்வெய்ன் என்னை அழைத்துப்போய் கையில் ஒரு சிப்பிங் ஹாமரையும், பிளாஸ்டிக் கண்ணாடியொன்றையும் கொடுத்து கீழே பதிந்துகிடந்த பாரிய இரும்புத்தூணை டெரிக்ஸ் என்று சொல்லி அதன் தலையில் தொங்கிய கப்பியைப் பிடித்திருந்த கறளைத் தட்டும்படியும் தான் சிறிது நேரத்தில் ப்ரைமரும், ப்ரஷும் கொண்டு வந்து தருவதாகவும் சொல்லிவிட்டுச் சென்றான். இவைகளை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. குளிர் நடுக்கியது. திருக்கோணமலையில் எங்கள் வீட்டுக் கிணற்றில் கப்பி வழியாக கயிற்றில் வாளியைக் கட்டி தண்ணீர் இழுத்துக் குளித்த ஞாபகங்கள் வர கண்கள் நீர்த்திரையிட்டது. இந்தக் கப்பி ப்ரம்மாண்டமாக இருந்தது. ஒரே சமயத்தில் பல பேய்களிடம் அறை வாங்கிய நிலையில் நின்றுகொண்டிருந்த என்னைப் பார்த்து விட்டு சிறிது தொலைவில் விஞ்ச்களுக்கு கறள் தட்டிக் கொண்டிருந்த கீர்த்தி விக்ரமசிங்ஹ அக்கம் பக்கம் பார்த்துவிட்டு என்னிடம் வந்தான்.

"இதுக்கு முந்தி கப்பல் பலன்னத? நவேக் வெட மல்லி ஈஸியில்லெ... புதுக்க கப்பல் சரிக்கு இரிக்கும்... இதீங் பறணே கப்பல்... சரிக்கு சூத்தால நெய் வடியுங் தானே! ஹறீம சீத்தலாய்... உடுபு ஸ்வெட்டர் ஒண்ணுங் இல்லே... ஸிக் ஆவீருங் தானே? நாங் ஒரு ஓவர்ஹொல் எக்ஸ்ரா வெச்சிரிக்கிறது தரேங்... அத போடுங்க என்ன? சபாத்துங் இல்லே... பின்னேரங் காட்டி கரைக்கி போய் சபாத்து வாங்கிறாங்... சரியா?"

கண்ணீர் முட்டிப் பொலபொலவென்று கொட்டியது... கட்டுப்படுத்த முடியவில்லை.

"சீச்சீ... இதீங் என்ன சின்ன புள்ளேங்க மாதிரி...அண்டாண்டெப்பா மல்லி..." என்னை அழவேண்டாம் தம்பி என்று தோளில் கையை வைத்துச் சொன்னான். நிராதரவாக நிற்கும் நிலைமைகளில் இந்தத் தொடுகைகளுக்குத் தான் எத்துணை மந்திர சக்தி? ஆதரவு நிவாரணம் சடுதியில் கிடைத்து விடுகிறதே? இதன் பின்னர் கீர்த்திதான் எனக்கு மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம்.

என்னைவிட இருபது வயது மூத்தவன். பத்தாண்டு காலக் கடலோடி. பாணந்துறையைச் சேர்ந்த நல்ல பௌத்தன். இந்து மஹா சமுத்திரத்தின் காலிமுகக் கடல் காற்றைச் சுவாசித்து வளர்ந்தவன். மாலுமிகளுக்கே உரிய கச்சிதமான உடல்வாகு. இப்படியேதான் கிறிஸ்தோப்பருக்கும். இதனால் தான் திடகாத்திர மாலுமிகள் என்று இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். அதாவது ஏபிள் பாடீட் ஸெய்லர்ஸ்... ஏ.பீ.எஸ். கீர்த்தியைப் பார்த்தாலே இவன் கடலன்னையின் புதல்வன் என்றுதான் தோன்றும். ஆள் நல்ல அழகன். அடர்த்தியான கேசம். இத்தாலியர்களின் மீசை. முதன் முதலாக ஒரு கிரேக்கத்துக் கப்பலில் ஏறியவன் பத்து வருடமாகியும் பாணந்துறை திரும்பிப்போகவில்லை என்றான். கப்பல் விட்டுக் கப்பல் தாவிக் கடைசியில் பாம்பேயில் அலைந்து பின் இந்தக்கப்பலைப் பிடித்துக்கொண்டு கிறீஸ் வந்திருக்கிறான். இதுவே கடைசிக் கப்பல் என்று சொன்னான். திருமணம் செய்துகொள்ளவில்லை "ஒவ்வொரு போர்ட் வரகாட்டியும் கல்யாணங் கட்டிற தானே?" என்று சொன்னான். ஆறுமாதங்கள் ஆகின... எனக்குப் புரிய.

கறள் சுரண்டுவதிலிருந்து ஆரம்பித்து கயிறு திரிப்பது, ஐ ஸ்ப்ளைஸ் செயின் ஸ்ப்ளைஸ் போடுவது, பெயின்றும் தின்னரும் கலப்பது, ப்ரஷ், ரோளர் ப்ரஷ்களை தண்ணீரில் போட்டுவைப்பது, டொக்கில் கப்பலைக் கட்டும்போது ஸ்டொப்பர் போடுவது, ஒரு மாலுமிக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் முடிச்சுக்கள்... றீஃவ் னொட், போலைன் னொட், ஹீவிங் லைன் னொட் போன்ற பல முடிச்சுக்கள்... இவையெல்லாவற்றையும் விட மிகமுக்கியமான வீல் பிடிக்கும் கலையை விவரமாகச் சொல்லித்தந்தான்.

காப்டனும், ஆபீசர்களும் மாலையில் ஊர் சுற்றப் போனபின் என்னை ப்ரிட்ஜ்ஜில் இருக்கும் வீல் ஹௌஸிற்குக் கூட்டிக்கொண்டு போய் போர்ட் ஸைட், ஸ்ரார்போட் ஸைட், காம்பஸ், ரேடார், வீல், லுக்கவுட், விங் காம்பஸ் இல் லாங்கிட்யூட், லற்றிட்யூட் கணக்கிடுவது எல்லாவற்றையும் ஆர்வத்தோடு சொல்லிக்கொடுத்தான். ஒரு துறைமுகத்துக்குள் கப்பல் நுழையும் தருணம் அந்தந்த நாட்டுப் பைலட் அழைத்துச் செல்லும் போது நான் வீல் பிடித்துக் கொண்டிருந்தால் அவன் கொடுக்கும் பாகைகளுக்கு காம்பஸைப் பார்த்து எப்படிக் கலத்தைச் செலுத்துவது, எவ்வாறு அவனுடன் தொடர்புகொள்வது என்ற நுணுக்கங்களை எல்லாம் பார்த்துப் பார்த்து விளங்கப்படுத்தினான். இந்த அறிவு பின்னாளில் நான் சூயஸ் கனால், நைஜீரியாவின் 'போர்ட் ஹாக்கோட்' நதி, மிஸிஸிப்பி ரிவர் உட்படப் பல கடற் பாதைகளைத் தாண்டிப் போகும் சந்தர்ப்பங்களில் என்னைக் காப்பாற்றியது.

இதோ... இந்தக்கணத்தில் மெடிட்டரேனியன் கடலின் நடுவே இருபத்தியாறு பேர் வீணி வடித்துக்கொண்டு குறட்டைச் சங்கீதத்தில் தூங்க... பச்சைப் பொய்களைச் சொல்லிக் கப்பலேறிய என்னை பரிபூரணமாக நம்பி இந்தப் பெரும் படகை ஒப்படைத்திருக்கிறானே காப்டன்? கீர்த்தி இல்லாதிருந்தால் எனது கடல் பயணம் பூர்த்தி!

பெரமா டொக்கிலிருந்த எம்.வீ. ஔரோறாக் கிழவி ஓரளவு உடல் நலம் தேறி மணிக்கு முப்பது கடல் மைல்களுக்கு ஓடும் தகுதி பெற்றுக் கிளம்பி மூன்று நாட்களின் பின் ஒரு நள்ளிரவில் கீர்த்தியையே நன்றியோடு நினைத்துக்கொண்டிருக்கிறேன். கப்பல் புறப்பட்ட காலைப் பொழுதில் கீர்த்தியின் காபினில் அவன் உடுத்திய ஓவர்ஹோல் மட்டுமே கிடந்தது. முதல் நாள் பின்னேரம் பெரயெளஸ் பார் ஒன்றில் பியர் குடித்துவிட்டு இரண்டு ஸுவ்வளாக்கி தெருவோரக் கடையில் வாங்கிச் சாப்பிட்ட பிறகு 'மச்சாங்... நீங்க கப்பலுக்கு போய்க் கிட்டிரிங்க... நாங் கொஞ்சங் சுணக்கத்தில வாறது...' மல்லியாக இருந்த நான் மச்சானாகப் பதவியுயர்வு பெற்றது பெருமையாகவே இருந்தது. இதுதான் நான் கடைசியாகக் கீர்த்தியைப் பார்த்ததும் பேசிக் கேட்ட வசனமும்.

கப்பல் கிரேக்கத்தின் இன்னமொரு துறைமுகமான திஸ்ஸலோனிக்கியில் கோதுமை

தொடர்தல் 84ம் பக்கம்

# மௌரோ க்றூணி...

83ம் பக்கத் தொடர்ச்சி...

ஏற்றிக்கொள்வதற்காக ஓடிக் கொண்டிருக் கிறது. மூன்று நாட்கள் தொடர்ந்த பய ணத்தில் ஒரு நாள் மத்தியானம் திஸ்ஸ லோணிக்கி வந்து சேர்ந்தோம். கப்பல் கரைக்குச் சிறிது தொலைவில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. சுமார் மூன்று மணி-நேரத்தின் பின்னர் ரேடியோ ஆபீஸர் செய்தி சொன்னான் 'பைலட்' வந்து கொண்டிருப் பதாக. அப்போது நேரம் சரியாக நான்கு மணி. ஆஹா... இதுவல்லவோ பேரின்பம்! பன்னிரண்டு மணியிலிருந்து நான்கு மணி-வரையிலான எனது வாட்ச் முடியும் தறு வாய். கப்பலைத் துறைமுகத்திற்கு உள்ளே அழைத்துப் போக பைலட் வரும்போது களு ரஞ்ஜித் வாட்சிலிருப்பான். பிழைத் தேன் போ. ஏற்கனவே செய்தி கேட்டு வயிற்றைக் கலக்கிக்கொண்டிருந்த நான் அடித்துப் பியித்துக்கொண்டு மலசலகூடத்தை நோக்கிப் பறந்தேன்.

நல்ல உயரம். தொட்டுத் த்ருஷ்டிப் பொட்டு வைக்கிறமாதிரிக் கருத்த தேகம். அதற்கு ஏற்றவாறு கருத்த சுருள் சுருளான தலை முடி. வழமையேயான மாலுமிகளுக்குரிய திடகாத்ரம். கப்பல்க்காரர்களின் பொதுவான அடையாளச் சின்னங்களான மீசையும், தாடியும் இல்லாத கரும்பளிங்கு முகம். இதுதான் களு ரஞ்ஜித். பொலன்னறுவை யைச் சேர்ந்தவனாக இருந்தாலும் பதின்ம வயதுகளில் தாயார் தவறிவிட தந்தையுடன் நீர்கொழும்புக்கு இடம் பெயர்ந்து மீன்பிடித் தொழிலில் தேர்ந்தவன். தகப்பனும் தவறி விடக் கப்பலேறியவன் மீண்டும் ஊர் திரும்ப வேயில்லை. பதினெட்டு வருடக் கடலோடி. கிறிஸ்தோப்பர், கீர்த்தி வரிசையில் எனது மற்றுமொரு ஆதர்சம்.

எம்.வீ. ஔரோறா திஸ்ஸலோணிக்கியில் மூட்டை மூட்டையாக கோதுமை மா ஏற்றிக் கொண்டிருந்தது... போர் முடிந்து தொலைந் தாலும் போரினால் விளைந்த பசியின் யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்த வியட் நாமுக்கு க்ரீஸ் அரசாங்கத்தின் நிவாரண உதவியாகக் கொண்டு செல்ல. இங்கு தரித்து நின்ற நாட்களில் களு ரஞ்ஜித்தும் நானும் ஸ்கார்.ஃ.வோல்ட் கட்டி இறங்கி கப்பலை சுற்றிச் சுற்றிப் பெயின்ற் அடித் தோம். அப்போது மேலும் பல தொழில் நுட்பங்களை எனக்குச் சொல்லிக் கொடுத் தான். குறிப்பாக இம்மாதிரியான வேலைகள் செய்யும் போதில் எப்படி ஐஸ் அடிப்பது... எப்படியான வேலைகளில் அதிகம் ஐஸ டிக்கலாம்...அதாவது இளைப்பாறிக் கொள் ளலாம் என்ற பல உபயோகமான தகவல் களையும் தந்து உதவினான். கீர்த்திக்கும் இவனுக்கும் எறத்தாழ ஒரே வயது. இவ னது நிறம் காரணமாக களு... என்ற சிங் கள மொழிக் கருப்பு ஒட்டிக் கொண்டது. பம்பாயிலிருந்து ஏஜன்ட்டுகள் மூலமாகக் கப்பலேறுவது... ஒருவருடக் கான்ட்ராக்ட் முடிந்ததும் புதுப்பித்துக்கொள்ளாமல் திரும்பி பம்பாய் வருவது... உழைத்த டாலர்களில் ஸீமென்ஸ் க்ளப்புக்கும் சிவப்பு விளக்குக ளின் நேபாளக் குஞ்சுகளுக்கும் நிவாரண மளித்து விட்டு சதக்காசில்லாமல் அடுத்த கப்பல் ஏறிச்செல்வதற்கு இவனது நீண்ட கால அநுபவமும் ஒறிஜினல் ஸீமென்ஸ் டிஸ்சார்ஜ் சேர்ட்டி.ஃ.விக்கட்டுமே ஆதார பலங்கள்.

நானும் ஒரு கள்ள ஸீ.டி.ஸீ. புத்தகம் வைத் திருந்தேன். பம்பாயில் ஐனூறு ரூபாய்க்கு இலங்கை அரசாங்க முத்திரைகள் பதித்து... ஊர்பேர் தெரியாத கப்பல்களின்... இல் லாத காப்டன்களின் கப்பலில் வேலை செய்ததற்கான அத்தாட்சிக் கையொப்பங் களுடன் சுடச்சுடக் கிடைக்கும். அம்மாவின் தாலிக்கொடி உட்பட அனைத்து நகைக-ளையும் அடகுவைத்துப் பாலைப்பழம் போல முப்பதினாயிரம் ரூபாய்களை எவனோ ஒரு பொறுக்கியிடம் கொடுத்தழிந்துவிட்டு அவன் போட்டுக் கொடுத்த விமான டிக் கற்றில் சென்னை வந்து... ரயிலில் பம்பாய்... கையில் இருந்த காசில் கள்ள ஸீ.டி.ஸீ மென்ஸ் க்ளப் அறிவிப்புப் பலகையில் விளம்பரம்... நரிமென் பாயின்டில் மராத்தி ஏஜென்ட்... என்னைப் போலவே என்னுடன் கூடவே வந்து காசைக்கொடுத்து ஏமாந்த பால்ய நண்பன் அருள்ஜோதி காசில்லாமல் ஊருக்குத் திரும்பி இயக்கத்தில் சேர்ந்து விட... நான் திஸ்ஸலோணிக்கியில்.

கடலுக்கு வந்து இரண்டரை மாதங்களாகி விட்டது. கொத்தடிமை வேலை... சுத்தமான ஆக்ஸிஜன்... மூன்று வேளை கொழுப்புச் சாப்பாடு... மது மயக்கத்தில் நிம்மதியான உறக்கம்... இவைகள் போதுமே எடையைக் கூட்டிவிட. உருண்டு திரண்டேன். உடலோ மேலும் சில தேவைகளை யாசித்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் களு ரஞ் ஜித், நான், என்னைப்போலவே இன்னு மொரு கள்ள ஸீ.டி.ஸீ. க்காரன் கொழும்பு கொச்சிக்கடை செல்வராஜா, முன்னொரு போதில் களுரஞ்சியுடன் வேலை பார்த்தி ருந்த... எதேச்சையாகப் பக்கத்துக் கப்பலில் சந்தித்த ஆப்பிரிக்க நாடான தன்ஸானியா யாக்காரன் ஜுலியஸ் நைரேரேயுமாக நக ருக்குள் இறங்கி ஊர் சுற்றிப்பார்த்துக்கொண் டிருந்தோம்.

முன்பு கிரேக்கத்தைச் சேர்ந்திருந்த சைப் ரஸ் தீவிலிருந்து அகதிகளாக ஜிப்ஸி இனத் தவர்கள் புலம் பெயர்ந்திருந்தனர். இவர்க ளுடைய ஆடை அணிமணிகள் தனித்துவ மாகத் தெரு எங்கும் இவர்களை அள்ளித் தெளித்திருந்தது. "எல்லாமும் எங்களப் போலதான்வா...இருக்க சொந்தமா நாடில் லாம அலையிதுங்க..." ரஞ்ஜித் திடீரென்று இப்படிச் சொன்னது எனக்கு கொஞ்சம் வியப்பாக இருந்தது. இதை நானலல்லவா சொல்லவேண்டும்... உனக்குத் தான் நாடி ருக்கிறதே? என்று வாய்வரைக்கும் வந் ததை விழுங்கிக்கொண்டேன். இதை தனது நுட்பமான அறிவால் புரிந்துகொண்ட ஞானஸ் தன் சொன்னான்.

"மச்சாங்...நாங்க கடல்லதான்வா ஜீவிச்சுக் கிறம்... கடல்ல இருக்கக்குள்ள விஸ்கி, சிகரெட் எல்லாம் டியூட்டி .ஃ.வ்றீல தானே வாங்குறது... ஏன்வா... நம்மளுக்கு தான் நாடு இல்லையே... நாம்ப இருக்கிறது நோ மான்ஸ் லான்ட்... கடல்தான் நமக்கு ஸீமென்ஸ் லான்ட். நம்மளுக்காவி ஒண் ணுங் சொந்தங் இல்லே..."

அனுபவம் ஒருவனை அறிவாளியாக்குகிறது. வாழ்வின் கசப்புகள் அவனைத் தத்துவஞா னியாக்குகிறது என்பதை அன்று உணர்ந்து கொண்டேன்.

ரஞ்ஜித்தும், ஜுலியஸும் எங்களை ஒதுக் குப்புறமான தெருக்களால் போவோமே யென்று அழைத்துச் சென்றார்கள். இவர்க ளுக்கு இந்த ஊர் இரண்டாவது தாய்வீடு போலும்... என்பதாக எங்களுக்குப் பட்டது.

இரு புறமும் தனித்தனியான குடியிருப்பு வீடுகள். கொஞ்சம் பழங்காலத்தவைதான். மரங்கள் அடர்ந்திருந்தன. சூரியன் மறைந் திருந்தாலும் ஜுலை மாதத்து வெளிச்சம் கொஞ்சம் மீதி இருந்தது. மனிதர்களை அதிகம் காணக்கூடியதாய் இருக்கவில்லை. ஒரு சித்தோடு வேய்ந்த வீட்டின் முன்னால் தெருவோர வாசல்படியில் ஒரு சிறுவனும் சிறுமியும் உட்கார்ந்து ஏதோ விளையாடிக் கொண்டிருந்தனர். அருகே ஒரு மர நாற் காலியில் பருமனான இலேசாக முகத்தில் ரோமம் முளைத்திருந்த நடுத்தர வயது மதிக்கத்தக்க பெண்மணி உட்கார்ந்திருந் தாள். அந்தச் சிறிசுகளின் தாயாக இருக் கக்கூடும். நாங்கள் நால்வரும் அந்த வீட்டை அண்மிக்கும் தருணத்தில் அவர்கள் எங்க ளைப் பார்த்த பார்வை ஏதோ பறக்கும் தட்டிலிருந்து இறங்கி வரும் மனிதர்களைப் பார்த்ததுபோல் இருந்ததாக நான் உருவ கித்துக்கொண்டேன்.

நாங்கள் அவர்களின் வீட்டுவாசலைத் தாண் டும்போது அந்தச் சிறுவன் உரத்த குர லில் "மௌரோ க்றூணி... மௌரோ க்றூணி..." என்று கத்திக்கொண்டே அருகி லிருந்த சிறுமிக்கு எங்களை அறிமுகப்-படுத்துகிறான்...

எனக்கும் செல்வராஜாவுக்கும் பாஷை புரிய வில்லை. வீட்டைத்தாண்டிச் சிறிது தூரம் சென்றபின் களு ரஞ்ஜித் கேட்டான். "அந்த பொடியன் என்ன சொன்னான்னு வெளங் கிச்சா..."

இருவரும் ஏககாலத்தில் "இல்லை... என் னதான் சொன்னான்?"

"கறுத்தப் பன்னி... கறுத்தப் பன்னி... அப் பிடி தங்கச்சிக்கு சொல்லிக் குடுக்கிறான்..."

ஆப்பிரிக்கன் ஜுலியஸைக் குறித்துச் சொன் னதாக நான் நினைத்துக்கொண்டு...

"ரஞ்ஜித்... உங்கட யாளுவாவுக்கு க்ரீக் பாஷை விளங்குமா... விளங்கினா மன சுக்க எப்பிடி கஷ்டமாயிருக்கும்?"

கசப்பாகச் சிரித்துவிட்டு ரஞ்ஜித் சொன் னான்.

"அப்பிடி இல்லேவா... எங்க எல்லாமுக்கும் சேத்து சொன்னது... இவிங்களுக்கு நாங்க எல்லாமும் கறுத்த பன்னீங்க தான்வா..."

யாரோ பழைய செருப்பால் கன்னத்தில் 'பளார்' என்று ஓங்கி அறைந்தது போல் உணர்ந்தேன். ஐரோப்பியர், அமெரிக்கரல் லாது அனைவருமே நிறவெறி வலயத்துக் குள்ளேதான் உழல்கிறார்கள் என்கிற மாபெரும் உண்மையை ரஞ்ஜித் மிக எளி தாக உணர்த்தி விட்டான். அலெக்ஸாண் டர், அரிஸ்டாட்டில், ஆர்க்கிமீடீஸ், கலிலே-யோ, பைதாகரஸ் எல்லோருடைய ஆவி களும் வரிசையில்வந்து நக்கல் சிரிப்பு சிரித்துவிட்டுப் போயின.

anandprasad@thaiveedu.com



# உரைகல் நூல் வெளியீட்டு விழா

நவம்பர் 14ம் நாள், ஸ்காபரோ செல்வச்சந்நிதி முருகன் ஆலய மண்டபத்தில் சண்முக-நாதன் கஜேந்திரன் தொகுப்பில் 'உரைகல்' நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

நிகழ்வுகளை நூலாசிரியரான திரு சண்முகநாதன் கஜேந்திரன் தொகுத்து வழங்கினார். உரைகல் என்ற இந்தநூல் யாழ்ப்பாணக் தேசியக் கல்வியியல் கல்லூரி பற்றிய பல செய்திகளைக் கூறும் ஒருதொகுப்பு நூலாகும்.

பிரதம விருந்தினரான யாழ். தேசிய கல்வியிற் கல்லூரியின் முன்னாள் பீடாதிதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் கலந்துகொண்டார். இவர் தன்னுரையின் போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற் கல்லூரியின் அறிமுகம், அதன் வளர்ச்சியின் போது சந்தித்த இடர்-பாடுகள், கல்லூரியின் தற்போதைய நிலை என்பன பற்றியும் நூலாசிரியர் தனது அபிமானத்திற்குரிய மாணவன் என்றும் குறிப்பிட்டார்.

நூலின் அறிமுகவுரையினை திரு சந்திரபோஸ் வழங்கினார். இவர் தன்னுரையின் போது நூலாசிரியரின் முயற்சி பற்றியும், அவர் இந்நூலில் கையாண்ட தமிழ் நடைகள் பற்றியும் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் பற்றியும் குறிப்பிட்டார்.

உரைகல் என்ற இந்த நூலானது, யாழ்ப்பாண தேசிய கல்வியில் கல்லூரி பற்றிய பல விடயங்களுடன் யாழ்ப்பாணத்தின் சமகால பண்பாட்டுச் சூழலையும் புலப்படுத்துவதாக உள்ளது. கலாச்சார சீரழிவிலிருந்து சமூகத்தை எவ்வாறு மீட்டுச் செல்வது என்பது பற்றியும் இந்நூல் குறிப்பிடுவதாக உரையாற்றியோர் குறிப்பிட்டனர்.

•





# நண்பர் 'சிற்பி' சிவசரவணபவன்

- உதயணன் -


நண்பர் சிற்பி சிவசரவணபவன் மறைந்த செய்தியைக் கேட்டு எனது உள்ளத்தின் உணர்வுகள் உறைந்தன. கடந்த சில கால மாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்த செய்தியை அறிவேன். அதனால் அவருடன் தொலை பேசியிலும் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்தது. திடீரென அவர் மறைந்து விட்டார் என்ற செய்தி வந்ததும், எனது இதயத்தில் ஓர் இடி இறங்கியது போன்ற அதிர்ச்சி!

எங்களுடைய நட்புக்கு இன்றைய வயது 57.

ஐம்பத்தேழு வருடங்களுக்கு முன்னர், 1957ல் சிற்பி யாழ்ப்பாணத்தில் கந்தரோடையில் வசித்து வந்தார். அப்பொழுது அவருக்கு வயது 24 எனக்கு 22 நான் கொழும்பில் சமூகசேவைத் திணைக்களத்தில் கடமை யாற்றிக் கொண்டிருந்தேன். நாங்கள் அடித்துப் பிடித்துச் சிறுகதைகள் எழுதிக்கொண்டிருந்த காலம் அது. கொழும்பில் வீரகேசரி, தினகரன், சுதந்திரன் மற்றும் யாழ்ப்பாணத்து ஈழகேசரி என வாரத்தில் நான்கு எழுத்தாளர்களுடைய நான்கே நான்கு சிறுகதைகள் வரக்கூடிய வாய்ப்புத்தான் நிரந்தரமாக இருந்தது. திடீரென்று கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று எங்கிருந்தாவது ஒரு மாத சஞ்சிகை தோன்றும். விழுந்தடித்து எழுதுவோம் விமர்சிப்போம் வருட சந்தா எவ்வளவு என்று கேட்டு எழுதுவோம். பதில் வராது. சில மாதங்களில் சஞ்சிகையே வராது நின்றுவிடும்.

1957ல் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் இருந்த ஸ்ரீஸ்காந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்ட 'அல்லி' என்றொரு மாத சஞ்சிகை வெளியானது. அதில் நல்ல தரமான சிறுகதைகள் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்றது. எனது சில சிறுகதைகளும் அவ்வப்போது 'அல்லி'யில் பிரசுரமாயின. 'அல்லி'யின் 1957 டிசம்பர் இதழில் சிற்பி எழுதிய 'அண்ணா' என்ற சிறுகதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எனது கருத்தைச் சிற்பிக்குத் தெரிவிக்கலாம் என்றால், அவர் யார், எங்கிருக்கிறார், முகவரி என்ன என்ற விபரம் எதுவும் தெரியாது. பத்திரிகை ஆசிரியருக்கு எழுதலாமா என்று எண்ணி அந்தச் சிறுகதையை மீண்டும் படித்தேன். அப்பொழுது வேறொரு எண்ணம் எழுந்தது. சிற்பி எழுதிய அந்தச் சிறுகதையை அவர் முடித்த இடத்தில் இருந்து தொடர்ந்து நிகழ்ந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தேன். அப்படியே சிற்பியின் சிறுகதையை முதலாவது அத்தியாயம் என்று வைத்துக் கொண்டு, அதற்கு இரண்டாவது அத்தியாயத்தை எழுதி 'அல்லி' பத்திரிகைக்கு அனுப்பினேன். 'அல்லி' யின் அடுத்த இதழில் "சிற்பியின் 'அண்ணா'வை ரசித்த ஒரு எழுத்தாள அன்பர் சிற்பி விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து அதன் இரண்டாவது பாகத்தை எழுதுகிறார்" என்ற குறிப்புடன் எனது அண்ணா - 2 பிரசுரமானது. சிற்பி நான் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து அண்ணா - 3 ஐ எழுதினார். அதுவும் பிரசுரமானது. "முன்பின் தெரியாத, முன்னறி முகம் இல்லாத நீங்கள் இருவரும் மாறி-மாறி எழுதும் இத்தொடரை வாசகர்கள் ரசிக்கிறார்கள். தொடர்ந்து எழுதுங்கள்," என்று பத்திரிகை ஆசிரியர் உற்சாகப்படுத்தினார். நான் அண்ணா - 4ஐ எழுதி அனுப்பினேன். அது வெளிவரவில்லை. நிதிநெருக்கடி காரணமாக 'அல்லி' என்னும் சஞ்சிகை நின்றுவிட்டது.

சிற்பி அவர்கள் 2005ல் 'ஞானம்' பத்திரிகையில் எழுதிய 'கலைச்செல்விக் காலம்' என்ற தொடரில் மேற்படி தகவலை ரசித்து எழுதியிருக்கிறார்.



**ஈழத்தமிழ் இலக்கிய உலகின் முன்னோடி சஞ்சிகை எனக்கூறப்படுவது கலைச்செல்வியாகும். தமிழகத்தில் இலக்கியத்தில் முக்கிய பாய்ச்சல்கள் நடந்த காலத்தை மணிக்கொடி காலம் என்று அழைப்பது போல் ஈழத்தில் கலைச்செல்வி காலம் அழைக்கப்படுகிறது. கலைச்செல்வி இதழின் ஆசிரியர் சிற்பி என்றழைக்கப்படும் சிவசரவணபவன் ஈழத்தின் முன்னோடி எழுத்தாளராகவும், இலக்கிய செயற்பாட்டாளராகவும் அறியப்படுபவர். இவர், 2015 நவம்பர் 9ம் நாள் காலமானார். நிலவும் நினைவும் - சிறுகதைத்தொகுதி, சத்திய தரிசனம் - சிறுகதைத்தொகுதி, உனக்காகக் கண்ணே - நாவல், நினைவுகள் மடிவதில்லை ஆகியன இவரது வெளிவந்த நூல்களில் முக்கியமானவை.**

பின்னர், 1957 - 58ல் தென்னிலங்கையில் களுத்துறை நகரிலிருந்து 'ஈழதேவி' என்னும் மாத சஞ்சிகை சில மாதங்களாக வெளிவந்துகொண்டிருந்தது. அதன் ஆசிரியர் பண்டிதர் த. சுப்பிரமணியம். எனது நெடுங்கால நண்பரான நா.பாலசுப்பிரமணியம் (பாலா) என்பவர் நிதி, நிர்வாகம், வெளியீடு போன்றவற்றிற்குப் பொறுப்பாக இருந்தார். அவர் கொழும்புக்கு வந்தால் என்னுடனேயே தங்குவார். அவருடனே 'ஈழதேவி' இதழின் சந்தா, மற்றும் விளம்பரங்களுக்காகக் கொழும்புத் தெருக்களில் உண்டியல் குலுக்கிய அனுபவங்களும் எங்களுக்கு உண்டு.

1958 மே மாதத்தில் நடைபெற்ற இனக்கலவரத்தின்போது களுத்துறையில் வாழ்ந்த தமிழரும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். கோயில் குருக்களையே வெட்டிக் கொத்திக் கொள்ளி வைத்துக் கொழுத்திக் கொண்டாடினார்கள் என்பது உச்சம். ஒரு தமிழ் சஞ்சிகையைக் கனவிலே நடத்தினாலும் சிங்களவன வந்து அடிப்பான் என்ற நிலைமை அங்கே. அனைவரும் பத்திரிகையை நிறுத்திவிடலாம் என்று திர்மானித்துப் பிரிந்து போய்விட்டனர்.

பாலா என்னிடம் வந்தார். என்னைத் துண்டு துண்டாக வெட்டிப்போட்டாலும் 'ஈழதேவி'யை நிறுத்த முடியாது என்று துன்பப்பட்டார். வெகு நாட்கள் யோசித்த பின்னர் பாலாவும் நானும் யாழ்ப்பாணம் போய் சிற்பியைச் சந்தித்து விபரத்தைச் சொன்னோம். அன்றுதான் சிற்பியும் நானும் முதன்முறையாக நேரில் சந்தித்தோம். அவருடைய 'அண்ணா' சிறுகதையைத் தொடர்ந்து எழுதிய 'உதயணன்' நான்தான் என்பதை நேரில் கண்டு பேசிப் பரவசப்பட்டார்.

களுத்துறையில் வெளிவந்த 'ஈழதேவி' இதழை ஒரு குழு அமைத்துத் தொடர்ந்து நடத்துவது பற்றி பல தடவைகள் கூடி ஆலோசித்தோம். அந்தக் குழுவில் சிற்பியின் ஆசிரியரான ஆ. பொன்னம்பலமும் இருந்தார். முடிவில், 'ஈழதேவி' என்ற பத்திரிகையின் பெயரைக் 'கலைச்செல்வி' என்று மாற்றுவது என்றும் ஈழதேவியில் வெளிவந்த தொடர் அம்சங்களைத் தொடர்ந்து கலைச்செல்வியில் வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. உதாரணமாக, ஈழதேவியின் கடைசி இதழில் 'இதய வானிலே' என்னும் எனது தொடர்கதையின் முதலாவது அத்தியாயம் வெளிவந்திருந்தது. அதன் இரண்டாம் அத்தியாயம் கலைச்செல்வி முதலாம் இதழில் பிரசுரமாகித் தொடர்ந்தது.

இதுதான் கலைச்செல்வியின் ஆரம்பகால வரலாறு. ஞானம் பத்திரிகையில் சிற்பி எழுதிய 'கலைச்செல்விக் காலம்' என்ற தொடரில் சிற்பி இவற்றை அனுபவித்து விரிவாக எழுதியிருக்கிறார். சிற்பியின் விருப்பப்படி கலைச்செல்வியில் வெளிவந்த எனது இன்னொரு தொடர்கதையான 'மனப்பாறை' பின்னர் 'அந்தரங்க கீதம்' என்ற தலைப்பில் வீரகேசரிப் பிரசுரங்கள் வரிசையில் நூலுருவில் வெளியானது.

எனது வாழ்வில் ஓர் உன்னதமான நண்பராக சிற்பி வாய்த்ததை எண்ணிப் மிகவும் பெருமைப்படுகிறேன். நன் எழுதிய சிறுகதைகளின் அடையாளமாக ஒரு சிறுகதைத் தொகுப்பாவது நூல்வடிவில் வரவேண்டும் என்று பாடுபட்டவர் அவர். நான் பின்லாந்துக்குப் போன பின்னர் எனது சிறுகதைகள் பலவற்றை அலசியாராய்ந்து, அவற்றுள் நூலுக்குத் தேவையான 36 கதைகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு முன்னுரையையும் எழுதி அச்சுக்குத் தயாராக அனுப்பி வைத்தார்.

'ஒரு நண்பனுடன் உரையாடுவது உரக்கச் சிந்திப்பதற்குச் சமம்' என்பதையும், 'தாயிடமும் மனைவியிடமும் தந்தையிடமும்கூட ஆலோசனை செய்ய முடியாத பல விடயங்களை நண்பர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஒரு தெளிவையும் தீர்வையும் பெறலாம்' என்பதையும் நண்பர் சிற்பி அறிவார். நானும் அறிவேன்.

அன்பார்ந்த நண்பரே, உங்கள் அன்புக்கு நன்றி. உங்கள் நட்புக்கு நன்றி. உங்கள் அளப்பரிய பெருமைக்கும் பொறுமைக்கும் நன்றி.

நெஞ்சார்ந்த நண்பரே, அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக நாங்கள் இருவரும் தூய அன்புடன் மனம் நிறைந்த நண்பர்களாக இருக்க வரம் தந்த இறைவனுக்கு நன்றி.

இறைவனுடைய பவுத்திரமான திருவடிகளில் தாங்கள் நிறைவான அமைதி பெறப் பிரார்த்திக்கிறேன் என்றும் பிரார்த்திப்பேன்!



uthayanan@thaiveedu.com

# நிலா முற்றம்

## அமரர் சிற்பி சிவசரவணபவன் அவர்கள் ஓர் இதழியல் முன்னோடி

- தெளிவத்தை ஜோசப் -

'சிற்பி' என்றதும் மனதில் எழுகின்ற முதல் நினைவே கலைச்செல்வி தான்.

ஈழத்துத் தமிழ் இதழியல் வரலாற்றில் கலைச் செல்விக்கான இடம் மிக முக்கியமானது. முன் வரிசைக்குரியது.

1958 ஜுலையில் கலைச்செல்வியின் முதல் இதழ் வெளிவந்தது. ஒரு இலக்கியச் சிற்றேட்டை நடத்திக்காட்டும் இலக்கிய அனுபவங்களையும் ஆளுமைகளையும் தனது பாடசாலை மாணவர் பருவத்திலிருந்தே சிறுகச்சிறுக பெற்றுக்கொண்டவர் இவர்.

சிற்பியின் தந்தை சிவசுப்பிரமணியம் ஐயர் ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர். பழந்தமிழ் இலக்கிய ஈடுபாடு கொண்டவர். ஈழகேசரி, கலைமகள், இந்து சாதனம், கல்கி, ஆனந்த விகடன் போன்ற சஞ்சிகைகளை தவறாது வீட்டுக்கு வாங்கி வருவார். பள்ளிக்கூடம் போய் வருவதைத்தவிர வேறு வேலை இல்லாத தனக்கு இவைகளை வாசிக்க நிறைய நேரம் இருந்தது என்றும் 10 அல்லது 11 வயதிலேயே ஆயிரம் பக்கங்கள் கொண்ட இராமாயண வசனத்தை வாசித்து முடித்திருந்தேன் என்றும் சிற்பி ஒரு நேர்காணலில் குறித்துள்ளார்.

வீட்டில் இருந்தே மேலதிக கல்வி பெறும் வசதியும் வாய்ப்பும் கொண்டவராக இருந்தவர் இவர். பாடசாலைக்கல்விக்காக இவர் முதன் முதல் காலடி வைத்தது கந்தரோடை தமிழ் கலவன் பாடசாலையில்தான்.

இந்தப்பாடசாலைதான் பிறகு கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையாகப் பெயர்கொண்டது. இந்தப் பாடசாலையின் ஆசிரியராகவிருந்த சி. பொன்னம்பலம் அவர்களே தன்னுடைய வாசிப்பு ஆர்வத்தையும் எழுத வேண்டும் என்னும் ஆசையையும் உருவாக்கியதாக பிற்காலங்களில் சிற்பி கூறுவார்.

ஸ்கந்தவரோதயக்கல்லூரியில் சேர்ந்து அந்தக் காலக் கல்லூரிகளின் கடைசி வகுப்பும் பெரும்படிப்புமான எஸ்.எஸ்.சி. சித்தி பெற்றார். எஸ்.எஸ்.சி. பாஸானால் உத்தியோகம் தேடிக்கொள்ளலாம் என்னும் அந்தக்காலப் பொது நியதிக்கேற்ப சிவ சரவணபவன் அவர்களும் எழுது வினைஞர் ஆனார். கொழும்பு உயர் நீதிமன்றப்பதிவாளர் அலுவலகத்தில் எழுது வினைஞர் உத்தியோகம் கொழும்பில் உத்தியோகம் பார்த்த போது இரண்டு முக்கியமான விடயங்களை இவர் மேற்கொண்டுள்ளார். ஒன்று இலண்டன் பல்கலைக்கழக இண்டர் ஆர்ட்ஸ் கல்வி மற்றது பத்திரிகை மற்றும் வானொலிக்குச் சிறுகதைகள் எழுதுவது.

இவருடைய முதல் கதை 'மலர்ந்த காதல்' சுதந்திரனில் 1952ல் வெளிவந்தது. மாணிக்கம் என்ற கதை வானொலியில் வாசிக்கப்பட்டது. 'ஏழையின் இதயம்' வீரகேசரியில் பிரசுரமானது. ஈழகேசரி, தினகரன் என்று சிற்பி ஒரு சிறுகதைக்காரனானார்.

லண்டன் பல்கலைக்கழக இன்டர் ஆர்ட்ஸ் பரீட்சையில் சித்தி அடைந்ததும் உயர் நீதி மன்ற எழுதுவினைஞர் உத்தியோகத்தை உதறி விட்டு ஆசிரியரானார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி (1953) கல்வி மீதுள்ள மட்டற்ற கரிசனையால் சென்னைக் கிறிஸ்தவக்கல்லூரியில் சேர்ந்தார். சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த இந்தக் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழார்வம் மிக்க மாணவர்கள் பலர் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படித்தனர். கலைப் பேரரசு ஏ.றி. பொன்னுத்துரை, கவிஞர் கந்தவனம், எஸ்.பொ. என்று ஈழத்து இலக்கியப்பிரபலஸ்தர்கள் கூடி வாழ்ந்த இடம் அது.

அந்த விடுதிகளின் மாணவர்கள் இணைந்து ஒரு தமிழ் மன்றமும் மன்றத்துக்காக 'இளந் தமிழன்' என்னும் கையெழுத்து சஞ்சிகையையும் நடாத்தி வந்தனர். இருபத்தொரு வயது மாணவனாக சிற்பி அங்கு சேர்ந்த



போது இளந்தமிழன் ஆசிரியராக இருந்து அதைக் கொண்டு நடத்தியவர் அழ. சிதம்பரம் என்னும் இன்னொரு மாணவர். அவருக்குத்துணையாக பக்கபலமாக இவரும் செயற்பட்டிருக்கின்றார்.




இதழியலில் ஆர்வம் சிற்பியின் இளவயதுக் காலத்திலேயே மனதில் கிடந்து ஊறி ஊறி வளர்ந்திருக்கிறது.

அந்தக் கையெழுத்து இதழுக்காக விடுதி மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் சேகரித்தல் சேர்த்தவைகளை சீர்படுத்தல் இதழின் அளவுக்கேற்ப அவைகளை மீள எழுதுதல் என்று ஒரு உற்சாகத்துடன் செயற்பட்டிருக்கின்றார். அந்த அர்ப்பணிப்பும் உழைப்பும் அவரை அடுத்த ஆண்டுக்கான இளந்தமிழன் ஆசிரியராக்கி விட்டது. தமிழ் மன்ற மாணவர்களுடன் இணைந்து பேசி கலந்தாலோசித்து கையெழுத்துப் பிரதியை அச்சு வாகனம் ஏற்றும் ஆலோசனையில் வெற்றியும் பெற்றார் சிற்பி. அச்சில் வெளிவரவிருக்கும் இளந்தமிழன் இதழுக்கு வாழ்த்துச் செய்தி பெற மாணவர்கள் சிலருடன் இணைந்து மு.வ. அவர்களை சந்தித்து உரையாடியதை தன் வாழ்வின் பொன் நினைவாகக் கொண்டிருந்தார் சிற்பி. வரலாற்றுச்சிறப்பு மிக்க சென்னை கிறிஸ்தவக்கல்லூரி விடுதியிலிருந்து அச்சில் வெளிவந்த முதல் சஞ்சிகை என்னும் பெருமை கொண்டது இளந்தமிழன். அந்தப் பெருமைக்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் இலங்கைத் தமிழ் மாணவன் சிவசரவணபவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனக்குப் பிறகு அடுத்த ஆண்டின் 'இளந் தமிழன்' ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டவர் கவிஞர் கந்தவனம் என்பதையும் நினைவு கூர்ந்தார் சிற்பி.

இளங்கலைமாணி பட்டத்துடன் (B.A) இலங்கை மீண்ட சிற்பி அவர்கள் தொடர்ந்தும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். செங்குந்தா இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், பண்டாரவளை சென் ஜோசப் கல்லூரி, தென்மராட்சி உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகிய வற்றில் ஆசிரியராகவும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றார்.

ஒரு கல்வியியலாளரான சிற்பி அவர்கள் தனது ஆசிரியப் பணி காலத்திலேயே பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 'கல்வியியல் டிப்ளோமா' பட்டத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுகலை மாணிப் பட்டத்தினையும் (M.A) பெற்றுக் கொண்டார்.

மூதறிஞர் ராஜாஜி, மு.வ. போன்றவர்களுடனும் எழுத்தாளர் இதழியலாளர்களான அகிலன் பார்த்த சாரதி, கல்கி, கி.வா.ஜ, சோமு போன்றவர்களுடனும் நெருக்கமான நட்பும் உறவும் கொண்டிருந்தவர் இவர். 1964ல் பாரி நிலையம் வெளியிட்ட சிற்பியின் முதலாவது சிறுகதைத் தொகுதியான 'நிலவும் நினைவும்' நூலுக்கு முன்னுரை வழங்கியவர் அகிலன் என்பதும் நோக்கக்கூடியது.

இந்த நெருக்கமும், நட்பும், உறவும் தமிழக இலக்கியத்துடனான இதழ்களுடனான தனது உறவை பலப்படுத்திக் கொள்ளும் குறுகிய சுயநல மனப்பான்மையால் அல்ல என்பதைத் தனது தீவிரமான இலக்கியச் செயற்பாடுகள் மூலம் நிரூபித்துக் காட்டியவர் சிற்பி.

1956ல் இவரது இலக்கிய நண்பரும் கல்கியின் ஆசிரியரும் பிரபல எழுத்தாளரும் சோமு என்று அறியப்பட்டவருமான மீ.ப. சோமசுந்தரம் இந்திய சாகித்திய அகடமிக்காக 'சிறு-கதை மஞ்சரி' என்னும் சிறுகதைத் தொகுதியை தொகுத்திருந்தார். தொகுதி வெளிவந்ததும் தனது நண்பரான சிற்பிக்கும் ஒரு நூலைப் பரிசாகத் தந்திருப்பார் சோமு என்று நினைக்கின்றேன். தொகுதியைப் புரட்டிப் பார்த்த சிற்பிக்கு சினம் சிரத்துக்கேறியது. பிறகு சோகம் நிறைந்த துயரமாக வடிந்திறங்கியது. கோபத்துக்கும் சோகத்துக்குமான காரணம் தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர் பலரின் சிறுகதைகள் அடங்கிய அந்தத் தொகுதியில் மருந்துக்குக் கூட ஒரு இலங்கை எழுத்தாளரின் சிறுகதை இடம் பெறவில்லை என்பதுதான். தன்னுடைய கதை ஒன்று இடம்பெறவில்லை என்பதல்ல என்பதை 1958ல் அவரே தொகுத்து வெளியிட்ட ஈழத்துச் சிறுகதைகள் மூலம் நிரூபித்தவர் இவர்.

1938ல் அல்லயன்ஸ் குப்புசாமி அய்யர் தொகுத்த கதைக்கோவை என்னும் முதல் சிறுகதைத் தொகுதியில் 40 எழுத்தாளர்களின் சிறுகதைகள் தொகுக்கப்பட்டன என்பது வரலாறு. அதில் இலங்கை எழுத்தாளர்களான சி.வைத்தியலிங்கம் சம்பந்தன் இலங்கையர் கோன் ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருந்தனர் என்பதும் வரலாறு. சிற்பி இவைகளை அறிந்திருந்தவர். 1938லேயே குப்புசாமி அய்யருக்கு மூன்று இலங்கை எழுத்தாளர்கள் கிடைத்திருந்தார்கள் என்றால் 1956ல் ஒரு இருபது வருடங்களின் பின் சோமுவுக்கு ஒரு இலங்கை எழுத்தாளருமே கிடைக்கவில்லையா? என்னும் ஆத்திரம் சிற்பிக்கு 'தெரியவில்லை, கிடைக்கவில்லை' என்பதல்ல, இது ஒரு அசட்டை புறக்கணிப்பு என்பதுதான் அந்த சினம்.

தன்னுடைய மதிப்பிற்குரிய ஆசிரியர் சி. பொன்னம்பலம் மறுமலர்ச்சிக்காரர்களான ச.வே. பஞ்சாட்சரம், அ.செ. முருகானந்தன் போன்றவர்களுடன் கலந்தாலோசித்து 12 ஈழத்துச் சிறுகதையாளர்களின் கதைகளைத் தொகுத்து ஈழத்துச் சிறுகதைகள் என்னும் அழுத்தமான முத்திரையுடன் பாரி நிலையம் மூலம் வெளியிட்டுக்காட்டிய வரலாற்று நாயகன் இப்போது நாம் இழந்திருக்கும் சிற்பி சரவணபவன் அவர்கள். இந்தத்தொகுதியில் வெளிவந்த 12 கதைகளில் சிற்பியின் கதை இல்லை என்பது மிகவும் கவனத்தில் கொள்ளவேண்டியது.


தமிழகத்தில் கல்கி மற்றும் ஈழத்துப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்ற இலங்கை எழுத்தாளர்களின் சிறுகதைகளை தமிழ் எழுத்தாளர் மன்றத்துக்காகத் தொகுத்தவர் சிற்பி. தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் துணைச்செயலாளராக 1962 - 1963 காலப்பகுதியில் இயங்கியவர் இவர்.

ஈழத்துப் பரிசுச்சிறுகதைகள் என்னும் பெயருடன் 1963ல் வெளிவந்த இந்த தொகுதியில் சிற்பி, நவம், அ.முத்துலிங்கம், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், சகிதேவி கந்தையா, உதயணன் முத்து சிவஞானம் செந்தூரன் ஆகிய ஒன்பது பரிசு பெற்ற கதைகள் உள்ளன.

இந்தப் பரிசு சிறுகதைத் தொகுதிக்காக வீரகேசரியில் முதற் பரிசு பெற்றிருந்த (1963) என்னுடைய பாட்டி சொன்ன கதையைக் கேட்டு சிற்பி அவர்கள் எழுத்தாளர் மன்றம் மூலமாக எனக்குக் கடிதம் எழுதி

தொடர்தல் 89ம் பக்கம்

**ஈழத்தின் முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவரும் இலக்கியச் செயற்பாட்டாளருமான சிற்பி அவர்கள் ஈழத்தின் முன்னோடி இதழ்களுள் ஒன்றான கலைச்செல்வி இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியிருந்தார். மக்கள் தொண்டு என்கிற இச்சிறுகதை சிற்பி அவர்களால் எழுதப்பட்டு 1958 ஈழகேசரி இதழில் வெளியானது. அவரது நினைவுகளைப் பகிரும் பொருட்டு தாய்வீடு இச்சிறுகதையினை மீள்பிரசுரம் செய்கின்றது.**



# மக்கள் தொண்டு

**- சிற்பி -**

“ஆ, சின்னத்தம்பியே? கன காலமாய் வராமல் விட்டிட்டாய்... கொஞ்ச நேரம் இதிலை இரு... வாறன்”

சட்டைக்குள் மறைந்திருந்த தன் தங்கச் சங்கிலியை வெளியில் எடுத்து விட்டபடி வரவேற்றார் கனகசபை.

‘கனவு காண்கின்றேனா?’ என்ற சந்தேகம் சின்னத்தம்பிக்கு! கொண்டுவந்த பனை ஓலைப் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, கனகசபையின் வரவேற்பு அறைக்குள் பார்வையைச் செலுத்தினான்.

யாரோ புதிய மனிதரெல்லாம் அங்கிருந்தனர். ஒவ்வொருவருக்கும் முன்னால் பற்பல வண்ணத் திராவகங்கள். அவற்றை அடிக்கடி சுவைத்துக் கொண்டும், சிகரட் புகையை ஊதிக் கொண்டும் கனகசபையுடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.

“முகாந்திரம் பட்டத்தை ஏன் துறக்கின்றீர்கள்?” வந்திருந்த ஒருவர் கேட்டார்.

“மக்களுக்குச் சேவை செய்பவர்களுக்கு இத்தகைய பட்டமெதுவும் தேவையில்லை. தொண்டு செய்வதில் நான் அடையும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் அந்நிய ஏகாதிபத்தியத்தின் எச்ச சொச்சமான இந்தப் பட்டம் குலைத்துவிடுகின்றது.வேண்டுமென்றே என்மீது சுமத்தப்பட்ட இந்தப் பட்டத்திலிருந்து விடுபட்டு, உண்மையான சுதந்திர புருஷனாக வாழ்வதற்கு நான் ஆசைப்படுகின்றேன்.”

“எங்கள் நாடு மிக விரைவிலே குடியரசாகப் போகின்றது. இந்தச் சந்தர்ப்பத்திலே, நீங்கள் இந்தப் பட்டத்தை துறப்பது பொருத்தமானதுதான்... மக்களின் தொண்டன் என்ற முறையிலே ஏதாவது சொல்ல விரும்புகி-றீர்களா?”

“தொண்டு... தொண்டு... தொண்டு. மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு. இதைத்தான் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.”

“உங்களைப் போன்ற பெரியவர்கள், செல்வந்தர்கள் பலர், மக்களைப் பற்றியே நினைப்பதில்லை. உங்களுடைய தொண்டு மனப்பான்மை பாராட்டிற்குரியது.”

“ஒருநேர உணவின்றி எத்தனையோ ஏழைகள் இந்த நாட்டில் வாடி வதங்கிச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். குடியரசு தினத்திலாவது அந்த மக்கள் வயிறார உண்ண வேண்டும். பதினாயிரம் ஏழை மக்களுக்கு அன்றைய தினம் அன்னதானம் அளிக்கத் தீர்மானித்திருக்கின்றேன். லங்கா மாதாவுக்குச் சிறியேன் செய்யும் சின்னத் தொண்டு இது.” இன்னும் விரிவாகச் சொல்லக் கூச்சப்படுபவரைப் போல மெல்லிய குரலில் சொன்னார் மாஜி முகாந்திரம்.

•

பூங்குடிக் கிராமதிலுள்ள ஒரேஒரு பணக்காரக் குடும்பத்தின் ஒரே ஒரு வாரிசு கனகசபைப்பிள்ளை. ஊர்மக்களின் வறுமையையும் அறியாமையையும் பயன்படுத்தித் தன் சொத்துக்களைப் பெருக்கிக் கொள்வதே அவருடைய தொழில். அதனால், ஊரிலுள்ள வயல்களெல்லாம் வெகு விரைவில் அவருக்குச் சொந்தமாகிவிட்டன.

கிராமத்து ஏழை மக்களெல்லாம் அவடைய தயவிலேயே வாழ வேண்டிய நிர்ப்பந்தங்கள்.

தலை நகரிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் பிரமுகர்கள் பலர் அவரை நாடி அடிக்கடி வருவதுண்டு. அவரவர்க்கு ஏற்றபடி நடந்து நல்ல பெயரைச் சம்பாதித்து விடுவதில் அவர் கைதேர்ந்தவர்.

அவர்கள் மத்தியில், அவர் ஒரு தர்மப் பிரபு.

என்ற அபிப்பிராயமே நிலவியது.

“எங்கள் கர்மவினை, இந்தக் கருமியின் தயவிலே வாழ வேண்டியிருக்கிறது.” என்ற ஊர் மக்களின் அபிப்பிராயம் அந்தப் பிரமுகரின் காதுகளுக்கு என்றுமே எட்டவில்லை.

•

“டேய், சின்னான்...”

கனகசபை கர்ச்சித்தார்.

பசிக்களையாற் சோர்ந்துபோய் அரைத் தூக்கத்திலிருந்த சின்னத்தம்பி, திடுக்குற்று விழித்தான்.

சற்று முன்னர் மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்றவர் திடீரென்று இப்படி மாறிவிட்டாரே!

நடுங்கும் கரங்களால், அங்கிருந்த தூணைப் பிடித்தபடி உள்ளே பார்த்தான்.

கனகசபைப் பிள்ளையைப் பேட்டி காண வந்திருந்த பத்திரிகை நிருபர்கள் எவருமே இப்போது அங்கில்லை!

“இவ்வளவு நாளும் எங்கையடா போனனி? உன்ரை குஞ்சியப்பனே உனக்குச் சம்பளம் தாறவர்?”

கனகசபையின் கர்ச்சனை தொடர்ந்தது.

“ஓண்டரை மாசமாய் காச்சல்லை கிடந்தனான். ஐயா, பொன்னி இப்பவுந்தான் கிடையாய்க் கிடக்கிறாள் ஐயா... கஞ்சித்தண்ணி வைக்கிறதுக்குக் கூட வீட்டிலை அரிசி இல்லை... அதுதான்... உங்களை ஒருக்காப் பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தன் ஐயா.”

அவருடைய குரல் அடித்து விரட்டிய நம்பிக்கையை ஒருவாறு இழுத்துப் பிடித்துக் கொண்டு தன் கீச்சுக் குரலிலே கெஞ்சினான் சின்னத்தம்பி.

ஒன்றும் பேசாமல், அவர் அவனைப் பார்த்த பார்வை அவனை நடுங்க வைத்தது.

சிறிது நேரம் செல்ல கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டார்.

அவனுடைய உள்ளம் குளிர்ந்தது.

‘பார்வையிலும் பேச்சிலும் கொடூரம் இருந்தாலும், உள்ளே அவரிடம் இரக்கம் இருக்கின்றது.’

உடம்பின் நடுக்கம் சிறிதுசிறிதாகக் குறையத் தொடங்கியது.

இவன்ரை கணக்கெல்லாத்தையும் சரியாகப் பாத்துச் சொல்லும்.

ஓடோடி வந்த கணக்குப்பிள்ளைக்கு உத்தரவிட்டார் கனகசபை.

எள் என்பதற்கு முன் எண்ணெயாய் நிற்கும் கணக்குப்பிள்ளை, கையில் தயாராக வைத்திருந்த கணக்குப் புத்தகத்தைத் திறந்தார்.

“சம்பளப் பணம் ஒரு சதமும் பாக்கியில்லை. ஒன்றரை மாதமாக வேலைக்கு வராமலே, எங்கள் தோட்டத்தைச் சேர்ந்த குடிசையில் வாழ்ந்திருக்கிறான். அதனால் அவன்தான் பதினைந்து ரூபா எங்களுக்குக் கொடுக்க வேண்டும்.”

முதலாளிக்கு ஏற்ற முறையான கணக்குப் பிள்ளை தன் நிர்வாகத் திறமையை வெளிக் காட்டினார்.

“சின்னான்! கேட்டியோ?”

“உங்கள் உப்பைத் தின்று வளர்ந்தவன் நான். இண்டைக்கு மட்டும் அரைக் கொத்தரிசி குடுங்கோ, போதும். என்ரை காய்ச்சல் மாறினாப் பிறகு உழைச்சு, உங்க கடை கடனை அடைப்பன் ஐயா!”

அவனுடைய வேண்டுகோள் கனகசபையின் காதுகளில் விழுந்ததாகவே தெரியவில்லை.

உன்ரை காய்ச்சல் எப்ப மாறப்போகுது? எப்பிடி உழைக்கப் போறாய்? இன்னும் பதினைஞ்சு நாள் நான் தவணை தாறன். எங்கடை தோட்டக் குடிசையை விட்டு வெளியேறிவிட வேணும்.”

“அப்பிடிச் சொல்லாதேயுங்கோ ஐயா! இந்த நிலையிலை நான் எங்கை போறது? இவ்வளவு காலமும் நான் உங்களுக்காகத்தான் உழைச்சனான்... இனி நான் ஆரிட்டைப் போறது? இந்த நிலையிலை என்னாலை எப்பிடி ஐயா வேலை செய்ய ஏலும்?”

கனகசபை மசியவில்லை.

நடக்கவிருக்கும் அன்னதானத்தைப் பற்றிக் கணக்குப்பிள்ளையை விசாரிக்கத் தொடங்கிவிட்டார்.

கொண்டுவந்த ஓலைப் பெட்டியை அங்கேயே போட்டுவிட்டு, நடக்க முடியாமல் நடந்தான் சின்னத்தம்பி.

•

தலைநகரிலுள்ள பிரபல ஹோட்டலொன்றிலே சொகுசாகத் தூங்கிய கனகசபையை ஆலய மணிகளும் பீரங்கி வெடிகளும் எழுப்பின.


அன்றுதான் நாடு பூரண சுதந்திரம் கொண்ட குடியரசாக மலர்ந்தது.

சோம்பலை முறித்துக்கொண்டு எழும்பினார் கனகசபை. காலைத் தேனீரும் அன்றைய பத்திரிகைகளும் அவரை வரவேற்றன.

அன்னிய அரசாங்கம் அளித்த பட்டத்தைத் துறந்த அவரைப் பாராட்டிப் பத்திரிகைகள் எல்லாம் பந்தி பந்தியாக எழுதியிருந்தன. வெவ்வேறு கோணங்களிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

தொடர்தல் 88ம் பக்கம்

# 'சிற்பி' சிவசரவணபவன்: சில நினைவுகள்



**பொ. சண்முகநாதன்:**

**ஈழத்தின் மூத்த நகைச்சுவை எழுத்தாளர். ஈழத்துப் பத்திரிகைகள் பலவற்றில் நகைச்சுவைக் கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் எழுதியதோடு, அவற்றை நூல்களாகவும் வெளியிட்டவர். சிற்பியுடன் நெருக்கமாகப் பழகி வந்தவர்.**

*கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்*

முதறிஞர் - மூத்த எழுத்தாளர் - கேட்டார்ப் பிணிக்கும் தகைய இலக்கியச் சொற்பொழிவாளர், 'சிற்பி' சிவசரவணபவன் கடந்த நவம்பர் 09ஆம் நாளன்று காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் அவரது வாழ்விடமான கந்தரோடையில் நடைபெற்றது. இறக்கும்போது அவருக்கு வயது எண்பத்திரண்டு.

சிற்பி அவர்களுடன் சேர்த்துச் சொல்லப்படுகின்ற இன்னொரு பெயர் 'கலைச்செல்வி' சஞ்சிகையாகும். 1958 - 1966 காலப் பகுதியில் கலைச்செல்வி மூலம் பல எழுத்தாளர்களை உருவாக்கித் தந்த பெருமை அவருக்கேயுரியது. வெறுமனே உருவாக்கியவர் என்பதைவிட, 'ஞானம்' ஆசிரியர் குறிப்பிடுவதைப் போல 'எழுத்துலகத்துக்குப் பலரைச் செதுக்கியெடுத்த இலக்கியச் சிற்பி' அவர் என்பதே பொருந்தும்.

இப்பொழுது சில பத்திரிகை ஆசிரியர்கள் செய்வது போல, எழுத்தாளர்கள் அனுப்புவதை அப்படியே பிரசுரித்து உதவுவது என்றில்லாமல், கிடைக்கும் சிறுகதை போன்ற ஆக்கங்களைத் திருத்தியும் மெருகிட்டும் பிரசுரிப்பார். எழுத்து நடையானது சிக்கலற்றும், தெளிந்த நீரோடை போன்றும் இருக்க வேண்டும் என்பது சிற்பியின் கருத்தாகும்.

'கலைச்செல்வி' பற்றி இலக்கிய உலகில் பேசப்படுவதற்கும் - 'கலைச்செல்வி' மீண்டும் வெளிவர வேண்டும் என்ற குரல் எழுவதற்கும் சிற்பி அவர்களின் இத்தனித்துவம்தான் காரணம் எனலாம்.

•

சிற்பி அவர்களின் இலக்கியப் பணிகளுக்காகக் கிடைத்த கௌரவங்களாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டு அமைச்சின் 'அளுநர் விருது' (2002), கொழும்பு கம்பன் கழகத்தின் 'சான்றோர் விருது' (2006), வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் 'ஞான ஏந்தல்' விருது (2006) என்பவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பிடத்தக்க சேவையாற்றிய பலருக்கும் கிடைக்கும் 'கலாபூஷணம்' விருது சிற்பி ஐயாவுக்குக் கிடைக்காமல் போனது ஏன்?

எனக்கு வந்த 2008ஆம் ஆண்டுக்கான 'கலாபூஷணம்' விருதுக்கான விண்ணப்பத்தினை சிற்பி ஐயாவிடம் காட்டினேன். முதறிஞரான அவருக்குக் கிடைக்காத அந்த விருதுக்கு நான் எப்படி முந்திக்கொண்டு விண்ணப்பிப்பது என்ற எனது ஆதங்கத்தை அவரிடம் வெளியிட்டேன். அதற்கவர், தாம் விருதுகளை விண்ணப்பித்துப் பெறுவதில்லை என்ற கொள்கையுடையவர் என்றும், என்னை அதற்கு விண்ணப்பிக்குமாறும் ஆசி வழங்கினார்.



அத்துடன், 'கலாபூஷணம்' விருது எனக்குக் கிடைத்ததும், அச்செய்தியை எனக்குமுன் அறிந்து சிற்பி அவர்கள் எனக்குத் தெரிவித்ததுடன் பாராட்டியும் மகிழ்ந்தார். (எமக்குச் சற்று அருகில் இருந்தவர்களான சிற்பி - சிவசரவணபவன் - அவரது மாமனார் வைதீஸ்வரக் குருக்கள் எல்லாரும் 'நிஷா' வெள்ளம் புயல் காரணமாக அப்போது யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்திருந்த காலம்).

'இது சிற்பி அவர்களின் பெருந்தன்மைக்கும் தமது கொள்கையை மற்றவர்களிடம் வலிந்து திணிக்காத பண்பாட்டுச் சிறப்புக்கும் எடுத்துக்காட்டு எனலாம்.

•

சிற்பி ஐயா கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக கொழும்பில் தனது இளைய மகன் சர்வேஸ்வரனின் இல்லத்தில் தங்கியிருந்து தொடர்ச்சியான வைத்திய சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அதனால் இங்கு அவரில்லாத இலக்கிய உலகு களையிழந்திருந்தது. அவர் அவ்வப்போது இங்கு வந்தாலும் அதிக நாட்கள் தங்கியிருப்பதில்லை.

சென்ற பெப்பிரவரி மாதத்தில், அவரது இல்லத்துக்கு அருகேயுள்ள வற்றாக்கைப்பதி அருள்மிகு விசாலாட்சி அம்பாள் கோவில் குடமுழுக்கு விழாவுக்காக வந்திருந்தார். உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் அங்கு அவர் நிகழ்த்திய அருளுரை எம்மனதைவிட்டு அகலவில்லை.

அதனையடுத்து மீண்டும் அவர் இங்கு வந்தபோது - சித்திரை 25ஆம் நாளன்று அவரது தாய்மாமனாரும் அவரது ஆளுமையை வளர்ப்பதில் பெரும் பங்களித்தவருமான சிவத்திரு. க. வைதீசுவரக் குருக்கள் மறைந்தார். அத்துயரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட சிற்பி ஐயா அவர்கள் கலங்கிய கண்களுடன் இரங்கலுரை ஆற்றினார்.

கலைச்செல்வி வெளியீட்டில் பெரும் பாங்காற்றிய உதயணனின் 'பின்லாந்தின் பசுமை நினைவுகள்' என்ற நூல் வெளியீடு ஜுன் 21, 2015இல் கனடாவில் நடைபெற்றது. அதற்கு 'சிற்பி'யின் வாழ்த்துரையை விரும்பிய அங்குள்ள 'தாய்வீடு' வெளியீட்டாளர்கள், அதனைக் கொழும்பிலே வைத்து ஒளிப்பதிவு செய்தனர். ஐயா படிப்படியாக நினைவாற்றலை இழந்து வந்ததால், அந்தப் பதிவை மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்தார்களாம். இருந்தபோதும், கனடா வெளியீட்டு நிகழ்வில் அது பலரும் பாராட்டும் வகையில் சிறப்பாக அமைந்துவிட்டதாம். அந்தச் செய்தியை நான் ஐயாவுக்குச் சொல்ல முற்பட்டபோது... அவர் இயலாமையால் பாதிக்கப்பட்டிருந்தார்... மனைவி சரஸ்வதியிடமே நான் அதனைச் சொல்ல முடிந்தது.

கடைசியாக ஒரு நாள், அங்கு அவர் சுவாமி அறையிலே, படத்துக்கு முன் நின்று தேவாரம் பாட முற்பட்டிருக்கிறார். அந்தோ, அவருக்கு எதுவுமே நினைவுக்கு வரவில்லை. "எல்லாமே போய்விட்டது" என்றவாறு படுக்கையில் விழுந்தவர்தான் இறுதிவரை அதே நிலைதான்.

சிற்பி ஐயாவின் இறுதிச் சடங்கு கந்தரோடையில் தீபாவழி நாளாகவும் கௌரி நோன்புக் காலமாகவும் இருந்தது. இருந்தும் பெருந்திரளான மக்கள் - அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் - அவரின் மறைவால் எமக்கும் 'எல்லாமே போய்விட்டது' என்ற உணர்வுடன் பங்குபற்றியமை மனங்கொள்ளத்தக்கது.

■ ■ ■

# மக்கள் தொண்டு...

87ம் பக்கத் தொடர்ச்சி...

"ஐயா! இண்டைக்கு அன்னதானம் செய்யிறது கஷ்டமாயிருக்கும் போல கிடக்குது."

பத்திரிகைகளுக்குட் புதைந்திருந்த அவரை இவ்வுலகிற்கு மீட்டான் அவருடைய வேலையாள் ஒருவன்.

அவருடை மீசை துடித்தது.

"ஏன்? இன்னும் ஆயத்தமொண்டும் செய்யேல்லையோ?"

"அப்பிடி ஒண்டும் இல்லை ஐயா... குடியரசு விழாவுக்காக வெளிநாடுகளிலையிருந்து பெரிய பெரிய ஆக்கள்ளெல்லாம் இஞ்சை வந்திருக்கினமாம்...இஞ்சையுள்ள பிச்சைக்காரரையும் ஏழையளையும் வேறை எங்கையோ கொண்டுபோய் வைச்சிருக்கினமாம்."

கனகசபையின் கோபம் 'சட்'டென்று தணிந்தது.

மூளை மீண்டும் சுறுசுறுப்படைந்தது.

'அன்னதானம்' அவருடைய மனத்தை விட்டகல, அந்த இடத்தில் 'குடியரசு தின விருந்து' வந்து அமர்ந்து கொண்டது.

தன் பணப் பையை அவிழ்த்தார். நகரத்தின் வீதிகளிலே அவருடைய நாணயங்கள் உருண்டு சென்று பலதரப்பட்ட பிரமுகர்களை விருந்துக்கு அழைத்தன.

கனகசபைப்பிள்ளை அளிக்கும் விருந்து என்றால், அதில் விரும்பியதெல்லாம் கிடைக்கும் என்பது பலரின் இனிய அனுபவம். ஆகவே, அழைக்கப்பட்ட விருந்தினர் அனைவருமே, தங்களுக்கிருந்த ஏனைய வேலைகள் கடமைகள் எல்லாவற்றையும் தள்ளிப் போட்டனர்.

மாலை வந்தது. தலைநகரின் வீதிகளெல்லாம் கனகசபையின் விருந்து நடக்கும் ஹோட்டலுக்கே அனைவரையும் கொண்டு சென்றன.

தனது குறுகியகால அழைப்பைக் கௌரவித்து, அமைச்சர்கள், திணைக்களத்தலைவர்கள், கம்பனி முதலாளிகள் எனப் பலர் வந்ததைக் கண்டு பெருமைப்பட்டுக் கொண்டார்.

மாலைத் தினசரிகளில் வந்த விசேட செய்தியொன்று மகிழ்ச்சியின் உச்சிக்கே அவரை இட்டுச் சென்றுவிட்டது.

அவருடைய நீண்ட காலப் பொதுச்சேவையைக் கருத்திற் கொண்ட சுதந்திர அரசாங்கம், 'லங்கா ரத்தினம்' என்ற பட்டத்தின் மூலம் அவரைக் கௌரவிக்கத் தீர்மானித்துவிட்டதாம்.

விருந்து வைபவம் இரவு முழுவதும் நீடித்தது. மகிழ்ச்சிக்கடலில் மிதந்தார் கனகசபை, வந்திருந்தவர்களின் பாராட்டுகளால் திக்கிமுக்காடிப் போனார்.

"நீங்கள் கட்டாயம் அரசியலுக்கு வரவேண்டும். நாடு முழுவதிலும் உங்களின் சேவையைப் பரவலாக்க வேண்டும்" என அமைச்சர் ஒருவர் சொன்னது கனகசபையின் கற்பனைகளை வெகுவாகத் தூண்டிவிட்டது.

ஊருக்குப் போய், நிலைமையை ஆராய்ந்து பார்க்க அவர் உள்ளம் துடித்தது.

•

முன்பே அறிவித்தபடி, ஊரின் எல்லையில் ஊர் மக்களும் பிரமுகர்களும் அவரின் வருகைக்காகக் காத்திருந்தனர். காரில் வந்து இறங்கிய அவர், அலங்கரிக்கப்பட்ட 'ஜீப்' ஒன்றில் ஏறினார்.

மலர் மாலைகள் மலையெனக் குவிந்தன.

அவருடைய பங்களாவை நோக்கி ஊர்வலம் புறப்பட்டது. நாதஸ்வர வித்வான்கள் கான மழை பொழிய, வாண வேடிக்கைகள் தொடர, வீதியின் இரு மருங்கிலும் பூரண கும்பங்களுடன் மக்கள் வரவேற்க, 'ஜீப்'பில் நின்றபடியே நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொண்டார் அவர்.

மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்த ஊர்வலம் திடீரென ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. மங்கல வாத்தியம், வாணவேடிக்கை எல்லாமே நிறுத்தப்பட்டன.

எதிரே யாரோ சிலர், எவ்வித ஆரவாரமும் இன்றிப் பாடை ஒன்றைச் சுமந்தபடி வந்து கொண்டிருந்தனர்.

அனைவரின் கண்களும் கனகசபையையே நோக்கின.

என்றுமே இறுமாப்புடன் தலைநிமிர்ந்து நிற்கும் கனகசபைப்பிள்ளை தலையைக் குனிந்தபடி வேறொருவனுக்கு வழிவிடுவது அன்று தான் முதல் தடவை!

வேறு எவராலும் செய்ய முடியாத ஒன்றைத் தான் சாதித்துவிட்டதை அறிய முடியாமலே 'சின்னத்தம்பி' மெல்ல மெல்லச் சென்று கொண்டிருந்தான் அந்த பாடைக்குள் கிடந்தபடி!

*நன்றி: ஈழகேசரி*

■ ■ ■

# நிலா முற்றம்...

87ம் பக்கத் தொடர்ச்சி...

யிருந்தார். நான் வீரகேசரியைக் கேட்டேன். தாங்களே அவைகளைத் தொகுக்கப் போவதாகவும் வேறு தொகுதியில் வர அனுமதிக்க முடியாது என்றும் கூறி விட்டார்கள். இந்தத் தொகுதி பற்றிக் கூறுகையில் எனக்கு அந்த நினைவும் எழுகிறது.

1958ல் ஈழகேசரிக்கு ஒரு கட்டுரை கொடுக்கின்றார் சிற்பி. 'இந்தியப் பத்திரிகைகளும் ஈழத்து எழுத்தாளர்களும்' என்னும் அந்தக் கட்டுரை ஈழத்து எழுத்தாளர்கள் இன்னும் எத்தனை காலத்துக்கு இந்தியப் பத்திரிகைகளை நம்பி இருக்க முடியும். நாமே நமக்கான பத்திரிகைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் மையக்கரு. அவருடைய இதழியல் சிந்தனை காரண காரியங்களுடன்தான் மேற்கிளம்பி இருக்கின்றன.

ஈழத்தமிழர்கள் இந்தியத்தமிழ் இலக்கியங்களுடன் லயித்திருந்த அந்த இலக்கியப் பாரம்பரியத்தின் ஒரு நீட்சியே நமது இலக்கியம் என்று எண்ணிக் கிடந்த காலம் ஒன்றிருந்தது.

1956ல் பண்டாரநாயக்கவின் ஆட்சி மாற்றம். இந்த இந்திய மயக்கங்களை உடைத்தது. 1958ன் இனக்கலவர அடி, நமக்காக நாம், நமக்கென பாரம்பரியமிக்க பண்புகள், நமக்கான இலக்கியம் என்னும் உணர்வுகளுக்கு உருவம் கொடுத்தது. நமது எழுத்தாளர்கள் நமது இலக்கியம் நமது பத்திரிகைகள் என்று ஏங்கிக் கிடந்த சிற்பியும் இந்த உணர்வின் உருவங்களுடன் தன்னை இணைத்துக் கொண்டவர்.நமக்கான பத்திரிகைகள் தோன்ற வேண்டும் என்று தான் கட்டுரை வரைந்த ஈழகேசரியும் ஓய்ந்து விட்ட சோகத்துடனும் சோர்வின்றி கலைச்செல்வியை நடத்த முன்வந்தவர்.

கொழும்பின் 1958ம் ஆண்டு இனக்கலவரம் களுத்துறையில் இருந்து துரத்தி விட்ட உதயனன் அவர்களும் கோண்டாவிலைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்பவரும் 1958 மேயில் சிற்பியைச் சந்தித்து உரையாடியதால் உருவானது கலைச்செல்வி. 1958ல் இருந்து 1966 வரையிலான எட்டாண்டுகளில் ஏறத்தாழ எழுபது இதழ்களை வெளியிட்டு இதழியல் சாதனை புரிந்த சஞ்சிகை கலைச்செல்வி.

களுத்துறை தமிழ்க் கழகம் என்ற அமைப்பு வெளியிட்ட சஞ்சிகை ஈழதேவி. யாழ்ப்பாணம் உசனைச் சேர்ந்த பண்டிதர் த. சுப்பிரமணியம் ஈழதேவியின் ஆசிரியராக இருந்தவர். உதயணனின் ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் ஈழதேவியை வளர்த்து விட்டது. 1958 மே மாதத்துக்கு பிறகு களுத்துறையிலிருந்து ஈழதேவியை வெளியிட முடியாத சூழ்நிலையிலேயே இவர்கள் சிற்பியைத்தேடி வந்திருந்தார்கள் என்பது முக்கியமானது.

கலைச்செல்வியின் இதழியல் வரலாறு தனியாக ஆராயப்பட வேண்டியது. மூன்று சிறுகதைத் தொகுதி. ஒரு நாவல். இவர் தொகுத்து வழங்கிய இரண்டு சிறுகதைகளின் தொகுப்பு ஆகியன நூலுருவில் வந்தவை.

வடகிழக்கு மாகாண (2002) ஆளுநர் விருது. கொழும்பு கம்பன் கழக விருது 2006 உட்பட பல விருதுகள் பெற்றுள்ள சிற்பியின் பவள விழாவினை முன்னிட்டு ஞானம் சஞ்சிகை ஒரு சிறப்பிதழை 2008 ஜூனில் வெளியிட்டிருக்கிறது.

2012ல் சிற்பி அவர்கள் கொழும்பு கொட்டாஞ்சேனையில் மகனுடன் தங்கி இருந்த போது அன்னலெட்சுமி அவர்களும் நானும் சென்று உரையாடிக்கொண்டிருந்தோம். இருக்கும் இடம் தெரிந்தபடியால் தனியாகதான் இரண்டொரு தடவைகள் சந்தித்தேன்.

கலைச்செல்வி பற்றி உரையாடிய போது அவர் முயற்சித்த மலையக மலர் வெளியிட முடியாதது பற்றி மனம் வருந்தினார். இரண்டு மூன்று இதழ்களில் மலையகச் சிறப்பிதழ் பற்றிய அறிவிப்புக்கள் வந்திருந்தன. யார் யார் எழுதுகின்றார்கள் என்றெல்லாம் குறித்திருந்தார். என்னிடமும் ஒரு சிறு கதை கேட்டு வாங்கியிருந்தார்.

கணக்கு என்று ஒரு கதை அனுப்பி வைத்திருந்தேன். பிரதி என்னிடம் இல்லாததால் அந்தக் கதை வேறு எதிலும் வர முடியாமல் போய்விட்டது.

கலைச்செல்விக்காக நான் எழுதிய அந்தக் கதைபற்றி அவர் பிரஸ்தாபித்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"எனது நண்பர் புதிதாக ஒரு இதழ் ஆரம்பித்தார் தெளிவத்தை. அறுபதுகளின் கடைசியாக இருக்கலாம். உங்கள் கணக்கு கதையை அவரிடம் கொடுத்துப் போடச் சொன்னேன். வெளியிட்டிருந்தார். வரதரின் புதினம் போல் வந்திருந்த ஏடு அது. உங்கள் விலாசம் கொடுத்து உங்களுக்கொரு பிரதி அனுப்பச் சொன்னேன். அனுப்பினாரா" என்றும் கேட்டார்.

எத்தனை ஆண்டுகளின் பின் நேற்று நடந்தது போல் பேசிய அந்த தோரணை என்னைத் தூக்கி வாரிப்போட்டது. எத்தனை மகத்துவம் மிக்க இதழியலாளர் அவர். அப்படி ஏதும் எனக்குக் கிடைக்கவில்லை என்பதை நான் அவருக்கு கூறவில்லை.

ஒரு இதழுக்கு மேல் அது வரவில்லை என்றவர் தன்னிடம் சில கலைச்செல்வி இதழ்கள் இல்லை என்றும் என்னிடம் உள்ளவைகளை தரமுடியுமா என்றும் கேட்டார். என்னிடம் இருப்பதை விட உங்களிடம்தான் அவைகள் இருக்க வேண்டும் என்று கூறினேன்.

விடை பெற்ற என்னை "கொஞ்சம் இருங்கள் என்று உள்ளே போய் திரும்பி வந்தவர் உதயணனின் சிறுகதை தொகுதிகளான பிரிந்தவர் பேசினால், உங்கள் தீர்ப்பு என்ன? ஆகியவற்றின் சில பிரதிகளைக் கொடுத்து குறிப்பெழுதுங்கள் என்றார்.

மறுநாளே என்னிடம் இருந்த கலைச் செல்வி இதழ்களைக் கொண்டு போய்க்கொடுத்தேன்.

நல்லவேளை வந்தீர்கள். நாளை மறுநாள் ஊருக்குப் போகின்றேன். இனி எப்போது வரக்கிடைக்குமோ தெரியவில்லை என்றார்

இந்த வருடம் (2015) ஜூலையில் தாய்வீடு ஆசிரியர் பேசினார்.

சிற்பி கொழும்பில் இருப்பதாகவும் சந்தித்து ஓர் நேர்காணல் எடுக்கும்படியும் கூறினார். சிற்பியின் தொலைபேசி எண்ணையும் தந்தார்.

சிற்பி முன்பு நாம் சந்தித்த கொட்டாஞ்சேனை வீட்டில் இல்லை தெஹிவளையில் இருப்பதாகவும் உடல் நலக் குறைவாக இருப்பதாகவும் பார்க்க முடியும் என்று தான் நம்பவில்லை என்றும் அன்னலட்சுமி (யாழ் நங்கை) கூறினார்.

தொலைபேசியூடாக அவருடன் பேசுவதற்கான எனது முயற்சிகள் எதுவும் பயனளிக்காத நிலையில் நவம்பர் பத்தாம் திகதி என்னை தொலைபேசியில் அழைத்த அன்னலட்சுமி அவர்கள் சிற்பி மறைந்து விட்ட துயரைப் பகிர்ந்து கொண்டார். டிலிப்குமார் அவர்களுக்காகவும் வருத்தப்பட்டேன். இலக்கிய உலகிற்கு ஒரு பேரிழப்பு இது.



theliwathai.joseph@thaiveedu.com





Diploma Programs

- Computerized Accounting
  - New Batch starts Every Month
- Food Service Worker
- Office Administration
- Accounting and Payroll

Automation Technology

- PLC Programming
- HMI Programming
- VFD - Drive Programming
- Industrial Control & Comm.

New !

CAD/CAM Technology

- Auto CAD
- SolidWorks
- MasterCAM
- Inventor
- CNC Programming

Certificate Programs

Electrical Exam Prep Course

Computer Technology

- PC Technician (A+)
- Programming
  - C/C++, Visual Basic, Java
- SQL Database
- Web Development
- LINUX systems
- CISCO
- Android App Development

Accounting Softwares

- QuickBooks
- Simply Accounting
- Accpac

Microsoft Office Apps

- Word
- Excel
- PowerPoint
- Outlook

Multi-Media

- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress
- 3D Animation

- Bank Teller
- Cashier Course
- Income Tax Course
- Food Handler Certificate

November 07, 2015

(All Certificate Courses are taught individually and each courses are less than 40hrs)

Second Career Funding

Covers tuition, living, transportation expenses upto $28,000 for those qualify

EI or Laid off?

beta College of Business & Technology

Visit us: www.betacollege.ca

Location: Bellamy & Ellesmere

416-449-2382

info@betacollege.ca

1085 Bellamy Road #208

Toronto ON

# Dr. REFINANCE

## Dr. ரீபைனான்ஸ்



புற்றுநோயாக புரையோடிக்கிடக்கும்
உங்களின் பண நெருக்கடியை விசேட
**அறுவைச்சிகிச்சை**
மூலம் அறவே ஒழித்து ஆரோக்கியமான
வாழ்வைப்பெற அழையுங்கள்

**MORTGAGE:** Home equity Loan, 2nd Mortgage and other financial needs.

$ **1000.00** முதல் ஒரு லட்சம் வரை மோட்கேஜ் பிரேக் ஆகாமல் கடனாக பெறவும் 68 பேமன்ற்ஸ்களையும் ஒரே பேமன்றாக செய்யவும்



**சிவா இரத்தினசிங்கம்**

Brokerge # 1156, Licence M08882133

**416.520.1214 | 416.430.0111**

**2857, Lawrence Ave. Unit - 6. Scarborough.**



# Dr. REFINANCE

## Dr. ரீபைனான்ஸ்

# "புறநானூறு மீதான விமர்சனமே திருக்குறள் என்பார் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை"

## - நா. சுப்பிரமணியன்

### நேர்காணல்: அருண்மொழிவர்மன்

ஈழத்தமிழர்களின் மிக முக்கியமான புலமையாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தமிழ் மொழியிலும் சாசனவியலிலும் மதங்கள் பற்றியும் ஆழ்ந்த புலமைகொண்டிருந்தார். தனது 28வது வயதிலேயே இரண்டு கலாநிதிப் பட்டங்களைப் பெற்றிருந்த அவர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர். 1936ல் புலோலியில் பிறந்த இவர். தனது ஆரம்பக் கல்வியை புலோலித் தமிழ்ப்பாடசாலையிலும் பின்னர் ஹாட்லிக் கல்லூரியிலும் கற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் கடமையாற்றியவர். 1984 முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் கடமையாற்றியவர். இது தவிர கேரளப் பல்கலைக்கழகத்திலும் திராவிட மொழியியல் நிறுவனத்திலும் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் அரிசோனாப் பல்கலைக்கழகத்திலும் எடின்பர்க் பல்கலைக்கழகத்திலும் ஆய்வாளராகவும் பேராசிரியராகவும் கடமையாற்றியவர்.

79 வயதில் - கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி இவர் அரிசோனாவில் காலமான போது அறிவுப்புலம் சார்ந்தவர்கள் மத்தியில் அவர் பற்றிய நினைவுப்பகிர்வுகளும், பொது மக்கள் மத்தியில் கனத்த மௌனமும் நிலவியதை அவதானிக்க முடிந்தது.

அவர் பற்றி மேலதிகமாக அறிந்து கொள்ளும் பொருட்டு ரொறன்ரோவில் தற்போது வாழ்ந்து வருபவரும், பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையை 50 ஆண்டுகளுக்கு மேலாக அறிந்தவருமான பேராசிரியர் நா. சுப்பிரமணியனைத் தொடர்புகொண்டோம். எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தாய்வீடு வாசகர்களுக்காக பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை பற்றிய தன் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளுகின்றார் பேராசிரியர் நா. சுப்பிரமணியன்.

கற்றாரைக் கற்றாரே காமுற்ற தருணம் அது!


**கல்விப்புலம் சார்ந்த ஈழத்து ஆளுமைகளில் மிக முக்கியமான ஒருவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை. அவரது மாணவராகக் கல்வி கற்ற நீங்கள் அவருடன் தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணியும் வந்துள்ளீர்கள். உங்களுக்கும் அவருக்குமான உறவு எப்படி ஆரம்பித்தது?**

பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் எனது ஆசிரியர். 1965ம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நான் முதலாண்டு கற்றுவிட்டு 1966ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக் கற்கச் சென்றபோது எனக்குத் தமிழ் கற்பித்தவர் அப்போது விரிவுரையாளராக இருந்த ஆ. வேலுப்பிள்ளை அவர்கள். அவரிடம் நான்கு ஆண்டுகள் கற்றிருக்கின்றேன். அவருடன் சமகாலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இரண்டாண்டுகள் ஆசிரியராகக் கற்பித்திருக்கின்றேன். அதன்பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 84ம் ஆண்டு முதல் 90ம் ஆண்டு வரையும் அவரின் கீழ் தமிழ்த்துறையில் பணியாற்றியிருக்கின்றேன். அதன் பின்னர் அவர் சுவீடனில் இருக்கின்ற உப்சலாவில் பணியாற்றிவிட்டு 95ம் ஆண்டளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வந்திருந்தபோது கிட்டத்தட்ட 3 மாதங்கள் பணியாற்றி இருக்கின்றேன்.

**நீங்கள் கல்விகற்ற அந்தக் காலப்பகுதியில் அங்கு பல்வேறு முக்கியமான பேராசிரியர்கள் கடமையாற்றினார்கள் அல்லவா. இவர்களில் தனது ஆய்வுமுறை சார்ந்தும், ஆய்வுப் புலம் சார்ந்து பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை மற்றையவர்களிடம் இருந்து எந்த விதத்தில் வேறுபடுகின்றார்?**

நாங்கள் பேராதனையில் கல்விகற்ற காலங்களில் அங்கே சு.வித்தியானந்தன், கைலாசபதி, தனஞ்ஜெயராஜசிங்கம், ஆ. வேலுப்பிள்ளை, சிவத்தம்பி ஆகியோர் கற்பித்தார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான ஆளுமை கொண்டவர்கள். இவர்களில் ஆ. வேலுப்பிள்ளை அவர்களை எடுத்துக்கொண்டால் அவர் எந்த விடயம் குறித்தும் தத்துவார்த்தமாக அணுகுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். அவருக்கு சமணம், பௌத்தம் ஆகிய தத்துவங்களில் ஆழமான அறிவு இருந்தது. பின்னாட்களில் பீற்றர் ஷாக் உடன் இணைந்து அவர் செய்த வேலைத்திட்டங்களிலும் இந்த ஆழமான அறிவு அவருக்குக் கைகொடுத்தது. இலக்கியங்களைப் பொறுத்தவரை அவரது பார்வை இலக்கியங்களின் ஊடான சிந்தனை மரபின் வளர்ச்சியை நோக்கியதாக இருந்தது, அதுபோல இலக்கணத்தைப் பொறுத்தவரை அவரது பார்வை வரலாற்றிலக்கணப் பார்வை.

இலக்கிய வரலாறு தொடர்பாக வெளியான அவரது முக்கியமான நூல் "தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்". இன்றுவரை தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாக வெளிவந்த முக்கிய நூல்களில் ஒன்றாகவும், பலரது சிந்தனை தளத்தினை உருவாக்கிய நூலாகவும் நான் இதனைக் கருதுகின்றேன். பிற்காலத்தில் நானும் துணைவியாரும் எழுதிய இந்தியச் சிந்தனை மரபின் வளர்ச்சி என்கிற நூலுக்கு உந்துதலாக அமைந்ததுவும் பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் எழுதிய தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும் என்ற நூலே.



பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை

**ஆனாலும் அவரது பிரதான ஆய்வுகள் சாசனவியல் சார்ந்தன அல்லவா? பாண்டியர்காலக் கல்வெட்டுகளில் தமிழ்மொழி நிலை என்பதுதானே அவரது கலாநிதி பட்டத்திற்கான ஆய்வு?**

நிச்சயமாக! பேராசிரியர் வேலுப்பிள்ளையின் தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், தமிழ் மொழியின் வரலாற்றிலக்கணம் ஆகிய முக்கியமான நூல்களைக் குறிப்பிடும் போது அவற்றுடன் சேர்த்து அவருக்கு சாசனவியலில் இருந்த புலமையையும் குறிப்பிடப்பட வேண்டும். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அவர் 1959ல் அவர் சிறப்புத் தகுதியுடன் சித்தியடைந்து துணை விரிவுரையாளராகப் பணியேற்கும்போதே அவர் கலாநிதி பட்டத்திற்கான ஆய்விற்கும் பதிவுசெய்கின்றார். அப்போது முதல் வகுப்பில் சித்தியடைந்தால் முதுகலைமாணி பட்டம் பெறாமலே கலாநிதி பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொள்ளலாம் என்று இருந்தது. அவர் முதலாவது வகுப்பிலும், முதலாவது மாணவராகவும் சித்தியடைந்தார். அவரது அந்த ஆய்வானது நீங்கள் குறிப்பிட்டது போலவே சாசனவியல் சார்ந்தது. அவர் சாசனவியல் சார்ந்து தன் கலாநிதி ஆய்வினைச் செய்யக் காரணமாக இருந்தவர் அதற்கு முன்னரே சாசனவியல் சார்ந்து தன் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினைச் செய்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை. கலாநிதிப் பட்டத்திற்கான தனது ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்த பின்னர் அவருக்கு இங்கிலாந்து வரும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அங்கு புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் 1962 முதல் 1964 வரையான காலப்பகுதியில் அங்கும் ஒரு ஆய்வினைச் சமர்ப்பித்து கலாநிதிப்பட்டத்தினைப் பெற்றுக் கொள்ளுகின்றார்.

**சாசனவியல் என்பது இன்றும் கூட ஆய்வாளர்கள் மத்தியில் மட்டுமே பிரபலமான துறையாகவே விளங்குகின்றது. சாதாரண வாசகர்களுக்கும் பொதுமக்களுக்கும் இன்னமும் அந்த ஆய்வுகள் எவ்விதம் நடக்கின்றன என்பது பற்றிய பூரணமாக விளக்கம் இல்லை. பேராசிரியர் அவர்களின் ஆய்வுகள் எந்த அடிப்படைகளில் அமைந்தவை என்று கூற முடியுமா?**

தமிழ் மொழியைப் பொறுத்தவரை எமக்கு பேச்சு மொழி என்றும் எழுத்து மொழி என்றும் இரண்டு வழக்குகள் உண்டு. எமது பழைய இலக்கியங்களும் இலக்கண நூல்களும் எழுத்து வழக்கினைப் பற்றியே பேசுகின்றன. ஆனால் சங்க காலங்களிலும், அதற்குப் பிற்பட்ட அறநெறிக்காலம், பக்தி நெறிக்காலம் போன்றவற்றிலும் வாழ்ந்த மக்கள் பேசிய மொழி இந்தக் காலப்பகுதிக்குரிய இலக்கியங்களில் வழங்கப்படும் மொழியா என்பது முக்கியமான கேள்வி. இவற்றுக்கான பதில்களை சாசனவியல் பற்றிய தனது ஆய்வுகளின் ஊடாக ஆராய்ந்தார் பேராசிரியர் வேலுப்பிள்ளை. இந்த சாசனங்களை ஆராய்ச்சி செய்த வேலுப்பிள்ளையும், கணபதிப்பிள்ளையும் கண்டறிந்தது என்னவென்றால், இந்த சாசனங்களில் இருக்கின்ற மொழியானது மக்களின் மொழியாக, பேச்சு மொழியாக இருக்கின்றது என்பதாகும். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் உடையார் மிடுக்கு உள்ளிட்ட பெரும்பாலான நாடகங்கள் யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் குறிப்பாக வடமராட்சிப் பேச்சுத்தமிழில் அமைந்தவை என்பது இங்கே முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியது.

இதன் பிறகு தமிழ் இலக்கண நூல்களில் பேச்சுமொழி பற்றி குறிப்பிடப்படுகின்றதா என்று ஆராய்ந்தார் வேலுப்பிள்ளை. தொல்காப்பியமோ அல்லது நன்னூலோ முதன்மையாக எழுத்து மொழிக்கான நூல்கள். அவற்றில் மேலோட்டமாக பேச்சுமொழி பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும். அதே நேரத்தில் ஒப்பீட்டளவில் அதிகமாக வீரசோழியத்தில் பேச்சுமொழி பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இவற்றையெல்லாம் உள்வாங்கி வேலுப்பிளை எழுதிய நூலே 1966ல் வெளியான "தமிழில் வரலாற்றிலக்கணம்". எமக்கு முன்னர் இருந்த இலக்கண நூல்களில் வரைவிலக்கணங்களும், விளக்கங்களுமாக இருக்கும். "தமிழ் வரலாற்றிலக்கணம்" நூலில் தொல்காப்பியம் சொல்வதை நன்னூல் எவ்விதம் சொன்னது? அதனை பின்னர் நாவலர் எவ்விதம் சொன்னார்? இந்த மாற்றங்கள் எவ்விதம் நிகழுகின்றன? இன்றைய மொழிக்கு இலக்கணம் இருக்கின்றதா? என்கிற கோணத்தில் ஆராய்ந்தார். கிட்டத்தட்ட 50, 60 களிலேயே தமிழில் மொழியியல் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. மொழியியல் ஊடான பார்

தொடர்தல் 92ம் பக்கம்

# புறநானூறு மீதான...

91ம் பக்கத் தொடர்ச்சி...

வையின் புரிதலுடன் அவர் இந்த ஆய்வுகளை முன்னெடுத்தார். அன்று தெ.பொ. மீனாட்சிசுந்தரம் போன்றவர்களும் கிட்டத்தட்ட இதே பார்வையுடன் ஆய்வுகளைச் செய்தார்கள் என்றாலும், முழுமையான வடிவில் தமிழ் வரலாற்று இலக்கணத்தை எழுதியவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களே.

வழமையாக நூல் ஆசிரியர்கள் தமது நூல்களில் உதாரணங்களைக் காட்டும்போது சங்க இலக்கியங்களில் இருந்தோ, தேவாரம், திருவாசகம் போன்றவற்றில் இருந்தோ அல்லது கம்பராமாயணம் போன்றவற்றில் இருந்தோ தான் உதாராணங்களைக் காட்டுவார்கள். ஆனால் வேலுப்பிள்ளை தனது நூலில் முன்னர் வழங்கப்பட்ட உதாரணங்களுடன், ஏற்கனவே சாசனவியல் ஆய்வுகளில் தான் சேகரித்து வைத்திருந்த சொற்றொடர்களையும் உதாரணங்களாகக் காட்டி இப்படியான மரபும் இருந்திருக்கின்றது என்று முன்வைத்தார். இதன் மூலமாக இலக்கண மொழியில் இருந்த உதாரணங்களையும், மக்கள் மொழியில் (பேச்சுமொழியில்) வழங்கிய உதாரணங்களையும் ஒரே நேரத்தில் குறிப்பிட்டு அவற்றுக்கிடையான வேறுபாட்டை வாசகர்கள் அறியக்கூடியதாக இருந்தது. ஒரு விதத்தில் இது சமூகத்தை நோக்கிய ஒரு பார்வைதான். அதே நேரத்தில் மொழிக்கான இலக்கணம் என்பது எக்காலத்துக்கும் நிரந்தரமானது அல்ல. அதற்கான இயங்கியல் உண்டு என்பதையும் அவர் முன்வைத்தார்.“

**இந்த ஆய்வுகளை அவர் செய்யும்போது அவருக்கு முன்னோடிகளாக தமிழ்ச்சூழலில் இருந்தவர்கள் யார்?**

தமிழில் முதலாவது கலாநிதிப்பட்டம் பெற்றவர் 1930ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் Dr. P.S. சுப்பிரமணிய சாஸ்திரி. அவரது History of Gramatical Theories of Tamil என்கிற தொல்காப்பியம் குறித்த நூல் வேலுப்பிள்ளைக்குப் பயன்பட்டுள்ளது. அத்துடன் பேராசிரியர் மு.வரதராசன் வெளியிட்ட மொழிநூல், சீனிவாசன் வெளியிட்ட மொழியியல் போன்ற நூல்களையும் ஆராய்ந்து வேறு தகவல்களையும் திரட்டிக்கொண்டு, இவர்களது நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற மூல நூல்களையும் ஆராய்ந்து தமிழ் வரலாற்றிலக்கணத்தை எழுதுகின்றார் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை. இவ்வாறு எழுதுகின்ற போது ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளையும் தனது நூலில் ஆங்காங்கே சுட்டிக்காட்டுகின்றார் வேலுப்பிள்ளை. ஆனாலும் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் தமிழ் வரலாற்று இலக்கணத்தில் இருக்கின்ற வரலாற்று ஓட்டம் அவர்களின் நூலில் இருக்காது. வேலுப்பிள்ளையின் மாணவன் என்ற வகையிலும் பின்னர் இதே நூலைக் கற்பித்தவன் என்ற வகையிலும் என்னால் இதை அழுத்தமாகக் கூறமுடியும்.

**முன்னேஸ்வரம் கோயில் பற்றி அவர் செய்த ஆய்வுகள், கல்வெட்டு ஆய்வுகள் பற்றி அவரது இறப்பின் பின்னர் அவர் பற்றி படிக்கின்றபோது தெரிந்துகொண்டேன். இது போல சாசனவியல் சார்ந்து அவரது வேறு முக்கிய பங்களிப்புகளைக் கூற முடியுமா?**

அவர் சாசனமும் தமிழும் என்று ஒரு நூலே எழுதி இருக்கின்றார். சாசனவியல் தொடர்பான அவரது பார்வையும் ஆய்வுகளும் மிக முக்கியமானவை. இவை தொடர்பாக அந்தத் துறை சார்ந்தவர்கள் பேசுவதே சிறப்பாகவும், அவரை ஆழமாக அறிந்துகொள்ள வழிதருவதாகவும் இருக்கும். இன்று கலைச்சொல்லாக்கம் பற்றி பரவலாக பேசப்படுகின்றது. அதற்கு உதவக்கூடிய பல சொற்கள் ஏற்கனவே சாசனங்களில் இருக்கின்றன. உதாரணத்துக்கு Towel என்பதற்கு நல்ல தமிழ் சொல்லாக ஒற்றாடை (நீரை ஒற்றுகின்ற ஆடை) என்ற சொல் சோழர் கால சாசனங்களில் இருக்கின்றது. தமிழில் சாசனவியல் கற்பிக்கப்படவேண்டும் என்பதையும் முறையாக புரிந்துகொள்ளப்படவேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்திச் சொல்லியுள்ளார். சாசனங்களில் எழுத்துகளின் வடிவம், வளர்ச்சி போன்றன தொடர்பாகவே பெரிதும் ஆய்வுகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் அதனை இலக்கண வரலாற்றுடன் இணைத்துப் பார்த்ததிலேயே பேராசிரியர் வேலுப்பிள்ளை மற்றவர்களிடம் இருந்து தனித்தும் சிறந்தும் தெரிகின்றார்.

இவரும் பேராசிரியர் இந்திரபாலாவும் சமகாலத்தவர்கள். இருவரும் சாசனவியல் துறையில் ஆய்வுகளில் ஈடுபட்டவர்கள்.



அப்போது பேராசிரியராக இருந்த செல்வநாயகம் அவர்களின் வழிகாட்டலில் மைசூர் சென்று அங்கு இடம்பெற்ற சாசனவியல் ஆய்வுகளில் பயிற்சி பெற்று நாடு திரும்பினர், அதற்குப் பிறகும் இந்தியா சென்று பல ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளார். அவரது ஆய்வுகள் மிகப்பெரும் இரண்டு தொகுதிகளாக வெளியாகி இருக்கின்றன. இவையெல்லாம் அவர் செய்த மிகப் பெரிய பங்களிப்புகள்

**பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்களின் இன்னொரு முக்கிய பங்களிப்பு தமிழர் சமய வரலாறு என்கிற நூல். இன்று தமிழ் பௌத்தம், சமணம் பற்றிப் பரவலாக கல்வியாளர்கள் மத்தியில் பேசப்படுகின்றது. ஆனால் வேலுப்பிள்ளை அவர்களது ஆய்வு தமிழ் சமய இலக்கியங்களில் பௌத்தம், சமணம், வைணவம், சைவம் ஆகியவற்றோடு இருந்த தொடர்புகள் குறித்தது என்று கருதுகின்றேன். இதுபற்றி விளக்கமாகக் கூறமுடியுமா?**


தமிழ்ப் பண்பாட்டில் பௌத்தத்துக்கும் சமணத்துக்கும் மிக நீண்ட காலத் தொடர்பு உண்டு. சமண பௌத்த கருத்துகள் எவ்விதம் திருக்குறளை வழிநடத்தி இருக்கும், நாவுக்கரசர் தேவாரங்களில் எப்படி சமணத் தத்துவங்களின் தாக்கம் இருக்கும், இது போல தமிழின் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளில் பௌத்த, சமண, சைவ, வைணவ தத்துவங்கள் செலுத்திய தாக்கம் பற்றிய ஆய்வுகளே அவரது இந்த நூல்கள். கிட்டத்தட்ட இதே காலத்தில் மயிலை சீனி வேங்கடசாமியும் சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும் ஆகிய நூல்களை எழுதினார். இந்தத் தாக்கமும் அவருக்கு நிச்சயம் இருந்திருக்கும். பின்னாட்களில் அவர் பீற்றர் ஷாக் உடன் செய்த ஆய்வுகளில் அவருக்கு இருந்த ஆழமான சமய அறிவு பெரும்பங்களித்திருக்கின்றது.

**ஆரம்பத்தில் அவரது இலக்கிய வரலாற்றுக்கான பங்களிப்புப் பற்றியும் குறிப்பிட்டிருந்தீர்கள். அதுபற்றி சற்று விளக்கமாகக் கூறமுடியுமா?**

இலக்கிய வரலாறு எழுதுகின்ற வழக்கம் சென்ற நூற்றாண்டிலேயே ஆரம்பித்துவிட்டது. ஏழுநா பதிப்பகம் ஊடாக வெளியிடப்பட்ட சரவணமுத்துப்பிள்ளையின் தமிழ்ப்பாஷையின் மீள்பதிப்புக் கூட அந்த வகையானது தான். இவ்வாறு எழுதுகின்றபோது ஒரு வகையானவர்கள் ஆண்டுகளை வைத்துக் காலங்களைப் பிரித்து வரலாற்றை எழுதினார்கள். இன்னொரு வகையானவர்கள் வெவ்வேறு கால கட்டங்களாக (உதாரணமாக ஆட்சியாளர்களைக் கொண்டு பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர் காலம்... என்கிற பிரிப்புகள்) பிரித்தார்கள். இந்த வகையில் பேராசிரியர் செல்வநாயம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு என்கிற நூல் முக்கியமானது. 1969ல் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் ‘தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்’ என்ற நூல் வெளியானது. இதில் அவர் இயற்கை நெறிக்காலம், அற நெறிக்காலம், சமய நெறிக்காலம், தத்துவ நெறிக்காலம், அறிவியல் நெறிக்காலம் என்கிற வகையில் காலகட்டங்களைப் பிரித்தார். ஆட்சியாளர்களையோ, ஆண்டுகளையோ கருத்தில் கொள்ளாமல், இக்காலங்களில் தோன்றிய இலக்கியங்களுக்கான உயிரோட்டம் என்ன என்பதை அடிப்படையாக வைத்து இந்தப் பிரிவுகளை செய்தார் பேராசிரியர் வேலுப்பிள்ளை. உணர்வோட்டங்களை வைத்து காலகட்டங்களைப் பிரிக்கின்ற முறைமையை வேலுப்பிள்ளைக்கு முன்னரே கே.என். சிவராஜபிள்ளை என்கிற அறிஞர் Chronology of the early tamils என்கிற நூலில் 1932லேயே இயற்கை நெறி, அற நெறி, சமய நெறி என்கிற விதத்தில் காலங்களை பிரிக்கலாம் என்று கூறி இருந்தார். அதன் பின்னர் 1950களில் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும் இதே விதமான பகுப்புகளைச் செய்திருந்தார். இதனை முழுமையாகச் செய்தவர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களே. ஒரு உதாரணத்துக்கு சங்ககாலம், சங்க இலக்கியம் என்று சொல்வதை இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த வாழ்வியலை மக்கள் கொண்டிருந்த காலம் இது எவ்விதம் அவர்களது இலக்கியங்களில் தாக்கம் செலுத்துகின்றது என்கிற பார்வையுடன் முன்வைத்தார். அதற்கு அடுத்த காலகட்டத்தை அறநெறிக்காலம் என்றும், அது போரை மையப்படுத்திய இயற்கை நெறிக்காலம் மீதான விமர்சனமாக எழுந்தது என்றும் குறிப்பிட்டார். உதாரணமாக அவர் சொல்லுவார், புறநானூறு மீது தமிழ்ப் பண்பாடு வைத்த விமர்சனம் தான் திருக்குறள் என்று! தமிழர்களின் அற மரபு பற்றி அறிய விரும்புபவர்கள் எல்லா நூல்களையும் வாசிக்க முடியாவிட்டாலும் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை எழுதிய அறநெறிக் காலம் என்கிற கட்டுரையையாவது வாசிக்க வேண்டும். அது ஒரு பொக்கிஷம் என்றே சொல்வேன்.

**அப்படியாக இருந்தும் அவர் பொது மக்கள் மத்தியில் பெரிதாக அறியப்படவில்லை அல்லவா? எம்மவர்கள் பலருக்கு பேராசிரியர் கைலாசபதி, வித்தியானந்தன், சிவத்தம்பி, க. கணபதிப்பிள்ளை போன்ற பல ஆளுமைகள் பற்றிய சரியான அறிமுகம் கிடைக்கவில்லைத்தானே. இவர்களுடன் ஒப்பிடும்போது பேராசிரியர் வேலுப்பிள்ளை பற்றி அறிந்தவர்கள் இன்னமும் வெகு குறைவானவர்கள் அல்லவா?**


ஆம். அவரது ஆய்வுகள் ஆய்வாளர்களுக்கே அதிகம் பயன்படுவன. அவற்றில் இருந்து ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகளைத் தொடர உதவுபவை. சராசரி வாசகர்களுக்கு அவை நேரடியாகப் பயன்படா. மேலும் அவர் ஈடுபட்ட துறை சாசனவியல் என்பதால் அவரது ஆய்வுகள் பெரும்பாலும் மக்களுடன் ஊடாட்டமின்றி தனிப்படவே இருந்தன. தவிர அவர் ஆய்வாளனாகவும், கல்வியாளனாகவும் தனது பணி அவற்றில் தொடர்ச்சியாக ஈடுபடுவது என்பதையே தனது நிலைப்பாடாகத் தொடர்ச்சியாகப் பேணி வந்தார். இதனால் அவர் தன்னை சமூகமயமாக்காமல் தனியாகவே இருந்து வந்தார். அவருடைய நூல் ஒன்றுக்கு சாகித்ய மண்டல பரிசு அறிவித்திருந்தார்கள். விழா கம்பளையில் இடம்பெற்றது. அப்போது அவர் பேராதனையில் இருந்தார். கம்பளைக்கும் பேராதனைக்கும் வெறும் 16 மைல் தூரமே தான். ஆனாலும் அவர் விழாவில் கலந்துகொள்ளவில்லை. தனக்கான கௌரவமும், சம்பளமும் தனது ஆய்வுகளுக்கே, விழாக்களில் கலந்துகொள்ள அல்ல என்று தன்னை முற்றாக ஒதுக்கிக் கொண்டவராக அவர் இருந்தார். பொதுமக்கள் பார்வையில் அவர்களைப்போல இவர் இல்லையே என்று நாம் கவலைப்படத் தேவையில்லை. கல்விப்புலம் சார்ந்தும், பல்கலைக்கழகத் தரம் சார்ந்தும் அவர்களுக்கு நிகரானவராகவே இவர் இருந்தார். மதிக்கப்பட்டார்.



arunmozhivarman@thaiveedu.com

## ஈழத் தமிழறிஞர் ஆ.வேலுப்பிள்ளை (1936-2015):

# தமிழியல் ஆய்வுக்கு ஒரு வழிகாட்டி



**ரவிக்குமார்:**

**சமகாலத்தின் மிக முக்கியமான சமூக/அரசியற் செயற்பாட்டாளரும் கோட்பாட்டாளரும் மணற்கேணி இதழின் ஆசிரியருமாவார்.**


ஈழத்தைச் சேர்ந்த அறிஞர் ஆ. வேலுப்பிள்ளை மறைந்த செய்தியை அறிந்தபோது கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளாக அவரது நினைவு எழாமல்போய்விட்டதே என வருத்தமுற்றேன். அவரை நேரில் அறிந்ததில்லை எனினும் அவரது எழுத்துகள் வழியே நெருக்கமாய் உணர்ந்திருக்கிறேன். தொல்லியல், கல்வெட்டியல், செவ்வியல் இலக்கியம் எனப் பல்வேறு துறைகளிலும் ஆழ்ந்த புலமை கொண்டவராக இருந்தவர். தமிழும் பௌத்தமும் குறித்து பேராசிரியர் பீட்டர் சால்க்குடன் இணைந்து அவர் தொகுத்த இரண்டு தொகுதிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

தனது 28வது வயதுக்குள் இரண்டு முனைவர் பட்டங்களைப் பெற்றவர். 1960-1961ம் ஆண்டுக்கான இலங்கை சிவில் சர்வீஸ் தேர்வில் இலங்கை முழுதுமிருந்து தேர்வு செய்யப்பட்ட ஐந்து பேரில் ஒருவராக அவர் இருந்தார். அந்தப் பதவிக்குச் சென்றிருந்தால் அரசாங்கத்தில் அதிகாரம் மிக்கப் பொறுப்புகளுக்குப் போயிருக்கலாம். ஆனால் ஆசிரியர் பணியிலேயே தொடரவேண்டும் என அவர் முடிவெடுத்தார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடம் கல்வெட்டியலைப் பயின்று அவரது வழிகாட்டலில் முனைவர் பட்டம் பெற்ற வேலுப்பிள்ளை, அதன்பின் இன்னொரு முனைவர் பட்டத்துக்காக ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியலறிஞர் டி. பர்ரோவின் மாணவராகச் சேர்ந்தார்.

திருவனந்தபுரத்தில் திரு வ.அய். சுப்பிரமணியம் அவர்களின் வழிகாட்டலில் செயல்பட்டுவந்த திராவிட மொழியியல் நிறுவனத்துக்கு மூத்த ஆய்வறிஞராக 1973ம் ஆண்டில் அவர் அழைக்கப்பட்டார். பேராசிரியர் தெ.பொ.மீ அவர்களுக்கு அடுத்ததாக அந்த கௌரவத்தைப் பெற்றவர் அவர்தான். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் வருகை தரு பேராசிரியராக அவர் பணியாற்றினார். அதன் பின்னர் ஸ்வீடன் நாட்டின் உப்பசாலா பல்கலைக்கழகத்திலும், அமெரிக்காவில் வேர்ஜீனியா, அரிஸோனா பல்கலைக்கழகங்களிலும் அவர் பணிபுரிந்தார்.

கல்வெட்டியலில் புலமைகொண்ட பலருக்குத் தமிழ் இலக்கணத்தில் ஆழ்ந்த ஞானம் இருப்பதில்லை. ஆனால் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அதற்கொரு விதிவிலக்கு. அவரது முக்கியமான நூல்களில் ஒன்றான 'சாசனமும் தமிழும்' நூலில் இருக்கும் 'சாசனத்துத் தமிழ்மொழி' என்ற அத்தியாயம் அவரது இலக்கண புலமைக்கு எடுத்துக்காட்டு. இலங்கைக் கல்வெட்டுகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கும் திரு.வேலுப்பிள்ளை தமிழ் வரிவடிவத்தின் தோற்றம் குறித்து வெளிப்படுத்திய கருத்துகளைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்வெட்டியல் அறிஞர்கள் போதுமான அளவு முக்கியத்துவம் தந்து விவாதிக்கவில்லை என்பது வருத்தத்துக்குரிய உண்மை.

'எழுத்துமுறை என்பது தற்போது பலராலும் நம்பப்படுவதுபோல வட இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரவில்லை. மாறாக தமிழகத்தில் தோன்றி இலங்கைக்குச் சென்று அங்கிருந்து தெலுங்குப் பிரதேசத்துக்கும் அதன்பின் வட இந்தியாவுக்கும் சென்றிருக்கிறது என்பதே உண்மை' என்கிற கருத்துகள் தமிழ்நாட்டு கல்வெட்டியல் அறிஞர்கள் சிலரால் முன்வைக்கப்படுகின்றன. இதுதொடர்பாக திரு. வேலுப்பிள்ளை கூறிய சில கருத்துகள் இன்றைய சூழலில் பரிசீலிக்கப்பட வேண்டியவையாக உள்ளன:



'அசோகரது ஆட்சிக்காலமான கி.மு. மூன்றாம் நூற்றாண்டில்தான் பௌத்தம் இலங்கைக்கு வந்தது என்றும், பௌத்தத் துறவிகள் மூலமாகத்தான் எழுத்துமுறை என்பது இலங்கைக்கு அறிமுகமானது என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அது இப்போது பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாக மாறிவிட்டது. ஆனால் இந்த விஷயம் சர்ச்சைக்குரியதாக இருக்கிறது எனக்குறிப்பிடும் டாக்டர் வேலுப்பிள்ளை, 'அசோகரது ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியப் பகுதிகளிலும், இலங்கையிலும் கிடைத்துள்ள கல்வெட்டுகளை வைத்துப் பார்க்கும்போது அவற்றுக்கிடையில் பல வேறுபாடுகள் இருப்பது தெரியவருகிறது. அதுபோலத்தான் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் தன்மையில் வேறுபடுகின்றன. அதனால்தான் அவற்றைத் தமிழ் பிராமி, திராவிடி, தமிழி என்று பலவாறாக அழைக்கின்றனர். அதுபோலவே இலங்கையில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் உள்ள எழுத்துக்களைப் பழைய சிங்களம் என்று கூறுகின்றனர்.' என்கிறார் அவர்.

இலங்கையில் கிடைத்துள்ள கல்வெட்டுகளுக்கும், தமிழ்நாட்டில் கிடைத்துள்ள கல்வெட்டுகளுக்கும் இடையிலுள்ள ஒற்றுமைகளை ஆய்வாளர்கள் பலர் எடுத்துக்காட்டியுள்ளனர். 'பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிங்களப் பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்ற ஃபேர்னான்டோ என்பவர் 'பொதுவான தோற்றத்தைவைத்துப் பார்க்கும்போது தமிழகத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள், இலங்கையில் கிடைத்துள்ள பழங்கால கல்வெட்டுக்களை ஒத்திருக்கின்றன. மிகுந்தலை, வேசகிரியா முதலான இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் போலவே தமிழகக் கல்வெட்டுக்கள் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது' என்று குறிப்பிட்டுள்ளார். இதைத் தனது கட்டுரையில் எடுத்துக்கூறியிருக்கும் வேலுப்பிள்ளை, 'இரண்டு பகுதிகளிலும் குகைகளில் காணப்படும் கல்வெட்டுக்கள் ஒத்த தன்மை உடையனவாக இருப்பதையும், அசோகர் காலத்துக் கல்வெட்டுக்களில் காணக்கிடைக்காத 'ஐ' மற்றும் 'ம' ஆகிய எழுத்துக்கள் இவற்றில் இருப்பதையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

'சாசனமும் தமிழும்' நூல் ஆறு தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். 'இந்த ஆறு வகை ஆராய்ச்சிகளையும் தமிழ்ச் சாசனங்களைக்கொண்டு நடத்தி விரிவான நூல்கள் வெளியிட என்னால் இயலும்' என 1971ம் ஆண்டில் வெளியான அந்த நூலின் முன்னுரையில் அவர் குறிப்பிட்டிருப்பார். சொன்னதுபோலவே ஏராளமான ஆய்வு நூல்களை அவர் வெளியிடவும் செய்தார்.

'ஒரு ஆய்வுநூலை எழுதும் ஆராய்ச்சியாளரே அதை அச்சிடுவது, சந்தைப்படுத்துவது ஆகிய வேலைகளையும் செய்யவேண்டும் என எதிர்பார்க்கக்கூடாது. நூல்களை எழுதுவதே ஆராய்ச்சியாளரின் பணியாக இருக்க வேண்டும்' என அவர் வலியுறுத்தினார்.

பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் ஆய்வு வழியில் காத்திரமான ஆய்வுகளை முன்னெடுக்கக்கூடிய ஆய்வாளர்கள் போரால் சிதைக்கப்பட்ட ஈழத்திலோ, புலம்பெயர்ந்த நாடுகளிலோ இப்போது இல்லை என்பதில் வியப்பேதுமில்லை. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள வரலாற்றுத்துறை, தமிழ்த்துறை பேராசிரியர்கள் அவரை ஏன் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை?

அவரை முன்மாதிரியாகக் கொள்ளும் கடமை ஈழத் தமிழர்களுக்கு மட்டுமே உரியதல்ல. தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கும் உரியதுதான். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களும், செம்மொழி நிறுவனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இணையப் பல்கலைக்கழகம் முதலான அமைப்புகள் அதற்கான முன்முயற்சியை இப்போதாவது எடுக்க வேண்டும். அதுவே அவருக்குச் செலுத்தும் மெய்யான அஞ்சலியாக இருக்கும்.

*(இவ்வாக்கம், ரவிக்குமார் அவர்களால் எழுதப்பட்டு, நவம்பர் 2015 மணற்கேணி இதழில் வெளியானது.*

*நன்றி: மணற்கேணி)*

■ ■ ■

**www.inayam.net**

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

inayam

**416•400•6406**

digi

# மறைந்த யப்பானியத் தமிழ்ப் பேரறிஞர்
# நொபோரு கரஷிமா

- முருகேசு பாக்கியநாதன் -

## அறிமுகம்:

இவர் யார்? ஏன் இவரைப் பற்றிய தமிழில் கட்டுரை எழுதவேண்டும்?

இவர் ரொறன்ரோ தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல உலகத் தமிழ் ஆர்வலர்களுக்கும் புதியவரல்ல. கல்வியுலகில் நன்கு அறியப்பட்ட யப்பானிய வரலாற்றுப் பேராசிரியரான இவர் தமிழிலும் புலமை பெற்றவர். பல தமிழ் ஆய்வுகளைச் செய்தார், பல புதைபொருளாய்வுகளைத் தமிழ்நாட்டில் செய்தார். பல கல்வெட்டுகளை ஆய்வு செய்து அவற்றில் எழுதப்பட்டுள்ள வரலாற்று ஆதாரங்களை முன்வைத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக 1989 தொடக்கம் 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு' (I.A.T.R) நிறுவனத்தின் தலைவராகக் கடமையாற்றி 2010ஆம் ஆண்டு அந்நிறுவனத்திற்கு ஏற்பட்ட அரசியல் தலையீட்டின் காரணமாக தனது பதவியிலிருந்து விலகிக்கொண்டார். தென்னாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் செய்த கல்விப் பங்களிப்புக்காக 2013ஆம் ஆண்டு இந்திய அரசு 'பத்மஸ்ரீ' விருது வழங்கியது. அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் யப்பானில் அதனைக் கையளித்து கௌரவித்தார்.

1933 ஏப்ரல் 24ஆம் நாள் ஜப்பானில் பிறந்த நொபோரு கரஷிமா அவர்கள் 2015 நவம்பர் 26ஆம் நாள் காலமானார்.

இவர் யப்பான் ரோக்கியோ பல்கலைக் கழகத்தில் யப்பானிய வரலாற்றுப் பேராசிரியராகக் கடமையாற்றினார். அத்தோடு, ராய்ஷோ பல்கலைக் கழகத்தின் பேராசிரியராகவும் கடமையாற்றினார்.

தென் இந்தியாவின் மத்திய கால வரலாறு, விஜயநகரப் பேரரசு வரலாறு ஆகியவைற்றினை தொல்லியல் ஆய்வுக்கண்ணோடும் கல்வெட்டு ஆதாரங்களோடும் நோக்கி அதுபற்றிய பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுளார்.

## கல்வி:

1958இல் ரோக்கியோ பல்கலைக்கழகத்தில் கிழக்காசிய வரலாற்றை (Oriental uistory) முதன்மைப் பாடமாக எடுத்து தனது பட்டப்படிப்பினை முடித்தார்.

1961இல் எம்.லிட் (M.Litt) பட்டத்தை ரோக்கியோ பல்கலைக்கழகத்தின் மனிதவள பட்டப்படிப்பின் கீழ் பெற்றுக்கொண்டார்.

1964 - 1967: ஆய்வு உதவியாளராக ரோக்கியோ பல்கலைக்கழகத்தின் Faculty of Letters பீடத்தில் பணியாற்றினார்.

1967 - 1971: ஆசியா, ஆபிரிக்க, ரோக்கியோவில் உள்ள மொழிகளதும் கலாசாரங்களதும் வெளிநாட்டு மாணவர்களின் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

1971 - 1974: ஆசியா, ஆபிரிக்க, ரோக்கியோவில் உள்ள மொழிகளதும் கலாசாரங்களதும் வெளிநாட்டு மாணவர்களின் உதவிப் பேராசிரியராகக் கடமையாற்றினார்.

1974 - 1981: உதவிப் பேராசிரியர் ரோக்கியோ பல்கலைக் கழகத்தின் Faculty of Letters.

1981 - 1994: பேராசிரியர், ரோக்கியோ பல்கலைக் கழகத்தின் Faculty of Letters.

1985: இந்திய கல்வெட்டியல் நிறுவனத் தலைவராக நியமனம் பெற்றார்.

1989: உலகத் தமிழாராய்சி நிறுவனத்தின் (I.A.T.R) தலைவராக நியமனம் பெற்று 2010 வரை அப்பொறுப்பினை வகித்தார்.

1995ஆம் ஆண்டு தஞ்சாவூரில் நடைபெற்ற 8வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை மிகச்சிறப்பாக நடத்திவைத்தார். இலங்கையின் இனப்பிரச்சினை உக்கிரமடைந்த காலப்பகுதியானபடியால் அதன் பின்பு எந்த மகாநாடும் நடத்தப்படவில்லை. 2010 ஆம் ஆண்டு உலகத் தமிழ் செம்மொழி மகாநாட்டினை நடத்தும்படி அப்போதைய தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்களால் உலகத் தமிழாராய்சி நிறுவனத்தின் தலைவர் நொபுரு கறஷிமா அவர்களுக்கு கோரிக்கை விட்டதுடன் கருணாநிதி அவர்கள் 2010இலேயே உடனடியாக நடத்தப்பட



வேண்டும் என்று கட்டாயப்படுத்தியபோது, கல்வியாளர்கள் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க போதிய அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். அதனால் 2011இலேயே நடத்தமுடியும் என்றும், அத்தோடு இந்த மகாநாட்டில் அரசியல் தலையீடுகள் எதுவும் இருக்கக்கூடாது என்றும் திட்டவட்டமாக அவர் பதிலளித்தார். அதனை ஏற்றுக்கொள்ளாத அப்போதைய முதல்வர் அவர்கள் தமிழக அரசின் ஏற்பாட்டில் 2010இலேயே கோயம்புத்தூரில் உலகத் தமிழ் செம்மொழி மகாநாட்டை நடத்தி முடித்தார். இத்தகைய அரசியல் தலையீடு காரணமாக மனமுடைந்துபோன நொபுறு கறஷிமா அவர்கள் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

1993: D.Litt பட்டத்தை ரோக்கியோ பல்கலைக் கழகத்தில் பெற்றுக்கொண்டார்.

1993: ஜப்பான் சரித்திரவியல் சங்கத்தின் தலைவரானார்.

1994: ரோக்கியோ பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வுபெற்றார். தொடர்ந்து ரைஷோ பல்கலைக் கழகத்தின் (Taisho University) இந்தியத் துறைக்கான பேராசிரியராக நியமனம் பெற்றார்.

1995: இந்திய கல்வெட்டியல் சங்கத்தின் கௌரவ அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

1996 - 2000: இந்திய - யப்பான் நட்புறவுக் கழகத்தின் தலைவரானார்.

## கிடைத்த விருதுகள்:

Fukuoka Asian Culture Prize (1995) புக்குஓகா ஆசியன் கலாசார விருது. Japan Academy Prize (2003) யப்பான் அக்கடமி விருது. Person of Cultural Merit (2007) தனிப்பட்டோருக்கான கலாசார விருது. பத்மஸ்ரீ விருது (2013).

யப்பான் - இந்தியா கல்வி, கலாசார பரிமாற்றுத் மாற்றுத் திட்டத்தின் போது சில இந்திய ஆய்வாளர்கள் யப்பான் சென்று ஆய்வுகளை மேற்கொள்ளவும் யப்பான் ஆய்வாளர்கள் இந்தியா சென்று ஆய்வுகளை மேற்கொள்வுமான வாய்ப்பின் கீழ் இவருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் ஏற்கனவே வரலாற்றியல் பேராசிரியராக இருந்தமையும் இவரது வரலாற்றுக் கல்வி கிழக்காசியா சார்ந்து இருந்தமையும் இதற்கு இன்னொரு காரணமாக இருக்கலாம். இவர் தமிழ்நாட்டு வரலாறு பற்றிய ஆய்வினை கல்வெட்டியல், செப்புபேட்டியல் துணைகொண்டு மேற்கொண்டு, காவிரி டெல்ரா பகுதியில் உள்ள அல்லூர் என்ற ஊரிலும் இசனமங்கலம் என்ற ஊரிலும் கிடைத்த சோழர்கால கல்வெட்டுக்களை பழைய முறையில் ஆய்ந்து வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு தனது முதல் ஆய்வுக் கட்டுரையைப் படைத்தார். இவற்றைச் செய்ய அவருக்குத் தமிழறிவு மிக முக்கியமானதென உணர்ந்து சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பொற்கோ அவர்களின் வழிகாட்டலில் தமிழையும் கற்றுத்தேர்ந்தார். அத்தோடு யப்பானிய சமூக விஞ்ஞான ஆய்வுகளின் துணைகொண்டு இந்திய வரலாற்றை ஆராய்தார். இந்திய வரலாற்றியலை எதிர்காலத்தில் அறிந்து கொள்ள இந்தியப் பல்கலைக்கழகங்கள் சரியானதொரு வெட்டெழுத்தியல் நெறிமுறையினை (Discipline of Epigraphy) வகுக்கவில்லை என்பது இவரது மனவேதனையாகும்.

நொபுறு கறஷிமா அவர்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பெறப்பட்ட கல்வெட்டுக்களிலிருந்தும் செப்புத்தகடுகளிலிருந்தும் மட்பாண்ட ஓடுகளிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தமிழர் வரலாற்று ஆதாரங்களை வெளியிட்டார். தமிழ் நாட்டு வரலாற்றினை நவீன முறைகொண்டு ஆய்வுசெய்து, முடிக்கிடந்த வரலாற்றை வெளிக்கொணர்ந்தவருள் முக்கியமானவர் என்று இவரைக் கூறலாம்.


இவரது ஆய்வுகள் தமிழ்நாட்டின் ஆதிகால, மத்தியகால வரலாற்றின் ஆய்விற்கு வழி திறந்துவிட்டதெனலாம். 1960இல் தொடங்கிய தமிழ் விழிப்புணர்விற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுக்கட்டுரைகள், வெளியீடுகள், தொடர்பாடல்கள் மற்றும் சர்வதேசத் தொடர்புகள், தமிழாய்வு மநாடுகள் ஆற்றிய பங்களிப்பில் நொபுறு அவர்களின் பங்கும் முக்கியமான ஒன்றாகும். தொடர்ச்சியாக 20 வருடங்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக இருந்து, தனிநாயக அடிகள் கண்ட கனவை நனவாக்கிய பெருமகன் என்ற வகையில் அவர் பெயர் தமிழ் உள்ளவரை சரித்திரத்தில் இடம்பெறும்.

தனது ஆய்வு பற்றி அவர் குறிப்பிடும்போது சமயப் பாரம்பரியங்களில் இரண்டு முறைகளில் சைவம் வளர்ந்தது. முதலாவது பக்தி மார்க்கத்தில் உருவாகிய தேவாரம், திருமுறைகள் 7ஆம் நூற்றாண்டு தொடக்கம் 10ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் வளர்ந்தது. இரண்டாவதாக முதலாம் இராஜராஜ சோழன் முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோரின் காலப்பகுதியாகிய 11ஆம், 12ஆம் நூற்றாண்டில் பிராமணக் குடியேற்றங்களைச் செய்து கோவில்கள் கட்டுவித்தும் சைவம் பாதுகாக்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றார். இந்தப் பாரம்பரியங்களின் தாக்கம் தமிழ்நாடெங்கும் பரவியிருந்தது. 13ஆம் நூற்றாண்டில் மெய்கண்ட தேவர் எழுதிய சிவஞானபோதத்தில் மேற்படி இரண்டு பாரம்பரியங்களும் ஒன்று சேர்ந்ததனைக் காணமுடியும் என்றும் இதுவே தென்இந்திய சைவசித்தாந்தத்தை உருவாக்கியது என்றும் கூறிகின்றார்.

ஆதிகால, மத்திய கால தென் இந்திய வரலாற்று நூல்களை வெளியிடுவது சவாலானது என்பதனையும் காலனித்துவ கால மான 17ஆம் 18ஆம் நூற்றாண்டு காலத்தில் சமூக பொருளாதாரத் தளம்பல் எவ்வாறானது என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் தற்போது கிடைக்கக்கூடிய தகவல்கள் போதியளவு இல்லாமலும் திருப்தியில்லாமலும் இருப்பது உண்மையே. இந்த வரலாற்றினை எழுதும் போது புதிய எண்ணப்பாடுகள் தோன்றும். ஆனால் மேலும் வரலாற்றின் தரவுளைக் கொண்டு மீள் கட்டுமானம் செய்ய வேண்டிய தேவையுண்டு. காலனித்துவ வரலாற்றின் கடந்தகாலத்தினை குறிப்பிட்டுச் சொல்லும் போது காலனித்துவ ஆட்சியானது இந்திய பொருளாதாரத்தை முற்றாகச் சிதைத்தது என்றே கூறவேண்டும் என்கிறார்.

அரச ஆராய்ச்சி நிறுவனங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போது அந்நிறுவனங்கள் மிகவும் பாதிக்கப்படுவதாக கூறுவதுடன் நின்றுவிடாமல் அதற்கு அரசு போதிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்று குறைபட்டுக் கொண்டதுடன் புதைபொருள் ஆய்வுத் திணைக்களத்தின் அதிபதி (Director General) ஒரு புதைபொருள் ஆய்வாளராகவே இருக்க வேண்டும். அப்படியிருந்தாலே சரியான வழிகாட்டல் இருக்க முடியும். ஆதனை விடுத்து நீண்ட காலமாக இடைக்கால நியமனமாக இந்தப் பதவிக்கு ஒரு IAS உத்தியோகத்தரே நியமிக்கப்படுவது துரதிஷ்டமானது. அவருக்கு துறைசார்ந்த எந்த அறிவும் இல்லை. இதன் மூலம் சரியான முடிவுகள் எடுக்க முடியாது. இதுபோலவே கல்வெட்டியல் நிபுணர் நியமனம் பல காலத்திற்கு நியமிக்கப்படாமல் இழுபறிப்பட்டது. நான் 1962ஆம் ஆண்டு ஊட்டி கல்வெட்டியல் காரியாலத்திற்குச் சென்றபோது திறமைவாய்ந்த இளம் chap தராதரம் கொண்ட மூன்று கல்வெட்டியல் நிபுணர்கள் கடமையில் இருந்தனர். காரியாலம் மிகச் சுறுசுறுப்பாக இயங்கியது. ஆனால் இன்றோ நிலைமை மாறிவிட்டது. அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து ஊக்கம் எதுவும் கொடுப்பதில்லை. தற்போதைய இந்திய, வெளிநாட்டு ஆய்வாளர்கள் பழைய அறிக்கைகளையே வைத்து முடிவுக்கு வருகின்றனர். நேரடியாக கல்வெட்டு வாசிப்பு இடம் பெறுவதில்லை.

அண்மைக்காலமாக ஒப்பந்த அடிப்படையில் கல்வெட்டியல் நிபுணர்கள் தமிழ் பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்பட்டு ஊக்கம் கொடுக்கப்படுகின்றது. கல்வெட்டின் பதிவுகள் எடுக்கப்பட்டு மைசூர் கல்வெட்டியல் காரியாலயத்தில் பாதுகாக்கப்படுகிறது. இந் நடைமுறை மேலும் வளர்ச்சியுறவேண்டும் என்றும் கருதுகின்றார். மேலும் இத்துறை வளராதுவிட்டால் இந்த நாட்டின் வரலாறு எழுதப்படாமல் வரலாறே அழிந்துவிடும் அபாயம் உண்டு என்றும், பழையபடி கருது கோளின் அடிப்படையிலும் புனைவுகளின் அடிப்படையிலுமே எழுதப்படும் என்று நொபுறு அவர்கள் எச்சரித்துள்ளார்.



packiyanathan.m@thaiveedu.com

# CUSTOM BUILD HOME

## Your Personalized Custom Build Home
## Starting From $139 / sq ft

## Quality ! Price !! Peace of Mind !!!

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு



அனுபவம் நிறைந்த,
நாணயமான,
தரமான கட்டிட
நிபுணர்கள்

**TAMB CANADA (647) 877-8262 (TAMB)**

---

மனம் பூரிக்க மங்களகரமான
மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்...


**Ravi. Paramu**
Broker

**Direct: 416-262-4176**
**Bus: 416-298-3200**

முழுநேர வீடு விற்பனை முகவர்

Over 10 years
Canadian Real Estate Experience

***Best Advice & Services to buy great property***



**HomeLife Today Realty Ltd., Brokerage**
**31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6**

---

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER - RIGHT MORTGAGE

**R&R MORTGAGES**
(LIC# 12122)



We're here to provide our clients with the best possible financing options available in **Today's mortgage** lending environment . we look forward to servicing your needs.

**RAVI PARAMU AMP**
Mortgage Agent
Lic # M11000420
**Dir: 416-262-4176**

**Our range of Services Include...**
* Purchase & Refinance packages
* Switch and Transfer
* Open/Closed mortgages.

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்

Win Up To ***$100.000** When You Minimize your Mortgage

"The best compliment you can give me is the referral of your family and friends"
Thank you for your trust

5-1801 HARWOOD AVE. N., AJAX ON L1T 0K8 TEL: 416-321-0110 FAX: 416-321-0150


BEFORE
DEBT:
92,000.00
MONTHLY PAYMENT
2700.00
AFTER
CONSULTING WITH
DEBT FREE
DEBT :
19,500.00
MONTHLY PAYMENT:
325.00
PROPERTY , EMPLOYMENT,
SAVING, VEHICLE, OTHER ASSETS
WE ARE HERE TO SAVE YOUR
MONEY BY JUST PAYING ONE SINGE PAYMENT
CALL DEBT FREE FOR FREE
INITIAL CONSULTATION.
DEBT FREE CREDIT
SOLUTION
SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY
416 434 1522
416 834 7227
freedebt.toro@gmail.com

# கடன்

**- ரவிச்சந்திரிகா -**

பூவரசி இது கல்யாணத்தில் முடியப் போவதில்லை என்று தெரிந்தேதான் மதுரத்துக்கு இணங்கினாள் என்பதை ஊருக்குச் சொல்ல முடியாது. அவள் அந்நேரம் அந்த அளவுக்குத் தொலைநோக்குக் கொண்டவளாய் இருக்கவில்லை. முப்பத்தாறு வயது வரை கன்னி. கல்யாணம் ஆகாததால் மட்டுமே அல்ல. அவளுக்குக் கீழே பதினொரு பேர். குடும்பக் கட்டுப்பாடு என்றால் 'எல்லாம் மனக் கணக்குத்தான்' என்றிருந்த காலம். அய்யா கள்ளுக் கடையில் இருந்து வீட்டுக்கு வரும் அபூர்வமான நாட்களைத் தொடர்ந்து ஒன்பதாம் மாதம் அம்மா இன்னொன்றை ஈன்றெடுத்துக் கொண்டிருந்தாள். பதின் பருவத்தில் அம்மாவுக்குப் பத்தியக் குழம்பு வைத்துத் தருவதில் அவள் தேர்ச்சி அடைந்திருந்தாள்.

அம்மாவுக்கு அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் அற்றுப் போய் இருந்தது. அம்மாவால் இயலாது என்பது பூவரசிக்கும் தெரிந்துதான் இருந்தது. முதலில் திரைப்படப் பாடல்களுடன் சேர்ந்து பாடிக் கொண்டு காதல் கனவுகள், பின் கல்யாணக் கனவுகள், காலம் போக உடல் அவளை மீறிக் கனவு காண ஆரம்பித்தது. அவளும் உடலும் வேறாகப் பிரிந்து கொண்டிருந்தன. உடல் வேண்டும் வேண்டும் என்று கேட்கிற எல்லாவற்றையும் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவை நிறைவேறுவதற்கு ஆளுமில்லை என்ற எண்ணம் வலுத்துக் கொண்டிருந்த போது மதுரம் வந்தான்.

மதுரம் கிடுகு ஏற்ற வரும்போது பூவரசி செம்பில் தண்ணீர் கொண்டு போய் கொடுப்பதில் தொடங்கியது. அவன் அண்ணாந்து செம்புத் தண்ணீரைக் கவிழ்த்துக் குடிப்பதை பார்த்துக் கொண்டு நிற்பாள்.

மாடுகளை அவிழ்த்து தென்னைகளோடு கட்டித் தண்ணீர் காட்டி வைக்கோல் போட்டு விட்டுக் கிடுகு ஏற்றத் தொடங்குவான். பெரிய சிவப்பு எருதுகள். கழுத்தில் மணியும், நுனிகளில் சிவப்பு வண்ணம் தீட்டிய கொம்புகளுமாக கம்பீரமான மிருகங்கள். சங்குக் காதுகள். மை தீட்டியவை போல அடர்ந்து கறுத்த வளைவான இமைகள். தலையை ஆட்டி ஆட்டி மெதுவாக அசைபோடும், உலகில் எந்த அவசரமும் இல்லை என்பது போல.

'இதுகள் இரண்டும் என்ன விலையாய் இருக்கும், எனக்கு ஒரு மறிக்குட்டி வாங்க வழியில்லை' பூவரசி ஏக்கத்துடன் நினைப்பாள்.

தண்ணீர்ச் செம்பை வாங்கிக் கொண்டு "காலமையான் இடியப்பத்திலை ரெண்டு மிச்சம் இருக்கு, அரிசிமா இடியப்பம், சாப்பிடுங்கோவன்" என்று பட்டும் படாத மாதிரிக் கேட்டாள். அவன் எதையுமே மறுக்கவில்லை.

முப்பத்தைந்தாம் நாள் அவளுக்குத் தெரிந்து விட்டது. ஒரு நாள் கூடப் பிந்துவதில்லை. அப்படி ஒரு ஒழுங்கு. தாய்க்குத் தெரிவதற்கு முன் கலைக்கலாம் என்று பல முயற்சிகள் செய்தாள். இருபது பனடோல் குளிசைகளை விழுங்கினாள். அதில் பத்தைத் திருடிச் சேர்க்க வேண்டியிருந்தது. ஒரு சீசா விக்ஸ் தின்றாள். விழுங்கும்போது மூக்கும் தொண்டையும் எரிந்து கண்ணீர் ஓடியது. எவ்வளவு தண்ணீர் குடித்தும் உணவுக் குழாயில் ஒட்டிய விக்ஸைக் கழுவ முடியவில்லை. ஒரு நாள் முழுக்க சத்தி எடுத்தாள். அப்படித்தான் அம்மாவுக்குத் தெரிய வந்தது. பெரிய தம்பி வயிற்றில் காலால் உதைத்தான். "வீட்டுக்குள்ளை வந்தியோ கொண்டு போடுவன்" என்றான். அவளுக்கு யாராவது அந்த விக்ஸ் முழுவதையும் கழுவித் துடைத்து விடமாட்டார்களா என்று தோன்றியது. விக்ஸூம் பனடோலும் தின்ற கரு வளர்ந்து கொண்டிருந்தது.

அந்த ஆறு மாதங்களும் மரிசலீன் வீட்டுத் திண்ணையில் வாழ்க்கை. மரிசலீன் எவ்வளவு கேட்டும் யார் என்பதைச் சொல்வதில்லை என்பதில் உறுதியாக இருந்தாள். மதுரத்திடம் தனியாகப் பேச வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பியிருந்த போது அவன் கிடுகு ஏற்ற வருவதை நிறுத்திவிட்டான்.

ஊரில் இருப்பது அப்போதிக்கரியின் பொறுப்பில் இயங்குகிற அரசாங்க வைத்தியசாலை. 'அப்போ' வாரத்தில் மூன்று நாட்கள் வருவார். மருந்து கலப்பவரும் ஒரு பெண் தாதியும் ஏனைய நாட்களைச் சமாளிப்பார்கள். பெரிய வைத்தியர் வேண்டுமானால் பதினாறு மைல் தொலைவில் உள்ள நகரத்துக்குப் போக வேண்டும். அங்கே போய் யாருடைய உதவியுடன் பிள்ளை பெற்று வருவது? பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை வலி ஏற்பட்ட போது வைத்தியசாலைக்கு நடந்தே போனாள். வலியின் இடைவெளி குறையும் முன்பாக வாசலை எட்டி விட



வேண்டும் என்ற எண்ணத்துக்கு உடல் ஈடு கொடுக்கவில்லை. கண்கள் கூசுகிற வெயிலில் மயக்கம் வரும் போல இருந்தது. 'ஐயோ, கடவுளே, றோட்டிலை விழாமப் போய்ச் சேர வேணும்.'

'நல்லவேளை ஆம்பிளைப் பிள்ளை, பெட்டையாய்ப் பிறந்து துலைக்கேல்லை. இந்தளவு கஷ்டத்துக்கையும் அவளுக்கு ஒரு நல்ல காலம் இருந்துட்டுது' என்று ஊர் பேசிக் கொள்வதாக மரிசலீன் சொன்னாள். மூன்று இறாத்தல் எடையுடன் தலை பெரியதாக, மெலிந்த கால் கைகளுடன் இருந்த குழந்தை தொடர்ந்து அழுதது. பால் சுரக்காத முலைகளைச் சப்பி வீரிட்டது.

நல்ல வேளை ஆம்பிளைப்பிள்ளை!

அதன் பின் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று அவளாக முடிவெடுக்கவில்லை. ஊர் சேர்ந்து அவள் கற்புடன் இருக்க வேண்டுவதாக முடிவு செய்தது. அவளை யாரும் கேட்கவில்லை. இவள் மரிசலீன் வீட்டுக்குப் பின்னால் ஒரு கொட்டிலைப் போட்டுக்கொண்டு வாழத் தொடங்கினாள். சுவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் மட்டைத் தடுப்பு கூட இல்லாத கொட்டில். அவர்களுடன் பல்லியும் ஓணானும் தேரையும் சுதந்திரமாகக் குடியிருந்தன.

வாழ்க்கை பெரும் சிரமமாக இருந்தது. ஊரில் யார் எந்த வேலை கேட்டாலும் செய்ய வேண்டியிருந்தது. கிடுகு பின்ன வேண்டும், தேங்காய் உரித்துக் கொடுக்க வேண்டும். கல்யாணங்கள், சாமத்திய வீடுகள், செத்த வீடுகள், திவசங்கள், எல்லா விருந்துகளிலும் தேங்காய் துருவி, மரக்கறி அரிந்து, பாத்திரங்கள் கழுவிக் கொடுப்பாள். குழந்தையை தனக்கருகில் ஒரு பாயில் கிடத்தி விட்டு வேலை செய்வாள்.

அடிக்கடி வருகிற தலை சுற்றலுக்கு மருந்து வாங்க அப்போவிடம் போக வேண்டியிருந்தது. அவளுக்கு சமச்சீரான உணவில்லாதுதான் காரணம் என்று அப்போவுக்குத் தெரியும். தனது கிளினிக்கில் வேலை வாங்கிக் கொடுத்தார். அவரே இரண்டு வெள்ளைச் சேலைகள் வாங்கிக் கொடுத்தார். பெட்டி மருந்துகளை அடுக்க வேண்டும். மருந்துப் போத்தல்களைக் கழுவிக் காய வைக்க வேண்டும். அறைகளைக் கூட்டித் துடைக்க வேண்டும். சம்பளம் அதிகம் இல்லை என்றாலும் நிரந்தர வருமானம்.

•

மதுரம் தன் பரம்பரை வீட்டை விற்பதற்காக வந்து நிற்கிறான். பழைய வீடு. நாலு பக்கமும் திண்ணை கொண்ட, தாழ்வாரம் இறங்கிய பதிவான வீடு. சமீபத்தில் கனகமணி கிடுகுக் கூரையை மாற்றி அஸ்பெஸ்ரஸ் சீற் அடிப்பித்திருந்தாள். ஆமி இருந்து விட்டுவிட்டுப் போன வீடு, திருத்த வேலைகள் இருக்கத்தான் செய்யும். ஊர் முழுக்க திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தது.

மதுரம் குறையேதுமின்றி இருக்கிறான் என்று பூவரசி அறிந்திருந்தாள். அவனுக்கு இந்த வீடு தேவையில்லை, விற்று விட்டு மனைவியின் ஊரில் குடியேறப் போவதாகக் கேள்விப்பட்டாள்.

அவன் தனியாகத்தான் வந்திருக்கிறான் என்பது மட்டும் தெரியும். எப்படியாவது உதவி கேட்க வேண்டும், தருவானோ.., பேசுவானா...? தெரியவில்லை. எப்படிக் கேட்பது என்று ஒரு திட்டமும் இல்லை.

ஜெயந்தன் அப்படியே மதுரத்தைக் கொண்டு வளர்ந்து விட்டான். அவள் சொல்லாத உண்மை ஊருக்கு இப்போது தெளிவாகவே தெரியும். அந்த வீட்டுக்குள் எப்படி நுழைவது? கனகமணி கால் அடித்து முறிப்பாள். சும்மா பகிடியாய்க் கேட்டவர்களையே வாசல் வரை வந்து தூற்றித் துரத்தியிருக்கிறாள்.

'ஆனா விடக்கூடாது, அந்தக் காணி எழுவது பரப்புக்கு மேலை, பின் காணியிலை ஒரு அஞ்சு பரப்புத் தந்தாலும் போதும், ரெண்டறையோடை ஒரு சின்ன வீடும் கிணறும் கட்டிப் போடலாம். பன்னண்டிப் பாதை கேட்டு வாங்க வேணும்.' வீடு கட்டக் காசு சேர்த்து வைத்திருந்தாள். 'இந்த விசயத்திலை வெக்கம் மானம் பாத்தாக் காரியம் நடவாது. பிள்ளையை எப்பிடிப் பெத்தாலும் அவனுக்குத் தேப்பன்ரை சொத்திலை பங்கிருக்குத்தானே, அதை யாரும் மறுக்கலாமே. ஆனா சண்டை ஒண்டும் பிடிக்காமத் தன்மையாய்த்தான் கேக்க வேணும். மதுரத்தோடை எனக்கென்ன சண்டை, அதுவும் இனியென்ன?'

எத்தனை அலைச்சல் பட்டு ஜெயந்தனை வளர்க்க வேண்டியிருந்தது.

கொஞ்சம் நல்ல சேலை உடுத்தால் 'ஆரிட்டைப் போக மேக்கப் போடுறாள்?' என்று சந்தேகப்பட்டார்கள். 'சப்பாத்தியும் சமபோஷாவும் வாங்க சிலுப்பிக்கொண்டு வெளிக்கிடுறாள்' என்றார்கள். ராணுவத்தின் கடவுப் பாதை கடக்கும் போது இவளை மட்டும் நூறு கேள்விகள் கேட்பார்கள். அவர்களும் அரைகுறையாக இவளுடைய வாழ்க்கை பற்றி அறிந்திருந்தார்கள். அவள் ஒவ்வொன்றாகப் பதில் சொல்லி வெளியே வந்து சேர 'உவ்வளவு நேரம் காம்புக்கை என்ன செய்தவள்...?' ஊர் பேசிக் கொண்டே இருந்தது. அரசாங்கம் நிவாரணம் தருவதாக அறிவித்த போது அவள் அலைந்த அலைச்சல். 'எத்தினை போம், எத்தினை கையெழுத்து, எத்தினை பேரிட்டைப் போய்ப் பல்லைக் காட்ட வேண்டியிருந்தது.

'ஒருக்காப் போனவள், பிறகென்ன... நாங்க கேட்டால் வர மாட்டாளோ?' என்ற எண்ணத்துடன் அவளைப் பலர் சுற்றிக் கொண்டிருந்தார்கள். யாருமே கல்யாணம் செய்து கொள்வதாகச் சொல்லவில்லை. 'இத்தனை கற்போடு இருந்திருக்கத் தேவையில்லை' என்று அடிக்கடி நினைப்பாள். 'இருந்தென்ன பிரயோசனம், ஆராவது நல்லாய்ச் சொல்லினமா, சும்மா பொத்தி வச்சதுதான் மிச்சம்.'

'வெள்ளெனவாய்க் கலைச்சுப் போட்டு வேறை ஒரு கலியாணத்தைக் கட்டியிருக்

தொடர்தல் 98ம் பக்கம்

# கடன்

97ம் பக்கத் தொடர்ச்சி...

கலாம்' என்று அம்மா கூடச் சொன்னாள். என்னவோ மாப்பிளையள் வரிசையிலை நிண்ட மாதிரியும், தான்தான் ஏதோ பிழை விட்ட மாதிரியும்... என்ன கதையிது. அந்தத் துணிவை அப்பவெல்லோ காட்டியிருக்க வேணும். இப்ப சொல்றவள் அப்ப கலைக்க உதவி செய்திருப்பாளோ, தம்பி அடிக்கேக்கை கையைக் கட்டிக் கொண்டு பாத்துக் கொண்டு நிண்டாளே.

ஒரு வேளை மதுரம் மனம் மாறித் தன்னைக் கல்யாணம் செய்து கொள்வான் என்று ஒரு சின்ன எண்ணம் மனதின் மூலையில் இருந்திருக்கலாம். அதை அவளாலேயே உறுதிப்படுத்த முடியாது.

பூவரசியின் மருமகள் ஓரளவு சீதனத்தோடு வந்தாள். அதில் அவளுக்குக் கொஞ்சம் திமிரும் எடுப்பும் இருந்தது. மாமியாரைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு சொந்த வீடு கூட இல்லாதவள் என்ற இளப்பம்.

'இப்ப பேரப்பிள்ளையும் கண்டாச்சுது. அப்ப மதுரமும் தாத்தாதானே.' அவளுக்கு அதை நினைக்கக் கொஞ்சம் சந்தோஷமாக இருந்தது. அவனுக்குச் சொன்னால் சந்தோசப் படுவனோ?

'முதல் சந்திக்கிற வழியைப் பாப்பம்'

'யார் என்ன சொன்னால் என்ன, இனி என்ன ஆகப் போகுது. உந்த ஆமிக்காரங்களோடையெல்லாம் சேத்துக் கதைச்சதையே கேட்டுக்கொண்டு உயிர் வாழுறன். இலங்கைக்காரன், இந்தியாக்காரன் எண்டு ஆரை விட்டுதுகள். எல்லாம் போய்த் துலையட்டும். என்ரை பிள்ளைக்கு ஒரு நல்ல வழியைக் கடவுள் காட்டினால் போதும்.'

•

'வாங்கோ வாங்கோ' என்று வரவேற்றான்.

அம்மாவிடம் 'இவவைத் தெரியுதுதானே' என்றான். காதோரத்தில் நரை தெரிந்தது. கன்னங்கள் அகன்றிருந்தன. அரைக்கைச் சட்டை வயிற்றுக்கு மேலே இறுக்கிப் பிரிந்தது. கொலருக்குள் பவுண் சங்கிலி. மணிக்கட்டில் சிவப்பு நூல் கட்டியிருந்தான். இளம் வயது மதுரத்துக்கு ஒரு சிலிண்டர் காஸ் அடித்து விட்டது போலிருந்தான்.

படியேறும் போது இருந்த துணிவு இப்போது இல்லை.

'அப்ப சொல்லுங்கோ, எப்பிடி இருக்கிறீங்க?' என்றான்.

அவளுக்குக் குழப்பமாக இருந்தது. அவனோடு கொஞ்சமாவது சண்டை போட வேண்டும் என்று நினைத்திருந்தாள். கொஞ்சம் அழ வேண்டும், 'இது நியாயமா?' என்று கேட்க வேண்டும். பல கற்பனைகள் செய்திருந்தாள் என்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் அல்ல, அவளுக்குள்ளே இன்னும் நியாயம் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்த மதுரத்தின் காதலி. 'ஏன் சுகம் விசாரிக்கிறான்? இப்படி இவன் பேசும்போது காணியில் உன் மகனுக்கும் பங்கு இருக்கிறது என்று எப்படிச் சொல்வது.?

கனகமணி ஒரு தட்டில் வெறுந் தேத்தண்ணியும் பனங்கட்டியும் கொண்டு வந்து அவளருகே நிலத்தில் வைத்தாள். "சீனி முடிஞ்சு போச்சு, கடைக்கும் போகேல்லை" என்றாள்.

"குடியுங்கோ" என்றான்.

தான் வெறுங்கையுடன் வந்திருப்பதை அப்போதுதான் உணர்ந்தாள். 'சீ என்ன என்ரை பழக்கம், அட ஒரு விசுக்கோத்துப் பெட்டியாவது வாங்கிக் கொண்டந்திருக்கலாம்.'

"சொல்லுங்கோ என்ன விஷயம்?"

அவள் தயக்கமாக "ஜெயந்தன்..."

"ஓமோம் அங்கை மில்லுக்குள்ளை கண்டனான், அங்கதான் வேலை செய்யுறார் போலை, நல்லாய் வளந்துட்டார்" என்றான். அவன் முகம் மலர்ந்தது. அந்தக் குரலில் ஒரு சின்னப் பெருமிதம் இருந்தது.

"ஓம் வேலை பறுவாயில்லை, என்ன இன்னும் சொந்த வீடு எண்டு ஒண்டு இல்லை, பேரப் பிள்ளையும் பிறந்துட்டுது. கொட்டிலுக்கை இருக்குதுகள், அது ஒரு பள்ளக் காணி. மாரி காலத்திலை பெரிய ஆக்கினை".

"அதை நானும் நினைச்சனான். ஜெயந்தனோடை சேர்த்தா நான் இந்தக் காணியை நாலாய்ப் பிரிக்கவேணும். அதுதான் நியாயம். என்னம்மா நான் சொல்லுறது?"

தாயின் பதிலை எதிர்பார்க்காது தொடர்ந்தான்.

"நான் பிரக்கிறாசியைப் பாத்துக் கதைச்சனான். அவர் உதிலை ஒண்டும் பிரச்சினை வாராது எண்டு சொன்னவர்".

என்ன சொல்கிறான்?

"வீட்டோடை றோட்டுக்கரைக் காணி பத்துப் பரப்பை உங்களுக்குத் எழுதிப் போட்டு மிச்சத்தை நான் விக்கப் போறன், பின் காணிக்கு ஒரு பன்னண்டடிப் பாதை விடப் போறன். அதிலை உங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லைத்தானே?" என்று கேட்டான்.

வீடா, அவள் சரியாகத்தான் கேட்கிறாளா? அதில் எனக்குப் பிரச்சனை இல்லையா என்று கேட்கிறானா?

"எழுதி உங்கடை கையிலை உறுதி வரும் வரைக்கும் ஒருத்தருக்கும் ஒண்டும் சொல்லாதீங்கோ, ஏன் வீண் பிரச்சினை, ஆரும் ஏதும் சொல்லிக் குழப்பக் கூடாதெல்லோ".

"தேத்தண்ணியைக் குடியுங்கோ".

"நான் இதை எப்பவோ செய்திருக்க வேணும்".

அவள் முன்னால் நிற்கிறவனுக்குள் அவள் காதலன் இல்லை. ஒரு தந்தையாக அவன் பேசிக் கொண்டிருக்கிறான். ஏமாற்றத்தில் மனம் சுருங்கியது. தன்னால் சாதிக்க முடியாதது, அவன் ஒரே ஒரு தரம் ஜெயந்தனைப் பார்த்து விட்டு சொத்து எழுதி வைக்கிறேன் என்கிறான். இதைத்தானே எதிர்பார்த்தாள். ஒரு பிரச்சினையும் இல்லாமல் இந்த விஷயம் நடக்க வேண்டும் என்று எத்தனை வேண்டுதல் வைத்திருந்தாள். அவளுக்கு ஜெயந்தன் மீது ஒரு பொறாமை ஏற்பட்டது. விளக்க முடியாமல் ஒரு சினம் உள்ளே நிறைந்தது. கலைச்சிருக்க வேணும்.

அவள் நிமிர்ந்தாள். "எப்ப பிரக்கிறாசியிட்டைப் போக வேண்டும் எண்டு சொல்லுங்கோ, ஜெயந்தனைக் கூட்டிக் கொண்டு வர வேணுமே, அவரின்றை பிறப்புச் சாட்சிப் பத்திரத்திலை முழுப் பேர் இல்லை".

"இல்லை, நான் உங்கடை பேரிலை எழுதி விடுறன், நீங்கள் உங்களுக்கு விரும்பின மாதிரிச் செய்யுங்கோ. எல்லாம் ஒழுங்கு படுத்திப் போட்டு நான் சொல்லி அனுப்புறன்".

கொஞ்சம் நிறுத்தி தயக்கத்துடன் "அவருக்கும் நீங்கள்தான் விளங்கப்படுத்த வேணும்".

"அவர்..." மகனை அழைப்பதில் அத்தனை மரியாதை.

அவள் எழுந்தாள். "போட்டு வாறன்" என்றாள். 'உன்ரை காணியையும் வீட்டையும் நீயே வச்சுக் கொள், எங்கடை அலுவல் பாக்க எங்களுக்குத் தெரியும்' முழு ஆங்காரத்தோடு அச்சொற்களை அவனை நோக்கி சுழற்றி வீச வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

படி இறங்கினாள். செருப்புகளைக் கால்களில் கொழுவிக் கொண்டாள். முற்றத்தில் மாவிலைகள் ஊடாக சின்னச் சின்ன வெயில்ப்பூக்கள் மணல் தரையில் விழுந்து கொண்டிருந்தன.

கனகமணி வாசல் வரை வந்தாள். "அவன் இதை ரெண்டு மூண்டு வருசமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறான். மனிசியையும் சமாளிச்சு ஒரு முடிவுக்கு வர இவ்வளவு காலமாச்சுது. நான் கைதடியிலை வயோதிபர் இல்லத்திலை போய் இருக்கப் போறன். அதுக்கு என்ரை பென்சன் காசு காணும். நீர் எப்ப எண்டாலும் குடி வரலாம், ஒண்டுக்கும் யோசியாதையும். இவ்வளவு காலம் நல்லாய்க் கஷ்டப்பட்டுட்டீர், இனிச் சுகமாக இருக்க வேணும் எல்லாம் வல்ல ஆண்டவரே" என்றாள்.

படலை திறந்து தண்டவாளம் கடந்து தெருவில் ஏறினாள். வீட்டின் இருள், முற்றத்தின் நிழல் கடந்து வந்த கண்கள் கூசுகிற வெயிலைச் சந்திக்கச் சிரமப்பட்டன, காற்றில் அனல் அடிக்கிற மாதம்.

'வம்பிலை பிறந்தது'.

'எங்கயோ படுத்து எப்பிடியோ பெத்து இதெல்லாம் ஒரு சீவன் எண்டு வந்துட்டுதுகள், ஊருக்குள்ளை அண்டினாலே பாவம்.'

'அது ஒண்டிரண்டே, ஆர் தகப்பனெண்டு அவளுக்கே தெரிஞ்சிருக்காது, உதுகளுக்கு எல்லாம் ஒண்டுதான்...'

'டேய் இஞ்ச வாடா, உன்ரை அப்பர் எங்கையடா?'

'அம்மா சொன்னவ, கப்பலிலை போயிருக்கிறார் எண்டு'

'கப்பலோ, உனக்கு அப்பன் இல்லையே, பிறகெப்படிக் கப்பலிலை போனவன், கொம்மா உன்னை ஏமாத்துறா, போய்க் கேளடா.'

'அவை சும்மா சொல்லுகினம். என்ரை ராசாவேல்லே, அப்பா வருவார், பிள்ளை அழாதேயும், வரேக்கை பிள்ளைக்கு ரொபி, சேட்டு, சப்பாத்து எல்லாம் கொண்டு வருவார்.'

'வம்பிலை தானே பெத்தனி' என்று மருமகள் கூடச் சொல்லியிருக்கிறாள். இவள் காது கேட்காத மாதிரி இருப்பாள். தலைக்குள் எப்போதும் ஒரு வண்டின் ரீங்காரம் 'வம்பிலை, வம்பிலை, வம்பிலை...'

அவள் வாழ்க்கையின் ஒரே ஒரு உறவு முப்பத்தாறு வயதில் வந்தது. ஆறே மாதங்கள். அதிலும் கூட எத்தனை நாட்கள்?

இரவில் சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்து அவன் காணிக்குள் நுழைவான். அவள் படலையின் கட்டை அவிழ்த்து வைத்திருப்பாள். நாயைக் கொண்டு போய்ப் பின்னால் கட்டி மீன் குழம்பு கலந்த பழஞ்சோறு வைத்து அமைதிப் படுத்தியிருப்பாள்.

கிணற்றுக்கட்டில், அடுக்கி வைத்த கிடுகுக் கட்டுகளுக்குப் பின்னால்,

ஒரு தரம் வீட்டுத் திண்ணையில்...

எப்போதும் திரி குறைத்த விளக்கொளியில், அல்லது தேயும் நிலவொளியில்... அத்தனை அருகில்கூட அவன் முகத்தை முழுதாகப் பார்த்ததில்லை.

கூனல் முதுகு சற்று நிமிர்ந்தது. உடல் இறுக்கம் தளர்ந்து குளிரத் தொடங்கியது. தெருவில் நின்று திரும்பிப் பார்த்தாள்.

'என்ரை பிள்ளையின்ரை வீடு, தகப்பன் வீட்டுச் சொத்து!'

'இனிச் சொல்லட்டும் பாப்பம், ஒரு... வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லட்டும் பாப்பம். முன்னாலை வந்து நில்லுங்கோடி பாப்பம்.'

அவள் நடுத் தெருவில் நடந்தாள்.



ravichandrika@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422





புதுப்பொலிவுடன் புதிய முகவரியில்!!
NANOCAL
எழும்பு, மூட்டு ஆரோக்கியத்திற்கு!!
NanoCal is a supplement that has been approved by the US FDA as a CURE for osteoporosis and osteoarthritis. NanoCal can actually reverse and cure these conditions!
SAGEE
HIGH POTENCY
PURE HERBAL EXTRACTS
Combining best practices from Eastern herbal medicine and Western research, the Sagee capsule was developed after years of dedicated research by a team of scientists and herbal medicine specialists. SAGEE capsule is a pure natural herbal product extracted and refined through advanced GMP/ISO facility Canada. It is non-toxic, non-addictive and has no side effects.
தூயபொன் கொண்டு தயாரிக்கப்பட்ட முகசரும கிரீம்!!
24 carat Gold Revitalizer - exfoliating facial
A spa quality facial peel without damaging acids or abrasive polishing agents.Gold Revitalizer, sloughs off old, dead skin cells revealing fresh, smooth skin.
GOLD REVITALIZER
Ervamatin
Hair Lotion
Kasturi
TURMERIC
கஸ்தூரி மஞ்சள் உள்ளிட்ட பல மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட கிரீம்
சருமத்தை பாதுகாப்பாகவும் பொலிவாகவும் பேண நம் மூதாதையர் பாரம்பரியமாக பயன்படுத்திய கஸ்தூரி மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட முக சரும பராமரிப்பு!!
முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது. கபாளத்தில் பொடுகைப் போக்குவதுடன் மூலிகை முடியை செழிப்பாக வைத்திருக்கு உதவுகிறது.
Kasturi
TURMERIC & SANDALWOOD
Day Cream
Dreamron
ECO
Hair Color
Specially for:
ஒவ்வாமை அற்ற முடி மை மூலிகை தரும் இன்னுமோர் அற்புதம்!!
Dreamron
HENNA
மூலிகை முடி மை!!
ஊழைச்சதை நீக்கி!!
Gluteala
மூலிகைகள், உடலின் தேவைக்கதிமாக உள்ள ஊழைச்சதையை நீக்கி தேக ஆரோக்கியத்தைப் பேணுகின்றன.
சலரோக நிவாரணி!!
Diabina
மூலிகைகள், உடலின் குளுக்கோஸ் அளவை பராமரிப்பதுடன் இரத்த ஓட்டத்தை சீராக வைத்திருப்பதற்கு துணையாய் இருக்கின்றன.
SABONA
& Gift
2466, Eglinton Ave East Unit 12B
Scarborough, ON. (Midland & Eglinton)
www.amazonhealthcare.ca 416•264•8787



Merry Christmas
& Happy New Year
"One of the greatest joys of this season is the opportunity to say THANK YOU. We wish you and your family the very best for the New Year and look forward to your continued support."
SERANDIB TRAVEL 1
Your Satisfaction is Our Success
உங்கள் மனநிறைவே எங்கள் வெற்றியின் இரகசியம்
Head Office: 7 Eastvale Dr, Suite 01 Markham, ON. L3S 4N8
Tel: 905.472.7500 / 416.750.0009
www.serandibtravel.com info@serandibtravel.com
SriLankan
Emirates
ETIHAD
AIR CANADA
QATAR
JET AIRWAYS
IATA
tico.ca

# Inforce Life காப்புறுதி நிறுவனத்தின் 3வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்









படம்: ரவி அச்சுதன்




Finding Homes to Fit Your Lifestyle



Suba Aynkharan
Broker
Cell: **416-722-4444**
E-mail: suba_ay@hotmail.com

RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: **416-287-2222**
Fax: 416-282-4488

Each Office Independently Owned and Operated.

-digi Media-

# FOR SALE

## 87 Snowball Crescnt
(Markham / Shappard)

## Investment Property in Scarborough

### 7 Bedrooms - Fully Renovated Bungalow /Basement - Sep Entrance

Top To Bottom Newly Renovated House.New Hardwood Floors, Thru-Out Updated Windows, New Kitchen Cabinets With Granite Counter Tops W/Back Splash, Walk Out Balcony's In 2 Room, Good Investment Property. Finished 3 Br Basement W/Sep Entrance Is Good For Rental, 2 New Chandeliers, High Efficiency Furnace, Walk To Sun Deck/Patio. Large Back Yard W/4 Fruit Trees. Close To All Amenities. Front Yard Fenced. New Lawn, Spot Lights In Living Room.

**Detached Bungalow Raised**
Bedrooms: 4 + 3 Washrooms: 3
Kitchens: 1 + 1

**$649,999.00**







# FOR SALE

## 12 Broadbent Avenue, Scar.
(Midland / Eglinton)

## Investment Property in Scarborough

### 6 Bedrooms - Fully Renovated Bungalow /Basement - Sep Entrance

Top To Bottom Newly Renovated House With 6 Bedrooms And 5 Wash Rms. Double Door Entrance With New Hardwood Flr, Doors And Window, Wiring, Insulation, Lawn And Interlocking Brand New Kitchen Cabinets W/Granite Counter Tops & Back Splash. Sunroof In Living & Kitchen Gives Lots Of Sunlight To The House.Good Investment Property. 3 Br With Sep/ Ent Is Good For Rental. Laundry Room In Both Floors. Spotlights On Both Floors. Large Backyard W/Garden Shed.

**Detached Bungalow**
Bedrooms: 3 + 3 Washrooms: 5
Kitchens: 1 + 1

**$699,999.00**










அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

கமல் நவரட்ணம்
**Kamal Navaratnam**
Sales Representative
Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

**HomeLife/Future Realty Inc.**
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

*Trust and reliable services*

**Buying / Selling / Leasing**




ரவீந்திரநாத் தாகூர் 1861-1941. வங்காள இலக்கியத்தையும் இசையையும், அதேவேளை இந்திய கலைகளையும் புதிதாகக் கட்டமைத்தவர். நவீனத்துவத்தை உருவாக்கியவர். 1913 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர். அவரே நோபல் பரிசு பெற்ற முதல் ஐரோப்பியரல்லாதவர். உரைநடையிலும் கவிதையிலும் புதிய உருவத்தையும் வங்காள இலக்கியத்தில் பேச்சு மொழியையும் அறிமுகம் செய்தவர். அதனால் அதுவரை இருந்த மரபார்ந்த சமஸ்கிருத பிடியிலிருந்து வங்காள இலக்கியத்தை விடுவித்தார். இந்தியாவின் உன்னதமான கலைகளையும் பண்பாட்டையும் மேற்குலகுக்கு அறிமுகம் செய்வதில் அதிக செல்வாக்கைச் செலுத்தியவரும் அவரே.

ஏராளமான நிலபுலங்கள் உள்ள பெரும் செல்வந்தப் பிராமணக் குடும்பத்தில் கல்கத்தாவில் பிறந்தவர். இவரின் தந்தை தேவேந்திரநாத் தாகூர் பிரம்ம சமாஜத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். தேவேந்திரருக்குப் பிறந்து, தப்பிப் பிழைத்த பதின்மூன்று குழந்தைகளில் இவரே கடைக்குட்டி. கல்வி, இசை, நாடகம் போன்ற கலைகளில் சிறந்து அமைந்த வீட்டுச் சூழல் அவருடையது. மூத்த சகோதரர்கள் பலரும் பல கலைகளில் சிறந்து விளங்கினார்கள். சகோதரி ஒருவர் நாவலாசிரியை. பதினேழு வயதுவரை வீட்டிலேயே கல்வி கற்றார். அதன் பின் இங்கிலாந்து அனுப்பப்பட்டு விருப்பமில்லாமல் முறைவழிக் கல்வி கற்றார். அதனால் எந்தப் பட்டமும் எடுக்காமல் நாடு திரும்பினார்.

எட்டு வயதில் கவிதைகள் எழுதத் தொடங்கிய இவர் பதினாறு வயதில் போதியளவு கவிதைகளை எழுதி வெளியிட்டார். அவற்றை தொலைந்து போன செவ்வியல் கவிதைகள் என்று அவர் சொன்னபோது பலர் அவற்றை அப்படியே நம்பி ஏற்றும் கொண்டனர். அதன் பின் மூவாயிரத்துக்கும் மேலான கவிதைகள் எழுதினார். சிறுகதை, நாடகம், நாட்டிய நாடகம், பாடல், கட்டுரை, ஓவியம், கவிதை, கேலிப்படம், மாதிரிச் சித்திரம் என்று எண்ணற்ற வகைகளைப் படைத்தளித்தார். விஷ்வ பாரத பல்கலைக்கழகத்தைத் தாபித்தார். தந்தையாரின் சாந்தினிகேதத்தில் தன் ஆச்சிரமத்தை அமைத்துக் கொண்டார்.

உலக நாடுகள் பலவற்றுக்கு விரிவுரைகள் நடத்துவதற்கும், மேற்கிலும் கிழக்கிலும் சுற்றுப் பயணம் செய்த இவர் பலருடன் நட்புப் பூண்டவர். ஹென்றி பேர்க்சன், றொபெற் ஃப்றொஸ்ற், தோமஸ் மான், பேர்னாட் ஷா, யேற்ஸ், எஸ்ரா பவுண்ட், எச்.ஜி. வெல்ஸ், றொமெய்ன்ட் றோலண்ட், ஐன்ஸ்ரைன் போன்றோர் இவரின் நண்பர்கள். காந்தி, நேரு போன்றவர்கள் இவரின் ஆலோசனைகளை மதித்தவர்கள். இந்திய விடுதலை, தலித்துகளின் விடுதலை, ஏழைகளின் விடுதலை போன்றவற்றில் அக்கறை கொண்டவரும் அவர்களைப் பற்றி எழுதிய மனிதாபிமானியுமாவார்.

கடும் செவ்வியல் உருவங்களிலிருந்தும் கடும் இலக்கணப் பிடியிலிருந்தும் வங்காளக் கலையையும் இலக்கியத்தையும் விடுவித்து நவீனக் கலையை உருவாக்கிய சிற்பி. கீதாஞ்சலி, கோரா, காரே பைரே என்பவை அவரின் புகழ் பெற்ற படைப்புக்கள். அவரின் படைப்புக்களிலுள்ள தன்னுணர்ச்சித்தன்மை, பேச்சு வழக்கு, இயற்பண்புவாதம், இயல்புகடந்த கற்பனை ஆகியவற்றுக்காக அவர் போற்றப்படுகிறார். இந்தியாவும் வங்காள தேசமும் அவருடைய பாடல்களை தங்கள் தேசியகீதமாக வைத்திருக்கின்றன. ஜன கண மன, அமர் சொணர் பங்ளா, என்பவை அவை. இலங்கையின் தேசிய கீதப் பாடலான ஸ்ரீலங்கா மாதா என்ற பாடலும் இசையும் இவரின் மெட்டிலேயே அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஆற்றங்கரைப் படிக்கட்டு

## ரவீந்திரநாத் தாகூர்

### ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு: என்.கே. மகாலிங்கம்

கடந்து போன நாட்களைப் பற்றி நீங்கள் கேட்க விரும்பினால் என் படியில் அமர்ந்து நீரலையின் முணுமுணுப்பைக் காது கொடுத்துக் கேளுங்கள்.

அஷ்வின் மாதம்-புரட்டாதி மாதம் ஆரம்பமாகப் போகிறது. ஆற்றில் நீர் நிரம்பி விட்டது. நாலே நாலு படிகள் மட்டும் தான் நீருக்கு மேலாக எட்டிப் பார்க்கின்றன. ஆற்றங்கரையின் கீழ் மட்டப் பகுதிகளில் நீர் எழுந்து நிரம்பி விட்டது. அங்கிருந்த மாமரத் தோப்பின் கிளைகளின் கீழ் கஜு செடிகள் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. ஆற்றின் வளைவில் மூன்று செங்கல் குவியல்கள் அவற்றைச் சுற்றியுள்ள நீரின் மேல் உயர்ந்து தெரிந்தன. ஆற்றங்கரையில் வளர்ந்திருந்த வேப்ப மரத்தின் அடிப் பகுதியில் கட்டப்பட்டிருந்த மீன்பிடி வள்ளங்கள் விடிகாலையில் மேலெழுந்து விழும் அலையில் ஆடிக் கொண்டிருந்தன. ஆற்றங்கரைப் பாதையில் வளர்ந்திருந்த உயரமான செடிகள் மேலெழும் இளஞ் சூரியனைக் கண்டு கொண்டது. அவை இப்பொழுதுதான் பூக்கத் தொடங்கியிருந்தது. இன்னும் முழுவதாகப் பூத்துக் குலுங்கத் தொடங்கவில்லை.

சிறிய படகுகள் சூரிய ஒளி படர்ந்த ஆற்றில் தங்கள் சின்னஞ் சிறிய பாய்களை அவிழ்த்து விட்டிருந்தன. பூசகர் தனது சடங்குப் பொருட்களுடன் குளிக்க வந்திருந்தார். பெண்கள் இருவர் மூவராக தண்ணீர் எடுக்க வந்து கொண்டிருந்தார்கள். அந்த நேரம் தான் குசுமும் குளியல் படித்துறைக்கு வருவாள் என்பது எனக்குத் தெரியும்.

ஆனால் அன்று காலை அவளைக் காணவில்லை. பவுனும் சுவர்ணாவும் படித்துறையில் சோகத்துடன் இருந்தார்கள். கணவனின் வீட்டுக்கு அவளை அழைத்துச் சென்று விட்டார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். கணவனின் வீடு ஆற்றிலிருந்து வெகு தூரத்தில் இருந்தது. அவ்விடத்தில் விசித்திரமான மனிதர்கள் இருந்தார்கள். விசித்திரமான வீடுகளும் விசித்திரமான தெருக்களும் இருந்தன.

காலவோட்டத்தில் குசும் என் மனதிலிருந்து ஏறக்குறைய மறைந்து விட்டாள். ஓராண்டு கடந்து விட்டது. இப்பொழுது படித்துறையில் பெண்கள் குசுமைப் பற்றி அரிதாகவே கதைத்தார்கள். ஆனால் ஒரு நாள் மாலை பரிச்சயமான நீண்ட பாதங்கள் என்னைத் தொடுவதை அறிந்து அதிர்ந்து விட்டேன். ஓம், அந்தப் பாதங்களில் கொலுசுகள் இல்லை. அத்துடன் அவை அவற்றின் முன்னைய இசையையும் மறந்து விட்டிருந்தன.

குசும் விதவையாகி விட்டாள். அவளுடைய கணவன் எங்கோ தூரத்தில் வேலை செய்தான் என்றும் அவனை அவள் ஓரிண்டு முறையே தான் சந்தித்திருக்கிறாள் என்றும் சொன்னார்கள். அவன் இறந்து விட்ட செய்தியை ஒரு கடிதம் கொண்டு வந்திருந்தது. அவள் எட்டு வயதில் விதவையாகி விட்டாள். நெற்றியிலிருந்த சிவத்தப் பொட்டை அவள் அழித்து விட்டாள். கை வளையல்களை கழற்றி விட்டாள். கங்கை ஆற்றுக்கு அருகில் இருந்த அவளின் பழைய வீட்டுக்கே திரும்பவும் வந்து விட்டாள். ஆனால் அவளுடன் விளையாடிய பழைய சிநேகிதிகள் அநேகம்பேர் இப்பொழுது அங்கே இல்லை. அவர்களில் பூபன், சுவர்ணா, அமலா ஆகியோர் மணம் முடித்து எங்கோ சென்று விட்டார்கள். சரத் மட்டும் தான் அங்கே இருந்தாள். அவளும் வருகிற மார்கழி மாதம் மணம் முடிக்க இருக்கிறாள் என்று சொன்னார்கள்.

கங்கை ஆறு மழைக்காலம் வர வர அதிவேகமாக நிரம்ப ஆரம்பித்தது. அதே போல குசுமும் நாளும் பொழுதும் அழகிலும் இளமையிலும் நிரம்பித் ததும்பிக் கொண்டிருந்தாள். ஆனால் நிறம் மங்கிய உடுப்பும், சிந்தனையில் ஆழ்ந்த முகமும், அமைதியான பாங்கும் அவள் இளமையின் மேல் ஓர் ஆடையை போர்த்தி, ஆண்களின் கண்களில் ஒரு மூடுபனி போல் அவளை மறைத்து விட்டன. பத்தாண்டுகள் கடந்து விட்டன. குசும் வளர்ந்து விட்டாள் என்பதை எவரும் கவனித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

புரட்டாதி மாதக் கடைசியில் இதுபோன்ற ஒருநாட்காலையில், உயரமான, இளமையான சிவந்த மேனி நிறச் சந்நியாசி ஒருத்தன் வந்தான். அவன் எங்கிருந்து வந்தான் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு முன்னாலுள்ள சிவன் கோவிலில் தங்கினான். அவன் வந்துள்ள செய்தி கிராமத்தில் எல்லாவிடமும் பரவியது. பெண்கள் தங்கள் குடங்களை விட்டு விட்டு புனித சந்நியாசியை வணங்க கோவிலில் கூட்டமாகக் கூடி விட்டார்கள்.

தினமும் கூட்டம் அதிகரித்துக் கொண்டு வந்தது. சந்நியாசியின் புகழ் பெண்கள் மத்தியில் அதிவேகமாகப் பரவத் தொடங்கியது. ஒருநாள் அவர் பாகவதத்தை ஓதுவார். இன்னொரு நாள் கீதையை பிரசங்கிப்பார். அல்லது கோவிலிலுள்ள புனித நூலொன்றை எடுத்து விளங்கப்படுத்துவார். சிலர் அவரை அறிவுரைக்காக அணுகுவார்கள். சிலர் வசியம் செய்வதற்காவும் சிலர் வைத்தியம் செய்வதற்காகவும் அவரைத் தேடி வருவார்கள். அப்படிப் பல மாதங்கள் சென்றன. சித்திரை மாதம் சூரிய கிரகண நேரத்தில் பெரும் கூட்டம் ஒன்று கங்கையில் நீராடுவதற்காக வந்தார்கள். வேப்ப மரத்தின்கீழ் ஒரு சந்தையும் கூடியது. பல யாத்திரிகர்கள் சந்நியாசியையும் பார்க்கச் சென்றனர். அவற்றில் குசும் மணம் முடித்த கிராமத்திலிருந்து வந்த பெண்கள் கூட்டமும் ஒன்று.

அதுவொரு காலை நேரம். சந்நியாசி எனது படிகளிலிருந்து உருத்திராட்சம் மணிகளை உருட்டிக் கொண்டிருந்தார். அப்போது யாத்திரிகப் பெண்ணொருத்தி இன்னொரு பெண்ணை முழங்கையால் இடித்து, 'இவன் எங்கள் குசுமின் கணவன் அல்லவா?' என்றாள். இன்னொருத்தி தன் முகத்திரையை இரண்டு விரல்களால் சிறிது விலக்கிக் கொண்டு, 'ஓ, அவனே தான்! எங்கள் கிராமத்தின் சட்டர்கு குடும்பத்தின் கடைசி மகனேதான்!' என்று கத்திச் சொன்னாள். தன் முகத்திரையை காட்சிப்படுத்துவது போலக் காட்டிக் கொண்ட மூன்றாமவள், 'ஆ, அதே நெற்றி, அதே மூக்கு, அதே கண்கள்தான்!' என்றாள். இன்னொரு பெண், சந்நியாசியைப் பார்க்காமல் குடத்தால் நீரைக் கலக்கி விட்டுக் கொண்டு, 'சரி தான், அந்த இளைஞன் இனித் திரும்பி வரப் போவதில்லை, அவ்வளவுந்தான்' என்று சொல்லிப் பெருமூச்செறிந்தாள்.

ஒருத்தி அதை மறுத்து, 'அவனுக்கு இப்படிப்

தொடர்தல் 104ம் பக்கம்

# ஆற்றங்கரைப் படி...

103ம் பக்கத் தொடர்ச்சி...

பெரிய தாடியிருக்கவில்லை,' என்றாள். இன்னொருத்தி, 'இப்படி அவன் மெலிந்தவன் இல்லை,' என்றாள். 'அவன் இப்படி உயரமானவனும் இல்லை,' என்றாள் இன்னொருத்தி. அப்படியாக அந்த நேரத்திலேயே அந்தப் பிரச்சினை அப்படியே முடிந்து போனது.

ஒரு மாலை நேரம், முழு நிலவு மேலெழுந்தபோது நீருக்கு மிக அருகிலிருந்த என் படிக்கட்டில் குசும் வந்திருந்து தன் நிழலை என் மேல் விழுத்திக் கொண்டிருந்தாள்.

அப்போது படித்துறையில் எவருமே இல்லை. சில்வண்டுகள் ரீங்காரித்துக் கொண்டிருந்தன. கோவிலிலிருந்து வந்த பித்தளைச் சேவண்டி ஒலியும் மணி ஓசைகளும் ஓய்ந்து விட்டன. கடைசி ஒலி அலைகளும் மெல்ல மெல்ல மறைந்து கொண்டு வந்து இறுதியில் ஆற்றின் கரையில் தொலைவிலிருந்த மங்கலான தோப்பின் நிழல் கரைவது போலக் கலந்து விட்டன. கங்கையின் கருமையான நீரில் மின்னும் சந்திர ஒளியின் கோடு ஒன்று விழுந்திருந்தது. கரையின் மேலே பற்றைகள் புதர்களிலும், கோவில் முக மண்டபத்தின் கீழும், பாழடைந்து கிடந்த வீடுகளின் அடியிலும், ஆற்றங்கரையின் பக்கத்திலும், பனந் தோப்புகளிலும், அருமையான உருவங்களில் நிழல்கள் விழுந்திருந்தன. வௌவால்கள் பாலை மரக் கிளைகளில் தொங்கிக் கொண்டிருந்தன. வீடுகளுக்கு அருகே நரிகளின் உரத்த ஊளையொலி எழுந்தும் தாழ்ந்தும் சென்று ஓய்ந்தது.

சந்நியாசி மெதுவாக கோவிலிலிருந்து வெளியே வந்தார். படித்துறைப் படிகள் சிலவற்றில் அவர் இறங்கியபோது ஒரு பெண் தனியாக இருப்பதைக் கண்டு விட்டு திரும்பிப் போக நினைத்தபோது குசும் திடீரென்று தலையை நிமிர்த்தி பின்னால் பார்த்தாள். அவளின் முகத்திரை வழுக்கி விழுந்தது. அவள் மேலே பார்த்தபோது சந்திர ஒளி அவள் முகத்தில் விழுந்தது.

அவர்களின் தலைகளின் மேலாக ஆந்தை ஒன்று கத்திக் கொண்டு பறந்து சென்றது. அந்தச் சத்தத்தைக் கேட்டு குசும் தன் நிலை உணர்ந்து முகத்திரையால் தலையை மூடி இழுத்து மூடிக் கொண்டாள். பின் சந்நியாசியின் காலில் விழுந்து வணங்கினாள்.

அவர் அவளை ஆசீர்வதித்து, 'நீ யார்?' என்று கேட்டார்.

'என்னை குசும் என்று அழைப்பார்கள்,' என்று பதிலளித்தாள்.

அன்றிரவு அவர்கள் வேறொன்றையும் பேசிக் கொள்ளவில்லை குசும் மெல்ல மெல்ல அருகிலிருந்து தன் வீட்டுக்குச் சென்றாள். ஆனால் அன்றிரவு சந்நியாசி பல மணி நேரம் என் படிக்கட்டில் இருந்தார். கடைசியில் சந்திரன் கிழக்கிலிருந்து மேற்காகச் சென்று சந்நியாசியின் நிழல் பின்னாலிருந்து முன்னால் விழுந்தபோது எழுந்து கோவிலுக்குள் சென்றார்.

அதன்பிறகு குசும் ஒவ்வொரு நாளும் அவருடைய காலில் விழுந்து வணங்குவதைக் கண்டிருக்கிறேன். புனித நூல்களை அவர் விளங்கப்படுத்தும்போது அவள் ஒரு மூலையில் நின்று கேட்டுக் கொண்டிருப்பாள். தன் காலைச் சேவைகளை அவர் முடித்துக் கொண்டு அவளை அழைத்து சமயத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பார். அவை அனைத்தையும் அவள் புரிந்து கொண்டிருக்க மாட்டாள். ஆனால் அமைதியாகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்து அதைப் புரிந்து கொள்ள முயன்றாள். அவர் வழிப்படுத்தியபடியே குறிப்பறிந்து இயங்கினாள். தினமும் கோவிலில் தொண்டு செய்தாள். கடவுளை வழிபடுவதில் விழிப்புடன் இயங்கினாள். பூசைக்குப் பூக்கள் பறித்துக் கொடுத்தாள். கோவில் தரையைக் கழுவுவதற்கு கங்கையிலிருந்து நீர் அள்ளிக் கொடுத்தாள்.

குளிர் காலம் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. குளிர் காற்று வீசியது. இடைக்கிடை மாலைப் பொழுதுகளில் சூடான இளவேனில் தென்றல் எதிர்பாராத பொழுதில் தெற்கிலிருந்து வீசும். வானம் தன் கடுங்குளிரை இழந்து வந்து கொண்டிருந்தது. வேய்ங்குழல்களின் இசை கேட்டது. கிராமத்தில் நீண்ட அமைதியின் பின் இசை கேட்டது. படகோட்டிகள் தம் படகுகளை வலிக்காமல் கீழிறங்கும் நீரோட்டத்துடன் செல்ல விட்டு விட்டு கிருஷ்ணனின் பாடல்களைப் பாடினார்கள்.

அப்பொழுதுதான் குசும் அங்கு வருவது குறைந்து போனது. நானும் அவளைக் காணாமல் நானும் கவலைப்படத் தொடங்கினேன். கோவிலையும் படித்துறையையும் சந்நியாசியையும் தரிசிக்க வருவதைச் சில காலமாக அவள் நிறுத்தி விட்டாள்.

அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் சில காலத்துக்குப் பிறகு அவர்கள் இருவரும் என் படிகளில் ஒரு மாலைப்பொழுதில் சந்தித்தார்கள்.

குனிந்த தலையுடன், 'நீங்கள் என்னை வரச் சொன்னீர்களா?' என்று குசும் கேட்டாள்.

'ஓம். உன்னை நான் இங்கே காண்பதில்லையே, ஏன்? சில காலமாக கடவுளுக்குத் தொண்டு செய்வதை ஏன் நிறுத்தி விட்டாய்?'

அவள் அமைதியாக பேசாமல் இருந்தாள்.

'மறைக்காமல் உன் எண்ணத்தைச் சொல்.'

முகத்தைச் சிறிது மறைத்துக் கொண்டு, 'நான் ஒரு பாவி, சுவாமி. அதனால் கடவுளைத் தொழுவதில் தவறி விட்டேன்,' என்றாள்.

'குசும், உன் நெஞ்சில் அமைதியில்லை என்பது எனக்குத் தெரியும்,' என்றார் சந்நியாசி.

சற்றுத் திடுக்கிட்டு, தன் சேலைத் தலைப்பை இழுத்து முகத்தை மூடிக் கொண்டு, சந்நியாசியின் காலடியில் இருந்து கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

சந்நியாசி சற்றுத் தள்ளி நின்று கொண்டு, 'உன் நெஞ்சில் நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்று எனக்குச் சொல்லு. அது அமைதி அடைவதற்கு நான் வழி சொல்கிறேன்,' என்றார்.

அசைக்க முடியாத நம்பிக்கையுடன் கூடிய தொனியில் சொற்களுக்காக இடைக்கிடை நிறுத்திப் பதிலளித்தாள். 'நான் சொல்லத்தான் வேண்டும் என்று நீங்கள் கட்டளையிடுகிறீர்கள். ஆனால் என்னால் அதைத் தெளிவாகச் சொல்ல முடியாது. சுவாமி, அது என்ன என்று நீங்கள் ஊகித்திருப்பீர்கள். நான் ஒருவரைக் கடவுளைப் போலப் போற்றினேன். தொழுதேன். பக்திப் பரவசத்தால் என் இதயம் நிறைந்தது. ஒரு நாள் இரவு, பூந்தோட்டம் ஒன்றில் என் இதயத்திலிருந்த அந்த இறைவன் என் வலது கையை தன் இடது கையால் பற்றிக் கொண்டு தன் காதலை என் காதுக்குள் குசுகுசுத்தார். அந்தக் காட்சி முழுவதும் எனக்கு அந்நியமாகப் படவில்லை. கனவு மறைந்து விட்டது. ஆனால் அதன் தாக்கம் என்னில் இருந்து கொண்டிருந்தது. அடுத்த நாள் அவரைப் பார்த்த போது அவர் வேறொரு வெளிச்சத்தில் தெரிந்தார். ஆனால் அந்த கனவுச் சித்திரம் என் மனதில் தொடர்ந்து நடமாடிக் கொண்டே இருந்தது. பயத்தினால் அவரை விட்டு நான் நெடுந்தூரம் சென்றேன். ஆனால் அந்தச் சித்திரம் என்னில் ஒட்டிக் கொண்டே இருந்தது. அதன் பிறகு என் நெஞ்சில் அமைதியே இல்லை. எனக்குள் இருள் படர்ந்து விட்டது!'

அவள் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இந்தக் கதையைச் சொல்லும் போது, சந்நியாசி தன் வலது காலால் என் படிக்கல்லை ஊன்றி அழுத்துவதை உணர்ந்தேன்.

அவள் தன் பேச்சை நிறுத்தியபின் சந்நியாசி சொன்னார்:

'உன் கனவில் யாரைக் கண்டாய் என்று சொல்.'

அவள் கூப்பிய கைகளுடன், 'என்னால் சொல்ல முடியாது,' என்றாள்.

'அவர் யார் என்று நீ சொல்லத்தான் வேண்டும்,' என்று சந்நியாசி அவளை வற்புறுத்திக் கேட்டார்.

அவள் தன் கைகளைப் பிசைந்து கொண்டு, 'சொல்லத்தான் வேண்டுமா?' என்றாள்.

'ஓம், சொல்லத்தான் வேண்டும்,' என்றார் சந்நியாசி.

'அவர் நீங்களே தான், சுவாமி!' என்று அழுது கொண்டு என் கல் நெஞ்சில் முகம் குப்புற விழுந்து விம்மினாள்.

அவள் திரும்பவும் தன்னிலைக்கு வந்து நிமிர்ந்து இருந்தபோது சந்நியாசி மெதுவாகச் சொன்னார்: 'நான் இன்றிரவு இவ்விடத்தை விட்டுச் செல்கிறேன். அதனால் இதன் பிறகு நீ என்னைக் காணமாட்டாய். நான் ஒரு சந்நியாசி என்பதும், இந்த உலகைச் சேர்ந்தவன் இல்லை என்பதும் உனக்குத் தெரியும். நீ என்னை மறந்து விட வேண்டும்.'

குசும் சன்னமான குரலில், 'அப்படியே ஆகட்டும், சுவாமி,' என்றாள்.

'நான் விடை பெறுகிறேன்,' என்றார் சந்நியாசி.

எந்த வார்த்தையும் சொல்லாமல் குசும் தன் தலையைத் தாழ்த்தி சந்நியாசியின் காலடி மண்ணை எடுத்து தன் தலையில் வைத்தாள். அவர் அங்கிருந்து அகன்றார்.

சந்திரன் மறைந்தது. இரவின் இருள் படர்ந்தது. நீரில் யாரோ விழுந்து தெறித்த சத்தம் கேட்டது. வானத்தில் இருந்த அனைத்து நட்சத்திரங்களையும் ஊதித் தள்ளி விடுவது போல காற்று இருளில் சினம் கொண்டு உறுமியது.



mahalingam.k@thaiveedu.com

HOME INSPECTION SERVICES

Insight Property Inspection

வீடு விற்று,
வாங்குபவர்களுக்கு
ஓர் நற்செய்தி

உங்கள் வீடுகளை சிறந்த முறையில்
PROPERTY INSPECTION செய்துதர நாடுங்கள்

VIJAY JEGAN
(REGISTERED MEMBER OF OAHI)

647 575 2733

WWW.INSIGHTPROINSPECTION.COM



அழையுங்கள்
விஜெய்:
647 575 2733

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594 Tel: 416-646-3422*


Newest Office
IN SCARBOROUGH
#1
RE/MAX
RE/MAX® ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED
New Agents are Welcome
416-270-1111
1286 Kennedy Rd, Unit #3, Toronto, ON, M1P 2L5


York condos
DOWNTOWN MARKHAM
YMCA
Steps to the New State of the Art York University Campus
With cutting-edge design and sophisticated amenities
Be first to reserve your unit with President's club special incentives
Top 5% in Century 21 Canada
Over 15 years of top producing full time experienced realtor with many international centurion awards, Masters hall of famer and centurion honour society member
Expect results beyond your expectation
Century 21
King's Quay Real Estate Inc.
Brokerage Office: 905-940-3428
AMIR RAMALINGAM, B.Sc.
Sales Representative
Masters Hall of Fame
Cell: 416- 409-6067

# மதங்கள் தரும் மாற்றங்கள்

- உதயணன் -

ஒரு நிகழ்ச்சியைத் தொடங்கும் போது, அதனைக் கடவுள் வாழ்த்தில் தொடங்குவது ஆன்றோர் மரபு. 'மனிதன் மனிதனுக்குச் சொன்ன வேதம் திருக்குறள்,' என்பர். அந்த வேதத்தின் முதல் குறளே கடவுள் வாழ்த்தாக அமைகின்றது. அந்த முதலாவது குறள்:

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு.*

இந்தக் குறளுக்கு அறிஞர் மு.வரதராசனார் எழுதிய உரை வருமாறு: 'எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல் உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.'

காப்புச் செய்யுள் என்பது தமிழ் நூல்கள் பலவற்றில் முதலாவதாக அமையும் பாடல். தாம் படைக்க எண்ணியுள்ள நூலினை வெற்றிகரமாக நிறைவேற்ற இறைவன் துணை நிற்க வேண்டும் என்று துதித்துப் பாடுவது.

வேறு எந்த ஒரு நிகழ்ச்சியைத் தொடங்கினாலும் இந்த வழக்கம் ஆண்டாண்டு காலமாகப் பின்பற்றி வரப்பட்டது. காலப் போக்கில் கருத்துகள் வேறுபட்டன் அவரவருக்குத் தோன்றிய வழிகளில் கொள்கைகள் மாறுபட்டன. தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஒன்றுகூடல்கள் ஆரம்பமாகின. திருக்குறள் படித்துத் தமிழ்விழாக்கள் தொடங்கின. மௌனப் பிரார்த்தனையுடன் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அரசியல்வாதிகளின் கொடியேற்றங்களுடன் பட்டாசுகள் கொழுத்தித் தடல்புடலாகக் கூட்டங்கள் தொடங்கின. இப்படியான சடங்குகள் சம்பிரவதாயங்கள் எதுவும் இல்லா

## நினைவுகளின் நிழல்கள் - 05

மல் மைக்'கின் தலையில் தட்டி, 'ஹலோ, ஹலோ, மைக் டெஸ்ற்றிங்,' என்று துயில் எழுப்பி ஆரம்பமாகின சில சங்கதிகள்.

'காப்பு' என்ற வார்த்தையே 'காவல்' என்ற பொருள் உடையது. வர இருக்கும் அல்லது வரக்கூடும் என்று எதிர்பார்க்கும் அல்லலில் இருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக முன்னெச்சரிக்கையாகச் செய்து கொள்ளும் அல்லது தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் ஒரு முன்னேற்பாடுதான் இந்தக் காப்பு.

அந்த நாளைய மக்கள் இந்தக் 'காப்பு' வகைகளைப் பற்பல தேவைகளுக்காகப் பயன்படுத்தி வந்தார்கள். இவற்றை எந்த அளவுக்கு நம்பலாம் எந்த அளவுக்கு நம்பக்கூடாது என்பது அவரவர் சொந்த விஷயம். ஆனால் இப்படியான பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் அந்தக் காலத்தில் ஏன், இன்னமும் சில இடங்களில் வழக்கில் உள்ளன என்பதைத் தெரிந்து கொள்வது சுவாரஸ்யமாக இருக்கும்.

காப்பு என்றால் காத்தல் பேணுகை என்று பொருள். அப்படிப் பார்த்தால் ஒரு துன்பம் வராமல் தடுப்பதற்கு எடுக்கும் எந்த நடவடிக்கையும் ஒரு காப்புத்தான். தொற்று நோய்கள் வராமல் தடுப்பதற்கு போடும் ஊசி மருந்தைக் காப்பூசி தடுப்பூசி என்கிறோம்.

பெரும்பாலனவர்கள் மஞ்சள், கறுப்பு, சிவப்பு நிற நூல்களைச் சேர்த்துத் திரித்த நூலை மணிக்கட்டில் கட்டி இருப்பார்கள். பட்டு நூலினால் ஆன காப்புக்கயிறுகளை அணிவது அதிக பலன் தரும் என்றும், தம்மைத் தீய சக்திகளிடமிருந்து காக்கும் ஒரு கவசமாக செயல்படும் என்றும் நம்பிக்கைகள் உண்டு. மேலும் செம்பு, வெள்ளி, தங்கம், ஐம்பொன்னில் காப்புகள் செய்தும் அணிந்து கொள்வார்கள். இவை சிறப்பானவையாக இருந்தாலும் பட்டு, தர்ப்பை, அருகம்புல் போன்றவை பிரபஞ்ச சக்திகளையும், நவக்கிரக கதிர் வீச்சுகளையும் ஈர்க்கும் தன்மை கொண்டவை, அதனால் இவைகளைப் பஞ்சு நூல்களாகத் திரித்து கைகளில் அணியலாம் என்றெல்லாம் நூல்கள் சொல்கின்றன. மூலிகைக் காப்புரட்சையை அணிந்தால் எதிரிகள் அஞ்சி நடுங்கி ஓடுவார்களாம். மற்றும் வசியக் காப்புகள் பற்றியும் பழைய நூல்களில் காணலாம். பெண்கள் கரங்களில் அணியும் காப்பு இப்படியான ஒரு காரணத்துடன்தான் ஆதியில் ஆரம்பித்திருக்குமா என்று தெரியவில்லை. அப்படி ஏதாவது இருந்தால் இன்றைக்குப் பெண்கள் முழங்கையிலிருந்து மணிக்கட்டுவரை அடுக்கி வைத்திருக்கும் கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் காப்புகளுக்கும் இந்தக் கட்டுரைக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

அன்றாடம் பாடசாலைகளிலும் இறை வணக்கத்துடன் வகுப்புகளை ஆரம்பிப்பது சம்பிரதாயம். சிறுவயதில் காங்கேசதுறையில் நான் படித்த இரண்டு பாடசாலைகளும் கிறிஸ்தவ பாடசாலைகள். ஆனால் அங்கே இந்து சமய மாணவர்களே அதிகமாக இருந்தார்கள். காலையில் ஆரம்பமணி அடித்ததும் கிறிஸ்தவ மாணவர்கள் ஒன்றாகக் கூடி கிறிஸ்தவப் பாடல்களை உருக்கமாகப் பாடுவார்கள். இந்துசமய மாணவர்கள் தனியாக ஒரு பக்கத்தில் வரிசையாக நின்று 'யேசுநாதர் ஏதோ அடுத்த வீட்டுச் சாமி' என்பதுபோல நகத்தைக் கடித்துக் கொண்டு பிராக்குப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

எனது அடுத்த கட்டம் கல்லூரியில் கல்வி கற்றல். அனுராதபுரம் சென்ற் ஜோசப் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கே ஆங்கில மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டது. தமிழ் சிங்கள மாணவர்கள் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்தார்கள். கல்லூரி வளாகத்தினுள்ளேயே ஒரு பெரிய புனித ஆசையப்பர் தேவாலயமும் இருந்தது. ஆனால் அந்தக் கல்லூரியிலும் கிறிஸ்தவ மாணவர்கள் குறைவாகவே இருந்தார்கள். அங்கேயும் முதல் மணி அடித்தவுடன் கிறிஸ்தவ மாணவர்கள் ஒன்றாகக் கூடிக் கிறிஸ்தவ பாடல்களைப் பாடுவார்கள். ஏனைய இந்து சமய பௌத்த சமய மாணவர்கள் ஓர் ஓரமாக வரிசையாக நின்று நகத்தைக் கடித்துக் கொண்டு பிராக்குப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அன்றைய கல்லூரி நாள் ஆரம்பமாகும்.

வீடுகளில் சைவ சுவாமிப் படங்கள் சுவரில் மாட்டியிருக்கும். சில சமயங்களில் படங்களில் இருந்த சுவாமிகளுக்குப் பொங்கல் நடக்கும். சர்க்கரைப் பொங்கல் 'சுப்பரா'ய் இனிக்கும். பயத்தம் பணியாரம், மோதகம், கொழுக்கட்டை, அரியதரம் ஆகிய பணியாரங்கள் அதைவிட இனிக்கும். அந்த நாட்களில் 'சுகர்' நோய்க்குப் பூவுலகத்தில் பிரவேசிக்க அரிதாகத்தான் விசா கிடைத்தது. அதனால் இனிப்புப் பண்டங்களைக் கட்டுப்பாடு இல்லாமல் எவ்வளவையும் அள்ளிச் சாப்பிடலாம்.

நீளமான தலைவாழையிலையின் நடுவில் ஆவி பறக்கப் பறக்கச் சர்க்கரைப் பொங்கலை அள்ளிக் கொட்டிப் படைத்து, பனை மரத்து சாயோலைகளில் இழைத்த வண்ணத் தட்டுகளின் நடுவில் வாழையிலைத் துண்டுகளை வைத்து, அதன்மேல் இனிப்புப் பலகாரங்களைக் குவித்து வைத்து, சுற்றி வர கதலி வாழைப்பழச் சீப்புகளை அடுக்கி வைத்து, அப்பா மணியடித்துக் கொண்டு சுவாமி படங்களுக்குக் கர்ப்பூரத் தட்டைக் காட்டிவருவார். சிறுவர்களாய் இருந்த எங்களுக்கு அப்பொழுது அப்பரும் சுந்தரும் ஆளுடைபிள்ளையும் அருள்மணிவாசகரும் பொருளுணர்ந்து பாடியதெல்லாம் தெரியாது. எங்களுடைய கைகள் கூப்பியிருக்கும் வாய் உரத்த குரலில் தேவாரங்களைப் படிக்கும். கண்கள் படைத்த பொங்கலையும் பலகாரங்களையும் சுற்றிப் பவனி வரும் நாக்கில் நீர் ஊறிப் பெருகும். அப்பனே, பிள்ளையாரே, முருகையனே, இதுவா சொர்க்கத்தின் முதற்படி என்று கேட்க வைக்கும்.

அன்று அவ்வளவுதான் எங்களுடைய இந்து சமயம்.

இந்து சமயத்தைப் பற்றி அப்பொழுது எங்களுக்குத் தெரிந்ததெல்லாம், கோயில்களில் கொடியேற்றம் நடந்தால் அதனைத் தொடர்ந்து சில நாட்கள் திருவிழாக்கள் வரும் தேர் இழுப்பதையும் காவடியாட்டத்தையும் பார்க்கலாம். மேளக் கச்சேரிகள் நடைபெறும். சில கோயில்களில் 'சின்ன மேளம்' நடக்கும். 'சின்னமேளம்' அந்த நாட்களில் 'அடல்ற்ஸ் ஒன்லி' சமாச்சாரம். அப்பா கச்சான் கடலையும் சோழப்பொரியும் சின்னச் சின்னப் பனங்கட்டிக் குட்டானும் வாங்கித் தருவார். தண்ணீர்ப் பந்தல்களில் இனிப்பான சர்க்கரைத் தண்ணீர் கிடைக்கும் அவ்வளவுதான் எங்களுடைய இந்து சமயம்.!

வாழ்க்கையில் திடீரென ஒரு நீளப் பாய்ச்சல். பரமேஸ்வரா கல்லூரியில் சேர்ந்தேன். கோயிலுக்குள் குடி வந்ததுபோன்ற ஓர் அனுபவம். கல்லூரி வளாகத்திலேயே ஒரு சிவன் கோயில் இருந்தது. காலையில் முதல் மணி அடித்ததும் எல்லா மாணவர்களும் கல்லூரியின் முன்னால் வந்து இரண்டு வரிசையில் நிற்பார்கள். மாணவத் தலைவர்கள், அவர்களை வழி நடத்துவார்கள். மாணவர்கள் நகர்ந்து நகர்ந்து ஆலயத்தின் உள்ளே சென்று நிலத்திலே சப்பணம் கட்டி அமர்வார்கள். அதிபர் சிவபாதசுந்தரம் வந்து மாணவர் வரிசைக்கு முன்பாக நிற்பார். தேவாரம் திருவாசகம் போன்றவை படிக்கப்படும். குருக்கள் தீபாராதனையுடன் பூசை நடத்துவார். விபூதி சந்தனம் வழங்கப்படும். இரண்டு வரிசையாக உட்பிரகாரத்தைச் சுற்றிக்கொண்டு வெளியேறி வகுப்புகளுக்குச் செல்வோம். பாடங்கள் ஆரம்பமாகும்

அதுவரை கிறிஸ்தவ பாடசாலைகளில் படித்துக் கொண்டிருந்த எனக்கு இந்த ஆரம்பம், வானவெளியில் தொலைந்துபோக இருந்த பட்டத்தின், அறுந்த நூலின் காற்றில் அலைந்த தலைப்பைத் துள்ளிப்பாய்ந்து எட்டிப் பிடித்ததுபோல் இருந்தது.

அட, இந்த ஆரம்பமும் நன்றாகத்தான் இருக்கிறது!

பரமேஸ்வரா கல்லூரி வளாகத்தில் இருந்த சிவன் கோயிலில் இந்துமத நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. நாயன்மார் குருபூசைகள் நடாத்தப்பட்டன. சிவராத்திரி கொண்டாடப்பட்டது. சிவராத்திரியை அந்தச் சிவன் கோயிலில் கண்விழித்து அனுஷ்டிக்கும்படி மாணவர்கள் கேட்கப்பட்டனர்.

நவராத்திரி விஜயதசமி பத்து நாள் நிகழ்ச்சிகளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. பத்து நாள் நிகழ்ச்சிகளும் எல்லா வகுப்புகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன. முதலாவது விழாவை ஆறாம் வகுப்பு மாணவரும் ஆசிரியர்களும் செய்வார்கள். ஆறாம்



தொடர்தல் 108ம் பக்கம்

# மதங்கள் தரும்...

107ம் பக்கத் தொடர்ச்சி...

வகுப்பு மாணவர்கள் குறைந்த வயதினர். தம்மால் இயன்ற அளவுக்கு முதலாவது விழாவை நடத்துவார்கள். இரண்டாவது விழாவிலிருந்து போட்டி ஆரம்பமாகும். ஏதாவது சிறப்பு அம்சங்களைச் சேர்த்து விழாவைச் சிறபாக்குவார்கள். எழாம் எட்டாம் ஒன்பதாம் விழாக்களில் போட்டி கடுமையாகும். வெளியிலிருந்து சிறப்புரை நிகழ்த்த இந்துசமய அறிஞர்களைக் கொண்டு வருவார்கள் சிலவிழாக்களில் இசைக் கச்சேரியும் நடைபெறலாம். மலர்களைக் கூடை கூடையாகக் கொண்டு வந்து கொட்டி அலங்காரம் செய்வார்கள் வேறு கோவில்களில் இருந்து வாகனங்களைக் கொண்டு வந்து சுவாமியை உட்பிரகாரம் வெளிவீதி என்று சுற்றி வருவார்கள். மாணவர்களுக்குப் பொங்கல், வடை முறுக்கு வாழைப் பழம் எல்லாம் நிறையக் கிடைக்கும். சிறப்பான போட்டிகளும் சந்தோஷமான சத்தான சண்டைகளும் மனதை அள்ளும். பத்து நாள் விழாக்கள் முடிந்ததும் முழு நேர வகுப்புகள் வழக்கம்போல் நடைபெறத் துவங்கும்.

அதுவும் ஒரு நல்ல அனுபவம்.

இனி, நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் நிகழ்ந்த நவராத்திரி விழாவைப் பார்க்கலாம். கதிரேசன் தமிழ் பாடசாலையில் ஓராண்டு காலம் ஆசிரியராகக் கடமை யாற்றிய பின்னர் என்னை கதிரேசன் கல்லூரிக்கு மாற்றினர்கள். யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரியைப் போல, கதிரேசன் கல்லூரிக்குள் ஆலயம் இல்லாவிட்டாலும் அங்கேயும் ஓரளவுக்குச் சைவசமய நிகழ்ச்சிகள் கொண்டாடப்பட்டன. வருடாவருடம் கல்லூரிக்குள் ஒரு மேடையை அமைத்து, சுவாமி படங்களை அலங்கரித்து வைத்து நவராத்திரி விழாக்களும் கொண்டாடப்பட்டன. அங்கேயும் பத்து நாள் விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடும் பொறுப்பை வகுப்புகளுக்குப் பிரித்துக் கொடுத்திருந்தார்கள்.

ஒரு வார இறுதியில் சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமையாக இருக்கலாம் கதிரேசன் கல்லூரியில் உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவர் சிலர் எனது இருப்பிடம் வந்து என்னைச் சந்தித்தார்கள். அவர்களுக்குத் தலைமை தாங்கி அழைத்து வந்த மாணவருக்குப் பெயர் குணசீலன்.

குணசீலன் இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர். நாவலப்பிட்டிக்கு எட்டுப்பத்து மைல்கள் தொலைவில் உள்ள கொத்மலை என்ற நகரில் குணசீலனின் தகப்பன் வர்த்தகராக இருந்தார் வசதியான குடும்பம். நிறையத் தமிழில் வாசிக்க வேண்டும், முடிந்தால் தமிழில் ஏதாவது எழுத வேண்டும் என்ற ஆர்வம் குணசீலனிடம் தெரிந்தது. சரி, அவர்கள் ஏன் என்னைத் தேடி வந்திருக்கிறார்கள் என்று விசாரிப்போம்.

குணசீலன் சொன்னார். "சேர், நவராத்திரி ஒன்பதாவது நாள் விழாவை எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். அன்றைக்கு அதே மேடையில் 20 - 30 நிமிடங்களுக்கு ஒரு சிறிய நாடகம் நடித்துக் காட்ட விரும்புகிறோம். கல்லூரி அதிபர் அனுமதி தந்துவிட்டார். சிறிதாக என்ன நாடகம் போடலாம் என்று தெரியவில்லை. வீட்டிலே நூலகம் வைத்திருக்கும் சந்திரனைச் சந்தித்தோம். அவர் தான் உங்களிடம் அனுப்பினார்."

"நான் என்ன செய்வது? என்னிடம் எந்தச் சிறிய நாடகமும் இல்லையே. இனி ஏதாவது எழுத முயற்சி செய்யலாம் என்றால் நாட்கள் போதாது. இந்தப் புத்தகக் கடையில் நாடக நூல்கள் எதையும் பார்த்ததாக ஞாபகம் இல்லை. திடீரென்று வந்து இப்படிச் சொன்னால் எப்படி?" என்று நான் கேட்டேன்.

குணசீலன், "எங்க பெரியப்பா ஒரு கதை சொன்னார். திருவிளையாடல் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம் வருகிறதாம். அதில் சிவபெருமான் தருமி என்ற ஏழைப் புலவனுக்கு ஒரு பாட்டு எழுதிக் கொடுப்பதும், அரச சபையில் இருந்த புலவர் நக்கீரன் அதனைக் குற்றம் என்று சொல்வதும், சிவபெருமானே சபையில் தோன்றி நெற்றிக்கண்ணைத் திறந்தபோது, "நெற்றிக்கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே," என்று நக்கீரன் வாதாடியது பற்றியும் சொன்னார். அதை வைத்து நாங்கள் ஒரு சிறிய நாடகத்தைத் தயாரிக்கலாமா?" என்று கேட்டான்.

எனக்கும் அந்தக் கதை தெரியும். திருவிளையாற் புராணத்தில், 52வது படலத்தில் நக்கீரன், "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று சிவபெருமானுடன் வாதாடும் அந்தப் பாடல் வருமாறு:

*கற்றைவார் சடையா னெற்றிக் கண்ணினைச்*
*-சிறிதே காட்டப்*
*பற்றுவா னின்னு மஞ்சா னும்பரார்*
*-பதிபோ லாகம்*
*முற்றுநீர் கண்ணா னாலு மொழிந்ததும் பாடல்*
*-குற்றங்*
*குற்றமே யென்றான் றன்பா லாகிய குற்றந்*
*-தேரான்.*

மேற்படி பாடலின் பொருள் வருமாறு:

அடர்ந்த நீண்ட சடையை உடைய இறைவன், நெற்றிக்கண்ணினைச் சிறிதளவு காட்ட, அதனால் துன்புற்றபோதும், அஞ்சாதவனாய், "இந்திரன் போல் உடல் முழுவதும் கண்களை உடையவர் ஆயினும், உமது பாடல் குற்றம் குற்றமே," என்று கூறினான் தன்னிடத்துள்ள குற்றத்தை அறியாத நக்கீரன்

"அது சரி, அந்த நாடகத்தை எப்படிச் இந்தச் சிறிய அவகாசத்தில் தயாரிப்படுத்துவது?" என்று கேட்டேன்.

"சமீபத்தில் இங்கே நாவலப்பிட்டி சென்ரல் தியேட்டரில் ஒரு படம் பார்த்தேன். ஏ.பி. நாகராஜனின் கதை வசனத்தில் வந்த அந்தப் படத்தில் இந்த நாடகம் வருகிறது. சிவாஜி கணேசன் சிவபெருமானாக நடிக்கிறார். அந்த நாடகத்தை எங்களுக்கேற்ப கூட்டியோ குறைத்தோ எழுதி நடிக்கலாம்," என்றான் குணசீலன்.

இது நிகழ்ந்தது 1956ல். ஆனால் வாசகர்களுக்கு ஏ.பி.நாகராஜனின் தயாரிப்பில் இயக்கத்தில் கதை வசனத்தில் வெளிவந்த 'திருவிளையாடல்' படம்தான் நினைவுக்கு வரும். அந்தப் படத்தில் நக்கீரனாக ஏ.பி. நாகராஜனும் சிவனாக சிவாஜி கணேசனும் தருமியாக நாகேஷும் நடித்த காட்சிகள் மிகுந்த பாராடுதல்களைப் பெற்றன.

எப்படி, அது எப்படி? 1965ல் திருவிளையாடல் படம் வெளிவந்தது. 1965ல் வெளிவந்த திருவிளையாடல் படத்தில் சிவாஜி நடித்த 'சிவன் - தருமி - நக்கீரன்' நாடகத்தை, நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் நிகழ்ந்த நவராத்திரி விழாவில் நடிப்பது பற்றி 1956ல் எப்படிப் பேசிக் கொண்டிருக்கலாம்?

சொல்கிறேன்!

1956ல் 'நான் பெற்ற செல்வம்' என்றொரு கறுப்பு வெள்ளைத் திரைப்படம் வெளிவந்தது. அதற்கு ஏ.பி. நாகராஜன் கதை வசனம் எழுதினார் சிவாஜி கணேசன் கதாநாயகனாக நடித்தார். ஏ.பி. நாகராஜன் அந்தப் படத்தில் ஒரு 'நக்கீரன் - சிவன் - தருமி' நாடகத்தை அமைத்திருந்தார். அந்த நாடகத்தில் சிவாஜி கணேசன் புலவர் நக்கீரனாகவும் சிவனாகவும் இரட்டை வேடங்களில் நடித்தார். இந்த நாடகத்தை கதிரேசன் கல்லூரி நவராத்திரி விழாவில் மேடையேற்றுவது பற்றித்தான் குணசீலனும் நானும் 1956ல் பேசிக் கொண்டிருந்தோம்.

பின்னர் பத்து ஆண்டுகள் கழித்து, அதே ஏ.பி. நாகராஜன் தயாரிப்பு, கதை வசனம், இயக்கத்தில் 1965ல் வெளிவந்த, அதே சிவாஜி கணேசன் நடித்த 'திருவிளையாடல்' படத்திலும் 'சிவன் - தருமி - நக்கீரன்' என்ற அதே நாடகத்தை மீண்டும் கொண்டு வந்தார் அதே நாகராஜன். ஒரே நாடகத்தை இரண்டு படங்களிலும் பார்த்தவர்களுக்கு எந்தவிதமான குழப்பமும் இருக்காது.

எனவே, 'நான் பெற்ற செல்வம்' படத்தில் வந்த நாடகத்தை அடிப்படையாக வைத்து குணசீலன் குழுவினர் ஒரு நாடகத்தை நவராத்திரி விழா மேடையில் அரங்கேற்றினர். இந்த நவராத்திரி நிகழ்ச்சிகள் கதிரேசன் கல்லூரியின் முதல்நிலைப் பள்ளி மண்டப மேடையில் முதல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியரின் அன்புடனும் ஆசியுடனும் நிறைவாக நிகழ்ந்தது.

அந்தத் தலைமை ஆசிரியரின் பெயர் நாவன்னா முத்தையா!

*வளரும்...*



uthayanan@thaiveedu.com

SELS Inc.

CARRIER & RIDE SERVICES

OTTAWA ➡ KINGSTON ➡ TORONTO ➡ HAMILTON

Ottawa Greenboro பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் நேரம்:

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணிக்கும் புறப்படும்.

Toronto வில் இருந்து புறப்படும் நேரம்:

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணி

Parcels + Courier எதுவாயினும் உரிய இடத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்க்கப்படும்.


நீண்ட விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் சிறப்புச்சேவை உண்டு!
We also do small Moving and Parcel delivery all over Ontario!

உங்கள் மனநிறைவே எங்கள் தரம்!

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்:
குமரன் (செல்வா) 613.889.8733 / 647.648.0166
மின்னஞ்சல்: sels4ride@gmail.com

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net


AWARD WINNING FULL-TIME REALTOR
Mississauga $459,000
Britannia & 9th Line
Bedrooms 3, Washrooms 3
Mississauga $639,900
Eglington & Creditview
Bedrooms 4+2, Washrooms 3
Markham $569,000
Markham Rd & Denison
Bedrooms 3, Washrooms 3
Markham $858,900
14th & 9th Line
Bedrooms 4, Washrooms 3
Markham $629,000
Mccowan Rd. & Hwy 7
Bedrooms 3, Washrooms 3
Toronto $359,000
Markham & Sheppard
Bedrooms 3, Washroom 1
Toronto $469,000
Birchmount & Foxridge
Bedrooms 3+2, Washrooms 2
Toronto $489,900
Kennedy Rd & Ellesmere
Bedrooms 3, Washroom 1
Toronto $494,900
Scar Golf Club & Lawrence Avenue
Bedrooms 3+2, Washrooms 2
Toronto $519,900
Brimley & Danforth
Bedrooms 3+1, Washrooms 2
Toronto $499,000
Birchmount & Sheppard
Bedrooms 3+2, Washrooms 2
Toronto $499,100
Eglinton & Bellamy
Bedrooms 2+2, Washrooms 2
Toronto $499,000
Ellesmere & Mccowan
Bedrooms 3+2, Washrooms 2
HONESTY RELIABILITY INTEGRITY
HOMELIFE
Vallikkannan Maruthappan
Direct : 416 880 6051 | www.mvkhome.ca
HomeLife Today Realty Ltd., Brokerage*
Office: 416-298-3200 Independently Owned and Operated.




**உங்கள் கடனை Consumer Proposal**
**மூலம் செலுத்தும் போது**
**85% வரை பணத்தினைச் சேமிக்கலாம்**

**Consumer Proposal is up to 85% cheaper than repaying your debts on your own**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
**We will stop all interest on your debts immediately**

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
**We will stop collection calls, court action & wage garnishments immediately**

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
**We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)**

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப் பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
**We will make one monthly payment to all your creditors**

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
**No need to file for Bankruptcy**

**WE WORK EXCLUSIVELY FOR YOU, AND SAVE YOU THOUSANDS OF DOLLARS**

பலவருடகால அனுபவமுள்ள

**Suren Sornalingam** BBA
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation




**CREDIT RECOVERY CANADA**

Tel: **416-264-1272**
Fax: 416-332-0914
Web: www.creditrecoverycanada.com

# பல்கலைவித்தகர் K. சந்திரசேகரன்

## ஆழத்து முத்துக்கள் 153

- ப. ஸ்ரீஸ்கந்தன் -




பிரபல அறிவிப்பாளர் B.H. அப்துல் ஹமீது அவர்களின் பள்ளித் தோழனாக இருந்து அவருடன் இணைந்து பாடசாலை நாடகங்களில் நடிக்க ஆரம்பித்து இன்றுவரை இலங்கையில் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், மேடை நாடகங்கள் மற்றும் டப்பிங், மொழிபெயர்ப்பு என்று பல்துறைகளிலும் கோலோச்சி வரும் கலைஞர் காளிமுத்து சந்திரசேகரன் அவர்களை ஆழத்து முத்துக்களில் பதிவுசெய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

தெமட்டக்கொட அரசினர் தமிழ் மகாவித்தியாலத்தில் சந்திரசேகரன் பயிலும் நாட்களில் சிறுவயதிலிருந்தே அப்துல் ஹமீது, போல் அன்ரனி போன்றவர்கள் இவரது பள்ளித் தோழர்களாக இருந்துள்ளனர். பாடசாலையில் மேடையேற்றப்பட்ட 'ஜான்சி ராணி' என்ற நாடகத்தில் அப்துல் ஹமீது ராணியாகவும் சந்திரசேகரன் மன்னனாகவும் நடித்துள்ளனர். இது தவிர இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட சிறுவர் மலர் நிகழ்ச்சிகளிலும் இவர்கள் பங்குபற்றி வந்துள்ளனர். வானொலி மாமா சியாம் சுந்தரின் வழிகாட்டலில் சந்திரசேகரன் வானொலியில் ஒலிபரப்பாகி வந்த இளைஞர் மன்றம் என்ற நிகழ்ச்சியில் பங்கேற்கத் தொடங்கினார். இளைஞர் மன்றம் நிகழ்ச்சியை நடத்தி வந்த V. இராசையா மாஸ்ரரின் பயிற்சியில் தமிழை எவ்வாறு உச்சரிப்பது, ஏற்ற இறக்கங்கள் போன்ற வானொலிக்கான சகல வித்தைகளையும் இவர் கற்றுத் தேர்ந்தார்.

இதன் பின்னர் இலங்கை வானொலியின் நாடகக் கலைஞராகத் தெரிவான சந்திரசேகரன் முதன் முதலாக வானொலியில் நடித்த நாடகம் 'அதள பாதாளம்' ஆகும். மாக்சிம் கோர்க்கியின் இந்நாடகத்தை அ.ந.கந்தசாமி தமிழில் மொழிபெயர்க்க சானா அவர்கள் தயாரித்திருந்தார். இந்நாடகத்தில் அப்புக்குட்டி ராஜகோபால், ஆனந்தி சூரியப்பிரகாசம், யோகா தில்லைநாதன், எஸ்.என். தர்மலிங்கம், ராஜேஸ்வரி சண்முகம், கே. மார்க்கண்டன், இராஜேஸ்வரன், தாசன் பெர்னாந்து, நடராஜசிவம் போன்ற முன்னணிக் கலைஞர்கள் நடித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தலைவர் 'வீட்டுக் கல்யாணம்', 'ஒரு படி ஒரு மனிதன் ஒரு அந்தஸ்து', 'இப்படியும் சில மனிதர்கள்' போன்ற 300க்கு மேற்பட்ட வானொலி நாடகங்களில் இதுவரை இவர் பங்கேற்றுள்ளார். இவரது இரண்டாவது நாடகமான 'தலைவர் வீட்டுக் கல்யாணம்' நாடகத்தில் பிரதான பாத்திரங்களில் நடித்த T.S பிச்சையப்பா, ரொசாரியோ பீரிஸ் ஆகியோர் அன்று தனக்குத் தந்த ஆதரவும் ஊக்கமுமே இன்றும் தன்னை நிலைநிறுத்தக் காரணமாக அமைந்தது என நினைவு கூறுகிறார்.

இலங்கை வானொலியில் ஒலிபரப்பான தொடர் நாடகங்களைப் பொறுத்தவரை அசோக் கான் எழுதிய 'ஒரு வீடு கோயிலாகிறது', 'கரையைத் தேடும் அலைகள்', 'உறங்காத உறவுகள்', மரிக்கார் ராம்தாஸ் எழுதிய 'கோமாளிகள்', 'ஆலமரத்தடி வீடு', 'விண்வெளியில் கோமாளிகள்', வரணியூரானின் 'இரைதேடும் பறவைகள்', சில்லையூர் செல்வராஜனின் 'தணியாத தாகம்', கே.எஸ். பாலச்சந்திரனின் 'கிராமத்துக் கனவுகள்' என்பன சந்திரசேகரன் நடித்த புகழ்பெற்ற தொடர் நாடகங்கள் ஆகும். மேலும் தொடர்ந்து 52 வாரங்கள் ஒலிபரப்பான சில்லையூர் செல்வராஜனின் 'நீங்களும் துப்பறியலாம்' என்ற தொடர் நாடகத்தின் முக்கிய கதாபாத்திரமான துப்பறியும் இரத்தினம் என்பது அவருக்குப் பெருமை சேர்த்த பாத்திரங்களில் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் சக்தி FM வானொலிக்காக 'ராஜ ராஜ சோழன்', 'வாந்தியத் தேவன்', 'ஆயிரத்தியொரு அரேபிய இரவுகள்' போன்ற தொடர் நாடகங்களில் பிரதான கதாபாத்திரங்களில் இவர் நடித்திருந்தார். எழுத்து வல்லமை கைவரப்பெற்ற சந்திரசேகரன் 'பாவத்தின் நிழல்', 'வாழவைத்த தெய்வம்', 'மனதில் உறுதி வேண்டும்', 'வேண்டும் ஒரு வேலைக்காரன்', 'நெஞ்சுக்கு நீதி', 'எப்பொழுதும் என்னோடு', 'பகைவனின் காதலி', 'மனிதனும் மிருகமும்', 'இதுதான் வாழ்க்கை' ஆகிய வானொலி நாடகங்களையும் எழுதியுள்ளார்.

பாடசாலை நாடகங்களைத் தொடர்ந்து இவர் அப்துல் ஹமீதுடன் இணைந்து மணிபல்லவ கலாமன்றத்தை ஆரம்பித்த பின் மேடையேற்றிய முதல் நாடகம் 'வீர மரணம்' ஆகும். இந்நாடகத்தில் அப்துல் ஹமீது கட்டப் பொம்மனாகவும் சந்திரசேகரன் வெள்ளையத் தேவனாகவும் நடித்திருந்தனர். மேலும் சந்திரபாமா மாதவன் இயக்கிய 'ராஜதுரோகி' நாடகத்தையும் இவர்கள் மேடையேற்றினர். இதன் பின்னர் சிலோன் சேவா ஸ்டேஜ் உடன் இணைந்து 'சுமதி' என்ற நாடகத்தில் இவர் நடித்தார். தினகரன் நாடக விழாவில் மேடையேற்றப்பட்ட கே.எம். வாசகர் இயக்கிய இந்நாடகத்தில் ராம்தாஸ், ராஜகோபால், சுப்பலஷ்மி காசிநாதன், செல்வசேகரன், விஜயால் பீட்டர் ஆகியோர் நடித்திருந்தனர். சேவா ஸ்டேஜ் மேடையேற்றிய 'புரோக்கர் கந்தையா', 'பார்வதி பரமசிவம்' போன்ற பல நாடகங்களிலும் இவர் பங்கேற்றார்.

கிரேஸி குருப் நாடக அமைப்பினருடன் சந்திரசேகரன் இணைந்து நடித்த 'கிரேஸி கோமாளிகள்' என்ற நாடகம் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மொத்தம் 186 தடவைகள் மேடையேற்றப்பட்டது. மேலும் இவ்வமைப்பினர் மேடையேற்றிய 'காதல் ஜாக்கிரதை', 'ரூப்புத்தரா மல்தானா' ஆகிய நாடகங்களிலும் இவர் நடித்திருந்தார். மேலும் வெள்ளிநிலா கலாலயத்தினரின் 'ஒன்று எங்கள் ஜாதியே', 'சித்தப்பா' மற்றும் சக்தி FM மேடையேற்றிய 'ராஜ ராஜ சோழன்' ஆகிய நாடகங்களிலும் இவர் முக்கிய பாத்திரங்களுக்குப் பெருமை சேர்த்தார்.

திரைப்படத்துறையிலும் கால்பதித்த சந்திரசேகரன் 'கோமாளிகள்' திரைப்படத்தில் நடித்து சிறந்த குணசித்திர நடிகராகப் புகழ் பெற்றார். மேலும் 'புஞ்சி சுரங்க நாதி', 'இரமெதியமா' ஆகிய சிங்களத் திரைப்படங்களிலும் நடித்திருந்தார். இவை தவிர தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்ட பல சிங்களத் திரைப்படங்களுக்கு குரல் வழங்கியிருந்தார்.

ஏராளமான தொலைக்காட்சி நாடகங்களில் பங்கேற்ற இவர் ரூபவாஹினித் தொலைக்காட்சிக்காக ராம்தாஸ் எழுதிய 'அன்புப் பரிசு', 'ஒரு படி ஒரு மனிதன் ஒரு அந்தஸ்து' மற்றும் சி. சண்முகம் எழுதிய 'இனிக்கும் தீபாவளி' ஆகிய நாடகங்களிலும், மாத்தனை கார்த்திகேசுவின் 'காலங்கள்', ராம்தாசின் 'கல்யாணம் பண்ணிப்பார்' ஆகிய தொடர் நாடகங்களிலும் தோன்றிப் பாத்திரங்களுக்குச் சிறப்புச் செய்தார். மேலும் சக்தி தொலைக்காட்சிக்காக இவர் நடித்த 'மீண்டும் மீண்டும் கோமாளிகள்' நாடகம் தொடர்ந்து 32 வாரங்கள் ஒளிபரப்பாகியது குறிப்பிடத்தக்கது. இவை தவிர, சக்தி தொலைக்காட்சிக்காக முல்லை செல்வராஜ் எழுதி இயக்கிய 'இது என்ன மாயம்', 'நிழல்', 'தேகம் சந்தேகம்', 'சதுரங்கம்' மற்றும் சந்திரபாமா மாதவன் எழுதிய 'உயிரே' ஆகிய நாடகங்களிலும் இவர் நடித்திருந்தார். அத்துடன் வசந்தம் தொலைக்காட்சிக்காக இவர் நடித்த 'காதல் கனவு' நாடகத்தில் வளரும் இளங்கலைஞர்களுடன் இணைந்து நடித்து அவர்களை ஊக்குவித்திருந்தார்.

சக்தி தொலைக்காட்சிக்காக சிட்னி சந்திரசேகரா இயக்கத்தில் தமிழிலும் சிங்களத்திலும் தயாரிக்கப்பட்ட 'A9' என்ற நாடகத்தில் சந்திரசேகரன் நடித்திருந்தார். இத்தொலைக்காட்சி நாடகத்தில் புகழ் பெற்ற சிங்களக் கலைஞர்களான மாலினி பொன்சேகா, கமல் அத்தராய்ச்சி ஆகியோரும் நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரூபவாஹினித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'கம்பித வில்', 'தே கப்பி முவ எத்துவ', 'பாவா தீ இர்த்த' ஆகிய தொடர் நாடகங்களிலும் இவர் தோன்றி நடித்துள்ளார். 'கம்பித வில்' நாடகத்தில் எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்கள மக்களின் நன்மதிப்பை பெற்றிருந்த ஒரு விடுதலைப் புலிகளின் படைத்தளபதியாக இவர் நடித்திருந்தார்.

இரு மொழிகளிலும் புலமை பெற்ற இவர் பல நாடகங்களை மொழி மாற்றம் செய்துள்ளார். இந்தியத் தொலைக்காட்சியில் பரபரப்பாகப் பேசப்பட்ட 'சித்தி' என்ற 546 அங்கங்களைக் கொண்ட தொடர் நாடகத்தைச் சிங்களத்தில் மொழி பெயர்ப்பு செய்துள்ளமை இவரது வாழ்வின் ஒரு மைல்கல் ஆகும். இவை தவிர பல தமிழ் நாடகங்களை சிரச தொலைக்காட்சிக்காக மொழிபெயர்த்துள்ளார்.

இலங்கையில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தில் கடமையாற்றிய சந்திரசேகரன் பின்னர் விசாகம் என்ற விளம்பர நிறுவனத்தில் பணியாற்றினார். இதன் பின் சொந்தமாக கலாஞ்சலி என்ற விளம்பர நிறுவனத்தை ஆரம்பித்து நடத்தி வருகிறார். மேலும் தொலைக்காட்சிக்காக நேர்காணல், இசைவார்ப்பு போன்ற பல நிகழ்ச்சிகளைத் தொகுத்தும் வழங்கியும் வருகிறார். அரச உப நாடகக் குழுவில் ஒரு அங்கத்தவராக இருக்கும் இவர் ஒரு சமாதான நீதிவானாவார்.

காளிமுத்து – பார்வதி இணையரின் மகனான சந்திரசேகரத்தின் துணைவியார் பெயர் செல்வி. பிள்ளைகள் சிரஞ்சீவ், சுதர்மன், சிந்தூரன் ஆகியோர்.

இலங்கை மேல்மாகாண சபையினரால் 'கலை அமிர்தன்' பட்டம் வளங்கப்பெற்ற இவரை கொழும்பு றோயல் கல்லூரியினர் கௌரவம் செய்து வாழ்த்தியுள்ளனர். எமது மண்ணில் வாழ்ந்து கொண்டு, ஒரு நீண்ட தொடர்ச்சியாகக் கலைச்சேவை ஆற்றிவரும் K. சந்திரசேகரனை நாமும் வாழ்த்துகிறோம்.



sriskandan@thaiveedu.com

**உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?**

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

# பேசரிய மூதறிஞர் சின்னையா ஆசிரியர்

இலக்கிய உறவுகள் - 59

- வி. கந்தவனம் -

சின்னையா ஆசிரியர் என்னுடைய சிறந்த நண்பர்களில் ஒருவர். என்னுடன் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற் படிப்பித்தவர். நண்பர் என்றாலும் பாடசாலை நேரங்களில் அவர் அதிகம் என்னுடன் பேசமாட்டார். கருமமே கண்ணாயிருப்பார். அதாவது கற்பித்தலே கருமமாயிருப்பார். பேசுவதென்றாலும் படிப்பித்தல் மற்றும் மாணவர் நடத்தைகள் பற்றியதாகத்தான் இருக்கும். மற்றும்படி பாடசாலைக்கு வெளியே அவர் ஒரு கவுண்டமணி: பகிடியோ பகிடி! அவற்றையும் விளங்கிப் பிடிக்கக் கொஞ்ச நேரம் எடுக்கும். ஏனென்றால் அவரது பகிடிகள் பெரிதும் அங்கதமானவை.

### பின்னணி:

ஆசிரியர் திரு. மு. சின்னையா அவர்கள் வடமராட்சியைச் சேர்ந்த அல்வாயில் 01. 01.1922ல் பிறந்தவர். பெற்றார் திரு. முருகேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதிகள். தம்பதிகளுக்கு எல்லாமாக ஐந்து பிள்ளைகள். வல்லிபுரம் என்பவர் சின்னையாவுக்கு மூத்தவர். பூரணம், வள்ளியம்மா, செல்லம்மா ஆகியோர் தங்கைமார்.

சின்னையா ஆரம்பக் கல்வியை அல்வாய் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் கற்று இளவயதிலேயே ஆசிரியத் தொழில் பார்க்கத் தொடங்கிவிட்டார். அதற்கு ஒரு காரணம் அவர் கல்வி கற்றுக்கொண்டிருந்த இளம் பராயத்திலேயே தந்தை முருகேசு இறைபதம் அடைந்தமைதான். அதுமட்டுமன்றி எமது சமுதாயத்திலே தங்கைமாருக்கு உதவுவது தமையன்மாரின் பிறப்புக் கடமை என்ற நிலைமை வேரூன்றியிருப்பதும் மற்றொரு காரணம். இருந்தாலும் அதில் தமையன்மாருக்கு இருக்கின்ற மகிழ்ச்சியிருக்கே, அதற்கு இந்த வையகம் மற்றும் வானகந்தானும் இணையாக முடியாது. உடன்பிறப்புக்களுக்கு உவப்போடு உதவிவருங் காலத்தில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய தராதரப் பத்திரத்தையும் பெற்றுக் கொண்டார்.

### இல்லறம்:

கட்டிளங் காளை சின்னையாவைக் கைப்பிடித்தவர் அழகிய கன்னி பூபதி. அவர் திருவும் கல்வியும் சீரும் தழைக்கும் புன்னாலைக்கட்டுவன் வடக்கின் மருக்கொழுந்து. பேச்சுத் திருமணந்தான். அதுவும் தமையன் வல்லிபுரம் பேசிவர, தாயார் தெய்வானைப்பிள்ளை பச்சைக்கொடி காட்டிய திருமணம்.

மணப்பெண் பூபதி ஒழுக்கம் என்னும் விழுப்பத்தில் வாழ்ந்த கதிரேசு - நன்னிப்பிள்ளை தம்பதிகளின் மகள். தற்காத்துத் தற்கொண்டானையும் பேணவல்ல குலமகள். கற்பித்தல் தொழில்பார்க்கும் ஆற்றல் ஆசிரியை. கல்யாணம் பேசத்தொடங்கிய காலத்தில் அவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிற் படிப்பித்துக்கொண்டிருந்தார். மாப்பிள்ளையின் தமையன் வல்லிபுரம் அங்குதான் பூபதியைப் பார்த்திருக்கின்றார் என்று கேள்வி.

மாப்பிளையின் ஊர் பெயர்பெற்ற வழக்கறிஞர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் பிறந்த பதி. பெண் பூபதி பிறந்த புன்னாலைக்கட்டுவன் தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய மகாவித்துவான் கணேசையர் பிறந்த பதி.

பிறகென்ன? திருமணம் அந்தமாதிரி நடந்தது - 20.11.1955ல்.

ஒருமுறை இளைஞர் ஒருவர் கேட்டார்: 'அந்தமாதிரி' என்றால் என்ன ஐயா என்று. அந்தமாதிரி என்றால் ஜீ.ஜீ. பொன்னம்பலம் வழக்குப் பேசி வெல்வது மாதிரி, கணேசையர் சொற்களைப் பிரித்துப் பொருள் சொல்வதுமாதிரி என்றேன். யார் ஐயா இவர்கள் என்றார் இளைஞர். சரியாய்ப் போச்சு! இதற்குப் பெயர்தான் சந்ததி



இடைவெளி! அவருக்குப் பொன்னம்பலம் பற்றியும் கணேசையர் பற்றியும் கொஞ்சம் விளக்கி, அந்தமாதிரி என்பதற்கு மிகவும் சிறப்பாக என்பது பொருள், என்று சொல்லி முடித்தேன்.

இல்லறமாகிய நல்லறத்திலே சின்னையா - பூபதி தம்பதிகளுக்கு சிவகுமார், ஜெயகுமார், அம்பிகைகுமார், பூமகள், ரவிகுமார், நிமலகுமார், சதீஸ்குமார் ஆகியோர் மக்கட் செல்வங்களாக வாய்த்தனர். அவர்கள் அனைவரையும் பாசமுடன் வளர்த்து கல்வியை வழங்கியதோடு, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய சான்றாண்மை நெறியில் நிறுத்தி, உரிய பருவத்தில் எல்லோரும் வாழ்த்த அவர்களை இல்லறத்தில் இருத்திப் பேரப்பிள்ளைகளையும் கண்டு பெருவாழ்வு வாழ்ந்தவர் ஆசிரியர்.

### சேவைகள்:

சின்னையா அவர்களது சேவைகளில் கல்விச்சேவை முக்கியமானது. பாட விளக்கம் என்பது ஒரு கலை. அந்தக் கலையில் சின்னையா ஆசிரியர் கைதேர்ந்தவர். அந்தக் காலத்தில் தனியார் பாடப் பயிற்சிக் கூடங்கள் இல்லை. பாடசாலை ஆசிரியர்களையே மாணவர் நம்பியிருந்தனர். அந்த நம்பிக்கை வீண்போகாதவாறு பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை மாணவர் பெறும் வகையில் சின்னையா ஆசிரியர் பாடங்களைக் கற்பித்தார். இதனை அவர் கற்பித்த யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நானும் உப அதிபராகக் கடமையாற்றினேன் என்ற வகையில் நன்கு அறிவேன்.

அவர் புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம், மன்னார் அடம்பன் மகாவித்தியாலயம், இரத்தினபுரி மகாவித்தியாலயம் என்று எங்கு கற்பித்தாலும் அங்குள்ள மாணவர் மற்றும் ஆசிரியர் உலகத்தில் புகழ்வாய்ந்த ஒரு ஆசிரியராவும் அதிபராகவும் கல்விமானாகவும் பவனிவந்தார். வட்டாரக் கல்விப் பரிசோதகர் மற்றும் கல்வி அதிகாரிகளும் அவரது கல்வி ஆளுமையாற் கவரப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடவேண்டியதொன்று.

அவரது ஆளுமைபற்றிச் சொல்லவேண்டும். உயர்ந்த மனிதர், சீரிய ஒழுக்கம், நேரிய நடை, கூரிய பார்வை என்பன அவரது ஆளுமைக் கூறுகள். இவை யாரையும் கவர வல்லன. மாணவருக்கு இவர் குரு மட்டுமல்ல, பார்த்துப் பின்பற்றத்தக்க முன்மாதிரியான சான்றோனாகவும் விளங்கினார்.

இரத்தினபுரியில் இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் இவரது பாடசாலைக்குப் பக்கமாக இருந்த ஆலயத் திருத்தப் பணிகளைச் செய்வித்து குடமுழுக்கு நடத்தியிருக்கின்றார். புன்னாலைக் கட்டுவன் வடக்கில் இவரது வீட்டுக்கு அருகில் அருள்பாலித்துக் கொண்டிருந்த இராஜராஜேஸ்வரி ஆலயத்தின் வளர்ச்சிக்காகவும் சின்னையா ஆசிரியர் திருத்தொண்டுகள் பல செய்திருக்கின்றார். ஆலயத்தின் தலைவராக இவர் இருந்த காலத்தில் திருவிழாக்கள் முறைறாகவும் சிறப்பாகவும் நடைபெற்றன. திருவிழாக் காலங்களில் அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவுகள் செய்வித்து மக்கள் மத்தியில் ஆன்மிக ஞானத்தை வளர்த்த பெருமை இவருக்குரியது. என்னையும் ஆலயத்திற் சொற்பொழிவுகள் நிகழ்த்த அழைத்திருக்கின்றார்.

புன்னாலைக்கட்டுவன் - ஈவினை மக்கள் ஒன்றியத்தின் தலைவராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றிச் சமூகநல வாழ்வு மேன்மையுற உழைத்திருக்கின்றார். இவரது கல்வி மற்றும் பொதுப் பணிகளுக்கு மனைவியார் பூபதி அவர்களும் உற்றதுணையாக இருந்துள்ளார் என்பது உரத்துச் சொல்லவேண்டிய தொன்று. அவர் கணவனுடன் அடம்பன் மகாவித்தியாலயத்தில் விடுதியில் இருந்து படிப்பித்த காலம் குடும்ப வாழ்வு குலவிக் கொழித்த காலம் எனலாம். அங்கு சின்னையா ஆசிரியர் அதிபர் பொறுப்பிலிருந்ததும் அக்காலமாகும். பின்னர் சின்னையா ஆசிரியர் வயாவிளான் ம.ம.வித்தியாலத்துக்கு மாற்றம் பெற மனைவியார் புன்னாலைக்கட்டுவன் மாவித்தியாலயத்துக்கு வந்து ஓய்வுபெறும்வரை அங்கேயே சேவையாற்றினார்.

இவ்விதம் கல்வி, சமயம், சமூகம் எனும் முத்திறப்பட்ட சேவைகளையாற்றி மக்கள் மதிக்க மாண்புடன் வாழ்ந்த தம்பதியர் நாட்டின் பயங்கர நிலைமை காரணமாகப் பிறந்த பதியை விட்டுநீங்கி இந்தியா சென்று, அங்கு சிலஆண்டுகள் வாழ்ந்தபின் 1994ம் ஆண்டில் கனடாவிற் குடியேறினர்.

### கனடா வாழ்க்கை:


கனடாவுக்கு வந்தபின்னர் சின்னையா ஆசிரியரை இடைக்கிடை காணவும் பேசவும் வாய்ப்புகள் கிடைத்தன. முதன்முதலில் கண்டது கனடா நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் என்று நினைக்கின்றேன். அந்தக் காலத்தில் வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலையில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தேன். அதனைக் கேட்க அவரும் வந்து போவார். அப்படிச் சொல்லுவதும் சரியில்லை. அடிப்படையில் அவர் ஓர் ஆன்மிகவாதி. தாயகத்தில் நல்லூர் முருகனை வணங்கி வந்த பக்தியால் இங்குள்ள நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குக் கும்பிடத்தான் அவர் வந்திருக்கவேண்டும். வந்த இடத்தில் எனது சொற்பொழிவு அவருக்குக் கிடைத்த ஒரு பிரசாதம் எனலாம். அவரே நன்கு சமயம் பேசக்கூடியவர். பாம்பின் காலைப் பாம்பு

தொடர்தல் 113ம் பக்கம்

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்
www.inayam.net

# தமிழ்வலை - 02

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்படும் 'தமிழ்வலை'யின் இரண்டாவதுவது வீச்சு இது. வலைவீச்சை சரியாக நிறுவி தாய்வீட்டுக்கு அனுப்புவர்களுக்கு பரிசளிக்க 'தாய்வீடு' தீர்மானித்துள்ளது. 'தமிழ்வலை'யை சரியாக நிறுவும் ஒருவருக்கு 'தாய்வீடு சார்பில் தமிழ் இலக்கியம் சார்ந்த நூல்களும், சஞ்சிகைகளும் சன்மானமாக வழங்கப்படும்.



### இடமிருந்து வலம்


1 அகப்படாது விரைந்து வெளியேறு
4 வயது
6 தாண்டு
7 ஆந்தை வகை
8 பத்திரம்
11 தலைமுறை
13 மருந்துப்பசை
14 வெளியீடுகள் பிரதியாக்கும் இடம்
16 உலகு
18 தென்னாசியாவில் நடுகைக்கு ஒதுக்கிய நிலையிலுள்ள பிரதான தானியம்
19 நீதிமன்றில் முன்வைக்கப்படும் சான்று
20 திங்கள்
22 ஒரு கிழமை
23 பதில்
24 மருத்துவம்

### மேலிருந்து கீழ்

1 தயாளம் காட்டுதல்
2 இணைத்துக்கட்டு
3 ஒரு கனி
4 உள்
5 போரில் தோற்ற இராவணனின் மனநிலைக்கு கம்பரின் உவமை
9 வந்தனம்
10 சிரி
12 ஒணான் வகை
15 வட இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊர்
16 வழி
17 களைப்பின் வெளிப்பாடு
20 வேதம்
21 வேகம்

தமிழ்வலை போட்டிக்கான விடைகளை நீங்கள் மின்னஞ்சல் மூலமும் கடித மூலமும் அனுப்பிவைக்கலாம். கடிதம் மூலம் அனுப்புபவர்கள் தாய்வீடு பத்திரிகையின் தமிழ்வலை பக்கத்தில் நேரடியாக விடைகளை எழுதியோ அல்லது பிரயெடுக்கப்பட்ட தமிழ்வலைப்பக்கத்தில் விடைகளை எழுதியோ அனுப்பி வைக்கலாம். மின்னஞ்சல் மூலம் விடைகளை அனுப்புபவர்கள் நிரப்பப்பட்ட 'தமிழ்வலைப்' பக்கத்தை படியெடுத்து (Scan செய்து) அனுப்ப வேண்டும். விடைகளை அனுப்புபவர்கள் தமது முழுப்பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகிவற்றுடனேயே விடைகளை அனுப்ப வேண்டும். நடுவர்களின் முடிவே இறுதியானது.

### தமிழ்வலை - 01க்கான விடைகள்



**தமிழ்வலைக்கான விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி**

**thamilvalai@thaiveedu.com**

**தொலைநகல்: 416 849 0594**

**விடைகளை அனுப்பவேண்டிய கடித முகவரி**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

# பேசரிய மூதறிஞர்...

112ம் பக்கத் தொடர்ச்சி...

தானே அறியும்.

ஐயப்பன் ஆலயத்துக்கும் அவர் அடிக்கடி செல்வதுண்டு. அங்கு ஆசிரியர் ஆ.க. மாணிக்கம் அவர்களால் நடத்தப்பெற்ற தமிழ்ப் பாடசாலையின் வளர்ச்சிக்கும் அவர் உதவியிருக்கின்றார். தமிழ்ப் பிள்ளைகள் தாய்மொழியைக் கற்கவேண்டும் என்று வானொலிகளிலும் பொதுக் கூட்டங்களிலும் குரல்கொடுத்துவந்தவர் அவர்.

முதியோர் மன்றக் கூட்டங்களிலும் அசிரியர் சின்னையாவைச் சந்தித்திருக்கின்றேன். ஒரு சுவையான அனுபவத்தை இங்கு சொல்லவேண்டும். நடந்த இடம் மல்வேண். அங்கு நடந்த ஸ்காபரோ முதியோர் சங்கத்தில் ஒரு பேச்சுப்பேச அழைத்திருந்தார்கள். மண்டபத்துள் கால்வைத்ததும் அந்த உயர்ந்த மனிதர்மீதுதான் எனது பார்வை விழுந்தது. இருந்தவர் எழுந்து வணங்கினார். அவருடன் பேச்சுத்தொடுக்க முன் எனது வருகைக்காகவே காத்துக்கொண்டு இருந்தவர்போல் சங்கத் தலைவர் வந்து மேடைக்கு அழைத்தச் சென்றார். அவரது அவசரத்துக்குக் காரணம் கூட்டம் தொடங்குவதற்கு நேரமாகிவிட்டமைதான்.

பேச்சு முடிவில் மதியஉணவுக்கான இடைவேளை. அந்த நேரத்தில் முதியோர் மத்தியில் ஒரு கவிதைப் போட்டி நடத்தியதாகச் சொல்லிப் பல கவிதைகளைத் தந்து முதல் மூன்றைத் தெரிவுசெய்து அறிவிக்கும்படி தலைவர் கேட்டுக்கொண்டார். நான் மேடையில் இருந்தவாறே கவிதைகளை மதிப்பிடத் தொடங்கினேன். சிலமணித்துளிகளில் ஓர் அம்மையார் எனக்குரிய உணவை மேடைக்கே கொண்டுவந்தார். முடிந்ததும் உணவருந்த வரச்சொன்னார்கள். கீழே இறங்கி முதியவர்களுடன் உணவருந்தினேன்.

இடைவேளைக்குப்பின் தலைவரும் நானும் மேடையேறினோம். தலைவர் எனது முடிவுகளைப் பெற்று அவற்றில் இருந்த எண்களுக்குரிய பெயர்களைத் வேறு ஒரு கோவையில் வைத்திருந்த பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்த்து எழுதி, முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களை அறிவிக்கச் சொன்னார். நான் கவிதைக்கலைபற்றிச் சிறு உரை ஒன்று நிகழ்த்தியபின் முடிவுகளை அறிவித்தேன். முதலாவது இடம் திரு. முருகேசு சின்னையா என்று அறிவித்ததும் ஒரே கைதட்டல்.

அவருக்கு அந்த அளவுக்குக் கவிதை எழுதவரும் என்பது எனக்கு அன்றைக்குத் தான் தெரியவந்தது. தமிழ் இலக்கியத்தில் அவருக்கு நல்ல பயிற்சி உண்டு. பல பழைய பாடல்கள் அவருக்கு மனப்பாடம். வானொலி முதியோர் நிகழ்ச்சிகளில் ஔவைப்பிராட்டியாரின் நூல்கள் மற்றும் தனிப்பாடல்கள், திருக்குறள் ஆகிவற்றில் மேற்கோள்காட்டிப் பேசிவந்தது எனக்குத் தெரியும். கீதவாணியில் பேராசிரியர் டாக்டர் யோசேப் போல் அவர்கள் எனது தலைமையில் நடத்தும் கவியரங்க நிகழ்ச்சிகளிலும் இடைக்கிடை வந்து குறிப்புரைகள் சொல்லியிருக்கின்றார். முதியோர் மத்தியில் அவர் மிகவும் பிரபலியமான ஒரு மூதறிஞராகவே பவனிவந்திருக்கின்றார்.

## விருதுகள்:

சின்னையா ஆசிரியர் முதியோர் சங்கங்கள் நடத்திய போட்டிகள் பலவற்றிற் பங்குபற்றி வெற்றிபெற்றுப் பாராட்டுப் பதக்கங்களும் வெற்றிக் கிண்ணங்களும் பெற்ற பெருமைக்குரியவர்.

கனடியத் தமிழ் மகளிர் மாமன்றம் 03.10. 2009ல் நடத்திய ஒளியைத்தேடி என்னும் வருடாந்தக் கலைவிழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி சின்னையா - பூபதி தம்பதிகளைக் கௌரவித்திருக்கின்றது.

## அகவை 90:

இவ்வித பெருமகனின் 90வது அகவையை பெற்றமக்கள் யாவரும் 01.01.2012ல் ஒன்றுகூடிக் கொண்டாடி மகிழ்ந்தனர். அன்றிலும் பேடும்போல இணைபிரியாது அன்போடு வாழும் தந்தையையும் தாயையும் ஒன்றாக இருத்தி கேக் ஊட்டிப் படம் எடுத்துப் பல்லாண்டு பாடி மகிழ்ந்தனர். கனடியத் தமிழ் மகளிர் மாமன்றம் சார்பில் அதன் தலைவர் சரஸ்வதி அரிகிருஷ்ணன் அவர்களும் வாழ்த்து மடல் ஒன்றை வழங்கியிருந்தார்.

எனினும் ஆருயிர் முறைவழிப்படும் என்ப தற்கேற்ப அடக்கமும் அறிவும், துணிவும் பணிவும், ஏற்றமும் தோற்றமும் மிக்க திருவாளர் முருகேசு சின்னையா அவர்கள் தமது 93வது அகவையில் புண்ணிய நாளாகிய சிவராத்திரியன்று வையத்து வாழ்வை நீத்து வானுறையும் தெய்வமாகினார். செய்தி அறிந்து இரங்கற் பாவொன்றைப் பாடி அவரது பிள்ளைகளுக்கு அனுப்பிவைத்தேன். அதன் முதற் செய்யுள் இது:

ஐயா சின்னைய ஆசிரிய
அன்புள்ள நண்ப பேசரிய
துய்ய ஒழுக்க நடைபேணி
தொண்ணூற்று மூன்று வயதுவரை
வையம் தன்னில் வாழ்வாங்கு
வாழ்ந்து வருத்த துன்பமின்றி
செய்ய சிவனார் திருவடிகள்
சென்றாய் நன்றே
வணங்குகின்றேன்!



kandavanam.v@thaiveedu.com


# கலைச்சொற்கோவை

தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குமான கலைச்சொற்களின் மொழிபெயர்ப்புத் தொகுப்பு. துறைவாரியாக 38 கோவைகள் இதில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஏறத்தாழ 10,000 பதங்கள் அடங்கியுள்ளன. அவை அனைத்தையும் "சொற்கோவைத் திரட்டு" என்னும் கோவை தன்னகத்தே கொண்டுள்ளது. பயனாளர் எவரும் தமது தேவைப்படி துறைவாரியாகவோ, திரட்டுவாரியாகவோ தேடுதலில் ஈடுபடலாம். "சொற்கோவைத் திரட்டு" ஏனைய கோவைகள் அனைத்தையும் மட்டுமன்றி மேலதிக பதங்களையும் கொண்டுள்ளது. மாணவர்கள், படைப்பாளிகள், கட்டுரையாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், ஊடகர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், சொற்கோவையாளர்கள் அனைவரையும் உள்ளத்தில் இருத்தி இக்கலைச்சொற்கோவை தொகுக்கப்பட்டுள்ளது.

http://kalaichotkovai.blogspot.ca

தமிழின் வீரியத்தை அகலிக்கும்
மற்றுமொரு முயற்சி



# மாறுதல்கள்

தெளிவத்தை ஜோசப்

50



பெரிய கங்காணியார் வீட்டுப் பாதையிலிருந்து ஓடிவந்த மோட்டர் பைக் பெரிய றோட்டில் திரும்பியபோது அனர்த்திக் கொண்டு மேலே வந்தது பஸ். பஸ்சுக்கு இடம் விட்டு பைக்கை பின்னுக்கிழுத்துக் கொண்ட இராமர் கம்பியடியில் பஸ் நிற்கும் வரை அப்படியே நின்றான். பஸ் நின்றது. ஆட்கள் இறங்கினார்கள். 'சீதையும் இறங்கி வருகின்றதா' என்னும் அவனது எதிர்பார்ப்பு பிழையாகிவிட்டது.

'எங்கே போயிருக்கும்... அய்யாவையும் காணலை...' என்ற நினைவுகளுடன் பைக்கைத் திருப்பினான். பதுளையை நோக்கிய பள்ளத்தில், சப்தமில்லாமல் குடுகுடுவென்று ஓடிக்கொண்டிருந்தது பைக்.

பிரதான வீதியை அடைந்ததும், பைக்கை மேற்பக்கமாகத் திருப்பியோட்டி சிங்கள ஸ்கூல் பஸ் ஹோல்ட்டை ஒரு வட்டம் போட்டுத் திரும்பினான். 'இதுகளையும் இன்னம் காணோம்...' என்னும் நினைவுடன் பதுளை நோக்கி விரைந்தான்.

'இதுகளை எல்லாம் ஒன்னா சேர்த்து தங்கராசோட அனுப்பி வைக்கிற வரைக்கும் பெரிய பாடுதான்...' என்று நினைத்துக் கொண்டான்.

இராமர் மிகவும் சோர்வடைந்திருந்தான். அவனுடைய சோர்வுக்கான காரணம் அவன் மேற்கொண்ட வேலைப் பளுவல்ல! உழைப்பால் சளைக்காத பரம்பரையில் உதித்தவன் அவன். உறவுகளை பிரிகின்ற நட்புக்களை இழக்கின்ற சோகமே அவனைச் சோர்வடையச் செய்திருந்தது. இன்னும் எத்தனை பேர் இப்படி வடக்கு நோக்கி வன்னிக்கும் முல்லைக்கும் மன்னாருக்கும் என்று இடம்பெயரப் போகின்றார்களோ என்னும் ஏக்கமும் அவனை சோர்வடையச் செய்திருந்தது.

கடையை அடைந்தவன் நாளைய பயண ஏற்பாடுகள் பற்றி தங்கராசுவுடன் கலந்து பேசிக் கொண்டிருந்தான். தோட்டத்தில் அவன் மேற்கொண்ட நிகழ்வுகள் பற்றியும் மீனாவும் சுவர்ணாவும் காலையிலேயே பள்ளிக்கூடத்துக்குப் போய் விட்டது பற்றியும் நாளை காலையில் எல்லாரையும் கூட்டிக் கொண்டு வர எல்லா ஏற்பாடுகளையும் செய்துள்ளது பற்றியும் விளக்கமாகக் கூறினான். தங்கராசு ஒரு நன்றி கலந்த புன்னகையுடன் இராமரை அனைத்துக் கொண்டான்.

கடையில் பெரிதாகக் கூட்டம் இல்லாததால் தங்கராசுவுடன் ஓய்வாக உரையாடிக் கொண்டிருந்த இராமர் முதலாளியின் முன் வந்து நின்றான்.

தங்கராசுவை கொஞ்சம் வெளியே கூட்டிக் கிட்டுப் போய் வரட்டுங்களா? என்று கேட்டான்.

பரமசிவம் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

'இனி எப்ப இந்த மண்ணை மிதிப்பானோ தெரியலைங்க... பதுளைப் பக்கம் வருவனோ மாட்டானோ அதுவும் தெரியலை. அவன் ஏற்றுக் கொண்டிருக்கும் பயணமும் அதன் பாதையும் அப்படியானதுங்க...' என்றான்.

'சரி சரி எத்தனை நேரத்துக்குத்தான் உள்ளேயே அடைஞ்சு கெடப்பான். கூட்டிக்கிட்டுப் போ ஆனா தோட்டத்துப் பக்கம் போயிறாதே...' என்றார்.

ஒரு சிரிப்புடன் உள்ளே வந்த இராமர் 'கௌம்பு கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாம் ஐயாகிட்ட சொல்லிட்டேன்...' என்றான். 'எங்கே போகலாம்' என்றான் தங்கராசு.

'நீயே சொல்லேன்' என்ற இராமரிடம் 'துங்கிந்தை' என்றான் தங்கராசு

துங்கிந்தை நீர்வீழ்ச்சி நோக்கி ஓடத் தொடங்கியது பைக். வணக்கத்துக்குரிய கத்தோலிக்க சகோதரர்களால் வெற்றிகரமாக நடத்தப்பட்ட சென் பீட்ஸ் கல்லூரி இப்போது கெப்பிட்டிபொல மகாவித்தியாலயமாகி இருக்கிறது. பிந்திய அறுபதுகளில் தனியார் பள்ளிக்கூடங்களை அரசு பொறுப்பேற்றதன் விளைவுகள் இவை. சிங்களம் பௌத்தம் என்னும் அரசியலோசை கல்வித்துறைக்குள் ஊடுருவிய வரலாறுகள் இவை.

பெட்ரோல் ஷெட் தாண்டி, பழைய சென் பீட்ஸ் தாண்டி, துங்கிந்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது பைக்.

•

பெரிய கங்காணியாரை ஆபீசுக்கு வரும்படி செய்தி அனுப்பி இருந்தார் புதிதாகப் பதவியேற்றிருக்கும் பெரியதுரை.

'இன்னைக்கா' என்று கேட்டவரிடம் 'இப்பவே வரட்டுமாம்' என்றான் செய்தி கொண்டுவந்தவன்.

ஆபீசில் பெரிய துரையைப் பார்த்துப் பேசும் நாள் இன்றல்ல என்பது பெரியகங்காணி யாருக்குத் தெரியும். ஆனாலும் அந்த முகாமைத்துவ ஒழுங்கு முறைகளை எல்லாம் இந்தப் புதியவர்கள் கடைப்பிடிக்கப் போவதில்லை என்பது ஏனோ அவருக்குத் தெரிந் திருக்கவில்லை.

'சரி போ...வர்றேன்' என்று அவனை அனுப்பி விட்டு சிறிது நேரத்தில் ஆபீசுக்குப் போய்ச் சேர்ந்தார்.

அவரைக் கண்டும் காணாததைப் போல் இருந்தார் பெரியதுரை. கொஞ்ச நேரம் அவரை நிற்க வைத்தவர் பிறகு கூப்பிட்டார். ஜன்னலுக்கு வெளியே துரையின் முன் நின்ற பெரிய கங்காணியார் பவ்யத்துடன் குனிந்து வணக்கம் கூறினார். உள்ளே இருந்து பதில் வணக்கம் ஏதும் வரவில்லை. மாறாக 'உனக்கு வேலை நிப்பாட்டச் சொல்லியிருக்கு கங்காணி' என்ற அதிகாரக் குரல் உள்ளிருந்து வந்தது.

பெரியவருக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. ஒரு கணம் தடுமாறிப்போனார். கால்கள் தரைக்குள் புதையுண்டு தன்னை உள்ளிழுத்துக் கொள்வது போலிருந்தது. பேச நா எழவில்லை. அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்த தோட்டம் இது. இதற்குள் ஒரு சிற்றரசனைப் போல் சிரமுயர்த்தி உலா வந்தவர் இவர். இப்படித் திடீரென்று கிரீடத்தைப் பிடுங்கிக் கொண்டு விரட்டி விடுவதென்றால்!... அவரது உடல் நடுங்கியது.

'என்னங்கய்யா அனியாயம் இது. இந்தத் தோட்டத்துக்காக உயிரைக் குடுத்தவன் நான். இப்படித் திடீரென்று வேலை இல்லை போ..என்றால் என்ன அர்த்தம்...' என்று தடுமாற்றத்துடன் பேசினார்.

இவர்களுக்காகக் குரல் கொடுக்க எந்தச் சங்கமும் இல்லை. அந்த முப்பதுகளிலேயே ஏ.ஈ. குணசிங்கவுடன் கருத்து வேற்றுமை கொண்டு வெளியே வந்த நடேசய்யர் இந்தக் கங்காணிமார்களைத்தான் நம்பி இருந்தார். அவர்களுக்காகத்தான் சங்கம் அமைக்க முயற்சித்தார். ஆனாலும் தோட்டங்களில் குட்டிக் குட்டி ராஜாக்கள்போல் வாழ்ந்திருந்த பெரிய கங்காணிமார்கள் அய்யருக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பது வரலாறு.

மலையகத்தின் ஆரம்பக் கோப்பி காலத்தில் கோடிக் கோடியாய் கொட்டிய பணத்தில் புரண்டெழுந்த வெள்ளைக்காரர்கள் 'கோப்பி அழியப் போகிறது... கோப்பிச் செடிகள் பூச்சிக்கடியால் சாகப் போகின்றன என்றும் கிளம்பிய குரல்களைக் கேலி செய்ததற்கொப்பானது தான் இதுவும்.

கோப்பி அழிந்ததும், கோப்பித் தோட்டத் துரைமார்கள் கடன்காரர்களாகி லண்டனுக்குத் திரும்பிப் போக காசில்லாமல் அலைந்ததும் சரித்திரச் சான்றுகள்.

பெரிய கங்காணிமார்களின் ராஜ்யமும் இப்படித்தான் சரிந்தது. இல்லாமல் போனது.

ஜன்னலின் முன் மூச்சுத் திணறிப் போய் நின்ற பெரியவரைப் பார்த்து துரை சொன்னார் 'இது நான் சொல்ற சட்டம் இல்லை. தெரிஞ்சிக்கோ... தோட்டத்தை எடுத்திருக்குற அரசாங்கம் சொல்லுது இந்தத் தோட்டத்துக்கு இனி பெரியகங்காணி தேவையில் லைன்னு... நான் ஒன்னும் செய்ய முடியாது... தெரியுதா! இந்த தோட்டத்துக்கு இனி பெரியகங்காணி தேவையில்லைன்னா நான் ஒன்னும் செய்ய முடியாது.

இந்த முப்பதோட உனக்கு வேலை இல்லை... அடுத்த முப்பதோட உனக்கு தோட்டம் கொடுத்த வீடு இல்லை!


ஒரு மாசம் டைம் குடுக்கச் சொல்லியிருக்கு வீட்டை பாரம் குடுக்க...வீட்டைக் காலி பண்ணி, சாவியைக் குடுத்துறு... இப்ப நீ போகலாம்' என்றார் துரை.

ஆடிப் போனார் பெரிய கங்காணியார். எப்படி நடந்தார்... எப்படி வீடு வந்தார் என்றே தெரியவில்லை. கோட்டைக் கழற்றி மாட்டி விட்டு தொப்பென்று கட்டிலில் விழுந்தவர் தான்.

'தேத்தண்ணி கொண்டாருட்டுங்களா' என்று

தொடர்தல் 117ம் பக்கம்

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்
www.inayam.net


HOMELIFE
HomeLife Today
Realty Ltd., Brokerage*
Independently Owned and operated
BEFORE YOU LIST
YOUR PROPERTY JUST CALL US
& PLEASE LET US EXPLAIN
OUR SERVICES !
Homelife Home Warranty Program
Flexible Commission |
Free Market Evaluation
WE HAVE FEW
SERIOUS BUYERS LOOKING
FOR HOUSE
MORTGAGE CAN BE
ARANGED IN MAJOR BANKS
$149,000
Markham / Sheppard
2+1 Bed Room, 1 Washrooms
Generous Sized Penthouse Unit
In an Attractive and Convenient Location
$155,000
Eglinton Ave/Midland
RESTAURANT
Well Establish West Indian Restaurant &
Bar In Prime Location. Turn Key Operation Easy To Operate,
$189,900
Keele/Rogers
1+1 Bed Room, 1 Washrooms
Built In 2004 With A Modern Touch.
Unit Is Open Concept With Functional Layout.
$279,900
Queen Street West & Dovercourt
1+1 Bed Room, 1 Washrooms
Boutique Loft Living In Vibrant Queen West!
This Includes Car Park, Huge Terr With A 1+Study.
$299,900
Markham/Sheppard
2 Bed Room, 2 Washrooms
Great Location, Bright Corner Unit Beautiful View.
Split Layout Bedrooms. Step To Ttc, Shopping
$389,900
Markham/Sheppard
2+1 Bed Room, 3 Washrooms
New Stacked Town Home In A Very Demanding Area.
Beautiful Flat With 2 Bedroom Along With Den. L
$489,000
Keele/Sheppard
3+2 Bed Room, 2 Washrooms
ery Spacious And Well Kept 3 Bedroom Bungalow,
Basement Apartment With Separate Entrance.
$489,900
Midland/ Kingston Rd
2+1 Bed Room, 2 Washrooms
Beautiful Detached Bungalow On A Large Lot.
Great For Investor Or Live In And Rent Out Basement.
$490,000
Kennedy/Bovaird
4 Bed Room, 3 Washrooms
his Very Spacious All Brick Detached
Home Can Be Yours Today.
$649,000
Ray Lawson/Timberlane
3+2 Bed Room, 4 Washrooms
Brand New Appliances With 10 Year Wrnty Not
Including The Cook Top. 3 Massive Bdrms Fit For Royalty.
$689,000
Markham/Steeles
4 Bed Room, 3 Washrooms
Master Bedroom With Ensuite Washroom.
Well Maintained! Few Steps To School
$739,990
Hwy 7/ Donald Cousens Pkwy
4 Bed Room, 3 Washrooms
Freshly Painted House And Garage. Perfect
Location For Young Family Close To School
$754,900
Salem & Rossland
4+1 Bed Room, 4 Washrooms
Spiral Wooden Staircase! 2nd Floor Split Design
Separate Master Bed From Other Bedrooms.
$929,000
Erin Centre/10th Line
4 Bed Room, 3 Washrooms
Granite Counters, Back Splash, Professional
Finished Landscaping Front And Back.
$190,000
Steeles/Kipling
2 Bed Room, 2 Washrooms
One Of The Largest Units In The Building,
Has Many Upgrades, All Ceramic Floor
Hariharan
Nadarajah
Sales Representative
Cell: 416-856-4276
harisells@gmail.com
2011-2012 PLATINUM CLUB Member
2013-2014 DIAMOND CLUB Member
2013 & 2014
Top 5% GROSS
SALES COMMISSION
Nima
Hariharan
Sales Representative
Cell: 647-866-2642
nimah02@hotmail.com
Not intended to solicit buyers or sellers under contract.
Office: 416.298.3200


PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
OPEN HOUSE SAT - SUN | 1 PM - 4 PM
Toronto - 14 Lamay Cres
Morningside/Old Finch
4+2 Bedrooms, 4 Washrooms
Basement finished / Sep Entrance
OPEN HOUSE SAT - SUN | 2 PM - 4 PM
Toronto - 65 Eldon Ave
Danforth Ave/Sibley
2+2 Bedrooms, 2 Washrooms
Basement finished W/O
COMING SOON
Toronto - Markham/Ellesmere
3+1 Bedrooms, 3 Washrooms
$249,900
Oshawa - Ritson Rd N/Hillcroft St
2+2 Bedrooms, 2 Washrooms
Basement finished
$254,900
Oshawa - Rossland/Mary
2+1 Bedrooms, 2 Washrooms
Basement finished W/O
$289,900
Mississauga - Burnhamthorpe/Duke Of York
1 Bedroom, 1 Washroom
Sep Entrance
$328,888
Oshawa - Ritson/Olive
2+1 Bedrooms, 2 Washrooms
Basement finished / Sep Entrance
$329,900
Oshawa - Wilson Rd S/King St E
2+1 Bedrooms, 2 Washrooms
Basement finished / Sep Entrance
$349,900
Oshawa - Grandview/Willowdale
3 Bedrooms, 2 Washrooms
Basement finished W/O / Sep Entrance
$359,900
Oshawa - Rossland/Ritson
3 Bedrooms, 2 Washrooms
$359,900
Oshawa - Harmony/King
3+1 Bedrooms, 2 Washrooms
Basement finished / Sep Entrance
$369,900
Whitby - Brock/Manning
3 Bedrooms, 2 Washrooms
Basement finished / Sep Entrance
$379,900
Oshawa - Wilson Rd N/Rossland Rd E
4 Bedrooms, 2 Washrooms
Basement finished W/O
$449,900
Brampton - Williams Pkwy/James Potter Rd
4 Bedrooms, 3 Washrooms
$488,800
Mississauga - Hwy 10/Barondale
3 Bedrooms, 4 Washrooms
Basement finished
$519,900
Pickering - Whites Rd/Finch
4+1 Bedrooms, 3 Washrooms
Sep Entrance
$548,800
Toronto - Scarborough Golf Clu/Brimorton
3+3 Bedrooms, 3 Washrooms
Basement finished / Sep Entrance
$588,800
Toronto - Black Creek/Tretheway Drive
3+1 Bedrooms, 3 Washrooms
Basement finished W/O / Sep Entrance
$745,800
Toronto - Scar Golf Club/Kingston
3+2 Bedrooms, 2 Washrooms
Basement finished / Sep Entrance
$1,048,800
Gwillimbury - Mccowan/Ravenshoe South
4 Bedrooms, 5 Washrooms
HomeLife/Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
Bus : 905 201 9977 / Fax: 905 201 9229
Independently Owned and Operated, REALTOR * Sales Representative
HOMELIFE
HIGHER STANDARDS
Uthayan Sivarajah
416 301 5555
Sugan Sivarajah
905 201 0066
Raj Sivarajah
416 843 3333
SivaKumar Sivarajah
416 453 7777

# மாறுதல்கள்...

114ம் பக்கத் தொடர்ச்சி...

கேட்டு நின்ற கிழவியிடம் வேண்டாம் என்று கையசைத்து விட்டு 'சின்னம்மா வர்லயமா' என்று கேட்டார்.

'பஸ்ஸே இன்னும் மேலே வர்லீங்க' என்றவாறு கிழவி வெளியேறினாள்.

இது பற்றி சீதையிடம் மூச்சு விடக்கூடாது பிள்ளையின் படிப்பு வீணாகி விடும்' என்று நினைத்துக் கொண்டார்.

தூக்கமும் வராமல் எழுந்திருக்கவும் பிடிக்காமல் அப்படியே கட்டிலில் கிடந்தார்.

துங்கிந்தை நீர் வீழ்ச்சியின் தண்ணீர்ச் சிதறலில் நண்பர்கள் இருவரும் சிறிது நேரம் லயித்திருந்தனர். துங்கிந்தைச் சாரலால் ஈரமாகிக் கிடந்த தட்டைப் பாறையொன்றில் இருவரும் அமர்ந்து உரையாடினர்.

தங்கராசுவின் லயம் உடைபடப் போகும் செய்தியை இராமர் கூறினான். அந்த மக்கள் என்ன ஆவார்கள் என்பது தெரியவில்லை என்றான்...

காணி சீர்த்திருத்தம் என்னும் போர்வையில் தோட்டங்களை சுவீகரிக்கும் சிங்கள அரசு மலையகத் தமிழர்களை சின்னா பின்னப்படுத்தும் செயற்பாடுகளையே செய்கின்றது என்றான் தங்கராசு. அரசுக்கெதிரான, பொலீஸ் - ராணுவத்துக்கெதிரான புலிகளின் போராட்டம் மிகவும் அவசியமானது என்றான். பரமசிவம் அய்யா போன்ற முதலாளிகள் இயக்கப் பையன்களுக்கு பண உதவி செய்வதை ஆரம்பத்தில் நான்கூட எதிர்த்தவன் தான். ஆனால் நடைமுறை விஷயங்களைப் பார்க்கையில் மேலும் அதிகமானவர்கள் மேலும் அதிகமான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று விரும்புவதாகவும், ஆசைப்படுவதாகவும் அவன் கூறினான். ஊர் சென்றதும் இவர்களை ஒருங்கமைத்துவிட்டு மன்னார் பயிற்சி முகாமுக்குத் தான் செல்ல விருப்பதாகவும் கூறினான். மீனாவின் பெற்றோர் மட்டுமின்றி தோட்டத்தில் இன்னல் அனுபவிக்கும் மற்றவர்களையும் கண்காணித்து முடிந்தவரை வன்னிப்பகுதிக்கு அனுப்ப எத்தனிக்கும்படி கூறினான்.

'நீ கவனமாக இருந்து கொள்' என்று மட்டுமே இராமரால் அவனுக்குக் கூற முடிந்தது.

இருவரும் கிளம்பி வந்தபோது மணிக்கூண்டைத் தாண்டி பஸ் ஸ்டான்ட் திரும்பிய போது தோட்டத்துக்குப் போகும் பஸ்ஸைக் காணவில்லை. ஆனால் ஆட்கள் கியூவில் நின்றனர். சீதையும் வரிசையில் நிற்கின்றாள். வரிசைக்கு வெளியே தாடிக்காரரும் நிற்கின்றார். தாடிக்காரரிடம் பைக்கை நிறுத்தி இருவரும் இறங்கியதும் அவர் சற்றே தடுமாறிப் போனார். இறங்கிய இருவரும் ஹெல்மட்டைக் கழற்றியதும் தங்கராசுவை அவர் இனங்கண்டு புன்னகைத்தார்.

'இன்னும் பஸ்ஸைக் காணவில்லை. இந்தப்பிள்ளையை எப்படி அனுப்புவது என்று தான் யோசித்துக் கொண்டிருந்தேன்... நீங்கள் வந்தது நல்லதாகப் போயிற்று... இவர் உங்களது நண்பரா' என்று கேட்டார்.

'எனக்கு மட்டுமல்ல... இந்த பெண்ணுக்கும் நண்பர்... இந்தப் பெண்ணுக்கு மட்டுமல்ல அவளின் அப்பாவுக்கும் நண்பர்... அதே தோட்டத்தைச் சேர்ந்தவர்... அது சரி இந்தப் பெண்ணை நீங்கள் ஏன் பஸ்ஸிலேற்றி அனுப்பி வைக்க வேண்டும்...' என்றான் தங்கராசு.

'மிக்க மகிழ்ச்சி... இந்தப் பெண்ணை நான் தான் கூட்டி வந்தேன்... இவளுடைய அப்பாவின் அனுமதியுடன், திரும்பி கொண்டு வந்து விடுவேன் என்னும் உத்தரவாதத்துடன்' என்றார் அவர்.

ராமரையும், பைக்கையும் தங்கராசுவையும் கண்டதுமே பைக்படிக்கடியில் நுழைந்து வரிசையை விட்டு வெளியே வந்து விட்டாள் சீதை.

'நீங்கள் எப்படி இவருடன்...' என்று திகைப்புடன் கேட்டான் இராமர்.

'அன்றைய வீதி நாடகத்தில் என்னுடைய பொய்க்கால் நடையில் லயித்துவிட்ட இவர் ஒரு நாடகக் கலைஞர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி, பதுளைப் பெண் என்றதும் சிங்களப் பத்திரிகையில் என்னை நேர்கண்டு எழுத அனுமதி பெற்று விலாசம் தேடி வந்தார்...' என்று விளங்கப்படுத்தினாள் சீதை.

சிங்களப் பேப்பர் றிப்போர்ட்டர் ரணசிங்க எனது நண்பர் அவர் மூலமாகத்தான் நேர்காணல் நடந்தது. காலையில் மூன்றாங் கட்டை சிங்களப் பிரதம விருந்தினர். அப்படியே இந்தப் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு பள்ளிக்கூட விழாவிற்கும் போனேன். றிப்போர்ட்டர் ரணசிங்க இரண்டுக்கும் மூன்றுக்கும் இடையில் வரச் சொன்னார். இப்போதுதான் முடிந்தது' என்றார் அவர்.

இரண்டு பெண்களுக்குப் பரிசு கொடுத்தீர்களே ஒரு தமிழ்ப் பெண்ணும் ஒரு சிங்களப் பெண்ணும்' என்று சீதை ஆரம்பித்ததுமே இடை மறித்த பெரியவர் 'நான் எங்கே கொடுத்தேன் நீ தானே கொடுத்தாய்' என்றார்.

'சரி சரி நாம் கொடுத்தோமே அந்தத் தமிழ்ப் பெண்ணின் சொந்தக்காரர் இவர் என்று தங்கராசுவையும் சிங்களப் பெண்ணின் சொந்தக்காரர் இவர் என்று இராமரையும் காட்டினாள் சீதை.

'ரொம்ப மகிழ்ச்சி, வாருங்கள் ஏதாவது குடிப்போம்' என்றழைத்தார் அவர்.

'வேண்டாம் வேண்டாம்' என்று இருவருமே தடுத்தனர்.

'நீங்கள் இருவரும் இங்கேயே சற்று நில்லுங்கள் நான் இவரை விட்டு விட்டு வருகின்றேன்' என்று தங்கராசுவுடன் கிளம்பிய இராமர் அவனை கடை வாயிலில் இறக்கி விட்டு விட்டு பஸ் ஸ்டாண்ட்டுக்கு வந்தான்.

பெரியவருக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு சீதையுடன் தோட்டம் நோக்கி விரைந்தான்.

சுவர்ணாவுக்கும் மீனாவுக்கும் முதல் பரிசு கிடைத்ததையும், தனது கையால் பரிசினை வழங்கும்படி சிறப்பதிதியாக வந்திருந்த தாடிக்கலைஞர் கூறியது தனக்குப் பெருமையாக இருந்ததெனவும் மகிழ்வுடன் கூறினாள் சீதை.

மோட்டார் பைக்கில் சவாரி செய்யும் சுகம் சீதையின் மகிழ்வான உரையாடலில் தெரிந்தது.

பைக்கிலிருந்து இறங்கியதும் தன் வருகைக்காக வராந்தாவில் நிற்கும் தந்தையைக் காணாது திகைத்துப் போனவள் அப்பாத் தேடி உள்ளே ஓடினாள்.

கட்டிலில் அவர் கிடந்த கோலம் கண்டு பதறியவள் 'என்னப்பா ஆச்சு உங்களுக்கு' என்று கத்தினாள்.

வெளியே பைக்கிடம் நின்ற இராமரும் பதறிய படி உள்ளே ஓடி வந்தான்.

பெரியவர் மயக்கமுற்ற நிலையில் கட்டிலில் கிடந்தார்.

*தொடரும்...*



theliwathai.joseph@thaiveedu.com


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION



Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills



Vasuki Devadas
**Barrister, Solicitor & Notary Public**
vasuki@vdlaw.ca

Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
**Barrister & Solicitor**
devadas@vdlaw.ca

1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere

Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

# வாழ்வை வளமாக்குவது எப்படி?

- சிறீதரன் துரைராஜா -

எங்கள் வாழ்வில் போதிய அளவுக்குப் பணத்தைச் சம்பாதித்து, ஓய்வு பெறுவதற்குப் பல வழிகள் உள்ளன. எங்களுக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் போதிய அளவு பணத்தைச் சம்பாதித்து விட்டால் அமைதியாக ஓய்வு பெற முடியும். இதற்காக ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த வழிகளில் பணத்தைச் சம்பாதிக்க முயற்சிப்பது வழக்கம். உழைக்கும் போது வருமானத்தின் ஒரு பகுதியைச் சரியான முறையில் சேமிப்பது, ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து அதன் மூலம் பணவரவை அதிகரிப்பது, அல்லது ஒவ்வொருவரின் திறமைகளைப் பயன்படுத்தி அதிக அளவில் பணத்தைச் சம்பாதிப்பது எனப் பல வழிகள் உண்டு. இவற்றை விட சிலர் குறுக்கு வழிகளில் பணத்தைச் சம்பாதிக்கும் வழிமுறைகளும் உண்டு. இப்படியாக ஒவ்வொரு தனி நபரும் பல்வெறு வழிகளில் பல திறமைகளைப் பயன்படுத்தி அவர்களின் குடும்பங்களைச் செல்வந்தர்களாக உயர்த்த முடியும்

ஒவ்வொருவரும் வாழ்வில் செல்வந்தர்களாக மாறுவதற்கு, ஒவ்வொருவரிடம் சில திறமை கள், தகமைகள், அல்லது ஆற்றல், அதிஷ்டம் போன்ற விடயங்கள் தேவைப்படும் அத்துடன் சில ஆபத்துக்களையும் எதிர்நோக்கவேண்டிய நிலைமைகளும் காணப்படும். அதாவது ஆபத்துக்கள் என்னவென்றால் வியாபாரத்தில் இலாபநட்டங்கள், முதலீடுட்டுத்திட்டங்களில், பங்குச்சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், தனிமனித உழைப்பில் உழைக்கும் ஆற்றல், கடின உழைப்பு போன்ற பல் வேறு காரணி களில் கவனம் செலுத்த வேண்டும். தனிமனித உழைப்புக்கு உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் ஆரோக்கியமாக இருப்பதும் அவசியமாகின்றது.

ஆனால் ஆயுட்காப்புறுதி மூலம் எதுவித ஆற்றல்கள் அல்லது எதுவித திறமைகள் தகமைகள் உபயோகிக்காமல் தங்கள் குடும்பத்தைச் செல்வந்தராக்குவதற்கான இலகு வான வழி உள்ளது.

ஆயுட் காப்புறுதி முகவர் ஆயுட் காப்புறுதியின் நன்மைகள் பற்றிக் கூறுவது வியாபார நோக்குடன் கூறுவது போல இருப்பினும், ஆயுட்காப்புறுதியினை வாங்குவதால் எங்களுக்கு என்ன நன்மைகள் உள்ளது என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். சிறிய வயதில் இருந்து ஒரு சிறு தொகைப்பணத்தை ஆயுட் காப்புறுதிக்காகவும் அத்துடன் ஒரு சிறிய தொகைப் பணத்தை சேமிப்புக்காகவும் ஒதுக்கினால் மிகவும் இலகுவாக எது வித ஆபத்துமின்றி தங்கள் குடும்பத்துக்குப் பெருந்தொகைப் பணத்தைக் கிடைக்கச் செய்யலாம்.

> *ஆயுட் காப்புறுதி முகவர் ஆயுட் காப்புறுதியின் நன்மைகள் பற்றிக் கூறுவது வியாபார நோக்குடன் கூறுவது போல இருப்பினும், ஆயுட்காப்புறுதியினை வாங்குவதால் எங்களுக்கு என்ன நன்மைகள் உள்ளது என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.* ”

ஆயுட் காப்புறுதி மூலம் எப்படிப் பணத்தைச் சம்பாதிப்பது என அறிவதற்கு முன்பு ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள் எப்படிப் பணத்தைச் சம்பாதிக்கின்றன என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள், ஒருவர் இறந்தாலும் அல்லது அதிககாலம் வாழ்ந்தாலும் இரண்டு வழிகளிலும் பணத்தைச் சம்பாதிக்கின்றது. மேலும் ஆயுட்காப்புறுதி நிறுவனங்கள் பல வழிகளில் பணத்தைச் சம்பாதிக்கின்றன. உதாரணமாக, காப்புறுதி நிறுவனங்கள் அனைத்தும் சகல ஆயுட் காப்புறுதித் திட்டங்கள், மருத்துவ காப்புறுதித் திட்டங்கள், ஓய்வூதிய சேமிப்புத் திட்டங்கள் போன்ற பல திட்டங்களை விற்பனை செய்கின்கின்றன. ஒருவர் மரணமடைத்தால் ஆயுட் காப்புறுதிப் பணம் மட்டுமே கொடுக்க வேண்டும். உதாரணமாக, கடந்த காலப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் மரணமடைபவர்களின் தொகை 2 சதவீதம் மட்டுமே. ஆனால் பணம் கட்டுபவர்களின் தொகை 98 சதவீதமாகும். காப்புறுதி நிறுவனங்களிடம் நாங்கள் செலுத்தும் மாதந்த கட்டுப்பணம் சேர்த்து கொண்டே இருக்கும். அந்தப் பணம் பல்வேறு முதவீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யப்படும். ஒருவர் இறக்கும் போது கொடுக்கப்படும் ஆயுட்காப்புறுதியின் தொகை, ஆயுட்காப்புறுதி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஒரு சிறு பகுதியாகும். காரணம் பணம் செலுத்துபவர்களின் தொகை 98 சதவீதமும், மரணம் அடைந்து பணம் பெறு பவர்களின் தொகை 2 சதவீதமுமேயாகும். எனவே எல்லோரும் ஒரே நேரத்தில் மரணமடைவதில்லை. அதே சமயம் எல்லோரும் மாதாந்த ஆயுட்காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்தத் தவறுவதுமில்லை.

இன்னுமொரு உதாரணம், ஆயுட்காப்புறுதி பெற்றுக் கொண்ட சிலர் தொடர்ந்து இருக்கும் காலங்களில் பணம் செலுத்தாமல் இடையில் தடைப்படுவதுண்டு. இப்படியொரு கட்டத்தில் நீங்கள் ஆயுட்காப்புறுதிக்கு கட்டிய பணம் ஆயுட்காப்புறுதி நிறுவனத்துக்கு இலவசமாக கிடைக்கின்றது. அத்துடன் பலர் தவனைக்காப்புறுதித்திட்டங்கள் பெற்றுக்கொள்வதுண்டு.

தவணைக் காப்புறுதிக்கு (TERM INSURANCE) கட்டும் பணத்தில் 98 சதவீதமான பணம் ஆயுட்காப்புறுதி நிறுவனத்திற்கு வருமானமாக கிடைக்கின்றது காரணம் தவணைக் காப்புறுதி பெற்றுக் கொண்டவர்கள் அந்தக் காலத் தவணைக்குள் இறக்காமல் இருந்தால் அதன் பின்பு காப்புறுதியை தொடராமல் விட்டால் காப்புறுதி நிறுவனம் எந்தப்பணமும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை உதாரணமாக அடமானக் கடன் காப்புறுதிகள் (Mortgage Insurance) அனைத்தும் காப்புறுதி நிறுவனத்திற்கு கிடைக்கும் இன்னுமொரு இலகு வான பணவருமானமாகும் காரணம் அடமானக் கடன் (Mortgage Insurance) எடுத்தவர்கள் எல்லொரும் மரணமடைவதில்லை.

இது போல ஒருவர் மரணமடைந்தாலும் ஆயுட்காப்புறுதி நிறுவனங்களுக்கு வேறு இலாபங்களும் உண்டு. ஒருவர் கொடிய நோய்களுக்கான காப்புறுதியைப் பெற்றிருந் தால் அல்லது மருத்துவக் காப்புறுதியை அல்லது ஊனமுற்றேருக்கான காப்புறுதியை (Disability Insurance), வாழும் போது பயன் பெறும் (Living Benefits) காப்புறுதித் திட்டங்களைப் பெற்றிருந்தால் அதன் கட்டுப் பணம் எதுவும் ஒருவர் இறந்த பின்பு ஆயுட் காப்புறுதி நிறுவனம் வழங்கவேண்டியதில்லை. எனவே ஒருவர் இருந்தாலும் அல்லது இறந்தாலும் ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள் பணம் சம்பாதித்துக் கொண்டே இருக்கும்.

எனவே ஆயுட் காப்புறுதி நிறுவனங்களிடம் எங்கள் காப்புறுதிப்பணத்தைக் கொடுப்பதற்கு ஏராளமான பணம் உள்ளது. உதாரணமாக மாதம் 50 டொலர் செலுத்தி எப்படி 100,000 டொலர் கிடைக்கும் என கலைப்பட வேண்டியதில்லை. எல்லோரும் ஒரு நாள் மரணம் அடைவதற்கு உத்தரவாதம் இருப்பதால் காப்புறுதிப்பணம் கிடைப்பதும் உத்தரவாதம் ஆகின்றது. ஆனால் நிரந்தர ஆயுட்காப்புறுதி மூலம் மட்டுமே அந்த உத்தரவாதத்தை கொடுக்க முடியும்.

ஒவ்வொருவரும் நிரந்தர ஆயுட்காலம் முழுவதும் நீடிக்கக் கூடிய ஒரு காப்புறுதித் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உங்கள் கட்டிய பணத்தைவிட பல மடங்கு அதிக பணம் உங்கள் குடும்பத்துக்கு கிடைப்பதை நிச்சயப்படுத்த முடியும்.

எப்போதாவது ஒரு நாள் ஆயுட் காப்புறுதி பெற்றுக் கொண்டால் போதும் என்று தாமதிப்பதால் சில ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய சூள்நிலைகளும் ஏற்படும். அண்மையில் நண்பர் ஒருவர் ஆயுட்காப்புறுதியை அதிகரிக்கவேண்டும் என்று கூறினார். அவர் ஆரம்பத்தில் 1,00,000 டாலர்கள் மட்டுமே வைத்திருந்தார். பின்பு வசதி வரும்போது ஆயுட் காப்புறுதியித் தொகையை அதிகரிக்கும் நொக்கத்துடன் இருந்தார். தற்போது அவர் தனது ஆயுட்காப்புறுதியை அதிகரிப்பதற்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்தால் அவருக்கு உடல் ஆரேக்கியம் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அவரது ஆயுட்காப்புறுதியின் மாதாந்தக் கட்டணம் மிகவும் அதிகமாகி விட்டது. வழமையான காப்புறுதிக் கட்டணத்திலும் பார்க்க இரண்டு மடங்கு தொகை கட்டவேண்டியுள்ளது. எனவே அவரால் அவ்வளவு பணம் கட்ட முடியவில்லை.

நீங்கள் ஆரோக்கியமாகவும் இளமையாகவும் இருக்கும் போது, கூடிய அல்லது போதிய தொகைக்கு காப்புறுதி பெற்றுக்கொள்வது சாலச் சிறந்தது. அத்துடன் ஆயுட்காப்புறுதி பெறுவதைத் தாமதித்துக்கொண்டு போவதால் இப்படியான சந்தர்ப்பங்களில் ஆயுட்காப்புறுதியினைப் பெற
முடியாமல் போய்விடும்.



sritharan@thaiveedu.com

BHARATHANATTIYAM
நாட்டிய கலாஷேத்திரா
NATTIYA KALAKSHETRA SCHOOL OF FINE ARTS
Teacher
Mrs. Thenujah Thirumaran
இந்தியாவிலேயே புகழ்பெற்ற பாடசாலைகளுள் ஒன்றான ருக்மினிதேவி அருண்டேலின் கலாக்ஷேத்ராவில் Diploma பட்டம் பெற்ற பரதநாட்டிய ஆசிரியர்.
Teaching in English and Tamil
வகுப்பு நடைபெறும் இடம்:
Morning side & Ellesmere,   Markham & 14th Avenue
Call: 905-554-5846
Fax: 416 849 0594,   Email: sothisiva@hotmail.com

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு
Life100
INSURANCE & INVESTMENTS INC.
சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
info@life100.ca



Serving you in two locations
759 Warden Ave., Scarborough, ON M1L 4B5, Tel: 416-830-0386
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6 Tel: 416.321.2500



காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்
FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS
LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND
IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT
Member of Million Dollar Round Table
Life100
INSURANCE & INVESTMENTS INC.
- digi Media -
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
BMO Insurance
Are you getting Million Dollar advice?




கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்
வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்
Residential Mortgages - Commercial Business Loans - Investments
1st and 2nd Mortgages - Private Funds Available
Debt Consolidation - Refinance
No Income Confirmation - No Down Payment Confirmation
Call me for more details...
Special Rates: 5 Years Fix Rate: 2.59%*
Variable Rate: Prime - 0.70 = 2.15%*
VIA FINANCIAL
Rambo Tharmalingam
Mortgage Agent
Licence # M08008479
rambo@viafinancial.ca
647-290-3416 / 416-543-1111
5200 Finch Ave. E. Unit 302, Scarborough, ON. M1S 4Z5













ரொறன்ரோ கட்டடக் காடு








இம்மாத நிழற்படக் கலைஞர்

## மயூரன் கனகசபாபதி

பிறம்ரனில் வாழ்ந்துவரும் வரைகலை வடிவமைப்பாளரும் கணினி, ஒலி, ஒளித் தொழினுட்பவியலாளருமான இவர் நிழற்படத் துறையிலும் ஆர்வமுள்ளவர்.

**உங்களிடம், நீங்கள் எடுத்த அழகான நிழற்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

நிழற்படம் எடுத்தவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் என்பவற்றுடன் எடுக்கப்பட்ட காட்சி பற்றிய விபரங்களையும் குறைந்தது 8 நிழற்படங்களையும் mphoto@thaiveedu.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். நிழற்படங்கள் jpg வடிவத்தில் (format) 5"x7" அளவிற்குக் குறையாமல் 300dpi resolution இலும் இருக்கவேண்டும். நிழற்படங்கள் கணினியில் வரைகலை மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கக்கூடாது.

